G. Santhanam

கடல் கண்ட கனவு

[illegible] எழுதியது

G. Santhanam

KADAL KANNDA
KANAU


கடல் கண்ட கனவு
சோமு
முதல்பாகம் வலம்புரித்தீவு
G. Santhanam

கடல் கண்ட கனவு

முதல் அத்தியாயம்

சங்கு முகம்

அந்த ஊர்வலம் கோலாகலமான வாத்திய முழக்கங்களோடு வருகிறது. திருச்சங்கம் மங்களகரமாக ஒலிக்கிறது. எக்காளம் கம்பீரமாக நாதம் கொடுக்கிறது. ஜய பேரிகைகள் முழங்குகின்றன. ஆயிரக் கணக்கான மக்கள் பல்லக்கைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரிக்கின்றனர். என்ன ஆச்சரியம்! அசைந்து அசைந்து செல்லும் அந்தப் பல்லக்கிலே பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் வீர கம்பீரத்தோடு அமர்ந்திருக்கிறான்!

இதோ! திருமண்மங்கலம் என்ற கிராமத்திலிருந்து அந்த ஊர்வலம் காஞ்சிமா நகரின் எல்லையை அடைகிறது. மகா சாமந்தரும், நகரத்தாரும், பிரகிருதிகளும், முத்தரையரும் வைகுந்தப் பெருமாள் கோவிலின் திருப்பிரசாதத்தோடு எதிர் வந்து வரவேற்கிறார்கள். இதோ! பட்டத்து யானை பிளிறுகிறது. அதனுடைய முகபடாம் செங்கதிரிலே மின்னி ஒளி வீசுகிறது. அதன் மேல் கம்பீரமாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது அம்பாரி! பல்லக்கில் வந்து இறங்கிய அந்தப் பாலகனை, பால் வடியும் முகத்தோடு தோற்றம் அளிக்கும் அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவனை,—தமிழ்நாடு முழுதும் கீர்த்தி பரப்பிக் கடலுக்கு அப்பாலும் தனது கனவுகளை நிலைநாட்டப் போகும் அந்த ராஜ கம்பீரனை, இதோ, பல்லக்கிலிருந்து வரவேற்று யானையின் மேல் அம்பாரியிலே அமர்த்துகிறார்கள். வெற்றிச் சின்னம் ஒலிக்கிறது. "வாழ்க! வாழ்க!" என்ற வாழ்த்தொலி வானத்தை முட்டுகிறது. "சமுத்திர கோஷம்" என்று பெயர் சூட்டப்பட்ட முரசம் "பட பட" என்று இந்த பூமி முழுதும் கேட்கும்படியாகக் கொட்டுகிறது. அந்த மகனைப் பெற்ற மதிப்புக்கு உரிய தந்தையும், அவன் அருகே நிற்கும் தரணிகொண்ட போசர் என்ற பெரியவரும் உள்ளத்திலே பூரிப்புக் கொண்டு அப்படியே முகம் மலர்கிறார்கள்.



வாத்தியங்கள் கோஷிக்கின்றன. விருதாவளிகள் முழங்குகின்றன. யானைகளும், குதிரைகளும், சிறு சிறு ரதங்களுமாக முன் செல்கின்றன. வீர கவசம் அணிந்த மகா வீரர்கள் கட்டியம் கூறுகிறார்கள். அமைச்சர்

களும், பிரதானிகளும் முன் நடக்கிருர்கள். ராஜ்யாபிஷேகம் செய்வதற்காக, மக்களின் பிரதிநிதியாக, நாட்டு மக்களே தேர்ந்தெடுத்த காவலனுக, அந்தச் சிறுவன் யானேமேல் அம்பாரியிலே செல்லுகிருன் !

பன்னிரண்டு வயதுச் சிறுவன். நேற்றுவரை அவனுடைய தந்தை இதை எதிர்பார்த்தாரா ? "பேரரசன் இறந்தான். பட்டத்துக்குச் சந்ததி யில்லாமல் இறந்தான் !" என்ற நிலே ஏற்படும் என்றும், அந்தப் பதவி தம்முடைய மகனுக்கு, அதிலும் நான்கு புத்திரர்களில் கடைசிப் புத்திரனுகிய அந்தச் சிறுவனுக்குக் கிடைக்கும் என்றும், அந்த மகத்தான அரச பதவி தம்முடைய வீட்டு வாசலிலேயே வந்து அழைத்து நிற்கும் என்றும் அவர் எதிர்பார்த்தாரா ? இல்லவே இல்லே!

தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அது ஓர் அதிசயமான நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பு நமது செந்தமிழ்நாடு எப்படியிருந்தது? இப்படி ஒரு சிறுவனே அரசனுகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு அமைச்சர்களும், பிரதானிகளும் எத்தனேயோ பாடுபட்டார்கள் ! சளுக்கர்களுடைய படையெடுப்பு ஒரு புறம். பாண்டிய அரசர்களின் பகை ஒருபுறம். கொடும்பாளூர் வேளிர்கள் கொடுத்து வந்த இடையூறுகள் ஒரு புறம். சேரர்களின் சூழ்ச்சி ஒரு புறம். இத்தனே குழப்பங்களுக்கும் மத்தியில், பரமேசுவர வர்மன் இறந்ததும், பட்டத்துக்குச் சரியான அரசன் இல்லேயே என்று எத்தனே தவிப்புத் தவித்தனர்! தாயாதிக் குடும்பத்திலுள்ளவர்களே யெல்லாம் ஒவ்வொருவராகச் சென்று "நீங்கள் மகுடம் தரிக்கிறீர்களா ?" "நீங்கள் செங்கோல் பிடிக்கிறீர்களா ?" "நீங்கள் அரச பீடத்தில் ஏறுகிறீர்களா ?" என்று எத்தனேயோ ஆவலோடுகேட்டும், யாரும் அரசபதவிக்குவர ஒப்புக்கொள்ளவில்லேயே ! கடைசியில் இரணிய வர்மராவது ஒப்புக்கொண்டாரா ? இல்லே. தம்முடைய புத்திரர்களேப் போய்க் கேளுங்கள் என்றுதான் சொல்லிவிட்டார் அவர்.

ஆமாம் ; இரணிய வர்மரும், தாம் அரசாளுவதற்குச் சம்மதிக்க முடியாது என்றுதான் மறுத்துச் சொல்லிவிட்டார் ! அதன்பேரில், சேனுபதியும், மந்திர நாயகமும் எத்தனேயோ வேதனேப் பட்டார்கள் !

இன்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் காஞ்சி நகரில் பல்லவ பரமேசுவர வர்மன் இறந்ததும், இந்தச் சிக்கல் ஏற்பட்டது, நம்முடைய செந்தமிழ் நாட்டிலே !



பரமேசுவர வர்மனுக்குப் புத்திரர்கள் இல்லை. பட்டத்துக்குச் சந்ததியில்லாமலேயே அவன் இந்த உலகிலிருந்து மறைந்தான்.

சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே சித்திரமாயன் என்று ஒருவன் இருந்தான். அடுத்தபடியாகப் பட்டத்துக்கு அவன்தான் தாயாதியுரிமை கொண்டாடக் கூடியவன். ஆனால் அவன் வெறுங் கோழை. தமிழ் நாடு அன்று இருந்த நிலையிலே அரசப் பொறுப்பை நிர்வகிக்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு இல்லை என்று அமைச்சர்கள் அனைவருமே கருதினர்கள். அதனல்தான் இரண்டாம் தாயாதியான இரணிய வர்மரைப் போய்க் கேட்டார்கள். இரணிய வர்மர் புத்திசாலி. அன்

இரணிய வர்மரால் பதில் பேச முடியவில்லை. "சரி" என்ருர்.

"சரி; நான்கு புத்திரர்களில் ஒருவனைச் செலவு எழுதிவிட வேண்டியதுதான்!" என்று மனத்துக்குள்ளே நினைத்துக் கொண்டுதான் இப்படிப் பதில் சொன்னர் இரணிய வர்மர்.

காரணம் அன்றிருந்த நாட்டின் நிலை அப்படி!

மூத்த புதல்வனைக் கேட்டார்கள். 'முடியவே முடியாது' என்று சொல்லி விட்டான். இரண்டாம் புத்திரனைக் கேட்டார்கள். "அரச பதவியா! எனக்கா!" என்று ஓடி ஒளிந்து கொண்டான். மூன்றும் புத்திரனின் கதையும் அப்படியேதான்!



றையச் சூழ்நிலையில் தமிழ் நாட்டின் அரச பீடம் என்பது மலர் மெத்தை அல்ல, முள் - படுக்கை என்பது அவருக்குத் தெரியும். "எனக்கு வயதாகி விட்டதே!" என்று சாக்குச் சொன்னர்.

"எப்படியும் அரச குடும்பத்துத் தாயாதிகளில் ஒருவரையே தேர்ந்தெடுத்து வருவதாகப் பிரதானிகரிடம் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். இனிக் காஞ்சிபுரத்துக்கு ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்ல மாட்டேன்!" என்ருர் அமைச்சர்.

"உங்களுடைய மூத்த புதல்வரை அனுப்புங்களேன், அரசாள! உங்களுக்குத்தானே வயதாகிறது என்கிறீர்கள்!" என்ருர் சேனைத் தலைவர்.

அமைச்சரும், சேனபதியும் காலைத் தேய்த்தார்கள்.

"உங்களுடைய நான்காவது புத்திரன் எங்கே?" என்று ஆவலோடு கேட்டார் அமைச்சர்.

"இளங் கன்று பயம் அறியாது. அவனைப் போய்க் கேளுங்கள், ஒப்புக் கொள்ளுவான்!" என்ருர் இரணிய வர்மர், சிரித்துக் கொண்டே.

"அவர் எங்கே யிருக்கிருர், உங்களுடைய நான்காவது புதல்வர்?" என்று ஆர்வத்தோடு தந்தையைக் கேட்டார் சேனபதி.

"மாந்தோப்பில் போய்ப்பாருங்கள். விளையாடிக் கொண்டிருப்பான்!" என்ருர் இரணிய வர்மர்.

"மாந்தோப்பிலா?" என்று ஆச்சரியத்தோடு அமைச்சர் கேட்டார்.

"ஆமாம். பன்னிரண்டு வயதுப் பையன் வேறு என்ன செய்துகொண்டிருப்பான், இந்த மாலை நேரத்தில்? மாந்தோப்பிலேதான் விளையாடிக்கொண்டிருப்பான்!" என்றார் தந்தை.

பன்னிரண்டு வயதுப் பையன் என்றதும் அமைச்சருக்கு ஒன்றும் ஓடவில்லை. ஆனால் சேனாபதி உதய சந்திரனோ என்றால் சற்றும் தயங்கக் காணோம்!

"அமைச்சரே! நண்பர்களே! புறப்படுங்கள் மாந்தோப்புக்கு!" என்றார் உதயசந்திரன்.

சோலையும், நந்தவனமுமாக இருந்த அந்த அழகிய திருமண்மங்கலம் கிராமத்திலே வயல் வெளிகளைத் தாண்டிக் கொஞ்ச தூரம் நடந்தால் ஒரு பெரிய மாந்தோப்பு இருந்தது. அந்த மாந்தோப்புக்குள்ளே ஒரு விசித்திரமான விளையாட்டு நடந்து கொண்டிருந்தது.

மாந்தோப்பின் நடுவிலே ராஜ மாமரம் என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய, மிகப் பெரிய மாமரம், ஏகசக்கிராதிபதியாகக் கம்பீரமாக எழுந்து கிளை வீசி நின்றது. அதன் வேர்கள் எல்லாம் பூமிக்கு மேலே பெரிய பெரிய மலைப் பாம்புகளைப் போல வளைந்து தென்னிக்கொண்டு ஓடின. அந்த வேர்களில் எல்லாம் அதிக உயரமாக இருந்த ஒரு பெரிய வேரின் வளைவில், மத்திய பாகத்திலே ஏறி அமர்ந்திருந்தான் ஒரு சிறு பையன்.

ஏதோ பஞ்சணை மெத்தை பரப்பிய சிம்மாசனத்திலே ஏறி அமர்ந்திருப்பது போலப் பாவனை! கையில் ஒரு மாங்கொப்பு. நீண்ட கிளை, அதன் நுனியிலே மாவிலைகள்! அதைச் செங்கோலாகப் பிடித்துக் கம்பீரமாக அந்த மாமரத்து வேராசனத்திலே வீற்றிருக்கிறான், பன்னிரண்டு வயதுச் சிறுவன். அவனுக்கு இரு புறமும் இரண்டு வரிசையில் வலது பக்கம் ஐந்து சிறுவர்கள், இடது பக்கம் ஐந்து சிறுவர்கள் தரையில் அமர்ந்திருக்கிறார்கள். ராஜா-மந்திரி விளையாட்டு நடக்கிறது!

"மந்திரி!" என்று சிங்கத்தைப் போன்ற கர்ஜனையோடு அழைக்கிறான் பாலராஜன்!

"அரசே!" என்று வாய் புதைத்து எழுந்து நிற்கிறான், இதுவரை வலப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு சிறுவன்.

"மந்திரி! நம்முடைய இந்த வளமான நாட்டிலே ஆலயங்கள் தோறும் ஆறு கால பூஜை ஒழுங்காய் நடக்கிறதா?" என்று









கேட்டுக் கொண்டே வீரமான குரலில் கீழ்க் கண்டவாறு பாடுகிறான் சிறுவன் :—

"ஆலயந் தோறும்
அறுகால பூஜை
சீலமாய் நடக்கிறதா
ஆ ஆ ஆ ஆ!"

இந்தப் பாட்டு "ஆஆ" என்ற சங்கதியோடு முடிகிற வரை, வாய் புதைத்து, பொறுமை யாகக் கேட்டுக்கொண்டே நிற்கிறான் அந்தப் பையன். பாட்டு முடிந்ததும் கீழ்க்கண்டவாறு பதில் சொல்கிறான். முதலில் வசனத்தில், பிறகு பாட்டிலே.

"ஆலயம் தோறும்
அறுகால பூஜை
சீலமாய் நடக்கிறது
ஊ ஊ ஊ ஊ!"

அந்த "ஊகாரம்" முடிந்ததும் மறுபடியும் அரசன் கேள்வி கேட்கிறான்.

"சரி, முதல் மந்திரியாரே! நீர் உட்கார லாம். இனி நம்முடைய இரண்டாவது அமைச் சரே! நீர் எழுந்து நில்லும்."

இரண்டாவது சிறுவன், தரையில் உட்கார்ந் திருந்தவன், இப்பொழுது எழுந்து நிற்கிறான். இவனுக்குப் பாட்டுப் பாட வராது போலும்! அதனால் அரசர் தமது கேள்வியை வசனத்தில் மட்டுமே கேட்டு நிறுத்திக் கொள்கிறார். என்ன கேட்கிறார்?

"சொல்லும், இரண்டாவது அமைச்சரே! நம்முடைய நாட்டிலே உள்ள சத்திரங்களில் எல்லாம் உணவும் உபசரிப்பும் தினந்தோறும் சரிவர நடக்கின்றனவா?"

எழுந்து நின்று வாய் பொத்திக் கொண் டிருந்த பையன், பளீர் என்று இந்தக் கேள் விக்குப் பதில் சொல்லுகிறான்.

"மகா ராஜாதி ராஜனே! நம்முடைய நாட்டில் உள்ள சத்திரங்கள் யாவும் தாளிட்டு நன்றாகப் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. அவற் றின் கதவுகளைத் திறந்து எத்தனையோ ஆண்டுகள் இருக்கும்!"

அமைச்சர் இப்படிப் பதில் சொன்னதும் அரசருக்கு மீசை, அதாவது மீசைக்குப் பதி லாக மேல் உதடு, மீசையின் பாவனையிலே துடிக்கிறது! கையிலே இருந்த 'செங்கோல்' சுழல்கிறது. மாங் கொப்பிலே இருந்த நுனி இலைகள் சிதறுகின்றன!

"அமைச்சரே! என்ன சொன்னீர்? இது உண்மைதானா?"

"ஆமாம், மகாராஜா! நம்முடைய சத்திரங் கள் அனைத்தும் பூட்டிக் கிடக்கின்றன. நம்

முடைய நாட்டில் வறுமை என்பதே இல்லாத காரணத்தால், யாரும் சத்திரத்துக்குச் சாப்பிட வருவதே இல்லே. அவற்றின் கதவுகள் மூடியே இருக்கின்றன !''

"ஹஹ் ஹஹ் ஹஹா" என்று ராஜா சிரிக்கிறார்.

"அமைச்சரே! மெச்சினோம் உம்முடைய சாதுரியத்தை!'' என்று அரசன் சொல்லி முடிப்பதற்குள், மாந்தோப்பிலே சலசலப்பு உண்டாகிறது.

"என்ன இது! மந்திரியாரே! நம்முடைய நாட்டிலும் பகைவர்களா?'' என்று அரசன் கேட்டுக் கொண்டே சப்தம் வந்த திசையை நோக்குகிருன்.

"பகைவர்கள் இல்லே, அரசே! நம்முடைய குடிமக்கள் தங்கள் சமு

சொல்லுங்கள். இதோ புறப்படுகிரேம் வேட்டைக்கு – நம்முடைய பரிவாரங்களோடு!''

இப்படி ஒரே மூச்சிலே பொரிந்து தள்ளினன், அந்தப் பன்னிரண்டு வயதுப் பையன். அமைச்சரும், சேனுபதிஉதயசந்திரனும் சிறுவனே நோக்கி நடந்தார்கள். மற்றப் பிரதானிகள் நின்று ரஸித்தார்கள்.

"அன்புக்கு உரிய என் குடிமக்களே! ஏன் பேசத் தயங்குகிறீர்கள்? உங்களுடைய அரசனே நாடி நீங்கள் வந்த காரணம் என்ன? என்னை எங்கேனும் அழைத்துப் போக வந்தீர்களா?''

உதய சந்திரனுக்குக் கண் கலங்கி விட்டது. அவன் சிரிக்கவில்லே. உணர்ச்சி வசம் ஆனன்.



கத்தை நாடி வருகிருர்கள் போலிருக்கிறது!'' என்கிருர் முதல் அமைச்சர்.

உள்ளே நுழைந்த உதய சந்திரனும் மந்திரநாயகமும், அவர்களோடு வந்த பிரதானிகளும், இந்தக் காட்சியைப் பார்த்து அனுபவித்துக் கொண்டே, அந்தப் பெரிய மாமரத்தை நோக்கி நடந்து வருகிருர்கள்.

"குடி மக்களே! ஏன் தயங்குகிறீர்கள்? வாருங்கள். தைரியமாக வாருங்கள். உங்களேக் காப்பதற்காகத் தானே நாம் இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிரேம். தயக்கமில்லாமல் வாருங்கள்! உங்களுடைய விளே நிலங்களிலே வன விலங்குகள் வந்து பயிரை அழிக்கின்றனவா?

"ஆம் அரசே! உங்களே அழைத்துப் போகத்தான் வந்தோம்!''

"எம்மை அழைத்துப் போகத் தானே! அதற்கு ஏன் இத்தனே தயக்கம் குடிமக்களே! உங்கள் காவலனே அழைக்கக் கூட நீங்கள் கூசலாமா? தைரியமாகச் சொல்லுங்கள். என்னே இப்பொழுது எங்கே அழைக்கிறீர்கள்?''

"மகாராஜனே! ராஜாதிராஜனே! உங்களே உங்கள் ராஜ்யத்துக்கு அழைத்துப் போகவே வந்தோம். எழுந்தருள வேண்டும்!'' என்ருன் உதய சந்திரன்.

"என்ன இது! நீங்கள் சொல்வது விசித்திரமாக இருக்கிறதே. நம்

முடைய ராஜ்யத்தில்தானே நாம் இருக்கிறோம். இந்த மாந்தோப்பு முழுவதுமே நம்முடைய ராஜ்யந்தானே? இதிலும் சந்தேகமா?'' என்றான் சிறுவன் அலட்சியமாக.

"இல்லை, அரசே! இந்த மாந்தோப்பு தங்களுடைய ராஜ்யந்தான். ஆனால் நாங்கள் சொல்வது இந்த மாந்தோப்பையும் விடப் பெரிய......''

"ஓ! அந்தக் காஞ்சிபுரத்துப் புளியந்தோப்பைச் சொல்லுகிறீர்களா? வேண்டாம், அது புளிக்கும். இது



மாந்தோப்பு. மாங்கனிகள் நிறைந்தது. இது இனிக்கும் குடிமக்களே!''

உதய சந்திரனுக்கும் அமைச்சருக்கும் இந்தச் சிறுவனுடைய இயல்பான பேச்சிலே ஏதேதோ விசேஷமான அர்த்தங்கள் தொனித்தன! உதயசந்திரனுக்கு உணர்ச்சி மேலீட்டினால் குரல் கம்மிற்று. சொன்னான்:

"அரசே! உங்களைத் தேடி எங்கெல்லாமோ அலைந்து விட்டோம். இதற்கு மேலும் எங்களை அலைய வைக்காதீர்கள். புறப்படுங்கள். உங்களுடைய வரவுக்காகக் குடி மக்கள் அனைவரும் காத்திருக்கிறார்கள். உங்களுடைய விஜயத்துக்காகச் சிம்மாசனம் காத்திருக்கிறது. உங்களை அரசராக்கிப் பார்த்து மகிழ மக்கள் எல்லாரும் காத்து நிற்கிறார்கள். புறப்படுங்கள்!''

"என்ன! என்னை அரசனுக்கவா? இது என்ன வேடிக்கை குடிமக்களே! நான் இப்பொழுதே உங்கள் அரசன் தானே! இனிமேல் என்ன எ
ஆக்குவது?''

"உண்மை; எந்த வினாடியில்
மேசுவர வர்மன் மறைந்தா
அந்த வினாடியிலிருந்தே நீங்கள் த
எங்கள் அரசர். அதைத் தெரி
கொள்ளாமல் தான் நாங்கள்
கெங்கோ அலைந்திருக்கிறோம். ப
ராஜனே! கடந்த பன்னிரண்டு வா
களாக நீங்கள் தான் எங்கள் அரச
சந்தேகம் இல்லை. இப்பொழுது கண்
கொண்டு விட்டேன். பூரணமா
உணர்கிறேன்!''

இப்படிச் சொல்லும்போது, ப
வசத்தினால் உதய சந்திரனுடைய ப
வான விழிகளிலே கண்ணீர் மல்கியது

"கடந்த பன்னிரண்டு வாரங்
ளாக என்று சொல்கிறீர்கள்! ந
முடைய அமைச்சர் திலகங்களே
என்ன பேசாமல் இருக்கிறீர்கள்
நீங்கள் சொல்லுங்கள். நான் எத்தனை
காலமாக உங்கள் அரசன் என்பது
இவர்களுக்குத் தெரியாது போலும்
குடிமக்களே! பன்னிரண்டு வாரங்க
ளாக நான் உங்கள் அரசன் என்று
தவருகச் சொல்கிறீர்கள். நான்
பன்னிரண்டு வருஷங்களாகவே உங்க
ளுடைய அரசன்! என்ன மந்திரிப்
பிரதானிகளே!'' என்று சொல்லி ஒரு
கர்ஜனை செய்தான் அந்தப் பன்னி
ரண்டு வயதுச் சிறுவன். உடனே
மற்றச் சிறுவர்கள் எல்லாம் இருந்த
இடத்தில் இருந்து எழுந்து, "ஆமாம்!
பன்னிரண்டு வருஷங்களாகவே இவர்
எங்கள் அரசர். இவர் பிறவியிலேயே
எங்கள் ராஜா! இவர் வாழ்க! வாழ்க,
வாழ்க!!'' என்று ஆரவாரித்தார்கள்.

இதற்குள் பையனைத் தேடிப் போனவர்களின் விஷயம் ஒன்றும் தெரியவில்லையே என்று, கவலை மேலிட்டவராய் இரணியவர்மர் அந்த மாந்தோப்பைத் தேடிக் கொண்டு அங்கே வந்து விட்டார். தோப்புக்குள்ளே வந்து பார்த்தால் அவருக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. தகப்பனைக் கண்டதும் பையன் சிம்மாசனத்தை விட்டு எழுந்து விட்டான். வெட்கம் மேலிட்டவனாக, அப்பொழுதே ஓடிப் போய்த் தந்தையுடைய தாவிப் பிடித்துக் கொண்டு நின்றான். மற்றப்

பயன்கள் எல்லாரும்கூடையிலிருந்து காட்டிய மாவடுக்களைப் போலத் துள்ளிச் சிதறி ஓடிவிட்டார்கள்!

"உதய சந்திரரே! மந்திரியாரே! ங்கள் பையனை மன்னிக்க வேண்டும்! அவனுக்கு எப்பொழுது பார்த்தா லும் ராஜா மந்திரி விளையாட்டு என் றல் ஒரே கொண்டாட்டம். நான் ன்ன சொன்னாலும், எத்தனை கண் டித்தாலும் கேட்பதில்லை. இந்த விளை யாட்டு விளையாடுவதற்காகச் சகாக்க ளோடு தினந்தோறும் இந்த மாந் தோப்புக்கு வந்து விடுகிறான்! இத்தனை பிரமுகர்கள் வந்திருக்கிறீர்கள் என்று அவனுக்குத் தெரிகிறதா! உங்களை எழுந்து வரவேற்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை. அவனை மன் னித்து விடுங்கள். அவனுக்கு இது ஒரு விளையாட்டு. நான் அவனை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று பரி தாபமாகக் கேட்டார் இரணிய வர்மர்.

"வேறு ஒன்றும் உங்களைச் செய்யச் சொல்லவில்லை. எங்களோடு இவரை அனுப்பி விடுங்கள். இந்த விளையாட் டுக்காக அவரை மன்னிக்கும்படி என் னிடம் சொன்னீர்கள். யார்யாரை மன் னிப்பது? உண்மையில் இந்த விளை யாட்டுக்காக அவரை நாங்கள் அஞ்சலி செய்ய வேண்டும்! யோசித்துப் பார்த் தால் அவர் செய்தது விளையாட்டே இல்லை. அது உண்மை. கடந்த பன்னி ரண்டு வாரங்களாக, அதாவது பரமேசுவர வர்மர் மரணம் அடைந்த நாளிலிருந்து, இவர்தான் எங்கள் அரசர் என்று சற்று நேரத்துக்கு முன்பு சொன்னேன். அது தவறு என்று உங்கள் பிள்ளையே என்னைத் திருத்தினார். ஆமாம், கடந்த பன்னி ரண்டு வருஷங்களாகவே, அவர் பிறந்த அந்த வேளையிலிருந்தே, அவர்தான் நம்முடைய அரசர்! நாம்தான் இது வரை குருடாக இருந்து விட்டோம். அரசரைப் பார்க்க வெள்ளெழுத்து வந்து விட்டது இதுவரை நமக்கு!"

"உதய சந்திரரே! என்ன சொல் கிறீர்கள்? நாலாவது பையனைப் போய்க் கேளுங்கள் என்று விளையாட் டாகத்தான் நான் சொன்னேன். நீங்க ளானால் அதை—"

"இல்லை! விளையாட்டே இல்லை. உண்மையான வார்த்தைதான் நீங்கள் சொன்னதும் நான் சொல்வதும். அந்த உண்மையை நாம் இப்பொழுது தான் தெரிந்து கொண்டோம்!"

இரணிய வர்மருக்குக் கண் கலங் கியது. அங்கம் பதறியது.

"அப்பா! என்ன இது? ஏன் உங்கள் கண் கலங்குகிறது?" என்று கேட்டான் சிறுவன்.

"கண்ணே! இவர்கள் எல்லாரும் உன்னை அரசாள அழைக்கிறார்கள். உன்னுடைய வயதுக்கும், உனது சக்திக்கும் பொருந்தாத பெரிய பொறுப்பை உன் மேல் சுமத்த எண்ணுகிறார்கள். அதன் கஷ்டம் எனக்கல்லவா தெரியும்?" என்றார் இரணிய வர்மர். கண்ணிலிருந்து கண் ணீர்த் துளி சிதறியது.


"எதன் கஷ்டம் உங்களுக்குத் தெரியும் என்கிறீர்கள் அப்பா?"

"அரச பதவியின் கஷ்டத்தைச் சொல்கிறேன், கண்மணி!"




இப்படிச் சொல்லும்போது இர ணிய வர்மருக்கு மேலும் தொண்டை அடைத்தது.

"அரச பதவியின் கஷ்டமா! என்ன அப்பா இப்படிச் சொல்கிறீர்கள்? ஒய்யாரமாகச் சிம்மாசனத்திலே ஏறி உட்கார்ந்து மந்திரிகளைப் பார்த்து ஆறு கால பூஜையும், சத்திரச் சாப் பாடும் ஒழுங்காக நடக்கின்றனவா என்று கேட்பதில் கஷ்டம் என்ன வந்தது கஷ்டம்! போங்கள் அப்பா!



உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. என்ருவது ஒரு நாள் நீங்கள் இந்த மாந்தோப்பிலே வந்து, இந்த வேரின் மேல் அமர்ந்து பார்த்திருந்தால் அல்லவா உங்களுக்குத் தெரியும்!''

இப்படி மகன் பேசியதும், தந்தைக்கு உள்ளம் எல்லாம் அன்





பினல் பூரித்துப் போய் விட்ட மகனுடைய பசலைத் தன்மைை நோக்கிப் பரிவோடு புன்முறுவ செய்தார். அப்போது பிரதா களின் கூட்டத்திலே நின் தரணிகொண்ட போசர் என் பெரியார் பேச ஆரம்பித்தார்.

"இரணிய வர்மரே! உம் டைய் நான்காவது புத்திரனை சாமானியமாக நினையாதீர்! அ னுடைய முகக் குறியும், தோ களின் அங்க அடையாளமு ராஜ லக்ஷணம் பொருந்தியவை அவனுடைய கண்களின் ஒளியு அவனுடைய நாவின் வன்மையு அகில உலகத்தையும் ஆளக் கூ யவை. அவனுடைய உ ளங் கையைப் பார்த் ராஞல் நிச்சயம் சக்க ரேகை கிடப்பதைக் காண பீர்! அவன் உமது கு தெய்வமாகிய காஞ்சி திருமாலின் பூரண அ ளும் நிரம்பியவன். தயா காமல் அனுப்பும்!''

இப்படிச் சொன்ன தரணி கொண்ட போசர் என்ற பெரியார். அவ டைய குரலில் நிச்சயமும்



நிதானமும், அசைக்க முடியாத நம்பிக்கையும் தொனித்தன. அவருடைய வார்த்தைகளை, அத்தனை பெரியவருடைய சொற்களை, யாராலும் மறுத்துப் பேச முடியவில்லை.

பல்லக்கு ஆயத்தம் ஆகிற்று. கட்டியம் முழங்கியது. திருச்சின்னம் ஒலித்தது. எக்காளம் எழுந்து நின்று பேசியது. ஜய பேரிகை முழங்கிற்று!

"மகனை ஆசீர்வதித்துப் பல்லக்கிலே ஏற்றி வையுங்கள்!" என்றார் உதய சந்திரன்.

அளவு கடந்த பாசத்தோடு மகனை ஆசீர்வதிக்கும் போதே கலங்கிய கண்களுடன் இரணிய

வர்மர் சொல்லுவார்: "மகனே! நீ கனவு காண்பது போல அரச பதவி என்பது இந்த மாந்தோப்பு விளையாட்டைப் போலவே உல்லாசம் நிரம்பியதாக இருக்குமாக!"

திருச் சங்கம் மூன்று முறை ஒலித்தது. பல்லக்கு அந்தக் கிராமத்தை விட்டு நகர்ந்தது.

காஞ்சி மாநகரின் எல்லையிலே பட்டத்து யானையும், பல்லவ சேனுபதிகளும், ரதகஜ துரக பதாதிப் படைகளும், தங்கள் அரசரை எதிர்கொண்டு அழைத்தார்கள். யானைமேல் அம்பாரி ஒய்யாரமாக நடந்தது, காஞ்சி மாநகரின் மாபெரும் அரமனையை நோக்கி!

பன்னிரண்டு வயதுச் சிறுவன்! ஆனைமேல் அம்பாரி என்ருல் அதுவும்



அவனுக்கு ஒரு விளையாட்டுத்தான். ஆனுல் அதன் கஷ்டம் உண்மையாகவே தந்தை இரணிய வர்மருக்கு அல்லவா தெரியும்!

சிறுவன் எதிர்பார்த்தது போல அவனுடைய அரசாட்சி ஆறு கால பூஜையைப் பற்றியும், மடப்பள்ளியிலே நடக்கும் சாப்பாட்டைப் பற்றியும் கேட்கிற சங்கீத விசாரணையோடு நின்றதா? அந்தச் சிறுவனுடைய பிற்கால அரசியல் ஒரு மாந்தோப்பு விளையாட்டாகவேதான் இருந்ததா?

இல்லை. நமது புண்ணியத் தமிழ்நாட்டில் வானத்திலே கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்த காலம் அது! வட வேங்கடத்தையும் தென் குமரியையும் உள்ளடக்கி நின்ற தமிழ் கூறும் நல்லுலகத்தை, தனது அகன்ற அலைக் கைகளால் அணைத்துக் கொண்டு கோஷமிடுகிறதே ஏக்கடல், அந்தக் கடலின் பரப்பிலே, ஆயிரம் ஆயிரம் கப்பல்கள் சேர நாட்டையும் பாண்டிய நாட்டையும் சுற்றிக் கொண்டு வந்த காலம் அது! உள்நாட்டுக் கலகங்களும், வெளி நாட்டார் படையெடுப்புமாக ராஜ்யம் புகைந்து கொண்டிருந்தது! வேளிர்களும், முத்தரையர்களும், இன்னும் பல சிற்றரசர்களும் பல்லவர்களை எதிர்த்து நின்றதோடு, பாண்டியரையும் சோழரையும் சேர மன்னர்களையும் மையமாக வைத்துத் தங்களுக்குள்ளே சதுரங்கம் ஆடினுர்கள். தமிழ் மொழியினிடத்திலும், தமிழர்களுடைய பழைமையான பண்பாட்டிலும், மெய்யான ஈடுபாடுகொண்டிருந்த தமிழ் மூவேந்தர்கள், எவ்வகையான கிளர்ச்சியை எந்த முறையிலே உருவாக்கித் தமிழர்களின் வீர மரபை நிலைநாட்டலாம் என்று,துடி துடித்துக் கொண்டிருந்தார்கள். சேர, சோழ, பாண்டியர்களின் கனவு வடிவாகிக் கொண்டிருந்த வைகறைப் போது அது! அந்தக் கனவு விடியும் வேளையைத் தமிழ்க் குலம் எதிர் நோக்கி, வானம்பாடியாகச் சிறகடித்து உதய கீதம் பாடுவதற்காகத் துடித்துக் கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையிலேதான் பல்லவ பீடத்தில் அமர்ந்தான் அந்தச் சிறுவன்! அவன் அமர்ந்த வினுடியிலிருந்து சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக, அடுக்கு அடுக்காக, விறுவிறு என்று தொடர ஆரம்பித்தன. அது ஒரு மகோன்னதமான சரித்திரம்! வீரமும், சோகமும், காதலும், கனவுகளும், சூழ்ச்சியும், போர்களும் நிரம்பிய கதை அது! அந்த வரலாற்றுக் கதையை ஆரம்பத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டுமானுல், நாம் இப்பொழுது தென் கடலின் கரையிலே, பாண்டிய நாட்டின் தென்கோடி எல்லையிலே நிற்கும் சங்குமுக விநாயகரை, வலம் வந்து வணங்கி விட்டு, அவருடைய சந்நிதியின் முன்பாக அலை வீசுகிற அந்தக் கருநீலக் கடலுக்குள்ளே போய், பல காதம் கடந்து நிற்கிற ஏகாந்தமான வலம்புரித் தீவுக்குச் செல்ல வேண்டும். (தொடரும்)

கடல் கண்ட கனவு

இரண்டாம் அத்தியாயம்

பாரும் தரங்கம்!

பாக் ஜலசந்தியில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் மத்தியிலே உள்ள கச்சாத் தீவைப் பற்றிச் சமீபத்தில் வெளிவந்த செய்திகளை நேயர்கள் படித்திருப்பார்கள். தெற்குக் கடலிலே நிற்கும் அந்தத் தீவு ராமநாதபுரத்தைச் சேர்ந்ததா அல்லது இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்ததா என்ற கேள்வி, ஒரு பிரச்னையாகிக் குமைந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையை எப்படிச் சிக்கல் எடுப்பது என்பது நிகழ்காலச் சம்பவங்களும், நமது நிர்வாகத் தலைவர்களின் அரசியல் சாமர்த்தியமும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஆனால் இதே போன்ற ஒரு பிரச்னை பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இதே தென்கடலில் எழுந்த பொழுது அந்தப் பிரச்னையை, வெறும் நிர்வாகப் பிரச்னை என்று கருதி ராஜ்யாதிகாரிகளால் தீர்க்க முடியவில்லை. அந்தப் பிரச்னையோடு சேர்ந்து, பரம்பரை பரம்பரையாக வந்த சம்பிரதாயங்களும், அரச குடும்பத்தினரின் நம்பிக்கைகளும் ஏதேதோ பல குழப்பங்களை எழுப்பின. மனித உடம்பிலே உயிர் நாடி என்று ஒன்று இருப்பது போல அந்தத் தென் கடலுக்கும் இருக்குமானால், அந்த உயிர் நாடியே இந்தப் பெரும் பிரச்னையினால் துடி துடித்தது என்று சொல்ல வேண்டும். அந்தத் துடிதுடிப்புக்கும் அத்தனை பெரிய



சோமு

குழப்பங்களுக்கும் காரணமாக அமைந்த தீவுதான் வலம்புரித் தீவு.

தென் பாண்டி நாட்டில் தாமிரவருணி நதி, கடலிலே போய்ச் சேரும் சங்கமத்துக்குச் 'சங்கு முகம்' என்று பெயர் சொல்லுகிறார்கள். அது 'சங்கு முகமா' அல்லது 'சங்கமமா' என்பது இன்னும் முடிவு பெறாத ஓர் பண்டித ஆராய்ச்சி. ஆனால் நம் சம்பந்தப்பட்ட வரை, அது 'சங்கு முகமே' என்பதற்குரிய ஓர் ஆதாரம், சென்ற முறை நான் அந்த இடத்துக்குப் போயிருந்த போது கிடைத்தது.

சங்கு முகத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் தை அமாவாசையும் ஆடி அமாவாசையும் மிகவும் முக்கியம் வாய்ந்த தினங்கள். அந்தப் புண்ணிய தினங்களிலே சுற்று வட்டாரத்திலுள்ள பக்தர்கள் அனைவரும், ஆடவரும் பெண்டிரும், பல மைல்கள் கால் நடையாகவே யாத்திரை வந்து அந்தத் தீர்த்தக் கட்டத்தில் குளித்துவிட்டு, சங்குமுக விநாயகருக்குத் தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தி வருவது வழக்கம்.

சென்ற தை அமாவாசைக்கு நான் சங்கு முகம் சென்றபோது, இந்தப் பெயரைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு தெளிவு கொடுக்கும்படியான அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

நானும் என்னோடு வந்த நண்பர்களும் அமாவாசைக்கு முன் தினமே சங்கு முகத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டோம். அந்த விநாயகர் கோவிலுக்கு அருகே ஓலையினால் ஒரு சிறு குடிசை வேய்ந்து, அந்தக் குடிசையிலே தங்கிக்கொண்டு, எங்களுடைய ஆராய்ச்சிக்கு உரிய அந்த விஷயத்தை நேருக்கு நேராகவே சரி பார்த்து விடுவது என்று தீர்மானித்திருந்தோம். அதன்படியே அன்று இரவு 'காயல்' என்ற இடத்திலிருந்து சில படகோட்டிகளை வரவழைத்து, எங்களுடைய படகு யாத்திரைக்கு ஏற்பாடு செய்தோம்.

அமாவாசைக்கு முந்திய இரவு என்றால், அந்த யாத்திரை எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். பௌர்ணமி இரவானால், கடலிலே படகு குதித்துக்கொண்டு செல்வது ஆனந்தமாக இருக்கும். ஆனால் 'கருங்கும்' என்ற அமாவாசைக் காரிருளில், அலைகளுக்கு மேல் ஒரு சிறிய தோணியிலே கண்ணற்ற கடலின் பரப்பில் மிதந்து செல்வது, எத்தனை பயமாக இருக்கும்! சொல்லவே வேண்டியதில்லை. என்றாலும், என்னோடு வந்திருந்த நண்பர்கள் ஆராய்ச்சியிலே தீவிரமாக ஈடுபட்ட சரித்திர மாணவர்கள்! எப்படியும் அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கம் மனத்தில் முனைப்பாக இருந்ததால், அந்தப் பொல்லாத அமாவாசை இருளினால்கூட மன உறுதியை அசைக்க முடியவில்லை. அத்தோடு கடலின் அலைகளும், அமாவாசை இருட்டானதால், அத்தனை ஆவேசம் இல்லாமல் மடங்கியே நெளிந்து கொண்டிருந்தன. கொந்தளிப்பு இல்லை. தோணி அதிக ஆட்டமும் குதிப்பும் இல்லாமல் சம நிலையிலே தண்ணீரில் வாத்துப் போல நீந்திக் கொண்டு சென்றது.

நடுநிசியைக் கடந்த வேளை. கருப்பான வானத்தில் அங்கங்கே பொட்டுப் பொட்டாகச் சிமிட்டிய நட்சத்திரங்களையும், பம்மி அடங்கிய கடலின் மெல்லிய ஓசையையும் தவிர, உள்ளத்தைக் கவரக் கூடிய காட்சியோ நிகழ்ச்சியோ ஏதும் இல்லை. தோணியின் துடுப்புக்களை வலித்துக் கொண்டிருந்த படகோட்டிகளோ, எங்களுடைய ஆராய்ச்சியின் நோக்கத்தை ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாக, மிகவும் ஊக்கத்தோடு அந்தக் கடலின் இதயத்துக்குள்ளேயே படகைச் செலுத்தினார்கள்.

சங்குமுக விநாயகரின் சந்நிதியையெல்லாம் தாண்டி, அதன் எதிரே அந்த நீலக் கருங் கடலின் பரப்பிலே நீண்ட தூரம் நாங்கள் சென்றிருக்க வேண்டும். திடீரென்று அந்த அதிசயமான ஓசை வந்தது. விரைவாகத் துடுப்புக்களை வலித்து முன்னேறிக் கொண்டிருந்த படகோட்டிகள், இப்பொழுது துடுப்பைத் தளர்த்தினார்கள்.

"அதோ! கேளுங்கள்! கேளுங்கள்!" என்றார் எங்களோடு வந்த ஆத்தூர் நண்பர். அவர்தான் முதன் முதல் எங்களுக்கு அந்த ஆச்சரியமான விஷ-

யத்தைச் சொன்னவர். அவருக்குச் சொந்த ஊர் ஆத்தூர். சங்குமுகத்தி லிருந்து கொஞ்ச தூரத்திலுள்ள அழகான கிராமம் அது. இந்தப் பெரிய ஆராய்ச்சியில் என்னுடைய சரித்திர நண்பர்கள் ஏகோபித்து ஈடு பட்டதற்குக் காரணமே அவர்தான்!

"அதோ! தெளிவாகக் கேட்கிறதே! கவனியுங்கள்!" என்றார் ஆத்தூர் நண்பர் மறுபடியும்.

நிசப்தமான சூழ்நிலையிலே, அலை கள் எல்லாம் அடங்கிப் போய் மௌனம் சாதித்த அந்தக் கருநீல நீர்ப்பரப்பிலே, படகு அப்படியே நின்று, அதுவும் அந்த ஓசைக்குச் செவி சாய்த்தது. என்ன ஆச்சரியம்! மிக நன்றாகக் கேட்டது அந்த ஒலி! ஏக காலத்தில் பல நூறு சங்குகளைப் பல நூறு மனிதர்கள் உதட்டிலே பொருத்திப் 'பாம் பாம்' என்று ஊதினால் எப்படி யிருக் கும்? அப்படி யிருந்தது அந்த ஓசை!

"கடலுக்குள்ளே விபீ ஷணச்சாமி பூசை பண் ணுகிறார். அவர் சிரஞ் சீவி யல்லவா! இன்னும் ராமருக்குப் பூசை பண் ணிக் கொண்டே யிருக்கி றார்! அதுதான் இந்தச் சங்கொலி!" என்றார்கள் படகோட்டிகள்.

"சங்குமுகம் என்ற பெயர் இப்பொழுது புரி கிறதா? இன்னும் மூன்று காத தூரம் போனால் வலம்புரித் தீவு இருக் கிறது! அந்த வலம்புரித் தீவுக்கு மூன்று காத தூரத்திலேயே இந்த ஓசை கேட்க ஆரம்பித்து விடும்!" என்றார் ஆத்தூர் நண்பர்.

"அது என்ன வலம்புரித் தீவு? அந்தப் பெயருக்கும் இந்தச் சங்கின் ஓசைக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் எங்களோடு வந் திருந்த இன்னொரு நண்பர்.

"அதுதான் அதன் சரித்திரம்" என்றார் ஆத்தூர் நண்பர்.

"சரித்திரம் என்ற வார்த்தையை அர்த்தமில்லாமல் உபயோகிக்கக் கூடாது, தெரிந்ததா? தமிழ் நாட் டின் சரித்திரத்தை எடுத்துச் சொல் லும் போது, வெறும் கல்வெட்டு ஆராய்ச்சிகள் மட்டும் போதாது. இலக்கிய ஆராய்ச்சிகளும் முக்கியம்! எனவே, அந்த வலம்புரித் தீவைப் பற்றி என்ன நூல்கள், என்ன இலக் கியங்கள் இருக்கின்றன என்பதையும் எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண் டும். புரிகிறதா?" என்று ஆத்தூராரை ஆத்திரத்தோடு கேட்டார் நண்பர்.



"ஆத்திரப்படாதீர்கள். நான் சொல்வதில் எது சரித்திரம், எது கற்பனை என்று உங்களுக்கே தெரி யும், கேளுங்கள்!" என்று ஆத்தூர் நண்பர் கதையைச் சொல்ல ஆரம் பித்தார். அவர் சொன்ன விவரங் களிலிருந்துதான், வலம்புரித் தீவின் காரணமாகப் பல்லவ சாம்ராஜ்யத்





துக்கும், சேர சோழ பாண்டிய வேந்தர்களுக்கு மிடையே, ஏற்கனவே மூண்டிருந்த பகைமை எப்படி வலுப்பெற்றது என்பதும், வேளிரும் முத்தரையரும் அந்த வலம்புரித் தீவுக்காக எத்தனை பெரிய வீர தீரச் செயல்களைச் செய்ய வேண்டியிருந்தது என்பதும், முதன் முதலில் எனக்குத் தெரிய வந்தன. தனது பன்னிரண்டாம் வயதில் காஞ்சிமா நகரிலே மகுடம் சூடிய இரண்டாம் நந்திவர்ம பல்லவனுடைய காலத்தில், இந்தத் தமிழ் நாட்டின் நிலை எத்தனை சிக்கலாயிருந்தது என்ற விஷயத்தைப் பிற்காலத்தில் நான் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராய்வதற்கும், பல இலக்கியச் சான்றுகளைத் தேடுவதற்கும் வேண்

டிய அவசியத்தை உண்டாக்கியதும், இந்த வலம்புரித் தீவின்வரலாறுதான்.

ஆமாம்; அன்று நாங்கள் கேட்ட சங்கின் ஓசையைத்தான் முதன் முதல் சித்திராங்க பூபதியும் கேட்டான் என்று தெரிந்து கொண்டேன். அந்தச் சங்கொலிதான் அவனுடைய ஆத்திரத்துக்கும், மன வேகத்துக்கும் காரணமாக அமைந்தது என்று தெரிய வந்தது. அந்த அதிசயமான சங்கொலி தான் பிற்காலத்தில் அத்தனை பெரிய படை யெடுப்புக்கும் சண்டைகளுக்கும் காரணமாக அமைந்தது என்று கூற வேண்டும். அது ஆயிரத்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு!

ஓர் இரவு, ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இரவு! அது அமாவாசை இரவில்லை. நல்ல பௌர்ணமி இரவு. அலைகள் எல்லாம் அடங்கி நிற்கவில்லை. ஒரே உற்சாகத்தோடு, 'ஓ' என்ற பேரோசையோடு சந்திரனையே சென்று எட்டிப் பிடித்து விடுவது போல, பொங்கி யெழுந்தோங்கி மேலே மேலே வீசிக் கொண்டிருந்தன. வானத்தையும் பூமியையும் சேர்த்து ஒளி வெள்ளத்திலே ஆழ்த்திக் கொண்டிருந்த அந்தப் பௌர்ணமி நிலவிலே, வலம்புரித் தீவின் கரையோரமாக அந்த நடுநிசி வேளையிலே சித்திராங்க பூபதி நடந்து கொண்டிருந்தான். முன்தினம் அவனுடைய நண்பர்கள் இருவர் சொன்ன சங்கொலியின் மர்மத்தை, இன்று நன்றாகத் தெரிந்து தெளிந்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு தான், அவன் அப்படி நடந்து சென்று கொண்டிருந்தான்.

கால் கடுக்காமல், மனம் தளராமல், வலம்புரித் தீவின் கரையோரமாக அவன் மேலே மேலே நடந்து கொண்டே யிருந்தான், எப்படியும் அந்த ஓசையைக் கேட்டு விட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு! எத்தனை தூரம் நடந்திருப்பானோ தெரியாது! திடீரென்று ஓர் இடத்தில் நின்றான். அவன் எதிர்பார்த்து வந்த அந்த ஓசை இப்பொழுது நன்றாகக் கேட்டது!

ஆயிரம் ஆயிரம் சங்குகள் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து ஒலித்தால் அந்த ஓசை எப்படியிருக்கும், அப்படியிருந்தது அது!

மேலே நடக்காமல் அங்கேயே நின்று சுற்றுமுற்றும் பார்ப்பதற்குள், கடலுக்குள்ளே நிலவின் ஒளியில் சங்கிலித் தொடர் போலத் தொடர்ச்சியாகப் பாறைகள் படர்ந்திருப்பது தெரிந்தது. சித்திராங்கன் அந்தப் பாறைகளைப் பார்த்தவாறு கடலின் கரையிலே நின்றான், நின்றான், நெடு நேரம் நின்றான்! அந்தச் சங்குகளின் ஏகோபித்த மந்திர ஓசையிலே அவனுடைய சிந்தனை சென்று அப்படியே இறக்கம் கொண்டு நின்றது.

"பூபதி!" என்று குரல் கேட்டுத் திரும்பினான் சித்திராங்கன். மணலின் பரப்பிலே மந்திரநாயகம் நின்று கொண்டிருந்தார்.

"பூபதி! இந்த இடத்துக்கு வரக் கூடாது என்று எத்தனை தரம் உனக்குச் சொல்லி யிருக்கிறேன்! ஏன் இங்கே வந்தாய்?" என்று கேட்டார் அந்த முதியவர். கண்டிப்பைக் காட்டிலும், கவலையும் பரிவுமே அந்தக் குரலில் தொனித்தன.

"இல்லை. என்றால் என்னுடைய ஆவலைத் தாங்க முடியவில்லை. எத்தனை நாளைக்குத்தான் இந்த ஆவலைக் கட்டுப்படுத்துவேன். என்றால் இனித் தாங்க முடியாது. எப்படியும் அந்த மர்மத்தைத் தெரிந்து கொள்ளாமல் இன்று அரண்மனைக்குத் திரும்பிப் போவதில்லை நான்!" என்றான் பூபதி உறுதியான குரலில்.

"பூபதி! குழந்தை மாதிரிப் பேசுகிறாயே! அம்மாவுக்குத் தெரிந்தால் எத்தனை கஷ்டப்படுவார்கள். வேண்டாம். இந்த ஆவலை விட்டு விடு! நம்முடைய குலாதிபதிகள் எத்தனையோ பேரைப் பழி வாங்கிய காரியம் இது. உனக்கு வேண்டாம், வந்து விடு. தயவு செய்து அந்தப் பாறைப் பக்கம் போக வேண்டாம். சொல்வதைக் கேள்!" என்று கெஞ்சினார் பெரியவர்.

"இல்லை. என்னைத் தடுக்காதீர்கள். இதோ நான் எத்தனையோ நாட்களாகக் கேட்கத் துடித்துக் கொண்டிருந்த அந்த அபூர்வமான அதிசயச் சங்கொலியை இன்று கேட்டு விட்டேன். இந்த இடந்தான் என்னுடைய

நண்பர்கள் குறிப்பிட்ட இடம் என்பதையும் கண்டு கொண்டு விட்டேன். இனிமேல் என்னைத் தடுக்க வேண்டாம். அந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டால் ஒழிய இனி நான் அரண்மனைக்குத் திரும்ப மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்!"

'சத்தியம்' என்று வார்த்தையைச் சொன்னபோது, அந்த நிலவின் ஒளியிலே சித்திராங்கனுடைய முகத்தில் ஒரு வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. கடலினின்று எழுந்த சங்கொலி அவனுடைய செவியிலே புகுந்து, ஏதோ ஒரு பெரிய ஆவேசத்தையே உண்டாக்கி விட்டிருந்தது என்பது, அந்த முகத்திலே நன்றாகத் தெரிந்தது. இதைப் பெரியவர்கவனித்தார்.



"பூபதி! சத்தியம் செய்யலாமா? எவ்வளவு பெரிய வார்த்தை அது! இன்னும் சிறு பிள்ளையா நீ!"

"மந்திர நாயகம்! இந்த வினாடிவரை உங்களுடைய சொல்லை நான் தட்டிப் பேசியதில்லை. இந்தக் கணம் வரை உங்களுடைய வார்த்தைகளை நான் மீறியதில்லை. தயவு செய்து இப்பொழுது அப்படி ஒரு அவசியத்தை எனக்கு ஏற்படுத்தாதீர்கள். நான் இதோ அந்தப் பாறைகளை நோக்கி நடக்கப் போகிறேன். இடுப்பளவுக்கு மேல் இங்கே ஆழம் இல்லை என்பது எனக்குத் தெரியும். அப்படி ஆழமாகயிருந்தாலுங் கூட நான் கவலைப்படப் போவதில்லை. நீந்தி நீந்தி இந்தச் சங்கிலிப் பாறைகளை ஒவ்வொன்றாக் கடந்து சென்று விடுவேன். மீண்டும் சொல்கிறேன். இது சத்தியம்!"

ஒரே உறுதியோடு வந்தன வார்த்தைகள். அது கண்டு, பெரியவர் கலங்கிப் போய் விட்டார்.

"பூபதி! உன்னுடைய பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியாது. நீ இன்று அந்தப் பாறைகளுக்குச் செல்லாமல் அரண்மனைக்குத் திரும்ப மாட்டாய். நன்றாய்த் தெரிகிறது. ஆனாலும் தனியே செல்வது தவறு. வா, நானே உன்னை அழைத்துச் செல்கிறேன்! விதி யாரை விட்டது! என்ன செய்தாலும் செய்யட்டும்! உனக்குத் துணையாக நானும் நின்றேன் என்ற ஒரு திருப்தியாவது எனக்கு இருக்கட்டும்!" என்று சொல்லிக் கொண்டு, அவனுடைய பதிலுக்குக் காத்திராமல், தண்ணீருக்குள் இறங்கினார் மந்திரநாயகம். பூபதி அவரைப் பின் தொடர்ந்தான்.

திட்டுத் திட்டாக ஒரே தொடர்ச்சியாகச் சங்கிலிப் பாறைகள் கடலுக்குள்ளே சென்றன. ஒரு பாறைக்கும் இன்னொரு பாறைக்கும் இடையிலே இடுப்பளவு ஆழந்தான் இருந்தது. ஏதோ ஒரு சிறிய குன்று நீண்ட நாட்களுக்கு முன் அந்த இடத்திலே நின்றிருக்கவேண்டும். பிறகு இயற்கையின் ஆவேசத்தினால் அலை பொங்கி வந்து, அந்தக் குன்று கடலிலே மூழ்கி யிருக்க வேண்டும்! ஏனென்றால் அந்த இடத்தில் தண்ணீர் ஆழமாகவே இல்லை. கால் பாவிய இடம்எல்லாம் பாறையாக இருந்தது.


பட்டப் பகலைப் போல ஒரே பிரகாசமாக வீசிய நிலவின் ஒளியிலே முதியவரும், பூபதியும் தாவித்தாவிச் சங்கிலிப் பாறைகளிலே நடந்தார்கள். சுமார் இருநூறு அடி தூரம் சென்றதும் வட்டமான ஒரு பெரிய பாறையும் அதன் மேல் இடிந்து சரிந்து நின்ற ஒரு சிறு கோவிலும் தெரிந்தன. ஆனால் இதென்ன! அந்தப் பாறையின் கோடியிலே ஒரு சிலை நிற்கிறதே!

பூபதி நிலவின் ஒளியில் கூர்ந்து பார்த்தான். அழகே வடிவமான ஒரு பெண்ணின் சிலை, பாறையின் வடகோடியிலே நின்றது. அந்தச் சிலையின் அருகே உயரமாக ஏணி போல் நிற்பது என்ன? அதன்மேல் நிலா

பிரகாசமாக வீசியது. பூபதி பார்த்தான். அது ஒரு வீணை. கல்லினால் செய்யப்பட்ட வீணை. பெரிய வீணை. ஏணியைப் போல் படிகள் வைத்து நிற்கிறது! அதன் பாதத்திலே விசாலமான பெரிய படிக்கட்டு இருந்தது. இங்கிருந்து பார்த்தாலே அவனுக்கு மிக நன்றாகத் தெரிந்தன இத்தனையும்!

பெரியவர் அந்த வட்டமான பாறையிலே ஒரு தாவுத் தாவிக் கொண்டு ஏறினார். பூபதி அவரைப் பின் தொடர்ந்து சென்று, அவனும் ஒரு குதி குதித்துப் பாறையின் மேல் ஏறினான்.

என்ன ஆச்சரியம்! ஜலதரங்கத்தின் ஓசையைப் போன்று 'தர தரங், கண கணங், தர கண தரங்' என்று ஓர் இன்னிசையின் ஒலி அந்த வட்டமான பாறையிலே கேட்டது. பூபதி சிலையைப் பார்த்தவாறு அவனும் ஒரு



கற்சிலையாக அப்படியே மெய் சிலிர்த்து நின்றான்.

வானத்திலே பொழிகிற நிலவின் குளுமையும், சந்திர வட்டத்தின் அழகும் ஒன்று சேர்ந்து வந்து, ஒரு பெண் உருவத்திலே சிலையாக அவனுடைய கண்ணுக்கு முன் நின்றால் எப்படி யிருக்குமோ, அப்படிக் காட்சி தந்தது அந்தச் சிலை. கடல் அலைகள் அதன் பாத பீடத்திலே இருந்த படிக்கட்டுகளிலே ஏறித் தவழ்ந்து ஒரு கணம் குதித்து விளையாடி விட்டு, மீண்டும் கடலுக்குள்ளே வேகத்தோடு தத்தி விழுந்து கொண்டிருந்தன! அப்படி அந்த அலைகள் படிக்கட்டிலே வந்து விளையாடும்போது தான் இந்தத் தரங்க ஒலி எழுந்தது. ஆமாம். வரிசைக் கிரமமான அந்தப் படிக்கட்டிலே அலை வந்து ஏறி இறங்கி விழுந்து சரியும்போதெல்லாம் 'சரி கம பதநி' என்றும், 'சநிதபமகரி' என்றும் ஒரு இனிய ஒலி, ஜலதரங்கத்தின் இசை போன்ற ஒலி, படிக்கட்டிலே எழுந்தது. அலை வேகமாக ஓடி வந்து படிகளிலே ஏறிச் செல்லும்போது 'சரிகமபதநி' என்று அந்த ஒலியும் படிப்படியாக ஏறியது. ஏறிய அலைத் தண்ணீர், மடங்கிப் புரண்டு மீண்டும் கடலுக்குள்ளே செல்வதற்காக அந்தப் படி வரிசைகளிலே கீழே இறங்கும்போது 'சநி தப மகரி' என்று அந்த ஜலதரங்க ஒலியும் கீழே இறங்கியது! படிகளிலே அலைத் தண்ணீர் ஏவும் போது ஆரோகணம்! இறங்கும்போது அவரோகணம்! அவ்வப்போது மிக வேகமாக ஓங்கி வரும் மாபெரும் அலை உயர்ந்து எழுந்து படிகளிலே வேகமாக வந்து விழுந்து சிதறினால், அதிலிருந்து தண்ணீர்த் துளிகள் உதிருமல்லவா? அந்த நீர்த் துளிகள் சிலையின் மேனியிலே தெறிக்கும்போது 'கல கல' என்ற ஒலி அந்தச் சிலையிலிருந்து கேட்டது! காரணம் அந்தச் சிலைக்கு அருகிலே வீணையின் வடிவத்தில் ஒரு சிறிய சிற்பம் நிற்கிற தல்லவா? வீணையிலே உள்ள மெட்டுக்களைப்போன்று அமைந்திருந்த அந்தக் கல் வெட்டுக்களிலே தண்ணீர் தெறித்த போதெல்லாம் ஜலதரங்க ஒலி 'கலகல்' என்றது. கடலில் இருந்து எழுந்த இந்த ஆச்சரியகரமான தரங்க ஒலியிலே மனம் மயங்கிப் போய்ப் பூபதி அந்தப் பெண்ணின் சிலையை நோக்கியவாறு ஒரே வெறியோடு நின்று கொண்டிருந்தான்.


பெரியவரோ இதற்குள் அந்தச் சிலையைக் கடந்து மறுபக்கம் சென்று திரும்பிப் பார்த்தார். பாடும் தரங்கங்களின் இன்னொலியிலே மயங்கினவனாகப் பூபதி நின்றதைப் பார்த்தார்.

"என்ன நிற்கிறாய்? வா மேலே! மயக்கம் போட்டு விழுந்து விடாதே. இப்படியே வலப் பக்கமாகத் திரும்பிக் காலை நன்றாக ஊன்றிக் கொண்டு நடந்து வா!!" என்றார்.

அவருடைய குரல் வந்த திசையையே பார்த்தான் பூபதி. அங்கே செல்லலாமா, அந்தச் சிலைக்கு அருகிலே போய் வீணையின் ஒலியையும் படிக்கட்டுகளின் இன்னிசை கீதத்தையும் கேட்கலாமா என்று ஒரு கணம் யோசித்துத் தயங்கினான். இதற்குள் விவரிக்க முடியாத ஒரு ஜோதி பெரியவர் நின்ற இடத்துக்கு அப்பாலிருந்து வேகமாக மின்னிக் கொண்டு சாட வருவதைக் கண்டான் அந்தச் சுந்தர வாலிபன்.

(தொடரும்)

கடல் கண்ட கனவு



மூன்றாம் அத்தியாயம்

சந்திரகாந்தக் கல்

மந்திரநாயகம் நின்ற திசையையே பார்த்த பூபதி, தன் கண்ணுக்கு எதிரே பாய்ந்து வந்த ஜோதியைக் கண்டு திகைப்படைந்தான். அடுத்த கணம் அந்த வீர இளவரசன் சற்றும் தயங்காமல் மேலே நடந்தான்.

வட்டமான பாறையின் மத்தியிலே பாழடைந்த சிற்பங்களைத் தாண்டிச் சென்றால், ஒரு கோவில் இருந்தது. இடிந்தும் இடியாமலும் காட்சி தந்த அந்தக் கோவிலின் வாசலிலே, முகப்பில் ஒரு வலம்புரி விநாயகரின் சிற்பம் நின்றது. அதற்கு முன்புறம் ஒரு கொடி மரம். அந்தக் கொடி மரத்தின் அருகே உயரமான ஒரு பெரிய தூண் போன்ற கோபுரம். கூர்ந்து பார்த்தால் அது ஒரு கோபுரம் மட்டுமில்லை. கண்ணற்ற கடலிலே மிதந்து செல்லும் மரக்கலங்களுக்கு, வழி காட்டுகிற ஒரு கலங்கரை விளக்கம் அது!


அந்தக் கலங்கரை விளக்கத்தின் உச்சியிலே ஒரு சிறு கூண்டு, காற்றாடி போலச் சுழன்று கொண்டிருந்தது. அலைகளிலே தவழும் காற்று அந்தக் கூண்டைச் சுழற்றிக் கொண்டிருந்தது. அதனுள்ளிருந்து தான் அந்தப் பிரகாசமான பெரிய ஜோதி கண்ணைப் பறித்துக் கொண்டு வந்தது.

பூபதி அந்த ஒளிக் கம்பத்தைக் கூர்ந்து பார்த்தான். அதன் உச்சியில்



சுழன்று கொண்டிருந்த கூண்டுக்குள்ளே, ஒரு பெரிய சந்திர காந்தக் கல் பதிக்கப்பட்டிருந்தது. அதுவும் அந்தக் கூண்டோடு சேர்ந்து சுழன்று கொண்டிருந்தது. சந்திரனுடையநிலவு அந்தக் காந்தக் கல்லிலே பட்டு, எதிர் ஒளியாக அந்தப் பிராந்தியம் முழுதும் 'குபீர்' 'குபீர்' என்று ஒளிக் கற்றையை வீசி வீசிச் சுற்றிக் கொண்டிருந்தது. அதைச் சுட்டிக் காட்டிக் கொண்டே மந்திரநாயகம் சித்திராங்க பூபதியிடம் கீழ்க் கண்டவாறு சொன்னார் :—

"இதுதான் சந்திர காந்தக்கல். கலங்கரை விளக்கத்தில் தினந்தோறும் எண்ணெயும் திரியும் போட்டு விளக்கேற்றுவது கஷ்டமல்லவா? அதனால் நமது முன்னோர்கள் இப்படிப்பட்ட அற்புதமான ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இந்தச் சந்திர காந்தக் கல்லானது நிலவின் தாரைகளை உட்கொண்டு ஒளி வீசக் கூடியது. அமாவாசை இரவுகளிலுங்கூட, நட்சத்திரங்களின் ஒளியைத் தன்னிடத்தே வாங்கி, அதை அப்படியே பிரதிபலித்துச் சுழன்று கொண்டே கண் சிமிட்டும் சக்தி வாய்ந்த அபூர்வமான காந்தம். இந்த எல்லை முழுவதும் குன்றுப்பிரதேசமாக இருப்பதால், இந்தப் பக்கமாக வரும் கப்பல்களுக்கு எச்சரிக்கை செய்கிறதோடு, இந்த வலம்புரித் தீவுக்கு ஒரு அடையாளமாக இந்த வெளிச்சம் நின்று, கடலிலே செல்கிறவர்களுக்குத் திசை காட்டவும் செய்கிறது!" என்றார் வலம்புரியின் தலைமை மந்திரி மந்திரநாயகம்.



பூபதி அந்தக் கலங்கரை விளக்கத்தைப் பார்த்துக் கொண்டே மேலே நடந்தான். வட்டப் பாறையின் எல்லை விளிம்புக்கு வந்தார்கள் இருவரும். அதன் மூலையிலே ஒரு குகைப் பாறையிருந்தது. அந்தக் குகைக்குள் கடல் தண்ணீர் புகுந்தோடித் திரும்ப வந்து கொண்டிருந்தது. ஆனால் இதென்ன? அந்தக் குகைக்குள்ளேயிருந்து சோகம் நிரம்பிய ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறதே!

சித்திராங்க பூபதி மெய்சிலிர்த்து நின்றான். யாரோ ஒரு பெண் விம்மி விம்மி அழுங்குரல் மிக அருகிலே கேட்டது.

"பூபதி! அந்த இடத்தில் நிற்காதே. இங்கே வந்து விடு!" என்றார் மந்திரநாயகம்.

"பெரியவரே! இதென்ன குரல்? நெஞ்சை என்னவோ செய்கிறதே. கேட்டீர்களா?" என்றான் பூபதி.

"ஆமாம். இதுதான் இந்த வலம்புரித் தீவைக் காவல் செய்கிற கன்னித் தெய்வம். அந்தப் பெண் தெய்வத்தின் விம்மல்தான் இந்த நிசி நேரத்திலே இப்படி நெஞ்சை உருக்குகிறது!" என்று மந்திரநாயகம் சொன்னார்.

"தீவின் தேவதையா? தேவதை அழுகிற குரலா இது? என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்?"

"ஆமாம், கடந்த நூறு ஆண்டுகளாக இந்தத் தீவிலே ஒலிக்கிற அழுகுரல் இது! குமாரா! நீ அங்கே நில்லாதே! இங்கே வந்து விடு!" என்று சொன்னார் மந்திரி. அவருடைய உடம்பெல்லாம் பதற்றத்தோடு ஆடியது.

"தேவதையாவது! அழுகிறதாவது!" என்றான் சித்திராங்கன்.

"சரி; நீ வாலிபன் அல்லவா? நம்ப மாட்டாய். அதுவும் நல்லதுக்குத்தான். நீ நம்பாதவரை எனக்குக் கவலையில்லை. நம்பினால்தானே துயரம்!" என்றார் பெரியவர்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே! தேவதை அழுகிறது என்றீர்கள். நூறு ஆண்டுகளாகக் கடலிலே கண்ணீர் வடிக்கிறது என்று சொன்னீர்கள். ஒரு தேவதை எதற்காக இப்படித் துயரப்படவேண்டும்? அது தான் நம்ப முடியவில்லை

என்றால்!" என்று மீண்டும் பூபதி தயக்கத்தோடு சொன்னான்.

"நீதான் நம்பவில்லையே. ஏன் அதைப் பற்றிக் கேட்கிறாய்?" என்றார் மந்திரநாயகம்.

"நம்பவில்லை. ஆனாலும் உங்களுடைய நம்பிக்கையைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? சொல்லுங்களேன்!" என்று கூறி, நிலவின் ஒளியிலே பாறைத் திட்டு ஒன்றில் உட்கார்ந்தான் சித்திராங்கன்.

"நீ நிச்சயம் நம்ப வில்லை என்று உறுதி கூறு. அப்படியானால் அந்த விவரத்தை உனக்குச் சொல்கிறேன்" என்றார் பெரியவர்.

"நிச்சயம் நம்பவில்லை. தைரியமாகச் சொல்லுங்கள்" என்றான் இளவரசன். மந்திரநாயகம் பேச ஆரம்பித்தார்.

"பூபதி! இந்த வலம்புரித் தீவின் அதிதேவதை இருக்கிறதே, அந்த தேவதைதான் விம்மி விம்மிக் கண்ணீர் வடிக்கிறது. கடந்த நூறு வருஷங்களாக இப்படிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. அதன் கண்ணீரைத் துடைப்பதற்கு இது நாள் வரை யாரும் வரவில்லை. அது தான் இந்த வலம்புரித் தீவின் துயரக் கதை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே பெரியவர் மீண்டும் தொடர்ந்து பேசினார்.




"இந்த வலம்புரித் தீவு, எத்தனையோ பல நூற்றாண்டுகளாகக் கடலின் மத்தியிலே கம்பீரமாக எழுந்து நிற்கும் ஒரு புராதனமான நிலப் பரப்பு. ஆதியில் பாண்டிய அரசர்களுக்குச் சொந்தமான ஒரு கிளை ராஜ்யமாக இது இருந்தது. என்றாலும், தமிழ் நாட்டின் பழம்பெரும் வேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள் மூவருமே, இந்தத் தீவின் வளர்ச்சியில் ஏகோபித்த பக்தியுடன் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இதன் ஆட்சிப் பொறுப்புக்கு மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்து அனுப்பிய பிரதிநிதியே பட்டத்தில் அமர்த்தப்பட்டான். காரணம், இந்த மூவேந்தர்களும் தங்களுக்குள் அரசியல் காரணமாகப் பல சண்டைகளில் மோதிய போதிலும், வெளி நாட்டவர்களின் படையெடுப்புக்களிலே தமிழ் நாடு எப்படியெல்லாமோ திக்குமுக்காடிய சமயத்திலும், தமிழ் நாட்டின் புராதனக் கலைகளான சிற்பமும், ஓவியமும், இசையும் அரசியல் மாறுதல்களையெல்லாம் தாண்டி, அரசியலுக்கு அப்பால் நின்று, ஓங்கி வளர வேண்டும் என்று ஆசைப் பட்டார்கள் முத்தமிழ் வேந்தர்கள். இதனால் தான் குகைகளிலும் தீவுகளிலும் தமிழ் மன்னர்கள், தங்களுடைய சிற்பம், ஓவியம், இசை முதலிய கலைகளை நிர்மாணித்துப் பாதுகாத்து வளர்த்தார்கள். படையெடுப்புக்களினால் இந்தக் கலைகள் பாதிக்கப் படாத முறையில் இவற்றைக் காப்பாற்றினார்கள். இதே நோக்கத்தோடுதான் தமிழ் நாட்டிலிருந்து கை தேர்ந்த சிற்பிகளையும், ஓவியர்களையும், இசைவாணர்களையும் இந்தத் தீவுக்கு அனுப்பி, இங்கே ஒரு குடியிருப்புத் தோன்றி வளரும்படி செய்தார்கள். இதோ நீ காணும் சிற்பங்களும், இசை அற்புதங்களும் தமிழ் மன்னர்களுடைய அந்தக் கலைக் கனவின் சிதைந்த துண்டுகள்!"

இவ்வாறு சொல்லி, ஒரு கணம் மௌனத்தோடு ஏக்கப் பெருமூச்சு விட்டார் பெரியவர். அப்பொழுது பூபதி கேட்டான்:

"மந்திரநாயகம்! நீங்கள் சொன்ன வரலாறு சரி. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் தமிழ் மன்னர்களுடைய அந்த உன்னதமான கனவு ஏன் இப்படிச் சிதைய வேண்டும்? அவர்களுடைய மகத்தான அந்த இலட்சியங்கள் எல்லாம் ஏன் இப்படி உருக்குலைய வேண்டும்? எதற்காக இந்த வலம்புரித்





தீவின் தேவதை இப்படிக் கண்ணீர் வடிக்க வேண்டும்?”

இக்கேள்விக்கு மந்திர நாயகம் பதில் சொன்னர்:


“பூபதி! இந்த வலம்புரி விநாயகருக்கு அருகே நிற்கும் இந்தக் கோவில்தான் வலம்புரி யம்மனின் புனித இருக்கை. இது சென்ற நூற்ருண்டுவரை மகோன்னதமான புண்ணியத்திருக் கோவிலாக விளங்கியது. இந்தக் கோவிலிலேதான், மல்லிநாயக யாழ்ப்பாணர் என்ற ஒரு முதியவர் இருந்தார். அவரிடமிருந்த பேரியாழ் என்ற தெய்விகமான இசைக் கருவி, இந்தக் கோவிலின் அர்த்தஜாம பூஜையின் போது தேவதைகளை ஆவாகனம் செய்து







வந்த புனிதமான வாத்தியம். மல்லி நாயக யாழ்ப்பாணர் அம்மன் சந்நிதியிலே அமர்ந்து, பௌர்ணமி இரவுகளிலே, நடுநிசி நேரத்தில், யாழை மீட்ட ஆரம்பித்தார் என்றால், வானத்திலுள்ள தேவதைகள் எல்லாம் இந்தப் பூமியிலே இறங்கி வரும். வலம்புரி அம்மன் தனது பரிவாரங்களோடு வந்திறங்கி, இந்தத் தீவிலே கொலு இருப்பாள். அப்படிப் பட்ட அதிசயக் கலைஞர், தமது பேரியாழிலே தாரத்தாக்கம் என்ற பழந் தமிழ் இசை முறைப்படி, அற்புதம் அற்புதமான பண்களை அமுத தாரையாகப் பொழிந்து வந்தார். அவருடைய விரல்களிலே நீல வானமும், விண்மீன்களும், பூரண சந்திரனும், பொங்குகிற கடலும் நாத உருவிலே வந்து



நின்று உறவாடும்! அப்படிப் பட்ட யாழ்ப்பாணர், பழந் தமிழ் இசை அறிஞர்கள் கண்ட பூரணமான பண்களை, பண்திறம் என்றும், பண்திறத்திறம் என்றும் ஜன்யராகங்களாகப் பிரித்து, அநேக அபூர்வமான கற்பனைகளைத் தந்திகளிலே தோற்றுவித்து, வான மண்டலத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். தூரம் தொலையில் கப்பல்களிலே செல்லும் பிரயாணிகள் எல்லாம் ஜாம வேளையிலே, கடல் அலைகளில் தவழ்ந்து வரும் அவருடைய தெய்விக இசையைக் கேட்டு மெய்ம் மறந்து நிற்பார்கள். திசையனைத்தும் அவருடைய புகழ் பரவியது. காஞ்சிமா நகரத்திலே ஆட்சி புரிந்து வந்த மகேந்திரவர்ம பல்லவன் செவியிலும் இந்த யாழின் புகழ் கேட்டது.

"மகேந்திர வர்மன் சென்ற நூற்றாண்டில் தமிழ் நாடு முழுவதையும் ஒருசேர ஆண்டு வந்த மகா பராக்கிரமசாலி. சங்கீதத்திலே பெரிய நிபுணன். பரிவாதினி என்ற வீணையிலே அவன் பல புதிய இசை வடிவங்கள் வகுத்து, அந்த நுட்பங்களையெல்லாம்* குடுமியாமலையிலே நிரந்தரமான கல் வெட்டுக்களாகச் செதுக்கிக் கொண்டிருந்தான். ருத்ராசாரியர் என்ற இசை ஞானியின் தலைமையில், அவன் யாழின் திறங்களை ஆராய்ந்து கொண்டிருந்த சமயத்தில், மல்லிநாயக யாழ்ப்பாணரது இசையின் மகிமையும் அவன் செவியை எட்டியது. உடனே வலம்புரித் தீவுக்கு அழைப்பு அனுப்பினான்.

"மல்லி நாயகர் பழந் தமிழ் நாட்டு இசை ஞானத்தைத் தனக்குப் பின்னால் பாதுகாக்கக் கூடிய நல்ல சிஷ்யன் ஒருவனை நாடிக் கொண்டிருந்த சமயம் அது! அந்தத் தருணத்திலே மகேந்திர பல்லவ மன்னனின் அழைப்பு வந்ததும், யாழும் கையுமாகக் காஞ்சி மாநகரத்துக்குப் புறப்பட்டு விட்டார் பாணர்.

"பூபதி! நம்முடைய வலம்புரித் தீவின் பாணர் இந்தத் தீவை விட்டுச் சென்று நூறு ஆண்டுகள் ஆகி விட்டன. அவர் சென்ற பிறகு, அவரைப் பற்றிய எவ்விதச் செய்தியும் நமக்கு எட்டவில்லை. மகேந்திரவர்மன் காலத்திலும், அவனுடைய மகன் நரசிம்ம பல்லவன் காலத்திலும், தமிழ் நாட்டிலே போரும் படையெடுப்புக்களுமாகக் குமைந்து கொண்டிருந்தன. இந்தக் குழப்பங்களுக்கு மத்தியிலே மல்லி நாயக யாழ்ப்பாணர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. அவர் மறைந்த விநாடியிலிருந்து, இந்த அம்பிகை சந்நிதியில் தெய்வ கீதத்தின் புண்ணிய ஒலி நின்றது. தேவதைகளும், வானவர்களும் நடமாடிய இந்தப் புனிதத் தீவிலே காரிருள் கப்பிக் கவிந்தது. ஏழு சுரங்களுக்குள்ளே கட்டுப்பட்டு ஒலிக்கும் ஒரு ராகத்தைப் போல, வரம்புக்குள்ளே அலை வீசிக் கோஷித்துக் கொண்டிருந்த இந்தக் கடலானது, யாழின் இசை நின்ற பிறகு, எல்லையை மீறிப் பொங்க ஆரம்பித்து விட்டது. இந்தக் கோவிலும் சுருதி தவறிச் சிதைந்த

* இசைக் குறிப்புகள் அடங்கிய இந்தக் கல்வெட்டுக்களைப் புதுக்கோட்டைக்கு அருகிலே உள்ள குடுமியாமலைக் கோவிலில் இன்றும் காணலாம்.

ஒரு வீணையைப் போல, ஜீவ நரம்புகள் எல்லாம் சிதைந்து குடமும் உடைந்து கிடக்கிறது. வலம்புரித் தீவின் கலை வளம் மங்க ஆரம்பித்து விட்டது. தமிழ் நாட்டின் மூவேந்தர்களும் இன்று குறுநில மன்னர்களைப் போல, எங்கெங்கோ சிதறிப் போய்க் கிடக்கிறார்கள். இதை யெல்லாம் கண்டு உள்ளம் வெந்து போய், வலம்புரித் தீவின் தேவதை விம்மி விம்மிக் கண்ணீர் வடிக்கிறது!''

இவ்வாறு சொல்லி முடித்ததும் பெரியவரும் விம்மி விட்டார்! எதிரே யிருந்த பூபதியோ, அப்படியே உடலும் உள்ளமும் உருகிக்கொண்டே பாறையில் அசைவற்று இருந்தான்.

"என்ன பூபதி! நீயும் கவலையில் ஆழ்ந்து விட்டாய். தேவதை அழுவதை நம்பவில்லை என்று சொல்லி விட்டு, இப்பொழுது ஏன் இப்படி உருகி உட்கார்ந்து விட்டாய்?'' என்று கேட்டார் பெரியவர். சித்திராங்கன் சொன்னான்:

"வலம்புரித் தீவுக்கு ஒரு காவல் தெய்வம் இருக்கிறது என்றும், அது நூறு வருஷங்களாகக் கண்ணீர் வடிக்கிறது என்றும் சொன்னீர்கள்! அதை நம்பினாலும் நம்பா விட்டாலும், நிச்சயம் தமிழ்த் தெய்வம் என்று ஒன்று இருக்கிறது, அது கண்ணீர் வடிக்கவே வடிக்கிறது என்பதை நம்புகிறேன். தெய்வத் தமிழ் நாட்டு மூவேந்தர்களும் கண்ட புனிதக் கனவு, இப்படிச் சிதைந்து போவதை எண்ணித் தமிழ்த் தாய் நிச்சயம் கண்ணீர் வடிக்கிறாள். அதை நம்புகிறேன். தமிழ் நாட்டின் பழம் பெரும் இசைக் கருவியான பேரி யாழ், எந்த வினாடி இந்தத் தீவிலிருந்து நீங்கியதோ, அந்த வினாடியே கலையரசி, கலைத் தேவியும் இங்கிருந்து கடலுக்குள்ளே குதித்து விட்டாள். நிச்சயம் நம்புகிறேன். அதோடு மட்டுமில்லை. நீங்கி மறைந்த அந்தக் கலைமகளை மீண்டும் இந்தத் தீவிலே கொண்டு வந்து நிலை நாட்டி, அவளுக்குக் குடமுழுக்குச் செய்து, விழா எடுக்க வேண்டும். அதன் அவசியத்தையும் உண்மையையும் நிச்சயமாக நான் நம்புகிறேன்!''



இப்படிச் சொல்லும் போது சித்திராங்க பூபதியின் உடம்பெல்லாம் பதறியது.

"குமாரா! இதனால் தான் இந்தப் பக்கம் உன்னை வர வேண்டாம் என்று உன் தாயார் தடுத்தார்கள். இதனால் தான் நீ இங்கே ஏன் வந்தாய் என்று ஆரம்பத்திலேயே நானும் உன்னைக் கேட்டேன்!'' என்றார் பெரியவர்.

"ஏன் வரக்கூடாது? ஏன் என்னை நீங்கள் தடுக்க வேண்டும்?'' என்று வேகத்தோடு கேட்டான் சித்திராங்கன்.

"நரசிம்ம பல்லவன் காலத்திலும், அதற்குப் பிறகு வந்த பல்லவர் காலத்திலும், பின்னர் 'வாத்திய வித்தியாதரன்' என்ற சிறப்புப் பெயரோடு விளங்கிய ராஜசிம்மன் காலத்திலும், காஞ்சியில் இசைஆராய்ச்சி தொடர்ந்து நடந்தது என்று தெரிகிறது. அந்தப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் காஞ்சிமா நகரத்துக்குச் சென்று இந்த வீணையைக் கண்டு பிடித்து, மறைந்து சென்ற யாழிசையை, மீண்டும் வலம்புரியிலே கொண்டு வந்து நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, கடல் கடந்து போன உனது குலாதிபதிகளும், உன்னுடைய தாயாதிகளும் பலர். ஆனால் அவர்களில் யாரும் இந்த வலம்புரித் தீவுக்குத் திரும்பி வரவில்லை. இன்றோ பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன்

பட்டத்துக்கு வம்சம் இல்லாமல் இறந்து விட்டானும். நாடே குழப்ப மாக இருக்கிறதாம். இந்த நிலையில் பேரி யாழைக் கவனிப்பார் யார்? பழந் தமிழ் நாட்டின் பேரி யாழை யும், அதன் புனிதமான இசையை யும், இனி மறந்து விட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அதனால் தான் உன்னை இங்கே வர வேண் டாம் என்று அரசியார் தடுத் தார்கள். அதனால்தான் நீ இந்தப் பாதையின் பக்கம் வருவதை நானும் விரும்பவில்லை!'' என்று சோகத்தோடு கூறினார் மந்திரநாயகம்.

"பெரியவரே! என்னுடைய வார்த் தைகளைக் கொஞ்சம் பொறுமை யோடு கேளுங்கள். வலம்புரித் தீவின் அரசியார் என்னுடைய தாயார் என்பது சாமான்யமான உண்மை. தாய் என்ற சாதாரண நினைவை மறந்து விட்டு, தான் இந்தத் தீவின் மகாராணி என்ற மகத்தான உண் மையை அவர்கள் எப்போதும் மனத் தில் நினைவு வைத்துக் கொள்ள வேண் டும். ஒரு தாய்க்கு மகன் என்ற ஒரே கவலைதான். ஆனால் ஒரு அரசிக்கோ குடிமக்கள் என்றும், தன்னுடைய நாடு என்றும் தான் கவலை. என்னு டைய அன்னை இந்த வலம்புரித் தீவின் பேரரசி. அவளுடைய பிள்ளைப் பாசத்தை மறந்து விட்டு, ஒரு பேரரசி யின் கடமை என்ன என்பதை எண் ணிப் பார்க்க வேண்டும். அப்படி அவள் எண்ணிப் பார்க்கும்படி செய்ய வேண்டியது, மந்திரநாயகமாகிய உங்களுடைய முழுமுதற் கடமை. புரி கிறதா?'' என்று சீற்றத்தோடு கேட்டான் பூபதி.

"சித்திராங்கா! என்ன பேசு கிறாய் நீ! தமிழ் நாட்டு வானத்திலே இன்று கருமேகங்கள் சூழ்ந்து கொண் டிருக்கின்றன. காஞ்சிபுரத்திலே பட் டம் சூடுவதற்கு ஆள் இல்லாமல் மறைந்து விட்ட பரமேசுவர வர்ம னோடு, சிம்மவிஷ்ணுவின் பரம்பரையே நின்று போய் விட்டது. இந்த நிலை யில் பொது மக்களும், பிரதானிகளும் கூடி யாரோ ஒரு தாயாதிச் சிறுவனை அரசனாக முடிசூட்டுகிறார்கள் என்று நாகபட்டினத்திலிருந்து வந்த ஒரு கடல் வணிகர் சொன்னார். நாடு முழுவதும் ஒரே கொந்தளிப்பாக இருக்கிறதாம். சேர சோழ பாண்டி யர்கள் எல்லாம் பல்லவப் பேரரசை வீழ்த்துவதற்கு இதுதான் சமயம் என்று ஒன்று சேர்கிறார்களாம். சித்தி மாயன் என்பவனுடைய சூழ்ச்சி வேறு அந்தப் புதிய அரசச் சிறுவனுக்கு ஏதேதோ வஞ்சக வலை விரிக்கலாம் என்று சந்தேகப் படுகிறார்கள். நாடு முழுவதும் ஒரே பயத்தில் ஆழ்ந்திருக் கிறதாம். சளுக்கியர்கள் வேறு தமிழ் நாட்டின்மீது படை யெடுப்பதாகப் பயமுறுத்துகிறார்களாம். இத்தனை குழப்பமான சூழ்நிலையில் நீ சற்றும் யோசித்துப் பாராமல் என்ன சொல் கிறாய்?'' என்று பதறினார் பெரியவர்.

"சொல்கிறேன், கேளுங்கள் நான் சொல்வதை. இந்த வானமும், இந்த நீலக் கடலும், இந்தப் பௌர்ணமிச் சந்திரனும், இதோ பாழடைந்து நிற் கும் இந்தக் கோவிலும் சாட்சி. இதோ சத்தியம் செய்கிறேன். மந்திர நாயகமே! வலம்புரித் தீவின் கலைச் செல்வமாகிய அந்த யாழை நான் மீட் டுக் கொண்டு வருவேன். அந்த யாழின் இன்னிசை இந்த வலம்புரித் தீவிலே ஒலிக்கத் தொடங்குகிற புண்ணிய வேளையிலேதான், இந்தச் சித்திராங் கன் இந்தத் தீவின் அரசனாகப் பட்டம் சூடுவான். அவனைச் 'சென்று வா' என்று அனுப்புவார் மந்திரநாயகம். அவனுடைய நெற்றியிலே குங்குமத் திலகம் இட்டு, 'யாழோடு மீண்டு வா, குழந்தாய்!' என்று அவனைக் கப்ப லேற்றுவாள் அவனுடைய அன்னை. அதாவது இந்தத் தீவின் பேரரசி. இது உறுதி. இது சத்தியம்! யாழை மீட்டிக்கொண்டு வருவதோடு, வலம் புரித் தீவு இப்படி ஒரு பரிதாப நிலையை அடைந்ததற்கு உண்மையான காரணம் என்ன என்பதையும், பகுத் தறிவோடு தெரிந்து வருவேன்.''

மந்திர நாயகத்தின் வலது கையிலே தனது வலது கையை ஓங்கி யடித்து உறுதி செய்தவாறு, மறு பக்கம் திரும் பிப் பாறைகளிலே துள்ளிக் கொண்டு ஓடினான் சித்திராங்க பூபதி.

"குமாரா! எங்கே ஓடுகிறாய்?'' என்று பதறி எழுந்தார் பெரியவர்.

திரும்பியே பாராமல் பாறைகளிலே குதித்தோடிய இளவரசனின் மேனி யிலே, ஒளிக் கற்றையைச் சிதறியது சந்திரகாந்தக் கல். (தொடரும்)




நான்காம் அத்தியாயம்

அன்னையின் ஆசி

திரும்பியே பாராமல் வேகமாகச் சென்ற சித்திராங்க பூபதியைப் பின் தொடர்ந்து செல்வது, மந்திரநாயகத்துக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அத்தனை வேகத்தோடு பாறைகளையும், பள்ளங்களையும், மேடுகளையும், குழிகளையும் தாண்டித் தாண்டிக் கடலின் கரைக்கே வந்து சேர்ந்து விட்டான் சித்திராங்கன். அதன் பிறகுதான் திரும்பிப் பார்த்தான். தட்டுத் தடுமாறி வெகு தொலைவிலே பாறைகளுக்கு மத்தியில் வந்து கொண்டிருந்தார் மந்திரி.


"நீங்கள் மெதுவாக வாருங்கள், பெரியவரே! நான் முன்னால் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, ஓட்டமும் நடையுமாக நேரே அரண்மனையை நோக்கிச் சென்றான் பூபதி.



சோழ

அத்தனை வேகமாக அவன் அரண்மனையை நோக்கிச் சென்றதன் காரணம், அவனுடைய மனத்தில் அலை வீசிக் கொண்டிருந்த எண்ணக் கடல், அத்தனை ஆவேசத்தோடு கொந்தளித்துக் கொண்டிருந்ததுதான்.

சித்திராங்கன் அரச மாளிகைக்குள்ளே வந்தபோது, அவனுடைய சித்தம் ஒரு நிலையில் இல்லை. மாளிகையின் மூன்றாவது மாடிக்குச் சென்று, நிலா முற்றத்தில் இருந்த பளிங்கு மேட்டிலே உட்கார்ந்து மீண்டும் பலமாக யோசனை செய்தான். ஆகாயத்தில் மோனமாக மிதந்து கொண்டிருந்த அந்தப் பூர்ண சந்திரனைப் பார்த்துக் கொண்டே, ஏதேதோ யோசனை செய்தது அவனுடைய பகுத்தறிவு.



பேரியாழ் என்ற அபூர்வமான இசைக் கருவியைப் பற்றிச் சொன்னாரே மந்திரநாயகம், அதெல்லாம் சரிதான். ஆனால், அது மறைந்ததினால் தான் இந்த வலம்புரித் தீவு பாழடைந்து விட்டது என்று கூறினாரே? அதை எப்படி ஒப்புக் கொள்ளுவது? வெறும் மூட நம்பிக்கையாக அல்லவா இருக்கிறது, விஷயம்?

தமிழ் நாட்டு மூவேந்தர்களுடைய கலையார்வத்தினால் தான் இந்த வலம்புரித் தீவு வளர்ந்தது என்றும், அவர்களுடைய ஏகோபித்த ஆசையினால்தான் கலைஞர்கள் இங்கே குடியேறினார்கள் என்றும் சொன்னார். அதெல்லாம் சரி. ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயங்கள் தான். ஆனால் அந்தத் தமிழ் வேந்தர் மூவரும் கடந்த நூறு ஆண்டுகளாக ஏன் இந்தத் தீவின் பக்கமே தலை காட்டவில்லை?

பேரியாழ் மறைந்ததற்கும் அந்த மன்னர்கள் இங்கே வருவதை நிறுத்தியதற்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும்? இந்தத் தீவின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக இருந்த தமிழ் மன்னர்கள், இந்த நூறு ஆண்டுகளாக இந்தத் தீவையே மறந்து விடுவதற்கு என்ன காரணம் ஏற்பட்டது?

வலம்புரித் தீவின் காவல் தெய்வம் கண்ணீர் வடிக்கிறது என்று சொன்னாரே மந்திரநாயகம்! என்ன ஆச்சரியமான நிகழ்ச்சி இது! தேவதை எங்காவது கண்ணீர் வடிக்குமா? அப்படியே கண்ணீர் வடித்தாலும் அந்த அழுகைக் குரல் நம்முடைய செவியிலே கேட்குமா? என்ன விநோதமான சமாசாரம் இது!

ஆனால் அந்த நிசி நேரத்திலே தன்னுடைய செவியிலுங்கூட அந்த அழுகுரல் தெளிவாகக் கேட்டதே! அது ஒன்றும் வீண் மன மயக்கு இல்லையே! எத்தனை அருகிலே அந்தக் குகைப் பாறைக்குள்ளேயிருந்து வந்தது அந்த அழுகுரல்! நெஞ்சை எப்படி உருக்கியது அது! எவ்வளவு கூர்மையாக அதைக் கவனித்தான் அவன்! அதை எப்படி வெறும் கற்பனை என்று சொல்வது? இல்லை. அது வெறும் கற்பனையில்லை. இல்லவே இல்லை.

சித்திராங்கன் பளிங்கு மேடையிலே சாய்ந்தவாறு, சந்திரனைப் பார்த்துக் கொண்டே மீண்டும் யோசித்தான்:

வட்டப்பாறையிலே நின்ற சிலையிலிருந்து இசை எழுந்ததல்லவா? அந்தச் சிலைக் கன்னியின் கையிலே சாத்தியிருந்த வீணையிலிருந்து, ஏழு ஒலிகளும் ஏறியும் இறங்கியும் ஒலித்தனவே! இதுபோல அந்தக் குகைப் பாறைக்குள்ளும் ஏதாவது ஒலிக்கிறதோ! அந்த ஒலிதான் ஒரு பெண்ணின் அழுகுரலாகக் கேட்கிறதோ!

பூபதி தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்: என்ன விசித்திரமான நினைப்பு இது! எங்காவது கல்லில் அலைகள் தவழ்வதினால் ஏற்படுகிற ஒலி, ஒரு பெண்ணின் அழுகுரலைப் போல இருக்குமா! இராது!

ஏன் இராது? வீணையின் மந்தரத் தந்திகள் பேசும்போது மனிதக் குரல் போலவே ஒலிப்பதில்லையா? கை தேர்ந்த வைணிகன் ஒருவன், தந்தியையும் இதயத்தையும் ஒன்றாக மீட்டி, உணர்ச்சி மயமான லயத்திலே நின்று வீணையை இசைக்கும் போது, சோக மயமான குரல் போன்றே கேட்கும்! மனித சரீரம் பாடுவது போலவே இருக்குமே! கடலிலே தண்ணீர்

சிதறும்போது வீணையின் நரம்புகளைப் போல ஒலி எழும்படியாகக் கல்லிலே வீணையின் சிற்பத்தை, ஒரு அதிசயக் கலைஞன் செய்து நிறுத்த முடியும் என்ருல், அந்தக் குகைப் பாறைக் குள்ளே ஒரு பெண்ணின் சோகக் குரல் ஒலிக்கும் படியாகவும் அவனுல் ஏன் செய்ய முடியாது? நிச்சயம் முடியும்! என்ருலும் நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறது! ஆனுல் சாதாரணமாக எல்லாரும் நம்புகிற முறையிலே ஒரு காரியத்தைச் செய்கிறவனுக்கு என்ன சிறப்பு உண்டு? எளிதில் நம்ப முடியாத அற்புதங்களைச் செய்து காட்டுகிறவன் தானே அதிசயப் பிறவி! வலம்புரித் தீவின் கலைகள் எல்லாம் அப்படிப் பட்ட ஆச்சரியமான படைப்புக்கள் தானே? உண்மையில் தமிழ் மக்கள் மற்ற நாட்டு மக்களைவிட உயர்ந்த நிலையை அடைந்ததே, அவர்களுடைய அற்புதமான கலைச் சிருஷ்டிகளினுல் தானே? எளிதில் நம்ப முடியாத 'கொல்லிப் பாவை' என்ற அற்புதச் சிற்பத்தைப் பற்றிப் பழந் தமிழ்க் காவியங்கள் எல்லாம் பேசுகின்றன. வானூர்திகளையும், பாடும் சிலைகளையும், பறக்கும் பறவைச் சிலைகளையும் பற்றித் தமிழனுடைய கலைநூல்கள் பேசிப் பேசி ஆனந்தக் கூத்தாடுகின்றன. அப்படிப்பட்ட விந்தைத் தமிழரின் பரம்பரையிலே வந்த வலம்புரிக் கலைஞர்கள், இப்படிப்பட்ட ஓர் அற்புதத்தையும் ஏன் செய்திருக்கக் கூடாது?

இப்படி யெல்லாம் பல்லாயிரம் சிந்தனைகள், அந்தக் கருநீலக் கடலிலே வட்டப் பாறையில் உள்ள சிற்பங்களின் மீது தவழும் அலைகளைப்போல, சித்திராங்க பூபதியின் இதய வட்டத்திலே அலை வீசிச் சரிந்து கொண்டிருந்தன. இரவு முழுதும் அவன் உறங்கவே யில்லை.



சூரியோதயம் ஆயிற்று. வானம் பாடிகளும், திரைக் குருவிகளும் கோலாகலமாகக் கீதம் இசைத்துக் கொண்டு கடலுக்கு மேலே சிறகை அடித்தபோதுதான், பூபதி பளிங்குக் கட்டிலை விட்டு எழுந்தான். எழுந்து வெளியே தாழ்வாரத்துக்கு வந்தான். என்ன ஆச்சரியம்! அங்கிருந்த சாய்வுத் திண்டின்மீது உட்கார்ந்து கொண்டு மந்திரநாயகம், இளவரசனின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். பூபதி திகைத்துப் போய் விட்டான்.

"என்ன இது! நீங்களும் இரவு உறங்கவில்லையா? இத்தனை நேரமும் இங்கேயா உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டான் சித்திராங்கன்.

"ஆமாம். நீ மட்டும் உறங்காமல் விழித்திருக்கலாம். உன்னுடைய விழிப்புக்குக் காரணமான நான் மட்டும் உறங்கி விடவா! அதெப்படி நியாயம்?" என்று கேட்டார் மந்திரி.

"என்னுடைய விழிப்புக்குக் காரணம் நீங்கள் இல்லையே! உண்மையில் நீங்கள் சொன்ன விவரங்கள் ஒன்றையும் நான் நம்பவில்லையே!" என்ருன் சித்திராங்கன்.

"அப்படியானுல் ஏன் விழித்துக் கொண்டிருந்தாய்? சொல்!" என்ருர் பெரியவர்.

"யாழ் மறைந்ததினுல் வலம்புரித் தீவு இந்தக் கதிக்கு உள்ளாயிற்று என்று சொன்னீர்கள் அல்லவா? அது எப்படி உண்மையாக இருக்க முடியும்? அது எப்படிப் பொருத்தமான காரணமாகும்? என்று யோசித்தேன்!"

"அப்படி யென்ருல்......?"

"இந்தத் தீவின் காவல் தெய்வம் கண்ணீர் வடிக்கிறது என்று சொன்னீர்களே! அது எவ்வளவு பெரிய மூட நம்பிக்கை என்று, நானே எனக்குள் யோசித்துக் கொண்டிருந்தேன்! சிரிப்புத்தான் வந்தது!" என்ருன் சித்திராங்கன்.

"பூபதி! ஏதேதோ பேசுகிருய். இந்த வாலிபப் பேச்செல்லாம் சரி தான். ஆனுல் கடைசியாக ஒரு சபதம்

செய்து விட்டு ஓடி வந்தாயே, அது தான் என்னைக் கவலைப்படுத்துகிறது.''

இப்படிச் சொல்லும்போது மந்திர நாயகத்தின் குரல் தழதழத்தது. பூபதி அவரை நோக்கிச் சொன்னான் :

''பெரியவரே! உண்மையாகச் சொல்லுகிறேன். இந்த வலம்புரித் தீவின் தாழ்வுக்குக் காரணமாக அமைந்த நிகழ்ச்சி என்ன என்பதைக் கண்டு பிடித்தால் ஒழிய, என் மனத்தில் நிம்மதி ஏற்படப் போவதில்லை. பல்லவர்களுடைய ஆணையின் ஆதிக்கத்தினால் தமிழ் மன்னர்கள் இந்தத் தீவை மறந்தார்களா? அல்லது, இந்தத் தீவுக்கு வருகிற யாத்திரிகர்கள், ஏதாவது தவறான செய்திகளைத் தமிழ் நாட்டிலே பரப்பி விட்டார்களா? அல்லது இங்கிருந்து சென்ற மல்லிநாயகப்பாணர் ஏதாவது சூழ்ச்சிக்கு உள்ளாகி, விபரீதமான சம்பவங்கள் நடந்து விட்டனவா? அறிவுக்குப் பொருந்துகிற முறையில் இப்படி ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டுமே! அதைக் கண்டு பிடிக்க முயற்சிப்பது தான் என்னுடைய கடமை. கண்டு பிடிப்பதோடு இல்லை. அந்தக் காரணத்தின் ஆணி வேரை ஆராய்ந்து கைப்பற்றி அதைக் களைந்தெறிய வேண்டும். அதனால்தான் உங்களிடம் நான் அப்படி ஒரு சபதம் செய்தேன்! அதில் தவறு ஒன்றும் இல்லையே!'' என்றான் சித்திராங்கன்.

மந்திர நாயகம் ஒன்றுமே பதில் பேசவில்லை. கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்தவர், வெகு





நேரம் அப்படியே இருந்தார். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே சொல்லுவார் :

"தம்பி! எது ஏதானாலும் சரி. நீ மட்டும் இந்தத் தீவை விட்டுப் புறப் படுவதை அரசியார் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். உன்னுடைய தந்தை மறைந்த ஆண்டிலிருந்து, உனக்குப் பருவம் ஆகி, உன்னை மகுடம் சூட்டிப் பார்க்கும் நாள் எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டில் எப்படியும் உனக்குப் பட்டம் சூட்டி விட வேண்டும் என்று துடிதுடிக் கிறார்கள். நீயோ—"

"இல்லை! மந்திரி அவர்களே! நீங்கள் பெண் உள்ளத்தோடு பேசுகிறீர்கள். வெறும் பொம்மையாக என்னைச் சிம்மாசனத்திலே அமர்த்திப் பார்க்க விரும்புகிறீர்கள். அது தவறு. இத் தனை பெரிய கலைத் தீவில், இத்தனை பெரிய அற்புதங்களைச் சாதித்த மகான்களின் பரம்பரையிலே, நான் ஒரு கோழையாக, ஒரு மரக் கட்டை யாக, உட்கார்ந்துவிட விரும்பவில்லை. இந்தப் பூமியிலே விநோத சித்தர்க ளாக நின்ற அற்புதக் கலைஞர்களின் கனவுகள், இன்று சிதைந்து கிடக் கின்றன. அவர்களுடைய பரம் பரை, வளராமல் எங்கோ கடல் கடந்து சென்று விட்டது என் பதைக் காணுகிறேன். இந்த நிலையில், மீண்டும் இந்தத்தீவிலே அந்தப் பரம் பரைக்கு மறுமலர்ச்சி உண்டாக்கு வது, என்னுடைய கடமையாகும். யாரும் என்னைத் தடை செய்ய முடியாது—அரசியார் உள்பட!"

இப்படிச் சொல்லி விட்டுச் சித்திராங்கன் அந்த இடத்தை விட்டு நடந்தான். நேரே படிகளில் வேகமாக இறங்கி, அந்தப்புரம் சென்றான், 'அம்மா' என்று அன்போடு மகா ராணியை அழைத்தவாறு!

"குழந்தாய்! ஏன் உன் கண்ணெல் லாம் சிவந்திருக்கிறது? இரவு உறக்கம் இல்லையா?" என்று கேட்டாள் அரசி.

"இல்லை அம்மா! நான் உறங்க வில்லை!" என்றான் சித்திராங்கன்.

"ஏனப்பா, உறங்கவில்லை? உடம்பு என்ன உனக்கு?" என்று கவலை யோடு கேட்டாள் அன்னை.

"அம்மா! இத்தனை நாளும் நீங்கள் ஒரு விஷயத்தை என்னிடம் சொல்லா மல் மறைத்துத்தானே வந்திருக்கிறீர் கள்!" என்று குழந்தையைப் போலவே கேட்டான், அரசியின் குழந்தை சித்திராங்கன்.

"என்ன சொல்கிறாய் கண்மணி! உன்னிடம் எதை இரகசியமாக வைத்து விட்டேன்!" என்று மகா ராணி கேட்டாள்.

"இந்த வலம்புரித்தீவு ஒரு காலத் தில் மகோன்னதமான மாயாபுரியாக இருந்ததாமே. சென்ற நூறு ஆண்டு களாகத்தானே இந்தத் தீவு ஒளி யிழந்து கிடக்கிறதாம். இதன் கார ணத்தை நீங்கள் என்னிடம் சொல் லவே இல்லையே!" என்று கேட்டான் சித்திராங்கன்.

"மகனே! இது என்ன கேள்வி! அன்றிருந்த அரச குடும்பமும் அரச விசுவாசமுள்ள குடிமக்களும் இன்றுந் தான் இருக்கிறார்களே. யாரும் எங்கும் போய் விடவில்லையே!" என்றாள் மகாராணி.

"அவர்களைச் சொல்லவில்லை அம்மா. இங்கே நின்ற ஆயிரக்கணக்கான சிலை கள், அதிசயம் அதிசயமான சிற்பக் கனவுகள்—இவை யெல்லாம் இன்று எங்கே?" என்று கேட்டான் பூபதி. அவனுடையகுரலில்உருக்கம்இருந்தது.

"சித்திராங்கா! குடிமக்கள் இன் னும் இங்குதான் இருக்கிறார்கள். கலை மக்கள் தான் மறைந்து விட்டார்கள். எங்கிருந்தோ வந்து குடியேறியவர் கள், எங்கேயோ குடியோடிப் போய் விட்டார்கள். அவர்களுக்குப் பின் அவர்கள் ஆக்கிய சிற்பங்களையும் இந்தக் கருங்கடல் கொண்டோடிப் போய்விட்டது. இதிலென்ன ஆச்சரி யம் இருக்கிறது!"

இந்தச் சாதுரியமான பதிலைக் கேட்டு, சித்திராங்கன் ஒரு கணம் மௌனமாக இருந்தான். தன்னுடைய தாயைப்பெற்ற பாட்டன் அரசியல் சாமர்த்தியம்நிறைந்த ஒரு பெரிய அறி வாளி என்று சொல்லக் கேள்விப்பட் டிருக்கிறான். அப்படிப்பட்ட பாட்ட னின் அறிவு, தாயாரிடமும் ஒளி வீசு வது போல அவனுக்குப் பட்டது. அவன் கேட்டான் :

"அம்மா! அதெல்லாம் சரி. இந்தத் தீவிலே [illegible] என்று [illegible]

தியம் இருந்ததாமே. அது இப்பொழுது எங்கே?" என்று பூபதி கேட்டான்.

அவ்வளவுதான்! 'பேரியாழ்' என்ற வார்த்தை வந்ததும் அரசியின் கண்ணிலே இதுவரை இருந்த ஒளி மங்கிப் போய், அப்படியேகண்ணீர் துளித்தது.

"மந்திர நாயகம் வந்து உன்னிடம் ஏதாவது சொல்லி விட்டாரா? ஐயோ! அந்தக் கடற்கரையிலே இரவு நேரத்தில் அந்த இடத்துக்குப் போய் விட்டாயா? பூபதி! என்னிடம் ஒளிக்காமல் சொல்லிவிடு. இந்த வலம்புரித் தீவின் அரசியாக நின்று கேட்கிறேன். மறைக்காதே. நீ வட்டப்பாறைக்குப் போய் விட்டாயா? உண்மையைச் சொல்!"

மகா ராணியின் வார்த்தைகளில் கட்டளைக்கு மேலாகக் கலவரமும், கடுமையும், ஆற்றொணாத வேதனையும் தொனித்தன. பூபதி இதைக் கவனித்தான்.



"அம்மா! பதறாதீர்கள். நீங்கள் இந்த வலம்புரித் தீவின் அரசியாக நின்று என்னைக் கேள்வி கேட்க வேண்டும் என்பதே என் விருப்பம். சொல்கிறேன். நான் சொல்கிறபதிலையும் அரசியாகவே நின்று கேட்டுவிடுங்கள். பிள்ளைப் பாசத்தை மறந்து விடுங்கள்!" என்றான் பூபதி.

"யாரங்கே! மந்திர நாயகத்தை உடனே அழைத்து வா!" என்று உத்தரவிட்டார் வலம்புரி நாயகி.

அவ்வளவுதான். இதன் பிறகு சம்பவங்கள் மிக மிகத் துரிதமாக நடந்தன. அலைமேல் அலை வந்து சரிவது போல், ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து நடந்தன.

மந்திர நாயகம் வந்தார். அவர் பேசினார். சேனாபதி வந்தார். அவர் பேசினார். ராஜ குடும்பத்தின் குலகுரு வந்தார். அவரும் பேசினார். ஆனால் எவருடைய பேச்சும் சித்திராங்க பூபதியின் செவியில் ஏறவில்லை.

"பேரியாழோடு திரும்பி வருவேன். அதுவரை மகுடம் என் தலையில் ஏறாது! நீங்கள் சொல்கிற வார்த்தைகளும் என் செவியில் ஏறாது!" என்றான் சித்திராங்கன்.

மகாராணி ஒரு பெண்ணாக நின்று அழுதாள். ஒரு தாயாக நின்று கதறினாள். மறைந்து சென்ற அரசனின் தேவியாக நின்று இரங்கி வேண்டினாள். சித்திராங்க பூபதி சற்றும் அசையவில்லை.

"மகாராணியாக, வலம்புரித் தீவின் பேரரசியாக நின்று பேசுங்கள்! உங்கள் கடமையைச் செய்யுங்கள். இந்த நூறு ஆண்டுகளாக நடந்துவந்த பொம்மைக் கொலு இனி வேண்டாம். வலம்புரித் தீவின் வளர்ச்சிக்கு ஏதோ ஒரு சக்தி எதிராக நின்று வேலை செய்கிறது, தமிழ் நாட்டிலே! மறைந்து போன யாழோடு இந்தத் தீவின் வாழ்வும் மறைந்து நிற்கிறது. அந்த நிலையை என்னால் இனித் தாங்க முடியாது. இந்தத் தீவுக்கு வாழ்வு அளியுங்கள்!" என்றான் பூபதி.

அவனுடையபேச்சிலே உண்மை இருந்தது. அவனுடைய எண்ணத்திலே பரிசுத்தம் இருந்தது. அவனுடைய மனத்திலே உன்னதமானஇலட்சியம் சுடர் விட்டது. அதை யாராலும் மறுத்துச் சொல்ல முடியவில்லை.

ஆமாம்; சித்திராங்க பூபதி வலம்புரித் தீவை விட்டுப் புறப்படுவது என்பது உறுதியாகி விட்டது. கண்ணீர் வடித்தவர்கள் எல்லாம், அந்தக் கண்ணீரினால் பயனில்லை என்று கண்டு தெளிந்தார்கள். அந்தத் தெளிவிலே பிறந்த அறிவோடு, சித்திராங்க பூபதிக்கு விடை கொடுத்து அனுப்பச் சித்தமானார்கள்.

மந்திரநாயகத்தின் மன நிலையை இப்படி அப்படி என்று வர்ணிப்பதற்கில்லை. அந்த வட்டப் பாறைக்கு இளவரசனை அழைத்துச் சென்றவர், பேசாமல் அவனோடு திரும்பியிருக்கக் கூடாதா? எதற்காக அந்த யாழைப்

பற்றி இத்தனை விவரங்களும் சொன்னோம் என்று வருந்தினார். தம்மாலே தான் இத்தனை சம்பவங்களும் நடந்தன என்று தம்மைத் தாமே நொந்து கொண்டார். ஆனாலும் அவருடைய உள்ளம் தெய்வ நம்பிக்கையிலே உருவான உள்ளம். அந்த வலம்புரி அம்மன், முடிவில் ஏதோ ஒரு பெரிய நன்மையை உத்தேசித்துத்தான் இப்படி யெல்லாம் நடத்துகிறாள் என்று, உள்ளத்தின் அந்தரங்கத்தில் எண்ணிக் கொண்டு, ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொள்ள முயற்சித்தார்.

மகாராணியின் உள்ளமோ அந்தக் கடலைப்போல ஒரு பேரன்புக் கடல். பட்டம் சூட்டக் கனவு கண்டு கொண்டிருந்த மகன், இப்படிக் கடல் கடந்து செல்கிறானே என்று கண்ணீர் வடித்தாள். ஆனால் அதே சமயம், அந்தத் தீவின் எதிர்காலத்துக்குத் தான் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் அவசியத்தை, தன் மகன் தனக்கே எடுத்து உணர்த்தும் போது,



அதுவும் நியாயம் என்றே தோன்றிற்று. அவளுடைய இதயம் இங்கும் அங்கும் ஊஞ்சலைப்போல் ஆடியது. என்றாலும் பேரரசி என்ற கடமையினால், அன்னை என்ற பாசத்தைப் போர்த்தி மூடிவிட முயன்றாள். ஆனாலும் கரைக்குள்ளே அடங்காமல் பொங்கி வந்து சிற்பங்களை மூழ்கடித்த அந்த வலம்புரிக் கடலைப் போல, அவளுடைய பாசமும் பொங்கி எழுந்து கடமைகளை மூழ்கடிக்க முயன்றது.

"அம்மா! தயங்காதீர்கள். விடை கொடுங்கள். உங்களுடைய புதல்வனின் நெற்றியிலே திலகத்தை இடுங்கள். வெற்றியோடு சென்று வெற்றியோடு மீள்கிறேன். நான் கரை வந்து சேர்வதற்குள், நான் மீட்டுகிற யாழின் ஒலி உங்கள் செவியிலே வந்து கேட்கும்!" என்றான் சித்திராங்கன், மண்டியிட்டு வணங்கிக் கொண்டே!

"கண்ணே! வெற்றியோடு சென்று வா. உனக்கு நான் வேறு என்ன சொல்லுவேன்! வீரத் தமிழர் பரம்பரையில் உதித்தவன் நீ. விடை கேட்கிறாய். உனக்கு வீரம் ஊட்டி வழியனுப்ப வேண்டியவள் நான். சென்று வா மகனே! இதோ இந்தச் சித்திரத் தந்தப் பேழையை அன்னையின் ஆசீர்வாதமாக வாங்கிக் கொள். கடல் கடந்து தமிழ் நாட்டின் எல்லையிலே மிதிக்கும் வரையில், இதைத் திறந்து பாராதே. தமிழ் மண்ணிலே கால் வைத்த பிறகு இதைத் திறந்து பார்! உன்னுடைய யாத்திரையில் உனக்குத் துணையாக இது இருக்கட்டும். எப்பொழுதாவது ஏதாவது சிக்கலான எண்ணங்கள் உள்ளத்தில் உதிக்கும் பொழுதெல்லாம், உனக்கு வழி காட்டுவதற்கு நான் பக்கத்தில் இருக்க மாட்டேன். எனக்குப் பதில் இந்தச் சித்திர மடல் உன்னோடு இருக்கட்டும். தீவிரமான சந்தேகங்கள் உன்னைக் குழப்பும் போதும், சஞ்சலமான எண்ணங்கள் உன் மனத்தில் தோன்றும் போதும், பெரியபெரிய கேள்விகளுக்கு நீ விடை காணத் துடிக்கும் போதும், உனக்கு இது நண்பனாகவும், ஆசாரியனாகவும், தெய்வமாகவும் நின்று வழிகாட்டுமாக!! இது அன்னையின் பரிசு!"

இப்படிச் சொல்லும் போது பிள்ளைப் பாசத்தினால் விம்மிவிட்டாள் மகாராணி. அவள் தந்த அந்தத் தந்தப் பேழையை, முக்கோண வடிவத்திலே பூட்டி வைக்கப்பட்டிருந்த அந்தச் சித்திரப் பேடகத்தை, இரண்டு கைகளினாலும் வாங்கினான் பூபதி. சேடிப் பெண்கள் குரவை இட்டுத் தூபம் தாங்கி வலம் சுற்றினார்கள். மங்கல கோஷங்கள் முழங்கின. மணிகள் ஒலித்தன. சித்திராங்க பூபதி, வலம்புரித் தீவின் அரச மாளிகையிலிருந்து மகத்தான நம்பிக்கையோடும், உன்னதமான லட்சியங்களோடும் செந்தமிழ் நாட்டை நாடிப் புறப்பட்டான். தாயின் விடையோடு தாய் நாட்டுக்குப் பிரயாணமானான் அந்த வீர மகன்! (தொடரும்)

கடல் கண்ட கனவு

ஐந்தாம் அத்தியாயம்

கரைசேர்ந்த காவலன்

வலம்புரித் தீவிலிருந்து மரக்கலத்திலே புறப்பட்ட சித்திராங்கன், மாமல்லபுரம் கடற்கரையை வந்துசேர, ஓர் அமாவாசை கழிந்து அடுத்த பௌர்ணமி ஆயிற்று. இந்த முப்பது நாட்களும் வாழ்வில் இதுவரை கண்டிராத காட்சிகளையும், இதுவரைகேட்டிராத பேச்சுகளையும், கண்டுகேட்டு அநுபவப்பட்டான் சித்திராங்கன்.

அரச வாழ்க்கை என்பது, எத்தனையோ சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வாழ்க்கை முறை. இப்பொழுது அந்தச் சட்ட திட்டங்களை யெல்லாம் உதறி எறிந்து விட்டு, ஒரு சாதாரண வாலிபனைப் போல, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்ற மக்கள் தொகுதியில் தானும் ஒருவனாகப் பழக வேண்டும் அல்லவா? அரச வாழ்வின் தனிமையையும் சலுகைகளையும் மறந்து விட்டுப் பழக வேண்டும் அல்லவா? அந்த அநுபவங்கள் எல்லாம் முற்றிலும் புதுமையாக இருந்தன பூபதிக்கு.

சோமு



மந்திர நாயகமும், வலம்புரித் தீவின் அரசியல் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பு வகித்து வந்த பிரகிருதியாரும், மற்றும் அங்குள்ள பிரதானிகளும் சொன்ன யோசனையின் பேரில், சித்திராங்கன் காஞ்சிமா நகரிலே யுள்ள 'காஞ்சி கடிகை' என்ற சர்வ கலாசாலையிலே சேர்ந்து படிக்கச் செல்லும் ஒரு மாணவனாகவே தன்னைக் கூறிக் கொண்டான். இதற்கேற்பவே வலம்புரித் தீவிலிருந்து அவன் மரக்கலத்திலே புறப்பட்டபோது, எந்த விதமான வழியனுப்பு சம்பிரதாயமோ, ராஜ



மரியாதைகளோ ஏதுமின்றி ஒரு சாதாரண மனிதனாகவே புறப்பட்டான். இதெல்லாம் அவனுக்குப் புத்தம் புதிய அநுபவங்கள்.

அது இலங்கைத் தீவிலிருந்து எங்கெங்கோ சுற்றிக் கொண்டு மாமல்லபுரம் செல்கிற மரக்கலம். இலங்கைக்கு அப்பாலுள்ள தீவுகளிலிருந்தும் பலர் அதில் யாத்திரை செய்தார்கள். சிங்களம், புட்பகம், சாவகம், மங்கலம் முதலிய தொலை தூரங்களிலிருந்தும் பலர், காஞ்சிமா நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அந்த மரக்கலத்தில் வியாபாரிகள் இருந்தார்கள். அயல் நாட்டுத் தூதுவர்கள் இருந்தார்கள். உலகம்முழுதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்பட்ட யாத்திரிகர்களும் இருந்தார்கள். இத்தனை பேருடனும் சித்திராங்க பூபதி முப்பது நாட்கள் நெருங்கிப் பழக நேர்ந்தது. அந்த அநுபவத்தில் இதுவரை அவன் பெற்றிராத பல புதுமைகள் இருந்தன. காஞ்சி கடிகையிலே சென்று பயிற்சி பெறுகிறானே இல்லையோ, நிச்சயம் அந்த முப்பது நாள் கடல் யாத்திரை, அவனுக்கு முப்பது ஆண்டுப் படிப்பைவிட ஒரு பெரிய வாழ்க்கைப் பயிற்சியாக விளங்கியது.

சித்திராங்க பூபதியோடு யாத்திரை செய்த பிரயாணிகளில் இருவர் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர்கள். ஒருவர் இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம் என்ற குடியிருப்பைச் சேர்ந்தவர். கையிலே காப்பும், காதிலே பெரிய கடுக்கனும் அணிந்திருந்தார். தலையில் அரக்கு வர்ணப் பட்டுத் துணியினால் ஒரு பாகை சுற்றி யிருந்தார். அவருடைய நெற்றி அகலமாக இருந்தது. அவருடைய பேச்சு மாசுமறுவற்ற தூய தமிழாக இருந்தது. முதலில் சித்திராங்க பூபதிக்கு அந்தப் பேச்சு சற்று விநோதமாக இருந்தது. சிறிது நேரத்திற் கெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று அந்தப் பேச்சு. ஆரம்பத்தில் எழுத்தாணியினால் எழுதப்பட்ட ஓர் ஏடு தன் முன்னே நின்று பேசுவது போல இருந்த பேச்சு, காதிலே அடிக்கடி கேட்கக் கேட்க அதன் இனிமையும் பரிசுத்தமும் பூபதியைக் கவர்ந்தன. 'பேசினால் இப்படி யல்லவா பேச வேண்டும்! நம்மை யெல்லாம் போலச் சொற்களைச் சிதைப்பது எத்தனை பிசகு!' என்று மனத்தில் எண்ணிக் கொண்டான். மரக்கலத்தில் கூட இருந்தவர்கள் எல்லாரும் அவரைப் 'புலவரையா' என்று அழைத்ததைக் கேட்டு, இவனும் அவரை ஆரம்பத்தில் அப்படியே அழைத்தான். பிறகு கொஞ்சம் பழகியதும் அவருடைய தூய குணமும், சைவ ஆசாரமும், அவருடைய பேச்சிலே இருந்த பளிங்குத் தன்மையும் அவனை அவரிடம் நெருங்கி உறவாடச் செய்தன. அதன் பின்னர் அவன் அவரைப்

‘புலவரையா’ என்று கூப்பிடுவதற்குப் பதில், ‘ஐயா’ என்று மிக்க மரியாதையோடு அழைக்க ஆரம்பித்தான். அவர் அவனுக்குத் திருமுருகாற்றுப் படையிலிருந்து அடிக்கடி பல பாடல்கள் எடுத்துச் சொல்லுவார். திருமூலருடைய திருமந்திரத்திலிருந்து பல பாடல்கள் கூறுவார். இவற்றையெல்லாம் விட அடிக்கடி அவர் ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பதிகங்களை இனிமையான பண்களிலே பக்தியோடு பாடுவார்.

“தம்பீ! சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டு மண்ணிலே நடமாடிய ஒரு தெய்வக் கவிஞன் ஞானசம்பந்தப் பெருமான். ‘பாலறா வாயன்’ என்று பாராட்டப்படும் அந்தப் பெம்மானுடைய பதிகங்கள், தமிழ் நாட்டில் தமிழர்களுடைய பூர்வமான சமயமும், நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் மீண்டும் நிலைபெறுவதற்குக் காரணமாக அமைந்தன. சொல்லுக்குச் சொல் பால் ஊறும் பாடல்கள் இவை!” என்று ஒரே பேரானந்தத்தோடு சொல்லுவார். பதிகங்களைப் பாடிக் கொண்டே தாளம் தட்டிக் கூத்தாட ஆரம்பித்துவிடுவார் புலவர். அப்பொழுதெல்லாம் சித்திராங்கன் ஒரே பணிவோடும் அன்போடும் அவரையே பார்த்துக் கொண்டிருப்பான்.



“தம்பீ! நீ சிறு பிள்ளை. ஏதோ காஞ்சிமா நகரத்திலே போய்ப் படிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாய். நல்லதுதான். ஆனாலும் இன்று தமிழ்நாடு பல குழப்பங்களுக்கு மத்தியிலே சுழன்று கொண்டிருக்கிறது. அப்பரும் ஞானசம்பந்தப் பெருமானும் சென்ற நூற்றாண்டிலே தோன்றியபின், ஒருவகையாகச்சமயச் சண்டைகள் அமைதி பெற்றன. ஆனால் இப்பொழுது மொழி சம்பந்தமான கிளர்ச்சி வலுத்துக் கொண்டிருக்கிறது. வடமொழியும் தென்மொழியும் ஒரு நூதனமான முறையிலே தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றன. அரசியல் மாறுபாட்டுக்காகத் தமிழ் மன்னர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அந்தக் கிளர்ச்சியோடு மொழிக் கிளர்ச்சியும் ஒரு பக்கம் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் அரச அழைப்பு வந்து நான் காஞ்சி மாநகரம் செல்கிறேன். புதிதாகப் பட்டம் சூடியிருக்கும் நந்திவர்ம பல்லவன் சிறுவனும். அவனோடு அவனுடைய தந்தை இரணியவர்மரும்; படைத் தலைவர் உதய சந்திரரும் துணையாக இருந்து, அரச காரியங்களை நிர்வகித்து வருகிறார்களாம். தரணி கொண்ட போசர் என்ற ஒரு பெரியார், காஞ்சிக் கடிகையிலேயே கற்றுத் தேர்ந்த ஒரு வைஷ்ணவ பண்டிதர், அரசனுக்குப் பக்கபலமாக நிற்கிறார். அவருடைய அழைப்புக்கு இணங்கித்தான் நான் காஞ்சி நகரம் செல்கிறேன். வைணவப் பெரியார்கள் இந்த நூற்றாண்டில் தமிழுக்குச் செய்திருக்கிற, செய்து வருகிற, செய்யப் போகிற தொண்டு, தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பது உறுதி. இதெல்லாம் உனக்கு எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீ தமிழ் நாட்டுக்குப் புதியவன். காஞ்சிக்கடிகையிலே கற்கப் போகிற உனக்கு இன்றைய அரசியல் நிலையும், மொழி நிலையும், பண்பாட்டுச் சூழ்நிலையும் முன்னதாகவே தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். எந்தச் சண்டையிலும் சேராமல், நீ நன்றாகப் படித்துப் பெரும் புலவனாக விளங்க வேண்டும் என்பதே என்னுடைய வாழ்த்து. எப்பொழுதாவது நீ இடையூறு ஒன்றில் சிக்கிக் கொண்டால், ஞானசம்பந்தப் பெருமானுடைய இந்தப் பதிகத்தைச் சொல்லு. இடையூறுகள் எல்லாம் நீங்கும்” என்று சொல்லி அந்தப் புலவர், திருஞான சம்பந்தரின் ‘வேயுறு தோளி பங்கன்’ என்ற பதிகத்தைப் பாடினார். அதை மனனம்

செய்து கொள்ளும்படி பூபதிக்கு ஒரு சுவடியிலே எழுதிக் கொடுத்தார்.

வலம்புரித்துறையைவிட்டுப் புறப்பட்ட பிறகு அந்தப் பிரயாணத்தில், சித்திராங்க பூபதி ஏட்டுக் கல்வி என்று முதன் முதலாகப் படித்தது அந்தப் பதிகந்தான். ஒரு பூர்வமான இனிய பண்ணிலே அந்தப் பதிகத்தைப் புலவர் பாடினர். பூபதியும் அவரைப் போலவே அந்தப் பாடல்களைப் பாடக் கற்றுக் கொண்டான். கடலில் எப்பொழுதாவது அலைகள் அதிகமாகிப் புயல் வீசத் தொடங்கிவிட்டால், புலவர் கீழ்க்கண்ட பாடலை இசையோடு பாடுவார். பூபதியும் சேர்ந்து பாடுவான்.





“பல பல வேடமாகும் பரன், நாரி பாகன்,
பசு ஏறும் எங்கள் பரமன்,
சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்து,என்
உளமே புகுந்த அதனால்,
மலர்மிசை யோனும், மாலும், மறையோடு தேவர்,
வருகால மான பலவும்,
அலைகடல், மேரு, நல்ல; அவை நல்ல நல்ல,
அடியா ரவர்க்கு மிகவே!”

புலவரையாவைத் தவிர, மரக்கலத்தில் பூபதியின் அன்பைக் கவர்ந்த மற்றொரு பிரயாணி, கொடும்பை என்றும் கொடும்பாளூர் என்றும் அழைக்கப்பட்ட வேளிர் நாட்டைச் சேர்ந்தவன். தமிழ் நாட்டில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கும், பாண்டியர் மண்டலத்துக்கும் நடுவே யிருந்த குறுநிலம் கோனாடு. அதன் தலைநகரம்



கொடும்பாளூர். அங்கே அரசாண்டு கொண்டிருந்த வேளிர் என்ற குறுநில மன்னர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன் அவன். அவனும் பூபதியைப்போல ஒரு வாலிபன்தான். கடல் கடந்து சென்று, பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரயாணி அவன். அவனுடைய பேச்சும் பூபதிக்குப் பிடித்திருந்தது. அயல்நாடுகளில் தான் கண்ட காட்சிகள், அங்கேயுள்ள மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்களுடைய அரசியல் முறை, அவர்களின் ஆசாரம், முதலிய பல விஷயங்களைப் பற்றியும், சுவையோடு பேசினான் அந்த வேளிர் வாலிபன். அவனுடைய பெயர் ஆதிரையன்! பூபதியைத் தன்னுடைய ஊருக்கு நிச்சயம் வரவேண்டும் என்றும், தன்னோடு விடுமுறை நாட்களிலெல்லாம் தன் ஊரை வந்து பார்ப்பதோடு, தன்னுடைய முன்னோர்கள் செய்துள்ள பல கலை விந்தைகளையும் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும், கேட்டுக் கொண்டான் அவன். அவனிடத்திலும் கூடச் சித்திராங்கன் தன்னைப் பற்றிய உண்மையான விவரங்களை முழுதும் வெளியிடவில்லை!

சித்திராங்க பூபதி தான் யார் என்பதைக் கடைசி வரை இரகசியமாகவே வைத்துக் கொண்டான். மந்திரநாயகமும், அவருடைய யோசனையின் பேரில் மகாராணியும், கண்டிப்பாகச் சொல்லியிருந்த விஷயம் இது. எனவே அந்த இரகசியத்தைக் கடமையுணர்ச்சியோடு காப்பாற்றினான் பூபதி. ஆனாலும் 'ஐயா' விடமும், ஆதிரையனிடமும் அந்த இரகசியத்தை ஒளிவு மறைவாக வைத்திருப்பதில், அவன் மனசாட்சி மிகவும் கஷ்டப்பட்டது. என்றாலும் மகாராணியின் கட்டளையை அவன் மீறவில்லை!

கட்டளையை மீறாத முறையிலேயே பூபதி மாமல்லபுரம் கடற்கரைக்கு வந்து சேர்ந்தான். மரக்கலம் கரையை அடைந்த போது மாலை நேரம். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்பாகவே சந்திரன் உதித்து ஒளியோடு ஆயத்தமாகி நின்றான். அன்று பௌர்ணமி!

சித்திராங்க பூபதி தன்னுடைய சகயாத்திரிகர்களான பெரியவரிடமும் ஆதிரையினிடமும் சொல்லிக்கொண்டு, கடல்கரையைத் தாண்டிப் பட்டினத்துக்குள்ளே அடியெடுத்து வைத்த போது, சந்திரன் பூரணமாக வானத்திலே எழுந்து, செங்கோல் நடத்திக் கொண்டு நின்றான். அந்தப் பரிபூரண நிலவில் பட்டினத்தின் வாசலிலே நின்று பார்த்தால், மாமல்லபுரம் கடற்கரை ஒரு மாய புரியாகக் காட்சி தந்தது. மகேந்திர வர்மனும், நரசிம்ம பல்லவனும், அவர்களுக்குப் பின் தோன்றிய மற்ற அரசர்களும், ராஜசிம்மனும், அளவற்ற பக்தியோடும், கலைக் காதலோடும் நிர்மாணித்திருந்த மாமல்லச் சிற்பங்கள், நிலவிலே

மன்மதக் காட்சியாகவே உள்ளத்தை மயக்கிக் கொண்டு நின்றன.

'நாளைக் காலையில் இங்கே வந்து சூரிய வெளிச்சத்தில் இவற்றையெல்லாம் நன்றாகப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னால், முதலாவது காரியமாக, இப்பொழுதே அன்னையின் மற்றொரு கட்டளையை நிறைவேற்றி விடவேண்டும்' என்று தீர்மானித்தான் சித்திராங்கன்.

ஆமாம். தமிழ்நாட்டு மண்ணிலே அடியெடுத்து வைத்து விட்டான் அல்லவா? இனி அன்னை கொடுத்தனுப்பிய முக்கோணப் பேடகத்தைத் திறந்து பார்க்க வேண்டியது தானே. ஆனால் இரவு நேரம் ஆயிற்றே. எங்கே போய் உட்கார்ந்து இந்தக் காரியத்தைச் செய்வது? அதைப் பற்றி இன்னும் யோசிக்க வில்லையே!

இவ்வாறு நினைத்தவனாகப் பட்டினத்தின் முகப்பிலே நுழைந்து, வலது பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். பெரிய அரச மாளிகையைப் போலக் காட்சி தந்த யாத்திரிகர் விடுதி ஒன்று, கம்பீரமாக அவன் முன்னே நின்றது.

தன்னுடைய ராஜ்யமான வலம்புரித்தீவிலும், சென்ற நூற்றாண்டிலே மக்கள் ஏராளமாக வந்து தங்குவதற்கு என்று அமைக்கப்பட்டிருந்த இதுபோன்ற விடுதி ஒன்று உண்டு. அது இன்று பாழடைந்து கிடக்கிறது. என்றாலும், இந்த மாமல்லபுரத்து விடுதியின் கட்டட அமைப்பைப் பார்த்தால், அந்த வலம்புரி விடுதியைப் போலவே இருந்தது. ஆனால் அதைவிடப் பல மடங்கு விசாலமும் உயரமும் கொண்டு பெரும்பேர் விடுதியாக விளங்கியது இது!

சித்திராங்க பூபதி விடுதியைநோக்கி முன் நடந்தான். பின்னால் ஒரு சிறு பார வண்டியிலே அவனுடைய உடைமைப் பொருள்கள் வந்தன. வண்டி சிறு வண்டிதான். தள்ளு வண்டிதான். ஆனாலும் அதைச் செய்த மரத் தச்சன் அந்த வண்டியின் அமைப்பிலே தனது கை வலிமையோடு, தனது கைத்திறத்தையும் சேர்த்திருந்தான். தனது கையாற்றலோடு தனது இதயத்தையும் கொண்டு அதிலே பதித்திருந்தான் அந்தக் கலைஞன்.

சித்திராங்கன் அந்த வண்டியில் தோன்றிய கை வண்ணத்தை வியந்தவாறு நடந்தான். ஒரு சிறு தள்ளு வண்டியிலேகூடக் கலைமணம் கமழ்கிற நாடாக அல்லவா இருக்கிறது இது! இந்தத் தமிழ் நாட்டில் யாத்திரிகர்களுடைய வசதிகளைத் தான் எத்தனை அன்போடு கவனிக்கிறார்கள். மூடி விழிக்கும் நேரத்தில் என்னுடைய உடைமைப் பொருள்களை இந்த வண்டியிலே ஏற்றி என்னோடு அனுப்பி விட்டார்களே. நம்முடைய வலம்புரித்தீவிலும் ஒரு காலத்தில் இத்தனை நேர்த்தியாக நிர்வாகம் நடந்திருக்குமல்லவா! ஏதோ தமிழ் நாட்டு வானத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கிற காலம் இது என்று சொன்னார்களே! இப்படிப்பட்ட காலத்திலுங் கூட, அயல் நாட்டு யாத்திரிகர்களின் சௌகரியத்தை இத்தனை தூரம் பாராட்டுகிறார்களா, இந்த நாட்டில்! நமது தீவிலும் நிச்சயம் இப்படித்



தான் இருந்திருப்பார்கள், சென்ற நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை! இப்பொழுது அதெல்லாம் எங்கே போயிற்று? பேரியாழோடு மறைந்து போய் விட்டதா! நம்பவே முடியவில்லையே!"

இப்படியெல்லாம் சிந்தனை செய்து கொண்டே, சித்திராங்க பூபதி அந்த யாத்திரிகர் விடுதிக்குள்ளே நுழைந்தான்.

பூபதிக்கு அதிகமான தொல்லைகளே இல்லை. கடல் கடந்த தீவிலிருந்து வரும் ஒரு யாத்திரிகன் என்பதற்குச் சான்றாக, மரக்கலத்திலேயே ஒரு அடையாளச் சுருள் கொடுத்திருந்தார்கள். விடுதியிலே அவனுக்கு ஒரு

'தங்கும் இடம்' கிடைப்பதற்கு. அந்த அடையாளச் சுருளே போதுமானதாக இருந்தது. என்றாலும் மந்திர நாயகம் அவனிடம் சொல்லியனுப்பி யிருந்த முன் எச்சரிக்கையையும், கண்டிப்பையும் அவன் மறந்து விடவில்லை. 'ஒற்றன் என்று சந்தேகப்படுகிற ஒரு மனிதனையும் கூட, வெளிப்படையாக ஆசாரக் குறைவாக நடத்த மாட்டார்கள். ஆகையினால் உன்னை அன்போடு உபசரிக்கிறவர்களைப் பற்றியுமே நீ விழிப்பாகத்தான் இருக்க வேண்டும். கவனத்தோடுதான் நடந்து கொள்ள வேண்டும்' என்று மந்திர நாயகம் சொல்லியிருந்த வாசகம், பூபதிக்கு நன்றாக நினைவு இருந்தது.

மாமல்லபுரத்திலே நின்ற யாத்திரையாளர்களின் விடுதி மிகப் பெரிய விடுதி. மூன்றடுக்கு மேடையோடு கூடிய விடுதி. அதில் சித்திராங்கனுக்குக் கொடுக்கப் பட்டிருந்த இடம் மேடையில் இல்லை. கீழேயே இருந்தது.

விடுதிதான். போவோர் வருவோர் ஏதோ சில நாட்கள் அல்லது சில நாழிகைகள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட இடந்தான். ஆனாலும் தங்குபவர்களுக்காக எத்தனை வசதிகளைச் செய்திருந்தார்கள்! அவற்றை யெல்லாம் சுற்றிப் பார்த்து அநுபவிக்கவே ஒருநாள் முழுதும் வேண்டும்போலும்!

சித்திராங்கன் தன்னுடைய அறையில்—அறையா அது, ஒரு பெரிய மாளிகையின் விசாலமான சூழல் அது. அந்தச் சூழலிலே—சென்று அமர்வதற்குள், பொங்கு புனலிலே நீராடுவதற்காக அவனை அழைத்துப் போக ஒரு பணியாளன் வந்தான்.

முப்பது நாள் பிரயாணத்தின் களைப்பு எப்படி யிருக்கும்! எத்தனை மன நிம்மதியான பிரயாணம் என்றாலும், உடலின் களைப்பை நீராடிக் கழுவிவிட வேண்டியதுதானே. சித்திராங்கன் எழுந்தான். உடனே திடீரென்று அவனுக்கு அன்னையின் கட்டளை நினைவு வந்தது. 'இந்த மண்ணிலே இப்பொழுதுதான் அடியெடுத்து வைத்திருக்கிறோம். அதற்குள் கட்டளையை மறந்து விட்டோமே' என்று மனத்துக்குள் எண்ணினவனாகப் பணியாளனிடம் 'இதோ வருகிறேன்' என்று சொல்லியனுப்பி விட்டு, அந்த விசாலமான பெரிய அறையின் கதவுகளை மூடினான் சித்திராங்கன். மூடி விட்டுச் சாளரத்தின் கதவுகளைத் திறந்தான். கண்ணுக்கு எட்டிய தொலை மட்டும் கடல், நீலக்கடல், அலைவீசிப் பொங்குகிற அழகான கருநீலக் கடல், காட்சி தந்தது. அதை அணைத்துக் கொண்டு நீலவானம் நின்றது. அந்த நீலவானத்தினுடைய ஒளி பொருந்திய முகத்தைப் போல, கடல் அலைகளையே பார்த்துப் பார்த்துக் கொஞ்சிக் கொண்டிருந்தது பூரண சந்திரன்.

'விடுதியின் கீழ் தளத்தில்தான் இருக்கிறோம். ஆனாலும் கடல் மட்டத்திலிருந்து இதை இத்தனை உயரத்தில் கட்டி யிருக்கிறார்களே!' என்று அதிசயித்தவனாகச் சித்திராங்க பூபதி தன்னுடைய உடைமைப் பொருள்களை வைத்திருந்த இடத்துக்கு வந்து, அவற்றிலே யிருந்த முக்கோணப் பேடகத்தைக் கையிலே எடுத்தான். அறையினுள் சாளரத்திலிருந்து சற்றுத் தள்ளி, பால் நிலவுபோல எரிந்து கொண்டிருந்தது பெரிய விளக்கு. அந்த விளக்கின் அருகிலே வந்து நின்றான். ஆவலோடு அந்தப் பெட்டியைத் திறந்தான் பூபதி.

அந்தச் சமயத்தில் அறைக்கு வெளியே ஏதோ ஓசை கேட்டது. 'டக் டக்' என்று தரையிலே கம்பைத் தட்டுவது போன்று வந்தது அந்த ஓசை. அதைத் தொடர்ந்து மரக் கட்டைகளின் 'கட் கட்' என்ற ஓசை. அதைத் தொடர்ந்து பல மனிதர்கள் ஏக காலத்தில் பரபரப்பாக நடக்கும் காலடி கேட்டது. விடுதியினுள்ளே யாரோ எதிர்பாராத விதமாகப் பிரவேசித்திருக்க வேண்டும். பிரவேசித்தவர் மிக மிக முக்கியமான மனிதராக இருக்க வேண்டும். சந்தேகமில்லை. ஒருவேளை யாராவது ஒற்றர்களின் தலைவனாக இருக்குமோ! இராது. அப்படியானால்? வேறு யார் முன்னறிவிப்பு இல்லாமல் இப்படி இங்கே திடீரென்று வருவார்கள்? அந்த மனிதருடைய வரவினால் ஏன் இத்தனை பரபரப்பு உண்டாக வேண்டும்? தான் நின்ற இடத்தில் நின்றுகொண்டே, கையில் முக்கோணப் பெட்டியோடே, அங்கிங்கு நகராமல் சாளரத்தின் திறப்பு வழியாக எம்பிக் கொண்டு பார்த்தான் சித்திராங்கன். நாலைந்து பணியாளர்கள் கையும் காலும் பதறியவர்களாய் ஒரே பரபரப்போடு அறைக்கு வெளியே இருந்த தாழ்வாரத்தில் ஓடிக் கொண்டிருந்தார்கள். (தொடரும்)

கடல் கண்ட கனவு

ஆறாம் அத்தியாயம்

சித்தர் வருகிறார்!

குமிழ்க் கட்டை என்று சொல்லப் படும் அந்த விசித்திரமான பாத ரட்சையின் ஒலிக்கு அத்தனை சக்தி யிருந்ததா என்ன! அந்த ஓசை கேட்டதோ இல்லையோ, விடுதி யின் நிர்வாக அறையிலே அமர்ந்து பேரேடுகளைப் பார்த்துக் கொண் டிருந்த விடுதித் தலைவன், அப்படியே அந்த ஏடுகளைச் சாய்வுப் பலகையில் போட்டு விட்டுப் பதறிக் கொண்டு எழுந்தான். கைப் பிரம்பு தரையிலே இரண்டு தட்டுத் தட்டி நிற்பதற்குள் அறைக்கு வெளியே கையும் காலும் நடுங்கியவண்ணம் ஓடி வந்தான்.

"என்ன பரம்பொருளே! இன் றிரவு குமிழ்க் கட்டைக்கு இந்த விடுதியிலே தாமசம்! அநுமதி உண்டா? இந்த ராஜ்யத்தில் யுத்தம் வரப் போகிறதாமே! இந்தப் பித் தனையும் ஒருவேளை ஒற்றன் என்று நினைத்து அறை கிடையாது, அறை தான் உண்டு என்று சொல்லி விடுமோ பரம்பொருள்!" என்று சொல்லியவண்ணம் தரையிலே மறு படியும் அந்தப் பிரம்பினால் ஒரு அறை அறைந்தார் சித்தர்.

விடுதித் தலைவன் முகத்தில் சிரிப்பை வரவழைக்க முயன்றான். ஆனால் அச் சந்தான் அவனுடைய முகம் முழுதும் விரிந்து பரந்தது. அந்த அச்சத்துக்கு மேலே சிரிப்பு என்ற முயற்சி பரி தாபமாக விரிந்து மங்கி மறைந்தது.

"என்ன பரம்பொருளே! சிரிக்க முயற்சிக்கிறது போலத் தோன்று கிறதே! அப்படித்தானா!" என்று சொல்லிக் கொண்டே குமிழ்க்



கட்டையின் 'டக்' 'டக்' என்ற ஓசையுடன் விடுதிக்குள் நடந்தார் சித்தர்.

அந்தக் குமிழ்க் கட்டையின் சக்தி அதற்குள் விடுதி முழுவதையும் ஒரு உலுப்பு உலுப்பி விட்டது. பணியாட்கள் அங்குமிங்கும் பதறி ஓடியதைப் பார்த்தால் ஏதோ சிங்கம், புலி அந்த விடுதிக்குள்ளே நுழைந்து விட்டதைப் போல இருந்தது. அயர்ந்து மறந்து யாராவது வானத்தைப் பார்த்துக் கொண்டே தாழ்வாரத்திலே நின்று கொண்டிருந்தால், அவருக்கு அருகிலே வந்து ஒரு பணியாள் 'சித்தர் வருகிறார்' என்று எச்சரிக்கை செய்து விட்டுப் போனான்.

'பளார் பளார்' என்று பிரம்பு தரையிலே ஓசை செய்தது. விஷயம் புரியாத இரண்டொரு தொலைதேசப் பிரயாணிகள் தங்கள் அறைக் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்தார்கள்.

"என்ன பரம்பொருளே! இந்தப் பித்தனைப் பார்க்க வருகிறீர்களா? வாருங்கள். நன்றாகப் பாருங்கள். இந்தப் பிரம்பினுடைய ஓசையைக் கேட்டுப் பயப்படாதீர்கள். இது பகல் வேஷக்காரர்களைக் கொஞ்சம் பயம் காட்டுவதற்காகச் செய்கிற ஓசை! அவ்வளவுதான்! விடுதியல்லவா! எத்தனையோ நோக்கங்களோடு இங்கே ஆடவரும் பெண்டிரும் வந்து தங்குகிறார்கள்! அவர்களுக்கு ஒரு கண்துடைப்பு இந்த ஓசை!"

இப்படிச் சொல்லிக் கொண்டே அந்தச் சித்தர் தாழ்வாரத்திலே நடந்து சென்றார்.

சாளரத்தோடு எம்பிப் பார்த்துக் கொண்டிருந்த சித்திராங்கன் சித்தருடைய கண்ணிலே பட்டு விட்டான்.

"என்னப்பா ராஜகுமாரா! என்ன பார்க்கிறாய்?" என்றார் சித்தர். 'ராஜகுமாரா' என்ற வார்த்தையைக் கேட்டதும் சித்தரோடு நடந்து சென்று கொண்டிருந்த பணியாளர்கள் 'கொல்' என்று சிரித்தார்கள். ஆனால் சித்திராங்கனுக்கு ஒரு கணம் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது!

"உன்னை ராஜகுமாரன் என்றால் இந்தப் பைத்தியங்கள் சிரிக்கின்றன! இதுதான் உலகம்! கவலைப் படாதே! அவர்கள் சிரிக்கட்டும். நீ அறைக்குள்ளே போ! உன்னுடைய காரியத்தை நீ கவனி தம்பீ! இந்தப் பைத்தியம் ஏதாவது இப்படி உளறும். காதிலே போட்டுக் கொள்ளாதே!"

இப்படிச் சொல்லி விட்டு விறுவிறு என்று நடந்தார் சித்தர். அவருக்கு என்று சித்தம் செய்யப்பட்ட ஓர் அறையை நோக்கிப் பணியாளர்கள் சித்தரை அழைத்துச் சென்றார்கள்.

மின்னல் மின்னி மறைகிற நேரத்திலே நடந்த விஷயம் இது! அந்த மின்னல் சித்திராங்க பூபதியினுடைய உள்ளத்தில் துவண்டு, அந்த மின்னலின் சக்தி உடம்பெல்லாம் பரவிச் சென்று அடங்கி அமர்வதற்கு வெகு நேரம் ஆயிற்று. அதற்குள் பணியாளன் மீண்டும் வந்து பொங்கு புனலிலே நீராடுவதற்கு அழைத்தான் பூபதியை!

"இதோ வந்துவிட்டேன்!" என்று இரண்டாவது முறையாக அந்தப் பணியாளனை அனுப்பி விட்டுச் சித்திராங்க பூபதி, அன்னை தந்தனுப்பிய தந்தப் பேடகத்தைக் கையிலே எடுத்தான். கை பதறியது. எல்லாம் சற்று நேரத்துக்கு முன்பு துவண்ட மின்னலின் அதிர்ச்சி வேகம் செய்கிற வேலை!

அறையின் மாபெரும் விளக்கு பூரண ஜோதியோடு எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் பேடகத்தைத் திறந்தான் பூபதி. விளக்கின் ஒளியில் நன்றாகப் பார்த்தான்.

தந்தப் பெட்டியின் மூடியிலே வர்ணத்தினால் கீழ்க்கண்ட வாசகம் எழுதியிருந்தது:—

இந்த மூன்றையும்
என்றும் மறந்திடு மகனே!

மேற்கண்ட வாசகத்துக்குக் கீழ் மூன்று சித்திரங்கள் மூன்று கோணங்களில் வரையப்பட்டிருந்தன.

சித்திராங்கன் அந்தச் சித்திரமடலை அகன்ற விழிகளினால் கூர்ந்து பார்த்தான். தன்னுடைய அன்னை அருமை மகனுக்குச் செய்யும் உபதேசம் அல்லவா அது! எந்த மூன்றையும் தன் ஆசை மகன் மறந்துவிட வேண்டும் என்று சொல்கிறாள்?

ஒரு சித்திரத்தில் இளம் பெண் ஒருத்தி வாலிபன் ஒருவனுடைய கையைத் தனது வளைக் கரத்தால் பற்றிய வண்ணம், மற்றொரு கரத்தை ஆகாயத்தை நோக்கி நீட்டுகிறாள். அவள் சுட்டிக் காட்டிய மேக வெளி

யில் பூரண சந்திரன் பவனி வந்து கொண்டிருக்கிறான்.

அடுத்த சித்திரத்தில் அழகான திராட்சைக் கொடி தெரிகிறது. புதருக்கு நடுவே ஒரு வளைக் கரம் நீண்டு வருகிறது. அதன் உள்ளங்கைப் பிடியிலே தாமரையின் வடிவத்தில் ஒரு மதுக் கிண்ணம்.

சித்திராங்க பூபதி மூன்றாவது சித்திரத்தைப் பார்த்தான். எல்லையற்ற ஆகாயத்துக்குக் கீழே எல்லையற்ற பாலைவனத்தின் மணல் பரப்பு. அதன் மேல் அணிவகுத்து நிற்கும் இரண்டு சேனை வியூகங்கள்—ஒன்றையொன்று எதிர்த்து நிற்கின்றன. கைதேர்ந்த ஒவியன் ஒருவன், ரதங்களையும் யானைகளையும் குதிரைகளையும் அந்த ஒவியத்தில் அணி அணியாகக்காட்டி, வாளேந்திய வீரர்கள் கோபாவேசத்தோடு போர் செய்வதைத் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறான்.

இந்தமூன்று ஒவியங்களுக்கும் கீழே வண்ண வரி வடிவத்தில் காமம், மயக்



கம், வெகுளி என்று எழுதப் பட்டிருந்தது!

சித்திராங்க பூபதிக்கு இப்பொழுது புரிந்தது. தன்னுடைய அன்னை தனக்கு நண்பனாகவும், ஆசாரியனாக வும், தெய்வமாகவும் நின்று வழி காட்ட வேண்டும் என்று தந்த அந்தப் பேடகத்துக்குள்ளே, மூன்று உபதே சங்களைப் பொதிந்து கொடுத்திருக் கிறாள். கடல் கடந்த இந்தப் பெரிய நாட்டிலே தனது இலட்சியத்தை நாடிச் செல்லும் போது காமம், மயக் கம், வெகுளி மூன்றுக்கும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பது அன்னையின் கட்டளை. ஆனாலும் யுத் தத்திலே சேரக் கூடாது என்று எந்த வீரத் தமிழன்னையாவது தன் மகனுக் குச் சொல்லுவாளா? அப்படியானால் ஏன் இப்பொழுது தன் அன்னை தனக்கு அப்படி ஒரு எச்சரிக்கை செய்கிறாள்? இலட்சியத்தைக் கைவிட்டு விட்டு, வீண் சண்டைகளிலே ஈடுபடக் கூடாது என்கிறாள் போலும்!

பூபதி நினைத்தான்: 'உண்மை. இந்த மூன்று பகைவர்களும் என்னை வந்து நாசம் செய்து விடாதபடி காப்பாற் றிக் கொள்ளுவேன்! நிச்சயம்!'

இவ்வாறு மனத்திற்குள் தீர்மானம் செய்து கொண்டே, பேடகத்தைப் பூட்டி வைத்து விட்டு, அறையின் கதவுகளையும் தாளிட்டு விட்டுக் குளிப் பதற்காகப் பொங்குபுனலை நோக்கித் தாழ்வாரத்தோடு நடந்தான் சித்திராங்கன்!

"தம்பி!" என்று குரல் கேட்டது! அப்படியே பதறி விட்டான் சித்தி ராங்கன். அது அந்தக் குரல்!

"தம்பீ! மெதுவாக நட. காலை உறுதியாக ஊன்றிக் கொண்டு நட! இடறி விழுந்து விடாதே!" என்றார் சித்தர், மாயப் புன்னகையோடு!

வியப்பிலிருந்து மீள்வதற்குள் அவர் எதிரே வந்து கொண்டிருந்தார்! அவரும் பொங்கு புனலிலே குளித்து விட்டு இவனுக்கு எதிரே நடந்தார்! காலில் இப்பொழுது குமிழ்க் கட்டை இல்லாததால் ஓசைப் படாமல் வந்து கொண்டிருந்தார்! சித்திராங்கன் தானாக நின்று விட்டான்.

"என்ன நின்று விட்டாய், மாண வனே! மேலே நட! இந்தப் பூமி கொஞ்சம் வழுக்காக இருக்கும்! கால் வழுக்கிவிடக் கூடாதே, வாலிபப் பிள்ளை ஆயிற்றே, என்று எச்சரிக்கை செய்தேன். நீயானால் மேலே நடக் காமல் நின்றுவிட்டாயே! போய்க் குளி, தம்பி! தலையை நன்றாகப் புனலிலே கொடு!"

இப்படிச் சொல்லிவிட்டு மேலே நடந்தார் சித்தர். சித்திராங்கனும் அங்கே நிற்க முடியாமல் மேலே நடந்தான்.

பொங்கு புனலில் குளிக்கும் போதே யோசனை பலமாக இருந்தது பூபதிக்கு! முதலில் "ராஜகுமாரா!" என்றார்! இப்பொழுதோ "மாணவனே!" என் கிறார்! பார்த்தால் விநோதமான தாடியும் சடையுமாக இருக்கிறார். காஷாயம் இல்லை யென்றாலும் இவர் ஒரு சாமியார்தான். ஆனால் சாமியார் வேஷத்தில் வளைய வருகிற ஒரு ஒற்ற ராக இருக்குமோ? தன்னைப் பற்றிச் சகலமும் தெரிந்தவர் போல் மத்தி யிலே வார்த்தைகளைச் செருகு கிறாரே? வழுக்கி விழுந்து விடாதே என்கிறாரே! காமம், மயக்கம், வெகுளி இந்த மூன்றிலும் வழுக்கிவிடக் கூடாது என்று சொல்கிறாரா?

இந்த விடுதியில் உள்ளவர்கள் எல் லாரும் இவரைக் கண்டு ஏன் இத்தனை தூரம் பயப்படுகிறார்கள்? இந்தப் பயத்திலும் ஒரு விசித்திரம் அல்லவா இருக்கிறது! வெறும் அதிகாரத்துக்குப் பயப்படுகிற பயம் வேறு விதமாக இருக்குமே! அதில் அந்தரங்க சுத்தி யிராது! அந்தப் பயத்தில் அன்பு இராது! ஆனால் இந்தச் சித்தரிடம் இவர்கள் எல்லா ரும் பயப்படுகிற முறை முற்றி லும் புதிதாக இருக்கிறது. ஆணை யினால் ஏற்படுகிற பயமில்லை இது. அன்பினால் ஏற்படுகிற பயம். அதி காரத்தைக் கண்டு உண்டாகிற அச்சம் இல்லை. ஏதோ ஆற்றலைக் கண்டு மடங்குகிற வணக்கம் இது. யோசித் துப் பார்த்தால் இவர்கள் எல்லாருக் கும் இந்தச் சித்தரிடம் உள்ள பயம் ஒரு பக்தியினால் உண்டாவது போலவே தெரிகிறது.

சித்திராங்கன் யோசித்தான்: 'நமது சம்பிரதாயத்தில் பயபக்தி என்று ஒரு வார்த்தை இருக்கிறதே. அது இது தானோ! பயமும் பக்தியும் சேர்ந்த நிலை ஒன்று இருக்கிறது என்பது...

பொழுதல்லவா தெரிகிறது! ஆமாம்! ந்தேகமில்லை. இதற்குப் பெயர்தான் ய பக்தி!''

இப்படி யெல்லாம் சிந்தனை செய்து கொண்டே சித்திராங்கன் பொங்கு னலிலே குளித்து விட்டு, நேரே அறைக்குப் போய் உடையை மாற்றிக் கொண்டு, உணவுச் சாலையை நோக்கி டந்தான்.

சித்தரை அதன் பிறகு அங்கு காண வில்லை. உணவை முடித்துக் கொண்டு தன் அறைக்குத் திரும்பி வந்து தனியே உட்கார்ந்தவாறு, மரக் லத்தில் புறப்பட்டதிலிருந்து தனக்கு ற்பட்டஅநுபவங்களை யெல்லாம் எண்ணிப் பார்த்துக் கொண்டே இருந்தான். சித்தர் வந் ததும், அவர் பேசிய விசித்திரமான வார்த் தைகளும், நினைக்க நினைக்க அவன் மனத் தை என்னவோ செய் தன. எல்லாவற்றிற்கும் மேலாக "வழுக்கி விழுந்து விடாதே!'' என்று அவர் எச்ச ரிக்கை செய்ததுதான் அவனை அச்சுறுத்தியது. தன்னந் தனியாக இருந்து புலவரையா சொன்ன பிரகாரம் "வேயுறு தோளிபங் கன்'' என்ற பதிகத்தை மெதுவாக உதட்டுக்குள் ளேயே ஒரு தரம் பாடி னன். அப்பொழுது கதவை யாரோ தட்டினார்கள். "சித்தர்தான் வந்து விட்டாரோ!'' என்று பதறிப்போய்க் கதவைத் திறந்தால், பணியாள் நின்று கொண்டிருந்தான்.

"அறைக்குள்ளே புழுக்கமாக இருந் தால், அறையைப் பூட்டி விட்டு மேல் மாடத்துக்குப் போய்த் திறந்த வெளி யிலே படுத்துக் கொள்ளலாம். நிலா வும், கடல் காற்றும் அருமையாக இருக்கும்!'' என்றான் அவன்.

"அடடா! இந்தத் தமிழ் நாட்டில் விருந்துபசரிப்பு என்பதைக் கூட ஒரு கலையாக அல்லவா வளர்த்திருக் கிறார்கள்! நம்முடைய வலம்புரித் தீவிலும் ஒரு காலத்தில் இப்படிப் பட்ட நாகரிகமும் ஆசாரமும் இருந் திருக்கும் அல்லவா! எல்லாம் இப் பொழுது அந்தப் பேரி யாழோடு மறைந்து விட்டன போலும்!''

இவ்வாறு எண்ணிக் கொண்டே சித்திராங்கன் அறைக் கதவுகளை நன் றாகப் பூட்டிச் சாத்தி விட்டு, மேல் மாடத்தை நோக்கிச் சென்றான். செல்லும் போதே, படிகளில் ஏறும் போதே, பேரியாழைப் பற்றிய சிந்தனை அவன் மனத்தில் புரண்டு கொண்டிருந்தது.

மாமல்லபுரம் விடுதி இத்தனை பெரிதாக இருக்கும் என்று ஓரளவு தான் யூகித்திருந்தான் சித்திராங்க பூபதி. இப்பொழுது மாடத்துக்கு வந்து பார்த்தால் அவன் அப்படியே கிறங்கிப் போய் விட்டான். அவன் எதிர்பார்த்ததற்குமேல் பத்து மடங்கு விசாலமா யிருந்தது அந்த உப்பரிகை. அதன் திறந்தவெளி ஒரு மாபெரும் நிலா முற்றம். அந்த முற்றம் ஒரு பெரிய வட்டமாக இருந்தது. அதைச் சுற்றி மேலே சுதையினால் அலங்கார வேலைப்பாடுகள் செய்த மாடம் வளைந்துசென்றது. அந்த வளை வான மாடத்தின் முகப்பிலே, அழகழ கான பூங்கொடிகள் பின்னிக்கொண்டு படர்ந்திருந்தன. பூரணசந்திரனுடைய ஒளி அந்தத் திறந்த வெளியிலும்,



மாடத்திலும், பூங்கொடிகளிலும் வெள்ளியைப் பூசி மினு மினுத்துக் கொண்டிருந்தது! அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே மறு பக்கம் திரும்பினால், நீலக் கருங்கடல். நிலவின் ஒளியில் வெள்ளிக் குழம்பைக் கொப்புளித்துக் கொண்டு 'ஓ' என்ற பேரானந்தமான கோஷத்தோடு கூத்தாடிக் கொண்டிருந்தது. கடலின் கரையிலே பல்லவ மன்னர்களின் சிற்பக் கனவு ஒரு தந்தக் கனவாக மணற் பரப்பிலே எழுந்து நின்றது!

இந்த அதிசயக் காட்சியைப் பார்த்து அநுபவித்துக் கொண்டே நிலா முற்றத்திலே நுழைந்து திரும்பினான் பூபதி. அங்கங்கேமாடத்தின் உம்பரில், யாத்திரிகர்கள் ஆகாயத்தைப் பார்த்தவாறு கண்களைத் திறந்தவண்ணம் திண்டுகளிலே தலையைச் சாய்த்துப் படுத்துக் கொண்டிருந்தார்கள். சித்திராங்க பூபதியும் அப்படியே ஓரமாக நடந்து சென்று ஒரு திண்டுக்கு அருகில் வந்து சாய்ந்தான்.

நிலாவையும், வானத்தையும், நீலக் கடலையும் பார்த்தவனாய், பேரியாழைப் பற்றிய சிந்தனைகளிலே மனத்தை ஓடவிட்டுக் கொண்டே, பிரயாணத்தின் களைப்பில் அப்படியே கிறங்கினான் சித்திராங்கன். உறங்கிப் போய் விட்டான். அவன் படுத்திருந்தது சாய்மானத் திண்டானதால், புரண்டு படுத்தபோது கழுத்தை உறுத்தியது. அப்பொழுதுதான் கண்ணை விழித்தான். ஆகாயத்தில் சந்திரன் ஒரே ஒளி வட்டமாக மிதந்து சென்று கொண்டிருந்தது. ஆனால் இதென்ன? 'டிங் டிங்' என்று யாரோ வாயினால் வீணைத் தந்திகளைப் போன்று ஒலி செய்கிறது கேட்கிறதே!

சித்திராங்கன் இமைகளைப் பொருத்தாமல் அந்த ஒலியைக் கேட்டான்! நட்ட நடு நிசிநேரத்தில் யாரோ வாயினால் ஒரு பண்ணை முனகிக் கொண்டே இடையிடையே 'டிங் டிங்' என்று சொல்வது கேட்டது! தலையைத் தூக்கிப் பார்த்தான். வரிசையாக எத்தனையோ யாத்திரிகர்கள் படுத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒலி வந்ததுபோல் இருந்தது. எழுந்து உட்கார்ந்து பார்த்தான். தெற்கு மூலையில் சித்தருடைய பிரம்பு சுவரிலே சாத்தியிருந்தது!

சித்தர்தான் இந்த ஒலியை முனகுகிறாரோ! ஆகா! எத்தனை ஸ்வர சுத்தமாக வருகிறது அந்தக் குரலோசை!

பூபதி மீண்டும் திண்டிலே சாய்ந்தவன், அப்படியே அந்த ஒலி மயக்கத்தில் கண்களை மூடி உறங்கி விட்டான்.

மறுபடியும் அவன் கண்ணை விழித்தபோது மீண்டும் அதே ஒலி கேட்டது. இப்பொழுது 'டிங் டிங்' என்ற ஓசை அத்தனை இல்லை. நன்றாகக் குரலிசையாகவே, வார்த்தைகள் ஏதும் இல்லாமல் வெறும் ஒலியாகவே உதயப் பண்ணை முனகிக் கொண்டிருந்தார் சித்தர்! இவன் திண்டிலிருந்து எழுந்து நன்றாகச் சம்மணம் போட்டு உட்கார்ந்து ஒலியைக் கேட்கத் தொடங்கினானோ இல்லையோ, குரல் நின்று விட்டது!

"என்ன தம்பி! எழுந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? பிரயாணக் களைப்பு கொஞ்சங்கூட இல்லை போலிருக்கிறதே! உறங்கவே காணோமே!" என்றார் சித்தர்! அத்தனை யாத்திரிகர்களில் வேறு யாரும் விழித்ததாகத் தெரியவில்லை. நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்களா அல்லது சித்தருக்குப் பயந்து போய்க் கண்களை மூடிக் கொண்டிருந்தார்களா என்று தெரியவில்லை.

"யாரோ பாடுவது போலக் கேட்டது! அதனால்தான்..." என்று பூபதி வார்த்தைகளை இழுப்பதற்குள், சித்தர் பளீர் என்று பதில் சொன்னார்.

"பாட்டா! இந்தப் பல்லவ ராஜ்யம் இன்று இருக்கிற நிலையில் பாட்டா! அவனவன் அவனவனுடைய பாட்டைப் பார்த்துக் கொண்டு போவதே கஷ்டமாக இருக்கிறது! பாட்டா!"

இந்தமாதிரிப் பதில் வந்ததும் பூபதிக்கு வாய் அடைத்தே போய் விட்டது.

'இல்லை. நீங்கள் ஏதோ ஒரு பண்ணை முனகினாற்போல இருந்ததே!' என்று கேட்கலாம் போலத் தோன்றியது. ஆனால் வார்த்தை வராமல் தொண்டை அடைத்துக் கொண்டது!

'என்ன விசித்திர சித்தராக இருக்கிறார் இவர்! சங்கீதம் கூட இவருக்கு நன்றாகத் தெரியும்போல் இருக்கிறதே!

ிச்சயம் பேரியாழைப் பற்றியும் இவ ருக்குத் தெரிந்துதான் இருக்கும்! ஆனால் இந்தச் சித்தரோடு வார்த்தை யைக் கொடுத்து விட்டுப் பிறகு மாட் டிக் கொண்டால் பெரும் பாடாக அல்லவா போய் விடும் போலிருக்கிறது!'

இவ்வாறு நினைத்தான் பூபதி. 'என் றாலும் காலையில் எழுந்ததும், அவ ரைத் தனியாகப் போய்ச் சந்தித்து நயமும் பயமுமாகக் கேட்டுப் பார்க் கலாம். ஒரு வேளை, ஒரு வேகத்தில் சொன்னாலும் சொல்லி விடுவார்.'

இப்படி நினைத்துக் கொண்டே, விடிய இன்னும் சற்று நேரந்தானே இருக்கிறது என்று, திண்டிலிருந்து தலையை எடுத்துக் கீழே யிருந்த மெதுவான அணையில் வைத்தவாறு இமைகளை மூடினான் சித்திராங்கன். உறங்கிப் போய் விட்டான்!

மறுநாட் காலை பூபதி கண்ணைத் திறந்தபோது அந்தமாடத்தில் சூரியன் 'சுளீர்' என்று காய்ந்து கொண்டிருந் தான். சுற்றி வர யாருமே இல்லை. இவன் மட்டுந்தான் இத்தனை நேரம் உறங்கி யிருக்கிறான்! பூபதிக்கு மிக வும் அவமானமாகப் போய் விட்டது. அப்படியே வெகு துரிதமாக விழுந் தடித்துக் கொண்டு எழுந்திருந்தான்.

சித்தர் எங்கே?—இந்தக் கேள்வி ஒன்றே பூபதியை ஆட்கொண்டது.

மாடத்திலிருந்து கீழே வந்ததும் முதலாவது காரியமாகப் பூபதி குறுக் கும் நெடுக்குமாக நடந்து சித்தர் எங் காவது கண்ணிலே படுகிறாரா, அல் லது அவருடைய அந்தப் பிரம்பாவது எங்காவது தென்படுகிறதா என்று பார்த்தான். எங்குமே காணோம்!

'விறு விறு' என்று நேரே விடுதி யின் நிர்வாக அறைக்குள்ளே நுழைந் தான் சித்திராங்கன். விடுதித் தலைவ னிடம் போய்க் கேட்டான், "ஐயா! நேற்று இரவு இங்கே வந்தாரே சித்தர் அவர் எங்கே? தயவுசெய்து சொல்ல முடியுமா?" என்று.

"சரியாய்ப் போயிற்று! இந்தக் கேள்விக்கு உலகத்திலேயே யாராலும் பதில் சொல்ல முடியாது. சித்தன் போக்கு சிவன் போக்கு என்று கேள் விப்பட்டதில்லையா!" என்று முற்றுப் புள்ளி வைத்தான்விடுதியின் தலைவன்.

பூபதிக்குக் கொஞ்ச நேரம் ஒன் றுமே ஓடவில்லை. மாமல்லபுரத்துக்கு வந்ததுமே தனக்கு இசையைப் பற்றி யும், பேரியாழைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பு இந்தச் சித்தர் மூலமாகக் கிடைத்து விட்டது என்று கனவு கண்டானே! அது வீண் எண்ணந்தானா? அப்படியானால் இனிக் காஞ்சிமா நகரத்துக்குப் புறப் பட வேண்டியதுதானா?

காஞ்சிமா நகரம்! பல்லவ சாம் ராஜ்யத்தின் தலைநகரம். இந்த மாமல்ல புரம் என்ற துறைமுகப் பட்டினத்தில் ஏற்பட்ட அநுபவங்களே இத்தனை விசித்திரமாக இருந்தால், அந்தத் தலைநகரத்து அநுபவங்கள் எப்படி யிருக்குமோ? அந்த நகரத்துக்கு எப்படிச் செல்வது? இனி அங்கிருந்து எங்கெல்லாம் சுற்ற வேண்டியது ஏற் படுமோ? தன்னிடம் ஒரு குதிரை இருந்தால் எத்தனை சௌகரியமாக இருக்கும்! வலம்புரித் தீவில் உள்ள விடுதியில், பாழடைந்த ஒரு இடத் திலே, யாத்திரிகர்களுக்காகக் குதிரை வசதி செய்து கொடுக்கும் ஒரு புரவிக் கூடம் இருந்ததும், அது இன்று இடிந்து தரைமட்டமாகக் கிடப்பதும், பூபதிக்கு ஞாபகம் வந்தன. இந்தப் பட்டினத்திலும் இந்த விடுதியிலும் அப்படி ஒரு வசதி நிச்சயம் இருக்கத் தான் வேண்டும். அதைப் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். இந்த மாமல்ல புரத்துச் சிற்பங்களிலே யாழைப் பற்றிய கல்வெட்டுக்கள், ஏதாவது பயனுள்ள செய்திகள், இருக் குமா என்று முதலில் தெரிந்து கொண்டு வரலாம்.

இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தான் பூபதி. அப்படியே விரைவாகச் சென்று குளிப்பையும், காலை உணவை யும் முடித்துக் கொண்டு கடற் கரையை நோக்கி நடந்தான்.

நேற்றுத் துறைமுகத்தில் வந்து இறங்கியதுமே, சூரிய வெளிச்சத்தில் இந்தச் சிற்பங்களை யெல்லாம் பார்க்க வேண்டும் என்று நினைத்தான் அல் லவா? அந்தச் சிற்பங்களை இப் பொழுது சூரிய வெளிச்சத்தில் பார்த் தான் சித்திராங்கன். வலம்புரித் தீவிலே உள்ள சிற்பங்களை அப்படியே இங்கே பெயர்த்துக் கொண்டு வந்தார் களா, அல்லது இங்கிருந்து அங்கே பெயர்த்துக்கொண்டு போனார்களா? — இப்படி ஒரு பெரிய வியப்பில் மூழ்கிய

வனாக அந்தக் கல்லாலான கனவு உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் சித்திராங்கன். சற்றுத் தொலைவில் ஐந்தாறு பேர் ஒரு பாறையின் மேல் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது. தன்னைப் போல யாத்திரிகர்களாக இருக்கக் கூடும் என்று சந்தேகித்து நின்று கொண்டிருக்கும் போதே, பாறை வெளியில் திடீர் என்று குமிழ்க் கட்டையின் ஒலி கேட்டது! 'டக் டக்' என்று பிரம்பின் ஓசையும் பின் தொடர்ந்தது! அவ்வளவுதான்; பாறையிலே உட்கார்ந்திருந்த மனிதர்கள் பதறத் தோடுஎழுந்தார்கள். சித்திராங்கன் திரும்பிப் பார்ப்பதற்குள் குமிழ்க் கட்டையின் ஓசை அவனுக்கு அருகிலே வந்து நின்றது.



"என்ன தம்பி! அந்தக் கூட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டாய்? அவர்கள் எல்லாம் கலைஞர்கள். சங்கீத வித்துவான்கள். இன்று ராஜ்யம் இருக்கிற நிலையில் கலையாவது களி மண்ணாவது! சங்கீதம் எல்லாம் சர்க்கரைப் பொங்கல்! தெரிந்ததா! அரசாட்சி என்றால் மாந்தோப்பு விளையாட்டில்லை தம்பீ! சமர் பூமி இது! வாத்ய வித்யாதர மகாராஜாவோடு வாத்ய வித்தை சரி! இனிமேல் நம்முடைய நந்தி வர்மர் தலையெடுத்துப் பிள்ளைப் பிராயத்தைத் தாண்டி, யுத்தங்களையெல்லாம் வென்று வெற்றியை நிலை நாட்டி, அதன் பிறகு அல்லவா சங்கீத வித்துவான்களைக் கவனிக்க வேண்டும்! அதுவரை வித்துவான்களுக்கு உரிய இடம் அந்தப் பாறைதான்! அதுவரை பேரியாழுக்கு உரிய இடம் கொடும்பாளூர் தான்! சந்தேகமிருந்தால் அந்த வித்துவான்களிடமே போய்க் கேளேன்!"

இவ்வாறு சொல்லிவிட்டு 'டக் டக்' என்று குமிழ்க் கட்டையை மிதித்துக் கொண்டு, பிரம்பைச் சுழற்றியவாறு மேலே நடந்தார் சித்தர். ஒரு விநாடி தாமதிக்கவில்லை.

'பேரி யாழ்' 'கொடும்பாளூர்' இந்த இரண்டு வார்த்தைகளும் சித்திராங்க பூபதிக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தன. கொடும்பாளூர்தானே ஆந்திரையனுடைய ஊர். தன்னோடு கடற் பிரயாணம்செய்த அந்த உத்தமமான ராஜகுமாரனுடைய ஊர் அல்லவா கொடும்பாளூர். பேரியாழுக்கு உரிய இடம் கொடும்பாளூர் என்றாரே இந்தச் சித்தர்! என்ன அதிசயமான செய்தி இது! பேரியாழ் கொடும்பாளூரிலேதான் இருக்கிறதா? இந்தச் செய்தி உண்மையாக இருக்குமா? இந்தச் சித்தர் நேற்று மாலையிலிருந்து எங்குபோனாலும் பின் தொடர்கிறாரே! ஏதோ உளவு அறிந்து சொல்லுகிற மாதிரி, தன்னைப் பற்றிய செய்திகள் எல்லாம் தெரிந்தவர் மாதிரி, ஒவ்வொரு சமயம் ஓரோரு வார்த்தைகளைப் போடுகிறாரே!

மந்திரநாயகம் ஒற்றர்களைப் பற்றி எத்தனை தூரம் தனக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்! இவர் ஏன் அம்மாதிரி ஒரு ஒற்றராக இருக்கக் கூடாது? இல்லையென்றால் இவர் ஏன் தன்னை இப்படி வளைத்து மடக்கிக் கொண்டு பின்தொடர வேண்டும்? தன்னைப் பற்றி இவருக்கு ஏதேதோ தெரிந்திருக்கிறதே! திடீர் திடீரென்று வந்து தன்னை இப்படிக் குழப்பி யடிக்கிறாரே? ஆனால் மனிதரைப் பார்த்தால் ஏமாற்றுக்காரர் மாதிரியும் தெரியவில்லை. தன்னுடன் அன்போடு, கருணையோடு, பேசுகிறவர் மாதிரித்தான் இருக்கிறது. என்றாலும் யாரையும் நம்பக் கூடாது. அன்போடு பேசுகிறவர்களையுங் கூட நம்பக் கூடாது என்றல்லவா மந்திரநாயகம் சொல்லியிருக்கிறார்.

இப்படி அந்த மாமல்லபுரப் பாறையிலே நின்றவாறு சித்திராங்கன் ஏதேதோ யோசனை செய்து குழம்பிக் கொண்டிருந்த சமயம், அவனை நோக்கி வேகமாக யாரோ ஒரு வீரன் குதிரையில் வருவது தெரிந்தது. (தொடரும்)

கண்ட கனவு

ழாம் அத்தியாயம்

உறுதிமொழி



பாறைகளுக்கு மத்தியிலே நின்ற சித்திராங்கன், தன்னை நோக்கிக் குதிரையின் மேல் ஒரு வீரன் வருவதைக் கண்டதும் முதலில் சந்தேகித்தான். தன்னை நோக்கித்தான் வருகிறானா, அல்லது, வேறு எங்காவது செல்கிறானா என்று ஐயப்பட்டான். இப்படி அவன் தயங்கிக் கொண்டு நிற்பதற்குள் பாறைகளை யெல்லாம் ஒரு பாய்ச்சல் பாய்ந்து கொண்டு 'பளீர்' என்று அவனுக்கு முன்னால் வந்து நின்றது ஒரு கரும் புரவி. கன்னங் கரேல் என்று ராஜ கம்பீரமாக நின்றது அது. அதன் மேல் இருந்த வீரனோ வெள்ளை அங்கியும் இடுப்பிலே சிவப்புப் பட்டையும், தலையில் சிவப்பு வர்ணத்திலேயே இறுக்கிச் சுற்றிய பாகையும், அதிலிருந்து தொங்கிக் கொண்டு பறந்த வாலுமாகப் பார்ப்பதற்கு அழகும் அதே சமயம் கம்பீரமும் நிரம்பிக் காட்சி தந்தான். அந்தக் கம்பீரத்தை அதிகப் படுத்திற்று அவனுடைய மீசை. இடுப்பிலே செருகியிருந்த வாளின் கொண்டையிலே பல்லவ அரசச் சின்னமான நந்தியின் இலச்சினை பொறித்திருந்தது.

சித்திராங்கனுக்கு எதிரிலே பாறையின் மேல் வந்து நின்ற அந்தக் குதிரையிலிருந்து வீரன் கீழே இறங்கினான். இறங்கிச் சித்திராங்கனுக்கு அருகே வந்து அவனை நன்றாக ஏற இறங்கப் பார்த்தான்.

சோமு

"ஆசாரக் குறைவாக நடந்து கொள்வதற்காக மன்னிக்க வேண்டும். என் கடமையை நான் செய்கிறேன்!" என்று சொல்லி விட்டு, மறுபடியும் குதிரையின் மேலேறி அடுத்த கணம் காற்றாகப் பறந்து விட்டான் அந்த வீரன்!

மூடி விழிக்கும் நேரத்தில் இத்தனையும் நடந்தது. சித்திராங்க பூபதிக்கு மூச்சு நின்று மீளுவதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது!

காற்றாக வந்தது குதிரை. காற்றாகவே இப்பொழுது பறந்து சென்று விட்டது. அதிலிருந்து இறங்கிய வீரன் தன்னை ஒரு தரம் ஏற இறங்கப்

பார்த்தது. ஏதோ உள்ளம் என்ற திரையில் சித்திராங்கனுடைய ஓவியத்தையே ஒரு கணத்தில் பெயர்த்து எழுதிக் கொண்டு போவது போல் இருந்தது. அப்பப்பா! அவனுடைய கண்கள் தான் எத்தனை கூர்மையானவை. தன்னைத்தான் எப்படி ஊடுருவிக் கொண்டு இமை கொட்டாமல் நோக்கினன் அவன்.

சித்திராங்கனுக்கு இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது. குதிரைமேல் வந்த வீரன் பல்லவ சாம்ராஜ்யத்தின் வேவுப் படையிலே முக்கியமான ஒரு வீரனாக இருக்க வேண்டும். அவன் ஏன் தன்னை இப்படி ஆராய்ந்து பார்த்து விட்டுச் செல்லுகிறான்? அங்கே, சற்றுத் தொலைவில் நாலைந்து மனிதர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்களே அவர்கள் பக்கம் செல்லக் கூடாதோ? இல்லையே! தன்னை



மட்டும் வந்து பார்த்துவிட்டு அல்லவோ செல்கிறான். எத்தனை நாகரிகத்தோடு தன் கடமையைச் செய்வதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்கிறான்! "வெட்டு, குத்து" என்று நிற்க வேண்டிய ஒரு படை வீரனுக்கு இத்தனை பண்பாடு தமிழ் நாட்டிலே இருக்க வேண்டும் என்றால், இந்த நாட்டிலே உள்ள கல்விமான்கள் எத்தனை ஆசாரம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். தரணி கொண்ட போசர் என்ற ஒரு வைஷ்ணவப் பெரியாரைப் பற்றிப் புலவரையா சொன்னரே, அவர் எத்தனை பண்பு நிறைந்தவராக இருக்க வேண்டும்! இந்த நாட்டின் அமைச்சு எத்தனை நாகரிகம் நிரம்பியதாக இருக்க வேண்டும்! ஒரு காலத்தில் தன்னுடைய வலம்புரித் தீவிலும் இத்தனை பெரிய நாகரிகம் நிலைபெற்று

இருந்திருக்க வேண்டும் அல்லவா? இப்பொழுது அந்தப் பெரியாரே... தான் எல்லாம் தொலைந்தது போலு...

இப்படி எண்ணிக்கொண்டே பூ... நினைத்தான். தன்னை ஏன் அந்த வீர... வேவு பார்க்க வேண்டும்? தன்னை... பற்றி யார் என்ன சொல்லி யிருக்க... கூடும்? தன் சந்தேகத்தைக் கேட்டு... தெரிந்து கொள்வதற்குக் கூட நேர... கொடுக்க வில்லையே அந்த வீரன்... காற்றிலே அல்லவா ஏறிப் பறந்து... சென்று விட்டான்!

பூபதிக்கு உள்ளத்தில் ஒருவகை... யான அச்சமும் கலவரமும் ஏற்பட்... டன. ஆனாலும் தைரியத்தோடு மன... தைத் திடப்படுத்திக் கொண்டு நேரே... விடுதியை நோக்கி விரைந்தான்... இவன் விடுதிக்குள்ளே நுழைந்த... போது, என்ன ஆச்சரியம், அதே... அந்தக் கருங் குதிரை வீரன் விடுதிய... விருந்து அதே குதிரையில் அதே... வேகத்தோடு உள்ளே யிருந்து... வெளியே வந்து, வீதியிலே வெகு வேக... மாகச் சென்றான்!

பூபதிக்கு ஒரு கணம் தலை சுற்றி... யது. தன்னுடைய அறைக்குச்... சென்று மௌனமாக உட்கார்ந்தான். அந்த வீரன் இந்த விடுதிக்குள்ளும் வந்து ஏதோ விசாரணை நடத்தியிருக்க வேண்டும். சந்தேகமில்லை. ஒருவேளை விடுதியின் தலைவனிடம் போய்த் தன்னைப் பற்றி ஏதாவது கேட்டிருப்பானோ? தலைவனிடமே போய் இந்த விவரத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டு விட்டால் என்ன?

இல்லை. தான் ஏன் இதற்கு இத்தனை பயப்பட வேண்டும்? ஏதோ குற்றவாளியைப்போல் ஏன் இப்படி நடுங்க வேண்டும்? விசாரிக்கட்டுமே! யாருக்குத் தன்னைப் பற்றி என்ன தெரியும்? அப்படியே தெரிந்தாலும் அதில் என்ன தவறு இருக்கிறது? வலம்புரித் தீவிலிருந்து, தான் எவ்விதமான சதியாலோசனையோடும் வந்து விடவில்லையே! எந்த அரசாங்கத்தையும் எந்த விதத்திலும் கவிழ்ப்பதற்கான எந்தத் திட்டமும் தன்னிடம் இல்லையே! பின் எதற்காகத் தான் அச்சம் அடைய வேண்டும்? காமம், மயக்கம், வெகுளி இந்த மூன்றும் தனது வாழ்

ல் இனிக் கிடையாது. அன்னையின் ட்டளையை அசையாத உறுதியோடு றைவேற்றப் போகிற தனக்கு இம்மாதிரியான கலக்கத்துக்கு ல்லாம் இனிமேல் எந்தவிதமான அவசியமும் இல்லையே?

இப்படி அவன் எண்ணியதும், அந்த எண்ணத்தையே காதினால் கேட்டுப் பரிகாசச் சிரிப்புச் சிரிப்பது போல யாரோ அறைக்கு வெளியே சிரித்தார்கள். தலையைத் தூக்கிப் பார்த்தான். கையில் மயில் பீலியும் ஒரு பழைய சுவடியுமாக அறைக்கு வெளியே யாரோ ஒரு சமணத் துறவி நின்று கொண்டிருந்தார்.

'என்ன தம்பீ! யோசனை பலமாக இருக்கிறது! ஆரூடம் சொல்லட்டுமா?' என்று கேட்டுக் கொண்டே அவனுடைய அங்கீகாரத்தை எதிர்பார்த்தவாறு மேலும் ஒரு சிரிப்புச் சிரித்தார் அந்தத் துறவி.

'ஆரூடமும் வேண்டாம். சோதிடமும் வேண்டாம்! வணக்கம்!' என்று ஒரு பெரிய கும்பிடு போட்டு விடலாம் என்று தோன்றியது முதலில். ஆனால் உள்ளத்துக்குள்ளே ஒரு சபலம். ஒரு கணம் மனம் போராடியது. அடுத்த கணம் ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தவன் போல, "வணக்கம். அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. போய் வாருங்கள்!" என்று கையைக் கூப்பினான் பூபதி!

சமணத் துறவி சிரித்தார். "நம்பாதவனுக்குத்தான் நிச்சயம் பலன் சொல்ல வேண்டும். ஆனாலும் மதியாதவன் வாசலை மிதிக்கக் கூடாது என்பது சாஸ்திரம். ஆகையால், வெளியே இருந்தவாறே ஒரு சிறிய ஆரூடம் சொல்கிறேன். கேள்! நீ உன் மனத்தில் எண்ணுகிறாயே மூன்று விஷயங்கள், அந்த மூன்றும் உன்னைப் பிடித்து ஆட்டப் போகிற மூன்று பிசாசுகள். எப்பொழுதாவது பிசாசுகளை விரட்ட வேண்டும் என்றால் எங்களுடைய ராஜ விகாரத்துக்கு வந்து சேர்!"

இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றார் சமணத் துறவி.

ராஜ விகாரம் என்பது காஞ்சிமாநகரத்திலே யிருந்த சமணர்களின் பள்ளி என்றும், திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தப் பெருமானும் இந்தப் பூமியிலே தோன்றி நடமாடிய பிறகு அந்தச் சமணப் பள்ளி மிகவும் க்ஷீணித்துப் போய் விட்டது என்றும், கப்பலிலே புலவரையா பூபதிக்குச் சொன்னது நன்றாக நினைவு இருந்தது. ராஜ விகாரம் க்ஷீணித்துப் போய் விட்டதால் இப்பொழுது துறவிகள் வெளியே நடமாடுகிறார்கள் போலும் என்று எண்ணினான் சித்திராங்கன். ஆனாலும் துறவி சொன்ன ஆரூடம் அவனைப் பயப்படுத்திற்று. மூன்றும் தன்னைப் பிடித்து ஆட்டப்



போகும் மூன்று பிசாசுகள் என்றாரே! என்ன பயங்கரம்! இந்தப் பிசாசுகளுக்குப் பயந்து ராஜ விகாரத்துக்குப் போக வேண்டுமாமே! எப்படியிருக்கிறது கதை.

பிசாசுகளையெல்லாம் ஆட்டிக் கொண்டே, பேரானந்த ஆட்டத்திலே நடனமாடும் நடராஜப் பெருமானும் அவனுடைய திருவருளும் இருந்து விட்டால் ஏன் கவலைப்பட வேண்டும்? அந்தத் திருவருள் கிட்டுவதற்குத் தன்னை அருகதையுடையவ

ளுகைச் செய்து கொள்வதுதான் இனி மேல் தன்னுடைய கடமை என்று எண்ணிக் கொண்டே, புலவரையா சொன்ன பதிகத்தை உதட்டுக்குள்ளே ஒரு முறை பாடிக் கொண்டான்.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனேடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனல்
வெஞ்சின அவுணரோடும் உருமும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

இப்படிப் பாடிக்கொண்டே கொடும்பாளுரைப் பற்றியும் அந்த ஊருக்குச் செல்லவேண்டிய மார்க்கத்தைப் பற்றியும், அங்கே யிருந்த யாழைப் பற்றியும் ஏதாவது தெரிந்து கொள்ளலாம் என்று கருதிப் பூபதி விடுதியின் நிர்வாக அறையை நோக்கி மெதுவாக நடந்தான்.

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில் சித்திராங்க பூபதியைக் கொஞ்சம் மறந்து விட்டுத் தமிழ் நாட்டின் அன்றையச் சூழ்நிலையை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

நமது செந்தமிழ் நாட்டிலே கல்வி சிறந்த காஞ்சிமா நகரிலே அப்பொழுது பல்லவப் பேரரசு ஆட்சி பீடத்திலே அமர்ந்து செங்கோல் செலுத்தி வந்த காலம். சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே பல்லவ மகேந்திர வர்மனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம் வர்மனும், பின்னர் இரண்டா மகேந்திர வர்மனும், அவனுக்கு பின் முதலாம் பரமேசுவர வர் னும் ஆட்சி செய்து மறைந்தன பரமேசுவர வர்மனுக்குப் பின் இரண் டாம் நரசிம்மன் தோன்றிக் கோல கலமாக ஆட்சி நடத்தினன். காஞ்சிம நகரிலே கைலாசநாதர் கோயிலையு மாமல்லபுரத்திலே புதிய கோயிலையும் தானமலைக் கோயிலையும் எழுப்பி தனது பக்தியையும் புகழையு கல்லிலே நாட்டி விட்டு மறைந்தா இந்தப் பல்லவப் பேரரசன். இவனு டைய காலத்திலேதான் தண்டி என் வடமொழிப் புலவர் ஆஸ்தான கவிஞ ராக அமர்ந்திருந்தார். இந்த அரச னுடைய ராஜ சபையிலேதான் பாச கவியின் ஸம்ஸ்க்ருத நாடகங்கள் அரங



அங்கிகாரத்தோடு அரங்கு ஏறின. இந்தப் பேரரசன்தான் ராஜசிம்மன் என்ற சிறப்புப் பெயரோடு விளங்கினன். 'வாத்ய வித்யாதரன்' என்றும் 'ஸ்ரீ ஆதூர்ய தும்புரு', 'ஸ்ரீவீணு நாரத' என்றும், 'ஆதோத்ய' என்றும், பல பட்டங்கள் தாங்கி சங்கீதத்திலே நிகரற்ற மேதையோடு விளங்கினன். மகேந்திர வர்மன் கண்ட பரிவாதினி என்னும் பேரியாழில் ஏழு தங்கத் தந்திகள் அமைத்து வாசித்துப் பார்த்து விட்டு, பிறகு எட்டுத் தந்திகளிலே பல சோதனைகள் செய்தான் இந்த அரசன். தமிழ்இலக்கியங்களிலே வர்ணிக்கப்படுகிற பல பூர்வமான இசைக் கருவிகள் இந்த அரசனுடைய சபையிலே அரச உபசரிப்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாகிக் குதூகலமாக ஒலித்துக் கொண்டிருந்தன. ஏழு தந்திகள் அமைந்த செங்கோட்டு யாழும், பதினறு தந்திகள் அமைந்த சகோட யாழும், பதினேழு தந்திகள் அமைந்த மகர யாழும், இருபத்தொரு தந்திகள் கொண்ட பேரியாழும், பழந்தமிழ் இசை நூல்களிலே சொல்லப்படுகிற இலக்கண முறைகளோடு இந்தப் பேரரசன் அவையிலே பல கலைஞர்களால் ஆராயப்பட்டும் பயிலப்பட்டும் வந்தன. ஆனல் இவன் காலத்துக்குப் பிறகு கலையின் வளர்ச்சியிலே ஒரு முறிவு ஏற்பட்டது. இவனுக்குப் பிறகு தோன்றிய இரண்டாம் பரமேசுவர வர்மன் அதிக நாள் அரசாளவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குள்ளே ஏதேதோ குழப்பங்கள் நேர்ந்தன. அவன் மறைந்தான். அவனேடு சிம்ம விஷ்ணுவின் பரம்பரையே அற்றுப் போய்விட்டது. பட்டத்துக்கு உரிய இளவரசன் இல்லாமல் போகவே, தாயாதி வழியில் இரணிய வர்மருடைய பன்னிரண்டு வயதுச் சிறுவனை மக்களும் பிரதானிகளுமாகச் சேர்ந்து தேர்ந்தெடுத்துக் காஞ்சிமா நகரிலே அழைத்து வந்து பட்டம் சூட்டியிருந்தார்கள். நாடு முழுதும் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே தோன்றியவனும், தனக்குத்தான் அரசு வேண்டியது என்று உரிமை கொண்டாடியவனுமான சித்திரமாயன் என்னும் இளைஞன் இப்பொழுது பல சூழ்ச்சிகள் செய்துவந்தான். இதுதான் அன்றையநிலை!



புதிதாகப் பட்டம் சூடிய பன்னிரண்டு வயதுச் சிறுவன், நந்திவர்மன் என்று அபிஷேகப் பெயர்

தாங்கி அரசாட்சியின் கடுமையை உணராத நிலையில் அரியணை ஏறினான்! நாடு முழுதும் பரவிய குழப்பம் அந்தச் சிறுவனை அதிகமாகப் பாதிக்காத வண்ணம் அவனுக்குப் பக்க பலமாக நின்றார் அவனுடைய தந்தை இரணிய வர்மர். பல்லவ மல்லன் என்றும், போத்தரையன் என்றும் சிறப்புப் பெயர்கள் சூடி, நந்திவர்மன் பிற்காலத்தில் பல மகோன்னதமான சாதனைகள் புரிவதற்குத் துணையாகக் கச்சை கட்டி நின்றார்



உதய சந்திரன் என்ற மதியூகி. முத்தரையர்கள் என்ற குறுநிலத் தலைவர்கள் தங்களுடைய வீரமும் வலிமையும் செல்லும் மட்டும் நந்திவர்மனுக்கு நீங்காத் துணையாக நின்றார்கள். ஆனால் சேர சோழ பாண்டிய வேந்தர்களோ பல்லவப் பேரரசை வீழ்த்த இதுதான் சமயம் என்று கருதினார்கள். ஏற்கனவே எல்லைச் சண்டைகள் காரணமாகப் பாண்டிய வேந்தர்களுக்கும் பல்லவர்களுக்கும் பகைமை உணர்ச்சி அரும்பிக் கொண்டிருந்தது. ஆனால் சிம்ம விஷ்ணு பரம்பரை அரசாட்சியில் இருந்தவரையில், அந்தப் பகைமை வலுப்படவில்லை. காரணம் பாண்டியர்களுக்கும் விஷ்ணுசிம்மனின் பரம்பரைக்கும் திருமண உறவு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே வந்த சித்திரமாயனுக்கு எதிராக, நந்திவர்மன் பட்டம் சூடியதும், சித்திரமாயன் பாண்டியனிடம் தஞ்சம் புகுந்தான். எனவே, பாண்டிய அரசன் தனக்குப் பக்க பலமாக மற்றத் தமிழ் வேந்தர்களையும், குறுநில மன்னர்களையும் ஒன்று திரட்டிக் கொண்டிருந்தான். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பல்லவர்களுக்குப் பெருந் துணையாக இருந்த கொடும்பாளூர் வேளிர்கள் இப்பொழுது பல்லவருக்கு எதிராக நின்று, பாண்டியர்களின் கட்சியிலே சேர்ந்து போர் புரிய ஆயத்தமானார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல்லவ சாம்ராஜ்யம் எப்படியிருக்கும்? காஞ்சிமா நகரமும் மாமல்லத் துறைமுகப் பட்டினமும் ஒவ்வொரு வினாடியும் சூழ்ச்சிக் கொந்தளிப்பை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன. இந்த நிலையிலே பேரியாழையும், அதன் இன்னொலியையும் மக்கள் மறந்து விட்டதில் வியப்பில்லை அல்லவா. இதையேதான் சொன்னான் விடுதித் தலைவன் பூபதியிடம்!

ஆமாம்; மேலே சொன்ன விவரங்கள் அனைத்தையும் விடுதியின் தலைவன் விஸ்தாரமாகப் பூபதிக்கு எடுத்துச் சொன்னான். அவன் சொன்ன முறையைப் பார்த்தால் உள்ளத்தின் அந்தரங்கத்தில் அந்த விடுதித் தலைவனுங்கூடப் பல்லவர்களுக்கு விரோதமாக எதிர்க் கட்சியிலே சார்பு கொண்

டிருந்தானே என்று பூபதி சந்தேகிக்கும்படியிருந்தது. அப்படி அவன் சந்தேகித்ததிலுங்கூட உண்மையில்லாமல் போகவில்லை.

சித்திராங்க பூபதி விடுதியின் நிர்வாக அறையைவிட்டுப் புறப்படும் முன்பு தலைவனிடம் ஒரே ஒரு கேள்வி மட்டும் ஆர்வத்தோடு கேட்டான்.

“வாத்ய வித்யாதர அரசன் காலத்தில் உன்னதமான முறையிலே பேணி வளர்க்கப்பட்ட பேரியாழ் என்ற இசைக்கருவி, இப்பொழுது கொடும்பாளூரில் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, இது உண்மையா?”

சித்திராங்கன் கேட்ட இந்தக் கேள்விக்கு உடனே விடை சொல்லாமல் முதலில் பலமாகச் சிரித்தான் விடுதித் தலைவன்.

“என்ன தம்பி! வீணை எங்கே போய் விட்டது? அதை யார் எங்கே எடுத்துப் போனார்கள்? இந்த அகில உலகத்திலும் பேரியாழ் என்று சொல்லப்படுகிற வாத்தியம் ஒன்றே ஒன்றுதான் உண்டா? எத்தனையோ வீணைகள் இருக்கின்றன. அந்த வீணைகள் எங்கும் போய் விடவில்லை. ஆனால் அவற்றின் மேல் ஓடி விளையாடக் கூடிய விரல்களைத்தான் இன்று காணோம். எல்லா விரல்களும் இப்பொழுது வாளைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றன!”

இவ்வாறு சொன்னான் விடுதித் தலைவன்.

“அப்படியானால் கொடும்பாளூருக்கும் இந்தப் பேரியாழுக்கும் என்ன சம்பந்தம்?” என்று கேட்டான் பூபதி.



“தம்பீ! உன்னைப் பார்த்தால் பரம சாதுவாகத் தோன்றுகிறாய். உன்னுடைய முகத்தில் பால் வடிகிறது. உன்னிடம் எந்த விஷயத்தைச் சொல்வதிலும் பிசகு ஒன்றும் நேர்ந்து விடாது. நீ என்னைக் காட்டிக் கொடுத்துவிட மாட்டாய் என்று தெரிகிறது. ஆனாலும் நாடு இன்றிருக்கும் சூழ்நிலையில் எவரிடமும் நிதானத்தோடுதான் பேச வேண்டியதிருக்கிறது. அதனால் நீ எனக்கு ஒரு சபதம் செய்து கொடுத்தால் உனக்கு அந்த விவரத்தை மறைக்காமல் முழுதும் சொல்லுகிறேன்!”

இப்படிக் கூறினான் விடுதித் தலைவன்.

“சபதமா?” என்று ஆச்சரியத்தோடு கேட்டான் சித்திராங்கன்.

“ஆமாம். வெறும் சபதம் இல்லை. நீ உலகிலேயே மிக மிக மதித்துப் பக்தி செலுத்தும் பொருளின் மேல் ஆணையிட்டுச் சொல்ல வேண்டும். அப்படியானால்தான் உனக்கு அந்த விவரத்தைச் சொல்லுவேன்!”

இப்படி ஒரு பீடிகை போட்டுக் கொண்டான் அவன். சித்திராங்க பூபதி உடனே பதில் பேசவில்லை. கடந்த சில நாழிகை நேரமாக அவனுக்குச் சபதம், ஆணை, உறுதிமொழி என்ற வார்த்தைகளே உள்ளத்தில் பயத்தை உண்டாக்கின. அதிலும் தான் தன் அறையில் உட்கார்ந்திருந்த போது, ஒரு சமணத் துறவி வந்து ஏதோ சொல்லி விட்டுப் போனாரே, அந்த வினாடியிலிருந்து அவனுடைய உள்ளம் மிகவும் குழம்பிக் கொண்டேயிருந்தது. ஏற்கனவே சித்தர் வந்து ஒரு கலக்குக் கலக்கிவிட்டுப் போயிருக்கிறார். அதைத் தொடர்ந்து குதிரை மேல் யாரோ ஒரு வீரன் வந்து அவனை ஒரு முறை ஏற இறங்க நோட்டம் பார்த்து விட்டுப் போயிருக்கிறான். சற்று முன்பு இந்தச் சமணத் துறவியும் வேறு வந்து ஆரூடம்சொல்லுகிறேன் என்று ஆரம்பித்து, நெருப்புப் பொறிகளைச் சிதறி விட்டுப் போனது அவனை என்னவோ செய்தது. ஆரூடம், சோதிடம் இவற்றில் எல்லாம் நம்பிக்கை கிடையாது என்று வாய் வீரம் பேசி அவரை அனுப்பி விட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் உள்மனத்துக்குள்ளேயிருந்து அந்த ஆரூடத்தை அவ்வளவு எளிதாக அகற்றி விட முடியவில்லை. பதிகங்களை எத்தனை பக்தி பூர்வமாகப் பாடி நிறுத்திய போதிலும், இதயம் படபடவென்று அடித்துக் கொண்டுதான்

இருந்தது. அன்னையிடம் வாக்குறுதியோடு வாங்கி வந்துள்ள அந்தத் தந்தப் பேடகத்திலே காணப்படும் மூன்று உறுதியுரைகளுமே அவனுக்குப் போதும். இந்த மனித ஆயுளுக்கு அந்த மூன்றுமே போதும், போதும்! இப்பொழுது புதிதாக இந்த விடுதித் தலைவன் வேறு ஒரு வாக்குறுதியை ஆரம்பிக்கிறானே என்று தயங்கினான் சித்திராங்க பூபதி.

"தம்பீ! என்னைச் சந்தேகப் படாதே. உன்னையும் உன் இலட்சியங்களையும் பற்றி நான் ஓரளவு தெரிந்து கொண்டு விட்டேன்!"



இப்படி அவன் சொன்னதும் பூபதிக்கு மேலும் தூக்கி வாரிப் போட்டது. இந்த மாமல்லபுரம் ஒரு மகேந்திர ஜால புரமாக அல்லவா இருக்கிறது. தான் வந்து சேர்ந்த விடுதியிலிருந்து ஒவ்வொரு மனிதரும் ஓரொரு விதத்தில் அதிர்ச்சி தந்து கொண்டே யிருக்கிறார்களே! இவனைப் பார்த்தால் வெறும் பேரேட்டுக் கணக்காயன் என்றல்லவா நினைத்தோம். இவனுக்கு உள்ளேயும் ஒரு பெரிய இந்திர ஜால வித்தை யல்லவா ஒளிந்து கொண்டிருக்கிறது! இவனும் தன்னைப் பற்றியும் தனது இலட்சியங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறானே. அது எப்படி முடிந்தது? வலம்புரித் தீவிலிருந்து தான் புறப்பட்டதும், முப்பது நாட்கள் மரக்கலத்திலே யாத்திரை செய்ததும், எத்தனை இரகசியமான விஷயங்கள்! எல்லாவற்றிற்கும் மேலாகத் தான் பேரியாழைக் காணவேண்டும் என்ற இலட்சியத்தோடு புறப்பட்டு வந்திருப்பது, யாருக்குமே தெரியாத மர்மம் அல்லவா? இவை யெல்லாம் இந்த விடுதித் தலைவனுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்! வெறும் பயமுறுத்தலாக இப்படி ஒரு போடு போட்டுப் பார்க்கிறானோ—என்றெல்லாம் பூபதி எண்ண ஆரம்பித்தான்.

"ஆச்சரியப்படாதே தம்பீ! சற்று முன்புதான் உன்னை ஓரளவு இனம் கண்டு கொண்டேன். அது எப்படி என்று கேட்காதே. போகப் போகத் தெரியும். நான் உனக்கு ஒத்தாசை செய்யும் நோக்கத்தோடுதான் இந்த விநாடி வரை பேசிக் கொண்டிருக்கிறேன். புரிகிறதா? எடுத்த எடுப்பில் இந்த ராஜ்யத்தில், இன்றிருக்கும் நிலையில், உன்னிடம் இதயத்தைத் திறந்து விடுவேனா! ஏதோ ஓரளவு உன்னை ஸ்திரம் பண்ணிக்கொண்டு தான் இவ்வளவாவது உன்னோடு வார்த்தை யாடுகிறேன். அதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டேன், என்ன என்பதைப் பற்றி மண்டையைக் குழப்பிக் கொள்ளாதே. ஏற்கனவே உனக்குக் குழப்பம் அதிகமாக இருக்கிறது. எனவே நான் சொல்வதை மட்டும் கேள். என்னைப் பற்றி உனக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்ல வேண்டும். கொடும்பாளூர் என்றும் கொடும்பை என்றும் சொல்லப்படுகிற கோனாட்டுத் தலைநகரோடு தொடர்புடைய ஒரு பரம்பரையிலே வந்தவன் நான். இன்று பல்லவர்களுக்கும் கொடும்பை வேளிர்களுக்கும் பகைமை உண்டாகி வருகிறது. அந்தப் பகைமை உணர்ச்சியைப் பார்க்கும்போது உன்னிடம் இப்படி ஒரு உறுதி வாங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று தோன்றுவதால் கேட்கிறேன். உறுதி கொடு. பேரியாழ் இருக்கும் இடத்திற்கு ஓலைச் சுருளோடு உன்னை அனுப்பி வைக்கிறேன். நீ செல்வதற்கு வேண்டிய வசதிகளோடு ஒரு நல்ல குதிரையும் உனக்குத் தருகிறேன். உனக்குக் குதிரைப் பயிற்சி தெரியும் என்று நினைக்கிறேன். அவசியமானால் துணைக்கு ஆளும் அனுப்புகிறேன். இத்தனையும் நீ உறுதி கொடுப்பதைப் பொறுத்திருக்கிறது. என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் தலைவன்.

சித்திராங்கன் அந்த நிர்வாக அறையின் உத்தரத்தைப் பார்த்தவாறு என்ன பதில் சொல்வதென்று ஒரு கணம் யோசித்தான். (தொடரும்)



எட்டாம் அத்தியாயம்

குங்கும மாளிகை

உத்தரத்தைப் பார்த்தவாறு யோசனை செய்து கொண்டிருந்த சித்திராங்கன் விடுதித் தலைவனிடம் அவன் கேட்டபடியே உறுதிமொழி கொடுத்தான். தலைவனும் தான் சொன்னபடியே மறுநாட் காலையில் குதிரையும் அறிமுகச் சுருளும் கொடுத்துச் சித்திராங்கனைக் கொடும்பாளூருக்கு அனுப்பி வைத்தான்.

சித்திராங்கன் கொடுத்த உறுதிமொழியும், அதைத் தொடர்ந்து விடுதியின் நிர்வாக அறையிலே நடந்த பேச்சு வார்த்தைகளும், மிக மிக இரகசியமாக இருந்தன. அவற்றை இரகசியமாகவே விட்டு விட்டுக் கோனாட்டு எல்லைக்கு வருகிறோம்.

கோனாடு—இன்று புதுக்கோட்டை என்று வழங்கும் மாவட்டத்தில் பாழடைந்து போய்ப் பரிதாபமாகக் காட்சி தரும் கொடும்பாளூர் என்ற சிற்றூர்தான் அந்தக் காலத்தில் கோனாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்தது. 'கொடும்பை' என்றும் 'இருக்குவேளூர்' என்றும் சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்கள் பெருமையோடு வர்ணிக்கிற அதே கொடும்பாளூர்தான்! எத்தனை பெரிய நகரமாகக் காட்சி தந்தது!

ஆமாம். மாபெரும் இந்திரலோகப் பட்டணமாக வனப்போடு காட்சி தரும் அந்தப் பிரும்மாண்டமான தலைநகரத்தை நோக்கிக் காற்று வேகத்தில் பறந்து வருகிறது அந்த வெள்ளைக் குதிரை. அதன் மேல் அமர்ந்து மிகவும் லாகவமாகக் குதிரையைச் செலுத்தி வரும் அந்த வீர வாலிபன் யார்? சந்தேகமென்ன? சித்திராங்கபூபதிதான்.

இதோ நகரத்தின் கோட்டை வாசலை நெருங்குகிறது குதிரை.



ஆனால் என்ன ஆச்சரியம்! காவலாளிகள் யாரும் அதைத் தடுத்து நிறுத்தக் காணோம்! அந்தக் குதிரையின் கொண்டையிலே செருகியிருக்கும் வெள்ளித் திருகுப்பூவைப் பார்த்ததும் அந்தக் காவலாளிகள் ஒதுங்கி நின்று மிக்க பணிவோடு வழி விடுகிறார்கள்! சித்திராங்க பூபதிக்கே அந்த அனுபவம் ஆச்சரியமாக இருந்தது.

சித்திராங்க பூபதி தலைநகரத்துக்குள்ளே நுழைந்தான். நுழைந்து வலது பக்கமாகத் திரும்பியதும், ஒரு விசாலமான அரச மரம் சூரிய வெளிச்சத்தில் கல கல என்று தங்க [illegible]களைக் கலகலத்துக் கொண்டு நின்றது. அதன் அடியில், இவனுடைய வரவை எதிர்நோக்கிக் கொண்டு ஒரு வீரன் வேறொரு சிவப்புக் குதிரையோடு நின்றான். ஏற்கனவே விடுதித் தலைவன் அரசமரத் தடியில் ஒரு வீரன் காத்திருப்பான் என்று சித்திராங்கனுக்குச் சொல்லியிருந்ததால், சித்திராங்கன் தன்னுடைய குதிரையை அங்கே நிறுத்தினான். மரத்தின் அடியில் காத்துக்கொண்டிருந்த அந்த வீரன் சித்திராங்கனை நோக்கி வந்தான். உடனே, சித்திராங்கன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான்.

" உங்களுடைய வெள்ளைக் குதிரையை என்னிடம் கொடுத்து விடுங்கள். இந்தச் சிவப்புக் குதிரையில் ஏறி இனி இந்த ராஜ வீதி வழியாகச் செல்லுங்கள். சென்று மேற்குப் பக்கமாகத் திரும்பியதும், ஒரு பெரிய மாளிகை தெரியும். அதன் மேல் மாடத்தில் குங்கும வர்ணத்தினால் சாயம் பூசியிருக்கும். அந்த மாளிகைக்கு முன்னால் குதிரையை நிறுத்திக் கொள்ளுங்கள். மற்றக் காரியங்கள் எல்லாம் சொல்லி வைத்தாற் போல் நடக்கும்!" என்றான் அந்த வீரன்.

" சரி " என்று சொல்லிச் சிவப்புக் குதிரையை வாங்கிக் கொள்ளும் போதே, சித்திராங்கனுக்குச் சந்தேகம் உதித்து விட்டது. 'விடுதித் தலைவன் நம்மிடம் சொன்ன செய்தியில் வெள்ளைக் குதிரையைக் கொடுத்து விட்டுச் சிவப்புக் குதிரையை வாங்கிக் கொள்ளும்படி கூறவில்லையே. இவன் ஏன்

இந்தக் குதிரை மாற்றுச் செய்கிருன்!' என்று யோசித்தவாறு, சந்தேகத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல், சிவப்புக் குதிரையின் மேல் ஏறி விர்" என்று சென்ருன் பூபதி.

கொடும்பாளூரின் ராஜ வீதி அபார மான அழகோடு காட்சி தந்தது. மாளிகைகள் விதம்விதமான வர்ணங்களிலே நின்றன. சங்குச் சிப்பிகளைச் சுண்ணும்பாக நீற்றி, அந்தச் சுண்ணும்பையே மாடங்களில் தீற்றி யிருந்தார்கள். அது, நிலவைக் கொண்டு பூசி விட்ட மாதிரி 'வெள்ளை வெளேர்' என்று இருந்தது! அந்த வெண்ணிற மான மாளிகைகளுக்குத் தங்க நிறத்திலே மேல் விதானம் அமைத்திருந்தார்கள். இன்னும் சில மாளிகைகள் நீலோத்பலம் பூத்தது போல் ஓரே நீல வர்ணத்தில் நின்றன. வேறு சில மாளிகைகள் மேனி முழுதும் பொன் முலாம் பூசி வனப்பான மஞ்சள் நிறத்தில் மின்னிக் கொண்டிருந்தன. அவற்றின் உயரத்தைப் பார்த்தால் வலம்புரித் தீவில் கலங்கரை விளக்கம் நின்றதல்லவா, அப்படி யிருந்தது ஒவ்வொரு மாளிகையும். சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும், சந்திரன் வளர்வதும் தேய்வதும், நட்சத்திரங்கள் மின்னுவதும் எல்லாம் வானத்தில் இல்லை, அந்த மாளிகைகளிலே தான் என்று சொல்லும் படியாக அத்தனை உயரத்தில் வானை அளாவி, சித்திராங்க பூபதியின் கண்முன்னே அந்த ராஜ வீதி எழுந்து நின்றது. வேகமாகச் செல்லுகிற குதிரையைச் சற்று இறுக்கிப் பிடித்து மெதுவாக ஓட்டிக் கொண்டே, அந்த மாளிகைகளைப் பார்த்து அவற்றின் அழகை அநுபவித்த வண்ணம் பூபதி சென்ருன்.

இதோ! மேற்குப் பக்கம் திரும்பியதும், வெள்ளையும், மஞ்சளும், நீலமுமாக நிற்கும் அந்த மாளிகை மாடங்களுக்கு மத்தியிலே ஒரு மாடம், குங்கும வர்ணத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. சித்திராங்கன் அதைப் பார்த்ததுமே தீர்மானித்து விட்டான் — இந்த மாளிகைதான் தான் செல்லவேண்டிய இடம் என்று! உடனே குதிரையை அந்த மாடத்திற்கு முன்பாக நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினுன். இறங்கும் போதே மாடத்தை நோக்கி மேலே பார்த்தான். அப்படியே ஒரு கணம் திகைத்துப் போய் விட்டான் பூபதி. சூரிய வெளிச்சத்தில், பட்டப் பகல் நேரத்தில், சந்திரோதயம் ஆனதுபோல, அந்த மாடத்தின் முகப்



பிலே எழிலான ஒரு நங்கையின் முகம் தெரிந்தது. அந்த முகத்தின் எழில் சூரிய வெளிச்சத்தையே பிரதிபலித்து ஒளி வீசிக் கொண்டிருந்தது! ஒரு கணந்தான் சித்திராங்கன் அந்த அழகுப் பிம்பத்தைப் பார்த்தான். அதற்குள் அந்த நங்கை, மாடத்தின் உம்பரிலிருந்து மின்னல் போல உள்ளே சென்று மறைந்து விட்டாள்!

குதிரையிலிருந்து இறங்கியபோதே சித்திராங்க பூபதிக்கு இப்படி ஒரு புதுமையான அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியை ஒரு வகையாகச் சமாளித்துக் கொண்டு, குதிரையை எங்கே நிறுத்தலாம் என்று சித்திராங்கன் யோசிப்பதற்குள், மாளிகையின் உள்ளே



யிருந்து ஒரு நடுத்தர வயது மனிதன்—பார்த்தால் ரதசாரதி போலத் தெரிந்தது — வெளியே வந்தான்.

"குதிரையை என்னிடம் கொடுத்து விட்டு, நீங்கள் உள்ளே போங்கள்!" என்ருன் அந்த மனிதன்.

சித்திராங்க பூபதி குதிரையின் பிடிமானக் கயிற்றை அந்த மனிதனிடம் கொடுத்து விட்டுக் குங்கும மாளிகைக்குள்ளே நுழைந்தான்.

குங்கும மாளிகையினுள் சித்திராங்கனுக்காக எதிர்பாராத சம்பவங்கள் எத்தனையோ காத்திருந்தன. உண்மையில் அவனுடைய பிற்கால வாழ்வில் நடக்கவிருந்த அத்தனை சம்பவங்களுக்கும் அந்தக் குங்கும மாளிகைதான் காரணமாக அமையப் போகிறது என்

பதை, ஒரளவாவது முன்கூட்டி யூ திருந்தால் அந்த மாளிகைக்குள்ளே அவன் நுழைந்திருப்பானோ எ னவோ! தன்னுடைய அருமை அன் யிடம் கொடுத்த வாக்குறுதிக பற்றி மாமல்லபுரத்து விடுதி இருந்தபோது, எத்தனை முறை திரு பத் திரும்ப யோசனை செய்தா அவன்! சித்தருடைய வரவின ஏற்பட்ட அதிர்ச்சியின் போது பிறகு மாமல்லபுரத்துப் பாறையி ஒரு குதிரை வீரன் தன்னை வே பார்த்தபோதும், பின்னர் சமண துறவி வந்து ஆரூடம் சொன் போதும், எத்தனை பக்தி சிரத் யோடு தந்தப் பேடகத்தின் உபதேச களை மனத்துக்குள்ளே உறுதிப் படு திக் கொண்டான் சித்திராங்கன் ஆனால் விடுதித் தலைவனிடம் இரகசி மாக ஓர் உடன்படிக்கை செய்ய போய், அதன் விபரீதம் இத்தனை தூரத்துக்கு அவனைச் சிக்கலிலே கொண்டு மாட்டி வைக்கும் என்ற அப்பொழுதெல்லாம் அவன் எதி பார்த்தானா? இல்லை. விடுதித் தலைவன் பூபதியிடம் சொன்ன ஒரு விஷயம் மட்டும் அவனுக்கு விளங்க வில்லை. ஆதிரையனைப் போய்ச் சித்தி ராங்கன் சந்திக்க வேண்டியதில்லை என்றும், விடுதித் தலைவனே அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொடுப் பதாகவும், அதன் பிறகு போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்றும் அவன் சொன்ஞன். அதுதான் பூப திக்கு எப்படியோ இருந்தது. ஆஞ லும், பாவம், அதைப் பற்றியுங்கூட விபரீதமாக அவன் சந்தேகிக்க அப் பொழுது இடமில்லை. இப்பொழுது குங்கும மாளிகையில் நடந்த சம்பவங் களோ படிப்படியாகச் சித்திராங்க பூபதிக்குச் சந்தேகத்தை வலுப்படுத் துவனவாக இருந்தன. என்ருலும் என்ன பயன்? மோசம் போகிறோம் என்று தெரிந்தும் மோசம் போகக் கூடிய நிலை ஏற்பட்டதே! இதையெல் லாம் பார்க்கும்போது, எதிர்காலம் ஒரு மர்மமாக இருப்பதில் எத்தனையோ சௌகரியம் இருக்கிறது என்றுகூடத் தோன்றுகிறதல்லவா! சித்திராங்க பூபதிக்கு இத்தனை எதிர்கால நிகழ்ச்சி களும் முன்னரே தெரிந்திருந்தால் அவன் அத்தனை உல்லாசத்தோடு அந்த

மாளிகைக்குள் அடியெடுத்து வைத் திருப்பானா? மாட்டான். அவன் அநு பவித்த அந்த அற்ப மன நிம்மதியுங் கூட அவனுக்கு அறவே கிட்டியிரா மல் அல்லவா போயிருக்கும்!

குங்கும மாளிகையின் தாழ்வாரத் தைக் கடந்து சென்றதும், பளிங்குக் கற்களைக் கொண்டு பதித்த ஒரு விசால மான அறை இருந்தது. அங்கே நவ ரத்தினங்கள் போல் மின்னுகிற பல இருக்கைகள், சாய் மானங்கள் போட்டிருந்தார்கள். பெரிய பிரபுக்கள் வந்து உட்கார வேண்டிய இடம். அதைத் தாண்டி உள்ளே சென்றால் ஒரு சிறிய கூடம். அதில் வளைவு வளை வாகச் சுற்றி ஏறும் ஒரு படிக்கட்டு இருந்தது.



சித்திராங்கன் அந்தப் படிக் கட்டை நெருங்கிய தும் மேலேயிருந்து யாரோ ஒரு கிழவர் கீழே இறங்கி வந்தார்.

"வாருங்கள் தம்பி! உங்கள் வரவுக்காகத் தான் இந்த மாளிகையே காத்திருக்கிறது. மேலே செல்லுங் கள். யாரும்இல்லை. உங்களுக்கு என்று ஒரு தனி அறை இருக்கிறது. பணி யாளர்கள் காவல் நிற்கிறார்கள். உங்களுடைய சொந்த மாளிகையாகவே இதைப் பாவித்துக் கொள்ளலாம். மேலே போங்கள்!"

இவ்வாறு சொல்லிவிட்டு அந்தக் கிழவர் கீழே இறங்கி மாளிகையின் உள் அறைகளுக்குப் போய் விட்டார்.

சித்திராங்கன் படிக்கட்டில் ஏறிய வாறு யோசனையில் ஆழ்ந்தான்.

"பேரியாழின்மேல் உள்ள அளவு மீறிய பைத்தியத்தினால் மதியை இழந்து விட்டேனே! விடுதித் தலைவ னிடம் அவசரப்பட்டு உறுதிமொழி கொடுத்து விட்டேனே! ஒரு நாள் இரண்டு நாள் யோசித்துச் சொல்வ தாகக் கூறியிருக்கலாமே! அப்பப்பா! அந்தத் தலைவன் யோசிப்பதற்கு எங்கே நமக்கு இடம் கொடுத்தான். எதிரே உட்கார்ந்து தன்னோடு எத்தனை சமத்காரமாகப் பேசி வேறு எவ்விதமான பதிலும் சொல்ல முடி யாமல் அல்லவா செய்து விட்டான்!"

இப்படி யோசித் தவாறு படிக்கட் டின் அற்றத்துக்கு வந்ததும், நாலைந்து பணியாளர்கள் தலை மேல் இரண்டு கைகளையும் கூப் பிக்கொண்டு சித்தி ராங்கனை எதிர் கொண்டு வரவேற் றார்கள். ஒருவன் பாதத்தைத் தொட்டு ரட்சை களைக் கழற்றி னான். இன்னொரு வன் அவசரம் அவசரமாக ஓடிச் சென்று, உட்காரு வதற்கு உயரமான திண்டு இருக் கையை எடுத்து வந்தான். இன் னொருவன் பூபதி யின் கால்களைப் பிடித்து விடுவ தற்கு ஆயத்தமா னான். மற்றொரு வன் சித்திராங்க னின் அங்கியைக் கழற்றி விட்டு, ஆசுவாசப்படுத்த விசிறியும் கையு மாக நின்றான்.

சித்திராங்க பூபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது! மாமல்லபுரத்துக்கு வந்து சேர்ந்ததும் தமிழ் நாட்டு மக்களின் விருந்துபசரிப்பைப் பற்றி மெய்ம் மறந்து வியந்தான் அல்லவா! இந்த உபசாரம் அதை யெல்லாம் தூக்கியடிப்பதாக அல்லவா இருக் கிறது! என்றாலும் இந்த அபரிமித

மான உபசரிப்பின் நடுவே ஏதோ ஒன்று பூபதியை அச்சப்படுத்தியது. மாமல்லபுரத்திலே எல்லாருடைய உபசரிப்பும், மரியாதைகளும் இயல்போடு இருந்தன. ஆனால், இங்கே எல்லாம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதுவே பூபதிக்குப் பயமாக இருந்தது!

ஆமாம்; பூபதி கொஞ்சம் நிதானத்தோடேயே அறைக்குள்ளே நுழைந்தான். ஆனாலும் பயனில்லை. அந்த நிதானம் அதிக நேரம் இருக்கவில்லை. கொஞ்ச நேரத்தில் அங்கே அவனுக்குச் செய்யப்பட்ட மரியாதைகளும் உபசரிப்புக்களும் சேர்ந்து அவனை மெய்ம் மறக்கச் செய்துவிட்டன. எத்தனையோ காத தூரம் கடலைத் தாண்டி வந்து, அன்னியர்களின் மத்தியிலே எப்படிப் பழகப் போகிறோம் என்று அஞ்சிக் கொண்டிருந்த ஒருவனுக்கு, இந்த எதிர்பாராத விருந்துபசரிப்புக்கள் கண்களை நன்ருக மயக்கி விட்டதில் ஆச்சரியமில்லை!

பூபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறை விசாலமானது. அது மட்டுமில்லை. அதற்குப் பெயரே படிம விலாசம்! அதாவது நான்கு சுவர்களிலும் நிழல் விழுகிற பளபளப்பான தாமரத் தகடுகளைப் பதித்து, அவை சூரிய கிரணத்தையும், விளக்குகளின் ஒளியையும் பிரதிபலித்து மின்னக் கூடியவிதத்தில் அமைந்திருந்தது அந்த அறை! மேலே உத்தரத்திலிருந்து விதம் விதமான அலங்கார விளக்குகள், விசித்திர வடிவங்களில், சித்திர வேலைப் பாடுகளுடன், சிறு சிறு பதுமைகளோடு தொங்கிக் கொண்டிருந்தன. உட்காருவதற்கு, சாய்வதற்கு, ஒருச் சாய்வதற்கு, படுப்பதற்கு, உறங்குவதற்கு என்று விதம் விதமான ஆசனங்கள், பட்டு மெத்தைகளோடு கண்ணைப் பறித்தன. மனத்தைச் சொக்க வைத்தன!



லேயே சென்றிருந்த பெரியவர் ம
படியும் மேலே வந்தார்.

"இந்த அறை உங்களுடைய அறை, மாமல்லபுரத்து விடுதித் தலை தங்களைப் பற்றி எல்லா விவரமு சொல்லி யனுப்பி யிருக்கிருர்—"

இப்படிக் கிழவர் பேச ஆரம்பித் பிறகுதான், சித்திராங்க பூபதிக்கு, தான் கொண்டு வந்திருந்த அறிமு நிருபம், அந்த ஓலைச் சுருள், ஞாபக துக்கு வந்தது. பிரமாதமான உ சரிப்புக்களுக்கு மத்தியில் அத்தலை தாரம் தன்னை மறந்திருந்தான் அவன் இதுவரை!

"ஓ! மறந்தே போய் விட்டேன் இந்தாருங்கள்; விடுதித் தலைவ கொடுத்தனுப்பிய எழுத்து" என்று அங்கியின் செருகுக்குள்ளே பொதிந்து வைத்திருந்த சுருளை எடுத்துக் கொடுத் தான் பூபதி.


"இதைப் படித்துப் பார்த்துத்தான் உங்களைத் தெரிந்து கொள்ள வேண் டுமா என்ன! பார்த் தாலே ராஜ களை அப் படியே சொட்டுகிறதே முகத்தில்! தவிர, நேற்று இரவு வேறு ஒரு தூதுவனிடமும் விடுதியி லிருந்து செய்தி வந்தது. தெரிந்து கொண்டோம்!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே பெரியவர் அந்த ஓலைச் சுருளை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு, மறுபடியும் பேச்சைத்தொடர்ந்தார்.

"இந்த ஓலைச் சுருளை இதற்கு உரிய இடத்தில் சேர்ப்பித்து விடுகிறேன். கவலைப்படாதீர்கள். நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்ல வந்தது என்னவென்ருல், இந்த அறை உங்களுக்கு என்றே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இங்கேயே சற்றும் தயக்கமோ கூச்சமோ இல்லாமல் தங்கியிருக்கலாம். மாலை நேரங்களில் பல பிரபுக்களும், அரசப் பிரதானிகளும், ராஜகுமாரர்களும் இந்தக் குங்கும

மாளிகைக்கு வருவார்கள். உங்களுக்குப் பிடித்தமாக இருந்தால் நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொள்ளலாம். இல்லையென்றால், இங்கேயே இந்த அறையிலேயே நீங்கள் தனியாக இருந்து கொள்ளலாம். யாரும் உங்களை வந்து தொந்தரவு செய்ய மாட்டார்கள்!''

இப்படிச் சொல்லி விட்டுக் கிழவர் மறுபடியும் படிகளின் வழியாகக் கீழே இறங்கிப் போய் விட்டார், ஓலைச் சுருளோடு!



சித்திராங்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. உபசரிப்பையும், பணியாளர்கள் நடந்து கொள்ளுகிற முறையையும், இந்தக் கிழவரின் பேச்சையும் பார்த்தால் அதிகமாகச் சந்தேகிப்பதற்கு இடம் இல்லை. ஆனால் எதற்காக இத்தனை உபசரணையும் செய்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. சந்தேகத்துக்கு இடம் தருகிறது. ஒருவேளை விடுதித் தலைவன் அத்தனை தூரம் இவர்களுக்குச் சொல்லி யனுப்பி யிருக்கிறானோ என்னவோ! எதற்காக எடுத்த எடுப்பிலேயே இவர்களைச் சந்தேகிக்க வேண்டும்? ஆதிரையனைப் பார்க்க வேண்டியதில்லை என்று சொன்னது ஒன்றுதானே சந்தேகத்துக்கு இடம் தருகிறது! அதிலுமே விபரீதம் என்ன இருக்கக்கூடும்? விடுதித் தலைவனும் வேளிர் குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே? அவனே ஆதிரையனுக்கு நெருங்கிய உறவினன்தானே? தேச யாத்திரை போய்விட்டு இப்பொழுது தானே அந்த வாலிபன் ஊர் திரும்பி யிருக்கிறான், நாட்டின் குழப்பங்கள் எல்லாம் அவனுக்கு இன்னும் சரியாகத் தெரியாதே, என்று நினைத்து இப்பொழுது அயல் தேசத்து யாத்திரீகர்கள் யாரும் ஆதிரையனைச் சந்திக்கக் கூடாதென்று இந்த அரசாங்கத்தில் உத்தரவு போட்டிருக்கிறார்களோ என்னவோ? அதை உத்தேசித்தே விடுதித் தலைவன் அப்படிச் சொல்லியிருக்கக் கூடும். நகரின் எல்லையில் வெள்ளைக் குதிரையை மாற்றிச் சிவப்புக் குதிரையைக் கொடுக்க ஏற்பாடு செய்ததற்கும், இப்படித்தான் ஏதாவது அரசாங்க முறையில் ஒரு காரணம் இருக்கக் கூடும். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவானேன்?

இப்படி நினைத்துச் சித்திராங்க பூபதி அந்த அறையையும், அதற்கு வெளியே யிருந்த மாடத்தையும், அதன் சுற்றுப் புறங்களையும் ஆராய்ந்து பார்க்கலாம் என்று கருதி உள்ளே நடந்தான்.

''தாங்கள் குளிக்கலாமே?'' என்றான் ஒரு பணியாள்.

''உடம்பு அலுப்பாக இருக்குமே! வெந்நீர் எடுத்து வைக்கட்டுமா?'' என்றான் இன்னொரு பணியாள்.

''இங்கேயே பொங்கு புனல் இருக்கிறது. அதில் குளிப்பதானாலும் குளிக்கலாம்'' என்றான் மூன்றாமவன்.

சித்திராங்கனுக்கு இந்தப் பணியாளர்களைச் சற்று நேரம் வெளியே அனுப்பி விட்டுத் தனியாக அந்த இடத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று. ஒரு கணம் யோசித்தான். அடுத்த கணம் கம்பீரமான குரலில், நான்கு பணியாளர்களுக்கும் நான்கு வெவ்வேறு கட்டளைகள் கொடுத்தான்.

''வெந்நீரில் குளிக்கிறேன்!'' என்றான் ஒருவனிடம்.

''எழுதுவதற்கு ஓலை கொண்டுவா'' என்றான் இன்னொருவனிடம்.

''எழுத்தாணி ஒன்று கொண்டு வருகிறாயா?'' என்றான் இன்னொருவனிடம். நான்காவது பணியாளைப் பார்த்து, ''நான் கூப்பிடுகிற வரை இந்த அறைக்குள்ளே யாரையும் விடாதே. நீ வெளியே நின்று கொள்!'' என்றான்.

அடுத்தகணம் சித்திராங்கன் அந்தப் படிம விலாசத்திற்குள்ளே ஒருதரம் வளைய வந்தான். வரும் போதே

கல்கி நேயர்களுக்கு

வணக்கம். பதினெட்டு மாதங்களுக்கு முன்பு "கல்கி" பத்திரிகையின் ஆசிரியர் பதவியை நான் ஒப்புக் கொண்டபோது, அகில இந்திய ரேடியோவிலும் உத்தியோகம் பார்த்து வந்ததால், அந்த ஸ்தாபனத்தின் அநுமதியோடு இந்தப் பொறுப்பையும் சேர்த்து ஏற்றுக் கொண்டேன். கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இரண்டு உத்தியோகங்களையும் சேர்த்துப் பார்த்து வந்ததில் என் உடல் நிலை ஆரோக்கியம் இழந்து விட்டது. இது காரணமாக இப்பொழுது "கல்கி" ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன். ஆயினும் என்னுடைய 'கடல் கண்ட கனவு' என்னும் கதையைத் தொடர்ந்து எழுத ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

சோமு

கிழக்குப் பக்கம் ஒரு திறப்பு இருப்பது தெரிந்தது. அந்தத் திறப்பும் தாமரத் தகட்டினால் பொருத்தப் பட்டுப் பளபள என்று மின்னியது. சித்திராங்கன் அந்தத் தகட்டை நெருங்கிப் பார்த்தான். அது ஒரு கதவு. அந்தக் கதவைக் கையினால் தள்ளினான். திறந்து கொண்டது. என்ன ஆச்சரியம்! உள்ளே ஒரே நீளமான பெரிய அறை தெரிந்தது. திண்டுகளும் தலையணைகளுமாகக் காட்சி தந்தது. சுவர்களில் எல்லாம் வர்ணாலங்காரமான ஓவியங்கள்.

சித்திராங்க பூபதி அந்தச் சித்திர சாலைக்குள்ளே அடியெடுத்து வைத்தானோ இல்லையோ, அப்படியே மெய் சிலிர்த்து நின்று விட்டான். அலங்காரமான ஒரு பெரிய பீடத்தில், அழகான பட்டு அணைகளுக்கு மேலே, மகோன்னதமான ஒரு வீணை வைக்கப்பட்டிருந்தது. இங்கிருந்து பார்த்தால் வீணையின் குடம் நன்றாகத் தெரிந்தது. வீணை தண்டத்துக்கு மேல் ஏகப்பட்ட தந்திகள் முறுக்கி ஓடிக் கொண்டிருந்தன. ஒன்று, இரண்டு என்று எண்ண முடியாதபடி அத்தனை தந்திகள் அந்த வீணையிலே ஓடின!

சித்திராங்க பூபதிக்கு மெய் சிலிர்த்ததோடு இல்லை. "ஆகா! பேரியாழ் என்று சொல்லப்படுகிற அந்த ஒப்பற்ற மாணிக்கம் இதுதானோ?" என்று எண்ணியதும், உள்ளத்தில் பேரின்பப் பரவசமே உண்டாயிற்று. அந்தப் பரவசத்தோடு அடுத்த அடி யெடுத்து வைத்தான். உடனே தீக்கங்கை மிதித்தவனைப் போல உடம்பை உதறிக் கொண்டு நின்றான். காரணம் அந்தச் சித்திரசாலையின் மூலையில் தெற்குச் சுவரின் கோடியிலே சாத்தி வைக்கப் பட்டிருந்த அந்தப் பிரம்புதான்! ஆகா! மாமல்லபுரத்திலே ஓசை செய்த அதே மாயப் பிரம்பு அல்லவா இது! பூபதி கண்களை இமைக்காமல் கூர்ந்து விழித்தான். சந்தேகமில்லை. அது சித்தரின் பிரம்புதான்! (தொடரும்)

வட்ட மேஜை

அன்புமிக்க சதாசிவம் அவர்களுக்கு,

கருணைக் கடல் கௌதம புத்தரை மேலட்டையில் பெருமையுடன் தாங்கி வந்த 'கல்கி' இன்று காலையில் கிடைத்தது.

மேலட்டைப் படத்தை உடனே நலுங்காமல் எடுத்து பிரேம் போட்டு சுவாமி படங்களுக்குப் பக்கத்தில் மாட்டி விட்டேன்.

இந்த இதழில் வெளிவந்திருக்கும் கி. ரா. கோபாலன் எழுதியுள்ள "மகா ஜோதி" என்ற கதையைப் படித்தேன்.

சரித்திர உண்மை சிறிது கூட மாறாமல் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தி ஒரு உயர்தரக் கற்பனைக் கதையையே நமக்குத் தந்திருக்கிறார். முற்றிலும் புதிய முறை! அபார கற்பனை. அதை வர்ணிப்பதற்கு எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

கி. ரா. கோபாலன் ஏற்கனவே 'ராணி மாதவி' 'ராஜாளி மடம்' என்ற தொடர் கதைகளும், 'பட்டாக்கத்தி ஆறுமுகம்' போன்ற பல சிறுகதைகளும் எழுதிப் புகழ்பெற்றவர்.

அவர் 'கல்கி' வாசகர்களுக்கு நன்கு தெரிந்தவர்தான். மகாஜோதி எனகிற இந்த உயர்ந்த சரித்திரக் கதையின் மூலம் அவர் வாசகர்களின் மனத்தில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார் என்றே கூறுகிறேன்.

வேலூர் கே. வி. ராமதுரை
25—5—56 'மித்ரா'

[திரு கி. ரா. கோபாலன் எழுதும் சமூகத் தொடர் கதை 'அபலை அஞ்சுகம்' ஜூலை மாதம் 8-ந் தேதி 'கல்கி' இதழில் ஆரம்பமாகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்]

கடல் கண்ட கனவு

சோமு

ஒன்பதாம் அத்தியாயம்

சுரங்கப் பாதை

சரித்திரக் கல்வெட்டுக்களில் "பல்லவேந்திர புரி" என்ற கம்பீரமான பெயரில் அழைக்கப் படும் காஞ்சிமா நகரத்தின் வீதியிலே, நிசப்தம் குடிகொண்டிருந்தது. அப்பொழுது இரவு மூன்று ஜாமத்துக்கு மேல் இருக்கும். அமாவாசை இருள் ஒரே சோகத் திட்டுக்களாகக் கப்பிப் படர்ந்திருந்தது. என்றாலும் வீதியின் நந்தா விளக்குகள் அங்கங்கே, துன்பத்துக்கு மத்தியில் சுடர் விடும் நல்லெண்ணங்களைப் போலச் சுடர் வீசிக் கொண்டிருந்தன. காற்று கோபாவேசமாக வீசியடித்த சமயத்தி லெல்லாம், அந்த நந்தா விளக்குகளின் சுடர்கள் கொஞ்சம் காற்றோடு சேர்ந்து ஆடிக்கொண்டே, தங்கள் ஜோதியை நிலை நாட்டிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சியே காஞ்சிமா நகரின் அன்றைய அரசியல் நிலையை எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது.

கிழக்கு ராஜ வீதியிலே உயரமாக நின்று எரிந்து கொண்டிருக்கும் ஒரு நந்தா விளக்குக்கு அருகில், நமக்குத் தெரிந்த ஓர் உருவம் காணப்படுகிறது. நந்தா விளக்கை நெருங்கியதும் அந்த



உருவம் தனது முகத்தை நன்ருக மூடி மறைத்துக்கொண்டுவிட்டதால், முக அடையாளம் தெரிந்தும்தெரியாமலும் இருந்தபோதிலும், உடல் அமைப்பையும் நடையையும் பார்த்தால் மாமல்லபுரத்திலே இதற்கு முன்பு நாம் பார்த்த ஒரு மனிதன்தான் அது என்று ஓரளவு யூகிக்க முடிகிறது.

நந்தா விளக்குக்கு அருகில் வந்து ஏதோ கையினுல் ஜாடை காட்டிவிட்டு, மறுபடியும் அந்த உருவம் நீளமான ராஜ வீதியிலே நடக்கிறது. இப்பொழுது அதைப் பின் தொடர்ந்து இன்னொரு உருவம் செல்கிறது. என்ன ஆச்சரியம்! அதுவும் நமக்குத் தெரிந்த உருவந்தான்! அன்று சித்திராங்கன் மாமல்லபுரத்து விடுதியிலே உட்கார்ந்து பலமாகச் சிந்தனை செய்துகொண்டிருந்தபோது, வாசலிலேயே நின்று ஆரூடம் சொன்னுரே அந்தச்



சமணத் துறவிதான் அவர்! இப்பொழுது கையிலே மயிற் பீலியையும் சுவடிக் கட்டுகளையும் காணும்! வேறு ஏதோ ஒரு சிறு மூட்டை இருக்கிறது.

இராஜ வீதியின் எல்லையை அடைந்ததும் இரண்டு உருவங்களும் நமது பார்வையிலிருந்து எங்கோ மறைந்துவிடுகின்றன. மீண்டும் அந்த உருவங்கள் மறுபடி தோன்றுவது, காஞ்சிமா நகரின் மாபெரும் கோட்டையையடுத்த அகழிக்கு வெளியே, பெருஞ்சாலையின் திருப்பத்திலேதான்!

காஞ்சிமா நகரின் கோட்டைக்கு வெளியே, அகழியைச் சுற்றிக்கொண்டு சென்ற சாலையின் பிரிவிலே இப்பொழுது அந்த இரண்டு உருவங்களும் ஒன்று கூடுகின்றன. ஒன்று கூடி, இரண்டு உருவங்களும் பூதாகாரமான மருத மரங்களும் அரச மரங்களும் வரிசை வரிசையாக நின்ற அந்தச் சாலையோடு நடக்கின்றன.

காஞ்சிமா நகரத்திலிருந்து பிரிந்து செல்லும் வடக்குச் சாலையில், இருள் திட்டுத் திட்டாக இறங்கி அமர்ந்துகொண்டிருக்கிறது! பிசாசுகளைப் போலக் கிளைக் கைகளை ஆட்டி ஆட்டிக் காற்றிலே சலசலக்கும்பெரிய பெரிய மரங்களின் மேனியிலும் தலையிலும், இருளின் திட்டு அப்படி அப்படியே உட்கார்ந்து கொண்டு, பயங்கரமாகக் காட்சி தருகிறது. அந்தப் பயங்கரமான சாலையிலே இரண்டு உருவங்களும் அரை நாழிகை தூரம் நடந்து சென்றதும், இதோ ஒரு பெரிய விசாலமான ஆலமரம் தெரிகிறது. இராவணனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் என்று சொல்வது போல, விழுதும் கவருமாக நிற்கிற அந்த ஆலமரத்தினடியிலே, இரண்டு கறுப்புக் குதிரைகள் கட்டப்பட்டு நிற்கின்றன. அந்தக் கருங் குதிரைகளை நோக்கிச் செல்லும் இரண்டு மனித உருவங்களும், மௌனமாக நடந்து போய்க் குதிரைகளை வேர்க் கட்டிலிருந்து அவிழ்த்துக் கொண்டு, ஒரு மின் வெட்டிலே தாவி ஏறிக் காற்ருகப் பறந்து செல்கின்றன.

இந்த மனித உருவங்கள் ஆல மரத்தினடியிலிருந்து மறைந்த சற்று நேரத்திற்கெல்லாம், எங்கிருந்தோ புதிதாக இன்னெரு மனித உருவம் தோன்றுகிறது! ஆஜானுபாகு என்றும் வீர தீரப் பிரதாபன் என்றும் சொல்கிருர்களே, அப்படி யிருக்கிறது அந்த உருவத்தின் தோற்றம். இதுவரை அந்த மனித உருவம் ஏதோ ஒரு மரத்தில் ஏறிப் பதுங்கி யிருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனென்ருல் அந்த மனிதன் அங்கு வந்ததற்கு அடையாளமாகக் குதிரையோ அல்லது ரதமோ அல்லது வண்டியோ ஏதும் காணும். நடந்து வந்த களைப்புக்கூட இல்லை அந்த மனிதனுடைய தோற்றத்திலே!

மறைந்து சென்ற இரண்டு உருவங்களும் எந்தத் திசையிலே போயினவோ அந்தத் திசையையே பார்த்துக் கொண்டு, இந்த மூன்ருவது மனித உருவம் திடீரென்று வாயினுல் ஒரு அடையாள ஓசையை ஊதிக் கூவிற்று. அவ்வளவுதான்

அந்த ஓசை அடங்கி நின்ற சில வினாடிகளுக்குள், எங்கோ வானத்திலிருந்து குதித்து வந்தாற் போல ஐந்து குதிரைகளும் நான்கு வீரர்களும் 'மட மட' என்று அந்த ஆலமரத்தடியில் வந்து நிற்கக் காண்கிறோம். மறுகணம் ஆஜானுபாகுவான அவ்வீரர் ஐந்து குதிரைகளில் நடுநாயகமாக நின்ற வெள்ளைக் குதிரைக்கு ஒரு சொடக்குக் கொடுத்துக் கொண்டே தாவி ஏறி உட்கார்ந்தார். 'மட மட' என்று குளம்புகளின் ஓசை கேட்டது. ஐந்து குதிரைகளும் ஐந்து மின்னல்களைப் போல் சரேல் என்று பாய்ந்து, அந்தப் பெருஞ் சாலையிலே சாடிப் பறந்தன!

ஆலமரத்தினடியிலே மீண்டும் நிசப்தம் குடிகொண்டது. எங்கோ ஒரு கிளையிலிருந்து கூப்பிடும் ஆந்தையின் குரல் சோகக் குறியை உதறியது. மறு விநாடி அதன் குரலும் அடைத்துக் கொண்டது. மறுபடியும் அந்தப் பயங்கரமான மரண அமைதியிலே சாலை நித்திரை செய்தது!

அதே இரவு கொடும்பாளூரிலும் ஒரு பயங்கரமான சம்பவம் நடந்து கொண்டிருந்தது!

குங்கும மாளிகையிலே இருந்த சித்திர சாலைக்குள்ளே நுழைந்தான் அல்லவா பூபதி? பேரியாழ் கையெட்டுகிற தொலைக்கு வந்து விட்டது என்று அவன் பரவசப்பட்ட போது, சித்தரின் பிரம்பைக் கண்டு ஒரு விநாடி மூச்சடைத்துப் போய் நின்றான் அல்லவா? அப்படி நின்றவன் மேலே அந்த அறைக்குள்ளே நடந்து போகலாம் என்று முயன்ற தருணத்தில், "ஐயா! ஐயா!" என்று வெகு அவசரமாகப் பணியாளன் அறைக்கு வெளியே கூப்பிடுவதுகேட்டுப் பதறிப் போய்ப் படிமவிலாசத்துக்கு வந்தான்.

"ஐயா! நீங்கள் உடனே குளிக்கும் இடத்துக்கு வந்து, குளிப்பை முடித்து விட்டு வாருங்கள். சற்று நேரத்தில் இங்கே யாரோ முக்கியமான மனிதர்கள் உங்களைப் பார்க்க வருகிறார்களாம்!" என்றான்.

"இதேதடா வம்பாக இருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டே, சித்திராங்க பூபதி அவசரமாக வந்து குளிப்பதற்காகச் சென்றான்.

அவன் திரும்பி வந்து அறைய நுழைவதற்குள்ளே அறுசுவை உணவு சித்தமாக இருந்தது. சூழ்நிலை இருந்த இருப்பைப் பார்த்தால், அந்த உணவைச் சாப்பிடுவதற்குக் கூட அவனுக்குத் தயக்கமாக இருந்தது. புலவரையாவையும் அவர் சொன்ன பதிகத்தையும் மனத்தில் இருத்திக் கொண்டு வேகமாகச் சாப்பிட்டான். சாப்பிட்டு விட்டுப் பணியாளர்கள் அனைவரையும் கீழே அனுப்பினான். முன்போல அறைக்குக் காவலாகக் கூட ஒருவனையும் நிறுத்திக் கொள்ளவில்லை.

"யாராவது என்னைப் பார்க்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொன்னால் மட்டும் கூப்பிடு. மற்றப்படி தொல்லை கொடுக்காதே. பிரயாண அலுப்பினால் சோர்ந்து போய்ப் படுத்திருப்பதாகச் சொல்லிவிடு!" என்று அனுப்பி



விட்டு, மறுபடியும் படிம விலாசத்துக்குள்ளே இருந்த வாசல் வழியாகச் சித்திரசாலைக்குள்ளே நுழைந்தான் பூபதி.

மீண்டும் சித்திராங்க பூபதி சித்திர சாலைக்குள்ளே பேராச்சரியத்தில் விழுந்து மூச்சடைத்து நின்றான். சற்று முன்பு அவனுக்கு முன்னால் காட்சி தந்த அந்த வீணையை இப்பொழுது அங்கே காணோம்! தெற்கு மூலையில் சுவரிலே சாத்தி வைக்கப்பட்டிருந்த சித்தரின் பிரம்பும் இப்பொழுது அங்கு இல்லை!


"தெய்வமே! இது என்ன என் தலை சுற்றுகிறதே!" என்று வாய் விட்டுச் சொல்லி முடிப்பதற்குள், யாரோ நாலைந்து முரடர்கள் எங்கோ ஒரு வாசல் வழியாகச் சித்திர சாலைக்குள் பாய்ந்து வந்து, அவனைப் பற்றினார்கள். அவனுடைய கண்கள் இரண்டையும் ஒரு துணியினால் வரிந்து கட்டினார்கள். அடுத்த வினாடி அவனுடைய இரண்டு

கால்களும் கட்டப்பட்டன. மறுகணம் அவனுடைய இரண்டு கைகளும்!

சித்திராங்க பூபதி பதறிப் போய்க் கூக்குரலிட முயன்றான். அப்பொழுது ஒரு முரட்டு இரும்புக் கை அவனுடைய வாயைப் பொத்திற்று.

"தூக்குங்கள்!" என்று அதிகார தோரணையிலே ஒரு குரல் கேட்டது. இந்தக் குரல் இதற்குமுன்பு எங்கோ கேட்ட குரல் போல இருந்தது பூபதிக்கு. யாராக இருக்கக் கூடும் என்று யோசிப்பதற்குள், சித்திராங்க பூபதி செந்தூக்காகத் தூக்கப்பட்டான். கையும் காலும் அசைக்க முடியாதபடி கட்டப்பட்டிருந்த சித்திராங்கன், அந்த முரடர்களால் சித்திர சாலையின் பின் வாசல் வழியாக வெளியே தூக்கிச் செல்லப்பட்டான். அறையின் கதவுகள் மீண்டும் சாத்திக் கொண்டன.

எதிர்பாராது நடந்த இந்த விபரீத நிகழ்ச்சியினால் அதிர்ச்சி ஏற்பட்டு, சித்திராங்க பூபதிக்கு மயக்கம் உண்டாகி விட்டது. அவன் மயக்கம் போட்டுக் கீழே விழவில்லை. ஏனென்றால் அவனை நாலைந்து பேராகச் சேர்ந்து தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். எனவே, மௌனமாக அவர்களின் பிடியிலேயேகிறங்கி நினைவு இழந்து, வெறும் மரக்கட்டையைப் போலானான் சித்திராங்கன்.



மரக்கட்டையைப் போலவே அந்த மனிதர்களும் முரட்டுத்தனமாக அவனைக் கையாண்டார்கள். இடையிடையே அவனுக்கு நினைவு வந்து விட்டதா என்று பார்ப்பதற்காக அவனுடைய கையைக் கிள்ளினார்கள். சப்தம் இல்லை. மறுபடியும் அலட்சியமாக அவனைத் தூக்கிக் கொண்டே மேலே நடந்தார்கள் அந்த முரடர்கள்.

எத்தனை நாழிகை நேரம், அல்லது எத்தனை காத தூரம் இப்படித் தூக்கிச் சென்றார்களோ தெரியாது. சித்திராங்க பூபதிக்கு மீண்டும் நினைவு வந்தபோது ஏதோ ஒரு வனப் பிரதேசத்திலே இருப்பது போலத் தெரிந்தது. கல்லால் ஆகிய ஒரு கட்டிலில் அவன் படுத்திருந்தான். சுற்றி வர மரமும் செடியும் கொடியும் புதருமாக அடர்ந்திருந்தன.

"இன்னும் மயக்கத்திலேதான் இருக்கிறோமா! இது என்ன! கனவு காண்கிறோமா? கொடும்பாளூரில் குங்கும மாளிகையிலே அல்லவா நாம் இருந்தோம். அப்பொழுது யாரோ வந்து நம்மைத் தாக்கினார்களே! அதன் பிறகு ஏற்பட்ட மயக்கமா இது! மயக்கம் என்றால், இது மயக்கமா என்கிற கேள்வியே மனத்துக்கு உண்டாகாதே! அப்படியானால், எங்கே இருக்கிறோம் நாம்? ஒரே வனாந்தரமாக இருக்கிறதே!"

இவ்வாறு எண்ணிக் கையையும் காலையும் அசைத்துப் பார்த்தான். அசைக்க முடிந்தது. கட்டுக்களை அவிழ்த்து விட்டார்கள் போலிருக்கிறது! சித்திராங்கன் எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். தூரத்தில் அந்த அடர்த்தியான மரங்களுக்கு மத்தியிலே ஒரு சிறிய கோவில் தெரிந்தது. எங்கோ ஒரு சிற்றோடை மலைப் பாதைக்குமேலே, தத்தித் தத்தி ஓடிக் கொண்டிருந்த ஓசை கேட்டது. தூரத்தில் சிறு சிறு முயல் குட்டிகள் ஏதோ ஓசையைக் கேட்டுப் பயந்தும் துள்ளியும் குதித்தோடிக் கொண்டிருந்தன. மலைப்பாங்கான பிரதேசம் என்றும், அது ஒரு வனதேவதையின் கோவில் என்றும் பூபதி தெரிந்து கொண்டான். மெதுவாக எழுந்து அந்தக் கோவிலை நோக்கி நடக்கலாம்



என்று முயற்சிப்பதற்குள், பின்னுவிருந்து யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது! திரும்பிப் பார்த்தான். மாமல்லபுரத்து விடுதித் தலைவன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன தம்பி! விருந்து மரியாதை மிகவும் பலமாகப் போய் விட்டது போலிருக்கிறது. பாவம்! அந்த முட்டாள்கள் இப்படிச் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்றான் அவன், சிரித்துக்கொண்டே! அவனுடைய முகக் குறிப்பைப் பார்த்தால், அந்தச் சிரிப்பில் சித்திராங்கனும் சேர்ந்துகொண்டு அவனும் சிரிக்க வேண்டும் என்று விடுதித் தலைவன் எதிர்பார்ப்பது போலத் தோன்றியது!

சித்திராங்கனுக்குச் சிரிப்பு வரவில்லை. திரு திரு என்று விழித்தான். அந்த விழிப்பில் ஒரு ராஜகுமாரனுடைய சினமும் கலந்திருந்தது!



"என்ன வலம்புரித் தீவின் இளவரசே! என்பேரில் கோபம் வருகிறது போலும்! தயை செய்து சினம் கொள்ளற்க!" என்றான் விடுதித் தலைவன். இப்பொழுதும் சிரித்துக் கொண்டேதான் பேசினான் அவன்!

"தம்பி! உண்மையாகவே சொல்கிறேன். என்னை மன்னித்து விடு. ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது!" என்றான் அவன்.

"சிறிய தவறா? பெரிய தவறு என்றால் உயிர் போகவேண்டும்போல் இருக்கிறது. அப்படித்தானா உங்கள் நாட்டில்?" என்று கேட்டான் சித்திராங்கன். அவனுடைய குரலில் எத்தனையோ பல நூற்றாண்டுகளாக வழி வழியாக வந்த ராஜப் பெருமிதம் ஒலித்தது.

"அப்படியில்லை, தம்பி! ஒரு சிறு ஆள் மாறாட்டத்தினால் இந்தத் தொல்லை நேர்ந்து விட்டது. உனக்கு உரிய இடம் படிம விலாசம் என்ற அறைதானே? அதை விட்டுவிட்டு நீ ஏன் சித்திரசாலைக்குள்ளே நுழைந்தாய்? அதற்குப் பதில் சொல்!" என்று கேட்டான் விடுதித் தலைவன் கண்களைச் சிமிட்டிக் கொண்டே. இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு வினாடி பூபதி திகைத்தான். அதற்குள் விடுதித் தலைவனே மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"சித்திரசாலையில் ஒரு மனிதர் இருக்கிறார். அவரைக் கண்ணையும் கைகால்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு போங்கள் என்று உத்தரவு. நீ படிம விலாசத்தில் இருப்பவன். சித்திர சாலைக்குள்ளே போவாய் என்று யார் எதிர்பார்த்தார்கள்? அதைச் சொல்லு!" என்றான் அந்த அசகாய சூரன்.

"சித்திர சாலையிலேதான் வேறு எந்த மனிதரும் இல்லையே. அங்கே உள்ள மனிதரை என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டான் பூபதி, ஆத்திரத்தோடு.

"தம்பி! குங்கும மாளிகையின் விஷயமே உனக்குத் தெரியாது. அதனால் தான் இப்படிப் பேசுகிறாய். போகப்போக உனக்குத் தெரியும். தயவு செய்து ஆத்திரப் படாதே!" என்று விடுதித் தலைவன் விநய பூர்வமாகக் கூறினான்.

"போகப் போக என்றால்?" என்று குழப்பத்தோடு பூபதி கேட்டான்.

"சரிதான். இதோடு அந்தக் குங்கும மாளிகைக்கே முழுக்குப் போட்டு விடலாம் என்று நினைத்து விட்டாயா? தம்பி! நீ இப்பொழுதே என்னைச் சந்தேகப்பட ஆரம்பித்து விட்டாய் என்றல்லவா தெரிகிறது. உன்னை நான் மதித்திருக்கிற விதம் என்ன! உனக்காக நான் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் என்ன! நீ கொடுத்திருக்கும் உறுதி மொழி என்ன! இத்தனை விஷயங்களையும் ஒரு வினாடியில் காற்றிலே பறக்க விட்டு விட்டாயே!" என்று சொல்லிக் கொண்டே, கையைப் பரிதாபச் சாயலிலே விரித்தான் தலைவன். சித்திராங்க பூபதிக்கு மூளை கலங்கியது.

"சித்திராங்கா! உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து இங்கே விட்டார்கள் அல்லவா முரடர்கள், அவர்கள் வேறு ஒரு மனிதரை நினைத்துக் கொண்டு உன்னைத் தூக்கி வந்து விட்டார்கள். இந்தச் சிறு தவறு நேர்ந்ததற்காக, நான் மனப்பூர்வமாக அந்த முரடர்களின் சார்பிலும் அவர்களுக்குக் கட்டளையிட்ட முட்டாளின் சார்பிலும் மன்னிப்புக் கோருகிறேன். இதன் பிறகும் உனக்கு என்னிடம் நம்பிக்கை இல்லை யென்றால் நான் இந்தப் பக்கமாகப் போகிறேன். நீ அந்தப் பக்கமாகப் போய் விடு. உறுதி மொழியும் காற்றோடு போன மாதிரித் தான்!"

விடுதித் தலைவன் இந்த மாதிரிச் சொல்லிவிட்டுச் சித்திராங்க பூபதியின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"ஐயா! தயவுசெய்து என்னைக் குழப்பி யடிக்காதீர்கள். நாம் இப்பொழுது எங்கே இருக்கிறோம்? அதைச் சொல்லுங்கள் முதலில்!" என்றான் பூபதி.

"அதெல்லாம் நிச்சயம் சொல்லுகிறேன். உன்னை இப்படியே இந்தக் கானகத்தில் விட்டு விட்டுப் போய் விடுவேனா! அதிலும் ஒவ்வொரு நடுநிசியிலும் குறைந்தது ஒரு நரபலி பாவது கேட்கிற இந்தப் பயங்கரமான வனதேவதையின் கோவிலுக்கு அருகிலே உன்னை நிர்க்கதியாக விட்டு விட்டுப் போய்விடுவேனா நான்! ஒருநாளும் மாட்டேன். அத்தனை நன்றி கெட்ட மனிதன் இல்லை நான்! உனக்கு இஷ்டம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, உன்னை மறுபடியும் குங்கும மாளிகையிலே கொண்டுபோய்க் கவனமாகச் சேர்த்து விடுகிறேன். அதன் பிறகு நீ எங்கு போக வேண்டும் என்றாலும் போகலாம். அல்லது மாளிகையிலேயே தங்கிப் பேரியாழின் நுட்பங்களை யெல்லாம் தெரிந்து கொண்டு போவதானாலும் போகலாம். எது சம்மதமோ அப்படிச் செய்யலாம். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் அவன்.

சித்திராங்க பூபதி திசை தெரியாத அந்த வனாந்தரத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தான். "இந்த வனாந்தரத்தில் தன்னந்தனியாக வழி கண்டு பிடித்துப் போய்த் தப்பிப்பது என்பது இயலாத காரியம். இவனும் அதற்கு விடுகிறானே இல்லையோ! அப்படியே இவன் நம்மை விட்டு விட்டுப் போய் விட்டாலும், நரபலி என்று ஒரு வார்த்தையை வேறு போட்டுத் தொலைத்திருக்கிறான். அதை நினைத்தாலே உடம்பை என்னவோ செய்கிறது. ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று மட்டும் நன்றாகத் தெரிகிறது. சூழ்ச்சியைச் சூழ்ச்சியினால்தான் வெல்ல வேண்டும்!" —இவ்வாறு யோசித்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு "சரி, குங்கும மாளிகைக்கே போகலாம்!" என்றான் சித்திராங்க பூபதி.

இப்படி அவன் சொன்ன மறு விநாடி, விடுதித் தலைவன் அவனைத் தோளோடு தோள் சேர்த்து அணைத்துக்கொண்டே, சற்றுத் தொலைவிலே தெரிந்த சிறிய கோவிலை நோக்கி அழைத்துச் சென்றான்.

பூபதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு விடுதித் தலைவனோடு நடந்து சென்றான். அந்தக் கோவிலைச் சுற்றி அங்கங்கே முக்கூட்டு அடுப்புக் கட்டிகள் தெரிந்தன. அவற்றில் இருந்த புகைக் கரியைப் பார்த்தால் சமீபத்தில் அந்தக் கோவிலில் ஏதோ ஒரு திருவிழா நடந்திருக்க வேண்டும் என்றும், — அந்தத் திருவிழாவுக்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருக்க வேண்டும் என்றும் யூகிக்கலாம். அந்தக் கோவிலைச் சுற்றியுள்ள பாறைகளின் மேலே மஞ்சள் மெழுகினாலும் சுண்ணாம்புக் கோலத்தினாலும் பெரிய பெரிய காளியின் உருவங்கள் வரையப்பட் டிருந்தன. கோவிலுக்கு எதிரே பலிபீடம் போல வட்டமான உயர்ந்த வழவழப்பான பாறை ஒன்று நின்றது. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே கோவிலினுள் நுழைந்ததும், பூபதியை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்ப விடாமல் அந்தக் கோவிலின் வலது சுற்றுக்கு அழைத்து வந்தான் தலைவன். கொஞ்ச தூரம் செல்வதற்குள் ஒரே இருட்டாயிருந்தது பிராகாரம். அந்தப் பிராகாரத்தின் சுவரில் ஓர் இடத்தில் ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! தலையை உள்ளே நீட்டிப் பார்த்தால் அது ஒரு வாசல். அந்த வாசலில் ஒருவன் தீவட்டியும் கையுமாக நின்றான்.

"பயப்படாதே பூபதி! இதன் வழியாகத்தான் நாம் செல்ல வேண்டும்!" என்முன் தலைவன்.

"நாம் எங்கே போகிறோம்?" என்று ஒரே கலவரத்தோடு பூபதி கேட்டான்.

"மறுபடியும் சந்தேகப்படுகிறாயே! இப்பொழுது நாம் குங்கும மாளிகைக்குத்தான் திரும்பிச் செல்லுகிறோம்! கவலைப்படாதே! குங்கும மாளிகையின் மாடத்திலே நின்றாளே ஒரு நிலவு நங்கை, மறந்து விட்டாயா, அவளைப் பார்த்து அவளோடு நாலு வார்த்தைகள் பேசினால்தான் உன்னுடைய இந்த அதிர்ச்சி யெல்லாம் நீங்கும்."

விடுதித் தலைவனும் பூபதியும் தீவட்டியின் ஒளியில் அந்தச் சிறிய வாயிலுக்குள்ளே நுழைந்தார்கள். தீவட்டி மனிதன் முன்னால் சென்றான். மத்தியில் சித்திராங்கன். அவனுக்குப் பின்னால் விடுதித் தலைவன். போகப் போக அது பெரிய சுரங்கப் பாதையாக இருந்தது. அந்தச் சுரங்கப் பாதையில் மனத்தை யெல்லாம் பாறையாக உறுதிப்படுத்திக் கொண்டு நடந்தான் சித்திராங்க பூபதி. (தொடரும்)



செம்மங்குடி முகூர்த்தங்கள்

சென்னை மாகாணத்திலும், மாகாணத்துக்கு வெளியிலும் தமது இணையற்ற சங்கீத ஞானத்தின் மூலம் மக்களைக் கவர்ந்திருக்கும் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் தமது குமாரனுக்கும், குமாரிக்கும் திருமணங்கள் நடத்தி வைத்தார். திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளையும், உபநயனம் செய்து கொண்ட செம்மங்குடி ஸ்ரீ சீனிவாச ஐயரின் மற்றொரு புதல்வனையும் படங்களில் காணலாம்.

செம்மங்குடி அவர்களின் குமாரன் ஸ்ரீ கோபாலசாமிக்கும், திருச்சி உறையூர் ஸ்ரீ சாமிநாத ஐயர் குமாரி ஜெயலக்ஷ்மிக்கும் மே மீ 30உ திருச்சி மாவட்ட சிறுமருதூர் கிராமத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மே மீ 16உ மாயூரத்தில் செம்மங்குடி அவர்களின் புதல்வி தர்மாம்பாளுக்கும், அரசலங்காடு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. சௌபாக்கியவதி தர்மாம்பாளின் திருமணத்தின் போது செம்மங்குடியின் குமாரன் சிரஞ்சீவி ராதாகிருஷ்ணனுக்கு உபநயனம் நடைபெற்றது. தேசமெங்கிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளும், உபநயனம் செய்து கொண்ட குமாரனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழப் பிரார்த்திக்கிறோம்.





கடல் கண்ட கனவு

சோமு



10. வேதனை ஏனோ?

சுரங்கப் பாதைக்குள்ளே கொஞ்சதூரம் நடந்துசென்றதும், எங்கிருந்தோ மனோகரமான வாசனை மிதந்து வந்தது. அந்த வாசனையின் சுகம் உடம்பினுள் ஒவ்வொரு அணுவையும் லயப்படுத்திற்று. அந்தமாதிரி ஒரு வாசனையை இதற்கு முன் சித்திராங்க பூபதி நுகர்ந்ததே யில்லை. தன்னை மறந்து "ஆகா!" என்றான், அத்தனை கலவரத்துக்கு மத்தியிலுங்கூட!


"என்ன பூபதி!" என்று சுரங்கத்தின் இருட்டுக்குள்ளே சித்திராங்கனின் முதுகைத் தட்டிக் கொண்டே கேட்டான் விடுதித் தலைவன்.

"ஆகா! என்ன வாசனை! இந்தச் சுரங்கத்துக்குள்ளே எங்கிருந்து வருகிறது இத்தனை சுகமான வாசனை!" என்று அதிசயத்தோடு கேட்டான் பூபதி.

"தம்பி! இங்கே இந்தப் பாதையின் வலது சாரியில் ஒரு சிறு வாசல் இருக்கிறது. அதன் வழியாகப் போனால் ஒரு சிறு சக்தி பீடம் இருக்கிறது. அங்கிருந்துதான் வருகிறது இந்த வாசனை!" என்றான் தலைவன்.

"இப்பொழுது நாம் அங்கேயா போகிறோம்!" என்று வியப்போடு பூபதி கேட்டான்.

"இல்லை! நாம் இப்பொழுது குங்கும மாளிகைக்கல்லவா போகிறோம்!" என்று தலைவன் பதில் சொல்லிக் கொண்டிருந்த போதே அவனுடைய வார்த்தைகளின் பின் பகுதி பூபதியின் செவிகளில் நன்றாகக் கேட்கவில்லை. எங்கோ தொலை தூரத்தில் கிணற்றுக்குள்ளேயிருந்து யாரோ பேசுவது போல் நலிந்து கேட்டது! அவ்வளவுதான். அடுத்த கணம் சித்திராங்க பூபதியின் சிந்தை கிறங்கிற்று. சுழல் சுழலாக வந்த புகையின் போதையிலே சித்திராங்கன் மயங்கினான். தன் நினைவு இழந்தான். மறு விநாடி அவனைக் கீழே விழுந்து விழாதபடி தலைவன் தன் கையினால் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.



மயங்கி விழுந்த சித்திராங்க பூபதிக்கு அதன் பிறகு நடந்த விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. அவன் திரும்பக் கண் விழித்துப் பார்த்த போது குங்கும மாளிகையிலே படிம விலாசம் என்ற தன்னுடைய அறையிலே இருந்தான். அகலமான ஒரு கட்டிலில் திண்டும் தலையணைகளுமாக இருந்த வசதியான ஒரு படுக்கையின் மேல் படுத்திருந்தான் அவன்.

'என்ன இது! சுரங்கப் பாதையிலே நடந்து வந்து கொண்டிருந்த நான் இங்கே எப்பொழுது வந்து சே[ர்ந்]தேன்! இந்தக் கட்டிலில் எப்பொழு[து] படுத்தேன்! மறுபடியும் படிம வி[லா]சத்துக்குள்ளே அடியெடுத்து வை[த்]ததே எனக்குத் தெரியாதே!' இப்படி எண்ணிப் பார்த்தபோ[து] பூபதிக்குத் திடீரென்று நினைவுவந்த[து]. தான் சுரங்கப் பாதையில் மனோ[கர]மான ஒரு வாசனைப் புகையை நுகர்ந்து பார்த்ததும், அதைப் பற்றி தலைவன் கூறிய விவரங்களும்!

சித்திராங்க பூபதிக்கு இப்பொழு[து] தெளிவாகத் தெரிந்தது. சுரங்க[ப்] பாதையிலே மணம் வீசி வந்த[து] வாசனைப் புகை, அதுதான் தன்னை அப்படி மயக்கி வீழ்த்தியிருக்க வேண்டும். அருமையான அந்த வாசனையிலே ஏதோ மயக்க மருந்து கலந்திருக்க வேண்டும்.

இப்படி நினைத்துக் கொண்டே சித்திராங்க பூபதி கட்டிலை விட்டு எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுது கைத்திண்டுக்குப் பக்கத்திலே ஓலைச் சுருள் ஒன்று வைக்கப் பட்டிருந்ததைக் கண்டான். திகைப்பும் ஆவலும் மேலிட்டவனாக அந்தச் சுருளைக் கையில் எடுத்துக் கொண்டே அறையிலே சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணோம். ஓலைச் சுருளைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

வலம்புரித் தீவின் இளவரசருக்குமாமல்லபுரம் விழுதித் தலைவன் எழுதிய நிருபம்.

தாங்கள் இவ்வளவு பலவீனமான இதயம் உள்ளவர் என்று நான் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை. சுரங்கப் பாதையின் இருட்டு உங்களை இதனை நாம் பயப்படுத்தி, மயக்கியே போட்டு விட்டதே! என்ன ஆச்சரியம்! நீங்கள் மயங்கிக் கீழே விழுந்து விடாதபடி மிகவும் கவனத்தோடு உங்களை ஏந்திப் பிடித்து

இப்பொழுது இந்தக் குங்கும மாளிகையிலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம்.

அவநம்பிக்கையும் கலவரமும் சேர்ந்து உங்களை இத்தனை தூரம் தளர்ச்சி அடையச்செய்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனாலும் கொஞ்சம் திடமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் அவசர காரியமாக மாமல்லபுரம் செல்ல வேண்டிய திருப்பதால் இப்பொழுதே புறப்படுகிறேன். நேரில் இருந்து உங்களிடம் எல்லா விவரங்களையும் சொல்ல முடியாததற்கு மன்னிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். குங்கும மாளிகையிலேயே தங்கி யிருக்கும் நோக்கத்தை நீங்கள் இன்னும் கைவிட்டு விடவில்லை என்று நம்புகிறேன். எப்படியும் விரைவில் உங்களைப் படிம விலாசத்தில் சந்திக்கிறேன். அதற்குள் உங்களுடைய மனநிலை முழுதும் சரியாகி விடும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. அன்பன்.

இந்த ஓலைச் சுருளைப் படித்ததும் சித்திராங்க பூபதிக்கு முதலில் ஆத்திரந்தான் வந்தது. அதிலும் அந்தக் கடைசி வாக்கியத்தைப் படித்ததும் கோபம் கோபமாக வந்தது.

'இந்தத் தலைவனுக்குத் தான் எத்தனை ஆணவம்? எத்தனை விஷமத்தனமாக இந்த ஓலைச் சுருளின் வாசகத்தை முடிக்கிறான்?'— என்று நினைத்தான் பூபதி.

'விரைவில் என்னுடைய மனநிலை முற்றும் சரியாகி விடுமாமே! என்ன மன அழுத்தம் அவனுக்கு!'

சித்திராங்க பூபதிக்கு உணர்ச்சியினால் உடம்பெல்லாம் ஆட்டம் கொடுத்தது. கடல் கடந்து என்னென்ன கனவுகள் எல்லாம் கண்டு கொண்டு வந்தான்! மாமல்லபுரத்தில் விடுதித் தலைவனோடு பேசி விட்டு, அவன் கொடுத்த அந்த வெள்ளைக் குதிரையிலே ஏறிப் புறப்பட்டபோது, பேரியாழே தன்னுடைய கையில் சிக்கி விட்டது போல் அல்லவா எண்ணினான்! இப்பொழுது என்னென்ன அதிர்ச்சிகள் எல்லாம் நேர்ந்து விட்டன! எங்கோ ஒரு காட்டுக்குள்ளே தன்னைக் கொண்டு போனார்கள். பிறகு விஷமத்தனமாகப் பொல்லாத சிரிப்பு சிரித்துக் கொண்டே அந்த விடுதித் தலைவன் சுரங்கப் பாதைக்குள்ளே தன்னை அழைத்து வந்தான்! பிறகு ஏதோ ஒரு விஷப் புகையை முன்னதாகவே அந்தப்பாதைக்குள்ளே சுழலும்படி ஏற்பாடு செய்து விட்டுத் தன்னை மயக்கம் போட்டு விழும்படி செய்து, இப்பொழுது மீண்டும் குங்கும மாளிகைக்குள்ளே அழைத்து வந்திருக்கிறான். மயக்கம் தெளிந்து எழுந்திருக்கும்போது, தான் எதிரே யிருந்தால் விபரீதம் நேரும் என்று எதிர்பார்த்து, இப்பொழுது இப்படி ஒரு நிருபத்தை எழுதி வைத்து விட்டு எங்கோ மறைந்து விட்டானே! இத்தனைக்கும் பிறகு விரைவில் தன்னுடைய மன நிலை முழுதும் சரியாகிவிடும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இல்லையாமே! என்ன கயமை இது! எத்தனை வஞ்சகம் இதில் இருக்கிறது.



சித்திராங்க பூபதிக்கு இப்பொழுது படிமவிலாசத்தையே பார்க்கப் பிடிக்கவில்லை. இந்த மர்ம மாளிகையில் இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ! தனக்கு யார் கதி! தன்னந் தனியாக இப்படி அந்நிய பூமியிலே வந்து மாட்டிக் கொண்டோமே! நாலு பேர் சேர்ந்து தன் மீது பாய்ந்து தன்னை ஒழித்துக் கட்டி விட்டால்கூட ஏன் என்று கேட்பதற்கு யாருமில்லை! வலம்புரித் தீவிலிருந்து அந்த ராஜ்யத்தின் இளவரசன் இங்கே வந்தான் என்ற விஷயம் யாருக்குத் தெரியும்? ஆதிரையன் தான் இந்தக் கொடும்பாளூர் அரச குடும்பத்தின் நாயகன். ஆனால் அவனுக்குங் கூடத் தான் யார் என்ற உண்மை தெரியாதே! காஞ்சிமா நகரின் கடிகை

யிலே சேர்ந்து படிக்க வந்த ஒரு மாணவன் என்றுதானே அவனும் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் விடுதித் தலைவனுடைய வேண்டுகோளுக்கு விரோதமாக, தான் அவனுக்குக் கொடுத்திருந்த உறுதிமொழியை மீறி, நேரே கொடும்பாளூர் அரண்மனைக்குப் போய் ஆதிரையனைச் சந்தித்து விட்டால் என்ன? அவனிடம் எல்லா விவரங்களையும் ஒளியாமல் கூறி விட்டால் என்ன?

இப்படி யோசித்துக் கொண்டே பூபதி அறையின் வாசல் பக்கம் திரும்பினான்.

குழப்பமான மன நிலையில் வாசல் பக்கம் பார்த்த சித்திராங்கனுக்கு ஒன்றுமே தோன்றாத அளவுக்குத் திகைப்பு ஏற்பட்டது. வாழ்வில்



'இது கனவா அல்லது நனவா' என்று சந்தேகப்படுகிற அளவுக்குச் சில சமயங்கள் ஆச்சரியம் உண்டாகும் அல்லவா? அப்படிப்பட்ட ஆச்சரியம் பூபதிக்கு ஏற்பட்டது. காரணம் படிம விலாசத்தின் வாசலுக்கு வெளியே நிசப்தமாக நின்று கொண்டு இவனையே நோக்கினார் சித்தர்!

சித்திராங்க பூபதிக்கு முதன் முதலாக ஏற்பட்டது திகைப்புத்தான்! ஆனால் அடுத்தகணமே திகைப்பையும் மீறிக் கொண்டு ஒரு சாந்தம் பிறந்தது! சாந்த உணர்ச்சிக்குக் காரணம் சித்தருடைய முகத் தோற்றத்தில் அவன் கண்ட எல்லையற்ற பரிவும் அமைதியுந்தான்.

'இருள் சூழ்ந்த இந்தப் பரந்த உலகில் திசை தெரியாமல் தடுமாறும் போது ஒரு கை விளக்குக் கிடைக்கிறது' என்று வலம்புரித் தீவில், கல கரை விளக்கத்துக்குக்கீழே வடமொ யில் ஒரு வாக்கியம் எழுதியிருந்தா அந்த வாக்கியத்தைக் குறித் அதன் பொருளைக் குறித்தும் தத் ரீதியில் பண்டிதர்கள் விளக்க சொல்வதுண்டு. உண்மையில் கல கரை விளக்கத்துக்குக் கீழே கொண் போய், அப்படிப்பட்ட ஒரு வாக் யத்தை எழுதியதற்குக் காரண என்ன என்பதைக் குறித்தும், ஞா தீபம் என்பதைக் குறித்தும், ப தடவை பல அறிஞர்கள் நுட்பமா முறையில் எடுத்துச் சொன்னதுண் இப்பொழுது பூபதிக்குச் சித்தருடை வரவு அப்படிப்பட்ட ஒரு பேராச்சரி மான நிம்மதியைக் கொடுத்தது.

பிரம்பின் ஓசையில்லை. காலி தரித்திருந்த குமிழ்க் கட்டை 'டக்ட என்று சத்தம் உண்டாக் வில்லை. இந்தவிசித்திர சித்த இந்த நேரத்தில் கொடு பாளூருக்கு, அதிலும் அந் குங்கும மாளிகைக்கு எ படி வந்து சேர்ந்தார் சித்திர சாலைச் சுவரில சாத்தி வைத்திருந்த அ ருடைய பிரம்பு எங்கே போயிற்று?

சித்திராங்கனுக்கு மனத் தில் ஆச்சரியப் படுவதற்கு அதற்குமேல் சக்தியே இல்லை என்று சொல்ல வேண்டும் அவனையும் மீறிய பய பக்தியில் சித்தி ராங்கன் படிம விலாசத்தின் கட்டிலி லிருந்து எழுந்தான். பணிவும் அடக்க மும் நிரம்பியவனாய்ச் சித்தரை நோக்கி நடந்தான் அவன்.

"என்ன தம்பி! மயக்கமா? இறக் கமா? அல்லது உறக்கமா?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தார் சித்தர். அந்தச் சிரிப்பில் ஓர் அசாதாரண மான ஒளி சிதறியது. இந்த அகில உலகத்தையுமே பார்த்து விழிக் கோணத்தினால் நகைக்கக் கூடிய எல்லையற்ற ஞானம் இப்பொழுது சிரிப்பின் ஒலியாக வெளி வந்து பூபதி யின் சிந்தனைகளைச் சிதற அடித்தது! அவனுக்குப் பதில் சொல்ல முடிய வில்லை. ஆனால் அவன் அப்படிப் பதில் சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஏனென்றால் அவன்

பதில் சொல்வதற்கு முன்னுலேயே சித்தர் மறுபடியும் தொடர்ந்து பேசினுர்.

"என்ன ராஜகுமாரா! இப்படி இந்த அறைக்குள்ளே வந்து கிறங்கிப் போய் உட்கார்ந்து விட்டாய்? உனக்காக எத்தனை எத்தனை சம்பவங்கள் எல்லாம் காத்திருக்கின்றன! ஒன்றையும் லட்சியம் செய்யக் காணுமே நீ!" என்ருர் சித்தர். இப்பொழுதும் அந்த வார்த்தைகளுக்கு மத்தியிலே அவருடைய முகத்தில் ஒரு புன்முறுவல் நெளிந்தது. ஆனுல் அந்தப் புன்முறுவல் வெறும் புன்சிரிப்பாக இல்லை. அதனூடு ஒரு ஞானக் குறும்பு, காலங் கடந்த தத்துவத்தை உணர்ந்து அதை மறைத்துக் கொண்டு அதற்கும் மேலாக நின்று விளையாடுகிற ஒரு அற்புதப் பேரறிவோடு கூடிய பரிகாசம், அந்தப் புன்முறுவலிலே தவழ்ந்தது! பூபதி இப்பொழுது பேச ஆரம்பித்தான். மனத்தை யெல்லாம் மிகுந்த திடத்தோடு ஒருமுகப்படுத்திக் கொண்டு வார்த்தைகளைக் கையாண்டான்.

"ஐயா! என்னை ஆரம்பத்திலிருந்து குழப்பியடிக்கிறீர்கள்! என் சித்தம் ஒரு நிலையில் இல்லை. தயவு செய்து—"

"தம்பீ! சித்தம் ஒரு நிலையில் இல்லையா! அதென்ன அப்படிப் போடுகிருய் ஒரு போடு. சித்தம் ஒரு நிலையில் இருந்து விட்டால் நீ சிவன் ஆகி விடுவாய் தம்பீ! அப்படியெல்லாம் ஆகிவிடாதே! பாவம்! வாலிபப் பிள்ளை! உன்னுடைய வாழ்வே இனிமேல்தான் தொடங்க வேண்டும்! அது இப்பொழுதுதான் தொடங்கப் போகிறது! பார்! பார்! தொடக்கத்துக்கு அடையாளமாக யாழ் ஒலிக்க ஆரம்பித்து விட்டது! கேட்டாயா?"—இவ்வாறு சித்தர் சொன்ன போது கீழே மாளிகையிலிருந்து வீணையின் நரம்பொலி மெதுவாக எழுந்து காற்றிலே மிதந்து வந்தது கேட்டது!

"தம்பீ! நீ இங்கே இருந்து விட்டால் என்ன அர்த்தம்? மாமல்லபுரத்திலே இருக்கும் வரை, சங்கீதத்தையும் பாட்டையும் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டு இருந்தாயே! இங்கே வந்ததும் அதைக்கூட மறந்து விட்டாயா? சரியாய்ப் போயிற்று. எழுந்திரு அப்பனே! கீழே ராஜகுமாரர்கள், அரசப் பிரதானிகள், நகரப் பிரமுகர்கள், பெரிய பெரிய வித்துவான்கள்-எல்லாரும் வந்திருக்கிருர்கள். போ. எழுந்து போ தம்பீ! பேரியாழின் ஒலியைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள்! காதிலாவது அந்த யாழைச் சற்று வாங்கிக் கொள்! தனிமையில் இருக்கலாமா? தனிமை, ஏகாந்தம், மோன வெளி—இதெல்லாம் என்னைப் போன்ற பைத்தியங்களுக்கல்லவா? நான் தனிக் கட்டை! நீ அப்படியா!"

சித்தர் இந்த மாதிரிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, யாழின் ஒலியோடு சேர்ந்து மத்தளம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு பெண்ணின் இனிமையான குரல் ஒலித்தது.

"போ, தம்பீ! யோசியாதே! தயங்காதே! தயங்கக்கூடிய காலம் வரும்போது யோசித்துக் கொள்ளலாம். அல்லது யோசிக்கக் கூடிய காலம் வரும்போது தயங்கிக் கொள்ளலாம். இப்பொழுது இரண்டுமே வேண்டியதில்லை!"

இப்படிச் சித்தர் சொல்லி விட்டுப் பூபதியின் அருகிலே வந்து அவனுடைய தோளைப் பிடித்து "ஹ்ஹும்" என்று குதிரைக்குச் சொட்டுக்கொடுக்கிற மாதிரி ஒரு சுடக்குப் போட்டார். மறு பேச்சுப் பேசாமல் பூபதி அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

"பார்த்தாயா! போகிற அவசரத்தில் உத்தரீயத்தை எடுத்துக் கூட அணிந்து கொள்ள மறந்து விட்டாயே! இந்தா!" என்று சொல்லி, படிம விலாசத்தின் ஓரத்தில் தொங்கிய பூபதியின் உத்தரீயத்தை எடுத்து அவன் கையிலே கொடுத்தார் சித்தர். கொடுத்துக்கொண்டே சொல்லுவார்:-

"இப்படியே இந்த நிலைக் கண்ணுடிக்கு முன்பு நின்று கொஞ்சம் கேசத்தை யெல்லாம் ஒழுங்கு படுத்திக் கொள்ளு. முக்கியமான மனிதர்கள் பலர் வந்து அமர்ந்திருக்கிற இடமாயிற்றே, தம்பீ!" என்ருர் சித்தர்.

பூபதி ஏதோ விசை கொடுத்து விட்ட ஒரு இயந்திரத்தைப் போலச் சித்தரின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தான்.

'விறு விறு' என்று நிலைக் கண்ணுடிக்கு முன்னுல் நின்று தன்னை ஒழுங்கு படுத்திக் கொண்டான். அங்கியை

எடுத்து அப்படியே அவசரமாக அணிந்துகொண்டான். உத்தரீயத்தை எடுத்து மேலே போட்டுக் கொண்டான். அதற்குமேல் ஏதும் பேசாமல் மௌனமாகக் கீழே படிக்கட்டுக்களில் இறங்கினான் பூபதி.

என்ன ஆச்சரியம்! பூபதி படிக்கட்டுக்களில் இறங்கிக் கொண்டிருக்கும் போதே, மேலே அவனை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார் பழைய பெரியவர். குங்கும மாளிகைக்குள்ளே அவனை அத்தனை உபசரணையோடு வரவேற்றாரே அதே கிழவர்! இந்த விநாடிவரை அவர் எங்குதான் போயிருந்தாரோ! இப்பொழுதுதான் எதிர்ப்பட்டிருக்கிறார்!

"தம்பி! உங்களை அழைத்துப் போகத்தான் வருகிறேன். நல்ல வேளை! நீங்களே இறங்கி வருகிறீர்கள்! இன்று இந்த மண்டலத்தி லுள்ள எல்லாப் பிரமுகர்களும், பிரதானிகளும் வந்திருக்கிறார்கள். பெரிய அம்மாள் நைவளம் என்ற பண்ணிலே புதிதாக ஒரு கவனம் செய்திருக்கிறார்கள்! அதை நங்கை வாசிக்கிறாள்! பேரியாழிலே வாசிக்கிறாள்! அதைக் கேட்பதற்கு என்றே இத்தனை பேரும் இன்று குங்கும மாளிகைக்கு வந்திருக்கிறார்கள். மாமல்லபுரத்து விடுதித் தலைவர் கூட இன்னும் சிறிது நேரத்தில் இங்கே வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!"

இப்படிச் சரமாரியாக வார்த்தைகளைக் கொட்டினார் பெரியவர். பூபதி ஒன்றும் பதிலே பேசாமல் சிரித்துக் கொண்டே அந்த வார்த்தைகளைக் கேட்டு விட்டு, படிக்கட்டில் கீழே இறங்கினான்.

குங்கும மாளிகையின் உள்ளே பெரிய கூடம். அது எழிலோடு கூடிய விசாலமான பெரிய இசைக் கூடம். ஏக காலத்தில் ஐந்நூறு மனிதர்கள் வரை தாராளமாக இருந்து ஒரு பெரிய சங்கீத விருந்தை அநுபவிக்கக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது அது! கூடத்தின் மத்தியிலே ஒரு நடுத்தர வயது அம்மாள் அமர்ந்திருந்தாள். அவளுக்கு அருகே அன்று



டத்திலே சந்திரன் உதித்ததுபோல் ன்று மறைந்தாளே அந்த நங்கை ம் அமர்ந்திருந்தாள். அவர்களுக்கு திரே ஏகப்பட்ட ஜனத் திரள் ரிசை வரிசையாகப் பட்டுத் தலைப் கையுடனும் பெரிய பெரிய பட்டு த்தரீயங்களுடனும் அமர்ந்திருக்கக் ண்டான் பூபதி.

அந்த ஜனத்திரளைக் கண்டதும் த்திராங்க பூபதிக்கு முதலில் ஒரு வரிக்க முடியாத வெட்கம் உண்டா ற்று. இனந்தெரியாத ஓர் அன்னிய டத்தில், இனந்தெரியாத மக்களின் த்தியிலே, இனந்தெரியாத ஏதோ ரு கடல் கடந்த பிரதேசத்து மனி ன்! தான் போய் எப்படிக் கூச்ச ல்லாமல் அந்தச் சபை ல் உட்காருவது!

இப்படி நினைத்தான் பதி. ஆனால் இந்த எண் ணம் ஒரு விநாடிதான் வனுடைய மனத்தில் துவண்டது. அடுத்த கணம் தயங்கா மல் அவனை உள்ளே நடந்து செல்லும் படியாக இரண்டு சக்திகள் ஈர்த்து இழுத்தன. ஒன்று, தான் அதுவரை கனவிலும் நினைவிலும் எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த அந்தப் பேரியாழின் ஒலி. மற்றொன்று அந்த யாழைத் தனது மேனியிலே சாத்திக் கொண்டு அற்புத மான ஒயிலோடு வீணையின் நரம்புக ளிலே தன்னுடைய செங்காந்தள் மெல் விரல்களை ஓட விடு



கிறாளே அந்த நங்கையின் அதிரூப செளந்தரியம்! இரண்டும் ஒன்றையொன்று போட்டிபோட்டுக்கொண்டு பூபதியை இசைக் கூடத்துக்குள்ளே நடந்து செல்லும்படி செய்தன.

பூபதி இசைக் கூடத்துக்குள்ளே அடியெடுத்து வைத்த மறுகணமே ஒரு பணியாளன் ஓடோடியும் வந்து, அவனை எதிர்கொண்டு அழைத்து, அந்தச் சபையில் கம்பீரமாக நின்ற ஆஸனத்திலே அமர்த்தினான்.

முழவு 'கும் கும்' என்று குங்காரம் கொடுத்தது. பேரியாழ் அபாரமான இனிமையோடும் கம்பீரத்தோடும் எழுந்து பேசியது. அந்த இன்னொலியோடு இழைந்துகொண்டே, நங்கையின் குரல் யாழா அல்லது குரலா என்று வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாத முறையில், இழைந்து பின்னியது.

பூபதி செவியினால் இசையைக் கேட்டான். அவனுடைய கண்களோ அந்த இளம் நங்கையின் எழிலைக் கண்டு மறுகின. சூரியன் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்த கொடுமையான பகல் நேரத்திலும் கூடச் சந்திரனுடைய தண்மையை வாரிப் பொழிந்த மதிமுகம் அல்லவா அது! இப்பொழுது சந்திரனையே பல அம்சங்களாகப் பிரித்து எடுத்து வந்து அங்கங்கே அகல் விளக்குகளாகவும், தகளிகைத் தீபங்களாகவும், மணி ஜோதிகளாகவும் நிறுத்தியது போல, அழகழகாகக் குளுமையான பிரகாசத்தோடு சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீப ஜோதிகளுக்கு மத்தியிலே அந்தச் சந்திரவதனம் எப்படியிருக்கும்! குளுமையும் குளுமையும் இணைந்து, நிலவோடு நிலவு கலந்து, அமுதமும் அமுதமும் சேர்ந்து, இரட்டிப்பாக இன்ப சோபையைப் பொழிந்தன. அந்த இன்பத்தை இன்னும் பல மடங்கு அதிகப் படுத்துவது போல் யாழிலிருந்து பிறந்த அமுத இசை அந்த முகத்திலே இதயத்தின் பிரதிபலிப்பாகத் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது! பூபதி அப்படியே மெய்ம்மறந்து அந்த இசையைக் கேட்டுக் கொண்டே நங்கையின் முக பாவங்களை இன்னும் சற்றுக் கூர்மையாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

சித்திராங்க பூபதிக்கு இயல்பிலேயே சங்கீதத்தில் ஆர்வம் உண்டு. அந்த ஆர்வத்தை அவன் பரம்பரைச் செல்வமாகவே அடைந்திருந்தான். பூபதியின் தாயைப் பெற்ற பாட்டனார் இரவு நேரங்களில் வலம்புரி அம்மனின் கோவிலிலேயே யாழ் வாசிக்கும் பாணர்களுக்குப் பக்க வாத்தியமாக முழவு வாசிப்பாராம். அந்த முழவின் ஒலியில் சில சமயம் கடல் அலைகளும் கூட மயங்கிப் போய் அசைவற்று நிற்குமாம்! இதை யெல்லாம் பூபதியின் அன்னை அடிக்கடி சொல்லியிருக்கிறாள். இது காரணமாகப் பூபதிக்கு அவனுடைய சங்கீத ஆர்வம், உடலோடு ஒட்டியே வலுப்பெற்றிருந்தது. இப்பொழுதோ அதன் உக்கிரத்தைச் சொல்லவே வேண்டாம்! கூர்ந்து ஐம்புலன்களும் செவிகளிலே ஒடுங்கியவனாக, அந்த யாழைக் கேட்டுக் கொண்டே வந்த பூபதி திடீரென்று அந்த நங்கையின் முகத்தை நன்றாக விளக்கின் வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தான்! அப்படியே ஒரு கணம் இரத்தம் எல்லாம் அவனுக்குப் பனிக்கட்டியாக உறைந்தது! மீண்டும் மீண்டும் இமைகளைக் கொட்டிக் கொட்டி விழித்தான்! ஆம்! சந்தேகமில்லை! ஏதோ ஒரு வேதனையை அந்த நங்கை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ள முயற்சிக்கிறாள். ஆனால் முடியவில்லை. யாழை வாசித்துக் கொண்டிருக்கும் போதே அவளையும் மீறி அந்த மன வேதனை எவ்வி எழுந்து அவளுடைய முகத்திலே படர்கிறது. அவள் அதைக் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்க முயல்கிறாள்.

பூபதி அந்த முகத்தின் வேதனையைக் கவனித்தான். அவனையும் அது தாக்கியது. இத்தனை அழகியான நங்கைக்கு, இத்தனை லாகவத்தோடு அந்த யாழை எடுத்து அமுதம் பொழிகிற அந்த சங்கீத சரஸ்வதிக்கு அத்தனை வன்மையாக மனத்தைத் துன்பப் படுத்துகிற கொடிய வேதனை என்ன? எக்காரணம் பற்றி இத்தனை துயர ரேகைகள் அவளுடைய முகத்திலே படர்கின்றன?

சித்திராங்கனுடைய சிந்தனை வேகமாக ஓடியது.

(தொடரும்)

கடல் கண்ட கனவு



பதினொன்றாம் அத்தியாயம்

இருளிலே சூழ்ச்சி

கொடும்பாளூரைச் சுற்றிச் சில காத தூரங்களிலே அடர்த்தியாக மரமும் செடியும் கொடியுமாக நெருங்கிப் பின்னிக் கொண்டிருந்த கானகத்தில், மலைகள் சிறு சிறு குன்றுகளாகவும் சில இடங்களில் சற்றுப் பெரியனவாகவும் நின்றன. இந்தப் பயங்கரமான கானகத்தில் எங்கோ ஒரு மூலையில், வேளிர் தலைவர்கள் வகுத்து ஓடவிட்ட ஒரு சிற்றோடை, வளைந்து வளைந்து மரங்களுக்கு மத்தியிலே பாதையை நிர்ணயித்துக் கொண்டு குதித்துக் குதித்துச் சென்று கொண்டிருந்தது. அந்த ஓடையின் கரையிலே மதகுகள் அமைந்த ஒரு கால்வாய்ப் பகுதியிலே, மரங்களின் அடர்த்தி சற்றுக் குறைந்து காணப்பட்டது. இந்தச் சூழல் ஏற்கனவே நாம் பார்த்த ஓர் இடந்தான்.

குங்கும மாளிகைக்குள்ளே சிக்கிவிட்ட பூபதி, கண்ணும் கைகால்களும் கட்டப்பட்டு மயக்கம் போட்டு விழுந்தவன், மறுபடியும் கண்ணை விழித்துப் பார்த்தான் அல்லவா, அதே இடந்தான் இந்தக் கானகச் சூழல்! அதில் அதே பழைய கல்லாலான கட்டில் இப்பொழுது சூன்யமாகக் காட்சி தருகிறது. அந்தக் கட்டிலுக்குச் சற்றுத் தொலைவிலே முயல் குட்டிகள் துள்ளிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சற்றுத் தொலைவிலே ஒரு சிறிய கோவில்—அன்று தெரிந்த அதே கோவில்தான்.

நரபலியைநாடி, தன் வாயைத் திறந்து நிற்கும் ஒரு பெரிய





சோமு

பூதத்தைப் போலக் கோவிலின் வாயில் பயங்கரமாகத் திறந்து கிடக்கிறது. அந்தக் கோவிலின் இடிந்த சுவர்கள் எல்லாம் பயங்கரத்தை அதிகப்படுத்துகின்றன. முண்டும் முடிச்சுக்களுமாக முகப்பிலே நீட்டிக் கொண்டு தோற்றம் தருகிற கற்கள் எல்லாம், வாயைத் திறந்து நிற்கும் பூதத்தின் பயங்கரமான கோரப் பற்களைப் போல் அச்சம் உறுத்துகின்றன. கோவிலின் சுவர் மழை நீர் படிந்து படிந்து கறுப்புக் கரையேறி, பள்ளமும் குழிகளுமாகக் கண் முன்னே நின்று பூதாகாரமாக எச்சரிக்கை செய்கிறது. கோவிலுக்கு எதிரில் வழவழப்பான ஒரு பாறை பலிபீடமாகத் தோன்றுகிறது. அந்தப் பாறையைச் சுற்றி ஏதேதோ சிவப்பும் மஞ்சளு மாகப் பல காட்டுப் பூக்கள் சித யிருக்கின்றன. அந்தப் பலி பீட துக்கு அருகே ஒரு பெரிய சூல யுதம் நட்டிருக்கிறது. எத்தனை மனி உடல்களை அது பலி வாங்கிற்றோ என்று, பார்ப்பவர்கள் மனம் பதறும்படியாக மிகக் கூர்மையாக இருக்கிறது, அந்தச் சூலத்தின் மூன்று நுனிகள்! முயல்கள் துள்ளிக் கொண்டு ஓடுவதைப் பார்த்தால்,





இந்தத் திரிசூலத்தைக் கண்டுதான் அப்படி அஞ்சி ஓடுகின்றனவோ என்று சொல்லத் தோன்றுகிறது!

அமாவாசையின் பயங்கரமான இருள், இந்தக் கானகச் சூழ்நிலையின் இயற்கையான பயங்கரத்தைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது. ஒரே அமைதியான அந்த மௌனம், வஞ்சக நெஞ்சத்தின் ஆழமான மௌனத்தைப் போல, பார்ப்பவரின் உள்ளத்தைத் துன்புறுத்துகிறது. இடையிடையே கேட்கும் ஓடையின் சலசலப்பும், ஆந்தை, கோட்டான், கழுகு, வல்லூறு போன்ற கொடிய பறவைகளின் சிறகடிப்பும், ஓசையும் கானகத்தின் பைசாசத் தன்மையை உறுதிப்படுத்துகின்றன.

இப்படிப்பட்ட மனிதசஞ்சாரமற்ற அடர்த்தியான பூதப் பெருங் காட்டின் அமாவாசை இருட்டிலே, தீவட்டிகள் தெரிகின்றன. ஓடையின் கரையோரமாகப் பத்துப் பதினைந்து தீவட்டிகள் திடீரென்று தெரிகின்றன. அந்தத் தீவட்டிகளின் வெளிச்சத்தில் ஐந்தாறு மனிதர்கள் முக்கியமாகத் தெரிகிறார்கள்.

கானகத்தின் மத்தியில் ஓடையின் கரையோரமாகச் செல்லும் அந்தத் தீவட்டிக் கூட்டத்தின் மத்தியில், எல்லாருக்கும் தலைவனையும் வழிகாட்டியையும் போல, நமக்கு நன்கு அறிமுகமான மாமல்லபுரம் விடுதித் தலைவன் செல்கிறான்.

அவனுடைய கையில் கட்டுவாங்கம் என்று சொல்லப்படுகிற கூர்மையான ஆயுதம் தீவட்டியின் வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருக்கிறது.

தீவட்டிக் கூட்டம் இப்பொழுது ஓடையின் கரையோரமாக நடந்து வந்து, அந்தக் கோவிலுக்குள்ளே நுழைகிறது. எல்லாருக்கும் முன் பாக ஒரு மனித பூதம் பெரிய பெரிய கைகால்களோடு நடந்து செல்கிறது. அந்தப் பெரிய மனித பூதத்தைத் தொடர்ந்து நாலைந்து சிறிய மனித பூதங்கள் செல்கின்றன. இவர்களுக்கு அடுத்தாற் போல விடுதித் தலைவன் செல்கிறான். அவனைத் தொடர்ந்து இன்னும் நாலைந்து முக்கிய மனிதர்கள். இவர்களுக்குப் பின்னால் தீவட்டி தாங்கிய மனித பூதங்கள் இன்னும் நாலைந்து!

இந்தக் கூட்டம் கோவிலுக்குள்ளே நுழைந்து வலது சுற்றிலே வந்து, அதன் சுவரிலே தெரிகிற துவாரத்தில் தலையை நீட்டுகின்றன. உள்ளே இவர்களின் வரவை எதிர்பார்த்து நின்றவர்களைப் போல இரண்டு மிகப் பெருந்தடியர்கள் தீவட்டிக் கையோடு காத்து நிற்கிறார்கள்.

எல்லாரும் அந்தச் சுவரின் இரகசிய வாசல் வழியாக நுழைந்து, சுரங்கப் பாதையிலே நடக்கிறார்கள். கொஞ்ச தூரம் நடந்து சென்றதும், அந்தச் சுரங்கச் சுவர்களில் வலது பக்கம் மற்றொரு வாசல் தெரிகிறது. அந்த வாசலிலே நுழைகிறார்கள்.

இப்பொழுது விசாலமான குகை போன்ற சிறு மண்டபச் சுவர்கள், பாறையைக் குடைந்து அமைத்தவை, தெரிகின்றன. அங்கே பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்து பேசுவதற்கு இடம் இருக்கிறது. ஓரத்தில் ஒரு பெரிய தகளிகை, பிரகாசமான சுடரோடு எரிந்துகொண்டிருக்கிறது.

"எல்லாரும் அமரலாம்!" என்கிறான் விடுதித் தலைவன்.

தீவட்டி மனிதர்களைத் தவிர மற்ற ஐந்து மனிதர்களும் அந்த இரகசிய குகையிலே உட்காருகிறார்கள்.

"இந்தத் தகளிகை விளக்கு எங்களுக்குப் போதும். நீங்கள் எல்லாரும் வெளியே போய் இரண்டு இரகசிய வாசல்களிலும் காவல் இருங்கள்!" என்று, தலைவன் அந்தத் தீவட்டி மனிதர்களுக்குக் கட்டளை யிடுகிறான். உடனே தீவட்டிகள் நகருகின்றன.

இரகசிய குகையின் மண்டபத்தில் இப்பொழுது வெளிச்சம் குறைகிறது. தகளிகை விளக்கின் ஒளி மட்டும் தனக்கு உரிய பிரகாசத்தை வீசுகிறது. தீவட்டிகள் சுரங்கப் பாதையிலே வெளிச்சம் போடுகின்றன!

"தீவட்டிகளில் ஒன்றைத் தவிர மற்றவைகளை எல்லாம் அணைத்து விடுங்கள்!" என்று கதறுகிறான் விடுதித் தலைவன்.

அந்தக் கட்டளை வந்த மறுவிநாடி மண்ணும் கற்களும் பொடியுமாக வந்து தீவட்டிகள் அணைகின்றன. ஒரே ஒரு தீவட்டி மட்டும் இப்பொழுது சுரங்கப் பாதைக்கு, அடையாள வெளிச்சம் தருகிறது.

இருள் அதிகமாகி விட்டது. சூழ்நிலையின் சூழ்ச்சியும் வஞ்சகமும் இருளோடு இருளாக ஐக்கியப்பட்டு நெளிய ஆரம்பிக்கின்றன.

மண்டபத்தில் உட்கார்ந்திருந்த ஐந்து மனிதர்களுக்கும் அருகிலே ஓர் இளைஞன் நிற்கிறான்.

"இப்படி இரு தம்பி!" என்கிறான் விடுதித் தலைவன், அவனைப் பார்த்து.

"இல்லை! நிற்கிறேன்!" என்கிறான் அவன் பூயத்தோடு.

"சரியாய்ப் போயிற்று! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் அமர வேண்டிய அரசனாயிற்றே நீ! நிற்கலாமா! உன்னை நிறுத்தி வைத்தால் அது மன்னிக்க முடியாத ராஜத்துரோகம் தம்பீ!" என்கிறான் தலைவன். மற்ற ஐந்து மனிதர்களும் சிரிக்கிறார்கள்.

"சிரிக்கிறீர்களா! நண்பர்களே! இந்தச் சிரிப்புத்தான் வேண்டாம் என்கிறேன். இந்தச் சித்திர மாயனை நோக்கி இப்படி ஒரு சிரிப்புச் சிரித்துத்தான், இன்று பல்லவ சிம்மாசனத்தை அன்னியனுக்குப் பறி கொடுத்து விட்டு நிற்கிறோம். தெரிந்ததா? சிரிக்காதிர்கள் தயவு செய்து. எதிர்காலத்தில் நாம் நிர்மாணிக்கப் போகும் புதிய சாம்ராஜ்யத்தின் பெயரால் உங்களை வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து சிரிக்காதீர்கள். தம்பி, நீ தயவுசெய்து இந்த இடத்திலே எங்களுக்கு அருகிலே அமர்ந்து கொள்வாயாக!"

ஒரே உணர்ச்சி வேகத்தில், உள்ளத்ன் சூழ்ச்சியிலிருந்து பொங்கி வரும் ஞ்சகச் சாயலில், தலைவனுக்கு ார்த்தைகள் தட்டுத் தடையின்றி ருகின்றன. சித்திரமாயன் என்ற அந்த இளைஞன் இப்பொழுது உட்ார்ந்து கொண்டான்.

"நண்பர்களே! இனி அவரவர் அவரவருடைய கருத்தைச் சொல்ல ாம்!" என்கிறான் தலைவன். இப்படி அவன் சொல்லி முடித்ததும் ஐந்து பேரில் ஒருவர் எழுந்து பேசுகிறார்:

"தலைவரே! நாங்கள் பேசுவது இருக்கட்டும். என்னோடு இங்கே வந்துள்ள இந்த நான்கு நண்பர்களுக் கும் நாட்டின் இன்றையச் சூழ்நிலை விவரமாகத் தெரியாது. எங்கெங்கோ மறைந்து கிடந்த மனிதர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையினால் முதலில் நீங்களே இன் றையச் சூழ்நிலையை முதலில் இவர் களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் ான்று கேட்டுக் கொள்கிறேன்!"

இவ்வாறு அந்த மனிதர் சொல்லி விட்டுக் கீழே உட்கார்ந்தார்.

விடுதித் தலைவன் எழுந்து நின்று பேச ஆரம்பித்தான்.

"நண்பர்களே! முதன் முதல் நான் பேசுவதற்கு முன்னால், நமக்குள் ஒரு ஐக்கியப்பாடு நிலைபெறுவதற்கான உறுதியைச் செய்து கொள்ள வேண் டும். அதற்கு வேண்டிய உறுதி மொழியைச் செய்து கொள்வோம். அதாவது இங்கே இனிமேல் நாம் அடிக்கடி சந்திக்கப் போகிறோம். நமக்குள் அந்தரங்கமான அரசியற் பேச்சுக்கள் எத்தனையோ நடக்கப் போகின்றன. இவற்றை யெல்லாம் அன்னிய மனிதர் யாராவது கேட் டாலோ, அல்லது இப்படி ஒரு கூட்டம் இங்கே நடக்கிறது என்று யாருக்காவது தெரிந்தாலோ, நமது திட்டங்கள் எல்லாம் குட்டிச்சுவராகி விடும். அதிலும் அந்த உதய சந்திரன் என்ற குள்ளநரிக்கு விஷயம் எட்டி விட்டதோ, தொலைந்தது காரியம். ஆகவே நாம் ஆறு பேரும் இப் பொழுது இந்தச் சக்தி பீடத்தின் தலை வாசலிலே நின்று, உறுதிப் பிர மாணம் எடுக்கிறோம்! சரிதானா?"

இவ்வாறு தலைவன் கேட்டதும் ஏக காலத்தில் மற்ற ஐந்து பேரும் "சரி" என்று சொன்னார்கள். தலைவன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"நண்பர்களே! நமக்குள் நடக்கும் இந்த ஐக்கியத் திட்டங்கள் எல்லாம் மிகவும் இரகசியமானவை — சொல் லுங்கள், நான் சொல்லுவதைத் திருப் பிச் சொல்லுங்கள்."

இதன் பிறகு தலைவன் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கொண்டு வந்தான். மற்றவர்கள் அந்த வாக்கி யத்தைத் திருப்பிச் சொன்னார்கள். தலைவன் சொன்ன உறுதி மொழிகள் வருமாறு:—

"நமக்குள் நடக்கும் இந்த ஐக்கியத் திட்டங்கள் எல்லாம் மிகவும் இரகசிய மானவை. இந்தத் திட்டங்கள் நிறை வேறுமட்டும் நாம் ஆறுபேரும் ஆறுட லும் ஒருயிருமாக நிற்போம். இந்த ஆறு மனிதர்களுக்கும் ஆறு இதயங் கள் என்பது பொய். அறுவருக்கும் இதயம் ஒன்றே. நோக்கம் ஒன்றே. கருத்து செயல் அனைத்தும் ஒன்றே. நம்முடைய இலட்சியம் ஈடேறுவதற் காக நமது உடல், பொருள், ஆவி இந்த மூன்றையும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறோம். உலகமே புரண்டாலும் சரி; வானமே இடிந்து விழுந்தாலும் சரி, கடலே கொந்தளித்து வந்தாலும் சரி, நாம் நமக்குள் உள்ள உறவையும் நம்மிடையே நடக்கும் பேச்சு வார்த் தைகளையும், பரம இரகசியமாக வைத் துக் கொள்ளுவோம். அப்படி நம்மில் யாராவது ஒருவர், நம்மையே காட்டிக் கொடுத்து விட்டால், மற்ற ஐந்து பேரும் சேர்ந்து அவரை இந்தச் சக்தி பீடத்தின் பலி வாசலிலேயே உயிரை வாங்கி விடுவோம். இது உறுதி, உறுதி, உறுதி!"

இவ்வாறு சபதம் எடுத்தார்கள் அந்த ஆறு பேரும். இதைப் பார்த் துக் கொண்டே யிருந்த, சித்திரமாய னுக்கு உடம்பெல்லாம் பதறியது. இயற்கையில் அவன் ஒரு கோழை. சண்டை, பலி, சிம்மாசனம், சாம் ராஜ்யம் என்ற வார்த்தைகளைக் கேட் டாலே அவனுக்குக் கையும் காலும் வெடவெடத்தன. என்றாலும் உள் ளத்தின் அந்தரங்கத்தில் மட்டும் ஒரு தீவிரமான, நியாயமற்ற பேராசை— தான் எப்படியாவது அந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் அரியணையிலே ஏறி அமர்ந்துவிட வேண்டும் என்று!

தலைவன் மௌனமாயிருந்த சித்திர மாயனைப் பார்த்து, ஒரு சுடக்குப் போட்டுக் கொண்டே சொன்னான் :

"தம்பி! இந்த விநாடியிலிருந்து உன்னைத் தம்பி என்று அழைப்பதை நிறுத்தி விட்டோம். தெரிந்ததா தம்பீ—ஓ, மறந்து விட்டேனே, மறுபடியும் தம்பி என்கிறேனே—இல்லை, இளவரசே! இனிமேல் நீ—இல்லை இல்லை—நீங்கள் நமது அரசர். நம் சம்பந்தப்பட்டவரை இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் அரசன் நீதான் தம்பீ. இல்லை, நீங்கள்தான் இளவரசே! ஆகையினால் நிமிர்ந்து உட்காருங்கள். இனி, நண்பர்களே, உங்களில் அரசியல் விவரங்கள் முழுதும் தெரியாத நான்கு பேருக்காகச் சுருக்கமாய்த் தமிழ் நாட்டின் இன்றைய நிலைமையை எடுத்துச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

"நண்பர்களே, இன்று தமிழ் நாடு ஒரு பெரிய கொந்தளிப்பிலே சிக்கிக் கொண்டு நிற்கிறது. அந்தச் சிக்கலை எடுத்துவிட வேண்டிய மகத்தான பணி, நம்முடைய கையிலே இருக்கிறது. அந்தப் புண்ணியப் பணியிலே ஈடுபடுகிறோம் என்ற பெருமை உணர்ச்சியோடு, என் வார்த்தைகளுக்குச் செவி சாயுங்கள்.

நண்பர்களே, பல்லவப் பேரரசு என்பது இந்த உலகிலேயே மிகவும் புகழ் பெற்ற அரச பரம்பரை. மிக மிகப் பூர்வமான இந்தப் பரம்பரை களப்பிரருக்கு அடிமைப்பட்டிருந்தது. அந்த அடிமைத் தளையிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தப் பரம்பரை விடுபட்டுத் தலை தூக்கி நின்றது. சுமார் நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு, சிம்மவிஷ்ணு என்ற பல்லவப் பேரரசர் களப்பிரரையும், மழவர்களையும், சேர சோழ பாண்டியர்களையும் வென்று, மகத்தானதோர் சாம்ராஜ்யத்தை நிறுவினார். அந்த மாபெரும் மன்னருக்குப் பின்னர், மகேந்திர வர்மர் தோன்றி மேலைச் சளுக்கிய மன்னன் புலிகேசியையும், சேர சோழ பாண்டியர்களையும் கதிகலங்கச் செய்தார். அவருக்குப் பின்வந்த அவரது புதல்வர் நரசிம்மவர்மரோ, புலிகேசியையும் முறியடித்து வாதாபியைக் கொண்டதோடு, சேர சோழ பாண்டியர்களே யன்றிக் கடல் கடந்த நாடுகளிலும் தமது ஆட்சியைக் கண்டு மன்னர், மன்னர்கள் எல்லாம் தலைவணங்கும் படியாக வெற்றிக் கொடி நாட்டினார். அப்படி அவர் வீரத்தோடு செய்த போர்களிலெல்லாம் அவருக்கு வலக் கரமாக நின்ற பரம்பரைதான் இன்று கொடும்பாளூரில் ஆட்சிபுரியும் வேளிர் பரம்பரை. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த ஒருவன் என்று என்னைச் சொல்லிக் கொள்வதில், நான் பெருமைப்படுகிறேன். இன்று அந்த வேளிர் பரம்பரையில் ஆதிரையன் ஒரு கைப் பொம்மையாக இருக்கலாம். உலகம் தெரியாத பிள்ளையாக, ஊர் சுற்றும் யாத்திரிகனாக அவன் இருக்கலாம். ஆனால் அவனுடைய பரம்பரை இந்தத் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அழியாப் புகழ் வாய்ந்ததாகும்—"

இந்த இடத்தில் அந்த ஐந்து மனிதர்களில் ஒருவர் எழுந்தார்.

"ஆதிரையனைப் பற்றி உயர்வாக அல்லவா நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் ஒரு சுத்த வீரன் என்றும், உத்தமமான அரசகுமாரன் என்றும் அல்லவா நான் கேள்விப்பட்—"

"நண்பரே நிறுத்தும்" என்றான் தலைவன்.

"சற்று நேரத்துக்கு முன்பு நான் என்ன சொன்னேன் என்பதை அதற்குள் மறந்து விட்டீரே! நாம் ஆறு பேரும் ஆறு உடல், ஆனால் ஒருயிர். நம் அனைவருக்கும் ஒரே இதயம்—"

இப்படித் தலைவன் சொன்னபோது அவனுடைய மீசை துடித்தது. இதைக் கண்ட அந்த மனிதர் நடுங்கினார்.

"தவறு. மன்னிக்க வேண்டும் என்று சொல்லுமையா!" என்றார்கள் அவரோடு இருந்த மற்ற நால்வரும். அதன்பேரில் இவர் அப்படியே சொன்னார்.

"மூன்று தரம் சொல்லும் நண்பரே!" என்றான் தலைவன். மூன்று தரம் தயங்கிக் கொண்டே கூறினார் அவர். இதன் பிறகு தலைவனுடைய பேச்சு தொடர்ந்தது.

"நண்பர்களே! அந்த மகா பராக்கிரமசாலியான நரசிம்ம வர்மருக்குப் பிறகு, இரண்டாம் மகேந்திர வர்மர் தோன்றித் தமது கீர்த்தியை நிலை நாட்டினார். அவருக்குப் பிறகு சாளுக்கியரைப் பெருவளநல்லூரில் வென்ற

பரமேசுவர வர்மர் ஆட்சிக்கு வந்தார். அவருடைய கீர்த்தியைச் சொல்லிக் கொண்டு நிற்கிற எண்ணற்ற கோயில்களே அவருடைய பெருமைக்குச் சான்று. நண்பர்களே, அவருக்குப் பிறகு இரண்டாம் நரசிம்ம வர்மர் என்ற ராஜசிம்மர் தோன்றினார். காஞ்சிக் கைலாசநாதர்கோவில் எழுந்தது. வடமொழியும் தென்மொழியும், வாத்திய சங்கீதமும் ஓங்கி நின்றன! பிறகுதான் இரண்டாம் பரமேசுவர வர்மர்—பட்டம் சூடுவதற்குரிய இளவரசை நிச்சயம் செய்யாத இரண்டாம் பரமேசுவர வர்மர் தோன்றினார்.

அவர் என்றைக்குத் தோன்றினாரோ அன்றே இந்தச் சூழ்நிலையும் தோன்றிவிட்டது! என்ன செய்ய! அவருக்குப் பின் ராஜ்யத்தை ஆள இளவரசன் இல்லை. அவருடைய பரம்பரையிலே தாயாதியாகத் தோன்றியவர்—புகழ்பெற்ற சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே வந்தவர்—இதோ நம்மோடு இருக்கிறாரே இந்தச் சித்திர மாய இளவரசர் தான்! தகுதியும் உரிமையும் உடையவர். இவரை விட்டு விட்டு, எங்கோ இனந் தெரியாத ஒரு கிராமத்தி லிருந்து, இனந்தெரியாத சிறுவனைக் கூட்டி வந்து இந்தக் குள்ளநரி உதயசந்திரன் அவனுக்குப் பட்டம் சூட்டி யிருக்



டி. ஏ. டெய்லர் அண்டு கம்பெனியின் டைரக்டர் ஸ்ரீ ஆர். நடராஜன் அவர்களின் புதல்வி சௌ சுசீலாவுக்கும், பம்பாய் டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி ராமமூர்த்திக்கும் ஜூன் 11-ம் தேதி சென்னை மோகன விலாஸில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினார்கள். வாழ்க, மணமக்கள்!



கொச்சித் துறைமுகத்தின் நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். எஸ். வேங்கடராமன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி வி. வேங்கடசுப்பிரமணியத்துக்கும் சென்னை வர்த்தகப் பிரமுகர் ஸ்ரீ ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ சரோஜாவுக்கும் மே 31-ம் தேதி சென்னை மோகன விலாஸில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும், அன்பளிப்புகளும் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!

கிறன். அந்தச் சிறுவனுக்கு நந்திவர்மன் என்று அபிஷேகத் திருநாமம் வேறு வழங்கி யிருக்கிறன்!

நண்பர்களே, இந்தச் சிறுவன் நந்திவர்மனுடைய வரலாறு ஒரு வேடிக்கை. அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பே வருகிறது. இரணியவர்மன் ஒரு கையாலாகாத மனிதன். இவனைப்போய் உதயசந்திரன் கேட்ட போது, தனக்கு அரசாட்சி வேண்டாம் என்று மறுத்து விட்டானும் அந்த மகாப் பிரபு! அதன் பேரில் எத்தனை கேலிக் கூத்து நடந்தது என்கிறீர்கள்! இந்த இரணியவர்மனுக்கு நான்கு திருக் குமாரர்கள்! மூத்தவன் பெயர் ஸ்ரீ மல்லன். அடுத்தவன் ரணமல்லன். மூன்றுவது புத்திர பாக்கியம் சங்கராமமல்லன். அடாடா! எத்தனை அழகான திருநாமங்கள் பாருங்கள்! பெயரெல்லாம் பெரும் பெயர்தான்! இந்தப் பெயரைக் கேட்டு விட்டுக் கிறங்கிப் போய் விடாதீர்கள்! உதய சந்திரன் இந்த மூன்று புதல்வர்களையும் போய் 'ராஜா ஆகிருயா?' என்று நாடகத்திலே கேட்பது போல் கேட்டானும்! இந்தப் பயங் கொள்ளிப் பேதைகள் வேண்டாம் என்று சொல்லி விட்டார்களாம். அதன் பிறகுதான் மாந்தோப்புக்குப் போனுராம் மகாராஜாவைத் தேடி! மகாராஜா என்றுல் அவர் மாமரத்திலே காய்த்துத் தொங்குவாரா என்று உங்களை நான் கேட்கிறேன்! நண்பர்களே! மாந்தோப்பிலே விளையாடிக் கொண்டிருந்த நான்காவது புதல்வனுகிய சிறுவனை அழைத்து வந்து, மகாராஜா என்று சிம்மாசனத்திலே வீற்றிருக்கும்படி செய்த அந்த உதய சந்திரனின் தந்திரத்தை நினைக்க நினைக்க என் நெஞ்சம் துடிக்கிறது! தானே அரச பீடத்தில் அமர்வதற்குப் பதிலாக இப்படி ஒரு பாவையை அரியணையில் அமர்த்தியிருக்கிறன் உதய சந்திரன். அதுவும் ஒரு சூழ்ச்சி. ஆனல் அந்தச் சூழ்ச்சி இனிநெடுநாள் ஓடாது! நாம் ஆறு பேரும் அறுபதினுயிரம் வீரர்களுக்குச் சமானம். இந்த வினுடி முதல், நாம் ஒவ்வொருவரும் பதினுயிரம் பேரைப் போல் வேலை செய்து படை திரட்டுவோம்! இனி நமக்கு ஓய்வு இல்லை; உறக்கம் இல்லை. இந்தச் சித்திர மாயனை என்றைக்குச் சிம்மாசனத்திலே அமர்த்துகிறேமோ அன்று தான் நம்முடைய மன வேகந அடரும். என்ன சொல்கிறீர்கள்?" இப்படிக் கேட்டான் விநந்த தலைவ

"அப்படியே! அப்படியே செ வோம்!" என்ருர்கள் நான்கு மனி கள். முதலிலேயே ஒரு மாதிரி வட்ட சுற்றிய அந்த ஐந்தாவது மனி மட்டும், மௌனமாக இருந் வார்த்தை பேசாமல் தலையை மட்டு 'சரி' என்ற பாவனையில் ஆட்டின இதைத் தலைவன் கவனித்தாலு பொருட்படுத்தாதவன் போல் சித்தி மாயனைப் பார்த்துக் கேட்டான்:—

"என்ன தம்பீ! நான் சொன்ன சரிதானே?"

தம்பி என்று கூப்பிட்டதனல் சி திரமாயன் முகத்தில் ஒரு கலவர உண்டாயிற்று. இதைப் பார்த்தது தான் தலைவனுக்கு நினைவு வந்தது.

"ஓ! மறந்தே விட்டேன்! நா சொன்னது சரிதானே, இளவரசே!" என்று கேட்டான் தலைவன்.

"மிகவும் சரி" என்று ஆட்டு குட்டியைப் போலக் குரலோசையை உதட்டின் ஓரமாக ஒதுக்கி வெளி யிட்டான் சித்திரமாயன். பயம் அவ னுக்கு அடங்கவில்லை! உண்மையில் தலைவனுடைய பேச்சைக் கேட்டதும் அந்தப் பயம் இன்னும் அதிகமா யிற்று, — அரசன் ஆகுவது, என்றுல் இத்தனை இருக்கிறதா என்று எண் ணிப் பார்ப்பது போல!

"நீங்கள் எல்லாரும் நான் சொன்ன வார்த்தைகளை ஒப்புக் கொண்டு விட்டதால், இனிமேல் இந்தச் சபை கலையலாம் என்று நினைக்கிறேன். எப்பொழுது நாம் இந்தப் பலி பீடத்திலே உறுதி யெடுத்து விட்டோமோ, அப்பொழுதே நமக்குள் அபிப்பிராய பேதம் அடிபட்டுப் போயிற்று!"

இவ்வாறு தலைவன் சொல்லி நிறுத்தியதும், இதுவரை மௌனமாக இருந்த ஐந்தாவது மனிதர் இப்பொழுது எழுந்து நின்ருர். தான் பேச நினைத்த விஷயத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவை மனத்துக்குள்ளேயே சொல்லிப் பார்த்துக் கொள்வது போலச் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு பேச ஆரம்பித்தார்.

தலைவன் சினத்தை அடக்கிக் கொண்டு, தன்னுடைய செவிப் புலனை நன்ருகக் கூர்மைப் படுத்திக் கொண்டான்!

(தொடரும்)

கடல் கண்ட கனவு

அத்தியாயம் 12

யாழின் நரம்புகள்

சித்திராங்கனுக்கு அதற்கு மேல் ங்கீதத்தில் மனம் செல்லவில்லை. காடும்பாளூர்க் குங்கும மாளிகைக் நள்ளே, இசைக் கூடத்தில் குழுமி ருந்த பிரமுகர்களுக்கு மத்தியிலே போய் ஆசனத்தில் அமர்ந்தான் அல் வா? யாழ் நங்கையின் அற்புதமான இசையிலும், அவளுடைய மேனியின் மோகன எழிலிலும் மனத்தைத் ிளைக்க விட்டுக் கொண்டே இருந்தவ னுக்கு, அந்த நங்கையின் முகத்திலே துவண்ட வேதனை வியப்பையும் குழப் பத்தையும் தந்தது. நேரம் ஆக ஆக, இந்தக் குழப்பமும் 'வேதனை ஏனோ?' என்ற சிந்தனையும் அவன் உள்ளத் தைச் சாறு பிழிந்தன! எந்தப் பேரி யாழுக்காக அவன் கடல் கடந்து இத் தனை தூரம் வந்திருக்கிறானோ, அந்தப் பேரியாழின் இசை கூட அவனுடைய செவியில் நுழையவில்லை. தன் எதிரே யிருந்து யாழ் வாசித்துக் கொண் டிருந்த அந்த நங்கையின் முகத்திலே, இசையின் லயத்தையும் மீறிக் கொண்டு இத்தனை வன்மையாக ஒரு வேதனை தெளிய வேண்டுமானால், அது என்ன என்ற சிந்தனையிலேயே பூபதி ஈடுபட்டான்!

சித்திராங்கன் அந்த இசைக் கூடத் திலேதான் இருந்தான். ஆனால் அவ னுடைய மனம் அங்கில்லை. அது யாழ் வாசித்த எழில் நங்கையின் வாழ்க்கை யைப் பற்றிய கற்பனைகளிலே வட்டம் சுற்றி வந்து கொண் டிருந்தது.

அதே நேரத்தில் குங்குமமாளிகையின் வாசலிலே ஒரு ரதம் வந்து நின்றது. அந்த ரதத்திலிருந்து நமக்கு ஏற்கனவே



அறிமுகமான ஒருவர் இறங்கினார். ஆடம்பரமான பொன் சரடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பீதாம்பர அங்கியை அணிந்திருந்த அந்த ஆஜானுபாகுவான மனிதரை, இதற்கு முன்பு நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அப்பொழுது அவர் இந்தப் பட்டாடைகளிலும் பீதாம்பர அங்கிகளிலும் தோற்றம் அளிக்கவில்லை. போர் வீரனைப் போல உடைவாளோடு காணப்பட்டார். ஒரு விநாடியில் வெள்ளைக் குதிரையில் ஏறி நம் கண் முன்னால் இருந்து மறைந்து விட்டார் அவர்! இப்பொழுது ரத சாரதி அவருக்கு முன்னால் இறங்கி வழி நடத்தவும், பின்னால் ஒரு வீரன் உத்தரவை எதிர்நோக்கிப் பயபக்தியோடு தொடரவும், கம்பீரமாகக் குங்கும மாளிகைக்குள்ளே நடக்கிறார் அவர்!

ஆமாம்! அந்தப் பெரும் வீரரை நாம் இதற்கு முன்பு பார்த்தது, காஞ்சிமா நகரிலிருந்து பிரிந்த நெடுஞ்சாலையிலேதான்! ஆலமரத்தின் அடியிலே கருங் குதிரையிலே மறைந்த இரண்டு மனிதர்களை, வேறு ஒரு மரத்திலிருந்து வேவு பார்த்துக் கொண்டே குதித்து வந்தார் அல்லவா? பிறகு ஏதோ ஓர் அடையாள ஓசையைக் கூவி இன்னும் நான்கு வீரர்களையும் ஐந்து குதிரைகளையும், வரவழைத்தார் அல்லவா? பின்னர் வெள்ளைக் குதிரையிலே ஏறி அந்தக் கருங்குதிரை வீரர்கள் இருவரையும் பின்தொடர்ந்து சென்றார் அல்லவா? அதே வீரதீர புருஷர்தான் இப்பொழுது அத்தனை கோலாகலமான விமரிசையோடு, ஆழ்ந்த யோசனைகள் செய்த வண்ணம் குங்கும மாளிகைக்குள்ளே நுழைகிறார்!

அந்த வீரர் இசைக்கூடத்தின் முகப்பிலே வந்ததும், சபையில் ஒரு பரபரப்பு உண்டாகிறது. நாலைந்து பேர் எழுந்து அவரை நோக்கிப் பணிவோடு வந்து வரவேற்கிறார்கள். கூடத்தில் 'கசமுச' என்று ஒருவரோடு ஒருவர் சொல்லிக் கொள்ளுகிறார்கள், 'உதய சந்திரர் வருகிறார்' என்று! குங்கும மாளிகையிலே பூபதியை வரவேற்ற கிழவர் 'விறு விறு' என்று ஓட்டமும் நடையுமாகச் சென்று உதய சந்திரரைக் கூப்பிய கைகளோடு வணங்கி உள்ளே அழை கிறார். யாழ் நங்கைக்கு அருகே இருந் அவளுடைய அன்னை எழுந்து நின் வணங்குகிறாள். யாழ் நங்கையும் ஒ கணம் யாழிலே ஓடிய விரல்களை நிறுத்தி விட்டு, அந்த யாழை உடலோடு அணைத்தவாறு இரண் கைகளையும் கூப்பி வணங்குகிறாள்.

உள்ளே நுழைந்த உதயசந்திர சபையை அப்படியும் இப்படியு பார்த்துக் கொண்டே ஒரு விநாடி நிற்கிறார். இதற்குள் ஆசனங்களில் இருந்தவர்களில் சிலர் எழுந்து அவரை அமரும்படி இருக்கை வழங்கு கிறார்கள். உதயசந்திரர் வலப் பக்கமாக நடந்து சென்று ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறார்.

ஒரே வேகமாகச் சென்று கொண்டிருந்த சித்திராங்க பூபதியின் சிந்தனை இந்தப் பரபரப்பிலே தடைபட்டு நின்றது. புதிதாக வந்து அமர்கிற அந்த மனிதர் யார் என்று, அவரை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தான் பூபதி. நல்ல உயரம். வன்மையான தேகக் கட்டு. கடினமான உடற்பயிற்சிகளினால் முறுக்கேறி யிருந்த நரம்புகள், புறங்கையிலே தென்னி ஓடிக் கொண்டிருந்தன. முகத்தில் இரத்தத்தின் தெளிந்த ஓட்டம் ஒரு குங்கும வர்ணத்தைப் பூசியிருந்தது. கண்களிலே ஆண்மைக்கும், உள்ளத்தின் வலிமைக்கும், புத்திக் கூர்மைக்கும் சான்றாக ஒரு பிரகாசம் மினுமினுத்துக் கொண்டிருந்தது. 'யாரோ முக்கியமான படைத் தலைவராக இருக்க வேண்டும்! ஆனால் இவருடைய வரவை இந்தச் சபையினர் இப்பொழுது எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் இந்தக் குங்கும மாளிகையின் கிழவர் இவரை வரவேற்ற விதத்தில் ஒரு திகைப்பும், படபடப்பும் நன்றாகத் தெரிகின்றன' — இவ்வாறு மனத்துக்குள் எண்ணிக் கொண்டான் சித்திராங்கன்.

சங்கீதம் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தது. சபையில் அமர்ந்திருந்த பெரிய பெரிய பிரமுகர்கள் எல்லாரும் இதுவரை முற்றிலும் இசையிலேயே ஈடுபட்டிருந்தவர்கள், இப்பொழுது அடிக்கடி உதயசந்திரரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்

...ார்கள். பூபதிக்கு அருகிலே கிழவர் வந்து அவனுடைய ஆசனத்திலே சாய்ந்து கொண்டு நின்ற வண்ணம் அவன் காதில் இரகசியமாகச் சொன்னார்: "இவர்தான் உதய சந்திரன். வில்வள நாட்டின் அதிபதி. இப்பொழுது பல்லவ சாம்ராஜ்யத்துக்கே இவர்தான் ஜீவநாடி. இவர் கீறிய கோட்டை நந்திவர்மரோ அவருடைய தந்தை இரணிய வர்மரோ மீறித் தாண்ட மாட்டார்கள்! இவருடைய பெயரைக் கேட்டாலே மக்கள் எழுந்து நின்று விடுவார்கள். அத்தனை மரியாதை!"

இவ்வாறு பூபதியின் காதிலே ஒவ்வொரு வார்த்தையாகக் கொண்டு பதித்தார் கிழவர். அவருடைய பேச்சின் ஊடாகத் தவழ்ந்த உணர்ச்சியைப் பார்த்தால், இத்தனை முக்கியமான மனிதர் அங்கே இந்த நேரத்தில் வருவார் என்று எதிர்பார்க்கவே யில்லை போலத் தோன்றிற்று. அந்தத் திகைப்புக்கும் வியப்புக்கும் மத்தியிலும் கூட அவர் வரவினால் ஒரு பெருமிதமும், குங்கும மாளிகைக்கே ஒரு கௌரவமும் ஏற்பட்டது போல இருந்தது, கிழவரின் உணர்ச்சியோடுகூடிய வார்த்தைகளிலே இழைந்த கர்வம்! அந்தக் குங்கும மாளிகை அவ்வளவு செல்வாக்கு நிரம்பிய இடம் என்பதைப் பூபதி உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பு, கிழவருக்கு மிகவும் முனைப்பாக இருந்தது.



சித்திராங்க பூபதி கிழவரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அவனுடைய மனம் அந்த உதயசந்திரன் என்ற வார்த்தையில் பதிந்து நின்றது. 'இந்தப் பெயரை இதற்கு முன் எங்கேயோ கேட்டிருக்கிறோமே, யார் சொன்னார்கள் நம்மிடம்? விடுதித் தலைவன் இவரைப் பற்றி என்ன நோக்கத்தோடு சொல்லியிருக்க வேண்டும் என்று தெரியவில்லையே! அவன் இவரைப் பற்றிச் சொல்லுவதற்கு முன்பே இந்தப் பெயரைக் கேட்டிருக்கிறோமே.'

இப்படி நினைத்துப் பார்த்த பூபதிக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. மரக்கலத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, புலவரையா தான் முதன் முதல் உதய சந்திரனைப் பற்றித் தன்னிடம் சொன்னார். ஆமாம்! பல்லவ சாம்ராஜ்யத்தில், பட்டத்துக்கு இளவரசு இல்லாமல் பரமேசுவர வர்மர் இறந்ததும், உதயசந்திரனுடைய முயற்சியினால்தான் நந்திவர்மன் என்ற சிறுவன் பட்டம் சூடினான் என்று புலவரையா விவரமாகச் சொன்னார்! அப்படியானால் இப்பொழுது இந்தத் தமிழ் நாட்டின் செங்கோலே இந்த வீரருடைய கையிலேதான் இருக்கிறதா! அத்தனை முக்கியம் பொருந்திய பெரியவரா இவர்! இவர்கூட இந்த மர்ம மாளிகைக்கு வருகிறாரே! இவருக்குங்கூட இந்தப் பேரியாழின் இசையிலே இத்தனை ஈடுபாடா!

சித்திராங்க பூபதி சித்தர் சொன்ன வார்த்தைகளை நினைத்துப் பார்த்தான். 'இந்தப் பல்லவ சாம்ராஜ்யம் இன்றிருக்கிற நிலையில் பாட்டாவது கலையாவது களிமண்ணாவது என்றெல்லாம் சித்தர் கூறினாரே!' அப்படியானால் இந்த உதய சந்திரர் காஞ்சிமா நகரிலிருந்து நைவளம் என்ற ராகத்தைப் பேரியாழிலே வாசித்துக் கேட்பதற்காகவா இத்தனை தூரம் வந்திருக்கிறார்! அதிலும் ராஜ்யம் முழுதும் ஏகப்பட்ட குழப்பங்களிலே சிக்கித் தவிக்கும் இந்தச் சமயத்தில் இதற்காகவா இவர் இங்கே வந்திருக்கிறார்! இராது! இந்தக் குங்கும மாளிகைக்குள்ளே அடியெடுத்து வைத்ததுமே தனக்கு எத்தனை பெரிய விபரீதங்கள் எல்லாம் நேர்ந்து விட்டன! இத்தனை பெரிய பொல்லாத மாளிகைக்குள்ளே, இவ்வளவு பெரிய ராஜ தந்திரி, சங்கீதம் கேட்பதற்கு என்று வரப்போகிறார்! அப்படி ஆசை யிருந்தால் அரண்மனைக்கு அழைத்து அல்லவா ஒரு இசை விருந்து ஏற்பாடு செய்வார்!

பூபதிக்கு இப்பொழுது விஷயம் தெளிவாகப் புரிந்தது. இந்தக் குங்கும மாளிகையிலே வந்து கூடியுள்ள மனிதர்களைப் பற்றியும், இங்கே நடைபெறும் காரியங்களைப் பற்றியும் இந்த உதயசந்திரருக்கு உள்ளத்தில் ஏதோ ஐயப்பாடு உண்டாகி யிருக்கிறது. ஏதோ ஒரு பெரிய இரகசியத்தை உளவு காண வேண்டும் என்று அவருடைய உள் மனத்தில் ஓர் எண்ணம் வேலை செய்கிறது. நிச்சயம், அதற்காகத்தான் இப்பொழுது இங்கே வந்திருக்கிருர்.

இப்படி நினைத்ததும் பூபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு வேளை உதய சந்திரருடைய சந்தேகத்துக்கும் ஆராய்ச்சிக்கும் வலம்புரித்தீவின் அரசகுமாரனுகிய தானேதான் இலக்காகி இருக்கக் கூடுமோ ?— இந்த மாதிரி நினைத்ததும், அவன் அமர்ந்திருந்த ஆசனமே ஆட்டம் கொடுத்தது பூபதிக்கு. அப்படியும் இப்படியும் நகர்ந்து உட்கார்ந்து கொண்டு நிலைமையைச் சமாளித்துக் கொண்டான்.

இதன் பிறகு சங்கீதம் நீண்ட நேரம் நடைபெற வில்லை. அங்கே கூடியிருந்த இசையன்பர்களின் மனம் உதய சந்திரனுடைய வரவினுல் கலக்கம் அடைந்ததாக மிக நன்ருகத் தெரிந்தது. அதிலும் அந்தக் குங்கும மாளிகைக் கிழவர் பட்ட பாடு பரிதாபமாக இருந்தது. கலவரப்பட்டது கூட அத்தனை பரிதாபமாக இல்லை. அந்தக் கலவரத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டு, முகத்தில் சிரிப்பையும் பெருமையையும் வரவழைத்துக்கொள்வதற்காக அவர் பட்ட அரும்பாடு, யாருடைய மனத்திலும் இரக்கம் உண்டாக்குவதாக இருந்தது! பாவம், பூபதி இதைக் கவனித்தான். அதோடு மட்டும் இல்லை. உதய சந்திரரும் இதைக் கவனித்து அவ்வப்போது தமக்குள்ளேயே புன்முறுவல் செய்து



காண்டதையும் சித்திராங்கன் ர்த்தான்.

ஒரு நாழிகை நேரத்தில் 'சங்கீத னிகை' என்று பெரும் பெயரில் ழைக்கப்பட்ட அந்த இசை விருந்து லைந்தது. சபையிலிருந்து ஒவ்வொரு ரமுகராக வெளியே வந்தார்கள். ஆச்சரியம் என்ன வென்றால், கூட்டம் முழுதும் கலைகிறவரை உதய சந்திரர் மது இடத்தை விட்டு நகரவே இல்லை. இசைக் கூடத்திலிருந்து வெளியே செல்லும் ஒவ்வொரு மனித நும் அவரை வணங்கிச் செல்லும் போது, இவரும் கையைக் கூப்பிக் கொண்டே அந்த மனிதர்களின் தோற் றத்தையும் முகக் குறிப்புக்களையும் மௌனமாக ஆராய்ந்தார்! இதைப் பூபதி நன்றாகப் பார்த்தான்—கடைசி யாகத் தன்னுடைய முறையும் வருமே, தான் என்ன செய்வது என்ற எண் ணத்தில்!

சபை கலைந்ததும், யாழ் நங்கையும் அவளுடைய தாயாரும் உதய சந்திர ருடைய இருக்கையை நோக்கி நடந்து வந்தார்கள். அவர் எழுந்து நின்று கொண்டார்.

"கைவளம் அபாரமாக இருக்கிறது. அகத்தியருடைய இசை நூலில் இந்தப் பண்ணைப் பற்றி மிக உயர்வான இலக் கணங்களோடு சொல்லியிருக்கிறது. இன்று அதன் உண்மையைச் செவி குளிர உணர்ந்தேன். இசையை ஏட் டிலே பார்த்து அநுபவிக்க முடியுமா! ஏடு எழுந்து வந்து விளையாட வேண்



டிய இடம் பேரியாழ்தான்! அகத்தியர் எழுதிவைத்துப் போன இசைத் தமிழ் ஏடு, இன்று எங்களுக்கு முன்னல் ஒலி வடிவிலே எழுந்து நின்று பேசியது!"—இவ்வாறு பாராட்டினார் உதயசந்திரன்.

கிழவர் குறுக்கே வந்து பேச ஆரம்பித்தார்.

"தங்களைப் போன்ற பிரமுகர்களும், அரசியல் மேதைகளும் இசையிலே இத்தனை ஆர்வம் கொண்டு, இத்தனை காத தூரம் வந்து நமது குங்கும மாளிகைக்கு எழுந்தருளியது நாங்கள் செய்த புண்ணியம்!" என்றார் கிழவர். இந்த இடத்தில் அந்த அம்மாள்—நங்கையின் தாயார்—பேசினாள்.

"நாம் செய்த புண்ணியம் மட்டுமா! சங்கீதமே புண்ணியம் செய்திருக்கிறது என்றல்லவா சொல்ல வேண்டும்!"

அப்படிச் சொல்லிவிட்டு, முகஸ்துதி செய்யும் போது, ஒரு சிரிப்பு வருமே அந்தச் சிரிப்பைச் சிரித்தாள் அந்த அம்மாள். உதய சந்திரர் சிரிக்கவில்லை. புன்முறுவல்கூட இல்லை. நிதானத்தோடு அந்த அம்மாளையே கூர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னார்:

"அம்மா! என்னிடம் நீங்கள் இத்தனை மதிப்பு வைத்திருந்தால் அது பற்றி மகிழ்ச்சிதான். எனினும் ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இசை இசைக்காகவே இருக்கும்வரை நமது நாட்டுக்கும் இசைக்குமே நல்லதுதான்!"

இப்படி ஒரு வாக்கியம் வந்ததும் தாயாருடைய முகத்தில் ஏனோ கலவரம் ஏற்பட்டது! இதைக் கவனித்து நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டே, உதயசந்திரன் அடுத்த வாக்கியத்தைச் சேர்த்தார்.

"இசை இசைக்காகவே என்று இருக்க வேண்டும். என்னைப் போன்ற மனிதர்கள் அதை மதிக்கிறார்கள் என்பதை ஒரு பெரிய காரியமாகப் பாவிக்கக் கூடாது. அதற்காகச் சொல்லுகிறேன். பிறர் பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு இயங்க ஆரம்பித்து விட்டால், எந்தக் கலையும் தேய ஆரம்பித்து விடும்! நமக்கு நாம் லயப்பட்டு ஒரு காரியம் செய்தால், பிறருடைய லயமும் தானாக ஏற்படும். குயில் எதற்காக பாடுகிறது! நம்முடைய பாராட்டை எதிர்பார்த்தா?"

இப்படிப் பேசினார் உதயசந்திரன். பூபதி தன்னுடைய ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தவன் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இப்பொழுது அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடலாமா அல்லது மேலும் என்ன நடக்கிறது என்பதைக் கேட்கலாமா என்று புரியாமல் ஒரு விநாடி தயங்கினான். இதற்குள் உதயசந்திரன் இவன் பக்கமாகத் திரும்பி விட்டார். வேறு வழியின்றிக் கைகூப்பி வணங்கினான் பூபதி. உதயசந்திரரும் மிக்க பரிவோடு கைகூப்பினார்.

கிழவர் குறுக்கே வந்து பேச ஆரம்பித்தார்: "இவர் தொலை தூரத்திலிருந்து வந்திருக்கிறார். யாழ் இசை என்றால் இவருக்கு உயிர்!"

சித்திராங்க பூபதிக்கு அந்தக் கிழவரைக் கடித்து விழுங்கி விடலாம் போல ஆத்திரம் வந்தது. ஆனாலும் வலம்புரித் தீவு என்ற வார்த்தையை உபயோகப் படுத்தாமல் விட்டாரே, அதற்காகவாவது பொறுமையாக இருக்க வேண்டும் அல்லவா?

உதய சந்திரர் கிழவருடைய வார்த்தையை அத்தனை அக்கறையோடு கேட்டதாகத் தெரியவில்லை.

"மகிழ்ச்சி" என்று சொல்லிக் கொண்டு, அதற்குமேல் பூபதியைப் பார்த்து ஒன்றுமே பேசாமல், யாழ் நங்கையை நோக்கிக் கீழ்க்கண்டவாறு சொன்னார்:

"அம்மா! உன்னுடைய இசையில் உன் திறமையை மட்டுமல்லாமல், உன் உள்ளத்தின் நிலைமையையும் உன்னுடைய இயல்பான பண்புகளையுமே கண்டு கொண்டேன். மனப் பூர்வமாக உன்னையும் உன் இலட்சியங்களையும் ஆசீர்வதிக்கிறேன். நான் அடுத்த முறை இந்தப் பக்கமாக வரும்போது இரண்டு பெரியார்களை இங்கே அழைத்து வருகிறேன். அந்த இருவரும் இலக்கியமும் இசை இலக்கணமும் நன்றாகக் கற்றுத் தேர்ந்த பண்டிதர்கள். ஒருவர் வைஷ்ணவப் பெரியார். இன்னொருவர் இலங்கைத் தீவிலிருந்து வந்துள்ள சிவப் பழம்! இருவரும் இந்த இசையைக் கேட்

ால் . எதிர்காலத்தில் நமது நாட்க்கே பயன் உண்டு!''

இப்படிச் சொல்லிவிட்டு அங்கிருந்து றப்பட்டார் உதயசந்திரன்.

சித்திராங்கன் மௌனமாக இந்த டப்புக்களை யெல்லாம் பார்த்துக் காண்டிருந்தபோது, ஒரு நுட்பத் தக் கூர்மையாகக் கவனித்தான்.

“உன்னையும் உனது இலட்சியங் ளையும் மனப்பூர்வமாக ஆசீர்வதிக் றேன்'' என்று நங் கையிடம் உதயசந் ிரன் சொன்ன பாது, அன்னையின் கம் சுருங்கியது. அந்த முகத்தில் வதனை துவண்டது. ங்கையோ? சற்று ன்புவரை வேதனை ளிந்த அவளுடைய முகத்தில் இந்த ார்த்தைகள் வந்த ும், வேதனை மறைந்து ஒரு லர்ச்சி ஏற்பட்டது. இந்த விநோதமான மாறுபாட்டைப் பூபதி நன்றாகப் ார்த்தான்.

உதய சந்திரன் அங்கிருந்து சென்ற தும் கிழவர் மிக ும் தைரியத்தோடு, மறுபடியும் குறுக்கே வந்து பேச ஆரம்பித்தார்.



“என்னம்மா! தாயும் மகளும் இப்படிப் பேசாமல் நிற்கிறீர்களே! இந்த இளைஞர் நம்முடைய மாளிகை யின் விருந்தாளி! அவரை உபசரிக் கும் அழகு நன்றா யிருக்கிறதே! மாமல்லபுரம் விடுதித் தலைவராக்கும் இவரை அனுப்பி வைத்திருக்கிறார்!'' என்றார் கிழவர்.

“ஓ! தெரியுமே!'' என்று ஏககாலத் தில் இருவரும் சொல்லிக் கரம் கூப்பி னார்கள். அப்பொழுது நிலவுப் பெண் ணென அந்த யாழ் நங்கையின் முகத் தில் அரும்பிய மோகனப் புன்னகை பூபதியை என்னவோ செய்தது!

“வலம்புரித்தீவின் அரச குமாரர்!'' என்றார் கிழவர் அடுத்தபடியாக! இந்த வார்த்தைகள் நங்கையைவிட அவளுடைய தாயாரை மயக்கின என்பது அவளுடைய முகக் குறிப்பில் தெரிந்தது. கண்களை அகல விரித்துக் கொண்டே, “அந்த விவரத்தை நீங்கள் ஒருவரும் இதுவரை சொல்லவில்லையே!'' என்றாள் அவள், வியப்போடு.

“அது பெரிய இரகசியம் அம்மா! விடுதித் தலைவர் அந்த இரகசியத்தை வெளியே சொல்லக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளை யிட்டிருக்கிறார்!'' என்று சொல்லிக் கொண்டே ஒரு பைத்தியச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே கிழவர் மேலும் பேசினார்:

“காஞ்சிமா நகரத்திலுள்ள கடிகையிலே சேர்ந்து கல்வி கற்பதற்காக வந்திருக்கிறார்!''

கிழவரின் இந்த வார்த்தைகள் பெரிய அம்மாளுக்கு ஒரு பொருட்டாகவேபடவில்லை. ஆனால் நங்கை இந்த வார்த்தைகளைக் கேட்டதும் முகம் மலர்ந்தாள். அந்த மலர்ச்சி பூபதியின் முகத்தையும் அகத்தையும் மலரச் செய்தது.

“கல்வி கற்க வந்திருக்கிறேன் என்று பொய்யாகச் சொல்வதே இந்த நங்கைக்கு இத்தனை ஆனந்தம் தருகிறதே! பொய்யே இத்தனை மகிழ்ச்சி தருமானால், மெய்யாகவே நான் கல்வி கற்றால் எத்தனை மகிழ்ச்சி அடைவாள் இவள்!''—இவ்வாறு எண்ணிக் கொண்டே புன்முறுவல் செய்தான் பூபதி, நங்கையை நோக்கி.

கிழவர் பேச ஆரம்பித்தார்.

“தம்பி! நாழிகை ஆகிவிட்டது. நீங்கள் எல்லாம் அரச குமாரர்கள். பசியும் தாகமும் தாங்க முடியாது உங்களால். மாடிக்குப்போய் உணவை முடித்துக் கொண்டு, நிலா முற்றத்திலே கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளலாமே!''

கிழவருடைய இந்த வார்த்தைகள் நாராசமாக இருந்தன! பேரியாழனது

பெண் உருவம் எடுத்துத் தனக்கு முன்னால் வந்து நின்று பேசுவது போலக் காட்சி தரும் அந்த நங்கைக்கு முன்னால் பசியாவது, தாகமாவது! கிழவர் இப்பொழுது சொன்ன பிறகு தான், இன்னும் உணவு உண்ண வில்லை என்ற விஷயமே ஞாபகம் வருகிறது. அதே சமயம் அந்த உணவு எதற்கு என்றும் தோன்றுகிறது! ஆனாலும் இந்த எண்ணத்தை யெல் லாம் வெளியே காட்டிக் கொள்ள லாமா? 'சரி' என்றான் பூபதி.

சற்று முன்னால் ரதங்களும் புரவி களும் பிரதானியர் கூட்டமுமாக மொய்த்து நின்ற குங்கும மாளிகை, இப்பொழுது மனித நடமாட்டமே இல்லாத மர்ம மாளிகையாக மாறி யது. தன்னந் தனியாக மாடியிலே ஏறிப் படிம விலாசத்துக்குள்ளே நுழையும்போது, சித்திராங்கன் இந் தக் காட்சி மாற்றத்தையே நினைத்து நினைத்து அதிசயித்தான். கடலில் பிரயாணம் செய்த காலத்தில் மரக் கலத்திலே அமர்ந்தவாறு, அன்றொரு நாள் புலவரையா பூபதிக்கு ஒரு திருக்குறளை எடுத்துச் சொன்னார். 'நிலையாமை' என்பது பற்றி வள்ளு வர் என்ற மகான் பாடிய பாடல் அது. ஒருவருக்குச் செல்வம் வரு வதும், போவதும், இசை யரங்கத் தில் மனிதர்கள் கூடுவதும் கலைவதும் போல நிலையற்றது என்று திருக் குறள் சொல்லுகிறது. அதைப் புலவர் ஐயா பூபதிக்கு விளக்கம் செய்தார்.

கூத்தாட்(டு) அவைக்குழாத் தற்றே
பெருஞ்செல்வம்;
போக்கும் அது, விளிந் தற்று

பெருஞ் செல்வம் வருவதானது, கூத் தாட்டு அவைக்குழாம் போலத்தான். அரங்கிலே மக்கள் நெருக்கமாகக் கூடுவது போலத்தான். பிறகு, போக் கும், அந்தச் செல்வம் போவதும், அது விளிந்தற்றே—அந்த அரங்கம் மறு கணத்தில் அறவே கலைந்து போவது போலவேதான்!


புலவரையா இந்தக் குறளுக்கு அரை நாழிகை நேரம் மரக்கலத்திலே அரு மையாக விளக்கம் சொன்னார்! இப் பொழுது அரை நொடியிலே ஏற் பட்ட காட்சிமாற்றம் அந்தக் குற ளுக்குப் பதவுரையும், பொழிப்புரையு

மாகச் சித்திராங்கனுடைய க முன்னே நிதரிசனமாகத் தோ மளித்தது! சற்று நேரத்துக்கு மு வரை அந்த இசைக்கூடத்திலே ந பெற்ற கோலாகலம் என்ன! அட எத்தனை பெரிய பிரமுகர்கள்! எத்த ஆர்ப்பாட்டங்கள்! இப்பொழு ஒரு விநாடியில், எல்லாம் மறை சூன்யமாகி விட்டதே! ஒரு ம னுக்குச் செல்வம் வருவதும் போ தும் இப்படித்தானே!' எத்த உண்மையான வார்த்தை!

சித்திராங்க பூபதிக்கு இது மனத் என்னவோ செய்தது. இரன் மூன்று நாழிகை நேரம், இசைச் நிலையிலே அழகுப் பிம்பத்தின் எதி இருந்து விட்டு வந்ததும், இப்ப பட்ட ஒரு சோக நினைவு எழு பூபதியை வேதனைப் படுத்தியது.

'செல்வம் நிலைக்காது. உண் தான்! அழகு மட்டும்?' இப்ப ஒரு சிந்தனை பூபதிக்கு உண்டாயிற்

'அழகும் செல்வத்தைப் போல தான். இங்கே கூடிய மனிதர்களி எத்தனை பேருக்கு மெய்யான இ ஞானம் இருக்கப் போகிறது? அர கிலே கூடிய இத்தனை பிரமுகர்களி யாழைக் கேட்பதற்கு என்றே வந் வர்கள் எத்தனைபேர் இருக்கக் கூடு பேரியாழ், பேரியாழ் என்று து துடித்துக் கொண்டிருந்த தன்னை அந்த நங்கையின் எழில் என்னவே செய்ததே! தன்னுடைய சிந்தனை எங்கெல்லாமோ வட்டம் சுற் விட்டதே! அப்படியானால் மற்றவ களைப் பற்றிச் சொல்லவா வேண்டும் இதையெல்லாம் எண்ணித்தான் அந் ராஜதந்திரி உதயசந்திரர் அப்படி ஒ போடு போட்டாரோ! இசை இசை காகவே இயங்க வேண்டும் என்ற சொன்னாரே! வேறு யார் இத்தனை துணிவோடு இதைச் சொல்ல முடியும் ஆனால் இந்த வார்த்தைகள் நங்கை யின் தாயாரைக் கலவரப்படுத்த வானேன்? அதே சமயம் நங்கை மட்டும் ஏன் சந்தோஷப்பட்டாள்? யாழ் வாசித்துக் கொண்டிருக்கும் போது முகத்தில் ஏதோ ஒரு வேதனை ரேகையாகப் படர்ந்ததே, அதே முகத் தில் உதய சந்திரனின் இந்த வார்த் தைகள் எத்தனை மலர்ச்சியைக் கொடுத்தன? இதற்கெல்லாம் என்ன


அவள் கேட்டது பின்னி சேலைகள்
நீங்களும் அதையே தான் கேட்பீர்கள்!
விருந்துக் கூட்டங்களில்
அலங்காரமாய் எடுப்
பாகத் தோன்றுவதற்கு
பின்னி
ஸில்குகளும்
ஜார்ஜெட்டுகளும்
இன்றியமையாதவை
Grant Rs./H.A.R. I
சென்னை, வடஆர்க்காடு ஜில்லா & தமிழ்நாடு
முழுவதிற்கும் ஸோல்டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
எச். ஏ. ஆர். மகம்மத் & சன்ஸ்
6-ஏ, கிடங்கு தெரு, சென்னை

காரணம்? அன்னைக்கும் மகளுக்கும் ஒரே வாக்கியம் இரண்டு வித மனவேகங்களைத் தருவானேன்!'

பூபதி படிம விலாசத்தில் கட்டிலின் மேல் இருந்து நெற்றியைப் பிசைந்தவாறு ஒரே மோனச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது, படிக்கட்டுக்களில் குமிழ்க் கட்டையின் சத்தம் கேட்டது. நிமிர்ந்து உட்கார்ந்து கேட்பதற்குள், அந்தக் குமிழ்க் கட்டையின் ஓசை படிப்படியாக இறங்கித் தொலை தூரத்திலே மறைந்து விட்டது.

"ஐயா!" என்று குரல் கேட்டுத் திரும்பினான். பணியாள் நின்று கொண்டிருந்தான்.

"உணவு சித்தமாக இருக்கிறது!" என்றான் அவன். இதற்குள் கிழவர் படிம விலாசத்துக்குள்ளே வந்து விட்டார்.

"நீங்கள் எழுந்து சாப்பிட வரலாம். இந்தப் பணியாளை அனுப்பியது போதாது என்று நானே வந்ததன் காரணம் அதுதான். இவன் ஒரு செவிடன். அழைத்து வா என்று சொன்னால், அடித்து வா என்று அவன் காதில் விழும்! மனிதர்களை அடித்துவிட்டு வந்து விடுவான்! அரை மந்தம். அதாவது அரைகுறையாகக் கேட்கும். உயிரான வார்த்தைகள் மட்டும் காதில் விழாது. விழுந்தாலும் கொஞ்சம் மாறி விழும்! மற்றப்படி முழுச் செவிடு இல்லை. முழுச் செவிடாவதற்கு இன்னும் கொஞ்சம் நாள் ஆகும்! சாத்தன் என்று பெயர்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே கிழவர் அவருடைய வழக்கமான பைத்தியச் சிரிப்பைச் சிரித்துக் கொண்டு குலுங்கினார். ஏனோ பூபதிக்கு அந்தச் சிரிப்பு அறவே பிடிக்கவில்லை. இந்தச் சாத்தனைப் பற்றி இத்தனை முக்கியத்தோடு இவ்வளவு சாங்கோபாங்கமாகக் கிழவர் பேசியது ஆத்திரத்தைக் கொடுத்தது.

"இதோ வருகிறேன். நீங்கள் செல்லுங்கள்!" என்று சொல்லி விட்டு உடையை மாற்றுவதற்காகத் தன் உடைமைப் பொருள்களை நெருங்கினான் சித்திராங்கன்.

பூபதியின் பொருள்களுக்கு மத்தியிலேயிருந்த சிறிய மூட்டைக்கு மேலே
விடுதித் தலைவனுடைய நிருப
சுருண்டு கிடந்தது. கட்டிலிலே வை
துப் பிரித்துப் பார்த்தான் அல்ல
அது இப்பொழுது காற்றிலே பற
வந்து அந்த மூட்டையின் மே
விழுந்து கிடக்கிறதா? இராதே. நி
டுக்கு அடியிலே செருகி வைத்த
அல்லவா பூபதியின் நினைவு? அப்
யானால் அதை யாரோ உலைத்
பார்த்து விட்டு அவசரத்தில் அங்
போட்டு விட்டுப் போய் விட்ட
ளா, என்ன?

'விடுதித் தலைவன் கூட இங்
இசை விருந்துக்கு வரக்கூடும்' என
கிழவர் சொன்னாரே. அந்தப் படுபா
இந்த விநாடிவரை வரவில்லை
என்ன காரணமாக இருக்கக் கூடு
இசை விருந்துக்கு வருவதாக அவ
முதலில் திட்டம் போட்டிருக்க வே
டும். இல்லை யென்றால் இந்தக் கிழ
அப்படி ஒரு செய்தியைத் தன்னிட
கூறியிருக்க மாட்டார். இசை வி
துக்குப் புறப்படுவதாக ஏற்பாடுக
செய்து கொண்டிருக்கும் போ
எதிர்பாராமல் ஏதாவது நடந்திரு
வேண்டும். அல்லது இங்கே பு
பட்டு வரும்போது வழியில் ஏதாவ
விபரீதம் நடந்திருக்க வேண்டும். ஒ
வேளை இந்த உதயசந்திரன் வருவ
தலைவனுக்கு முதலில் தெரிந்திருக்கா
பிறகு இதுபற்றிய செய்தி அவனுக்
இரகசியமாக எட்டியிருக்க வேண்டு
அதனால்தான் அவன் இங்கு வருவ
நிறுத்தியிருப்பான். ஆனாலும் அத்த
தூரம் ஒருவருக்குப் பயந்து கொண்
அதனால் தன்னுடைய சூழ்ச்சிகளையே
திட்டங்களையோ நிறுத்தி விடுகிறவ
இல்லையே, அந்தப் பொல்லா
விடுதித் தலைவன்!

இப்படிக் குழம்பிக் கொண்
தன்னுடைய மூட்டையை நெரு
கினான். நடுநாயகமாக நின்றது அன்
கொடுத்தனுப்பிய தந்தப் பேடக
உடனே தாயின் நினைவினால் கண
கலங்கியது. தன்னையும் மீறிய பாச
தினால் அந்தப் பேடகத்தை எடுத்
மீண்டும் ஒரு முறை அதைத் திறந்
பார்த்தான் பூபதி.

'இந்த மூன்றையும்
என்றும் மறந்திடு மகனே!'

என்ற மூவர்ண எழுத்து அவனுடை
கண்களை உறுத்திற்று. (தொடரு

கடல் கண்ட கனவு

பதின்மூன்றும் அத்தியாயம்

எதிரொலி!

கொடும்பாளூர்க் கானகத்தில் இரகசிய மண்டபத்தில் சூழ்ச்சிகள் பலமாக நடந்தபோது, விடுதித் தலைவனோடு கூடிப் பேசிய மற்ற ஐந்து மனிதர்களில் ஒரே ஒரு மனிதர் மட்டும் முகத்தைச் சுளித்துக் கொண்டே எழுந்தார் அல்லவா? அவர் இப்பொழுது பேச ஆரம்பித்தார் :

"சகோதரர்களே! இதுவரை நமது தலைவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நாம் அனைவரும் ஒற்றுமையோடு மௌனமாக இருந்தது சரி. ஆனால் இனி நம்முடைய கருத்தைத் தெரிவித்து அதன் பேரில் தக்கபடி ஆலோசனைகள் செய்து, பிறகுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஏனென்றால் நாம் எடுத்துக் கொண்டுள்ள காரியம் அத்தனை முக்கியம் நிரம்பியது. அந்தக் காரியத்தை எளிதாக நினைப்பதற்கில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தையே பாதிக்கக் கூடிய அத்தனை பெரிய திட்டம் அது. எனவே நாம் ஆறு பேரும் இந்த மண்டபத்திலிருந்து பிரிந்து செல்வதற்கு முன்பு, ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டியது மிக மிக அவசியம்!"

இப்படி அவர் பேச ஆரம்பித்ததும், அவரோடு இருந்த மற்ற நான்கு மனிதர்களும் அவரை மேலே பேசவிடாமல் அப்படியே கீழே அமர்த்துவதற்காக எழுந்து நின்றார்கள். அவர்களுடைய முகத்தில் கோபம் தீவட்டியாக எரிந்து கொண்டிருந்தது. இரண்டு கண்களும் இரண்டு தீப் பந்தங்களைப் போல அந்த நான்கு மனிதர்களுக்கும் சுவாலை விட்டு எரிந்தன! ஆனால் விடுதித் தலைவன் அவர்களைத் தடுத்தான்.

"நண்பர்களே! பொறுமையை இழக்காதீர்கள்! எந்த விஷயமானாலும் நண்பருடைய மனத்தில் உள்ள கருத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். ஆகையால் அவர் சொல்ல வந்த விஷயத்தைப் பொறுமையாகக் கேட்போமாக!"



இப்படி விடுதித் தலைவன் சொன்னதும் அந்தச் சபையில் நிம்மதி உண்டாயிற்று. அந்த மனிதர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"நண்பர்களே! நான் பேசக் கருதுவதைக் கேட்பதற்குக்கூட உங்களுக்குப் பொறுமையில்லாதிருப்பதைப் பார்த்தால், எனக்கு மனம் வேதனைப் படுகிறது. நாம் அனைவரும் நம்முடைய நகரங்களிலிருந்து இங்கே புறப்பட்ட போது நீங்கள் நான்கு பேரும் எனக்குக் கொடுத்த நம்பிக்கை மொழியை மறந்து விட்டீர்களா? என்னோடு துணைக்குக்கூட எவ்விதமான காவலும் இல்லாமல், உங்களை மனப்பூர்வமாக நம்பி இங்கே தன்னந் தனியாக வந்திருக்கிறேன் என்று நினைத்துத் தானே என்னை இப்படி அச்சப்படுத்துகிறீர்கள்; இது நியாயமா என்று கேட்கிறேன். எந்தத் தமிழ் நாட்டின் வீர பரம்பரைக்காகப் போரிடுவதாகச் சொல்கிறீர்களோ, அந்த வீர பரம்பரையின் மரபுக்கே இழுக்கான முறையில் அல்லவா என்னை வஞ்சமாகப் பயமுறுத்துகிறீர்கள்—"

இந்த இடத்தில் விடுதித் தலைவன் எழுந்தான்.

"பெரியவரே! அவசியம் இல்லாத பேச்செல்லாம் எதற்கு? உங்களை அப்படியெல்லாம் பயமுறுத்தும்படி நான் விட்டு விடுவேனா? ஏன் இந்தப் பதற்றம்? நீங்கள் சொல்ல வந்த விஷயத்தைத் தாராளமாகச் சொல்லுங்கள். அதைக் கேட்பதற்காகத் தானே நான் ஆவலோடு காத்திருக்கிறேன்! இவர்களை ஏன் கோபிக்கிறீர்கள்? பாருங்கள், இவர்கள் இப்பொழுது எத்தனை பொறுமையாக இருக்கிறார்கள்! ஆகையால் பேசுங்கள்; நண்பரே, பேசுங்கள். விஷயத்தைச் சொல்லுங்கள்!"

தலைவனுடைய இந்த வார்த்தைகளைச் செவியிலே வாங்கியும் வாங்காமலுமாக, ஓர் அலட்சிய பாவனையில் அந்த ஐந்தாவது மனிதர் தம்முடைய கருத்தைத் தொடர்ந்து பேசினார்:—

"சகோதரர்களே! நீங்கள் அச்சம் உண்டாக்கினாலும் சரி, அரவணைத்தாலும் சரி. எனக்குக் கவலையில்லை. நான் சொல்ல வந்ததைச் சொல்லாமல் அமரப் போவதில்லை. அது என்னவென்றால், ஆதிரையன் என்ற வேளிர் தலைவரைப் பற்றி நமது விடுதித் தலைவர் சொன்ன வார்த்தைகள் என்னைத் துன்பப் படுத்தின. அதே சமயம், நந்தி வர்ம பல்லவரையும் இரணிய வர்மரையும் பற்றி நான் நினைத்திருந்த தவறான கருத்து மாறும் படியாக இருக்கிறது.
இப்பொழுது இங்கே கேள்விப்பட்ட விவரம்! நான் புறப்படும்





போதுஇந்த நான்கு நண்பர்களும் என்னிடம் சொன்ன செய்தி வேறு. சித்திரமாயன் என்ற இந்த இளைஞர்—"

"இளவரசர் என்று சொல்லும், ஐயா!" என்று குறுக்கிட்டார் சபையிலே இருந்த நான்கு பேரில் ஒருவர்.

"அவருடைய பேச்சில் குறுக்கிடாதீர்கள்!" என்று அதட்டினான் விடுதித் தலைவன்.

"சபையோர்களே! சித்திரமாயன் என்ற இந்த இளைஞர், காலஞ் சென்ற பரமேசுவர வர்மருக்கு உண்மையில் நேரான சந்ததி யென்றும், அவருக்குப் போட்டியாக இரணிய வர்மர் கிளம்பி, சித்திரமாயனுடைய அரச உரிமையைப் பறித்துக் கொண்டார் என்றும், நீங்கள் நான்கு பேரும் என்னிடம் கூறினீர்கள். ஆனால் விடுதித் தலைவர் இப்பொழுது சொன்ன வரலாறு வேறு விதமாக இருக்கிறது. அவர் சொன்ன விஷயங்களைக் கொண்டு பார்த்தால், இரணிய வர்மருடைய சூழ்ச்சி எதுவும் இந்த விஷயத்தில் எப்பொழுதுமே இருந்ததாகத் தெரியவில்லை. தவிரவும், அரச பதவி வேண்டவே வேண்டாம் என்று தான் அவர் வாதாடி யிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, இப்பொழுது விடுதித் தலைவர் சொன்ன இன்னொரு விஷயம் எனக்குத் திகைப்பைத் தருகிறது. சித்திரமாயன் என்ற இளைஞர் அரச உரிமைக்கு உரிய நேரான சந்ததி யில்லை யென்றும், அவரும் நந்தி வர்மரைப் போல ஒரு தாயாதிதான் என்றும் தெரிந்து வியப்புக் கொள்கிறேன். ஐயா! விடுதித் தலைவர் அவர்களே! தாங்கள் சொன்ன விவரங்களேதான் நானும் ஏற்கனவே கேள்விப்பட்டது! ஆனால் இந்த நான்கு மனிதர்களும் என்னை என்னுடைய நகரத்திலிருந்து அழைக்க வந்தபோது, ஏதேதோ தவறான செய்திகளைத் தெரிவித்தார்கள். தெரிவித்து என்னை வஞ்சகமாக ஏமாற்றினார்கள். அவசியமில்லாத முறையில் நந்திவர்மரிடம் எனக்கு வெறுப்பு ஏற்படும்படி பேசினார்கள். இரணிய வர்மரிடம் ஒரு துவேஷமே உண்டாகும்படி அவரைப் பற்றி என்னிடம் கூறினார்கள். அதைப் பற்றி நான் இப்பொழுது கவலைப்படவில்லை. தலைவரே! உண்மையான செய்திகளை உங்கள் மூலம் அறிந்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. அது குறித்து உங்களுக்கு நன்றி! ஆனாலும் ஆதிரையனை பற்றியும் உதய சந்திரனைப் பற்றியும் நீங்கள் சொன்ன கருத்துகளில் எனக்கு உடன்பாடு இல்லை. உதய சந்திரனைப் போன்ற உத்தமமான ராஜதந்திரி, இந்தத் தமிழ் நாட்டிலே ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அவதரிக்கிறார் என்று நான் கருதுகிறேன். சீலமும் சாமர்த்தியமும் ஒருங்கே இணைந்து சேர்ந்த ஒரு அதிசய புருஷர் அவர். அவருடைய தீர்க்க தரிசனமும், அரசியல் மேதையும் எதிர்காலத்தில் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் கல்வெட்டுக்களாகவும் பொன்னேடுகளாகவும், பட்டயங்களாகவும் நின்று நிலவப் போகின்றன என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. வில்லிவள நாட்டின் அதிபதியாகிய உதய சந்திரர், பல்லவ சாம்ராஜ்யம் ஒரு பெரிய சிக்கலில் அகப்பட்டுத் தவித்தபோது, இந்தச் சாம்ராஜ்யத்தையும், தமிழ் நாட்டின் அரசியலையும் பெருந் துன்பத்திலிருந்து மீட்டி, மகத்தானதோர் உன்னத ஸ்தானத்திலே நிலைநிறுத்தினார் என்று, நமது சந்ததியார்கள் எல்லாம் எதிர்காலத்தில் அவரைப் பற்றிப் பெருமையோடு பேசி மகிழப் போகிறார்கள். அப்படிப்பட்ட உதய சந்திரருக்குத் துரோகமான செயல்களைச் செய்யும்படி நாம் முனைந்து நிற்பதே தவறாகும். ஆரம்பத்தில் இத்தனை செய்திகளும் எனக்குத் தெரிந்திருந்தால், நான் இத்தகைய ஒரு சதிகாரக் கூட்டத்துக்கு வந்திருக்கவே மாட்டேன். இது ராஜத் துரோகம் என்பது மட்டுமில்லை. வஞ்சகமான சூழ்ச்சி. கேவலம், என்னை ஏமாற்றுவதற்கு இந்த நான்கு மனிதர்களும் என்னிடம் எத்தனை பொய்யும் வஞ்சக மொழிகளும் சொல்லி என்னை அழைத்து வந்தார்கள்! இப்படிப் பட்டவர்கள், ராஜத் துரோகமான ஒரு பெருங் காரியத்தில் ஈடுபட்டு இறங்கினால் இன்னும் எத்தனை எத்தனை சூழ்ச்சிகள், நய வஞ்சகச் செயல்கள் செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே எனக்குப்......"

தலைவனுடைய கண்களிலே எரிந்த தீப் பந்தத்திலிருந்து இப்பொழுது பொறிகள் தெறித்தன.

"ஆருயிர் நண்பர்களே! என்ன பேசாமல் இருக்கிறீர்கள்! இத்தனை

துஷ்டத்தனமான மொழிகளை அவர் பேசக் கேட்டும், வாயடைத்து மௌன மாக இருக்கிறீர்களா ?"

"தலைவரே! அவர் பேசும்போது குறுக்கிடக் கூடாது என்று சொன்னீர்கள் அல்லவா? அதனால்தான் நாங்கள்......"

"இத்தனை நீசத்தனமான வார்த்தைகளுக்குப் பிறகுமா?"

அவ்வளவுதான். நான்கு மனிதர்களும் ஓங்கிய வாளோடு ஏக காலத்தில் அந்த மனிதரின்பேரில் பாய்ந்தார்கள். ஆனால் என்ன ஆச்சரியம்! மறுகணம் தமது உடையில் எங்கோ மறைத்து வைத்திருந்த உடை வாளை உருவிக் கொண்டு நின்றார், அந்தத் தன்னந் தனியான மனிதர்.

வாள் உறையிலிருந்து எடுக்கப்பட்ட சத்தம் கேட்டதோ இல்லையோ, தலைவன் ஏதோ ஓர் அடையாள ஓசையை எழுப்பினான். மறுவினாடி பத்துப் பதினைந்து தீவட்டித் தடியர்கள் உருவிய வாளோடு உள்ளே பாய்ந்தார்கள்!

"அவனைக் கொன்று விடாதீர்கள். இந்தத் துரோகியிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் இன்னும் சில இருக்கின்றன. அது வரை அவனுடைய உயிர் போய்விடக் கூடாது!"

இவ்வாறு அவர்களுக்குக் கட்டளையிட்டான் தலைவன்.

வாள்கள் ஒன்றோடொன்று மோதிய சத்தம் கேட்டது. 'சட சட' 'மட மட' என்று கைக் குத்துகளும், அடிகளுமாகக் கேட்டன. வாள் முறிந்தது. அடுத்த வினாடி "ஐயோ!" என்று அலறல். அந்த மனிதரை மயக்கம் போட்டு விழுகிற அளவுக்கு ஒரு முரடன் தனது கையினால் ஓங்கிக் குத்தி விட்டான்.

"தூக்கு!" என்று கர்ஜனை செய்தான் தலைவன்.

பிறகு சம்பவங்கள் 'வாயு வேகம் மனோ வேகம்' என்று சொல்வார்களே, அப்படி 'விறு விறு' என்று நடந்தன. ஐந்தாறு முரடர்கள் அந்த மனிதரின் உடம்பைச் செந்தூக்காகத் தூக்கினார்கள். வெறும் மயக்கந்தானா, அல்லது உயிரே பிரிந்துபோய் விட்டதா என்று சோதிப்பதுபோலத் தலைவன் தனது விரல்களை அந்த மனிதரின் நாசிக்குக் கீழே வைத்து, மூச்சு இழைகிறதா என்று பார்த்தான்.

"வீரர்களே! மெச்சுகிறேன் உங்கள் திறமையை! மூச்சு வருகிறது. உயிர் இருக்கிறது. அது போய் விட்டால் நம்முடைய திட்டமும் தொலைந்து விடுமே! உயிர் நன்றாக இருக்கிறது. நினைவுதான் மயங்கி யிருக்கிறது. இப்பொழுது இத்தனை போதும். மயங்கிய நினைவை மீண்டும் எப்படித் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் நமக்குத் தெரியுமே! இந்தத் துரோகியைக் கொண்டு போங்கள், வெளியே உள்ள கோவிலுக்கு!"

இந்த உத்தரவு வந்ததும் முரடர்கள் ஒன்று சேர்ந்து, பிரக்ஞை இழந்த அந்த மனிதரின் உடம்பைத் தூக்கிக் கொண்டு சுரங்கப் பாதையின் வழியாக நடந்தார்கள். அங்கே நின்று கொண்டிருந்த மற்றத் தீவட்டித் தடியர்களும் இப்பொழுது கும்பலாகச் சேர்ந்து கொண்டார்கள். அனைவருமாக மயங்கி விழுந்த அந்த மனிதரை, மிக்க கவனமாகத் தூக்கிக் கொண்டு வெளியே யிருந்த கானகக் கோவிலுக்குச் சென்றார்கள்.

தலைவனும் மற்ற நான்கு நண்பர்களும் கொஞ்சம் பின் தங்கினார்கள்.

"அசடுகளே!" என்றான் தலைவன், அந்த நான்கு பேரையும் பார்த்து.

"அசடர்களே! இப்படியா நடந்து கொள்வது! அந்த மனிதனை அவனுடைய நகரத்திலிருந்து எந்த விதத்திலும் இந்த இரகசிய மண்டபத்துக்கு அழைத்து வாருங்கள் என்று நான் உங்களிடம் சொன்னது உண்மைதான். ஆனாலும் அவனிடம் பொய்யையும் தவறான செய்திகளையும் சொல்லலாமா? இப்பொழுது எத்தனை பெரிய விபரீதத்தில் கொண்டு வந்து விட்டு விட்டது! இனி உதயசந்திரனைப் பற்றிய எண்ணங்களை மறந்து விட்டு, முதன்முதலாக இந்த மனிதனையல்லவா நாம் கவனிக்க வேண்டியதிருக்கிறது. இவனல்லவா நமது முதலாவது பகைக் குறியாக மாறி விட்டான்!" என்றான் தலைவன்.

நான்கு பேர்களில் ஒரு மனிதர் இப்பொழுது மற்றவர்களின் சார்பாகப் பேசினார்.

"தலைவரே! சாம, தான, பேத, தண்டம் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்கள் அல்லவா? அந்த

முறையில் அவரிடம் முதலில் சாத்துவீகமாகப் பேசலாம் என்று நினைத்து அப்படிப் பேசினோம். தவிரவும், அவரிடம் அப்படி யெல்லாம் பேசவில்லை யென்றால் அவர் மசிந்திருக்க மாட்டார். தஞ்சையிலும் வல்லத்திலும் அவருக்கு எத்தனையோ உறவுகள் இருப்பதாகக் கேள்விப் பட்டோம்! அதனால் தான்......"

இந்த வார்த்தைகள் வந்ததும் தலைவன் சீறினான்.

"என்ன! தஞ்சை முத்தரையர்களோடு இவனுக்குத் தொடர்பு இருக்கிறதா? நண்பர்களே, முட்டாள்களே, இந்த விவரத்தை ஏன் நீங்கள் முதலிலேயே என்னிடம் சொல்லவில்லை? தெற்குப் பிரதேசத்தில் யாராவது முக்கியமான ஒரு தலைவன் நம்முடைய கட்சியில் இருக்க வேண்டும் என்றுதானே சொன்னேன். இவன் ஒருவன்தானா அகப்பட்டான் உங்களுக்கு? இவன் இல்லை யென்றால் வேறு தலைவர்களே இல்லையா?"

"பிரபு! மன்னிக்க வேண்டும். தெற்கு வட்டங்களில் இவனைப் போன்ற செல்வாக்கு நிரம்பிய தலைவர் வேறு யாருமில்லை! அதனால் தான் இவனை அழைத்து வந்தோம். இவனிடம் உள்ள படைபலம் அத்தனை வலிமையானது. அது மட்டுமில்லை; உறையூரில் இவன் கட்டளைக்கு இருக்கிற மதிப்பை எப்படிச் சொல்வது! இவன் நினைத்தால் நமக்கு வேண்டிய படை முழுதும் இவன் ஒருவனே திரட்டித் தர முடியும், பிரபு! அத்தோடு, உறையூரில் விளைந்து கிடக்கும் தானியங்கள் அத்தனையும் நம்முடைய படைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று கேட்டாலும், இவனால் உடனே வழங்க முடியும்!"

"போதும்! அவனுடைய பெருமையைப் பேசாதீர்கள்! முத்தரையர்கள் இப்பொழுது எந்த நோக்கத்தோடு இருக்கிறார்கள் என்பது முட்டாள்களாகிய உங்களுக்குத் தெரியாது. அதனால்தான் இவனை அழைத்து வந்தீர்கள். இவன் முத்தரையர்களோடு தொடர்பு உள்ளவன் என்று எனக்கு மட்டும் தெரிந்திருந்தால், நான் இவனை இந்த மண்டபத்துக்கு உள்ளேயே அனுமதித்திருக்க மாட்டேன்!"

இந்தப் பேச்சைக் கேட்டதும் அந்த நான்கு பேரும் திகைத்துக் கல்லாக நின்றார்கள்.

"சரி, நடந்தது நடந்து விட்டது. கவலை வேண்டாம். இந்த இக்கட்டான நிலைமையையும் வெற்றிகரமாகச் சமாளிக்க என்னால் முடியும்! புறப்படுங்கள்" என்றான் தலைவன்.

கோவிலிலிருந்து அவர்கள் புறப்படுவதற்கு முன்னெச்சரிக்கையாகத் தீவட்டிகள் அணைக்கப் பட்டன. கொடும்பாளூர்க் கானகத்தின் கோவிலுக்குள்ளே மீண்டும் இருள் கவிந்தது. அந்த வீரர்கள் அங்கிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள். ஆனால் அந்த நேரத்தில் எங்கிருந்தோ குதிரைகளின் குளம்பொலி கேட்டது.

பதினான்காம் அத்தியாயம்

சந்திப்பு


கொடும்பாளூர்க் கானகத்தின் கோவிலானது ஒரு பெரிய சூழ்ச்சிக் களமாக மாறி, பயங்கரமான சம்பவங்கள் எல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தன. மாமல்லபுரத்து விடுதித் தலைவன் தான் பின்னிய சூழ்ச்சியின் வலையிலே தானே சிக்குண்டு இனி இந்த ஐந்தாவது மனிதரை என்னசெய்வது என்ற யோசனையிலே மனத்தைச் செலுத்தினான்.

ஆமாம், எதிர்பாராமல் நேர்ந்த இந்த விளைவுகளினால் விடுதித் தலைவன் கொடும்பாளூருக்குச் செல்ல முடியவில்லை. இந்த நிலைமையில் அங்கே என்ன நடந்தது?

சித்திராங்கபூபதி உணவுக்காக மாளிகையின் படிகளிலே இறங்கு முன்பு, தந்தப் பேடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சித்தம் கலங்கியது. அவனுடைய தலை 'கிர்' என்று சுற்றுவது போல் இருந்தது. அவனுடைய கண்ணுக்கு முன்னால் இருந்த தந்தப் பேடகத்தின் சித்திர மடலில், மூன்று வண்ண ஓவியங்கள் காட்சி தந்த இடத்தில், இப்பொழுது சித்திர உருவங்கள் சுழல ஆரம்பித்தன. மூன்று சித்திரங்களும் ரதத்

ன் சக்கரங்களைப் போல் விரை
கச் சுற்றிச் சுழன்று நின்றன.
ன்று சித்திரங்களிலே தெரிந்த
ருவங்களும் சுழற்சி ஓய்ந்து, அப்
டியே அசைவற்று நின்றன!

ஆமாம்; இப்பொழுது சித்திரங்
் சுழலவில்லை. அசையாமல்
ன்றன. ஆனால் ஒரு பெரிய மாறு
ல். அந்த மூன்று சித்திரங்களிலும்
ழைய உருவங்களுக்குப் பதிலாக இப்
பாழுது வேறு உருவங்கள் தெரிந்
ன. 'காமம்' என்று எழுதியிருந்த
த்திரத்தில், ஒரு பெண் ஓர் இளைஞ
டைய கரத்தைப் பிடித்து வானத்
லே மிதக்கும் சந்திர பிம்பத்தைக்
ட்டி நிற்பதுபோல் வரையப்பட்
ருந்தது அல்லவா? இப்பொழுது
தில் எத்தகைய விசித்திரமான
றுதல் ஏற்பட்டிருந்தது! அந்தச்
த்திர நங்கை நின்ற இடத்திலே
ழ்நங்கை நின்றாள். அந்த இளைஞன்
ன்ற இடத்தில் சித்திராங்க பூபதி
ன்னுடைய உருவத்தின் பிரதிபிம்பத்
தயே கண்டான்! 'நிலவு நங்கை'
ன்று தான் வியந்து பாராட்டிய
ந்த அழகிய யாழ் நங்கை, பூபதி
ன் கைகளையே பிடித்துக் கொண்டு
னத்திலே மிதக்கும் நிலவைக்
ட்டுகிறாள். என்ன ஆச்சரியம்!
டுத்த சித்திரத்தில் முந்திரிக்
காடிக்கு ஊடாகத் தெரிகிற கரம்
ருடைய கரம்! யாழை ஏந்தி அந்த
ழின்மேல் விரல்களை விளையாட
ட்டதே அதே மென்மையான கரந்
ன்! அந்தப் பூங்கரந்தான் இப்
பாழுது யாழுக்குப் பதிலாகத்
மரை வடிவத்திலே மதுக்கிண்ணத்
தத் தாங்கி நிற்கிறது. எல்லாம்
ன வேகத்தின் கற்பனைத் தோற்
ங்கள்தான்! சித்திராங்க பூபதி
ந்த மனப் பிரமையின் மதி மயக்
த்தில் 'வெகுளி' என்று எழுதி
ருந்த மூன்றாவது சித்திரத்தைப்
ர்த்தான். யார் யாரோ இனந்
தரிந்தும் தெரியாமல், மயக்க நிலை
லே காணுகிற மனித உருவங்களைப்
பால் யுத்தகளத்தில், எதிரும் எதிரு
க அணிவகுத்து நிற்கிறார்கள்.
னைகளும், குதிரைகளும், தேர்களு
க நிற்கின்றன. இவற்றின் மத்தி
லே சித்திராங்க பூபதி நிற்கிறான்!
ன்ன வியப்பு! மாமல்லபுரத்து



பாங்க் ஆப் மைசூர் லிமிடெட், டெபுடி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ ஏ. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குமாரி சௌ. ஜானகிக்கும், இம்பீரியல் டுபாகோ கம்பெனியைச் சார்ந்த ஸ்ரீ எஸ். நாராயணன் அவர்களுக்கும் பெங்களூரில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

விடுதித் தலைவனும் அந்தப் படையிலே காணப்படுகிறான்!

பூபதியின் கண்முன் இப்படி ஒரு சித்தப் பிரமை! அது மறைந்ததும் மீண்டும் மூன்று சித்திரங்களும் ரதத்தின் சக்கரத்தைப் போல் 'விறு விறு' என்று சுற்ற ஆரம்பித்தன! பூபதிக்கு அதற்குமேல் அந்தச் சித்திரமடலையே பார்க்கப் பயமாக இருந்தது! தன்னுடைய கற்பனைச் சக்கரம் சுழலுவதைக் கண்டு தனக்கே பயம் உண்டாகி விட்டது. தந்தப் பேடகத்தில் மாயமான சக்தி எதுவும் கிடையாது என்பது பூபதிக்குத் தெரியும். ஆனால் அந்தப் பேடகத்திலே சத்தியம் இருந்தது. நிரந்தரமான உண்மை இருந்தது. மெய்யான உபதேசம் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தாயின் இதயம் அந்தப் பேடகத்திலே இருந்து துடித்துக் கொண்டிருந்தது. அந்தத் துடிப்புத்தான் பூபதியின் மனசாட்சியை என்னென்னவோ செய்தது. ஏதேதோ கற்பனைகளையும் எச்சரிக்கைகளையும் எழுப்பியது. பூபதி நினைத்தான்:—தாயினிடத்தில் உள்ள அளவற்ற பாசத்தினால் ஏதேதோ வீண் கற்பனைகளைச் செய்கிறோம். யாழோடு வலம்புரித் தீவுக்குச் செல்ல வேண்டும் என்பது

தானே இலட்சியம். அந்த இலட்சியத்துக்கு இந்த யாழ் நங்கையை விட வேறு யார் நமக்குத் துணை செய்ய முடியும்? அப்படி யிருக்கும் போது, அந்த நங்கையைப் பற்றியே ஏன் இத்தனை வீணான கற்பனைகள் எல்லாம் செய்து குழம்ப வேண்டும்! யாழை மட்டும் எடுத்துக் கொண்டு செல்வதால் வலம்புரித் தீவுக்கு என்ன பயன்? அதை வாசிக்கக் கூடிய கரங்கள் இல்லாமல் யாழ் மட்டும் அங்கே போய்ச் சேர்ந்து என்ன பிரயோசனம்? இந்த விஷயத்தைப் பற்றியே நாம் யோசிக்கவில்லையே. புதிதாக நான் யாழ் வாசிக்கக் கற்றுக் கொண்டு, தீவுக்குப் போவது என்பது நடக்கிற காரியமா? அப்படியே நான் யாழ் வித்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்று முனைந்தாலும், எனக்கு யார் பயிற்சி அளிப்பார்கள்? அதற்கும் இந்த யாழ் நங்கைதானே துணை செய்யவேண்டும்? இவளைப் போய்த் தவறாக எண்ணுவது எத்தனை பைத்தியக்காரக் கற்பனை! ஐயோ! அவளுடைய அழகும், அந்தப் பால் போன்ற பரிசுத்தமான முகத்திலே தவழ்கிற சிலமும், சங்கீதத்திலே மூங்கி மூழ்கிய கலையும்— ஆகா! இதை யெல்லாம் தவறாக நினைப்பது எத்தனை பெரிய பேதைமை! பார்க்கப் போனால் அப்படித் தவறாக நினைப்பது பாபம் என்று கூடச் சொல்ல வேண்டும்!

இப்படி எண்ணியதும் பூபதிக்கு அந்தத் தந்தப் பேடகத்தைப் பார்க்கவே எப்படியோ இருந்தது. உபதேசத்தைக் கடைப் பிடிக்க வேண்டியது அவசியந்தான் என்றாலும், அந்தப் பேடகத்தைக் கையிலே வைத்துக் கொண்டு வீண் அச்சத்தினால் பொருளற்ற சந்தேகங்களை எழுப்பிக் கொண்டு மனத்தைச் சஞ்சலப்படுத்துவது பிசகு என்று ஒரு சிந்தனை! அப்படியே தந்தப் பேடகத்தை மூடி வைத்து விட்டுத் தயங்கி நின்றான். 'உண்ணுவதற்கு வாருங்கள்' என்று கிழவர் மறுபடியும் வந்து தன்னைக் கூப்பிடுவதற்கு முன்னால் கீழே இறங்கிப் போய்விட வேண்டும் என்று கருதியவனாக, மாடியின் படிகளிலே வெகு வேகமாக இறங்கினான் பூபதி.

சித்திராங்க பூபதிக்கு அன்று இ... நடந்த உணவு மரியாதைகள் மூச்... திணறும்படி இருந்தன! சங்கீ... என்ற கலையைப் போலவே, விருந்... சரிப்பு என்ற கலையும் மனத்தை ம... கும்படியாக இருந்தது, அந்தக் ... கும மாளிகையிலே! ஆனாலும் இத்த... மயக்கங்களுக்கும் மத்தியிலே, இ... யிடையே பூபதிக்கு அந்த மனப் ... மையின் காட்சியும் அடிக்கடி வ... தோன்றிக் கொண்டிருந்தது! காம... மயக்கம், வெகுளி என்ற அந்த மூன்... வார்த்தைகளும் அவனுடைய க... ணுக்கு முன்னால் திடீர் திடீரென்... தோன்றி அவனை என்னவோ செய்த...

இதன் பிறகு நாலைந்து நாட்க... குங்கும மாளிகையில் எவ்விதமா... விசேஷ சம்பவங்களுமின்றிக் க... தன. இசை விருந்துகளோ அல்ல... பெரிய பிரதானிகளின் கூட்டங்களோ... ஏதும் காணோம்! அந்த விசாலமா... குங்கும மாளிகை எவ்விதமான ப... பரப்பும் இன்றி அமைதியாக விளங்... யது. பூபதிக்குப் படிமவிலாசம் என்... அறையிலே பொழுதை எப்படி... கழிப்பது என்ற கவலைக்கு இடமில்லா... மல், உண்ணுவதும் உறங்குவதுமாக... கழிந்தன நாலைந்து நாட்கள். வல... புரித் தீவை விட்டுப் புறப்பட்ட பிற... ஏற்பட்ட பிரயாண அலுப்பும், செ... தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த வினா... யிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக... நேரிட்ட அதிர்ச்சிகளுமாகச் சேர்ந்து... பூபதியின் நரம்புகளை யெல்லாம்... தளர்த்தி யிருந்தன. அத்தனை தளர்ச்... சியும் இந்த ஐந்து நாட்களில் உறக்க... மாகக் கழிந்தது. ஆனால் இத்தனை... களைப்புக்கும், அலுப்புக்கும், உறக்கத்... துக்கும் மத்தியில், ஒரே ஒரு விஷயம்... மட்டும் கலக்கத்தைக் கொடுத்து வந்... தது. எப்பொழுதாவது நடு ஜாமத்... தில் கண் விழித்தால், பூபதியின் செவி... யில் யாரோ விம்முவது போல் கேட்... கும். சில சமயங்களில் அந்த விம்மல்... அதிகமாகி, ஏக்கப் பெருமூச்சாகவும்,... சோகத்தோடு உள்ளத்தையே உருக்... கும்படியான அழுகுரலாகவும் கூடக்... கேட்கும். விசாலமான குங்கும மாளி... கையின் அறைகளில் எங்கிருந்தோ... வந்தது அந்தக் குரல்! கானகத்திலே... மான் அழுதால் எப்படி யிருக்கும்? கார்காலத்திலே அருவியின் கரை...யில்...

று தோகைவிரித்து ஆடவேண்டிய ல், தோகையை யெல்லாம் சோரப் ட்டு மனமே ஒடிந்து போய்ப் றையிலே உடலை ஒடுக்கி அமர்ந்து ண்டு பிரலாபித்தால் எப்படி க்கும்? வசந்த காலத்தில் இனிய ம் இசைக்கும் குயில், 'குவா குவா' று அழ ஆரம்பித்துவிட்டால் அது ளத்தை என்ன செய்யும்? அப் யிருந்தது இரவு நடு ஜாமத்திலே ட்ட அந்த விம்மலும் அழுகையும்! னும் சில சமயங்களில் அந்த அழு க்கு மத்தியிலே இன்னொரு கோப ன குரலும் கேட்கும். அந்தக் ாபக் குரலின் சீற்றம் அதிகரிக்கும் ாதெல்லாம் மென்மையான விம்மல் தம் அதிகரிக்கும். ஒரே ஒரு நாள் டும் அந்த விம்மல் அழுகையாகிப் கு இதயத்திலே சம்மட்டி ாண்டு அடிப்பது போல வேதனை த் தருகிற கதறலாகக் கூடக் கேட் து. அப்பொழுது பூபதிக்குக் கட்டிலை ட்டு எழுந்து சென்று, அந்த அழுகை ன் புதிர் என்ன என்று அறிந்து லாமா என்று தோன்றியது. ஆனு ம் பயமும், சித்திரமடல் உண்டாக்கி ந்த குழப்பமும் சேர்ந்து அவ டைய ஆவலைக் கட்டுப்படுத்தின!

ஆறும் நாள் காலை சித்திராங்கன் க்கையிலிருந்து எழுந்த போது வனை ஒரு புதிய யோசனை ஆட் ாண் டிருந்தது. அவன் நினைத் ன்: — இந்த ஐந்து நாட்களும் னந் தனியாக, எவ்விதமான பய ள்ள காரியமும் இல்லாமல் உண்ணு தும் உறங்குவதுமாகக் குங்கும ளிகையிலே பொழுதைக் கழிப்பது கவும் கஷ்டமாக இருந்தது. தான் த இலட்சியம் வேறு, சம்பவங்கள் ந்து செல்கிற முறையோ வேறு. ந்தப் பயங்கரமான மனிதன், மல்லபுரத்து விடுதித் தலைவனே, ச்சு மூச்சில்லாமல், எவ்விதமான ய்தியும் இல்லாமல் எங்கேயோ றைந்து விட்டான்! இந்த நிலைமை ல் குங்கும மாளிகையிலே இப்படியே த்தனை நாட்களைக் கழிப்பது? இன் றக்கு எவ்விதமான செய்தியும் ல்லை யென்றால், மாளிகையை விட்டு ளியேறி விட வேண்டியதுதான். திரையனைப் போய்ப் பார்த்துவிட வண்டும். அது முடியவில்லை யென் ல் காஞ்சிமா நகரத்துக்குச் சென்று அங்கே புலவரையாவின் இருக்கையைத் தெரிந்து கொண்டு அவரைப் பார்த்துவிட வேண்டும். மற்றப்படி இந்த இடத்தில் யாரையும் நம்பும்படியாக இல்லை.'

இப்படி நினைத்த சித்திராங்க பூபதிக்கு மறு விநாடியே யாழ் நங்கையின் நினைவும் வந்தது.

யாரையும் நம்பும்படியாக இல்லை என்பது உண்மைதான். ஆனல் அந்த யாழ் நங்கையின் முகத் தோற்றம் அப்படியில்லை. அந்த நிலவு நங்கை ஒரு களங்கமற்ற நிலவு! அந்த முகத்தைப் பார்த்தால் அதற்கு உரிய இதயம் பளிங்கு இதயமாகத்தான் இருக்க வேண்டும். ஆனுலும்?...அன்னையின் உபதேசமும், தந்தப் பேடகமும் மனத்துக்குள்ளே மீண்டும் தோன்றிப் பூபதியைக் கலக்கின.

பூபதி படுக்கையை விட்டு எழுந்து அமர்ந்ததும், எதிரே யிருந்த பெரிய சாய்மானத்தில் ஓலைச் சுருள் ஒன்று இருந்ததைக் கண்டான். சுருளைப் பார்த்ததுமே அது விடுதித் தலைவனிடமிருந்துதான் வந்திருந்தது என்பதைத் தீர்மானித்துக் கொண்டான்! ஏனென்றால், அந்த ஓலையைச் சுருளாகச் சுற்றியிருந்த முறையில் ஏதோ ஒரு குறிப்பிட்ட வகையான அடையாளப் பின்னல் இருந்தது. அதே பின்னலிலே தான் இதற்கு முன்பு தலைவன் கொடுத்த சுருள்களும் இருந்தன.

சித்திராங்கன் அந்த ஓலைச் சுருளை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் எழுதியிருந்தது:—

அன்பே வடிவான அதியழகு நிரம்பிய சுந்தர குமாரராகிய வலம்புரித் தீவின் இளவரசருக்கு:

தங்களிடம் மீண்டும் குங்கும மாளிகைக்கு விரைவில் வருவதாக எழுதி யிருந்தேன். பிறகு சென்ற வாரம் வருவதாகச் செய்தி அனுப்பினேன். இத்தனைக்குப் பின்னும் நான் அங்கே இதுவரை வராதது தங்களுக்கு வியப்பாக மட்டும் இருந்தால் குற்றமில்லை. ஆனல் நீங்களோ எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுகிறவர். அதனல்தான் இப்பொழுது இந்த நிருபம் எழுதுகிறேன்.

தயவு செய்து பொறுமையையும் நம்பிக்கையையும் இழந்து விடாமல், குங்கும மாளிகையிலேயே இன்னும் இரண்டு நாட்கள் இருக்கவும். அதற்குள் நான் வந்து தங்களைச் சந்திக்கிறேன். எல்லாம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

இளவரசராகிய தங்களைப் பார்த்ததிலிருந்து, என் மனம் ஏனே தங்களிடம் கவரப்பட்டு நிற்கிறது. அதன் காரணம் என்ன என்று சொல்ல முடியாது. தங்களுடைய முகத்திலே உள்ள ராஜகளையும், தங்கள் பேச்சிலே உள்ள கண்யமும் எப்படி வர்ணித்துச் சொல்வது? காஞ்சிமா நகரத்துக் கடிகையிலே உள்ள

பண்டிதர்களிடம் கேட்டுள்ள ஒரு தொடர்தான் இங்கே நினைவுக்கு வருகிறது. அதாவது புருஷர்களே கண்டு மோகிக்கும்படியான உருவம் என்று பாரதக் கதையில் வருகிறதாம். இதைப் பற்றி மிக விரிவாகப் பண்டிதர்கள் விளக்கம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அத்தனை விளக்கமும் எனக்கு அப்பொழுது சரியாகப் புரியவில்லை. உங்களைப் பார்த்த பிறகுதான் புரிந்தது. ஆடவர்களே காதலிக்கும்படியான அத்தனை அழகு நிரம்பிய தங்கள் உருவம் என் கண் முன்னே எப்பொழுதும் நிற்கிறது. தங்களுடைய தொடர்பைப் பெரிதும் மதிக்கிறேன். அதனால்தான் மீண்டும் மீண்டும் தங்களிடத்தில் இத்தனை சிரத்தையும், அபிமானமும் கொண்டு வற்புறுத்துகிறேன். இதையும் தவறாக எண்ணுகிற அளவுக்கு உங்களுடைய சந்தேக உணர்ச்சி செல்லாது என்று எதிர்பார்க்கிறேன். இங்ஙனம்,

அன்பன்.

இந்த ஓலைச் சுருளைப் படித்ததும், பூபதிக்குச் சந்தேகம் நிற்கவில்லை. அது அதிகமாகத்தான் வளர்ந்தது! 'நம்மிடத்தில் இவனுக்குக் காதலாமே! என்ன கயமை இது!' என்று நினைத்தான். 'எத்தனை புனிதமான அந்த மகாபாரத வர்ணனையை இவன் மேற்கோளாக எடுத்துச் சொல்கிறான்! இத்தனைக்கும் பிறகு எனக்குச் சந்தேகம் வலுக்கக்கூடாது என்று வேறு சொல்கிறானே! என்றும் இல்லாதபடி இப்பொழுது என்னுடைய அழகைப் பற்றி எதற்காகப் பிரமாதமாக வர்ணிக்க முனைகிறான்!'

இப்படி நினைத்துப் பார்த்த பூபதிக்கு மனம் மேலும் குழம்பியது. ஆனாலும் எத்தனை குழப்பத்துக்கு மத்தியிலும் ஆணவம் யாரைத்தான் விட்டது! தான் அழகாக இருப்பதாகப் பிறர் சொல்லக் கேட்கும் போது, அந்த ஆணவம் எத்தனை பெரிய புத்திசாலிகளையும் மயக்கி விடத்தான் செய்கிறது! ஓலைச் சுருளில் மற்ற இடங்களை யெல்லாம் விட்டு விட்டு, பூபதி அந்தப் பாரத வர்ணனை வருகிற இடத்தை மட்டும் மீண்டும் ஒரு முறை படித்தான். மாமல்லபுரத்து விடுதித் தலைவனைப் பற்றிய அத்தனை சந்தேகத்துக்குள்ளும், அந்த வாசகங்கள் உள்ளத்துக்கு ஒரு விநோதமான திருப்தியைத் தந்தன. அந்தத் திருப்தியோடு சித்திராங்க பூபதி அன்றையப் பகல் முழுதும் தனது காரியங்களில் அதாவது, உணவிலும் உறக்கத்திலும் கழித்து விட்டான்.

அன்றிரவுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது! அப்பொழுது தீபம் ஏற்றுகிற நேரம்!

சித்திராங்கன் தன் அறையி கட்டிலில் அமர்ந்து யோசித் கொண்டே யிருந்த போது, இ யிருந்து விம்மலும் அழுகையும் அ மாகக் கேட்டன. பிறகு அவற்றை தொடர்ந்து ஏதோ தர்க்கப் பேச் கேட்டது. மறுபடியும் அழுகையு விம்மலும்!


சித்திராங்கன் ஓரளவு ஏற்கனே யூகித்திருந்தான். யாழ் நங்கைக்கு அவளுடைய அன்னைக்கும் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துத் தர்க்க நடக்கிறது என்று நன்றாகத் தெரி திருந்தது. இன்று அந்தத் தர்க்க பலமாக இருக்கிறது என்று கண் கொண்டான் அவன். 'தலைவன் வரு வரை நாம் ஏன் இந்த வம்புகளுக்குள் எல்லாம் போய் மாட்டிக் கொள்ள வேண்டும்!' என்று நினைத்தவனா அறையிலேயே இருந்தான் அவன்.

ஒரு நாழிகைப் பொழுது ஆகியிருக் கும். திடீரென்று பாதச் சிலம்ப களின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான் பூபதி. இந்த ஒலியைத் தொடர்ந்து படிம விலாசத்தின் சுவரே திறந்து கொண்டது போல் இருந்தது. ஆமாம், சித்திர சாலைக்குள்ளே செல்லும் அந்த இரகசிய வாசலின் தாமரைத் தகடு திறந்தது. அதைத் தொடர்ந்து அன்னப் பறவை தண்ணீரிலே மிதந்து வருவது போல, யாழ் நங்கை படிம விலாசத்துக்குள்ளே நுழைந்தாள்.

சித்திராங்கன் பதறிப் போனவனாக எழுந்து நின்றான். அவனுக்குக் கையும் காலும் 'வெட வெட' என்று நடுங்கின. வாலிபப் பருவத்தின் எழிலெல்லாம் மேனியிலே பொங்கி ஓடுகிற ஓர் இளம் நங்கையைப் பூபதி தனியாகச் சந்திப்பது, வாழ்க்கையில் இதுதான் முதலாவது அநுபவம்! ஆனால் அந்த அநுபவத்தின் விளைவாக அவன் அத்தனை பெரிய தீர்மானத்துக்கு வருவான் என்றும், அத்தனை விரைவில் அத்தனை உறுதியோடு ஒரு மகத்தான முடிவைச் செய்வான் என்றும் யாரும் எதிர்பார்க்க வில்லை. பூபதியுமே அதைப் பற்றி அதுவரை முழுமனத்தோடு நினைத்துப் பார்க்கவில்லை. அன்பும், பேரியாழின் பாசமும் சித்திராங்க பூபதியை அத்தனை தூரம் ஆட் கொண்டிருந்தன!

(தொடரும்)

கடல் கண்ட கனவு



அத்தியாயம் 15

மறைந்த இருவர்

கொடும்பாளூர்க் கானகத்தின் ...ாவிலே இருண்ட இரவின் ...மைதியைக் குலைத்துக் கொண்டு ...திரைகளின் காலடி ஓசை கேட்டது.

...பத்து, இருபது, முப்பது, நாற்பது ...ன்று வரிசை வரிசையாக நூறு குதி...கள் 'பட பட' என்று நெரிந்து ...ாண்டு சென்றன — நூறு குதிரை...! இந்த நூறு குதிரைகளிலும் ...டியும், கேடயமும், உடைவாளும் ...ங்கிய வீரர்கள் எந்த விநாடியும் ...ன்டைக்கு ஆயத்தமாக இருப்பவர் ...ளைப் போலக் கண்ணும் ...தும் கூர்மைப் படுத்திக் ...ாண்டு செல்கிறார்கள். இந்த ...று குதிரைகளுக்கும் மத்தி...ல் உயரமான வெள்ளைக் குதிரை ஒன்றிலே உதய சந்திரன் செல்கிறார்.

குதிரைகள் காற்றாகப் பறந்து கானகத்தின் கோவிலை வளைத்து நின்றன. மறு விநாடி மட மட என்று வீரர்கள் குதிரையிலிருந்து கீழ் இறங்குகிறார்கள். நூறு குதிரை வீரர்களும் கோவிலுக்குள் நுழைய முயலும்போது உதய சந்திரன் ஏதோ ஓர் அடையாள ஓசையை எழுப்புகிறார். உடனே தென்னைமரத்திலிருந்து தேங்காய் விழுவது



...சாமு

போல, கானகத்தின் மரங்களி லிருந்து 'தொப்' 'தொப்' என்று இரு பது முப்பது மனிதர்கள் — முரடர் கள் — கையிலே கோல் தாங்கியவர் களாகக் குதிக்கிருர்கள். அந்தக் கோலின் நுனிகளில் துணி சுத்தி யிருக்கிறது.

"ஏற்றுங்கள் தீவட்டியை!" என்று உத்தரவிடுகிருர் உதய சந்திரன்.

கொடும்பாளூர்க் கோயிலைச் சுற்றித் திடீர் என்று நடு ஜாமத்தில் வெயில் காய்வது போல அத்தனை பிரகாசத்தோடு தீவட்டிகள் வெளிச்ச வீசுகின்றன. அந்தத் தீவட்டிகள் நூறு வீரர்களுக்கும் பாதையை காட்டுகின்றன.


நூறு வீரர்களில் ஐம்பது பேர்கள் மட்டும் கோவிலுக்குள் நுழைகிரு கள். சில தீவட்டிகள் அவர்களோடு செல்கின்றன.

வீரர்களைப் பின் தொடர்ந்து செல் கிருேம். அவர்கள் அதே பிராகாரத் தில் நுழைந்து குகை மண்டபத்துக் குச்செல்லும் வாசலில் செல்கிருர்கள்.

பயங்கரமான ஈட்டிகளும், விஷம் தடவிய வாள்களும், கேடயங்களோடு மோதுகின்றன.

"பிடி! விடாதே! வளைத்து மடக்கு!" என்று உத்தரவுகள் பிறக் கின்றன.

தீவட்டிகளின் வெளிச்சத்தில் ஈட்டி கள் மோதுகின்றன. வாள்கள் பளீர்



ளீர் என்று மின்னல் வீசுகின்
ன. மாமல்லபுரத்து விடுதித்
லேவனோடு வந்த முரடர்களும்,
அவனுடைய கூட்டாளிகளும்
ளைக்கப் பட்டு விட்டார்கள்.
பயங்கரமான சண்டை நடக்
றது. மயக்கம் போட்டு விழுந்த
அந்த ஐந்தாவது மனிதரின்
டம்பை ஒரு படியின்மேல்
டத்தி யிருக்கிறார்கள். வீரர்கள்
ஒருவரோடு ஒருவர் மோதி,
லைகள் உருளுகிற சமயத்தில்
வாளைச் சுழற்றியவாறு பாய்ந்த
தயசந்திரன் நேரே அந்த
ஐந்தாவது மனிதரின் உடம்பைக்
டத்தியிருந்த படிக்கு அருகே
ாடுகிறார். மயங்கிக் கிடக்
தும் அந்த வீரரை லாகவ
ாகத் தமது இடது கரத்
திலே ஏந்தித் தூக்குகிறார்.
கேடயத்தையும் வாளை





யும் சுருளிகளைப் போல வீசிக் கொண்டே அந்தக் களத்திலிருந்து வெளியேறி, இரகசிய வாசலிலே வந்து, அதில் பக்குவமாக நுழைகிறார். மிகவும் கவனமாக அந்த வீரரின் உடம்பைத் தன் மேனியிலே சாய்த்தவாறு பிராகாரத்துக்குக் கொண்டு வருகிறார். இப்பொழுது அவரைச் சுற்றி அவருடைய வீரர்களில் நான்கு பேர் அவருக்குக் காவல் செய்தவாறு வளையமாக வகுத்துக் கொண்டு நடக்கிறார்கள். உதய சந்திரன் கோயிலின் வெளியே வந்ததும், அவர் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வீரன் அருகிலே ஓடி வந்து மயங்கிக் கிடக்கும் உடம்பைத் தனது கைகளிலே ஏந்திக்கொள்கிறான். மீண்டும் அடையாள ஓசை எழுப்புகிறார் உதயசந்திரன். பிராகாரத்திலிருந்து அவருடைய வீரர்கள் வெளியே வருகிறார்கள். கையும் காலும் கட்டப்பட்ட நான்கு மனிதர்களோடு உதயசந்திரனின் வீரர்கள், அவரை நோக்கிச் சாடி வருகிறார்கள்.

"எல்லாரும் தீர்ந்தார்களா?" என்று கேட்கிறார் உதயசந்திரன்.

"ஆமாம், ஆனால்......" என்று தயங்குகிறான் தளபதி.

"ஆனால் விடுதித் தலைவனையும், சித்திரமாயனையும் தவிர! அப்படித்தானே?" என்று கேட்கிறார் உதயசந்திரன்.



"ஆமாம்" என்ற பாவனையில் அந்த வார்த்தைகளை மறுத்துச் சொல்லாமல், பயத்தோடு நிற்கிறான் தளபதி.

"சரி, கவலையில்லை. இந்த இரகசிய மண்டபத்திலிருந்து இன்னொரு கிளைப் பாதை செல்கிறது என்று எனக்குத் தெரியும். பிறகு பார்த்துக் கொள்ளுவோம், அந்த இருவரையும். இப்பொழுது இந்த நான்கு மனிதர்களையும் உயிருக்குச் சேதம் இல்லாமல் கொண்டு செல்லுங்கள்!" என்று உதயசந்திரன் உத்தரவிடுகிறார்.

மயக்கம் போட்டு விழுந்த ஐந்தா வது மனிதரைத் தவிர, மற்ற நான் பேரும் கையும் காலும் கட்டப்பட் இருக்கிறார்கள் அல்லவா? அவர்க நான்கு வீரர்கள் சேர்ந்து நான் குதிரைகளில் ஏற்றுகிறார்கள். அடுத் கணம் நான்கு பேரும் தாங்களு குதிரைகளில் ஏறிக் கொள்கிறார்கள்

"நீங்கள் செல்லலாம், உங்களுடைய துணைகளோடு!" என்று கட்டளையி கிறார் உதயசந்திரன்.

நூறு குதிரை வீரர்களில் ஐம்பது பேர் அங்கிருந்து புறப்படுகிறார்கள் மற்ற ஐம்பது பேரும் உதயசந்திரனோடு நிற்கிறார்கள்.

"இந்த ஐந்தாவது மனிதர் மயக்கம் போட்டு விழுந்து இருப்பதால் இவரை மிகவும் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டும். அந்தப் பொறுப்பு என்னுடையது. இவரை என்னுடைய குதிரையில் ஏற்றி வையுங்கள்!"

மின்னல் வேகத்தில் உத்தரவுகள் வருகின்றன. மின்னல் வேகத்திலேயே அந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள் வீரர்கள்.

"தீவட்டிகள் அணையலாம்!"

இந்த உத்தரவு வந்ததும், கொடும்பாளூர்க் கானகம் மறுபடியும் இருளிலே மூழ்கிக் குளிக்கிறது.

குதிரைகளின் குளம்போசை கேட்கிறது. முதலிலே சென்ற ஐம்பது வீரர்கள் வலதுபுறம் திரும்பிச் சென்றார்கள். மற்ற ஐம்பது வீரரும் இடதுபுறமாகத் திரும்புகிறார்கள், உதயசந்திரனின் தலைமையிலே.

"நாம் இப்பொழுது தஞ்சாவூர்ச் சாலையிலே செல்கிறோம்" என்கிறார்.

கொடும்பாளூர் நகரத்தைத்தாண்டி உதயசந்திரனும், அவரோடு அந்த ஐந்தாவது வீரரின் மயங்கிய சரீரமும்,

இவர்களைச் சுற்றி ஐம்பது படை வீரர்களும், செல்கிறார்கள். அமாவாசையின் இருட்டிலே கொடும்பாளூர் அரண்மனையைக் கடந்து அப்படி ஒரு குதிரைப் படை செல்வது இது வரை இல்லாத ஒரு புதிய சம்பவம்! இந்த ஒரு சம்பவம் பிற்காலத்தில் தமிழ் நாட்டின் சரித்திரத்திலேயே எத்தனை பெரிய மாறுதலை உண்டாக்கி விட்டது என்பதைப் புகழ் பெற்ற கல் வெட்டுக்கள் அதிசயத்தோடு பேசிப் பேசி மகிழ்கின்றன.

எத்தனையோ நய வஞ்சகத்தோடு மாமல்லபுரத்து விடுதித் தலைவன், சித்திராங்க பூபதியைச் சூழ்ச்சி வலையிலே பிடித்தான். ஆதிரையன் தன்னுடைய பிடியிலிருந்து நழுவி விடுவானோ என்று சந்தேகித்து ஏதேதோ முன்னேற்பாடுகள் செய்தான். தெற்கு மண்டலங்களின் அதிபதிகளுடைய ஒத்தாசை வேண்டுமே என்று கருதிக் கானகக் கோவிலைச் சூழ்ச்சிக்கூடமாக மாற்றுவதற்கு முனைந்து நின்றான். ஆனால் அவன் எதிர்பார்த்த விஷயங்கள் எதிர்பார்த்த முறையில் நடவாதவாறு குழம்பியடித்த சம்பவம் இதுதான். இதுவே பிற்காலத்தில் உதய சந்திரனின் அரசியல் சாமர்த்தியத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்கியது!

அத்தியாயம் 16

நனவும் கனவும்

படிம விலாசத்துக்குள்ளே யாழ் நங்கை நுழைந்து வந்ததைக் கண்டதும் பூபதி பதறிப் போய் எழுந்தான். அவனுக்கு உடம்பெல்லாம் பனிக் கட்டியாக உறைந்தது. அந்த இளம் நங்கையை அவன் அந்த நேரத்தில் தன்னுடைய அறையில் எதிர் பார்க்கவே யில்லையல்லவா?

"ஏன் உங்களுக்கு உடம்பெல்லாம் இப்படிப் பதறுகிறது?" என்று கேட்டாள் நங்கை. இந்தக் கேள்விக்குப் பூபதி பதில் சொல்லவில்லை.

"நீங்கள் என்னை இந்த நேரத்தில் இங்கே எதிர்பார்க்கவில்லை. அப்படித் தானே?" என்று கேட்டாள் நங்கை மறுபடியும்,

"ஆமாம்" என்று சொன்ன பூபதி அதற்குமேல் என்ன சொல்வதென்று தெரியாமல் ஒரு விநாடி மிரள மிரள விழித்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, "பெரியம்மா அவர்கள் எங்கே? அந்தக் கிழவர் எங்கே? நீங்கள் மட்டும் இப்பொழுது இங்கே வந்திருக்கிறீர்களே!" என்றான் பூபதி.

"அவர்கள் எல்லாரும் வெளியே போயிருக்கிறார்கள். இந்தக் குங்கும மாளிகையில் அந்தச் செவிட்டுப் பணியாளன் சாத்தனைத் தவிர வேறு யாருமில்லை. அதனால்தான் இப்பொழுது இங்கே வந்தேன்."

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே? அவர்கள் எல்லாரும் எங்கே போய் விட்டார்கள்?" என்று பூபதி திகைப்போடுகேட்டான்.

"எங்கேயும் போய் விடவில்லை. அப்படி எங்கேயாவது போய்த் தொலைந்து விட்டால்தான் நல்லதே. அவர்கள் அரண்மனைக்குச் சென்றிருக்கிறார்கள். மறுபடியும் திரும்பி வந்து விடுவார்கள்!"

"அப்படியென்றால்?..."

"இன்றிரவு கொடும்பாளூர் அரச மாளிகையில் அம்மா யாழ் வாசிக்கிறாள். யாரோ விருந்தினர்கள் வந்திருக்கிறார்களாம். ஆதிரையரும் பேரியாழ் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். அதனால் தான் இந்தக் கூத்து ஒரு வாரமாக இங்கே நடந்தது!"

"எந்தக் கூத்தைச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் பூபதி.

"அழுகையும் விம்மலும்தான் சொல்லுகிறேன். உங்களுடைய அறையிலேயே கேட்டிருக்குமே!" என்று சொல்லும்போதே நங்கையின் கண்கள் கலங்கின. அவள் தொடர்ந்தாள்:

"ஐயா! என் வாழ்வே ஒரு விசித்திரம். சோகத்தில் எத்தனையோ வகை உண்டு. என்னுடைய சோகம் பிறர் நம்ப முடியாத ஒரு விநோதம். அந்த விநோதம் கடந்த ஒரு வாரமாக மிகவும் தீவிரமாக இருந்தது. இன்றும் ஒரு உச்ச நிலையை அடைந்தது—"

"அம்மா! நானும் இந்த மாளிகையில் தங்களுடைய யாழிசை நடந்த சமயத்தில் அதைக் கவனித்தேன். ஒலியிலும் இசையிலும் லயித்து நின்ற தங்கள் முகத்தில் ஒரு வேதனை மின்னல் போல் துவண்டதைக் கண்டேன். ஆனால் அதே சமயம் தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை மிகவும் கஷ்டப்பட்டு அடக்க முயற்சிக்கிறேன். தங்களுடைய வேதனையைக் கண்டதும் என் உள்ளத்தில் உண்டாகிற சஞ்சலத்தை அறவே என் நினைவிலிருந்து நீக்கி விடுவதற்குத்தான் கடந்த ஒரு வாரமாக நான் பாடுபடுகிறேன். ஆனாலும் இரவு நேரங்களில் நிசப்தமான வேளைகளில் மாளிகையின் கீழ் அறைகளிலிருந்து நெஞ்சை ஊடுருவுகிற விம்மல் கேட்கிறது. தாங்களும் தங்கள் தாயாரும் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துப் பலமாகத் தர்க்கம் செய்வதும், அதன் பயனாகத் தாங்கள் வேதனைப்பட்டு வெதும்பி அழுவதும் என் செவியிலே கேட்கிறது. ஆனால் அந்த நேரத்தில் எல்லாம் என்னுடைய உள்ளத்தை மிகவும் கஷ்டப்பட்டுக் கல்லாக்கிக் கொள்ளுகிறேன்!"

இப்படிச் சொன்ன போது பூபதியின் கண்களும் கலங்கின.

"ஐயா! உங்களைப் பார்த்த விநாடியிலிருந்து, ஏனோ என் உள்ளத்தின் வேதனையை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. அதன் காரணம் எனக்கே தெரியவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அத்தகைய வாய்ப்பு எனக்குக் கிட்டாது என்று தெரிகிறது. என்னுடைய துக்கத்தைத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஏதோ தடையிருப்பதாகத் தெரிந்த பிறகும்கூட, அதை உங்களிடம் வெளியிட முனைந்தேனானால் அது பெரும் பிசகு. வாழ்வில் இதுவரை உள்ளத்துக்குள்ளேயே வைத்து வைத்துப் பொருமுகிற அந்த வேதனையை இனியும் உள்ளத்திலேயே வைத்துப் பூட்டி விடுகிறேன். இந்த உடம்பு இந்தப் பூமியிலே நடமாடுகிற வரை என் உள்ளம் பூட்டியே இருக்க வேண்டியதுதான். என்றைக்கு இந்த உயிர் இந்த உடலின் பூட்டைத் திறந்துகொண்டு வெளியேறுகிறதோ அன்றைக்கு இந்த வேதனைக்கும் விடுதலை கிடைத்து விடுமல்லவா?" என்றாள் நங்கை.

அவளுடைய கண்களில் சோகத்தின் துளிகள், இரண்டு விழியின் மத்தியிலே பொங்கித் துடி துடித்துக் கொண்டு நின்றன.

"அம்மா! வருத்தப்படாதீர்கள். தங்களுடைய துக்கத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னையும் மீறுகிறது. தங்களைப் பார்த்தது முதல் இன்னவென்று சொல்ல முடியாத ஒரு அன்பு தங்களிடத்தில் எனக்கு ஏற்பட்டுவிட்டது. முன் எப்பொழுதோ எங்கோ உங்களைப் பார்த்திருப்பது போலவும், பிறகு எங்கோ மீண்டும் சந்தித்து இருவரும் நன்றாகப் பழகியது போலவும் — எல்லாம் ஓர் அர்த்தமற்ற உணர்ச்சி என் இதயத்தில் உண்டாகிறது!" என்றான் பூபதி.

"அர்த்தமற்ற உணர்ச்சி என்று சொல்லாதீர்கள். அர்த்தமற்ற உணர்ச்சி என்றால், எனக்கும் அதே உணர்ச்சி ஏன் ஏற்பட வேண்டும்? இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி எண்ணம் ஒரே சமயத்தில் ஏற்பட வேண்டும் என்றால், அதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது என்றுதானே அர்த்தம்!"

இப்படிச் சொல்லும்போது நங்கை பரவசத்தோடு மலர்ந்து சிரித்து விட்டாள். பூபதிக்கும் அந்தச் சிரிப்பைப் பார்த்ததும் ஒரு உல்லாசம் வந்து சிரிப்பாக உதிர்ந்தது!

"ஐயா! என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை நீங்கள் ஏன் அத்தனை கஷ்டப்பட்டு அடக்க வேண்டும்? அதைச் சொல்லலாமா என்னிடம்?" என்று நங்கை கேட்டாள்.

"அம்மா! அது ஒரு பெரிய இரகசியம். ஆனாலும் உங்களிடம் அதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சொல்லுகிறேன். நீங்களும் அதை இரகசியமாகவே வைத்துக் கொள்ளுங்கள்." இப்படி ஒரு பீடிகை போட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தான் பூபதி.

"அம்மா, நான் வலம்புரித் தீவிலிருந்து புறப்பட்ட போது, என் அன்னை எனக்கு மூன்று கட்டளைகள் இட்டிருக்கிறாள். அது எப்படியா று

ம் அந்த மூன்று கட்டளைகளையும் ஂறைவேற்ற வேண்டியது என்னு டைய முழு முதற் கடமை!"

இப்படிப் பேசத் தொடங்கிய சித்தி ங்கன். உணர்ச்சியின் வசமாகி மட' என்று எல்லா விஷயங் ளையும் ஒரு ரதத்தின் வேகத்தில் ால்லி முடித்தான். வலம்புரித் வில் காவல் தெய்வம் வடித்த கண் ரைப் பற்றியும், தான் அந்த லவுப் பாறையிலே கண்ட அதிசயக் ட்சியையும், மந்திர நாயகம் தன் டம் கூறிய விவரங்களையும் பூபதி ங்கையிடம் சொன்னான். பேரியாழ் ன்ற அதிசயமான வாத்தியத்தைத் ன்னுடைய வலம்புரித் தீவுக்குக் காண்டு போக வேண்டிய கடமை னக்கு இருக்கிறது என்பதையும், ந்தக் கடமையைச் செய்வதற் ாகவேதான் கடல் கடந்து இத்தனை தாலை தூரம் தான் வந்திருப்பதாக ம் கூறியபோது பூபதிக்கு உணர்ச்சி பாங்கி வந்தது.

"ஐயா! நீங்கள் சொன்ன விவரங் ளைத் தெரிந்து கொண்ட பிறகு, ன் உள்ளத்தில் இப்பொழுது ஒரு தரியம் உண்டாகியிருக்கிறது. உங்க ளுக்கு என்னிடம் பூரணமான அநு பம் இருக்கிறது என்று தெரிந்து காண்டதில் எனக்கு ஏற்பட்டுள்ள ம்மதியை எப்படிச் சொல்லுவேன்! ங்கள் மனத்தில் அந்தத் தந்தப் படகம் ஏதேதோ கலக்கங்களை ண்டாக்கி யிருக்கிறது. சித்திரங் ளிலே மதுவை ஊற்றுகிறவளும், லாவைக் காட்டுகிறவளும் இந்தப் பெண்ணாகவே இருந்துவிட்டால் எத் னை பெரிய அபாயம் அது என்று ஞ்சுகிறீர்கள். அது உண்மைதான். ஆனால் ஆரம்பத்திலேயே உங்களிடம் ரு உறுதி கொடுக்கிறேன். நீங்கள் ங்களுடைய இலட்சியம் நிறைவேறி ங்களுடைய வலம்புரித் தீவுக்குத் ரும்பிச் செல்லுகிற வரையில் என் ல் தங்களுடைய இலட்சியத்துக்கு ந்தவிதமான இடையூறும் உண்டா ாது. ஆனால் ஒன்று. என்றாவது ஒரு ாள் வலம்புரித்தீவிலே தங்களுடைய ன்னை என்னை அழைத்து, நிலா ற்றத்திலே தங்களை அழைத்துச் சென்று தங்களுக்குப் பூரண சந்திர ரின் எழிலைக்காட்டும்படி பணித்தால் ங்களுக்கு ஆட்சேபனை இராதே?"



பம்பாய் முருகப்பா & சன்ஸ், கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்டின் மானேஜரான ஸ்ரீ ஆர். எச். அய்யர் அவர்கள் குமாரி சௌ. வசந்தாவுக்கும், பம்பாய் ஸ்டாண்டர்டு பாட்டரீஸ் லிமிடெட்டின் 'அனலிஸ்ட்' ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசன் பி. எஸ்ஸி.க்கும் நாகர் கோவிலில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க வசந்தா-சீனிவாசன்!

இந்த வார்த்தைகள் வந்ததும் பூபதி நிமிர்ந்து பார்த்தான். நங்கையின் விழிகளிலே அன்பும், பாசமும், மெய்ப்பாடும் அலை அலையாக வீசிக் கொண்டிருந்தன. கண்களின் வட்டத் திலே கண்ணீர் பொங்கி, அந்தப் படலத்தின் ஊடே அன்பின் ஒளி ஊடுருவிக் கொண்டு வந்தது. பூபதி அந்த விழிகளிலே தனது பார்வையை நிறுத்தினான்.

"அம்மா! என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஏதோ ஒரு கனவு போல இருக்கிறது. ஆனால் கனவு என்றால் என்னையும் அறியாமல் அந்தக் கனவில் நானும் ஏதாவது பதில் சொல்லியிருப்பேன். இது நனவாக இருப்பதால் பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்."

இப்படிப் பேசினான் சித்திராங்கன்.

"நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். உங்கள் பதிலை உங்களுக்கு முன்னால் உங்கள் விழி சொல்லி விட்டது. அந்த விழியின் மொழியைக் கேட்டு விட்டேன்!"

இப்படி நங்கை சொன்னதும் மீண்டும் அந்தப் படிம விலாசத்தில் அமைதி குடி கொண்டது. இப்பொழுது அந்த அமைதியான மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பூபதி பேசினான்:

"அம்மா! உங்களுடைய வேதனையைப் பற்றிக் குறிப்பிட்டீர்களே? அதைப் பற்றி இப்பொழுது தெரிந்து கொள்ளலாம் அல்லவா? என் ஆவலை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே!" என்றான் சித்திராங்கன்.

"தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம். தங்களிடம் சொல்லத்தானே இப்பொழுது இங்கே வந்தேன். ஆனால் ஒரே ஒரு கஷ்டம் அதில் இருக்கிறது" என்று சொல்லித் தயங்கினாள் நங்கை.

'அது' என்ன?' என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் நங்கையின் முகத்தை நோக்கினான் சித்திராங்கன்.

"ஒரே ஒரு கஷ்டம் இருக்கிறது. என்னுடைய வேதனையைத் தெரிந்து கொண்டால், அந்த வேதனையிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்று முயற்சிப்பீர்கள். அந்த முயற்சியினால் தங்களுடைய இலட்சியத்துக்கு இடையூறு வந்து சேரும். அதற்கு நான் இடம் கொடுக்கக் கூடாது. அந்த உறுதியை மட்டும் நீங்கள் எனக்குச் சொன்னால் போதும்!"

"அம்மா! நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே!" என்று குழம்பினான் பூபதி.

"அன்பரே! என்னுடைய வேதனை என்பது எனக்கும் என் அன்னைக்கும் உள்ள மனத் தாங்கல்தான். என்னுடைய எண்ணமும் நோக்கமும் வேறு. அவளுடைய எண்ணமும் நோக்கமும் வேறு. நான் இருக்கும் மன உலகம் வேறு. அவளுடைய உலகம் வேறு. இந்த இரண்டுக்கும் ஏற்படுகிற மோதல்களினால் என் உள்ளத்தில் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது. இந்த முறையில் என் வேதனையைத் தெரிந்து கொண்டு, நீங்கள் நிம்மதியாக இருக்கப் போவதில்லை. இங்கே அரசப் பிரதானிகளும், நகரப் பிரமுகர்களும், ராஜ தந்திரிகளும், மந்திரிகளும், சேனாபதிகளும் அடிக்கடி வருகிறார்கள். அன்னையின் செல்வாக்கு அபாரமானது. எனவே எனக்காக நீங்கள் பாடுபட்டு, என்னுடைய இலட்சியத்துக்கு உதவி செய்ய முனைந்து நின்று, அதனால் இத்தனை மனிதர்களுடைய பகையும் தங்களுக்கு ஏற்பட்டு விட்டால், தங்கள் இலட்சியம் என்ன ஆகும்? அதிலும் அந்த மாமல்லபுரத்து விடுதித் தலைவன் ஒருவனுடைய விரோதமே போதும். அவனுடைய சூழ்ச்சி ஒன் நம்மை அதல பாதாளத்தில் தள் விடும். இந்த முறையில்—"

பூபதி குறுக்கிட்டான். இதுவ அவனுடைய உள்ளத்திலே ஒதுங் கொண்டு கிடந்த வீரம் இப்பொழு சீறிக் கொண்டு வந்தது.

"அம்மா! மீண்டும் அப்படி சொல்ல வேண்டாம். என்னுடை இலட்சியம் இந்தப் பேரியாழ்தா இப்பொழுது தங்களைச் சந்தித் பிறகோ, பேரியாழோடு அந்த யாழி விளையாடுகிற விரல்களையுமே, அந் மெல்லிய பூங்கரத்தையுமே என்னோ மரக்கலத்தில் ஏற்றிக் கொண் செல்லப்போகிறேன் என்று தோன் கிறது. எனவே எதற்காக நா கலங்க வேண்டும்? வலம்புரித்தீவி என் அன்னையின் சந்நிதியில் யாழை



யும் யாழுக்கு உரிய நங்கையையு கொண்டு சேர்த்து விட்டால், பிற யாரும் என்னை எதிர்க்க முடியாது அப்படியே எதிர்த்தாலும், அந் எதிர்ப்பை முறியடித்து வெற்றியை நிலை நாட்டவேண்டியது ஒரு அரச னின் கடமை என்பதை நிரூபிப்பேன்!"

நங்கை சிரித்தாள். சிரித்துக் கொண்டே பேசினாள்.

"சிரிப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும். தங்களைப் பரிகசிக்கும் சிரிப்பு இல்லை இது. தாங்கள் சொல்வதுபோல் எல்லாம் நடந்து விட்டால் எத்தனையோ பாக்கியசாலி தான் நான். ஆனால் நிலைமை அப்படியில்லை. அதை நினைத்துத்தான் சிரித்தேன்."

இந்த வார்த்தைகளை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பூபதி இப்

பொழுது ஆவேசத்தோடு பேசினான். "உண்மை! நீயும் நானும் இந்தப் பேரியாழும் கடல் கடந்து செல்வது என்பது அத்தனை கஷ்டமான காரியம் என்று சொல்லுகிறாய். கஷ்டமான காரியந்தான். ஆனால் கஷ்டமான காரியங்களைச் செய்து மீளுவதற்குத் தானே நான் வலம்புரித்தீவிலிருந்து இங்கே வந்திருக்கிறேன். ஆகையினால் கஷ்டத்தை எண்ணிச் சிரிக்க வேண்டாம். கஷ்டத்தைப் புரிந்து கொள்ளுவோம். பிறகு அதை எப்படி வெல்வது என்று யோசிப்போம். அது தான் புத்திசாலித்தனம்!"

"அன்பரே! நீங்கள் சொல்வது மனப்பூர்வமான வார்த்தைகள்தானா! இத்தனை விரைவில் தங்கள் உள்ளத்தில் நான் இடம் பெற்று விட்டேனா?



என்ன ஆச்சரியம்! நாம் இருவரும் இங்கே இந்தக் குங்கும மாளிகையில், படிம விலாசத்துக்குள் இருந்துதானே இப்படிப் பேசுகிறோம். என்ன ஆச்சரியம்! அன்னையின் உருவத்தில் நின்று, நாளும் பொழுதும் என்னை வேதனைப் படுத்துகிற பயங்கரமான சாபத்தின் பிடிப்பிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறதா?

"காதல் இருவர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்"

என்று நல் வாழ்க்கையை எடுத்துச் சொல்லி, இல்லறம் என்ற புனிதமான வாழ்வு முறையை அவ்வை பாடினாளே, அப்படிப்பட்ட தமிழ் நாட்டின் வாழ்க்கை முறையை நான் கடைப்பிடிக்கப் போகிறேனா? எத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலே நெருப்பிலே நடந்து கொண்டு என்னை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கும் என்னுடைய பேரியாழுக்கும் விடுதலை கிடைக்கப் போகிறதா? என்றால் நம்பவே முடியவில்லையே!"

இப்படிச் சொல்லிக் கொண்டே எழுந்து நின்ற நங்கையின் அருகிலே சென்றான் சித்திராங்கன். அப்பொழுது கீழே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. நங்கை அங்கிருந்து மின்னலைப் போல் மறைந்து விட்டாள். அன்றிரவு முழுதும் சித்திராங்கன் உறங்கவில்லை.

இரண்டு நாட்கள் ஓடின. இந்த இரண்டு நாட்களும் பூபதி உறக்கம் என்பதே இல்லாமல் கழித்தான். இந்த இரண்டு நாட்களிலும் உணவு நேரத்தின்போது நங்கையை அவளுடைய அன்னையோடுதான் சந்தித்தான். பேசத் துடித்த உதடுகள் வறண்டன. இரவு உறக்கம் இல்லை.

மூன்றாம் நாள் மாலை மறுபடியும் வேதனைக் குரல் கேட்டது. மூன்று தினங்களுக்கு முன்பு நங்கைக்கும் அவளுடைய தாயாருக்கும் வாக்குவாதம் நடந்து, அதன் பலனாக நங்கை மனம் உடைந்து கதறினாளே, அது போலவே இன்றும் அழுகைக் குரல் கேட்டது. பூபதி இன்றைக்கு எப்படியும் கீழே ஓடிப் போய் அந்த வாக்குவாதத்திலே குறுக்கிட வேண்டியது தான் என்று நினைத்து எழுந்தான். ஆனால் அந்த நேரத்தில் குங்கும மாளிகைக் கிழவர் அறைக்குள்ளே வந்தார், பழைய பைத்தியச் சிரிப்போடு. வந்தவர் வந்த காரணத்தைச் சொல்லாமல் சாத்தன் என்ற அந்தச் செவிட்டுப் பணியாளனைப் பற்றி ஏதேதோ சம்பந்தமற்ற வர்ணனைகளைக் கொட்டியளந்து விட்டுப் போய் விட்டார். பூபதியின் முயற்சி தடைப்பட்டது. அவனுடைய முயற்சியைத் தடுப்பதற்கு என்றே அந்தத் துஷ்டக் கிழவர் அப்படி வந்து போனாரோ என்று கூட மனத்துக்குள்ளே சந்தேகப் பட்டான் சித்திராங்கன். ஆனால் அந்தச் சந்தேகத்தினால் அதிக நேரம் வருத்தப் படுத்துவதற்கு அவசியம் இருக்கவில்லை. காரணம், கிழவர் சென்ற அரை நாழிகை நேரத்துக்கெல்லாம் குங்கும மாளிகையிலிருந்த எல்லாரும் நங்கையின் தாயாரோடு அரண்மனைக்குச் சென்று விட்டார்



‘சுதேச மித்திரன்’ விசேஷப் பிரதிநிதி ஸ்ரீ பி. ஆர். சீனிவாசன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி எஸ். வி. பத்மநாபனுக்கும், மன்னார்குடி கமர்ஷியல் கல்லூரி பிரின்ஸ்பால் ஸ்ரீ முதலியாண்டான் அவர்கள் குமாரத்தி செள. பரிமளவல்லிக்கும் மன்னார்குடியில் சமீபத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.
வாழ்க, பத்மநாபன் - பரிமளவல்லி!

கள். முதல் நாள் நடந்ததுபோல், இனிய சந்திப்பு மீண்டும் இன்று நேர்ந்தது. ஆனால் அரைகுறைப் பேச்சோடு நிற்கவில்லை, இன்றையச் சந்திப்பு. புதுமையின் வினோதமும், எதிர்பாராத நிகழ்ச்சியின் அதிர்ச்சியும் இன்று இல்லை. இன்று நங்கை மாடிக்கு வந்து படிம விலாசத்திலே நுழைந்த போது, நிதானத்தோடு நடந்துகொண்டான் அவன். முடிவில் நங்கையின் கலக்கத்துக்குக்கீழ்க்கண்டவாறு சமாதானம் சொன்னான் பூபதி:—

“குமரி! உனக்கு ஏன் இத்தனை கலக்கம்? கலங்காதே. சந்தேகப் படாதே. நீயும் உன்னுடைய யாழின் இசையும் என்னை அடிமைப்படுத்தியிருப்பது உனக்குத் தெரியாது. யாழை நாடி வந்த ஒருவன், யாழோடு அதற்கு உரிய நங்கையையும் சந்தித்திருக்கிறேன். வலம்புரித் தீவுக்கு இனி விடிவுகாலம் வந்து விட்டது. உன்னை உன்னுடைய துன்பச் சுழல்களிலிருந்து விடுவித்து வலம்புரித் தீவுக்கு அழைத்துச் செல்வேன். சென்று என் அன்னையின் பாதங்களிலே அவளுடைய தந்தப் பேடகத்தை வைப்பேன். வைத்து விட்டு அவருடைய உத்தரவைக் கேட்பேன். ‘கடல் கடந்து சென்று வெற்றிகரமாக என்னுடைய பணியை முடித்துத் திரும்பியதற்குப் பரிசு கொடுங்கள்’ என்று அன்னையிடம் அன்போடு கேட்பேன். அகமும் முகமும் மலர்ந்து என் அருமை அன்னை யாழுக்கு வெகுமதியாக யாழ் நங்கையை எனக்குப் பரிசளிப்பாள். இது உறுதி!”

இப்படிச் சித்திராங்கன் சொல்லி முடித்தபோது, வெளியே மாடிப்படிகளில் குமிழ்க் கட்டையின் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து படிகளிலே பிரம்பு அடிபடும் ‘பளார் பளார்’ என்ற ஓசையும் வந்தது. அப்படியே பதறி மானைப் போலத் துள்ளி மருண்டு மருண்டு பார்த்தாள் நங்கை.

“சித்தரைப் போல் அல்லவா இருக்கிறது!” என்று சொல்லிக் கொண்டே பதறினான் பூபதி.

“போல் என்ன! அவரேதான்!” என்று சொல்லியவாறு பதறினாள் நங்கை.

‘அவர் எதற்கு இங்கே வருகிறார்!’ என்று கேட்பது போல ஒரே வேதனையோடு நங்கையைப் பார்த்தான் பூபதி!

“இந்த ஒரு புண்ணிய புருஷரின் பாதங்கள் இந்தக் குங்கும மாளிகையில் நடமாடுவதால்தான் இந்த வினாடி வரை நான் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். இல்லையென்றால் இங்கே என் தாயார் என்ற அவதாரம் என்னை இதற்குள் விழுங்கியேயிருக்கும்!” என்றாள் நங்கை.

“அத்தனை கொடுமைக்காரியா உன்னுடைய அன்னை?” என்று வார்த்தைகளை வேகமாகவும் பதற்றத்தோடும் கேட்டான் பூபதி.

“கொடுமைக்காரி இல்லை. அவளுடைய இலட்சியமும், அவளுடைய வாழ்க்கை தர்மமும் அப்படி. இதோ குமிழ்க் கட்டை அருகிலே கேட்கிறது. நான் வருகிறேன். மீண்டும் தங்களைச் சந்திக்கும்போது விவரமாகச் சொல்கிறேன்!”

இப்படிச் சொல்லிவிட்டு மின்னலைப் போலத் துவண்டு, படிம விலாசத்தின் தாமரைத் தகட்டைத் திறந்து கொண்டு, அங்கிருந்து மறைந்தாள் யாழ் நங்கை.

குமிழ்க் கட்டையின் ஓசையும், பிரம்பின் வீச்சும் படிம விலாசத்தை நோக்கி விரைந்து வந்தன.

முதல் பாகம் முற்றிற்று

கடல் கண்ட கனவு



சோமு

முதலாம் அத்தியாயம்

வல்லத்தரசர் யோசனை

நாம் செய்யும் காரியங்களின் விளைவு களைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்றும், பலனில் பற்று வைக்காமல் நம்முடைய கடமைகளை நாம் செய்து கொண்டு போக வேண்டும் என்றும் பகவத் கீதை உபதேசிக் கிறது. இந்த உபதேசத்தின் உண்மையை நன்ருக உணர்ந்தவர் உதயசந்திரன்.

வில்லிவள நாட்டுக்கு அதிபதியாக விளங் கிய உதயசந்திரன் பல்லவ சாம்ராஜ்யம் ஒரு பெரிய சிக்கலில் அகப்பட்டுத் தவித்த போது, பட்டத்துக்கு உரிய இளவரசரைத் தேடி அலைந்து நந்தி வர்மனை அழைத்து வந்தார் அல்லவா? அதன் விளைவுகளைப் பற்றி அவர் கவலைப்பட வில்லை. அரச பக்தியும், நாட் டின் நலத்தில் எல்லையற்ற ஈடுபாடும் கொண்டிருந்த தளபதி அவர். அவருக்குச் சரியென்று பட்ட ஒரு காரி யத்தை எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்து முடித்தார். ஆனுல் அதன் விளைவுகள் தொடர்ந்து பல விபரீதங்களைச் செய்யும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. பின்னுல் அப்படி விபரீதங்கள் நேர்ந்த போது அவற்றுக்காகவும் அவர் தமது உறுதியை இழக்கவில்லை. எந்த நந்திவர்மனுக்காக அத்தனை தூரம் அலைந்து பாடுபட்டு அரசை ஸ்தாபித்தாரோ அதே நந்திவர்மனுக் காக அவர் நாள்தோறும் போர் செய்ய நேரிட்டது. அப்பொழு தெல்லாம் அவர் அபாரமான மன உறுதியோடும், அசையாத ஆற்ற லோடும் போர்முனையின் முன்னணியிலே நின்ருர். அது மட்டுமில்லை. தம்முடைய யோசனைக்கும் அரசியல் சாமர்த்தியத்துக்கும் தோன்றிய அத்தனை தந்திர முறைகளையும் அவர் கையாண்டார். அந்தத்தீரமான அற்புத சாதனைகளின் ஆரம்பந்தான் அன்று நடந்த அந்த எதிர்பாராத சம்பவம்.

விடுதித் தலைவனும் சித்திரமாயனும் சுரங்கப் பாதையிலிருந்து தப்பியோடி விட்டார்கள் என்று தெரிந்ததும், உடனே அவருக்கு முத்தரையர்களின் நினைவுதான்

வந்தது. நந்திவர்மனுடைய பட்டாபிஷேகத்துக்கு உறுதியோடு துணையாக நின்றவர் பெரும்பிடுகு முத்தரையர். அவருடைய பக்க பலம் இருந்தால் ஒழிய, தெற்குப் பக்கத்தில் விடுதித் தலைவனுடைய சூழ்ச்சியின் வலிமையால் பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பெரும் கேடு விளையலாம் என்று அவருக்குத் தோன்றிற்று. எனவே, மயங்கி விழுந்திருந்த அந்த மனிதரைக் குதிரையில் ஏற்றிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டார் உதயசந்திரன்.

மயங்கி விழுந்திருந்த அந்த மனிதர் முத்தரையர்களின் தாயாதிக் குடும்பத்தைச் சேர்ந்த மண்டலாதிபதி. வல்லம் என்று இன்று விளங்கும் இடத்தில், பெருமண்டலமாக விளங்கிய பிரதேசத்தில் அவருடைய செங்கோல் சென்று வந்தது. தெற்கு மண்டலங்களில் அவருக்கு இருந்த செல்வாக்கை உதயசந்திரன் நன்கு அறிவார். எதிர்பாராமல் இப்படி அவர் ஒரு சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டது உதயசந்திரனுக்கு வேதனை தந்தது. என்றாலும் அவருடைய உயிருக்கு எவ்விதக் கேடும் ஏற்படாமல் இம்மட்டோடு தப்பித்தாரே என்பதில் ஒரு நிம்மதி. அந்த நிம்மதியோடு கொடும்பாளூர் எல்லையைத் தாண்டிப் பறந்தது உதய சந்திரனின் குதிரை.

கொடும்பாளூரிலிருந்து தஞ்சை செல்லுகிற விசாலமான பெருஞ் சாலையில் ஒரு மிகப் பெரிய விடுதியிருந்தது. தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் வழிப்போக்கர்கள், அரசாங்க யாத்திரிகர்கள் ஆகியோரின் வசதிகளுக்காக இம்மாதிரிப் பல யாத்திரிகர் விடுதிகள் இருந்தன. அப்படிப்பட்ட விடுதிகளில் மிகவும் புகழ் வாய்ந்த ஒருவிடுதி அது.

பரமேசுவரவர்மர் காலத்தில் இந்த
அரசாங்கத்தின் பேராதரவில் மிகவும் உ
நிலையில் பல பல வசதிகளோடு விரிந்
தது. இப்பொழுது உதயசந்திரன் தம்மு
யோசனைகளுக்கும், முயற்சிகளுக்கும்
விடுதியை ஒரு முக்கிய சந்திப்புக் கூடம்
பயன்படுத்துவது என்று தீர்மானித்
அதே சமயம் தாம் யார் என்பது பிறரு
தெரியாத முறையில் நடந்து கொள்ள வே
டும் என்றும் முடிவு செய்திருந்தார். எ
சாலையில் கொஞ்ச தூரம் சென்றதும் அ
குள்ளே வைத்திருந்த ஒரு விசித்திர
கிறுதாவை எடுத்து லாகவமாக இர
கன்னங்களிலும் ஒட்டிக் கொண்டார்.
பொழுது அவருடைய முகத்தைப் பா
தால், ஒரு சாமான்யக் கிறுதா முகத்தே
றத்தில் எத்தனை பெரிய மாறுதலைச் செ
விட முடியும் என்பது, ஆச்சரியப்படும்
இருந்தது. உதய சந்திரன் அந்த விடுதிக்
சென்ற போது சூரியோதயம் ஆகிக் கொ
டிருந்தது.

சூரியோதயத்தில் விடுதியினுள்ளே செ
உதயசந்திரர் ஏதோ அடையாள முத்தி
யின் துணை கொண்டு அங்கே பல வசதிக
பெற்றார். பிறகு அவர் அங்கிருந்து புறப்ப
போது அவரோடு வந்த மனிதரைக் காணே
அந்த மனிதர் விடுதியிலேயே தங்கினா
அல்லது வேறெங்காவது சென்றாரா என்ப
ஓர் அரசியல் இரகசியம். அந்த இரகசிய
இரண்டு வாரம் கழித்துத் தஞ்சையிலேதா
வெளியாயிற்று.

ஆமாம்; இதன் பிறகு இரண்டு வாரங்க
கழித்துத் தஞ்சைமா நகரிலே முத்தரைய
களின் சுவர்ண மாளிகையிலே ஒரு மந்திர
குழு கூடிற்று. அந்த மந்திரக் கூட்டத்
மந்திரிகள் இருந்தார்கள். ஆமாத்தியர்க
என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்
அரசியல் நிபுணர்கள் இருந்தார்கள். அமை
சர்கள் என்று அழைக்கப்பட்ட தீரர்கள்-செ
லாற்றும் வீரர்கள்—இருந்தார்கள். அரச



ானிகள் இருந்தார்கள். சூழ்ச்சியினுல் சூழ்ச்சியை வெல்லக்
 மேதைகள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் உதய
ரனின் தலைமையில் கூடி ஆலோசித்தார்கள்.

''பல்லவ அரசுக்கு இப்பொழுது பெரிய எதிர்ப்பு
ன்றி விட்டது. தெற்கே சேர சோழ பாண்டிய வம்சத்
் ஒன்று கூடி நந்திவர்மனுடைய அரசை எதிர்க்கலாம்
 நிலை ஏற்பட்டு விட்டது. சித்திரமாயனுக்குத் துணை
 வேளிர் வம்சத்தைச் சேர்ந்த அந்தப் பொல்லாத விடுதித்
வன் ஏதேதோ வஞ்சக வேலைகள் செய்கிருன். இந்த
பில் எந்த எதிர்ப்பையும் சமா
க்கூடிய படை பலம் நமக்கு
ியம்.''

துவே உதயசந்திரன் பேசிய
த்தைகளின் சாரம். இந்த
த்தைகளை மற்றப் பிரதானி
அனைவரும் ஆமோதித்தார்
 முத்தரையர்கள் சம்பந்தப்
_வரை, தஞ்சையிலும் வல்
திலும் உள்ள இரண்டு வம்
ாரும், தங்களுடைய பூரண
ுழைப்பையும் தருவதாக
களித்தார்கள். ஆலோசனைக்
ும் ஐந்து நாழிகை நேரம்
ந்தது. முடிவில் வல்லத்து



வம்சாதிபதி எழுந்து ஓர் அரிய யோசனை கூறினார். அன்று அவர் கொடும்பாளூர்க் கானகத்திலே சூழ்ச்சிக் கூட்டத்திலே சிக்குண்டு தவித்த தவிப்பிலிருந்து, அவருடைய இதயத்தில் ஏற்பட்டிருந்த கொதிப்பு, அவருடைய புத்திக்குச் சூடேற்றி அதை மிகவும் கூர்மைப் படுத்தியிருந்தது. ஆவேசத்தோடு பேசினாலும், அவருடைய பேச்சில் தீர்க்கதரிசனத்தோடு கூடிய ஓர் அற்புதமான யோசனை இருந்தது. அந்த யோசனையை உதயசந்திரன் முழு மனத்தோடு வரவேற்றார். பூரண உற்சாகத்தோடு ஆமோதித்தார். அளவுகடந்த மகிழ்ச்சியோடு பாராட்டினார். இத்தனை உற்சாகத்துக்கும் மகிழ்ச்சிக்கும் ஆமோதிப்புக்கும் காரணம் என்ன வென்றால், உதயசந்திரன் தம்முடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலும் அம்மாதிரி ஒரு யோசனையைச் சிந்தித்ததுண்டு. ஆனால் அது குறித்து முத்தரையர்கள் என்ன நினைப்பார்களோ என்ற ஒரு தயக்கம் இருந்து வந்தது. இப்பொழுது அந்த யோசனையை முத்தரையர்களின் தாயாதியான வல்லத்து வம்சாதிபதியே எடுத்துச் சொன்னதும் உதயசந்திரனுக்குத் தம்முடைய முயற்சி யெல்லாம் வெற்றி யடைந்துவிட்டது போன்ற ஒரு களிப்பு உண்டாயிற்று. சொன்னார்:

"நண்பர்களே! இந்த யோசனை என் உள்ளத்தில் ஏற்படுத்தி யிருக்கும் இன்பத்தை வார்த்தைகளிலே சொல்ல முடியாது. நந்திவர்மருடைய அரசு ஆடாமல் அசையாமல் நிலை நிற்பதற்கு முத்தரையர்களின் பூரண ஒத்தாசையும் எனக்கு உண்டு என்பதை ஏற்கனவே அறிவேன். காஞ்சிமா நகரின் எல்லையிலே நந்திவர்மரை எதிர் கொண்டு அழைத்த பிரதானிகளில் பெரும் பிடுகு முத்தரையர் முன்னணியிலே நின்றவர். நந்திவர்மருக்கு இராஜ்யாபிஷேகம் செய்த அந்தப் புனிதமான சடங்கில் மனம் மொழி மெய் மூன்றும் பூரணமாக ஈடுபட்ட மனிதர் ஒருவர் உண்டு என்றால் அது பெரும் பிடுகு முத்தரையர்தான். அப்படிப்பட்ட இந்த உத்தம நண்பர் நந்திவர்மரின் அரசியல் மேம்பாட்டுக்காக இப்பொழுது இப்படிப்பட்ட ஒரு யோசனைக்கு உடன் பட்டது தேச பக்தியும், அரச விசுவாசமும், தீர்க்க தரிசனமும் நிரம்பிய மகத்த[ான] உதவியாகும். அவருடைய தாயாதியா[ன] வல்லத்து அரசருடன் இந்த யோசனையை [ஏற்]கனவே கலந்துபேசி, இப்பொழுது அந்த அ[ரிய] யோசனையை நாம் சொல்வதற்கு முன்பு [வல்]லத்து அரசரே சொல்லிவிட்டது என் உள்[ளத்]தைக் கூத்தாட வைக்கிறது. இனி இ[ந்த] யோசனை செயலாகப் பரிணமிக்கும் காரி[யத்]தில் உங்கள் அனைவருடைய பூரண உதவி[யும்] பக்கபலமாக நின்று இந்தத் தமிழ் நாட்டி[ன்] அரசியலைக் காக்குமாக!''

இவ்வாறு பேசினார் உதயசந்திரன். அ[வ]ருடைய பேச்சில் அங்கு கூடியிருந்த அத்த[னை] பிரதானிகளும் மிக்க சிரத்தையுடன் ஈடுபட்[டு] ஆமோதித்தார்கள். கூட்டம் கலைந்த பி[ற]கு முத்தரையரும், வல்லத்து அரசரும், உ[தய]சந்திரனும் நீண்ட நேரம் அந்தச் சுவர்[ண] மாளிகையில் ஒன்று கூடி யிருந்தார்க[ள்]. வலம்புரித் தீவுக்கும் தமிழ் நாட்டுக்[கும்] நீண்ட நாட்களாக முறிந்து போய் விட்[ட] தொடர்பை இப்பொழுது மறுபடியும் நி[லை] நாட்டுவதற்கு ஒரு அரிய வழியை வகுத்தா[ர்]கள் அவர்கள். அந்த யோசனைக்காக மு[த்]தரையருக்கு மனப்பூர்வமான நன்றி[யை] ஆயிரந்தடவை தெரிவித்தார் உதயசந்திரன்.

தமிழ் நாட்டில் ஆயிரத்து ஐந்நூறு ஆண்[டு]களுக்கு முன்பு மிகவும் புகழோடு விளங்கி[ய] நாடு முத்தரையர் நாடு. பல்லவ சாம்ரா[ஜ்]யத்தின் தென் எல்லைக்கும், பாண்டிய நா[ட்]டின் வட எல்லைக்கும் நடுவே இருந்தது அ[து]. இன்றையப் புதுக்கோட்டை, தஞ்சாவூ[ர்] முதலிய பகுதிகளைக் கொண்டது முத்தரை[]யர் நாடு. தஞ்சையிலும் வல்லத்திலு[ம்] இந்த அரச பரம்பரையும், தாயாதிகளு[ம்] ஒன்று கூடி உன்னதமான முறையி[லே] ஆண்டு வந்தார்கள். நந்திவர்மன் பட்ட[த்]துக்கு வந்த காலத்தில் தஞ்சாவூர்ப் பகுதி[யை] ஆண்டுவந்தவன் சுவரன் மாறன் என்ற மு[த்]தரையப் பேரரசன். பெரும்பிடுகு முத்தரை[]யன் என்ற சிறப்புப் பெயர் பெற்றவன். அவ[]னுடைய யோசனைப்படி உதய சந்திரன் செய்த முடிவுதான் பிற்காலத்தில் சித்திராங்[க] பூபதிக்குப் பெரிய இடையூறாக முடிந்தது.

இரண்டாம் அத்தியாயம்

வலம்புரித் தீவிலே!

மேலே கூறப்பட்ட விஷயங்கள் நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் வலம்புரித் தீவின் அரச மாளிகையிலே ஓர் ஆச்சரியமான நிகழ்ச்சி நடந்தது.

மந்திர நாயகம் அரச மண்டபத்துக்குள்ளே ஒரு தூதுவரோடு நுழைந்தார். அந்தத் தூதுவர் அரசச் சின்னங்களோடு காணப்பட்டாலும் அவருடைய நெற்றியில் தூய வெண்ணீறு கோலம் தந்தது. சந்தனத்தைக் குழைத்து இட்ட திலகம் அந்த வெண்ணீற்றுக்குமேல் துலங்கியது. புத்திக் கூர்மையும், ஆழ்ந்த யோசனையும் நிரம்பிய அறிவுச் சுடர் கண்களிலே காந்தி வீசியது.

'இவர் முத்தரையப் பேரரசரிடமிருந்து வந்துள்ள தூதர்!' என்று அரசியாருக்கு அவரை அறிமுகப்படுத்தினார் மந்திரநாயகம். இதன் பிறகு அங்கே நடந்த பேச்சு வார்த்தைகள் முக்கியமானவை. விரிவானவை. அவற்றின் சுருக்கம் வருமாறு:

தமிழ் நாட்டில் பல்லவர்களை எதிர்த்து[க்] கொடும்பாளூர் வேளிர்களின் முயற்சியால் சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஒரு [மு]க்கூட்டு ஒப்பந்தம் செய்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் விளைவாகத் தமிழ் நாட்டில் ஒ[ரு] பெரும்போர் மூள இருக்கிறது. இந்தப் போரில் நந்திவர்ம பல்லவனுக்குத் துணையாக முத்தரையர்கள் கங்கணம் கட்டிக் கொண்[டு] நிற்கிறார்கள். உதய சந்திரன் தலைமையி[ல்] பல்லவப் படை ஒன்று பெரிய அளவில் ஒன்று சேர்கிறது. நுட்பமான முறையில் பல வெ[]

மருந்துகளும் விஷப் புகை கக்கும் ஆயுதங்களும் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால் இத்தனை நடவடிக்கைகளுக்கும் வேண்டிய இரகசிய இடம், படை பலத்தைச் சேகரித்து ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் செய்வதற்கு வேண்டிய இரகசிய பூமி ஒன்று அவசியப்படுகிறது. உதய சந்திரனின் யோசனைப்படி வலம்புரித் தீவை விட இதற்கு ஏற்ற இடம் வேறு இல்லை. தவிரவும், உதய சந்திரனின் தூதுவர்கள் கடாரம், சாலேகம் முதலிய தீவுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இலங்கைக்கும் ஒரு முக்கியமான தூதுவர் சென்றிருக்கிறார். கடல் கடந்த இந்தப் பிரதேசங்களிலிருந்து பல்லவர்களுக்குப் படை பலம் கிடைக்கக் கூடும். இந்தச் சேனை வீரர்களை யெல்லாம் ஒருமுகப்படுத்தி, இவர்களுக்குப் பல தந்திர வழிகளை உபதேசித்து, திடீரென்று தாக்குதல் செய்ய வேண்டி யிருந்தால் வானத்திலிருந்து தமிழ் நாட்டிலே வந்து குதித்ததுபோல இந்த வீரர்கள் அனைவரும் திடுதிப்பென்று வந்து இறங்க வேண்டும். அதுவரை இரகசிய பூமி ஒன்றில் பதுங்கிப் பயிற்சி பெற வேண்டும். இதற்கெல்லாம் பொருத்தமான இடம் வலம்புரித் தீவுதான். எனவே உதயசந்திரனின் யோசனைப்படி முத்தரையர் வலம்புரித் தீவின் அரசியாரோடு ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார். அதன்படி வலம்புரித் தீவு இனி பல்லவர்களுக்குப் பக்கபலமாக நின்று போர் செய்யும். பல்லவர்களுக்கு எதிராக நிற்பவர்களுக்கு இனி இந்தக் கடல் எல்லையிலே இடம் கொடுக்கக் கூடாது. பகைவர்களின் மரக்கலங்கள் இந்தத் தீவுக்கு அருகில் வந்தாலும் அவற்றை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனே செய்ய வேண்டும். முக்கியமாகப் பாண்டிய நாட்டு மரக்கலங்களுக்கு இங்கே இடம் தரக்கூடாது.

இதுதான் முத்தரையர் அனுப்பிய தூதின் சாரம். அரசியல் முறையில் முத்தரையர் வலம்புரித் தீவின் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் உதவி இதுதான். இதற்கு உடன்பட்டு விட்டால் தமிழ் நாட்டிலிருந்தும், தொலை நாடுகளிலிருந்தும் பல்லவருக்காக ஆயத்தமாகும் சேனை வீரர்கள் வலம்புரித் தீவுக்கு வந்து சேருவார்கள். பிறகு எந்த வினாடியும் யுத்தத்துக்குச் சித்தமாக இருப்பார்கள். உத்தரவு வருகிற நேரத்தில் வலம்புரித் தீவிலிருந்து புறப்படுவார்கள்.

வலம்புரி மகாராணியார் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டு விட்டால், முத்தரையர்களுடைய அன்பின் இணைப்பாக முத்தரையர் குலத்து அரசகுமாரியை வலம்புரி இளவரசன் சித்திராங்க பூபதிக்கு மணம் முடிக்க இசைகிறார் பெரும்பிடுகு முத்தரையர்! முத்துக்குமரி என்ற அழகுத் திருப்பெயர் தாங்கியவளும், தமிழ்நாட்டு மண்டலங்களில் எல்லாம் ‘மதி வதனி’ என்றும் ‘அதிரூப சித்தினி’ என்றும் சிறப்புப் பெயர் பெற்றவளுமாகிய முத்தரைய குமாரி வலம்புரித் தீவின் அரசியாக, மகாராணியின் மருமகளாக வந்து சேர்வாள்.

முத்தரையர் அனுப்பிய தூதுவர் இந்தச் செய்திகளை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார். இம்மாதிரி ஒரு தூதுச் செய்தியை வலம்புரித் தீவில் யாருமே எதிர்பார்க்கவில்லையாதலால், முதலில் மகாராணியாருக்கும் பிரதானிகளுக்கும் ஆச்சரியமாக இருந்தது. எனவே, தூதுவர் ஒரு வாரம் வலம்புரித் தீவில் தங்கியிருந்து படிப்படியாக இந்த விஷயங்களை மனத்தில் நன்றாகப் பதியும்படி எடுத்துக் கூறினார். வலம்புரித் தீவின் மந்திர நாயகத்தின் முன்னோர்கள் பூர்வத்தில் முத்தரையர் குலத்தில் தோன்றியவர்களாதலால், மந்திர நாயகத்துக்கு இந்த உடன்படிக்கையில் எல்லை கடந்த ஆசையும் திருப்தியும் இருந்தன. ஆனால் சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்த காலத்தில் இப்படி ஒரு தூது வரநேரிட்டதால், பேரரசிக்கு இது விஷயமாய் முடிவு சொல்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆரம்பத்தில் சித்திராங்கன் கடல்கடந்து யாத்திரை சென்றிருப்பதாகவும் அவன் திரும்பிய பிறகே இதற்குப் பதில் சொல்ல முடியும் என்றும் சொன்னாள். மறுநாள் மந்திரநாயகத்தோடு மீண்டும் ஆலோசித்தாள். சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கும் விஷயம் முத்தரையருக்கு இதுவரை தெரிந்திராவிட்டால், இனி எப்படியும் தெரியத்தான் போகிறது என்பதை மந்திரநாயகம் எடுத்துக் கூறினார். இதன் பேரில் மறுபடியும் தூதுவரிடம் கலந்து பேசினார்கள். தூதுவரோ அசகாய சூரராக இருந்தார். இவர்கள் முழுதும் சொல்வதற்கு முன்பே அவர் விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார்:

“நானாக அதைச் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன். எனக்குச் சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த விவரம் முழுதும் தெரியும். இன்னும் அதற்கு மேலும் தெரியும். உங்களுக்குத் தெரியாத சில விவரங்களும் நான் அறிவேன். நீங்கள் வருத்தப்படாமல் கேட்பதாக இருந்தால் சொல்லுகிறேன்” என்றார் தூதுவர்.

மந்திரநாயகத்துக்கு ஏற்பட்ட ஆவலும், பேரரசியாருக்கு உண்டான கவலையும் கரையற்ற கடலாக இருந்தன. அதன்பேரில் தூதுவர் தொடர்ந்து சொன்னார்:

பிள்ளைப்பிராயத்திலே திலகர்

இளமையில் திலகர் உடலுறுதி வாய்ந்தவர். பயிற்சியினால் அதை மேலும் அபிவிருத்தி செய்து கொண்டார். படகோட்டுவது, நீந்துவது, குஸ்தி போடுவது அவருக்குப் பிரியமான விளையாட்டுகள். காசியில் கங்கை நதியில் நீந்தி அக்கரை செல்வார். இரு கைகளிலும் ஒரு ரொட்டித் துண்டை வைத்துக் கொண்டு அது நனையாமல் மணிக் கணக்கில் நீரில் மிதப்பார். உடல் அபிவிருத்திக்கு மருந்து உட்கொள்பவர்களின் வீடுகளுக்குச் சென்று மருந்து புட்டிகளை உடைத்து உடற்பயிற்சி மேற்கொள்ளும்படி வற்புறுத்துவார்.

'' சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குப் [பு]றப்பட்டு வந்த இலட்சியம், பேரியாழை [அ]ந்த வலம்புரித் தீவுக்குக் கொண்டு வர [வே]ண்டும் என்பது. இந்த இலட்சியத்துக்காக [அ]வர் தமிழ் நாட்டுக்கு வந்திருக்க வேண்டிய [அ]வசியமே இல்லை. வலம்புரித் தீவின் பேரி[யா]ழ் இந்தத் தீவிலிருந்து எந்தப் பல்லவ [அ]ரசரால் தமிழ் நாட்டுக்கு எடுத்துச் செல்[ல]ப்பட்டதோ, அதே பல்லவ அரசர்களுக்கு [நீ]ங்கள் ஒரு தூது அனுப்பி யிருந்தால் [போ]தும். அல்லது நீங்கள் முத்தரை[ய]ர்களுக்கு இது விஷயமாக ஒரு தூதுவ[னி]டம் நிருபம் கொடுத்தனுப்பி யிருந்தாலும் [போ]தும். பெரும் பிடுகு முத்தரையரே பேரி[ய]ாழை வலம்புரித் தீவுக்கு அனுப்புவதற்கு [வே]ண்டிய காரியங்களை உடனே செய்திருப்[ப]ார். சரி; அதுதான் நடக்கவில்லை. தமிழ் [ந]ாட்டுக்கு வந்த சித்திராங்கராவது நேரே [உ]தயசந்திரரை வந்து பார்த்திருக்கலாம். [அ]ல்லது முத்தரையர்களை வந்து சந்தித்திருக்க



[லா]ம். இரண்டும் முடியவில்லை யென்றால், [க]ாஞ்சிமா நகரில் அரசியல் விஷயங்கள்தெரிந்த [ப]ிரதானிகளிடம் போய்ப் பேரியாழைப் பற்[ற]ிய விவரங்களை விசாரித்திருக்கலாம். உங்கள் இளவரசர் இதொன்றும் செய்யவில்லை. சிறு பிள்ளைத்தனமாக யாரோ ஒரு விடுதித் தலைவனிடம் இந்த விஷயத்தைச் சொல்லப்போக, அது பெரும் விபரீதமாக முடிந்தது. உண்மையில் அந்த விடுதித் தலைவன் யாரோ ஒரு மனிதன் என்று அலட்சியமாகத் தள்ளிவிடக்கூடிய அநாமதேயம் இல்லை. 'பல்லவ வேந்தர்களை வேரோடு கிள்ளி எறிய வேண்டும்' என்று ஒரு பெரும் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிற நயவஞ்சகக் கூட்டத்துக்குத் தலைவன் அவன். அவனும் அவனுடைய விடுதியின் எதிர்காலமும் இப்பொழுது உதயசந்திரனுடைய தீவிரமான சீற்றத்துக்கு உள்ளாகி, நான் தமிழ் நாட்டுக்குத் திரும்பிப் போவதற்குள் என்ன நிலை ஏற்படுமோ! கடவுளுக்குத்தான்தெரியும். விடுதித் தலைவன் விஷயம் அப்படியிருக்கிறது. பூபதி அந்த விடுதியிலாவது இருந்தாரா? இல்லை. அந்தச் சூழ்ச்சிக்காரனின் வஞ்சகமான யோசனைப்படி அவர் கொடும்பாளூருக்குச் சென்றார். கொடும்பாளூரிலாவது அரண்மனைக்குச் சென்றாரா? இல்லை. ஆதிரையனைச் சந்தித்தாரா? சந்திக்கவில்லை. ஆதிரையன் ஒருவன் நல்லவனாக இருந்ததால், அவனையும் சந்திக்க விடாதபடி செய்தான் அந்தப் பொல்லாத விடுதித் தலைவன். அப்படிச் செய்ததோடு நிற்கவில்லை. இப்பொழுது ஆதிரையன் எங்கிருக்கிறான் என்றே யாருக்கும் தெரியாது. ஆதிரையனுடைய முன்னோர்கள் எல்லாம் பல்லவர்களுக்குத் துணைவராக இருந்தவர்கள். இப்பொழுது ஆதிரையனை எங்கோ காணாமல் அடித்துவிட்டு அந்த விடுதித் தலைவன் தன்னோடு சில மண்டலாதிபதிகளைச் சேர்த்துக் கொண்டு பல்லவர்களுக்கு எதிராகக் கிளம்பி விட்டான். சோழர்களும் பாண்டியர்களும் அவனுடைய சூழ்ச்சி வலையிலே வீழ்ந்து விட்டார்கள். சித்திரமாயனுடைய உறவினனான பாண்டிய மன்னன் மதுரையில் ஒரு பெரும் படை திரட்டுகிறான். சித்திராங்க பூபதியோ இதொன்றும் தெரியாமல், பாவம், குங்கும மாளிகையிலே சிறையிருக்கிறான்!''

இவ்வாறு கூறினான் தூதுவன்.

'' குங்கும மாளிகையிலா? சிறையிலா?'' என்று கேட்டார்கள், ஏக காலத்தில், அரசியாரும் மந்திரநாயகமும். அரசியார் உள்ளம் பதறி விட்டார். மந்திர நாயகத்துக்கோ தலை சுற்றியது.

'' ஆமாம்; குங்கும மாளிகை யென்பது கொடும்பாளூரில் ஒரு சூழ்ச்சிக் கூடம். அரசப் பிரதானிகள் எல்லாம் சங்கீதத்துக்கு என்று கூடி, இரகசியமாகச் சதியாலோசனை செய்கிற இடம் அது!'' என்றார் தூதுவர்.

''அது என்ன மாளிகை?'' என்று கேட்டார் மந்திரநாயகம்.

'' அது ஒரு கணிகையர் கூடம். கூத்தும் பாட்டுமாக இருக்கும் மாளிகை அது. இரண்டும் இல்லாத நேரத்தில் இரகசியக் கூட்டங்கள் அங்கேதான் நடக்கும். இப்பொழுது பூபதி அங்குதான் சிறையிருக்கிறான்!'' என்றார் தூதுவர்.

'' பூபதி அங்கே எதற்காகப் போனான்?'' என்று கவலையோடு கேட்டார் அரசியார்.

''எல்லாம் பேரியாழிலே உள்ள பைத்தியத்தினால்தான்! அரசியாரே, கவலைப்படாதீர்கள். இந்தக் குங்கும மாளிகையில்லை, இதைவிடப் பெரிய இரகசிய மாளிகையாக இருந்தாலும் கவலையில்லை. பெரும் பிடுகு முத்தரையர் நினைத்தால் அந்தக் கொடும்பாளூர்ப் பட்டணமே இரவோடு இரவு தரை மட்டமாகச் செய்ய முடியும். அத்தனை வலிமையும் செல்வாக்கும் அவருக்கு உண்டு. உங்கள் வலம்புரித் தீவின் அரசகுமாரரை அவர் நினைத்தால் ஒரு விநாடியில் அந்தக் குங்கும மாளிகையிலிருந்து மீட்டு விட முடியும்! அவர் ஒருவராலேயே முடியும் அது! அத்தோடு இப்பொழுது அவருக்குத் தலைவராக யார் நிற்கிறார்கள்? இந்தக் கடல் சூழ்ந்த பூமியில் தனக்கு நிகர் தானேதான் என்று சொல்லக்கூடிய மகிபதியும், அரசியல் மேதையுமாகிய உதயசந்திரன் நிற்கிறார். இந்த இருவரும் ஒன்று சேர்ந்திருக்கும் போது ஏன் கவலைப்படுகிறீர்கள்? சித்திராங்க பூபதி

யைச் சிறையிலிருந்து விடுவிக்கும் பொறுப்பு ங்களுடையது. முத்தரையர் அதைத் தம் முடைய கடமையாகவே கருதுகிறார். அதிலும் வலம்புரி அரச குடும்பத்துக்கும், முத்தரையர் களுக்கும் இப்படி ஒரு திருமண உறவு ஏற்படு வதாக இருக்கும் போது, நீங்கள் ஏன் அதைப் பற்றிக் கவலைப் படவேண்டும்? தம்முடைய குமாரியின் நாயகனை, தமது மருமகனைத் தாம் எப்படி மீட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரியாதா முத்தரையருக்கு?''

இவ்வாறு கூறி முடித்தார் அந்தத் தூதுவர்.

இதன் பின்னர் மூன்று நாட்கள் தீவிர மான ஆலோசனை நடந்தது. மந்திர நாயக மும், வலம்புரித்தீவின் மற்றப் பிரதானிகளும் தீர்க்கமாக யோசித்துப் பார்த்தார்கள். அரச மாளிகையில் மீண்டும் மீண்டும் கூடி ஆலோசித்தார்கள். அரசியார் தமக்குத் தோன்றிய சந்தேகங்களை யெல்லாம் சொன் னார். அவற்றின் பேரில் சர்ச்சை நடந்தது. ஒருவர் மாற்றி ஒருவர் பல கருத்துக்களை வெளியிட்டார்கள். முடிவில் அரசியாரும் பிரதானிகளும் ஒரு தீர்மானத்துக்கு வந் தார்கள். அதாவது பல்லவர்களின் படைக் கலப் பயிற்சிக்கு வலம்புரித்தீவை ஆயத்த பூமியாக வழங்குவதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனால் வலம்புரித்தீவையே ஒரு சமர் பூமியாக அவர்கள் மாற்றிவிடக் கூடாது. கலைக்கும், கலையின் ஆக்கத்துக்கும் ஒரு வளர்ச்சிப் பண்ணையாக விளங்கி வந்துள்ள இந்த வலம்புரித்தீவை, போர்க் குழப்பங்கள் ஓய்ந்ததும் மீண்டும் ஒரு அற்புதக் கலைக் கூடமாகப் புனர் நிர்மாணம் செய்து தர வேண்டிய பொறுப்பு பல்லவர்களைச் சார்ந் தது. முத்தரையர் தமது குமாரியைச் சித்தி ராங்க பூபதிக்கு மணம் முடிக்கும் விஷயமாக அரசியாருக்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால் சித்திராங்க பூபதியைச் சந்தித்து இது சம்பந்தமாய்ப் பேசி ஒரு முடிவுக்கு வருவதே நல்லது என்று அரசியார் கருது கிறார். அதே சமயம் எப்படியும் பூபதியின் இஷ்டத்தைப் பெற்று இதற்கு அவன் உடன் படும்படி செய்வது அரசியாரின் பொறுப்பு. அதற்கு முன்னேற்பாடாக இப்பொழுதே அந்தத் தூதுவரோடு மந்திரநாயகமும் முத் தரையர் நாட்டுக்குப் புறப்படுவார்.

இந்த முடிவைத் தெரிவித்ததும் தூதர் பாதி மகிழ்ச்சியும் பாதித் திகைப்புமாக இதை ஏற்றுக் கொண்டார். இதைக் கவ னித்த மந்திரநாயகம் தூதுவரைத் தனியாக அழைத்துச் சென்று நீண்ட நேரம் பேசினார். தூதர் சொன்ன ஆட்சேபம் இதுதான்.

''பெரும் பிடுகு முத்தரையர் எந்த விஷ யத்திலும் ஒரு தெளிவும் தீர்மானமும் உள்ள வர். அவர் இந்த உடன்படிக்கைக்குச் சம்ம திப்பது அவருடைய வம்சத்தின் எதிர்காலத் திருமண உறவைப் பொறுத்திருக்கிறது. எனவே இளவரசன் சித்திராங்க பூபதி இந் தத் திருமண விஷயமாக மறுத்துக் கூறிவிட் டால் முத்தரையர் வெகுண்டு விடுவார். ஏதோ தமக்கும் தமது வம்சத்துக்கும் வலம் புரி அரச குடும்பத்தார் அவமரியாதை செய்து விட்டதாகவே கருதுவார். இதனால் பெரிய விபரீத விளைவுகள் நேரலாம்!''

தூதர் சொன்ன இந்த ஆட்சேபனைக்குச் சரியான முறையில் சமாதானம் கூறினார் மந்திர நாயகம். சித்திராங்க பூபதி எப் பொழுதுமே அன்னையின் கட்டளைக்குக் கீழ்ப் படிகிற புதல்வன் என்றும், அவனை இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்கும்படி செய்வது தம்முடைய பொறுப்பு என்றும் உறுதி கூறினார் மந்திர நாயகம். இந்த உறுதியின் பேரில் தூதுவர் முழு மகிழ்ச்சியோடு எல்லா ரிடமும் விடைபெற்றுக் கொண்டு வலம்புரித் தீவிலிருந்து வெற்றியோடு புறப்பட்டார்.

வலம்புரித்தீவில் தூதுவரை வழியனுப்பிய தினத்தில் கோலாகலமான விருந்து நடை பெற்றது. அரசப் பிரதானிகளோடு, அந்தத் தீவின் மங்கிப் போன பழங் கலைகளின் சிதறிய துண்டுகளாக மீதி யிருந்த இரண்டொரு கலைஞர்கள் தங்களுடைய ஆடல் பாடல் களின் மூலம் அந்த விருந்தைப் பரிமளிக்கச் செய்தார்கள். தூதுவரோடு மந்திரநாயகம் புறப்பட்டபோது, வலம்புரி அம்மன் கோவிலி லிருந்து தீபாராதனை ஆகிக் குங்குமப் பிர சாதம் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிரதானிகள் எல்லாரும் மந்திரநாயகத்தை வழியனுப்பும்போது அவருடைய வெற்றிக் காக வாகை மாலைகளைக் கொண்டு வந்து சூட்டினார்கள்!

''தூதுவரே! உங்களோடு நான் புறப்படுவ தால், மனத்தில் எள்ளளவும் தயக்கம்



வேண்டியதில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தின் கொடியை உயர்த்திப் பிடிப்பதற்காக உங்க ளோடு இந்த வலம்புரித் தீவும் கங்கணம் கட்டி நிற்கிறது. இனி எதிர்காலத்தில் முத் தரையர் குலத்து அரசகுமாரி இங்கே வந்து இந்த வலம்புரித் தீவின் புனர் அமைப்புத் திருவிழாவிலே கலந்து கொண்டு, இந்த அம்மன் கோவிலிலே தீபம் ஏற்றி எங்களை வாழ்விப்பாள்!''

இவ்வாறு தூதுவரிடம் கூறினார் மந்திர நாயகம். அந்த வார்த்தைகள் கடல் அலை களின் மேலே தவழ்ந்தன.

எத்தனையோ மனிதர்களின் கனவுகளையும், ஆசை மொழிகளையும் எத்தனையோ பல நூற் றுண்டுகளாகக் கேட்டுக் கேட்டுச் செவி யெல் லாம் கைத்துப் போன — உப்பாகக் கைத்துப் போன- அந்தக் கருநீலக் கடல், மந்திரநாய கத்தின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தனது ஆயிரம் ஆயிரம் அலைக் கைகளையும் ஆரவாரத்தோடு உயர்த்திக் கரகோஷம் செய்தது! (தொடரும்)





த்தம் புதிய 'பெட்டி'. அதிலும் முதல் வகுப்புப் பெட்டி! அருகே சென்றால், புதிய வர்ணத்தின் வாடைகூட இலேசாக நாசியைத் தாக்கிற்று. உட்புறத்தில் இளம் பச்சை வர்ணம் கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. மௌனமாகச் சுழலும் விசிறிகள். ஒளியைக் கொட்டும் மின்விளக்குகள்.

இந்தப் பெட்டியில் நான் பிரயாணம் செய்யப் போகிறேன்.

படுத்துக் கொள்வதற்குச்சுகமான மெத்தை இருந்தது. ஆனாலும் எனக்குத் தூக்கம் வரும் என்ற நம்பிக்கை இல்லை. ஆமாம்! மூன்றாம் வகுப்புப் பெட்டியில், புளிமூட்டை போல அடைத்துக் கிடக்கும் பிரயாணிகளோடு பிரயாணியாக ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டோ அல்லது ஓரத்தில் தொத்திக் கொண்டோ கவலையில்லாமல் பிரயாணம் செய்து பழகிப் போயிருந்த எனக்கு முதல் வகுப்பின் தனிமை பயங்கரமாகத்தான் தோன்றியது.

தனிமை என்று எப்படிச் சொல்வது? என்னோடு கூடத்தான் இன்னொரு பிரயாணி வரலாமே? இந்தப் பெட்டியில் இரண்டு படுக்கைகள் அல்லவா இருக்கின்றன?

வண்டி புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள்தான் இருக்கின்றன. அதற்குள் எவரும் வராமலிருந்தால் நான் தனியாகத்தான் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட தனிமை கிடைக்குமானால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். நான் உல்லாசப் பிரயாணமா செய்கிறேன்? இல்லையே! என்னுடைய முதலாளியின் மானத்தைக் காப்பதற்கு ஆதாரமாகவுள்ள தஸ்தாவேஜிகளைக் கோயம்புத்தூர் வக்கீலிடம் கொடுத்து விட்டு வருவதற்கல்லவா நான் போகிறேன்.

''ராமன்! உங்களை நம்பி இந்தப் பெரிய பொறுப்பை ஒப்படைக்கிறேன். நீங்கள் எடுத்துச் செல்லும் இந்த ஐந்தாறு காகிதங்களில் தான் என் மானம், வாழ்வு எல்லாம் அடங்கியிருக்கின்றன. நான் நேரில் சென்றாலோ, அல்லது நெருங்கிய உறவினர்களிடம் கொடுத்தனுப்பினாலோ எதிரிகள் ஏதேனும் இடையூறு விளைவிக்கப் பார்ப்பார்கள். இதனால் தான் உங்கள் மூலம் இவைகளை அனுப்புகிறேன். முதல் வகுப்புப் படுக்கை உங்களுக்கு 'ரிஸர்வ்' செய்து விடுகிறேன். பயமில்லாமல் போய் வாருங்கள்.''

''நல்லது, ஸார்! உங்கள் பேச்சு எனக்குப் புரிகிறது. இந்தத் தஸ்தாவேஜிகளையெல்லாம் பத்திரமாக வக்கீலிடம் ஒப்படைத்து விட்டு, உடனே 'டிரங்க் போனி'ல் உங்களுக்குச் செய்தி தருகிறேன்.''

சம்பவங்கள் சிந்தனைகளாக உருவெடுத்து மாய்ந்து கொண்டிருந்தன. மறக்கக் கூடிய நிகழ்ச்சிகளா, அவை? என் மீது எங்கள் முதலாளி கொண்டிருக்கும் அபார நம்பிக்கைக்கு அத்தாட்சிகளல்லவா? 'கற்பகா டிரேடர்' ஸ்தாபனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குமாஸ்தாக்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், முதலாளி கற்பகநாயகம், இந்த அவசரமான சொந்த வேலைக்கு என்னைத்தான் தேர்ந்தெடுத்தார்! காரணம் என்ன? என் உழைப்பு ஐயா, உழைப்பு!

''ஒரு 'பர்த்' இங்கே காலியாக இருக்குமா?''—நளினமான குரல் கேட்டு உணர்வுலகுக்கு வந்தேன். பெட்டிக்கு வெளியே ஒரு நங்கை நின்று கொண்டிருந்த கோலத்தில், நாகரிகம்* தன் கோரைப் பற்களைக் காட்டி

டல் கண்ட கனவு

சோமு

மூன்றும் அத்தியாயம்

நினைவின் அலைகள்

வலம்புரித் தீவிலிருந்து மந்திரநாயகம் புறப்பட்டுச் சென்று இரண்டு வாரங்கள் கழித்து ஒரு நாள்.

வலம்புரி மகாராணியார் 'ஓலக்கம்' என்று சொல்லப்பட்ட தமது அரச மண்டபத்திலிருந்தபோது, இரண்டு காவலாளர்கள் பதறியடித்து ஓடி வந்தார்கள். சாதாரணமாக மகாராணியாரின் அரச மண்டபத்துக்குள்ளே காவலாளர்கள் அந்த மாதிரிப் பதறிக்கொண்டு ஓடி வருவது வழக்கமில்லை. அரசியாருக்கு இது வியப்பைக் கொடுத்ததோடு பதற்றமும் தந்தது. சிம்மாசனத்திலிருந்து எழுந்து விட்டார் அவர்.

"பேரரசியாரே ! நமது தீவைச் சுற்றியுள்ள நீலக் கடலின் பரப்பிலே எதிர்பாராத விதமாக மரக்கலங்கள் சூழ்ந்து நிற்பது தெரிகிறது. நமது தளபதியை அரண்மனையின் மேல் மாடியிலேயுள்ள கூண்டிற்கு அனுப்பிப் பார்க்கும்படி பணிக்க வேண்டும்" என்று சொல்லிய வண்ணம் கையும் காலும் பதறினார்கள், அந்தக் காவலாளர்கள். அவர்களுக்கு அதற்கு மேல் பேச்சு தடைப்பட்டது.

வலம்புரித் தீவின் நிர்வாகம் ஏற்கனவே கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆட்டம் கொடுத்திருந்தது. சித்திராங்க பூபதியாவது பட்டம் சூடி அரசாட்சியின் பீடத்தை நிலைப்படுத்துவான் என்று எல்லாரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இளவரசனே பேரியாழை நாடி இப்பொழுது கடல் கடந்து சென்று விட்டான். அவனுடைய யாத்திரைக்குப் பிறகு அரசியார் வேறு வழியின்றி ராஜ்யத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஒரு வகையாகச் சமாளிக்கலாம் என்று எண்ணினார். தவிரவும், வலம்புரித் தீவு தமிழ்நாட்டு அரசர்களின் கவனிப்பை இழந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், அதன் ஆட்சியில் வேறு எவ்விதமான சிக்கல்களும் இல்லாமல் செங்கோல் சென்று கொண்டிருந்தது. கடினமான அரசியற் குழப்பங்கள், கஷ்டமான கட்சிப் பிணக்குகள், தீர்க்க தரிசனத்தோடு முடிவு காண வேண்டிய பெரும் பிரச்னைகள் - ஏதும் இன்றி வலம்புரித்தீவு ஏகாந்தமாகக் கடலிலே குளித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில் இப்பொழுது திடீரென்று புதிர்கள் கிளம்பும் என அரசியார் எதிர்பார்க்கவில்லை. அன்று முத்தரையர்களின் தூதுவர் வந்து, தீக்கங்கைக் கொட்டுவது போல ஏதேதோ விவரங்களைச் சொன்னதும் அரசியாரின் மனம் துணுக்குற்றது உண்மைதான். தன்னுடைய மகனை அந்தக் குழப்பத்திலிருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு மந்திர நாயகம் தமிழ் நாட்டுக்குச் சென்றால் ஒழிய வேறு வழி கிடையாது என்று அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அதனால்தான் அந்தச் சந்தர்ப்பத்தில் மந்திரநாயகத்துக்கு விடைகொடுத்து அனுப்பினார் அரசியார். இல்லையென்றால், வலம்புரித் தீவு ஒரு படைக்கலப் பயிற்சிக் களமாக மாறுவதற்கு உடன்பட்டுள்ள அந்தச் சந்தர்ப்பத்தில் மந்திரநாயகம் நாட்டில் இல்லாமல் கடல்கடந்து செல்வதற்கு அவர் உடன்பட்டிருக்க மாட்டார். ஆனால் இப்பொழுதோ ?





படைகள் இங்கே வந்து சேர்வது என்
முடிகிற காரியமா?—இப்படி எண்ணியதும் அ
யாருக்கு மனத்துக்குள் 'பகீர்' என்றது.
பதியை உடனே வரும்படி பணித்தார்.

"தளபதி! 'அஞ்சுவது அஞ்சாமை பேதை
என்பது தமிழ் மறை. அதை மறந்துவி
கூடாது. சமர் என்று ஒன்று வந்து விட்ட
எல்லாருக்கும் முன்பாகப் படை நடத்திச் சென்
வெற்றி அல்லது வீர மரணம் என்று நிற்
பரம்பரையிலே வந்த வீரர் குலத்துத் தமிழர்
நாம். என்றாலும் தமிழ் மறை கூறிய உண்மை
மறப்பது மடமையாகும். எந்த விஷயத்துக்
பயப்பட வேண்டுமோ அந்த விஷயத்துக்
பயந்துதான் ஆக வேண்டும். எதற்
அஞ்ச மாட்டோம் என்று கண் மூட
தனமாக இருப்பதற்குப் பெயர் வீ
அல்ல. வீரம் எ
பது குருட்
உணர்ச்சி யல்
வீரம் என் ப
முட்டாள்த் த
மல்ல. அது அ
வோடு கூடி
ஆண்மை. எ
ணித் துணி
அதிலிருந்து உ
டாகிற ஆற்றலுணர்ச்சி
வீரம். அந்த வீரத்தை ந
முடைய படைத் தலைவா
ளிடம் எப்பொழுது
நான் எதிர்பார்க்கிறே
விஷப் புகை, வெடிமருந்
என்று புதிதாக ' ஏதே
சொன்னார்கள். வந்த
வரட்டும் என்று பேதை
யோடு இருந்து விட்டு
பிறகு வாளை ஓங்கி நிற்

வலம்புரித் தீவைச் சுற்றி நின்ற மரக்கலங்கள் முத்தரையர்கள் தங்களுடைய பயிற்சிக்காக அனுப்பிய படைகளாக இருக்கக் கூடும் என்று முதலில் நினைத்தாள் அரசி. ஆனால் மறுகணமே மனத்தில் சந்தேகம் உதித்தது. மந்திரநாயகம் புறப்பட்டுச் சென்று இரண்டு வாரங்கள்தானே ஆகியிருந்தன. இந்தச் சிறிய காலத்துக்குள் மந்திர நாயகம் தஞ்சை சேர்ந்து, எல்லா விஷயங்களையும் பேசி முடித்து அதன் பயனாக அங்கிருந்து

தில் அர்த்தமில்லை. நம்முடைய வலம்புரி
தீவுக்கு ஒரு பெருங் கேடு வருவதற்கு இரு
கிறது. கேட்டின் தன்மையை நன்றாக
யோசனையோடு ஆராய்ந்து பார்க்க வேண்
யது நமது கடமை. எனவே தளபதி என்
பொறுப்போடு மந்திர நாயகம் என்
பொறுப்பும் உமக்கு இப்போது ஏற்பட்டு
கிறது. இன்று நமது தீவை வளைத்து
படைகள் யாரிடமிருந்து எந்த நோக்கத்தோடு
வந்திருக்கின்றன என்பதைத் தந்திரமா



ர்ந்து வர வேண்டியது உமது கடமை. த முதலிலே செய்ய வேண்டும்!''

வ்வாறு பேசினர் அரசியார். தளபதிக்கு ன பதில் சொல்வது என்று ஒன்றும் ஓட லே. உண்மையில் யுத்தம் என்று ஒன்று நால் அதற்கான எவ்வித ஏற்பாடுகளும் பொழுது வலம்புரித் தீவில் இல்லே! கடந்த ஆண்டுகளாக அந்தத் தீவு அயர்ந்து ங்கிக் கொண்டிருந்தது!

ளபதி அரசியாரைப் பார்த்து மௌன 5 நின்ருர். அரசியார் மேலும் தொடர்ந்து ல்லுவார் :—

தளபதி! இன்று நம்மிடம் படை பலம் லே என்பது உண்மை. இந்தத் தீவில் மாளி கள் நின்ற இடம் எல்லாம் மணலாகக் க்கிறது. படைகள் நின்ற கோட்டைகளின் ர்கள் எல்லாம் கடற் காற்றின் உப்புக்கு ரயாகிவிட்டன! கலே என்ற பெயரில் த்தை மறந்து விட்டது இந்த அரசாட்சி. ன் விளைவுகள் விபரீதமாக முடியும். படிப்பட்ட விபரீதங்கள் நேராதவாறு த் தீவைக் காப்பாற்ற வேண்டியது து கடமை. ஆனல் ஓர் உண்மையை ந்துவிடக் கூடாது. இன்று நம்முடைய தீவு க்கும் நிலேயில் யார்தான் நம்மீது படை டுத்து வருவார்கள் என்று எதிர் பார்ப் ற்கில்லே. நமது தீவை ஒரு கேந்திர யாக ஆக்கித் தங்களுடைய இரகசியப் டைகளுக்கு இரகசியமாகப் பயிற்சி அளிப்ப கு நம் ஒத்துழைப்பை இரு கட்சியாரும் ப் போகிருர்கள். நாமோ ஏற்கனவே தரையர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக் றும். அத்தோடு பல்லவர் குலத்துக்கும் ல் கடந்த தீவுகளுக்கும் உள்ள தொன்மை ன உறவை நாம் ஒருநாளும் மறந்து வதற்கில்லே. அதுமட்டுமில்லே. கொடும் ளூர் வேளிர் குடும்பத்துக்கும் நமக்கும் ள—''

இதற்குமேல் அரசியரால் பேச முடியவில்லே. டும்பாளூர் வேளிர்கள் என்று சொல்ல ம்பித்தாரோ இல்லேயோ, அரசியாருடைய களிலிருந்து 'பொல பொல' என்று கண் ர் பொங்கி வழிய ஆரம்பித்தது. தளபதிக் இதைக் கண்டதும் தமது உணர்ச்சி அடக்க முடியவில்லே. இறந்த காலத்தின் வுகள் எல்லாம், நீண்ட நாட்களாக உள்ளத்துக் குள்ளே சிறை வைக்கப் பட்டிருந்த அந்தத் துன்ப நினைவுகள் எல்லாம், தளபதியின் இதயத்தைப் பிளந்து கொண்டு மேல் எழுந்தன.

''அரசியாரே! எந்த ஒரு நினைவு நம் அனைவரையும் அளவற்ற துயரத்தில் ஆழ்த்துமோ, அந்த நினைவுக்கு இப்பொழுது இடம் கொடாதீர்கள். இத்தனை ஆண்டுகள் நாம் அனைவரும் நம்முடைய இளவரசர் பூபதிக்குத் தெரியாமல் இரகசியமாகக் காப்பாற்றி வந்த விவரத்தை இப்பொழுது வெளியிட்டுப் பேசுவது கூடத் தவறு. தயவுசெய்து அந்த நினைவை மறந்து விடுங்கள். இனி ஆகவேண்டிய காரியங்கள் யாவை என்பதை நானும் நம்முடைய மந்திரச் சுற்றமும் யோசித்து முடிவு காணுகிருேம். காவலாளிகள் சொல்லுவதைப் பார்த்தால் இந்த மரக்கலங்கள், பல்லவருக்கு எதிராகப் பாண்டி நாட்டிலே யிருந்து வந்திருக்கக் கூடுமோ என்று சந்தேகிக்கிறேன். நாயகமான மரக்கலத்தின் உச்சியில் மீனக் கொடி பறப்பது போல் தெரிகிறது என்று நமது வீரர்கள் சொல்லுகிருர்கள். எதற்கும் ஆத்திரப் படாமல் பொறுத்துப் பார்க்கிறேன். பாண்டியர்கள் இந்தப் படையெடுப்பில் சம்பந்தப்பட் டிருந்தால், நிச்சயம் அவர்களுடைய தூதர் ஒருவர் முதலில் நமது அரண்மனைக்குள் வந்து தூது பேசாமல் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க மாட்டார்கள். எது எப்படியானுலும் செந்தமிழ் நாட்டார் யுத்த தர்மத்தைக் கைவிடக் கூடியவர்கள் அல்லர். பார்ப்போம்!''

இவ்வாறு சொல்லி அரசியிடம் விடை பெற்றுச் சென்றுர் தளபதி. அவர் சென்று வெகு நேரம் ஆனபின்பும் அரசியார் தமது இருக்கையிலிருந்து எழவில்லே. கொடும்பாளூர் என்ற நினைப்பு அவருடைய உள்ளத்தில் தீ மூட்டியது. எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் அந்தப் பழைய சம்பவம், அரசியாரின் வாழ்வையே பாதித்துவிட்ட அந்தச் சம்பவம், மீண்டும் உள்ளத்தைக் குமைத்தது. இதயத்தைச் சாறு பிழிந்து அந்த உணர்ச்சிச் சாற்றை யெல்லாம் விழிகளிலே கொண்டுவந்து கண்ணீராகக் கொட்டியது அந்த நினைவு.

நீண்டநாழிகை நேரம் அப்படியே அமர்ந்திருந்தார் அரசியார். மாலை நேரம் நகர்ந்து, இரவுப் பொழுதும் ஆகி, வானத்தில் நிலவு உதித்த பிறகு அரசுக் கட்டிலிலிருந்து எழுந்து அரண்மனையின் உப்பரிகைக்குச் சென்றார்.

அவரோடு நடந்து வந்த சேடியர்களையும், காவலாளர்களையும் "நீங்கள் செல்லலாம்" என்று உத்தரவிட்டு அனுப்பிவிட்டுத் தன்னந்தனியே படிகளிலே ஏறிச் சென்றார் அரசி. வலம்புரி அரண்மனையின் மேல் மாடிக் கோடியிலே கார்மேகக் கடலைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்த திறந்த நிலா முற்றத்துக்கு வந்து அதிலிருந்த பளிங்குக் கட்டிலிலே அமர்ந்தாள் அரசி. தொலைவில் சந்திரனின் நிலவில் கடலின் பரப்பிலே மரக்கலங்கள் மிதந்தன. அவற்றுக்கு மத்தியில் நாயகமாக நின்ற ஒரு பெரிய மரக்கலத்தில் உயரமான கோலும் அதில் கட்டிப் படர்ந்த கொடியும் தெரிந்தன. மீனக் கொடி என்றார் அல்லவா தளபதி? மீனக் கொடியாகவே இருக்கக்கூடும். அதையே பார்த்தவாறு நின்றாள். அந்தக் காலத்தில் கொடு ளூர் வேளிர்களுக்கும் பாண்டிய அரசர்க கும் நெருங்கிய உறவு இருந்த நாளில் நட சம்பவம் அது! அப்போது பல்லவர்களுக் வேளிர்களுக்கும் பகையில்லை. நெருங் நட்பு இருந்தது. பாண்டியர்களோ பல்ல களின் சம்பந்திகளாக விளங்கிய காலம் அ வேளிர்களுங்கூடச் சில சமயம் மீனக்கெ கட்டிக் கொண்டு பெரிய பெரிய மரக்க களிலே வந்ததுண்டு! அதெல்லாம் ஒரு கா அந்தக் காலத்திலேதான், அரசியாரின் ளத்தை இத்தனை தூரம் துயரப்படுத்து அந்தச் சம்பவம் நடந்தது! இப்பொ கடலின் பரப்பிலே மிதக்கும் மரக்கலங்கள அந்த மீனக்கொடியும் அரசியின் கண்முன் அந்தப் பழைய சம்பவங்களை யெல்ல அப்படி அப்படியே கொண்டு வந்து நி தின. கண்ணீர் பொங்கும் விழிகளுட கடலையே பார்த்துக் கொண்டிருந்த அ யின் கண் முன்பு கடல் மறைந்து விட்ட இறந்த காலத்தின் நினைவுகள் ஒன்றொன்ற அலைமேல் அலையாக எழுந்து வந்தன!

நான்காம் அத்தியாயம்

கேட்ட குரல்!

கடலை நோக்கியவாறு பூபதியின் அன்னை சிந்தனைக் கனவுகளிலே மிதந்து கொண்டிருந்த அதே இரவில், கொடும்பாளூர்க் குங்கும மாளிகையில் சித்திராங்க பூபதி சூழ்ச்சிச் சூறுவளியிலே சிக்குண்டு தடுமாறினன்!

யாழ் நங்கையிடம் தனது திடமான நோக்கங்களைச் சொல்லிக் கொண்டிருந்த பூபதிக்கு, சித்தரின் வரவு திகைப்பைக் கொடுத்ததல்லவா? நங்கை அந்த இடத்திலிருந்து மின்னலின் வேகத்தில் மறைந்து விடவே, பூபதி படிம விலாசத்துக்கு வெளியே நடந்து வந்து, சித்தரை வரவேற்போமா, அல்லது அறைக்குள்ளேயே ஏதும் நடவாதது போல் கட்டிலிலே போய் அமர்ந்து கொள்வோமா என்று ஒரு விநாடி தயங்கினன். இந்தத் தயக்கத்துக்குள் குமிழ்க் கட்டை அறைக்குள்ளே நடை போட்டது!

"என்ன தம்பீ! சௌக்கியமாக இருக்கிருயா?" என்று கேட்டுக் கொண்டே பிரம்பைக் காற்று வாக்கில் ஒரு சுழற்றுச் சுழற்றினர் சித்தர். பூபதி அந்தச் சுழற்சியை வியப்போடு பார்த்தான்.

"பிசாசை விரட்டுகிற பிரம்பு தம்பி இது! காற்று என்றால் பிசாசு என்று ஒரு பொருள்! தெரியுமா உனக்கு?" என்றார் சித்தர். பூபதி மருண்டு மருண்டு பார்த்தான்.

"என்ன மருள்கிருய்? எத்தனை பிசாசுகள் இங்கே நடமாடுகின்றன தெரியுமா உனக்கு? பாவம் நீ என்னத்தைக் கண்டாய்! அது சரி. எப்போது புறப்படுகிருய் இங்கே யிருந்து? அதைச் சொல்லு!" என்று கேட்டுக் கொண்டே சித்தர் ஏதோ காற்றிலே வாசனை பார்க்கிற மாதிரி திரும்பத் திரும்ப மூச்சு வாங்கினர்.

"என்ன வாசனை! என்ன வாசனை! எங்கேயிருந்து வருகிறது இத்தனை வாசனை! எந்தப் பூங்கொடிக்கு இத்தனை வாசனை உண் அடடா! இந்த அறை முழுதுமே பரிமள கிறதே! என்ன ராஜகுமாரா? உனக்கு நக்கீர கதை தெரியுமா? தெரியாவிட்டால் தெரி கொள். ஏனென்றால் நக்கீரர் சிவபெரு னேடு வாதிட்டதற்குக் காரணமே பாண்டி அரசியினுடைய கூந்தலிலிருந்து வந்த வாசன தான்! தெரியுமோ உனக்கு! அந்தக் கதை யைக் கட்டாயம் தெரிந்துகொள். செந்தமி மன்னர்களுடைய அந்தப்புரத்துக்குப் போ தற்குள் அந்தக் கதையைக் கேட்டுத் தெரிந் கொள், அப்பனே!"

இப்படிச் சொல்லிவிட்டுச் 'சித்தன் போக் சிவன் போக்கு' என்ற முதுமொழிப்ப மேலே நடந்தார் அந்த விசித்திர சித்த பூபதிக்கு இப்பொழுது நிலை கொள்ளவில்லை சித்தர் 'விறு விறு' என்று படிகளிலே இறங் மறைந்து விட்டார். பூபதி கட்டிலில் வந் அமர்ந்தான்.

'நங்கையின் கூந்தலிலிருந்து வந்த வாசனை யைத்தான் குறிப்பிட்டாரோ சித்தர்? அப்ப யானால் அவள் இந்த அறைக்கு வந்துபோன இவருக்குத் தெரியுமோ? அப்படியானால் பாண் டிய அரசியின் கூந்தலைப் பற்றியும் நக்கீரரி கதையைப் பற்றியும் ஏன் குறிப்பிட்டார் செந்தமிழ் மன்னரின் அந்தப்புரத்துக்கு போவதற்குள் அந்தக் கதையைத் தெரிந் கொள்ள வேண்டும் என்று சொன்னரோ? யா இப்பொழுது அரண்மனைக்குப் போகப் போகி ருர்கள்? ஒருவேளை தானே தான் போக வேண்டி நேருமோ? நான் ஏன் இந்தக் குங்கும மாளிகையிலிருந்து வெளியே செல்ல வேண்டும்? மன்னர்களின் அந்தப்புரத்துக்கு தனக்கும் என்ன சம்பந்தம் வந்தது?'

இப்படி யெல்லாம் யோசித்த வண்ண அன்றைய இரவைக்கழித்தான் சித்திராங்கன்

றுநாள் மாலே மாளிகையில் இருந்தவர்
ாரும் எங்கும் போகவில்லே. எல்லாரும்
தோ ஒரு முக்கிய விருந்துக்கு ஏற்பாடுகள்
சய்து கொண்டிருந்தார்கள் என்பது அங்
ருந்த பரபரப்பில் தெரிந்தது. அந்தப் பர
ரப்பில் பூபதி தன்னுடைய அறையை விட்டு
வெளியே வராமல் உள்ளேயே இருந்தான்.
ப்போது சாத்தன் என்ற அந்தச்செவிட்டுப்
ணியாளன் உள்ளே வந்தான். வந்து ஒரு சிறு
லேச் சுருளேக் கொடுத்து விட்டுப் போனுன் !
ஓலேச் சுருளே உலேத்துப் பார்த்தான் பூபதி !
ன்ன ஆச்சரியம் ! அது யாழ் நங்கை அனுப்
ிய நிருபம் ! அன்றிரவு படிம விலாசத்துக்கு
ப்பால் இருந்த மூன்ருவது அடுக்கில் உள்ள
பரிய அறையில் ஒரு முக்கியமான சதியா
லோசனே நடக்கப் போவதாகவும், கட்டா
ம் பூபதி தாமரத் தகட்டுக்குப்
ின்னுல் நின்று முடிந்தவரை
பச்சுகளின் போக்கைக் கவனிக்க
வண்டும் என்றும் யாழ் நங்கை
ழுதியிருந்தாள். எல்லாவற்றை
ம் விட அச்சம் விளேவித்த ஒரு
சய்தி அதில் கீழ்க்கண்டவாறு
றிப்பிடப் பட்டிருந்தது :—

''கொடும்பாளூர் அரண்
னேக்கு என் அன்னே யாழ் வாசிக்
ச் சென்றதிலும் ஒரு பெரிய
ழ்ச்சி இருந்திருக்கிறது. ஆதிரை
ர் என்ற அந்த உத்தமமான
ளவரசரை இப்பொழுது சூழ்ச்சி
லேக்குள்ளே இழுத்துப் பிடித்து
ிட்டார்கள். அவரை ஏமாற்று
தற்கு என்றே இந்த யாழ்
ாசிப்புச் சூழ்ச்சி நடந்திருக்
றது என்பதை எண்ணி எண்ணி
னம் வருந்துகிறேன். தேவதை
ளே ஒலியின் வலேயிலே மெய்யான
க்தியோடு கட்டிப் பிடிக்கிற ஒரு
னிதமான வாத்தியம் இப்பொ
து இப்படிச் சூழ்ச்சி வலேகளேப்
ன்னுகிறது !''

இவ்வாறு எழுதி யிருந்தாள்
ங்கை. இதைப் படித்ததும்
பதி மனம் நொந்து போனுன்.
ஆனுலும் நங்கையின் யோசனேப்
டி அந்தச் சூழ்ச்சிப் பேச்சின்
ாரத்தைக் கவனிக்காமல் விடு
திில்லே என்றும் தீர்மானித்துக்
காண்டான்.

நடுநிசி யாயிற்று. படிம விலாசத்தின்
ாமரத் தகட்டை அசைத்துப் பார்த்தான்.
டம் கொடுத்தது. ஆனுல் சாத்தன் உள்ளே
ன்றுகொண்டிருந்தான். சாத்தனேப் பார்த்த
ம் 'இவன் நமக்கு உடந்தையானவன்'
ன்று ஒரு தைரியம் உண்டாயிற்று பூபதிக்கு.
று விநாடி சாத்தன் கை சமிக்ஞையினுல்
டுத்த அறையின் தாமரத் தகட்டைச் சுட்
க் காட்டினுன். பூபதி சாத்தனுடைய
றிப்பை உணர்ந்து கொண்டான். அடுத்த
றைக்குச் செல்வதற்கும் இப்படி ஒரு இர
சிய வூாசல் இருக்கும் விவரத்தைத் தனக்குத்
தரிவிப்பதற்காகவே நங்கை அவனே அனுப்பி
ருக்கிருள் என்பதைப் புரிந்து கொண்டான்



பூபதி. மேலே நடந்து அந்த இரண்டாவது
தகட்டையும் அசைத்தான். உள்ளே சென்ருன்.

மூன்ருவது அறையில் பேச்சு வார்த்தைகள்
நடந்து கொண்டிருந்தன. விடுதித் தலேவ
னுடைய குரல்தான் நன்ருகக் கேட்டது.
வார்த்தைகள் தொடர்ச்சியாகக் கேட்கா
விட்டாலும் பெரும்பாலும் கேட்டபடியால்,
பேச்சின் சாரத்தைக் கிரகித்துக் கொள்வதில்
பூபதிக்குக் கஷ்டம் இருக்கவில்லே. விடுதித்
தலேவன் பேசிய வார்த்தைகளின் சுருக்கம்
வருமாறு :

சித்திரமாயனுக்குத் துணேயாகவும், பல்ல
வர்களுக்கு எதிராகவும் ஒருமித்துப் போர்
செய்யக்கூடிய தளபதிகளேப் பல இடங்களி
லும் தேடிச் சென்ருன் விடுதித் தலேவன்.
அவனுடைய இரகசிய ஏவலாளர்கள் தெற்கு
மண்டலங்களில் பல தலேவர்களேப்
போய்க் கண்டு பேசினுர்கள்.

ஆனுல் கொடும்பாளூர்க் கானகத்
துக் கோவிலில் நடைபெற்ற இரக
சியக் கூட்டம் உதயசந்திரனின்
எதிர்பாராத பிரவேசத்தினுல்
கலேந்து விட்டது. கலேந்து விட்ட
தோடு இல்லே. சித்திரமாயனேத்
தவிர மற்றவர்கள் எல்லாம் உதய
சந்திரனுடைய வீரர்களால் பிடிக்
கப்பட்டு விட்டார்கள். வல்லத்து
அரசரை உதயசந்திரனே தனது
குதிரையில் ஏற்றிக் கொண்டு
சென்று விட்டான். இப்பொழு
துள்ள நிலேமை என்ன வென்ருல்,
தஞ்சை முத்தரையர்களும், வல்
லத்தரசர்களும் பல்லவருக்குத்
துணேயாக உதயசந்திரனுக்கு
உதவுகிருர்கள். இதைச் சமாளிப்
பது கஷ்டம். பெரும் படை இருந்
தால் ஒழிய எதிரிகளே வளேப்பது
இயலாதகாரியம். உதயசந்திரனே
தந்திரத்துக்கு மேல் தந்திரமாகக்
காரியம் செய்கிருன். இதை
உத்தேசித்து விடுதித் தலேவன் ஒரு
பெரிய சாமர்த்தியமான செயல்
இப்பொழுது செய்திருக்கிருன்.
சித்திரமாயன் ஏற்கனவே சிம்ம
விஷ்ணுவின் பரம்பரை மூலமாகப்
பாண்டியர்களுக்கு நெருங்கிய
உறவு உள்ளவன். எனவேஅவனேப்
பாண்டியர்களிடம் சரணம் புகும்
படி அனுப்பியாய் விட்டது.
பாண்டியர்களும் சித்திரமாயனுக்கு உதவி
செய்வதாக வாக்களித்து விட்டார்கள். இந்த
நிலேயில் உதயசந்திரன் சற்றும் எதிர்பாராத
விதமாக வலம்புரித் தீவுக்கு ஒரு தூது அனுப்பி
யிருக்கிருன். முத்தரையர்களின் அரச
குமாரியை வலம்புரி இளவரசனுக்குத் திரு
மணம் செய்து கொடுக்க விருப்பம் தெரி
வித்து ஒரு பெரிய அரசியல் சூழ்ச்சி செய்திருக்
கிருன் உதயசந்திரன். ஆனுல் இந்தச் சூழ்ச்சி
யைக் கண்டுங்கூட விடுதித் தலேவன் மலேத்து
விடுவானு? இல்லே. அவனும் ஒரு பெரிய தந்
திரம் இப்பொழுது செய்திருக்கிருன். வலம்
புரித் தீவுக்கு மீனக்கொடி பிடித்த மரக்கலத்
தோடு ஒரு படை சென்றிருக்கிறது. ஆதியில்

பாண்டியர்களின் பெரு முயற்சியினால் உருவான வலம்புரித் தீவில் இன்று பல்லவர்கள் யாத்திரையை கொண்டாடுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதைத் தெரிந்து விடவேண்டும். பல்லவர்களின் படைகள் வலம்புரித் தீவிலே இறங்குவதற்கு முன்பு சித்திரமாயனுடைய வீரர்கள் அந்தத் தீவை ஆக்கிரமித்து விடுவார்கள். வேளிர்கள் என்றால் வலம்புரித் தீவின் அரசியாருக்கு இதயத்தில் என்ன உணர்ச்சி ஏற்படும் என்பது விடுதித் தலைவனுக்கு நன்றாகத் தெரியும். எனவே வேளிர்களின் பிரதிநிதியே இப்பொழுது மரக்கலத்தில் சென்றிருக்கிறான்!''

இத்தனை விஷயங்களையும் தெரிந்து கொண்டான் பூபதி. மனத்துக்குள் அடக்க முடியாத



கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. அத்தனை கோபத்துக்கு மத்தியிலும் எல்லையற்ற ஓர் ஆவல் பூபதியின் உள்ளத்தில் ஓங்கி நின்றது. அந்த ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனையும் மீறி அவன் இதயம் ஆதிரையனை நாடித் துடித்தது! 'ஆதிரையன்' —அவன் அல்லவா வேளிர்களின் அரசகுமாரன்? அவன் என்ன ஆனான்? வேளிர்கள் என்றால் வலம்புரி அரசிக்கு ஏதோ ஓர் உணர்ச்சி உண்டாகும் என்றானே இந்தக் கயவன்! அது என்ன உணர்ச்சியாக இருக்கக்கூடும்? அந்த ஆதிரையன் இப்பொழுது எங்கே? ஒரு வேளை அவனைத்தான் வலம்புரித் தீவுக்கு அனுப்பியிருக்கிறானோ? அட பாவமே! ஆதிரையன் எத்தனை நல்லவன்! அவனுமா இந்தச் சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டான்? அப்படியானால் தான் இல்லாதபோது இந்தக் கயவர்கள் எல்லாம் சேர்ந்து தன்னுடைய தாய் நாட்டையும் தன் தாயையும் என்னென்ன குழப்பங்களுக்கெல்லாம் உள்ளாக்கப் போகிறார்களோ, தெரியவில்லையே!

இப்படி அவன் எண்ணமிட்டுத் துடி துடித்துக் கொண்டிருக்கும்போதே, திடீரென்று சாட்டை சுண்டிவரும் ஓசை கேட்டது. நீண்ட முறுக்குச் சுருளினால் கட்டப்பட்ட பொல்லாத சாட்டை யாருடைய உடம்பிலேயோ ஓங்கி ஓங்கி விழுகிறது. ஆனால் அந்த மனிதன் மெய்யான வீரனாக இருக்க வேண்டும். சற்றும் கலங்காமல் மௌனமாக அந்த அடிகளை வாங்கிக் கொள்ளுகிறான். எவ்விதமான ஓலமும் இடவில்லை அவன்.

''அடியுங்கள். ஏன் நிறுத்துகிறீர்கள்?''

இது விடுதித் தலைவனுடைய குரல். அந்த அறையிலே எதிரொலித்து வருகிறது! இங்கே பூபதியின் செவியில் நன்றாகக் கேட்கிறது.

''அடியுங்கள்! இன்னும் அடியுங்கள். என்னுடைய உடம்பு சிதறுண்டு போகலாம். ஆனால் என் உறுதி சிதறாது!''

இப்படிச் சொல்லுகிறான் அடிபடுகிற அந்த வீரன். பாவம்! கையையும் காலையும் கட்டிப் போட்டு விட்டார்கள் போலும். என்னென்னவோ மாயங்கள் செய்து அந்த வீரனை ஏமாற்றிப் பிடித்து வந்து விட்டார்கள் போலும்! ஆனாலும் அவனுடைய வீரத்தை நெஞ்சிலிருந்து ஓட்டிவிட முடியுமா? எத்தனை கண்ணியமான குரல் அது! அதில் எத்தனை வீரம்! பூபதி அப்படியே உடல் பதறினான். யாருடைய குரல் அது? இதற்கு முன்பு கேட்ட குரல் அல்லவா அது? தனக்கு நன்றாகப் பழக்கப்பட்ட குரல் போல் அல்லவா இருக்கிறது அது?

பூபதி இப்படி நினைத்துப் பார்க்கும்போதே, மீண்டும் சாட்டை 'பளார் பளார்' என்று கேட்டது. பூபதிக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. பயத்தினால் அல்ல. எல்லை மீறிய ஆத்திரத்தினால்! பூபதிக்குக் கையும் காலும் துடித்தன. அச்சத்தினால் அல்ல. ஆவேசத்தினால்! தனக்கும் அந்தச் சதிகாரர் கூடியிருந்த அறைக்கும் நடுவே நின்ற சுவரை என்ன செய்வது? அதைப் பேர்த்துத் தகர்க்க முடியுமானால்? — இவ்வாறு எண்ணித் துடித்தான்.

துடிக்கிற கைகள் இரண்டையும் ஒன்றாகக் கோத்துக் கொண்டு நின்றான் சித்திராங்க பூபதி. இதொன்றையும் இலட்சியம் செய்யாத அந்தப் பொல்லாத முறுக்குச் சுருள் மீண்டும் மீண்டும் 'பளார் பளார்' என்று அந்த வீரனின் உடம்பிலே சுருண்டது. அந்த வீச்சு ஒவ்வொன்றும் பூபதியின் உள்ளத்திலே விழுந்தது. அந்தச் சாட்டையின் ஒவ்வொரு அறையும் இங்கே நின்ற சித்திராங்கனின் உடம்பிலே விழுந்தது. அந்த வீரனைப் போலவே பூபதியும் கலங்கவில்லை. அவனுடைய உள்ளத்தில் கட்டுக் காவலை மீறிய ஆத்திரம் மாபெரும் சீற்றத்தோடு கூடிய வீரமாகப் பரிணமித்தது. அந்தச் சுவரையே ஊடுருவிக்கொண்டு பாய்ந்து விடுபவனைப் போல ஆவேசத்தோடு நின்றான் சித்திராங்க பூபதி. (தொடரும்)

'கடல் கண்ட கனவி'ன் கதாநாயகனான வலம்புரித் தீவின் இளவரசன் பூபதியையும், பேரியாழை மீட்டி இன்னிசை வழங்கி அவனை மயங்க வைத்த நங்கையையும் ஓவியர் மணியம் இவ்விதம் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார்.

கடல் கண்ட கனவு
சோழ

ஐந்தாம் அத்தியாயம்

வீர விக்கிரமன்

“என்ன காரியம் செய்வதற்கு முனைந்து ற்கிறீர்கள்! தயவுசெய்து இங்கே வந்து டுங்கள்!”

இந்தக் குரல் கேட்டுத் திரும்பினான் பூபதி. டியின் மேல் யாழ் நங்கை நின்று கொண் ருந்தாள். அவள் பேசிய வார்த்தைகளில் தற்றம் இருந்தது. பூபதிக்கு அப்பொழுது ான் சரியான சுயநினைவே வந்தது என்று சால்ல வேண்டும். அதுவரை சூழ்ச்சிக் ட்டத்தாரின் பேச்சும், அடுத்த அறையிலே கட்ட ‘பளார் பளார்’ என்ற அடியோசை ம் அவனுக்கு ஒரு வெறியை ஊட்டி யிருந் ன. அந்த ஆவேசத்தில் “நிறுத்துங்கள்” ன்று கதறிக் கொண்டு அந்தச் சுவரையே டுருவி விடுவதுபோல் கைகளைக் கோத்து ன்றான் பூபதி! நல்ல வேளை! அவன் ப்படிக் கதறுவதற்கு முன்பு நங்கை அங்கே ந்து விட்டாள்.

“தயவுசெய்து இங்கே வந்து விடுங்கள்!” ன்று நங்கை கூப்பிட்டதும், பூபதி சுய நினை வாடு நடக்க ஆரம்பித்தான். நடந்து ங்கை நின்று கொண்டிருந்த படியின் முகப் க்கு வந்தான்.

“தங்களிடம் சில அவசரமான செய்திகள் தரிவித்துப் போகவே வந்தேன். இந்தப் படியோடு நடந்து வந்து நிலாமுற்றத்துக்கு அருகேயுள்ள சிறிய அறைக்குச் செல்லுங்கள். மிகவும் அவசரம்!” என்றாள் அவள்.

சித்திராங்க பூபதிக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. பதறி நடுங்குகிற நடுக்கம் இல்லை இது. ஏதேதோ குழப்பமான உணர்ச்சி கள் கட்டுப்பாட்டையும் மீறி உள்ளத் துக்குள்ளே பொங்கிப் பெருக ஆரம்பித்து விட்டால், உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்படு மல்லவா, அந்த நடுக்கம் இது!

பூபதி அந்தச் சிறிய அறைக்குச் சென்ற நொடி நேரத்தில், நங்கையும் அங்கே வந்து சேர்ந்தாள்.

“இங்கே உங்களோடு பேசுவதற்கு எனக் குக் கிடைத்துள்ள நேரம் மிகவும் குறைவு. அதற்குள் சொல்ல வேண்டிய செய்திகளை யெல்லாம் சொல்லி முடித்துவிட வேண்டும். ஆகையினால் என்னுடைய பேச்சை இடை மறிக்காமல் கேளுங்கள். முடிவில் நான் சொல்லுகிற யோசனைப்படி உடனே நடந்து விடுங்கள். விவாதிப்பதற்கோ, ஆராய்வ தற்கோ நேரம் இல்லை!” என்றாள் நங்கை.





அவளுடைய குரலில் தொனித்த கவலையும், அளவு கடந்த அன்பும் பூபதியை ஆட்கொண்டன. ''சரி'' என்றான் அவன்.

யாழ் நங்கை பேச ஆரம்பித்தாள். அவளுடைய குரல் மெதுவாக இழைந்தாலும் வார்த்தைகள் வேகமாக வந்தன. பிறருடைய காதில் விழக் கூடாது என்ற கவலையோடு, அத்தனை விஷயங்களையும் அத்தனை சிறிய நேரத்துக்குள் சொல்லி முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வமும் சேர்ந்து அவளுடைய பேச்சை இயக்கின. அவள் சொன்ன செய்திகளை யெல்லாம் கூர்மையாகக் கேட்க ஆரம்பித்தான் பூபதி. நங்கை சொன்னாள் :

''எதிர்பாராத பெரிய இடையூறு இப்பொழுது உங்களுக்கு நேர இருக்கிறது. பதற்றம் அடையாதீர்கள். இன்னும் முப்பது நாழிகை நேரந்தான் நீங்கள் இந்தக் குங்கும மாளிகையில் இருக்கப் போகிறீர்கள். இதன் பிறகு, ஒன்று நீங்கள் இங்கிருந்து தூக்கிச் செல்லப்படுவீர்கள் ; அல்லது நீங்களே இங்கிருந்து மறைந்து விடுவீர்கள். இந்த இரண்டில் ஒன்று கட்டாயம் நடக்கப் போகிறது. நான் உங்களுக்குச் சொல்லுவது என்னவென்றால், நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது உங்களை நாலைந்து முரடர்கள் வந்து தாக்கி எங்கோ கண்காணாத இடத்துக்குத் தூக்கிச் செல்லுவதற்கு முன்னால், நீங்களே யாருக்கும் தெரியாமல் இங்கிருந்து மறைந்து விடவேண்டும். இதுதான் நான் உங்களுக்குச் சொல்லும் யோசனை.''

நங்கை இப்படிப் பேச ஆரம்பித்ததும், பூபதிக்குத் தலை சுழல ஆரம்பித்தது. பூமியைச் சந்திரன் சுற்றி வருவது போலவும், சந்திரன் சூரியனைச் சுற்றி வருவது போலவும் இதையெல்லாம் தான் பார்த்துக் கொண்டே தானும் தன் தலையும் சுற்றுவது போலவும் இருந்தன பூபதிக்கு. இத்தனை சுழற்சிகளுக்கும் மத்தியில் அந்த யாழ் நங்கையின் சந்திர வதனம் மட்டும் நிதானத்தோடு நின்று தன்னிடம் அமைதியோடு ஆலோசனை சொல்வது போன்றிருந்தது நங்கையின் பேச்சு.

''வலம்புரித் தீவின் இளவரசரே ! உங்களை இப்படி அழைப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் இளவரசர் என்பதையும், ஒரு நாட்டையே காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதையும், இந்தத் தருணத்தில் உங்களிடம் நினைவூட்ட வேண்டியது என்னுடைய கடமை. அந்தக் கடமையை உணர்ந்துதான் இப்படிப் பேசுகிறேன். என்னைத் தவறாக எண்ணாதீர்கள்.

அன்றொரு நாள் இன்ப இரவிலே உங்களை நான் சந்தித்த போது என்னிடம் என்ன கூறினீர்கள்? நினைவிருக்கிறதா ? வலம்புரித் தீவுக்குப் பேரியாழோடு மீண்டு சென்று உங்களுடைய அன்னையின் பாதத்தில் தந்தப் பேடகத்தை வைப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா? அப்படி ஒரு மகத்தான சாதனையை இப்பொழுதே நீங்கள் உடனடியாகச் செய்து விடுவீர்களோ என்று அஞ்சி அதைத் தடுப்பதற்காக இங்கே பல சூழ்ச்சிகள் நடந்து விட்டன. அமைதியாகக் கேளுங்கள்.

மாமல்லபுரத்து விடுதித் தலைவன் எப்படியும் நந்திவர்மரைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட வேண்டும் என்பதற்காகக் கங்கணம் கட்டி நிற்கிறான். சித்திரமாயனை அரியணையில் அமர்த்தினால் ஒழிய அவன் தன் கண் இமைகளை மூடமாட்டான். ஆனால் இந்த விஷயத்தைப் பல்லவ சாம்ராஜ்யத்தின் மதியூகி உதயசந்திரர் கண்டு பிடித்து விட்டார். தம்முடைய யோசனைகளுக்கும் திட்டங்களுக்கும் எதிராக, இந்த மாமல்லபுரத்து விடுதித் தலைவன் வஞ்சகமான பல சூழ்ச்சிகளைச் செய்கிறான் என்பதைப் பல நாட்களுக்கு முன்பே கண்டு பிடித்து, அந்தச் சூழ்ச்சிகளைக் குலைப்பதற்கு வேண்டிய காரியங்களில் உதயசந்திரரும் தீவிரமாக ஈடுபட்டு விட்டார். இந்தக் குங்கும மாளிகையிலே நடக்கி[illegible] இரகசியச் சதியாலோசனைகளைப் பற்றிக்கூ[illegible] அவர் ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்டுத்தான் அன்று முன்னேற்பாடாக இங்கே வந்[illegible]



ழிசையின் போது அத்தனே
ரம் அமர்ந்திருந்தார். அது
டுமில்லே. காஞ்சிமா நகரம்
கும் ஏதேதோ பல புதிய
த்திர வேஷங்களில் எல்லாம்
ஒற்றர்களே நியமித்திருக்
ர். மாமல்லபுரத்து விடுதி
் தினந்தோறும் வந்து தங்குகிற யாத்திரிகர்
யும், அவர்களுடைய நடவடிக்கைகளேயும்
ணிப்பதற்கு என்று, விசேஷமான நிபுணர்
த் தேடிப் பிடித்து ஒற்றர்களாக அமர்த்தி
ருக்கிறுர். நீங்கள் உங்களுடைய தீவி
நந்து வந்து சேருவதற்கு முன்பே, மாமல்ல
த்து விடுதியில் ஒற்றர்களின் நடமாட்டம்
கவும் மும்முரமாக இருந்திருக்கிறது. இந்த

நிலேயில் உங்களேப் பற்றிய விவரங்களும் உதயசந்திரருக்குத் தெரிந்திருக்கின்றன. நீங்களோ விடுதித் தலேவனின் வலேயிலே விழுந்தீர்கள். விழுந்து வேறெங்காவது செல்

லாமல் இந்த மர்ம மாளிகைக்கு வந்து சேர்ந்தீர்கள். ஒரு வகையில் அது என்னுடைய பாக்கியம் என்றாலும், உங்களுடைய அநுபவங்களை எண்ணிப் பார்க்கும்போது அதைப் பற்றி வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

உங்களைப்போலவே ஆதிரையனையும் எப்படியாவது ஆசை காட்டி இந்தக் குங்கும மாளிகைக்குக் கொண்டு வருவதற்கு ஏதேதோ சூழ்ச்சிகள் செய்தார்கள். ஆனால் அவர் வருவதாகச் சொல்லியிருந்த தினத்தில் வரவில்லை. அவருக்குச் சித்திர சாலையிலே இடம் அமைத்து அவரைத் தூக்கிச் செல்வதற்குத் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் பாவம், அன்று அவர் வராமல் போனதோடு, நீங்கள் அந்த நேரத்தில் சித்திர சாலைக்குள்ளே இருந்தீர்கள். ஆதிரையன் என்று நினைத்து உங்களைத் தூக்கிச் சென்று விட்டார்கள் முரடர்கள்!

இத்தனையும் நடந்த பிறகுதான் எனக்கு இந்தச் செய்திகள் தெரிய வந்துள்ளன. எப்படித் தெரிய வந்தன என்பதைப் பற்றி இப்பொழுது மூளையைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இத்தனை வேதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் எனக்கு ஏதோ ஒரு சிறு அதிர்ஷ்டம் இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. இல்லையென்றால் சாத்தன் என்ற பணியாளன் இத்தனை தூரம் எனக்கு உண்மையாக இருக்க வேண்டியதில்லை! ஆமாம். சூழ்ச்சியும் வஞ்சகமும் நிரம்பிய இந்தச் சூழலில் அவன் ஒருவன் மட்டும் எனக்கு உண்மையாக இருக்கிறான். அவனை ஒரு செவிடன் என்று நினைக்காதீர்கள். அவன் ஒரு காரியச் செவிடு. செவிடனாக நடித்துக் கொண்டே எல்லாப் பேச்சுக்களையும் நடப்புக்களையும் மனத்தில் நன்றாக வாங்கிக் கொள்ளுகிற புத்திசாலி அவன்! என்னுடைய தாயார் அவளுடைய திட்டங்களுக்குச் சாதகமாக இவனை இப்படி ஒரு கைதேர்ந்த நடிகனாகப் பயிற்சி செய்து விட்டிருக்கிறாள். ஆனால் அந்த நடிகனுக்கும் இதயம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? அந்த இதயத்தில் நடிப்புக்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட உண்மையான உணர்ச்சிகள் நிச்சயம் இருக்கத்தானே செய்யும்? அத்தகைய உண்மையான உணர்ச்சிகளோடு பூரணமான விசுவாசத்தோடு எனக்கு உதவிசெய்கிறான். அவன் இன்று, இப்பொழுது, சற்று நேரத்துக்கு முன்பு வந்து சொன்ன செய்திதான் இத்தனை அவசரமாக உங்களிடம் நான் ஓடிவரும்படி செய்தது. அது காரணமாகத்தான் உங்களை இந்த மாளிகையிலிருந்து வெளியேறி விடும்படி சொன்னேன்.''

இப்படிக் கூறிவிட்டு நங்கை படிகளைக் கடந்து கீழே பார்த்தாள். அங்கே சாத்தன் நின்று கொண்டு காவல் காத்துக் கொண்டிருந்தான் போலும்!

அவன் கீழேயிருந்து தைரியமாக இருக்கும்படி சமிக்ஞை செய்திருக்க வேண்டும். அதன் பேரில் நங்கை மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தாள்.

''விடுதித் தலைவனுக்கு வீர விக்கிரமன் என்றுபெயர். அவன் வீரமும் விக்கிரமமும் இல்லாதவனானாலும், குயுக்தியான வேலைகள் செய்வதில் நிபுணன். உங்களை இந்த மாளிகைக்கு அனுப்பும்போது வலம்புரித் தீவையே தன்னுடைய கைக்குள் அமைத்துக் கொள்வதாக எண்ணினான். பல்லவர்களுக்கு எதிராக ஒரு சேனையை ஆயத்தப்படுத்துவதற்கு உங்களுடைய தீவைத்தான் சேனைத் தளமாக அமைத்துக் கொள்ளத் திட்டம் இட்டிருந்தான். அதன்படியேதான் உங்களை மிகவும் நயமாகப் பேசி நட்பு முறையிலேயே காரியத்தைச் சாதித்துக் கொள்ளச் சூழ்ச்சி செய்தான். ஆனால் உதயசந்திரனுடைய தீர்க்கதரிசனமோ, வீர விக்கிரமனை இப்பொழுது திக்குமுக்காடச் செய்கிறது. தெற்கு மண்டலத்திலுள்ள தலைவர்களை வளைத்து ஒன்று திரட்டுவதற்கு ஏதோ முயற்சி செய்தானாம். ஆனால் உதயசந்திரன் கானகக் கோவிலில் இவர்களைத் தாக்கி, வல்லத்து அரசரை இவர்களிடமிருந்து பிரித்துக் கொண்டு சென்று விட்டாராம். அதோடு நிற்கவில்லை அவர். முத்தரையர்களோடு கலந்து ஆலோசித்து உங்களுடைய நாட்டுக்கு ஒரு தூதுவரை அனுப்பியிருக்கிறாராம் உதயசந்திரன். இந்தத் தூதுவரிடம் என்ன சொல்லியனுப்பியிருக்கிறார் என்று விடுதித் தலைவனுக்கு, அந்த வீர விக்கிரமனுக்கு, இன்னும் முழு விவரமும் தெரியாதாம். ஆனாலும் விட்டானா இவன்! இவன் சித்திரமாயனைப் பாண்டியனிடம் அனுப்பி அந்த அரசனுடைய காலிலே போய் விழும்படி சொல்லியிருக்கிறானும். ஏற்கனவே பாண்டியனுக்கும் சித்திரமாயனுடைய முன்னோர்களுக்கும் நெருங்கிய உறவு. இதனால் இப்பொழுது சித்திரமாயன் கட்சிக்குப் பாண்டியர்களுடைய உதவி கிடைத்திருக்கிறது. நந்திவர்ம பல்லவருக்கு உதவியாக உதய சந்திரனோடு முத்தரையர்கள் நிற்கிறார்கள். சித்திரமாயனுக்கு உதவியாக விடுதித் தலைவனோடு பாண்டியர்கள் நிற்கிறார்கள். இருவருக்குமே வலம்புரித் தீவில் ஒரு கண் விழுந்து விட்டது. உதயசந்திரன் உங்களுடைய வலம்புரித் தீவுக்குத் தூதுவரை அனுப்பியிருக்கிறார் என்று தெரிந்ததும், இப்பொழுது சித்திரமாயன் கட்சியில் இந்த விடுதித் தலைவனும் ஏதோ ஒரு படைக் கூட்டத்தை உங்கள் தீவுக்கு அனுப்பியிருக்கிறானும். அதோடு அந்தப் படை திரும்பி வந்து செய்தி தெரிவிக்கும்வரை உங்களுடைய இருப்பிடத்தை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று கருதி, நாளை இரவே உங்களை இந்த மாளிகையிலிருந்து வெளியேற்றிக்கொண்டு போவதற்காக ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்தச் செய்தியைச் சாத்தான் மூலம் சற்று நேரத்துக்கு முன்புதான் கேள்விப்பட்டேன். நீங்கள் இவர்கள் கையில் அகப்பட்டு விட்டால் பிறகு என்ன நேரும் என்று சொல்வதற்கில்லை. நீங்கள் எப்படியாவது இங்கிருந்து தப்பிச் சென்றுவிட வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன்—''

இப்படிச் சொல்லும்போது நங்கையின் குரல் தளர்ந்தது. கஷ்டப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொள்ள முயற்சித்தாள். இதைக் கண்டு பூபதி ஏதோ பேச ஆரம்பித்தான். அவனைப் பேச விடாமல் இடைமறித்தாள் நங்கை.

''இப்பொழுது என்னோடு தர்க்கம் செய்ய வேண்டாம். இத்தனை சூழ்ச்சிகளுக்கு மத்தியில் வீரத்தோடு எதிர்த்து நிற்கப் போவதாகச் சொல்ல வருகிறீர்கள். வேண்டாம்.

களுடைய இலட்சியத்தைக் கொஞ்சம் ணிப் பாருங்கள். பேரியாழோடு வலம் தீவுக்குச் செல்ல வேண்டிய இள ர் நீங்கள். அந்தக் கடமையை மறந்து ாதீர்கள். மற்றச் சண்டைகளுக்கும் கள் இலட்சியத்துக்கும் சம்பந்தம் இல்லை. யாழோடு நீங்கள் இந்த மாளிகையி ந்து நாளை இரவுக்கு முன்னதாகவே றந்து விடுவதற்கான ஏற்பாட்டைச் செய் கள். ஏற்பாடு என்ன? சாத்தன் வந்து உங்களை நாளை இரவு முன்னேரத்தில் கூப்பிடு வான். அப்பொழுது நீங்கள் பேரியாழோடு புறப்பட்டுவிட வேண்டும். மற்றக் காரியங் களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.''

இவ்வாறு நங்கை சொல்லிக் கொண்டிருக் கும்போதே மாடிப் படிகளில் 'தட தட' என்று சத்தம் கேட்டது. சாத்தன் ஏதோ சமிக்ஞை செய்கிறான் என்று உணர்ந்து கொண்ட நங்கை 'பளீர்' என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

ஆறும் அத்தியாயம்

பூபதி புறப்படுகிறான்!

யாழ் நங்கை சென்ற பிறகு சித்திராங்க தி படிம விலாசத்துக்குள்ளே போய் ண்ட நேரம் மூளையைக் குழப்பிக் கொண்டே ந்தான். இரவு நகர்ந்ததும் பொழுது ந்ததும் அவனுடைய விழித்த கண்களுக்கு ன்னல் நடந்த நிகழ்ச்சிகள்.

மறுநாட் காலை பூபதி மாடிப் படிகளில் றங்கிச் சென்று தனது மூளையின் கொதிப் ல்லாம் தணியும்படியாகப் 'பொங்கு புன லே' நீராடி விட்டு மறுபடியும் படிம விலா த்திலே நுழைந்தபோது, அங்கே யிருந்த ய்மானத்தில் பிரம்பு சாத்தியிருந்தது. ற்றுத் தொலைவில் ஒரு வட்டமான இருக்கை ல் அமர்ந்திருந்தார் சித்தர்!

பூபதிக்குத் திகைப்பு நீங்கி அவன் தன்னு டய இரண்டு கைகளையும் கூப்பி வணங்கு தற்குள், சித்தர் எழுந்து வந்து அவனுக்கு திரே நின்று கொண்டார்.

''என்ன ராஜகுமாரா! உன்னிடம் ஒரு க்கியமான கேள்வி கேட்கவேண்டும். அதற் ாகத்தான் இப்பொழுது வந்தேன். குழம் ாமல் பதில் சொல்கிறாயா?'' என்றார் சித்தர். பதி அவருடைய முகத்தையே பார்த்தான்.

''நீ சிவபக்தனா? விஷ்ணு பக்தனா? அல்லது மண சமயத்தில் நாட்டம் கொண்டவனா? துதைச் சொல் முதலில்!''

குளித்து விட்டு நெற்றியில் எந்தவிதமான ன்னமும் இல்லாமல் வருவதால் சித்தர் இப் டி ஒரு போடு போடுகிறாரோ என்று நினைத் தான் பூபதி. கேள்விக்குப் பதில் சொல் தற்கு வேண்டிய மன உறுதி இல்லை. சொன்னான்:

''ஐயா! எப்பொழுது பார்த்தாலும் கேள்விமேல் கேள்வியாகப் போட்டு என்னைக் குழப்பியடிக்கிறீர்களே! தயவு செய்து...''

''பார்த்தாயா? மறுபடியும் குழம்ப ஆரம் பித்து விட்டாய் என்றல்லவா தெரிகிறது. குழம்பாதே தம்பி, குழம்பாதே! குழப்பம் எல்லாம் இன்னும் ஒன்றும் நடந்துவிட வில்லையே! அதற்குள் குழம்புகிறாயே! குழம் பாதே. நான் எதற்குக் கேட்டேன் என்றால், நீ சிவபக்தனானால் உனக்கு நரவாகனம் பிடிக் கும். விஷ்ணு பக்தனானால் பறவையிலே பறக்க வேண்டும் என்பாய். இரண்டும் இல் லாமல் சமண பக்தனானால் என்ன சொல்லு வாய் என்று யோசித்தேன்!''

''ஐயா, எதற்காக இந்த ஆராய்ச்சியில் இப்பொழுது இறங்கினீர்கள்? புரிய வில்லையே!'' என்றான் பூபதி.

''சரி; ஆராய்ச்சி உனக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. அப்படியானால் ஒன்று கேட்கிறேன் சொல். நீ என்றைக்காவது சிவிகையிலே ஏறிப் பிரயாணம் செய்த துண்டா?'' என்று கேட்டார் சித்தர்.

''சிவிகையிலா? இல்லை. பொதுவாக மனிதனை மனிதன் தூக்கிச் சுமப்பது எனக்குப் பிடிக்காது!''—இப்படி ஒரு போடு போட் டான் பூபதி, சித்தரிடம். அவனுக்குப் பொறுமையில்லை. அந்த ஆத்திரத்தை இப் படித் தீர்த்துக் கொண்டான்!

''ஓகோ! மனிதனை மனிதன் சுமக்கக் கூடாதோ! நன்றாயிருக்கிறதே நீ சொல்வது! வாயுள்ள மனிதனை வாயில்லாத மிருகம் தூக்கிச் சுமக்கலாம், வாயுள்ள மனிதன் சுமக்கக் கூடாதோ? இது என்ன நியாயம் தம்பி, நீ சொல்வது? வாயில்லாத மிருகத்தை ஏமாற்றி வதைத்து அதன் பேரில் ஏறினால் அது வாயை மூடிக் கொண்டு இருக்கிறது! ஏறிச் செல்லுகிறவனுக்கு மிகவும் சௌகரி யம்! சிவிகை என்றால் அப்படியில்லை அல்லவா? தூக்கிச் சுமப்பதற்குப் பணமும் வாங்கிக் கொண்டு வாயையும் திறந்து வசவுகள் பொழிவான் அல்லவா மனிதன்! தனது கஷ் டத்தை எடுத்துச் சொல்ல அவனுக்கு வாய் இருக்கிறதல்லவா! அதனால் மனிதன் மனித னைச் சுமக்கக் கூடாது. தூக்கிச் சுமக்க வேண் டிய ஜீவன் வாயில்லாப் பிராணிதான்! அது தான் நல்லது! சௌகரியம்! வம்பு கிடை யாது! கிளர்ச்சி இராது!''

சித்தர் இந்த மாதிரிப் பேசிக் கொண்டே படிம விலாசத்திலிருந்து பிரம்பை எடுத்துக் கொண்டு நகர்ந்து விட்டார்!

பூபதிக்குத் தலையெல்லாம் சுழன்றது. சிவிகை, நரவாகனம் என்றெல்லாம் இந்த நேரத்தில் இப்படிச் சில வார்த்தைகளை உதிர்த்து விட்டுச் செல்லுகிறாரே சித்தர்! இவர் ஏன் இப்பொழுது இங்கே வரவேண்டும்? ஒரு வேளை தான் மாளிகையிலிருந்து வெளி யேறுவதற்குச் சிவிகை வரப்போகிறதோ?

இப்படி எண்ணிக் கொண்டிருக்கும்போதே பூபதிக்கு நேற்றிரவு நடந்த சம்பவம் உள்ளத் தில் திடீரென்று புயல் வீசிற்று. பக்கத்து அறையில் 'பளீர் பளீர்' என்று அடியோசை

கேட்டதே! அந்த வீரன் தன்னை எத்தனை வேண்டுமானுலும் அடிக்கலாம் என்று கலங்காமல் சொன்னனே. அந்தக் குரல் இதற்கு முன்பு கேட்ட குரலாக இருந்ததே! அது யாராக இருக்கும்! இன்னெரு முறை அந்தக் குரல் கேட்டிருக்குமானுல் அது யாரென்று கண்டு பிடித்திருக்க முடியும்! ஆனல் அதற்குள் யாழ் நங்கை அங்கு வந்து விட்டாளே! என்றாலும் அவள் வந்ததினல் எத்தனை விஷயங்கள் தெரிந்து கொள்ள முடிந்தது! வலம்புரித் தீவில் இரண்டு கட்சியின் சேனைகளும் கண்ணுக இருக்கிருர்களே! தன் அன்னையும் மந்திரநாயகமும் மனம் குழம்பாமல் ஸ்திரமான ஒரு முடிவுக்கு வரவேண்டுமே! இத்தனை முக்கியமான நெருக்கடியில் தான் வலம்புரித் தீவில் இல்லாமல் போனது எத்தனை பெரிய துர்ப்பாக்கியம்!

இப்படி ஏதேதோ நினைப்புக்கள். இடையிடையே சித்தரைப் பற்றிய விமர்சனங்கள். அவருடைய பிரவேசமும், பேச்சும் பற்றிய சிந்தனைகள். உதய சந்திரன் மிகவும் ஆற்றலோடு ஏதேதோ புதிய வேஷங்களில் ஒற்றர்களை அமர்த்தியிருப்பதாக யாழ்நங்கை கூறினுளே, அப்படி இந்த விசித்திர சித்தரும் ஒரு நிபுண ஒற்றராக இருக்கக் கூடுமோ? இவருந்தான் மாமல்லபுரத்திலிருந்து தன்னைப் பின்தொடருகிருரே!

இவ்வாறு எண்ணமிட்டான் பூபதி. மேற்கொண்டு எண்ண எண்ண இந்த நினைப்பு உறுதியாயிற்று. 'ஆமாம்; இந்தச் சித்தர் நிச்சயம் ஒரு பெரிய அரசாங்க ஒற்றராகத்தான் இருக்க வேண்டும்!' என்று நினைத்தான் சித்திராங்கன். அதே சமயம் இன்னெரு முக்கியமான சந்தேகம் அவனுடைய மனத்தில் எழுந்தது. அன்ருெரு நாள் நங்கையுடன் பேசிக் கொண்டிருந்த போது, அவள் இந்தச் சித்தரைப் பற்றி எத்தனை பக்தி சிரத்தையோடு குறிப்பிட்டாள். புண்ணிய புருஷர் என்றும் அவருடைய பாதங்கள் இந்த மாளிகையில் படுவதே ஒரு பாக்கியம் என்றும் அல்லவா அவள் சொன்னுள். அதை நினைக்கும் போது இவர் ஒரு மகானுகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது! ஆனல் அப்படி ஒரு மகான் என்றால் அவர் ஏன் இந்த மாதிரியான ஓர் இடத்துக்கு வருகிருர்?

இப்படி நினைத்ததும் பூபதிக்குச் சிரிப்பு வந்தது! 'மகானுவது ஒன்ருவது' என்று ஒரு கணம் நினைத்தான். அப்படி நினைக்கும் போதே அந்தக் குமிழ்க் கட்டையின் நினைப்பும் பிரம்பின் வீச்சும் நினைவு உலகிலே வட்டம் சுற்றி ஒரு கணம் உள்ளத்தை என்னவோ செய்தன! அவருடைய சிரிப்பையும், அந்தக் கூர்மையான கண்களையும் கற்பனையிலே ஒரு தரம் பார்த்தான்! 'அப்பப்பா! அவரை நினைத்துப் பார்த்தாலே உடம்பை என்னவோ செய்கிறதே! மகான் என்றால் இப்படித்தானே இருக்க வேண்டும்? வேறு எப்படி யிருப்பாராம் மகான்? மகானுக்கு இரண்டு கொம்பா முளைத்திருக்கும்!''

இந்த மாதிரி ஓர் எண்ணம் எழுந்ததும், பூபதி சிந்தனை செய்வதை நிறுத்திவிட்டான். 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்று முன்னெரு முறை விடுதித் தலைவன் சொன்னது பூபதியின் மனத்தில் நன்ருகப் பதிந்து போயிருந்தது. 'இவர் மகானே, ஒற்ற நிபுணனே! எப்படி யிருந்தாலும் இருக்கட்டும்! நம்மை வந்து இப்படிக் குழப்பியடிக்க வேண்டியதே யில்லை!' என்று எண்ணியவனுகை இருக்கையை விட்டு எழுந்து, படிமாடத்துக்கு வெளியே பார்த்தான். சித்தர் போய் விட்டாரா அல்லது இப்பொழுது கூட அங்கேதான் எங்கேயும் நின்று கொண்டிருக்கிருரா என்று பார்ப்பது போல!

பூபதி சுற்று முற்றும் பார்த்தான். பிரம்போ, குமிழ்க் கட்டையோ அவற்றின் சப்தமோ ஒன்றும் இல்லை. பூனைபோல் சென்று விட்டார் என்று தீர்மானித்து நிற்பதற்குள், படிக்கட்டில் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. 'தட தட' என்று கேட்கவில்லை. மெதுவாக இரகசியமாக அடிமேல் அடிவைத்து வருவதுபோல் கேட்டது. எத்தனை மெதுவாக நடந்தாலும் அந்த மரப் படிக்கட்டில் பாதம் படுகிற ஓசை கேட்கவே செய்தது. யாரென்று ஆவலோடு நின்று கவனித்தான் பூபதி. பணியாளன் சாத்தன் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்தான்.

பணியாளன் சாத்தன் என்றதும், பூபதிக்கு மீண்டும் உடம்பு பதற ஆரம்பித்தது. அவனுல் கேடோ தீமையோ எதுவும் ஏற்படாது என்று நன்ருக இப்பொழுது தெரிந்து போய் விட்டது. யாழ் நங்கை சாத்தனைப் பற்றிக் கூறிய விவரங்கள் பூபதியின் மனத்தில் அத்தனை நம்பிக்கையை ஊட்டியிருந்தன. என்றாலும், அதே சமயம் ஒரு பயமும் புதிதாக முளைத்திருந்தது. யாழ் நங்கையின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பணியாளனும், அவளுக்கு உண்மையான அன்போடு உதவி செய்கிற உத்தமத் தொண்டனுமான அந்த மனிதன் இப்பொழுது இத்தனை தூரம் பதுங்கிப் பதுங்கி வரவேண்டும் என்றால் எத்தனையோ முக்கியமான காரியமாகத்தான் இருக்க வேண்டும். அதிலும் இரவுக்குள் அந்த மாளிகையை விட்டு வெளியேறுவதற்குச் சித்தமாக இருக்கும்படி நேற்று நங்கை தன்னிடம் சொல்லிப் போயிருக்கிருள் அல்லவா? தானே ஏதோ ஏற்பாடுகள் செய்வதாகவும் கூறினுள் அல்லவா? அந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் அவளுக்குத் துணையாக இருக்கக் கூடியவன் அந்தக் குங்கும மாளிகையில் சாத்தனைத் தவிர வேறு யார் இருக்க முடியும்? —இவ்வாறெல்லாம் நினைத்து ஒரு கண நேரத்துக்குள் ஓராயிரம் கேள்விகள் எழுப்பிக் கொண்டு மனம் குழம்பினுன் பூபதி! இதைப் புரிந்து கொண்ட அந்தச் சாத்தன் நடந்து வரும்போதே கையினுல் சமிக்ஞை செய்தான். நேற்றுச் சென்ற அந்தச் சிறிய அறைக்கு உடனே செல்லும்படியாகக் கையினுல் ஜாடை காட்டினுன் சாத்தன். பதறுகிற கால்களை நன்ருக அமுக்கிக் கொண்டு வேகமாக நடந்தான் பூபதி. நடந்து அந்த அறைக்குள்ளே நுழைந்தான். அங்கே யாரும் இல்லை. ஒரு சிறிய துணி மூட்டை மட்டும் இருந்தது. இதற்குள் பூபதியின் பின்னுல் நடந்து வந்த சாத்தன் அந்தத் துணி மூட்டையை அவிழ்க்கும்படி கையினுல் ஜாடை காட்டிக்கொண்டே அறைக்கு வெளியே நின்று, அறையின் கதவைச் சாத்தி மூடினுன். அறைக்குள்ளே தனியாகப் பூட்டப்பட்ட பூபதி அந்தத் துணி மூட்டையை எடுத்து அதில் என்ன இருக்கிறது என்று உலைத்துப் பார்த்தான்.

(தொடரும்)

கடல் கண்ட கனவு

சோழ

ஏழாம் அத்தியாயம்

எதிர்க் கட்சி

5ந்திவர்ம பல்லவன் பட்டத்துக்கு வந்தபோது அவனுக்கு
ராகச் சித்திரமாயன் என்ற வாலிபன் தானேதான் பட்டத்
த உரியவன் என்று கிளர்ச்சி செய்ததும், அந்தக் கிளர்ச்சிக்கு
ரகவே உதயசந்திரன் என்ற ராஜதந்திரி நந்திவர்மனைப்
லவ சிம்மாசனத்தில் ஏற்றினுர் என்பதும் நமக்குத் தெரி
இப்பொழுது மாமல்லபுரம் விடுதித் தலைவனை வீர
கிரமன் என்ற சதிகாரன் சித்திரமாயனுக்குப் பக்கபலமாகச்
ந்த பிறகோ என்ருல், சித்திரமாயனுடைய கட்சி மிகவும்
மையடைய ஆரம்பித்தது. எத்தனையோ சாமர்த்தியத்
டும், தீர்க்கமான ஆலோசனையோடும், உதயசந்திரன் பல்லவ
சைக் காப்பாற்ற முனைந்து நின்றபோதிலும், அவருடைய
ற்சி ஒவ்வொன்றுக்கும் பலமான எதிர்ப்பும் போட்டியும்
மையடைய ஆரம்பித்தன. விடுதித் தலைவன் வீரவிக்கிரம
டைய நடமாட்டங்களையும், அவனுடைய இரகசிய சதியா
சனைகளையும் கவனமாக ஆராய்வதிலும், அவனுடைய
வடிக்கைகளைத் தெரிந்து உடனுக்குடன் எதிர் நடவடிக்கைகள்
ப்பதிலும், உதயசந்திரன் தம்முடைய திறமை முழுவதை
செலவிட வேண்டி யிருந்தது.

கொடும்பாளூர்க் கானகத்தில் நடந்த வீரவிக்கிரமனின் இரகசி
கூட்டத்தை உளவறிந்து கண்டு, மிகுந்த முன்னேற்பாட்டுடன்
யசந்திரன் தாமே குதிரைப் படையோடு சென்று அந்தக்
டத்தை முறியடித்தபோது, முதலில் மகிழ்ச்சி அடைந்தார்.
லத்தரசரை அந்தச் சதிகாரர்களுடைய பிடியிலிருந்து விடுவித்
கொண்டு வந்ததில் இவருக்கு உண்மையிலேயே ஆனந்தம்
டாயிற்று. பிறகு தஞ்சையிலே கூடிய
லாசனைக் கூட்டத்தில் வல்லத்தரசரும்
ருடைய தாயாதியான முத்தரையரும்,
தி வர்மனுக்கு உதவியாகப்
ட பலம் திரட்டுவதற்கும்
ம் புரித் தீவிலே இரகசியப்
ற்சி நடத்துவ
ற்கும் சம்ம
து, இதற்கு
ண்டிய யோச






னேகளைச் சொன்னதும் உதயசந்திரனுடைய மகிழ்ச்சி பன்மடங்கு பெருகிற்று. வலம்புரி அரச குமாரனை சித்திராங்க பூபதிக்கு முத்தரையர்களின் அரச குமாரியை மணம் முடிப்பதாக முத்தரைய மன்னரே யோசனை சொன்னதும், உதயசந்திரன் தம்முடைய திட்டம் அனைத்தும் மகத்தான அளவில் வெற்றி யடைந்து விட்டதாக மனங்களித்தார். ஆனல் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவருடைய உள்ளத்தை வேதனைப் படுத்தின !

உதயசந்திரனுக்கு உடந்தையாக முத்தரையர்கள் வலம்புரித் தீவுக்குத் தூது அனுப்பியிருக்கிருர்கள் என்ற செய்தியை எப்படியோ அறிந்து கொண்டு, வீர விக்கிரமன் செய்த வேலேகள் உதயசந்திரனேயே மனங் கலங்கச் செய்து விட்டன ! சித்திரமாயனே மதுரைக்கு அனுப்பிப் பாண்டிய 'மன்னர்களின் ஒத்தாசையைச் சம்பாதித்து விட்டான் அல்லவா? இந்தச் செய்தியை அறிந்ததும் உதய சந்திரன் இரவு முழுதும் உறங்கவில்லே. திட்டத்துக்கு மேல் திட்டமாக யோசனே செய்தார். அந்த யோசனேகளின் பயனுக ஓர் ஆழ்ந்த முடிவுக்கு வரப்போகிற தருணத்தில், இடி விழுந்தது போல் மற்ருெரு செய்தி அவருக்கு எட்டியது. வீர விக்கிரமன் கொடும்பாளூர் வேளிர்களேத் தன் கட்சிக்கு வளேத்து விட்டான் என்றும், மீனக்கொடி தாங்கிய மரக்கலங்கள் வலம்புரித் தீவை நோக்கிக் கடல் மார்க்கமாகச் சென்றிருக்கின்றன என்றும் உதயசந்திரன் அறிந்தார். அப்பொழுது அவருடைய திடமான உள்ள முங் கூடக் கொஞ்சம் ஆடியது.

நந்தி வர்மனுக்குத் துணையாகத் தன்னுடன் இனி யாரெல்லாம் ஒன்று கூடி யிருக்கிருர்கள் என்பதை யோசித்துப் பார்த்தார் உதய சந்திரன் ! முத்தரையர்களும் வல்லத்தரசரும் துணே செய்கிருர்கள். அவர்களிடமும் அவர்களேச் சார்ந்த தெற்கு மண்டலத்துத் தலைவர்களிடமும் உள்ள படை பலம்

நந்திவர்மனுக்காகப் போர் செய்ய முன்
சந்தேகமில்லே. ஆனல் சித்திரமாயன்
யிலோ? அந்தப் பொல்லாத வீர விக்
னுக்குத் துணையாக மதுரைப் பாண்டிய
ஒன்று சேர்ந்து விட்டார்களே ! இப்பொ
அத்தோடு நிற்கவில்லேயே ! கொடும்ப
வேளிர் தலைவர்களும் ஒன்று சேர்ந்து
டால், இனி என்ன ஆகும்? வேளிர் த
களுக்குத் தென்னுட்டில் நல்ல செல்வ
உண்டு. இதுவரை பல்லவர்களுக்கு அட
குறுநில மன்னர்களேப்போல ஒதுங்கி வா
வருகிற சோழர்களேயுங்கூட வேளிர்கள்
ளுக்குத் துணையாகச் சேர்த்துக்கொண்டு வ
கூடும். அப்படி நேர்ந்து விட்டால் எ
கட்சியின் பலம் சமாளிக்க முடியாத அள
வலிமை பெற்று விடுமே ! இப்படி நினே
தும் உதயசந்திரனுக்கு ஒன்றும் ஓடவில்
உண்மையில் வேளிர்களின் மனமாற்
அவருக்குக் கவலேயைத் தந்ததோடு அ
கடந்த வியப்பையும் ஊட்டியது.

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு மு
நம்முடைய வீரத் தமிழ் நாட்டிலே வே
களின் படைபலம் அத்தனே மகோன்னதமா
நிலேயில் இருந்தது. தமிழ் நாட்டின் ச
திரக் கல்வெட்டுக்களில் விக்கிரமகேசரி என்
வேளிர் மன்னனேப் பற்றியும், அவனுடை
முன்னேர்களான பரதுர்க்கமர்த்தனன், பரா
கிரம மர்த்தனன் முதலிய வேளிர் தலைவ
களேப் பற்றியும் படிக்கும்போது, யுத்த முறை
கள் மிகவும் விரிவடைந்துள்ள இந்த இரு
தாவது நூற்ருண்டிலுங்கூட அவர்களுடை
வீரமும் படை பலமும் நம்மை வியப்பு



லிலே ஆழ்த்தும்படியாக இருக்கின்றன. தாபி வென்ற பரமேசுவர வர்மனுக்குப் டத் தலைவனாகச் சென்ற வேளிர் தலை னப் பற்றி ஆராய்ச்சி நிபுணர்கள் அதிசயத் ாடு பேசுகிறார்கள். விக்கிரம கேசரி என்ற ளிர் தலைவனின் யுத்தங்களைப் பற்றி, வர் கோயில் என்ற இடத்தில் காணப் ம் சாசனத்திலே இன்றும் ஆச்சரியகர ன சரித்திரச் செய்திகளைக் காணுகிறோம். படிப்பட்ட வீர பரம்பரை தனக்கு எதி க நின்றது என்றால், உதயசந்திரன் அத்தனை ரம் மனம் கலங்கி விட்டதில் ஆச்சரியம் ன இருக்கிறது?

உதயசந்திரன் மனம் கலங்கியதோடு அத் ன தூரம் வியப்பு அடைய வேண்டிய அவ மும் அதில் என்ன இருந்தது என்று நாம் னக்கக் கூடும். உண்மையில் உதயசந்திரன் தலில் நம்பவே முடியாத அளவுக்கு அத்தனை ரம் ஆச்சரியப்படும்படியாக ஒரு முக்கிய ரணம் இருந்தது. நந்திவர்ம பல்லவன் டத்துக்கு வருகிறவரை வேளிர்கள் என் ம அவர்கள் பல்லவர்களின் துணைவர்கள் ன்று பிரசித்தி பெற்றவர்கள். பரதுர்க்க த்தனன் என்ற வேளிர் தலைவன் பல்லவர் ின் படைத் தலைவனாகவே விளங்கியவன். னுடைய முன்னோர்கள் அனைவரும் பல்ல களுக்காக எத்தனையோ பல தியாகங்கள் ய்தவர்கள். அப்படிப்பட்ட வேளிர்கள் ப்பொழுது சித்திரமாயனுக்குத் துணை ய்ய எப்படி ஒப்புக் கொண்டார்கள்? வமான பல்லவ அரசாட்சிக்கு நந்தி மனை விடச் சித்திரமாயன்தான் நெருங்கிய மை கொண்டவன் என்று நினைத்தார் ா? அல்லது விடுதித் தலைவன் அவர்க மும் ஏதாவது சூழ்ச்சி செய்து அவர்களை ாற்றி விட்டானா?

இப்படி யெல்லாம் எண்ணிப் பார்த்தார் யசந்திரன். இதன் பயனாகத்தான் அவர் ஆதிரையனைப் பற்றியும் அவ னுடைய நடமாட்டங்களைப் பற் றியும் சிந்திக்கலானார். இந்தச் சிந்தனையின் பயனாகத்தான் உதய சந்திரனுக்குப் பல உபயோக மான விவரங்கள் தெரிய வந் தன. உண்மையில் சித்திராங்க பூபதி குங்கும மாளிகையிலிருந்து வெளி யேறிய சம்பவத்துக்கும் உதயசந்திர னின் சிந்தனைகளுக்கும் எத்தனை நெருங்கிய சம்பந்தம் இருந்தது என்பது பூபதிக்கே நெடுநாள் வரை தெரியாமல் இருந்தது. அவனுடைய ஓட்ட சாட்டங்கள், குங்கும மாளிகையிலிருந்து அவன் கிளம்பிய பிறகு நேர்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒரு வகை யாகத் தெளிவடைய ஆரம்பித்த பிறகு தான், பூபதி அந்த அதிசயமான விவரத் தைத் தெரிந்து கொண்டான். அதுவரை அவ னுமே உதயசந்திரனைத் தனக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு அன்னிய மனிதர் என்றுதான் நினைத்திருந்தான்! உண்மையில் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டபோது, யாழ் நங்கையின் யோசனைப்படி அங்கிருந்து வெளி யேறுகிறோம் என்ற ஒரு திருப்திமட்டுமேதான் அவனுக்கு இருந்தது. மற்றப்படி தமிழ் நாட்டின் அன்றைய அரசியல் நிலைமைக்கும் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப் பட்டுச் செல்வதற்கும் அத்தனை நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகப் பூபதி கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை!

எட்டாம் அத்தியாயம்

குகை ஓவியங்கள்

சாத்தன் என்ற பணியாளன் சொன்ன சமிக்ஞை அடையாளத்துக்கு ஏற்ப, பூபதி சிறிய அறையிலே நுழைந்ததும் சாத்தன் வெளியே யிருந்து கதவை அடைத்துக் கொண் டான் அல்லவா? இப்பொழுது பூபதி அந்தத் துணி மூட்டையை உலைத்துப் பார்த்தான். அந்த மூட்டைக்குள் ஒரு துறவியின் காவி உடையும், கமண்டலமும், ஒட்டுமீசை, தாடி முதலிய வேடப் பொருள்களும் இருந்தன. இத்தனையோடு ஒரு சிறு ஓலைச் சுருளும் இருந்தது. அந்தச் சுருளில் பூபதி இனி என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வேண்டிய குறிப்புக்களும் இருந்தன.

ஓலைச் சுருளில் கண்ட குறிப்புக்களைப் படித்ததும் பூபதியின் முகத்தில் மின்னல்கள் துவண்டன. ஏதேதோ மனப் போராட்டங்



களின் குறிகள் முகத்திலே பளிச்சிட்டன. ஆனால் அதிக நேரம் அவன் தன்னுடைய மனத்தோடு போராடிக்கொண்டிருக்க முடியவில்லை. காரணம், சற்று நேரத்தில் அறையின் கதவு களைத் திறந்துகொண்டு சாத்தன் உள்ளே வந்து பூபதியை அவசரப்படுத்தினான். சம்பவங்கள் துரிதமாக ஓட ஆரம்பித்தன.

ஆமாம்; அன்றிரவு பூபதி குங்கும மாளிகையில் இல்லை. பல்லவ ராஜ்யத்தின் தெற்கு எல்லைக்கும், பாண்டி நாட்டின் வடக்கு எல்லைக்கும் மத்தியிலே யிருந்த முத்தரையர் நாட்டிலே, நடுநாயகமாக நின்ற ஒரு பெரிய மலையை நோக்கிச் செல்லும் காட்டுப் பாதையிலே சென்று கொண்டிருந்தான் பூபதி. கால் நடையாக இல்லை. சிவிகையிலே சென்று கொண்டிருந்தான். 'நர வாகனம்' என்று சித்தர் குறிப்பிட்டார் அல்லவா? அந்த நர வாகனத்திலே சென்று கொண்டிருந்தான். வலம்புரித் தீவின் இளவரசுக் கோலத்திலே இல்லை! இந்த உலகத்தையே துறந்தவனைப் போல ஒரு துறவியின்வேடத்திலே சிவிகையில் சென்றுகொண்டிருந்தான் சித்திராங்க பூபதி.

என்ன மாறுதல்! எத்தனை எதிர்பாராத சம்பவங்கள்! பேரியாழோடு வலம்புரித் தீவுக்கு வெற்றி வீரனாகத் திரும்பிச் செல்ல வேண்டிய இளவரசன் துறவியின் கோலத்திலே காட்டுப் பாதையிலே சென்றான்.

'சித்தன்ன வாசல்' என்றும் 'சித்தன் வாழ் மலை' என்றும் 'சிற்றண்ண வாசல்' என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் குகைக் கோவிலிலே, நாலைந்து சமணத் துறவிகள் சிவிகையின் வரவுக்காகக் காத்திருந்தார்கள் என்று தோன்றியது. ஏனென்றால் அந்தச் சிவிகையானது குகைவாசலை நெருங்கும்போது இரண்டு துறவிகள் எதிர் வந்து அழைத்துச் சென்றார்கள். சித்திராங்க பூபதிக்கு இது அதிசயமாகப் படவில்லை. ஓலைக் குறிப்புக்களில் எல்லா விவரங்களும் இருந்தன. எனவே பதறாமல் சித்திராங்க பூபதி மேற்கொண்டு தான் செய்ய வேண்டிய காரியங்களில் மனத்தைச் செலுத்தினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் அந்தக் குகைக் கோவிலிலே யிருந்த சமணத் துறவி ஒருவர் பூபதியை மலையிலிருந்த ஒரு சுனைக்கு அழைத்துச் சென்றார். குளிப்பதற்கு மிகவும் வசதியான இடம் என்றும், தினந்தோறும் மாலை நேரங்களில் இரகசியமாக நடமாடுவதற்கு ஏற்ற இடம் என்றும் துறவி சொன்னார். சுனையில் குளிக்கும் போதே பூபதி அந்தத் துறவியிடம் சொன்னான்: "பெரியவரே! என்ன காரணத்துக்காக இந்தத் துறவுக் கோலத்தில் நான் இருக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் யூகிக்கிறேன். கொடும்பாளூரிலிருந்து நான் தப்பி வந்து விட்டதனால், என்னைத் தேடிக்கொண்டு பல மனிதர்கள் இங்கு வரக் கூடும். அதனால் தலைமறைவாக இருப்பதற்காக இப்படி ஒரு புனித வேடத்தை எனக்குத் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனாலும் ஒரு தெய்விகமான கோலத்தை இப்படி ஒரு சாதாரணமான ஏமாற்றுக் காரியத்துக்கு உபயோகப்படுத்துவது என் மனச் சாட்சிக்கே பிடிக்கவில்லை. என்றாலும் நானா தீர்மானித்துச் செய்த காரியம் இல்லை."

இப்படிச் சொன்னான் பூபதி. இவ கேட்டதும் துறவி சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டா சித்திராங்க பூபதி. துறவி பதில் பேசவில் திடீரென்று பூபதிக்கு ஒரு சந்தேகம் உ தது. கேட்டான்: "ஐயா நீங்களும் என்ன போலத்தானோ? உங்களுடைய கோலமு ஒருவேளை வெறும் வேடந்தானோ? நீங்களு மாறு வேடத்திலே...."

இப்படிக் கேட்கும்போதே பூபதிக்கு மன துணுக்குற்றது. படபடப்பில் ஆசாரக் குறை வாகக் கேட்டு விட்டோமோ என்று எண்ணி வனகக் கேள்வியை முழுதும் கேட்டு முடிக்க மல், வார்த்தைகளைப் பாதியிலேயே தடுத்து கொண்டான். துறவி சிரித்துக்கொண் சொன்னார்: "ஐயா இளவரசரே! நீங்க என்ன சந்தேகம் வேண்டுமானாலும் கேளு கள். ஆனால் ஒன்று மட்டும் கேளாதீர்கள் நாங்கள் யார்? எதற்காக இந்தக் குகையி இருக்கிறோம் என்று மட்டும் சந்தேகப்ப தீர்கள். உங்களை இங்கு அனுப்பி வைப்பத குக் காரண புருஷராக இருந்தவர் இங் வரும்போது எல்லா விஷயங்களும் உங்களு குத் தெளிவாகும்!"

துறவி இப்படிச் சொன்னதும் பூபதிக்கு திகைப்பு இன்னும் அதிகரித்தது. கேட்டான்

"என்னை இங்கே அனுப்பியதற்குக் காரண புருஷர் என்று சொன்னீர்கள்? என்னை இங் அனுப்பிய புருஷரா?"

பூபதிக்கு அதற்குமேல் துறவியிடம் பேச கூடப் பயமாக இருந்தது. இதைப் புரிந் கொண்ட துறவி சொன்னார்:

"நீங்கள் செல்ல வேண்டிய அரண்மனை குச் செல்லும் வரையில் உங்களை இங் கவனமாகப் பார்த்துக் கொண்டு இருக் வேண்டியது எங்கள் பொறுப்பு. ஏதே விபத்துக்குள் சிக்கி விட்டதாகச் சந்தேகப படாதீர்கள். உங்களை இங்கே அனுப்பிய புண்ணிய புருஷரைவிட உங்களுடைய எதி காலத்தில் அக்கறை கொண்ட மனிதர்கள் இந்தத் தமிழ் நாட்டில் வேறு யாருமில்லை ஆகையினால் கவலைப் படாதீர்கள். ஸ்நா னத்தை முடித்துக் கொண்டு புறப்படுங்கள்!"

அன்று காலைப் பேச்சு அத்துடன் முடிந்தது மாலையில் மீண்டும் சுனைக்கரைக்குப் போவ தற்கு முன்னால், குகைக் கோவிலிலே இருந் துறவிகள் பூபதிக்கு அங்குள்ள பலவர்ண ஓவி யங்களைக் காட்டினார்கள். அல்லிக் குளமும் அந்தக்குளத்திலே இறங்கி நிற்கும் யானைகளும் தாமரை தாங்கிய கைகளும், தாமரையா கையா, என்று சொல்ல முடியாத வர்ண கொடிகளும், துறவிகளின் சாந்தமான முக தோற்றங்களும், பறவைகளும் பூபதியை ஓ வியப்பில் ஆழ்த்தின.

"இளவரசரே! உங்களையும் என்னையு போன்று இந்தக் குகையிலே இருந்த தர்கள்தான் இப்படிப்பட்ட அற்புத ஓவி களை வரைந்திருக்கிறார்கள். பார்த்தீர்களா?"

காலையில் சுனைக்கு அழைத்துப்போன அ துறவி மேற்கண்டவாறு பேசினார். பூ சொன்னான்: "உண்மை; ஆனால் அவர்கள் லாரும் என்னைப் போலக் காரியார்த்தமா

இந்தக் குகையிலே தங்கியவர்கள் இல்லை. தங்கள் வாழ்வையே இந்தக் குகைக்குள் அர்ப்பணம் செய்த புண்ணிய புருஷர்கள் அவர்கள்!'' பூபதி குகையின் அதியற்புதமான சித்திரங்களைப் பார்த்ததும் ஏற்பட்டிருந்த பேரானந்த நிலையிலே, இப்படிப் பேசினான்.

''அவர்களைக் கலைஞர்கள் என்று மட்டும் சொல்லி நிறுத்தி விடாதீர்கள். அவர்களைப் போன்ற தீர்க்கதரிசிகள் வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது. இருந்ததில்லை. இருக்கப் போவதும் இல்லை. உங்களுடைய வலம்புரித் தீவிலுங்கூட இல்லை என்று சொல்லுவேன்!'' இரண்டாவது துறவி இப்படிச் சொன்னதும் முதலாவது துறவி அவர் பேச்சை இடைமறித்தார்.

''வலம்புரித் தீவை மட்டும் குறிப்பிடாதீர்கள். அந்தத் தீவிலே இருந்தவர்கள் வேறு, இங்கே யிருந்தவர்கள் வேறு என்று பிரித்துச் சொல்லாதீர்கள். அது தவறு. இங்கிருந்தவர்களும் வலம்புரித் தீவிலேயிருந்தவர்களும் எல்லாரும் ஒரே குலம். ஒரே இனம். ஒரே மதம் என்றுகூடச் சொல்லுவேன். ஆமாம், அவர்களுடைய குலம் தமிழ்க் குலம். தமிழ் என்பது வெறும் சொல் மட்டும் இல்லை. தமிழ் என்பது ஒரு மதம். தமிழ் என்பது ஒரு ஜீவன். தமிழ் என்பது ஒரு வாழ்க்கை முறை. முத்தமிழ் என்றால் இயல், இசை, நாடகம் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். முத்தமிழ் என்றால் பாண்டியர், சேரர், சோழர் மூவரும் வளர்த்த தமிழ் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், முத்தமிழ் என்றால் உடல், பொருள், ஆவி!''

இப்படி வீராவேசத்தோடு ஒரு சொற்பொழிவே செய்து முடித்தார் துறவி. அப்போது பூபதி கேட்டான்:

''ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஒன்று மட்டும் கேட்கிறேன். மழுப்பாமல் பதில் சொல்வீர்களா?''

பூபதியின் இந்தக் கேள்விக்கு முதலாவது துறவி சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். ''கேளுங்கள். நிச்சயம் பதில்சொல்கிறேன்!''

''ஐயா! வலம்புரித் தீவு என்று சொல்லி என்னுடைய நினைவுகளை யெல்லாம் கிளறி விட்டு விட்டீர்கள். அதனால் இப்பொழுது அதைப் பற்றிக் கேட்கிறேன். மன்னிக்க வேண்டும். இத்தனை தூரம் வலம்புரித் தீவின் பெருமையை நிலைநாட்டிப் பேசினீர்களே, அந்தத் தீவிலே உள்ள மகத்தான அதிசயங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அங்கேயுள்ள குகைகளையும் சிற்ப அதிசயங்களையும் நேரிலே பார்த்திருப்பது போலச் சொல்கிறீர்களே! அவற்றையெல்லாம் மெய்யாகவே நீங்கள் சென்று பார்த்திருக்கிறீர்களா? இரவு நேரங்களில் வலம்புரித் தீவின் காவல் தெய்வம் கண்ணீர் வடிப்பதையும், அலைகள் குகையிலே தவழ்ந்து சென்று இசை யெழுப்புவதையும் நீங்கள் அறிவீர்களா? தயவு செய்து சொல்லுங்கள்!'' என்று கேட்டான் பூபதி.

இந்த வார்த்தைகள் வந்ததும், முதலாவது துறவி பதில் சொல்வதற்கு முன்னால் இரண்டாவது துறவி குறுக்கிட்டார்.

''என்ன இளவரசரே! என்ன சொன்னீர்கள்? அலைகள் குகையிலே சென்று இசை எழுப்புகின்றனவா! இதென்ன பெரிய அண்டபகிரண்ட மனப் பிரமையாக இருக்கிறதே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

துறவி இப்படிக் கேட்டதும் பூபதிக்கு ஆவேசம் வந்து விட்டது. சொன்னான்:

''ஆமாம். எங்கள் வலம்புரித் தீவிலே கடல் அலைகள் நிலவுக் குகைக்குள்ளே சென்று மீளும்போது இசை எழும்பும் ஐயா! அது மட்டுமில்லை. வலம்புரி அம்மனுடைய கோவிலுக்கு முன்னால் உள்ள படிக்கட்டில் அலைகள் ஏறிச் சொல்லும் போதும், பிறகு இறங்கி வரும்போதும், சப்த ஸ்வரங்களும் ஆரோகணமாகவும் அவரோகணமாகவும் கேட்கும்! நான் ஏதோ பொய் பேசுவது போலக் குறுக்குக் கேள்வி போடுகிறீர்களே!''

பூபதி இப்படிப் பேசியதும், சாமர்த்திய சாலியாகக் காணப்பட்ட முதலாவது துறவி பூபதியின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தார்:

''இளவரசரே! ஆத்திரப்படாதீர்கள். நம்முடைய நண்பரான இந்தத் துறவிக்கும் இசையிலே தீவிரமான ஈடுபாடு உண்டு. சொல்லப் போனால் அவரை ஒரு சங்கீத மகா பண்டிதர் என்றுகூடச் சொல்ல வேண்டும். ஆனாலும் வலம்புரித் தீவிலே சென்று அந்தச் சிற்ப அதிசயத்தைப் பார்க்காத மனிதர்களுக்கு, அவர்கள் எத்தனை பெரிய இசைப் பண்டிதர்களாக இருந்தாலும், நம்ப முடியாதுதான். ஏதோ வெறும் கற்பனை என்றுதான் நினைப்பார்கள்! இங்கே இந்த வட்டத்தின் எல்லையிலே உள்ள இன்னொரு மலைக் கோவில் இருக்கிறது. வாத்திய வித்தியாதரப் பேரரசன் காலத்தில் ஆச்சரியப்படும்படியான பல அற்புதங்களை அந்தக் கோவிலின் சிற்பங்களிலே ஆக்கியிருக்கிறார்கள்; கல்லிலிருந்து இசை கேட்கும் அற்புதத்தை வேறு யாராவது அன்னியர்களிடம் போய்ச் சொன்னால் பைத்தியக்காரத்தனம் என்று பரிகசிப்பார்கள். நேருக்கு நேரே பார்க்கும் வரையில் அப்படித்தான் நினைப்பார்கள். கல்வெட்டுக்கள் என்ற சான்றுகள் இல்லை யென்றால், ராஜசிம்ம பல்லவனுடைய சங்கீத அற்புதங்களைக் கூட வெறும் கற்பனை என்றுதான் சொல்லிவிடுவார்கள். இன்றைய நிலைமையே இப்படி இருக்கிறதே! இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்துத் தமிழ் நாட்டில் இந்தக் கோவில்களும், இந்தக் கல்வெட்டுக்களும் இப்படியே இருக்கப் போகின்றனவா! இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் காலகதியை எப்படிச் சொல்லுவது? ஆயிரம் ஆண்டுகளில் இவற்றில் எத்தனையோ அழியத்தான் போகின்றன. அப்பொழுது இந்த ஆராய்ச்சியையே வெறும் அசம்பாவிதமான கற்பனை என்று கூடச் சொல்லி விடுவார்கள்! அதற்காகத்தான் சொல்கிறேன், நம்முடைய தமிழ் மொழியில் இந்த விஷயங்களை யெல்லாம் நிரந்தரமான முறையிலே அழியாத இலக்கியங்களாக எழுதி முடித்து விட வேண்டும். எல்லாம் நம்முடைய யுத்தக் குழப்பங்கள் ஓய்ந்து நமது தலைவரும் நிம்மதியாக அமரட்டும்!''

இப்படிச் சொன்னார் முதலாவது துறவி. இரண்டாவது துறவி பதில் பேசவில்லை. சற்று மௌனமாக இருந்து விட்டுக் கேட்பார்:


மணியம்

''இலக்கியங்களுடைய ஆயுள் மட்டும் என்ன? சிரஞ்சீவியா? ஓலைச்சுவடிகளுக்கு அழிவே கிடையாதா?''

இந்த இடத்தில் பூபதி பேசினான்: ''அப்படிச் சொல்லாதீர்கள். கல்லைவிடச் சொல்லுக்கு ஆயுள் அதிகந்தான். மக்களுடைய நாவிலே மொழி புள்ளவரை அந்த மொழியிலேயுள்ள கலைகளுக்கு அழிவேது! வலம்புரித் தீவிலே இடிந்துபோய்க்கிடக்கிற கோவிலைப் போல் இல்லை. அங்கிருந்து மறைந்து விட்ட பேரியாழைப்போல இல்லை அது!''

பேரியாழ் என்ற சொல் வந்ததும், துறவிகள் அனைவரும் நிமிர்ந்து நின்றார்கள். ஏதோ ஒரு இரகசிய மந்திரச் சொல்லை உச்சரித்தது போன்று, 'பேரியாழ்' என்ற வார்த்தை அந்தச் சபையிலே ஒரு பெரிய மாறுதலைச் செய்தது.

''இளவரசரே! இதுவரை நீங்கள் பேசியது சரி. ஆனால் இனிமேல் அந்த ஒரு சொல்லை மட்டும் உச்சரிக்காதீர்கள். மறந்துகூடச் சொல்லாதீர்கள். கனவிலேகூட நீங்கள் உங்களையும் மறந்து அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டால் தொலைந்தது காரியம்! எல்லாம் கெட்டுப் போய் விடும். நம்முடைய குகைக்குச் சில சமயங்களில் யார் யாரோ யாத்திரிகர்கள் வருவார்கள். இரவு ஜாம நேரத்தில் குதிரைகளின் குளம்பொலி இந்த மலைப் பாதையிலே கேட்கும். சில இரவுகளில் ஏதேதோ காரணங்களைச் சொல்லி நம்முடைய இருப்பிடத்திலேயே யாரோ வழிப்போக்கர்களைப் போலச் சில மனிதர்கள் வந்து தங்கக் கூடும்! அப்பொழுது இந்தச் சொல்லை அயர்ந்து மறந்து நீங்கள் சொல்லி விட்டுப் போகிறீர்கள். அதனால்தான் இத்தனை கண்டிப்பாகச் சொல்லுகிறேன்!''

''அது சரி; இப்பொழுது சொல்லி விட்டதனால் தவறு ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே. என்னை இத்தனை தூரம் பயப்படுத்துகிறீர்களே!'' என்றான் பூபதி.

''இளவரசே! பயப்படுத்தவில்லை. உண்மையைச் சொன்னேன். அவ்வளவுதான். உங்களுடைய உள்ளத்தில் அந்த இசைக் கருவி எத்தகைய ஸ்தானம் வகிக்கிறது என்பதும், உங்கள் வாழ்க்கையில் அது எத்தகைய பெருங் காரியங்களை விளைவித்து விட்டது என்பதும் எனக்குத் தெரியும். இன்னும் அதிகமான விபரீதங்களை அது விளைவித்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் இப்பொழுதே உங்களுக்கு எச்சரிக்கை செய்தேன்!''

''ஐயா! நீங்கள் என்னவோ என்னுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக இப்படியெல்லாம் எச்சரிக்கை செய்வதாய் நினைக்கலாம். ஆனாலும் இந்த உலகில் என்னையும் என் உயிரையும்விட எனக்கு முக்கியம் அந்தப் பேரியாழ்தான். அந்த யாழுக்காகவே நான் கடல் கடந்து வந்தேன். அந்த யாழுக்காகவே மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்டுக் கொடும்பாளூருக்குச் சென்றேன். இப்பொழுதுங்கூட அங்கிருந்து புறப்பட்டிருக்க மாட்டேன். பேரியாழ் என் கைக்குக் கிடைக்கும், அதோடுதான் நான் அங்கிருந்து புறப்படுவேன் என்று நேற்று வரை எண்ணியிருந்தேன். ஆனால் அந்த ஓலைச் சுருளில் கண்டிருந்த குறிப்புகளைப் பார்த்த பிறகுதான், யாழையும் யாழ்நங்கையையும் அந்தக் குங்கும மாளிகையிலே விட்டுவிட்டு வெளியேறினேன். இப்படியே வலம்புரித் தீவுக்கு ஓடி விடுவது இ... காக அல்ல. என் அன்னையின் சந்நிதியிலே அந்த யாழைச் சேர்ப்பிக்கும் வரை, கனவி லும் நனவிலும் எப்பொழுதும் என்னுடைய ஒரே மந்திரம் பேரியாழ்தான்! அதை மறப்பது என்பது இந்தப் பூபதியினால் முடி யாத காரியம்!''

''இளவரசரே! நிதானம் இழந்து பேசா தீர்கள்! உங்களையும் உங்களுடைய இலட்சி யத்தையும் பெரிதும் மதிக்கிற உங்களுடைய நண்பர்களிடமா இப்படிப் பேசுவது? தயவு செய்து என்னோடு தனியாக வாருங்கள். ஒரு முக்கியமான விஷயம் உங்களிடம் சொல்ல வேண்டும். இல்லையென்றால் ஆத்திரத்தில் நீங்கள் ஏதாவது விபரீதமான செயலைச் செய்துவிடப் போகிறீர்கள்!''

இப்படிக் கூறிக் கொண்டே பூபதியின் கையைப் பிடித்துக் கொண்டு வேகமாக மலைச் சரிவிலே நடந்தார் முதல் துறவி.

பூபதியும் முதலாவது துறவியும் மலைச் சரிவிலே நடக்க ஆரம்பித்ததும், மற்றத் துறவிகள் அந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள். மேலே நடக்கவில்லை. பூபதி சற்று நேரத்துக்கு முன்பு வலம்புரித் தீவைப் பற்றிச் சொன்னதும், அவனுடைய பேச்சிலே குறுக்கிட்டுப் பேசினார் அல்லவா இரண்டாவது துறவி; அவரைத்தானே சங்கீதத்தில் பெரிய பண்டிதர் என்று சொன்னார்கள்; அந்தத் துறவி அதே இடத்தில் நின்று கொண்டு இப்பொழுது பாட ஆரம்பித்தார்.

சூரியன் அஸ்தமிக்கிற சமயம். கதிரவனின் ஒளி மறைந்து வானத்திலே இருள் படர்ந்து வருகிற வேளை. பறவைகள் எல்லாம் வேகமாகத் தங்கள் கூடுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. வானத்தையும், பறவைகளையும், தம்முடைய குகையையும் பார்த்தவாறு இரண்டாவது துறவி இனிமையான குரலில் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார்:—

இதயக் கூண்டில் ஒரு பறவை
இரைதா என்று கூப்பிடுதே
இதயக் கூண்டில் ஒரு பறவை!

உதயம் இரவு பகல் எல்லாம்
உணவு சற்றும் உண்ணுமல்
உறக்கம் சிறிதும் இல்லாமல்

இதயக் கூண்டில் ஒரு பறவை
இரைதா என்று கூப்பிடுதே!

இதற்கு மேல் அந்தப் பாடலின் வார்த்தைகள் பூபதிக்குக் கேட்கவில்லை. பாடலை அந்தத் துறவி பாடியபோது, அவருடைய குரலில் இழைந்த உருக்கம் பூபதியின் உள்ளத்தை என்னவோ செய்தது. இத்தனை உருக்கமான குரலிலே இதயத்தின் ஏக்கத்தையெல்லாம் கொட்டுகிற இந்தத் துறவி யாரென்று அறியப் பூபதிக்கு ஆவல் எழுந்தது. அந்த ஆவலின் காரணமாக அவனுடைய நடையில் தயக்கம் உண்டாயிற்று.

''என்ன இளவரசே! தயங்குகிறீர்கள்? மேலே நடவுங்கள். மலைச் சரிவு. கால்களை ஊன்றி நடக்க வேண்டும். தெரிந்ததா!'' என்றார் அந்தத் துறவி! (தொடரும்)

ஒன்பதாம் அத்தியாயம்
ஏழடிப் பட்டம்

இத்திராங்க பூபதிக்குத் தன்னுடைய அருமை மகளைக் கல்யாணம் செய்து கொடுக்க விரும்புவதாக உடன்படிக்கைத் தூது அனுப்பினுர் முத்தரைய மன்னர். உதய சந்திரனுக்கும் நந்திவர்மனுக்கும் உதவி செய்கிற நோக்கத்தில் முத்தரையரும் வல்லத்தரசரும் செய்த ஏற்பாடு இது. அதன்படி வலம்புரித் தீவுக்குச் சென்ற தூதுவர், பூபதியின் அன்னையான அரசியாரின் சம்மதத்தைப் பெற்றதோடு அவருடைய யோசனையின்படி பூபதியின் சம்மதத்தைப் பெறுவதற்காக மந்திரநாயகத்தைத் தம்மோடு அழைத்துக் கொண்டு வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

ஆனுல் இந்தச் சம்பவம் நடந்த சில நாளைக்கெல்லாம் விடுதித் தலைவன் இது விஷயத்தை இரகசியமாக அறிந்து கொண்டு தானும் ஒரு பெரிய எதிர்ச் சூழ்ச்சி செய்தான். கொடும்பாளூர் அரச பரம்பரைக்கு நாயகனுக விளங்க வேண்டிய ஆதிரையனை, கொடும்பாளூர் மன்னனுகப் பட்டம் சூட்டவேண்டிய இளவரசனை, எங்கோ இரகசியமாக வெளியேற்றி விட்டு, அவனுடைய சிற்றப்பனைத் தனக்கு உடந்தையாகச் சேர்த்துக் கொண்டு இப்பொழுது வலம்புரித்தீவுக்கு ஒரு கடற்படையை அனுப்பியிருக்கிறுன். சில நாட்கள் முன்புவரை கடல கடந்து யாத்திரை சென்றிருந்த ஆதிரையன், அவனுடைய யாத்திரைக் காலத்தில் அரச நிர்வாகத்தை அவனுடைய சிற்றப்பனிடம் விட்டிருந்தான். இப்பொழுதும் அவன் கடல் கடந்து சென்றிருப்பதாகவே கொடும்பாளூர் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆதிரையன் இப்பொழுது அரச நிர்வாகத்தை மேற்கொண்டதில் ஒரு பெரிய சூழ்ச்சி இருந்தது என்ற விஷயம் கொடும்பாளூர் மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரியாத முறையில் சதி செய்து விட்டான் வீர விக்கிரமன் என்ற அந்தப் பொல்லாத விடுதித் தலைவன்!

கொடும்பாளூர் அரசியலில் நெருங்கிய சம்பந்தம் கொண்டிருந்த பிரதானிகளும் பிரமுகர்களுங்கூட முதலில் இது குறித்து எவ்வித சந்தேகமும் கொள்ளவில்லை. ஆனுல் ஆதிரையன் எங்கு சென்றிருக்கிறுன் என்ற விவரத்தை யாரிடமும் கூறுமல் பெரிய அரசியல் இரகசியம் என்று வீர விக்கிரமன் சொல்ல ஆரம்பித்ததும், படிப்படியாக நிர்வாகிகள் சந்தேகிக்க ஆரம்பித்தார்கள். ஆனுலும் யாராலும் எதுவும் கேட்கவோ செய்யவோ முடியவில்லை. காரணம், மிகச் சிறு பிராயத்திலிருந்தே ஆதிரையனுக்குக் கடற் பிரயாணம் என்ருல் உயிர்! திடீர் திடீரென்று அவன் மாதக் கணக்காக யாத்திரை சென்று விடுவான்! சமீபத்திலுங்கூட அப்படி ஒரு நீண்ட யாத்திரை சென்று விட்டுத்தான் திரும்பியிருந்தான். எனவே வீர விக்கிரமன் ஆதிரையனுடைய இந்தப் பழக்கத்தைச் சுட்டிக் காட்டிச் சிலரிடம் சமாதானம் சொன்னுன். வேறு சிலரிடம் அது ஒரு இரகசியம் என்று இன்னும் சிலரிடம் ஆதிரையனே அவ வெளியிடக் கூடாது என்று கட்டளை யி டிருப்பதாகத் தெரிவித்தான். கொடும்பாளூ அரசியலில் முக்கிய நிர்வாகியாக இருந் அரசனுகவே தன்னைக் கருதிக் காரியங்க நடத்தி வந்த ஆதிரையனின் சிற்றப்ப இதற்கு மிகவும் அநுசரணையாக இருந்ததா எத்தனை சந்தேகங்கள் குமைந்து கொண்டிரு தாலும் வீர விக்கிரமனிடம் தைரியமா யாரும் பேச முன்வரவில்லை. தவிரவும் அ



ருந்த அரசியல் நிலைமையில், வீர விக்ரமன் நந்திவர்மனுக்கு எதிராகச் சித்திராயனுடைய கட்சியிலே சேர்ந்து ல நீண்ட நடவடிக்கைகள் எடுத்து வருறான் என்ற விஷயம் கொடும்பாளூரில் ரு பகிரங்க இரகசியம். ஆகவே, ரும் வீரவிக்கிரமனைப் பற்றிப் பேசவந்தே பயப்பட்டார்கள்! கொடும்பார் நிர்வாகம் ஒரே சதிக் கூட்டத்தின் யங்கர நிர்வாகமாக நடந்து கொண்ருந்தது. அந்த நிர்வாகத்தின் பிரதிநிதியாகத்தான் வீர விக்கிரமன் இப்பொது ஒரு கடற்படையோடு வலம்புரித்தீவுக்கு அனுப்பியிருக்கிறான்! பாண்டியர்களுடைய படை பலம் தனக்குத் துணையாக இருக்கிறது என்ற தைரியத்தில் வீர விக்கிரமன் இத்தனை துணிச்சலோடு நந்தி வர்மனுக்கு எதிராக, வெளிப்படையாக, வலம்புரித்தீவிலே தன்னுடைய தீய பார்வையைச் செலுத்தி விட்டான்!

இந்த விவரம் தெரிந்ததும் சித்திராங்க பூபதி, வலம்புரித்தீவின் இளவரசன், பட்ட பாடு பிரளயத்திலே கொந்தளிக்கும் கடலாக இருந்தது! ஆனாலும் அவனால் அப்பொழுது என்ன செய்ய ஆகும்? அந்தக் குங்கும மாளிகையிலிருந்து வெளியேறி விடவேண்டும்; பிறகுதான் மற்ற விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கவே முடியும் என்றிருந்தது அவனுடைய அறிவுநிலை! அதன்படி அந்தக் குங்கும மாளிகையிலிருந்து வெளியேறுவதற்கும் இப்பொழுது யாழ் நங்கையே வகை செய்துவிட்டாள்! சிவிகையிலே யாருக்கும் தெரியாமல் சித்தன்னவாசலுக்கு வந்தாயிற்று. இனி மேற்கொண்டு தனது வலம்புரித் தீவையும், அங்கிருந்து தன்னைக் காண்பதற்கு என்றே முத்தரையர்களின் தூதுவரோடு புறப்பட்டு வந்திருக்கும் மந்திர நாயகத்தையும் பற்றி ஆலோசித்து அவர்களைச் சந்திப்பதற்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்கலாம் என்றால், அதற்கும் பூபதியின் மன நிலை இப்பொழுது நிம்மதியாக இல்லை! சித்தர் 'அந்தப்புரம்' என்று ஒரு வார்த்தையை உபயோகப்படுத்திப் பூபதியின் உள்ளத்தைக் குழப்பியடித்திருந்தார். இந்தச் சமணத் துறவி



னுல் மலையும் நீலவானமும் மறைந்து . அலைகடலும் அந்த அலைகடலிலே கி நிற்கும் வலம்புரித்தீவும் பூபதியின் பு நின்றன. வானத்தில் சந்திரன் தும், நட்சத்திரங்கள் கண் சிமிட்டி பிறகு இரவு முழுதும் நகர்ந்து சென்று நீல வானத்தில் செவ்வொளி படர்ந்ததும், சூரியன் உதித்ததும் — ஒன்றும் பூபதியின் கண்ணுக்குத் தெரியவில்லை. அவனுடைய உடம்பையும் உள்ளத்தையும் வலம்புரித் தீவிலே கொண்டு போய் நிறுத்தி விட்டது,, துறவி சொன்ன கதை.

பத்தாம் அத்தியாயம்

துறவிசொன்ன கதை

ளவரசரே ! நான் சொல்லப் போகும் ம் நடந்தது 'வாத்ய வித்தியாதரன்' பல்லவ அரசன் காலத்தில்! அந்த இப்பொழுது பிரபல மன்னனாக நக்கும் நந்திவர்மனுக்கு முந்திய அரச முந்தியவன். அதாவது நந்திவர்ம முன்னால் அரசாண்டவன் பரமேசுவர . அவன் ஆண்டது ஐந்தே ஆண்டுகள் நான் சொல்லும் வாத்ய வித்யா என்ற ராஜசிம்மன் ஆண்டது இந்தப் சுவரவர்மனுக்கு முன்னால் !''

வாறு தொடங்கினர் துறவி. அவர் ரவு முழுதும் சொன்ன அந்த நீண்ட ின் சுருக்கம் வருமாறு :—

ஜசிம்மன் என்ற அரசனின் முன்னோர்களு காலத்தில் பேரியாழ் என்ற வாத்தியம் ம் புகழ் வாய்ந்து விளங்கியது. அந்த லை எத்தனையோ பல புதுமைகளை யெல் செய்து காட்டிய பாணர்கள் செந்தமிழ் ல் வாழ்ந்திருந்தார்கள். மகேந்திர ன் காலத்தில் கடல் கடந்த தீவுகளில் நாட்டிலிருந்து சென்று குடியேறி, கலை யெல்லாம் நிம்மதியான சூழ்நிலையிலே க் குழப்பங்கள் ஏதுமின்றி ஆனந்தமாக த்த அதிசயக் கலைஞர்கள் பலர். இந்த றுகளை யெல்லாம் மகேந்திரனுக்குப் ல் வந்த ராஜசிம்மன் நன்றாகக் கற்றுத் ந்தான். அவனுடைய மந்திரி குமாரர் மிகவும் முக்கியமானவனும், கொடும் ர் வேளிர் குடும்பத்தைச் சேர்ந்தவனு சந்திரசூடன் என்ற வாலிபனுக்கு யில் பல நுட்பங்களைக் கற்றுத் தேர்வ வேண்டிய வசதிகளை யெல்லாம் செய்து த்தான் ராஜசிம்மன்.


திரசூடன் என்ற அந்த வாலிபன் மேனி ம், குணத்தின் எழிலும் ஒருங்கே நிரம் ராஜ குமாரன். கொடும்பாளூர் அரச பரையின் சிறப்பும் சீலமும் பிறப்புரிமை க் கலந்து அவனுடைய உள்ளத்திலே ரமான பண்புகளை நல்கி யிருந்தன ! வாலிபனின் கலைத்திறமை நாளுக்கு மிக உயர்வான முறையில் வளர்ச்சி ந்து வருவதைக் கண்ட ராஜ மன்னன், அளவு கடந்த ஆனந்தம் ந்தான். அரசியல் வட்டத்திலே இந்த பைப் பற்றிப் பல இரகசியப் பேச்சுக்கள் நடந்தன. ராஜசிம்மன் தன்னுடைய ளச் சந்திரசூடனுக்குக் கொடுக்கப் போகி என்று அமைச்சர்களிலே கூடச் சிலர் ல்லிக் கொண்டார்கள்.

இப்படியிருக்கும் போதுதான் ஒரு நாள் மானக் கவரம் என்ற தீவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த ஒரு வணிகர் அரசனை அரச சபையிலே முகமன் கண்டார்! இந்த முகமன் பெரிய சிக்கலாகப் போய் விட்டது!

விபரீதம் ஒன்றும் இல்லை. நடந்தது எல் லாம் ஒரு சிறு பிரஸ்தாபந்தான். அந்தப் பிரஸ்தாபந்தான் சந்திரசூடனுடைய வாழ்வை அத்தனை பாதித்து விட்டது.

மானக்கவரம் என்ற தீவிலிருந்து வந்திருந் அந்த வணிகர், வலம்புரித் தீவைப் பற்றியு அந்தத் தீவிலே உள்ள அம்மன் கோவிலில் அர்த்த ஜாம பூஜையிலே வாசிக்கப்படும் பேரியாழைப் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

''அந்தப் பேரியாழ்தான் நமது அரசவை யிலும் இருக்கிறதே! மல்லிநாத யாழ்ப் பாணர் என்ற பெரியார் மகேந்திர வர்மன் காலத்தில் வலம்புரித் தீவிலிருந்து இங்கு வந்து அநேக சாதனைகளைச் செய்தாரே!



அதைத்தானே குறிப்பிடுகிறீர் வணிகரே'' என்று கேட்டான் ராஜசிம்மன்.

''இல்லை. அதைச் சொல்ல வில்லை. நான் சொல்கிற பேரியாழை அந்தத் தீவின் கோவி லிலேதான் பார்க்கலாம். வேறு எங்கும் அது கிடையாது !''

இவ்வாறு சொல்லி அந்த யாழின் மகிமை களை வர்ணித்தார் வணிகர். அதன் பயனாக, என்ன நேர்ந்தது? வணிகர் சென்ற மறு நாள் ராஜசிம்மன் சந்திரசூடனைக் கூப்பிட்டு



ராமு:—நான் தினமும் ஒன்பது மணிக்குப் படுத்தால், காலையில் ஆறு மணிக்கே எழுந்திருந்து விடுவேன்!

பாலு:—உனக்கும் எனக்கும் கொஞ்சம் வித்தியாசம்தான். நான் தினமும் ஆறு மணிக்குப் படுத்தால் காலை ஒன்பது மணிக்குத் தான் எழுந்திருப்பேன்!

வலம்புரித் தீவுக்குச் சென்று அந்த அம்மன் கோவிலிலே உள்ள யாழை எப்படி வாசிப்பது என்று கற்று வருவதோடு, முடிந்தால் அது போன்று வேறொரு யாழ் செய்து எடுத்து வர வேண்டும் என்றும், முடியாவிட்டால் அந்த யாழையே கொண்டு வருவதற்கு வழியுண்டா என்று பார்க்கும்படிக்கும் கட்டளையிட்டான்.

சந்திரசூடன் மறு வாரம் மாமல்லபுரத்திலிருந்து வலம்புரித் தீவுக்குப் புறப்பட்டான். முப்பது இரவும் முப்பது பகலும் கடலிலே பிரயாணம் செய்த அலுப்போடு, அவன் வலம்புரித் தீவுக்கு வந்து சேரும்போது ஜாம வேளை! "மரக்கலத்திலேயே தங்கி விட்டு விடிந்ததும் நகரத்துக்குள் செல்லலாம்" என்று சகபிரயாணிகள் சொன்னார்கள். ஆனால் சந்திரசூடனால் அங்கே ஒரு விநாடிகூட இருக்க முடியவில்லை. காரணம், அப்பொழுது கன்னி கோயிலிலிருந்து யாழிசை காற்றிலே மிதந்து வந்து கொண்டிருந்தது.

சந்திரசூடன் மரக்கலத்திலிருந்து இறங்கி வலம்புரித் தீவின் கன்னி கோவிலை நோக்கி நடக்க ஆரம்பித்ததும், அவனுடைய நடையின் வேகம் அதிகரித்தது. கோயிலிலிருந்து வந்த இசை ஏதோ ஒரு கயிற்றுப் பாசத்தினால் அவனுடைய கால்களை இழுத்தது. 'விறு விறு' என்று நடந்து கோயிலுக்குள்ளே சென்றான் சந்திரசூடன். அப்படியே ஸ்தம்பித்து விட்டான் அவன்!

அம்மன் சந்நிதியிலே வயது முதிர்ந்த பாணர் ஒருவர் மிகப் பெரிய யாழ் வாத்தி

யம் ஒன்றைத் தமது உடம்பிலே ச
கொண்டு, மெய்ம்மறந்த நிலையிலே
களை ஓட விட்டுக் கொண்டிருந்தார்.
வாசிப்பிலே அப்படியே சொக்கிப் பே
ளுக நீண்ட நேரம் அங்கேயே அசை
நின்றான் சந்திரசூடன். அவனோடு சே
அந்த யாழின் இசையிலே கடலும்,
மும், சந்திரனுமே அசைவற்று நின்றன
என்று சொல்லும்படியாக இருந்தது,
யிலே தவழ்ந்த அமைதி!

சந்திரசூடன் அந்த முதியவரைக் கூ
பார்த்தான். அவருடைய மேனியிலே ச
திருந்த வீணையைப் பார்த்தான்.
வீணையிலிருந்து இழைந்த இசைக்கு ப
கண்ணிலே ஒரு ரூபம் கொடுத்துப் பா
தான்! அவருக்கு எண்பது வயது! அ
ஏந்தியிருந்த வீணைக்கு எண்பது பரம்ப
களின் வயது இருக்க வேண்டும்! அவருடை
விரல்களிலே அந்த வீணையிலிருந்து எழு
இசைக்கோ எண்பதாயிரம் வயது எ
சொல்ல வேண்டும்! வேறு எப்படி அ
இசையைக் கணிப்பது! எத்தனையோ ஆயி
ஆண்டுகளாகக் கடலிலே தவழ்கிற அலை
யும், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள
நீல வானத்திலே ஓடுகிற மேகங்களையு
இவற்றை அணைத்துக் கொண்டு எத்தனையே
ஆயிரம் ஆண்டுகளாக வான வெளியி
சுழல்கிற காற்றையும் போல அந்த முதி
வரின் விரல்களின் விளையாட்டிலே அந்த
தந்திகளிலிருந்து பிறந்து வருகிற இசை
எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக மனி
உள்ளங்களின் கற்பனைகளையும் செவிகளையு
இணைத்துக் கொண்டு வழங்கி வருகிறது!

சந்திரசூடனுடைய மனோலயம் இப்படி
சென்று கொண்டிருந்தது வெகுநேரம். இறு
யில் முதியவர் யாழ் வாசிப்பை முடித்
விட்டு வாத்தியத்தை மெதுவாக நகர்த்
னார். அப்போது ஒரு வாலிபப் பெண் வந்
அவரைக் கையைப் பிடித்து மெதுவாக
தூக்கி விட்டாள். உடம்பெல்லாம் ஆடுகி
கிழவர். கண் பார்வை கூடச் சரியா
இல்லை. ஆனாலும் அந்த வாசிப்பிலே என்ன
நிச்சயம்! இந்த ஜட உலகத்திலே பூமியின்
மேல் வழி கண்டு பிடிப்பதுதான் அந்த
கிழவரின் வயதான கண்களுக்கு முடியவில்லை.
ஆனால் கற்பனை கடந்த உலகிலே ராகப்
பாதைகளிலே அவருடைய மனக்கண் எத்தனை
நிச்சயத்தோடு செல்கிறது! இதைப் பார்த்த
தும் சந்திரசூடன் நினைத்தான். "இசை
யென்றால் அது இந்த உடம்பை ஒட்டிய காரி
யமே யில்லை. உடலுக்கு அப்பாற்பட்ட ஒரு
தத்துவம், ஆத்மாவோடு ஒட்டியது அது!"

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும்
போதே, அந்த முதியவரைக் கையைப் பிடித்
துத் தூக்கிய வாலிபப் பெண் இந்தப் பக்கம்
அந்தப் பக்கம் திரும்பிப் பாராமல் பாணரை
அழைத்துக் கொண்டு கோவிலின் சுற்றுக்
குள்ளே நடந்தான்.

கதையின் இந்தக் கட்டத்தைச் சொல்லும்
போது சமணத் துறவி சித்திராங்க பூபதியை
ஒருதரம் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே
தமது பேச்சைத் தொடர்ந்தார்! (தொடரும்)

கடல் கண்ட கனவு



முன் கதை

வலம்புரித் தீவின் அரசகுமாரனாகிய சித்தி ரங்க பூபதி ஓர் பௌர்ணமி இரவில் கடலின் ரையிலே வெகு தூரம் நடந்து சென்று விடுகிறான். நிலவுப் பாறைக்கு அருகிலே வரும்போது அதிசயமான காட்சிகளைக் கண்டு அந்தப் பாறையை நோக்கி நடக்கிறான். அப் பாது இவனைத் தேடிக் கொண்டு அங்கே வருகிறார் வலம்புரித் தீவின் அமைச்சராகிய ந்திரநாயகம். "அந்த இடத்துக்குப் போக வண்டாம்" என்று அரசகுமாரனைத் தடுக் றார் அவர்! பூபதி கேட்கவில்லை. பாறை ின் மேல் நின்ற பாழடைந்த கோவிலைத் ாண்டி நடக்கிறான். மந்திரியும் பூபதியைப் ின் தொடருகிறார்.

கோவிலுக்கு அருகே அலைகள் பாறைகளில் வழும்போது சங்கீத ஒலி அந்தக் கற்களி ருந்து எழுவது கேட்டுத் திகைக்கிறான் பதி! இன்னும் சற்றுத் தொலைவில் ஒரு கைக்குள்ளே அலைத் தண்ணீர் சென்று ளுகிற இடத்தில் சோக மயமான ஒலி கேட் றது. "பேரியாழ் என்ற வாத்தியமும் அதை ாசித்துக் கொண்டிருந்த மல்லிநாத யாழ்ப் ாணரும், இந்தத் தீவிலிருந்து தமிழ்நாட்டுக் ச் சென்று மறைந்த நாளிலிருந்து, கோவில் ருள் இழந்து கிடக்கிறது. இந்தத் தீவே ாழடைந்து விட்டது! அதனால்தான் தீவின் தவதை கண்ணீர் வடிக்கிறது!" என்கிறார் ந்திரநாயகம்.

பூபதிக்கு இந்த விவரத்தைத் தெரிந்து காண்ட கணத்திலிருந்து மனத்தில் அமைதி ல்லை. தீவின் வீழ்ச்சிக்கு உண்மையான ரணம் என்ன என்று அறிய ஆசைப்படுகிறான். பேரியாழ் என்ற இசைக் கருவி அந்தத் தீவிலிருந்து மறைந்ததற்கும் தீவின் அரசியல் மாறுதலுக்கும் ஏதாவது காரணம் இருக்கக் கூடுமோ என்றும் சந்தேகிக்கிறான்.


வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டை நோக்கிப் புறப்படுவது என்று தீர்மானிக்கிறான் பூபதி.

பூபதியின் அன்னை தனது புத்திரன் மூன்று விஷயங்களில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று உறுதிகூறி, அந்த உபதேசம் அடங்கிய ஒரு தந்தப் பேடகத்தை வழித் துணையாகப் பூபதிக்குக் கொடுத்திருக்கிறாள். 'மது அருந்தக் கூடாது', 'மாதரின் மயக்கில் ஆழ்ந்துவிடக்கூடாது', 'வீணான யுத்தங்களில் சிக்கிவிடக் கூடாது' என்ற மூன்று அறவுரைகள் அந்தப் பேடகத்தில் வர்ணச் சித்திரங்களாக எழுதப்பட்டிருந்தன.

தந்தப் பேடகத்தோடு மாமல்லபுரம் வந்து சேர்கிறான் பூபதி. வழியில் மரக்கலத்தில் ஆதிரையன் என்ற வேளிர் இளவரசனின் நட்பும், இலங்கை யாழ்ப்பாணத்துப் புலவரின் தொடர்பும் பூபதிக்குக் கிடைக்கின்றன.

மாமல்லபுரத்தில் ஒரு பெரிய விடுதியிலே தங்குகிற பூபதிக்கு, அங்கே நடமாடிய சித்தரின் போக்குக்களும், அவர் வந்துபேசிய விசித்திர வார்த்தைகளும் திகைப்பைக் கொடுக்கின்றன. பிறகு ஒற்றர்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதைக் கண்டு திகைக்கிறான்.

தமிழ் நாட்டில் அப்போது பல்லவ ராஜ்யத்தில் பட்டத்துக்குச்





...ந்ததியில்லாமல் பரமேசுவரவர்மன் இறந்த ...ர். தளபதி உதயசந்திரன் தாயாதிக் குடும் ...த்தில் உள்ள ஒரு சிறுவனைக் கொண்டுவந்து ...ந்திவர்மன்' என்று அபிஷேகப் பெயர் ...ழங்கி அரசனாக முடி சூட்டியிருக்கிறான். ...ன்னொரு தாயாதியான சித்திரமாயன் ...ன்பவன் நந்திவர்மனுக்கு எதிராகப் பல ...ழ்ச்சிகள் செய்து வருகிறான். இந்தச் ...ழ்ச்சிகளுக்கு எல்லாம் முக்கியமான சதி ...ாரன் அந்த மாமல்லபுரத்து விடுதியின் ...லைவனை வீர விக்கிரமன்தான்! இந்தச் ...ழ்ச்சியை அறியாத பூபதி வீரவிக்கிரமனின் ...லையிலே விழுந்து விடுகிறான். அவனோ பூபதி ...யைக் கொடும்பாளூரில் பேரியாழ் இருக்கிறது ...ன்று சொல்லி அந்த ஊரின் 'குங்கும ...ாளிகை'க்கு அனுப்பி விடுகிறான்.

கொடும்பாளூரில் குங்கும மாளிகைக்கு ...ந்து சேர்கிற பூபதிக்கு எதிர்பாராத பல ...ம்பவங்கள் நேர்கின்றன. விடுதியிலே ...ார்த்த சித்தர் அந்த மாளிகைக்கு வருகிறார்! பேரியாழ் வாசிக்கும் நங்கையின் அழகிலே மோகப்பட்டு மயங்குகிறான் பூபதி. அவளோ 'குங்கும மாளிகை' என்ற அந்தக் கணிகையர் ...டத்தில், தன்னுடைய அன்னையின் போக் ...க்கு மனம் ஒப்பாத நிலையில் வேதனையிலே துடித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பூபதியின் சந்திப்பு ஆனந்தம் தருகிறது. அதே சமயம் பூபதியை வீர விக்கிரமன் பல சூழ்ச்சிகளுக்கு உள்ளாக்கப் போவது அறிந்து மனம் நொந்து போகிறாள் நங்கை!

மாளிகைக்கு வெளியேயுள்ள நிலை என்ன? உதயசந்திரன் என்ற அந்த மதியூகி வீர விக்கிரமனின் சதிகாரச் செயல்களை உளவறிந்து, நந்திவர்மனுக்குப் பக்க பலமாக முத்தரையர்கள் என்ற குறுநில மன்னர்களைத் தன் கட்சியில் வளைத்துக் கொள்கிறான். இரகசியப் படைப் பயிற்சிக்கு வலம்புரித் தீவையே தளமாக உபயோகிப்பது என்ற முடிவோடு, முத்தரையர்களின் சார்பில் ஒரு தூதுவர், வலம்புரித் தீவுக்குச் செல்கிறார். வலம்புரி அரசகுமாரன் பூபதிக்கு முத்தரையர்களின் அரச குமாரியைத் திருமணம் முடிப்பது என்ற மங்களத் தூதோடு செல்கிறார் அந்தத் தூதுவர். பூபதியின் அன்னையான வலம்புரி மகாராணி இந்த யோசனைக்கு உடன்பட்ட போதிலும் மகனுடைய சம்மதத்தைப் பெற்றுப் பேரியாழோடு திரும்புவதற்காக மந்திர நாயகத்தையே அந்தத் தூதுவரோடு தமிழ் நாட்டுக்கு அனுப்புகிறாள். இது நடந்து முடிவதற்குள் இதை உளவறிந்து கொண்ட வீர விக்கிரமன், கொடும்பாளூர் வேளிர்களைத் தன்னுடைய கட்சிக்குச் சேர்த்துக் கொண்டு வலம்புரித் தீவை நோக்கி ஒரு கடற் படையை அனுப்பி விடுகிறான்! சித்திரமாயனைக் கொண்டு பாண்டியர்களோடும் உடன்படிக்கை செய்து கொள்கிறான்!

குங்கும மாளிகையிலே தன்னந் தனியாகத் துடிக்கும் பூபதிக்கு வீர விக்கிரமனால் இடையூறு நேரப்போகிறது என்பதை அறிந்த யாழ் நங்கை, மாறு வேஷத்தில் கொடும்பாளூரிலிருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, பூபதியை இரவுக்கு இரவே சிவிகையிலே அனுப்பி விடுகிறாள்.

சிவிகை சித்தண்ண வாசல் மலையை நெருங்கவும், அங்கேயிருந்த சமணத் துறவிகள் பூபதியை வரவேற்றுத் தங்கள் குகையிலே அவனுக்கு இடம் வழங்கினார்கள். மறுநாள் மாலை துறவிகளோடு சித்தண்ண வாசல் மலையிலே நடந்து செல்லும்போது வலம்புரித் தீவைப்பற்றிய சர்ச்சை நடக்கிறது. பேரியாழைப் பற்றிய பேச்சு வந்ததும் பூபதி மிகுந்த ஆவேசத்தோடு பேசவே, முதலாவது துறவி பூபதியைத் தனியாக அழைத்துக் கொண்டு மலைமேலே நடக்க ஆரம்பித்து விடுகிறார். மற்றத் துறவிகள் தங்கி விடுகிறார்கள். அவர்களில் ஒரு துறவி மட்டும் இதயப் பறவையைப்பற்றி ஓர் ஏக்கப் பாடல் பாடுகிறார். அந்தப் பாடல் பூபதியின் உள்ளத்தை உருக்குகிறது. அவனுடைய நடை தளர்கிறது. சித்திராங்கனும் துறவியும் சித்தண்ண வாசல் மலையின் உச்சியை நோக்கி நடக்கிறார்கள். பூபதியின் மனம் கடந்து சென்ற சம்பவங்களையெல்லாம் எண்ணி எண்ணிச் சிந்தனைச் சுழலிலே வட்டம் சுற்றுகிறது.

மலையின் உச்சியிலே புராதனமான சமணத் துறவிகள் தங்கியிருந்த 'ஏழடிப் பட்டம்' என்ற இடத்துக்கு வந்ததும், இருவரும் பாறையில் அமர்கிறார்கள். சமணத் துறவி சித்திராங்க பூபதிக்கு ஒரு கதை சொல்கிறார். ராஜசிம்ம பல்லவன் காலத்தில் அவனுடைய மந்திரி குமாரனும், கொடும்பாளூர் வேளிர் குடும்பத்தைச் சேர்ந்தவனுமான சந்திரசூடன் என்ற வாலிபன் அரசனின் கட்டளைப்படி, பேரியாழ் என்ற வாத்தியத்தைக் கற்று வருவதற்காக வலம்புரித் தீவுக்குச் சென்றான் என்று கதையை ஆரம்பிக்கிறார் சமணத் துறவி. வலம்புரித் தீவுக்கு வந்து சேர்ந்த சந்திரசூடன், அம்மன் சந்நிதியில் நடுஜாமத்தில் முதியவர் ஒருவர் யாழ் வாசிப்பதையும், அவர் வாசித்து முடிந்ததும் ஒரு வாலிபப் பெண் வந்து அவரை அழைத்துப் போவதையும் பார்க்கிறான்.

பதினொன்றாம் அத்தியாயம்

நீலமேக யாழ்ப்பாணர்

வலம்புரித் தீவுக்குச் சென்று, யாழ் வாசிப்பைக் கற்றுத் தேர்வதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து ராஜ சிம்மன் என்ற பல்லவ மன்னனின் மந்திரி குமாரன், மிக்க ஆர்வத்தோடு புறப்பட்ட கதையைத் தொடர்ந்து சொன்னார் சமணத் துறவி. சித்தண்ண வாசல் மலையின் உச்சியிலே 'ஏழடிப் பட்டம்' என்ற அந்த ஏகாந்தமான சூழலின் அமைதியும், மனித சஞ்சாரமற்ற அந்தப் பிரதேசத்தின் நிசப்தமும், துறவியின் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தன. சித்திராங்க பூபதியோ, தன்னைப் போல் யாழ் வாசிப்பிலே மோகங் கொண்ட இன்னொரு இளைஞனும் இருந்தானே என்ற திகைப்பிலும் ஆவலிலும், துறவியின் கதையைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். வலம்புரி அம்மனின் கோவிலிலே நடுஜாமத்தில் யாழ் வாசித்துக் கொண்டிருந்த அந்த முதிர்ந்த பாணர் தமது வாசிப்பை நிறுத்தியதும், இளம் நங்கை ஒருத்தி வந்து, அவரைப் பிடித்

த் தூக்கி நிறுத்திக் கோவிலின் சுற்றுக் ள்ளே அழைத்துச் சென்றாள் என்ற வரத்தைக்கேட்டதும், பூபதிக்கு மனம் ணுக்குற்றது. ஓரக் கண்ணால் இதைக் வனித்துக் கொண்ட துறவி புன்முறுவ லாடு கதையைத் தொடர்ந்தார் :—

''இளவரசே! என்ன துணுக்குற்றுப் ார்க்கிறீர்கள்? இங்கேயும் ஒரு கன்னிப் பண் வருகிறாளே என்று திகைக்கிறீர் ளா? என்ன செய்ய? யாழை நாடிப் பாகிற இளைஞன் கன்னிப் பெண்க ிடமிருந்து தப்பிப்பது கஷ்டந்தான் பாலிருக்கிறது! உள்ளத்தின் தன்மை அப்படித்தான் போலும்! ஆனால் ாருங்கள், சந்திர சூடனுடைய அநு வம் இவ்விஷயத்தில் எதிர்பாராத தமாகச் சற்று மாறுபட்டு இருந்தது! அதைச் சொல்வதற்கு முன்னால், அதற்கு ன்பு நடந்த சம்பவங்களைச் சொல்லி ாக வேண்டுமே! கேளுங்கள்.

அன்றிரவு வலம்புரி யம்மனுடைய காவிலிலிருந்து பாணரும் அவருடைய களும் சென்றுவிட்ட பிறகு சந்திர டன் இரவுப் பொழுதில் தங்குவதற் ாகத் தன்னுடைய மரக்கலத்துக்கே ந்து விட்டான்.

மறுநாள் விடிந்ததும், வலம்புரித் ீவுக்கு மறுபடியும் வந்து அந்தப் ாணருடைய வீட்டின் விலாசத்தைத் தரிந்து கொண்டு சந்திரசூடன் அவ் ிடத்தை நாடிச் சென்றான்.

நீலமேக யாழ்ப்பாணருடைய வீட்டுக் குச் சந்திரசூடன் சென்றபோது, அவர் ம்முடைய கலையழகு நிரம்பிய இல்லத் ின் வெளித் திண்ணையிலே அழகிய ஒரு ண்டின்மேல் சாய்ந்து கொண்டிருந் ார். அவருடைய மகள் சாருகேசி பரியாழுக்குத் தந்தி மாற்றிக் கொண் ருந்தாள். சந்திரசூடன் வீட்டினுள் ழைந்தான்.

செந்தமிழ் நாட்டில் பல்லவ சாம்ராஜ் த்திலிருந்து வருவதாகவும், ''வாத்ய ித்யாதரன்'' என்று சிறப்புப் பெயர் பெற்ற ராஜசிம்ம மகாராஜனுடைய ந்திரிகளில் முக்கியமான தலைமை ந்திரியின் குமாரன் என்றும், தனது பெயர் சந்திரசூடன் என்றும் பாண டம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண் ான்! நீலமேக யாழ்ப்பாணருக்கு ாத்ய வித்யாதர அரசரைப் பற்றிக் கள்வியுண்டு. மகேந்திர வர்ம பல்ல ருக்குப் பிறகு தமிழ் நாட்டில் இசைக் லையில் ஆர்வமும் திறமையும் நிரம்பிய அரசர் அவர்தான் என்றும், தமிழ் ாட்டின் பூர்வமான சங்கீதத்தை ளர்த்துப் போற்றுவதில் அவருக்கு ஈடு ிணை கிடையாது என்றும், நீலமேக யாழ்ப்பாணரிடம் பல தமிழ் வணிகர்கள் சொல்லியதுண்டு. எனவே, அப்படிப் பட்ட மன்னரின் அரசவையிலிருந்து வருகிற மந்திரி குமாரன் என்றதும், மிக்க பரிவோடு சந்திரசூடனை வரவேற்றார் பாணர்.

சந்திரசூடன் தான் வலம்புரித் தீவுக்கு வர நேரிட்ட காரணத்தை முதியவரிடம் விவரமாகச் சொன்னான்.

''மல்லிநாத யாழ்ப்பாணர் என்ற பெரியார் இந்தத் தீவிலிருந்துதான் தமிழ் நாட்டுக்கு வந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது ராஜசிம்ம மகாராஜாவிடம் தங்களுடைய புனிதமான பேரியாழைப் பற்றி யாரோ விவரமாகச் சொல்லி விட்டார்கள். அதன்பேரில் அந்த வாத்தியத்தின் மகிமையை யறிந்து, அதைப்



பயின்று வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்!'' என்றான் சந்திரசூடன். பெரியவர் புன்முறுவல் செய்தார்.

''மந்திரி குமாரா! இங்கேயுள்ள இந்தப் பேரியாழ் இதற்கு முன்பு நீங்கள் பார்த்திருக்கிற வாத்தியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இதன் அமைப்பு முறையும் தனியானது. இந்த வாத்தியம் இந்த வலம்புரிக் கோவில் ஒன்றிலே தான் இருக்கிறது. பூர்வத்தில் தமிழ் நாட்டிலே பூம்புகார் என்று அழைக்கப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்தில், இது போன்ற பெரிய யாழ் வாத்தியங்கள் இருந்தன. 'கடல்கோள்' என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தமிழ் நாட்டின் பூர்வமான ஓலைச் சுவடிகள் பலவற்றை விழுங்கி விட்ட இந்தக் கருநீலக் கடல், பூம்புகாரின் புராதனமான கலைப் பொருள்களையும் உட்கொண்டு விட்டது. இப்பொழுது இந்த வலம்புரித் தீவின் அம்மன் கோவிலிலே மட்டுந்தான் இந்தப் புராதனமான வாத்தியம் இருக்கிறது. உங்கள் ராஜசிம்ம மகாராஜன் கேள்விப்பட்ட விவரம் உண்மையானதுதான்!'' என்றார் நீலமேக யாழ்ப்பாணர்.

சந்திரசூடன் பாணரிடமிருந்து அடுத்து என்ன பதில் வரப் போகிறது

என்ற ஆவலில் பெரியவரையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தான்.

பாணர் சொன்னுர் :

"இந்த வாத்தியத்தைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதில் அநேக கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நீ இங்கே வந்து சேர்ந்திருக்கும் செய்தி வலம்புரி அரச மாளிகைக்குத் தெரியு மல்லவா?" இவ்வாறு கேட்டார் பாணர். சந்திரசூடன் சொன்னுன்:

"ஐயா! நான் இங்கே வந்திருப்பது மந்திரி குமாரன் என்ற அரசாங்க அடிப்படையிலே இல்லை. நான் ஒரு சங்கீத மாணவனுக வந்திருக்கிறேன். தங்களுடைய அங்கீகாரமும், ஆசீர்வாதமும் கிடைக்குமானுல், தங்களுடனேயே தங்களுடைய சீடனுக இருந்து இந்த வித்தையைக் கற்றுப் போக வேண்டும் என்பதே எனது ஆசை!"

சந்திரசூடன் இப்படிச் சொன்னதும் நீலமேக யாழ்ப்பாணர் தமது வயோதிக விழிகளை அகலத் திறந்து, மந்திரி குமாரனை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தார். மனித சரீரம் என்ற நுட்பமான யாழிலே உள்ள இதயத்தின் தந்திகளிலே, இறைவன் அமைத்து விட்டிருக்கும் ஸ்வர ஸ்தானங்களை ஒரு தரம் தமது விழிகளால் தொட்டுப் பார்த்து நிர்ணயித்துக் கொள்வது போல இருந்தது, பாணரின் அந்தப் பார்வை! சொன்னுர் :



''சந்திரசூடா! உன்னுடைய முகத்தையும் கண்களையும் பார்த்தால் உன்னை எனக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனாலும் ஒன்று சொல்கிறேன் கேள். இந்த வாத்தியத்தை வாசிப்பது என்பது சாதாரணமில்லை. இது மற்ற வாத்தியங்களைப் போல இல்லை. இந்தக் கோவிலிலே அம்பிகையை ஆவாகனம் செய்கிற புனிதமான வாத்தியம் இது! இதை வாசிப்பவன் தீவிரமான நியம நிஷ்டைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசாரக் குறைவாக இந்த வாத்தியத்தோடு பழகினால் தேவதா கோபத்துக்கே ஆளாக நேரும். இதிலெல்லாம் உனக்கு நம்பிக்கை யிருக்கிறதா என்பதை முதலில் என்னிடம் சொல்லு!''

இவ்வாறு கேட்டார் நீலமேக யாழ்ப்பாணர். இதற்குள் யாழின் தந்திகளை மாற்றிவிட்ட சாருகேசி, தன் தந்தைக்கு அருகிலே சென்று ஏதோ சொல்ல வந்தவள், அன்னிய இளைஞரோடு மிகவும் தீவிரமாகப் பேச்சு நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு உள்ளே சென்று விட்டாள். சந்திரசூடன் சாருகேசியின் அந்த மிடுக்கான நடையிலே பார்வையைச் செலுத்தியவன் மறுவிநாடி தன்னைச் சமாளித்துக் கொண்டு பெரியவருக்குப் பதில் கூறினான்.

''ஐயா! நீங்கள் சொன்ன வார்த்தைகளிலே உள்ள தெய்வீகமான பேருண்மையை மனப் பூர்வமாக உணர்கிறேன். தங்களுடைய இலட்சியத்துக் கெல்லாம் முற்றிலும் தகுதி வாய்ந்த ஒரு மாணவனாக என்னை நான் காப்பாற்றிக் கொள்கிறேன். அதுபற்றிச் சந்தேகம் வேண்டாம்!'' என்றான் சந்திரசூடன்.

''அப்படியில்லை சந்திரசூடா! உன்னைச் சந்நியாசியாக இருக்க வேண்டும் என்று நான் சொல்ல வில்லை. அப்படி யெல்லாம் நினைத்துக் கொள்ளாதே! நானும் ஒரு கிருகஸ்தன்தானே! ஒழுங்கு முறை வேண்டும் என்று சொன்னேன்.''

இப்படிச் சொல்லி விட்டுத் தமது முதிர்ந்த உதடுகளை நன்றாகத் திறந்து பரந்த ஒரு சிரிப்புச் சிரித்தார் நீலமேக யாழ்ப்பாணர்.

பிறகு கூறினார்;

''சந்திர சூடா! ஒலியின் தன்மைகளை நம்மவர்கள் உணர்ந்து வைத்திருக்கிற மாதிரி இந்த உலகத்தில் வேறு எந்த நாட்டு மக்களும் உணர்ந்ததில்லை. தந்தியிலிருந்து எழுகிற சில வகையான ஒலிகளால் பெரிய பெரிய மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் தரை மட்டமாகப் பொடிப் பொடியாகச் சிதற அடித்து விடலாம். தெரியுமா? நம்மைச் சுற்றி நிற்கும் வாயு அணுக்களை யாழின் நரம்பிலிருந்து புறப்படும் ஒலிகளோடு ஒத்து ஒலிக்கும்படி செய்து, இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ பல அற்புத மாயங்களைச் செய்து காட்ட முடியும். புரிந்ததா?''

இம்மாதிரி ஆரம்பித்த பேச்சானது, கலையின் நுட்பங்களில் எல்லாம் புகுந்து



விளையாடிக் கடைசியில் குரு—சிஷ்ய உறவிலே வந்து முடிந்தது!

நீலமேக யாழ்ப்பாணர் தமக்கு ஒரு தகுதியான நல்ல மாணவன் கிடைத்திருப்பதாக எண்ணி மனம் மகிழ்ந்தார். அதே சமயம் அவருடைய வயோதிக உள்ளத்தின் ஓரக் கோடியிலே ஒரு சிறு ஆசை. தமது அருமை மகள், இசையிலே பிறந்து இசையிலே வளர்ந்து இசையிலே உருவாகி யிருக்கும் அந்தச் சாருகேசிக்கு இப்படி ஒரு உத்தம குமாரன், ராஜகளை நிரம்பிய வாலிபன், மணமகனுகக் கிடைத்தால் இருவரும் எத்தனை சீலத்தோடு இல்லறத்தை நடத்துவார்கள்! இப்படி ஓர் எண்ணம் பாணரின் உள்ளத்தில் முகிழ்த்தது!

பன்னிரண்டாம் அத்தியாயம்

மின்னல் மின்னியது!

சந்திரசூடன் யாழ் வாசிப்பில் மெய்யும், மொழியும், மனமும் ஒன்று சேர்ந்து ஈடுபட ஆரம்பித்தான்.

நீலமேக யாழ்ப்பாணர் தாம் இந்த மாணவனுக்கு யாழ் கற்பிக்க ஒப்புக் கொண்டதிலே படிப் படியாக மகிழ்ச்சி அடைய ஆரம்பித்தார். தமக்குப் பிற்காலம் தம்முடைய திறமைக்கு ஒரு சந்ததி கிடைத்திருப்பதோடு, தம்முடைய மகளுக்குப் பொருத்தமான ஒரு வாலிபனுக அவன் விளங்குவதனுல் தமது குடும்பப் பரம்பரைக்குமே மிகவும் சிறப்பான சந்ததி வாய்த்து விட்டதாக அவர் எண்ணினுர். வலம்புரி யம்மனுக்கு இத்தனை ஆண்டுகள் தாம் பக்திபூர்வமாகச் செய்துவந்த இசைத் தொண்டு பயனற்றுப் போய்விடவில்லை என்ற திருப்தி, நெஞ்சில் பால் வார்த்தது.

நாளாக நாளாகக் கிழவரின் அந்தரங்கமான விருப்பத்தை நன்ருகப் புரிந்து கொண்டான் சந்திரசூடன். அது சம்பந்தமாக அவனுடைய அறிவில் அதிக ஆராய்ச்சிக்கு இடம் ஏற்படாத முறையில், யாழும் இசையும் அவனைப் பூரணமாக உட்கொண்டிருந்தன. எப்பொழுதாவது அந்த யாழுக்கு நரம்புகளை மாற்றி அமைக்கும் பணியில் சாருகேசி சந்திரசூடனுக்கு உதவி செய்வதுண்டு. அப்பொழுதுங்கூட அவன் வித்தியாசமான எண்ணங்கள் ஏதும் இன்றியே மனத்தைப் பவித்திரமாக வைத்துக் கொண்டான். ஒன்று, பெரியவர் அந்த யாழைப் பற்றிச் சொல்லியிருந்த பரிசுத்தமான செய்திகளினுல் சந்திர சூடனுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருந்த பயபக்தி! இரண்டாவது, எப்பொழுதும் பகலும் இரவும் ராகங்களோடும், ராக கன்னிகளோடும் நாத உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த சந்திரசூடன் பாணரின் கன்னியான சாருகேசியையும் அப்படிப்பட்ட ஒலி வடிவமான ஒரு ராக கன்னிகையாகவே கண்டான்!

இப்படி யிருக்கும்போதுதான் யாழ்ப்பாணருக்குத் தம்முடைய மாணவனின் முன்னேற்றத்தில் திருப்தி யேற்பட்டு, அவனையும் வலம்புரி யம்மனின் கோவிலுக்குப் பூஜை நேரங்களில் தம்மோடு இணைந்து யாழ் வாசிப்பதற்காக அழைத்துப் போக ஆரம்பித்தார். சில நாட்களில் அந்திக் கால பூஜைகளுக்கும் சந்திரசூடன் பெரியவரோடு அம்மன் கோவிலுக்குச் செல்லத் தொடங்கினுன்.

ஒரு நாள் மாலை. உத்தராயண புண்ணிய காலத்தின் ஆரம்ப நாள் அது. அன்று வலம்புரி அம்மன் கோவிலிலே விசேஷ பூஜை. 'சாயரட்சை' என்ற பூஜை, பக்தி சிரத்தையோடு நடந்து கொண்டிருந்தது. நீலமேக யாழ்ப்பாணர் அம்மன் சந்நிதியிலே இருந்து யாழ் வாசிக்க ஆரம்பித்தவர் சற்று நேரத்துக் கெல்லாம் யாழைத் தமது மாணவனிடம் கொடுத்து ஆசீர்வதித்து, "தொடர்ந்து வாசி சந்திர சூடா!" என்ருர். மாணவனும் மிக்க அடக்கத்தோடு பெரியவரிடமிருந்து யாழைக் கைத் தாங்கலாக ஏந்தி வாங்கிக் கொண்டு தனது உடம்பிலே அணைத்த வண்ணம் வாசிக்க ஆரம்பித்தான்.

அந்தி மாலையின் வர்ணக் கதிர்கள் வானத்திலே கோலம் தெளிப்பது போலவும், நீலக் கடலின் சுந்தர அலைகள் வானத்தை நாடித் துள்ளிக் குதிப்பது போலவும், யாழின் நரம்புகளிலே சந்திரசூடனின் விரல்கள் விளையாடத் தொடங்கின. தனது சிஷ்யனுடைய வாசிப்பிலே யாழிலிருந்து எழுந்து வரும் இன்ப இசையைக் கேட்டுப் பேரானந்த நிலையிலே உள்ளம் முழுதும் கூடி, அப்படியே அசைவற்று இருந்தார் நீலமேக யாழ்ப்பாணர். ஆனுல் அப்பொழுது?

சாயரட்சை சேவைக்காக வலம்புரி அரசகுமாரி தரங்க வல்லி தன்னுடைய சேடிப் பெண்கள் புடை சூழ, நட்சத்திரங்கள் சூழ்ந்த கூட்டத்தில் சந்திரன் பவனி வருகிற மாதிரி அந்தக் கோவிலுக்குள்ளே உதித்து வந்தாள்!

மெல்லிய மலர்களை மிதித்து வருவது போல அவள் தாமரைப் பாதங்கள்

மென்னடை நடந்தன. சந்நிதியை நோக்கி வந்தாள் தரங்கவல்லி.

யாழிலே விரல்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. விரல் முந்தியதா, விழி முந்தியதா, அல்லது மனம் முந்தியதா என்று சொல்ல முடியாத விதத்தில், சந்திரசூடனுடைய விரலும் விழியும் மனமும் ஒன்றுகி அந்தத் தெய்விக வாத்தியத்திலே இணைந்து இழைந்து கொண்டிருந்தன. ஆனல் இதென்ன! கன்னங்கரிய கார் வானத்தில் பளீர் பளீர் என்று ஒளி மயமான மின்னற் பிழம்பு பளிச்சுப் பளிச்சென்று சுருண்டு நெளிந்தது போல, ஒரு கணத்தில் சந்திர சூடனுடைய இரு விழிகளிலும் தேஜோமயமான பிரகாசம் 'பாய்ந்தது! இருளிலே வீசிய மின்னல் அவனுடைய கண்களைக் கூசச் செய்தது. தெளிவோடு சர்வ நிச்சயத்தோடு ஒலிப் பாதையிலே 'விறு விறு' என்று பறந்து சென்று கொண்டிருந்த சந்திரசூடன் கண்களை மூடினன். அவனுடைய பார்வை இருண்டது! யாழிலே அபஸ்வரம் பேசியது!

இதுவரை இமைகளை மூடிக் கொண்டிருந்த கிழவர், நீலமேக யாழ்ப்பாணர், பதறிப் போய்க் கண்களைத் திறந்தார்.

"தம்பீ!" என்ருர். அது வெறும் அழைப்பு இல்லை. அவருடைய இதயத்தின் ஓலம் அது!

"மன்னிக்க வேண்டும்!" என்று சொன்ன சந்திரசூடன் மறு விநாடி தனது அங்கங்களை யெல்லாம் மூச்சைப் பிடித்து ஒருமித்துக் கொண்டு, திமிறி ஓட முயன்ற இதயத்தைத் திருகிக் கொண்டு வந்து யாழிலே பதித்த வண்ணம் இசையைத் தொடர்ந்தான்!

அன்றிரவு வீட்டுக்குத் திரும்பியதும், அதே ராகத்தை மீண்டும் வாசிக்கச் சொன்னுர் நீலமேக யாழ்ப்பாணர். சந்திரசூடன் இப்பொழுது எவ்விதமான மாசும் இல்லாமல் பழுதற்ற முறையிலே வாசித்து விட்டான்! இதில் மிகவும் திருப்தியடைந்த பாணர் பரிவோடு தம்முடைய மாணவனுக்கு உபதேசம் செய்தார். யாழ் வாசிப்பில் எப்பொழுதுமே அபஸ்வரம் விழாமல் மிகவும் பக்தி சிரத்தையோடு கவனமாக வாசிக்க வேண்டும் என்றும், இல்லாவிடில் ஏற்கனவே தான் எச்சரிக்கை செய்தது போல தெய்வ கோபத்துக்கு ஆளாக நேரும் என்றும் கண்டித்தார்.

அன்று முழுதும் சந்திரசூடன் உணவு அருந்தவில்லை. "நான் செய்த பிழைக்கு இப்படி ஒரு பிராயச்சித்தம் அவசியம்!" என்ருன் அவன். கிழவரும் அதை மிக்க உற்சாகத்தோடு ஆமோதித்தார்.

அன்றிலிருந்து சந்திரசூடன் தன்னுடைய யாழ் வாசிப்பில் [illegible] மிகக் கவனமாக இருக்க ஆரம்பித்தான். இத்தனை கண்டிப்பும், முன் கவனமும், பயமும் இருந்த போதிலும் சந்திரசூடனுடைய அந்தரங்கத்தில் ஒரு சிறு ஆசை புதிதாக முளைத்திருந்தது. விழாக் காலங்களில் எப்பொழுதாவது வலம்புரி அரச மாளிகையிலிருந்து யாழ் வாசிக்க வேண்டும் என்று பெரியவருக்கு அழைப்பு வராதா, அப்படி அழைப்பு வந்தால் அவரோடு தன்னையும் அவர் அழைத்துச் செல்ல மாட்டாரா?—இப்படி ஒரு புதிய ஆசை அவனையும் மீறிச் சந்திரசூடனுடைய மனத்தை வேதனைப் படுத்தியது. அந்தத் தவருன ஆசை, அடிக்கடி அந்தரங்கத்திலே தலை காட்டத்தான் செய்தது! ஆனல் வெளியே யாருக்கும் இது தெரியாது!

இந்த இரகசியமான வஷச் சுழற்சியில் நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. நீலமேக யாழ்ப்பாணரோ தமக்கு ஒரு நல்ல மருமகன் கிடைத்து விட்டதாகவும், தம்மிடத்தில் இத்தனை விசுவாசத்தோடு நடந்து கொள்ளும் இந்த உத்தம மாணவன் தமது விருப்பத்தை நிறைவேற்றி இந்த முதிர்ந்த காலத்தில் தன் இதயத்தைக் குளிர்விக்கப் போகிருன் என்றும் கனவு கண்டு கொண்டிருந்தார். இந்தக் கனவை ஓரளவு அறிந்து கொண்டு விட்ட சாருகேசியும், அடுத்த இந்திர விழாவில் தனக்கும் சந்திர சூடனுக்கும் திருமணம் நடக்கப் போகிறது என்றும் அதற்குள் தன்னைப் பூரணமான தகுதி வாய்ந்த ஒரு அரசகுமாரியைப் போல் குணமும், நலமும், சீரும் சிறப்பும் நிரம்பிய ஒரு நங்கையாக ஆக்கிக் கொண்டு விடவேண்டும் என்றும் ஆசைப் பாலம் கட்டிக் கொண்டிருந்தாள். கள்ளம் கபடம் இல்லாத, ஸ்வர சுத்தமான ஒரு ஜன்ய ராகத்தைப் போன்ற அவளுடைய எளிய இதயத்தில், சந்திரசூடனைப் பிரதிஷ்டை செய்து அந்தத் தெய்வத்துக்கு அல்லும் பகலும் அனவரதமும் பூஜை செய்தாள் சாருகேசி.

இப்படியாக, மூன்று தந்திகளை இணைத்து முறுக்கிய யாழ்ப்பாணரின் குடும்பம் என்ற இந்த நுட்பமான யாழில், மூன்று நரம்புகளிலும் மூன்று ஸ்தாயிகள் பேசிக் கொண்டிருந்தன! இந்தத் தருணத்திலேதான் வலம்புரி அரச குமாரியான தரங்கவல்லிக்குத் திருமணம் நிச்சயம் ஆகியிருக்கிறது என்ற செய்தி அந்தத் தீவு முழுவதிலும் பரவிற்று! யாரோ ஒரு வழிப்போக்கன் நீலமேக யாழ்ப்பாணரின் வீட்டுக்கே வந்து இந்தச் செய்தியைச் சொல்லி விட்டுப் போனுன்! அந்த வார்த்தைகள் சந்திரசூடனுடைய செவியிலும் வந்து விழுந்தன! (தொடரும்)



பதின்மூன்றும் அத்தியாயம்

திருமணக் கோலாகலம்!

"வலம்புரித் தீவின் அரச குமாரி தரங்கவல்லிக்குக் கல்யாணம் என்ற செய்தியைக் கேட்டதும் சந்திரசூடனுடைய மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை உங்களுடைய யூகத்துக்கு விட்டு விடுகிறேன் இளவரசே!" என்றார் சமணத் துறவி சித்திராங்க பூபதியைப் பார்த்து. பூபதி பதிலே பேசவில்லை. சந்திரசூடனுடைய மன நிலையைப் பற்றிய எண்ணம் சித்திராங்க பூபதியைப் பேச்சில்லாமல் செய்து விட்டது. துறவி தமது கதையைத் தொடர்ந்தார்.

"வலம்புரித் தீவில் ஒரே திருவிழாக் கோலாகலம். தரங்கவல்லிக்கும் பாண்டிய அரசகுமாரனுக்கும் கல்யாணம் என்று அந்த ராஜ்யம் முழுவதுமே குதூகலப்பட்டது!" என்று பேச ஆரம்பித்த சமணத் துறவி, திருமண ஏற்பாடுகளை வர்ணிக்கும் போது தம்மை மறந்த ஒரு லய உணர்ச்சியிலே பேச ஆரம்பித்தார்.

"வலம்புரி இளவரசே! உங்கள் குலத்துக்கும், பாண்டிய குலத்துக்கும் பல்லாண்டுகளாகவே திருமண உறவு இருந்து வந்திருக்கிறது என்றாலும், தரங்கவல்லியின் திருமணத்துக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் போல அதற்கு முன்பு அந்தத் தீவு கண்டது மில்லை; கேட்டதும் இல்லை! தரங்கவல்லி என்ற அந்த எழில் மோகினியின் அழகு கடல் கடந்து சென்று செந்தமிழ் நாடெங்கும் புகழ் பரப்பியிருந்தது! அவளுடைய அழகைக் கேள்விப்பட்டுத்தான் பாண்டிய அரச குமாரனுக்கு இந்த அழகியை மணம் முடிக்க வேண்டும் என்று மதுராபுரியிலே தீர்மானம் ஆயிற்றும்! பாண்டியனுடைய தலைமை அமைச்சரே வலம்புரித் தீவுக்குச் சென்று இந்தத் திருமண உடன்படிக்கையை முடிவு செய்தாராம். என்றாலும் அரசியல் நுட்பங்களை நன்றாக அறிந்த பிரதானிகளின் மத்தியில், இந்தத் திருமணத்தைப் பற்றி வேறு விதமாகவும் பேசிக் கொண்டார்கள். பல்லவ மன்னர்களின் செல்வாக்கும், படைபலமும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததால், பாண்டியர்கள் பல்லவர்களுக்கு எதிராகப் படைபலம் திரட்டி வந்தார்கள் என்றும், வலம்புரித் தீவோடு இப்படி ஒரு திருமணம் செய்து கொண்டு விட்டால், பாண்டியர்கள் அந்தத் தீவைத் தங்களுடைய படை விஸ்தரிப்புக்கு ஓர் இரகசிய தளமாக உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொண்டார்கள். அக்காலத்தில் பாண்டிய வேந்தனாக வீற்றிருந்த கோச்சடையன் ரணதீரன் என்ற பேரரசன், சோழ நாட்டையும் கருநாட தேசத்தையும், கொங்கு நாட்டையும் கைப்பற்றி, இந்த அரசர்களைத் தனக்குத் திறை செலுத்துமாறு செய்திருந்தான். அவனுடைய ஆட்சியின் விரிவு படிப்படியாகப் பெருகிக் கொண்டு வந்தது. எனவே இப்பொழுது வலம்புரித் தீவோடு இப்படி ஒரு திருமண உறவு செய்து கொண்டதற்குங்கூட அரசியற் காரணங்கள் இருந்ததாகப் பிரதானிகள் பேசிக் கொண்டதில் வியப்பில்லை அல்லவா! எந்தக் காரணம் எப்படியிருந்தாலும், பாண்டிய மன்னன் இந்தத் திருமண உறவை

மிகவும் மதித்தான் என்பது, அவன் திருமணத்திற்காக அனுப்பிய பொருள்களிலும், சீர்வரிசைகளாக வலம்புரி அரசகுமாரிக்குப் பாண்டியன் அனுப்பிய விலை மதிக்க முடியாத முத்து மாலைகளிலும், நவரத்தின ஆபரணங்களிலும் நன்ருகத் தெரிந்தது!

திருமணத்துக்கு என்று பாண்டிய நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், செந்தமிழ் நாட்டின் குறுநில மன்னர்களிடமிருந்தும் பல வெகுமதிப் பொருள்கள் ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே வலம்புரித் தீவுக்கு வந்துகுவிய ஆரம்பித்தன. அக் காலத்தில்



பழையாறையிலிருந்த சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் சம்பந்தி உறவு இருந்து வந்ததால், பழையாறையி லிருந்தும் ஏராளமான வெகுமதிகளும் சீர் வரிசைகளும் வந்தன.

திருமண விழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே அந்தக் கருநீலக் கடலிலே விதம் விதமான அலங்காரங்களோடு மரக்கலங்கள் வந்து சூழ ஆரம்பித்தன. மீனக் கொடிகளும் புலிக் கொடிகளும் கடல் நீரில் ஒரு பூஞ்சோலை வளர்ந்து நின்றது போல நெருக்கிக் கொண்டு காட்சி தந்தன. பெரிய பெரிய மரக் கலங் களுக்குமத்தியிலே, தொலை தூரத்து வணிகர்கள் அரச விசுவாசத் தோடு அனுப்பிய வெகு மதிப் பொருள் களைத் தாங்கிக் கொண்டு சிறு சிறு மரக்கலங்கள் கரை யோரமாக மிதந்தன. 'பரிமுக அம்பி' என்று பெயர் பெற்ற குதிரை முகப் படகுகளும், 'கரிமுக அம்பி' என்று பெயர் பெற்ற யானைமுகப் படகு களும், 'மரிமுக அம்பி' என்று பெயர் பெற்ற சிங்கமுக மரக்கலங் களும் வலம்புரித் தீவைச் சுற்றி மிதந்த காட்சியானது, நேத்திரானந்தமான காட்சியாக இருந்தது! வலம்புரித் தீவின் துறைமுக வாயிலிலே, சேர நாட்டு யானைகள் மலை மலையாக வந்து இறங்கின. பெரிய பெரிய அகிற் கட்டைகள், மாபெரும் தந் தங்கள், தோகை மயில்கள், நன் முத் துக்கள், விலை மதிப்பில்லாத இரத்தி னங்கள், முதலியன கலங்களிலும், தோணிகளிலும், மிதவைகளிலும், நாவாய்களிலும், திமில்களிலும் வந் தன. தென் கடல் முத்துக்களோடு, கிழக்குக் கடலின் பவளங்களும், மரகதக் கற்கள் பதித்த யவனத்துப் பேழை களும், பாவை விளக்குகளும் நூற்றுக் கணக்காகக் குவிந்தன! கோசிகம், பீதகம், அரத்தம், நுண்டுகில், பாட கம், கோங்கலர், வேதங்கம், பரியட்







"காட்லிவர் ஆயில் மாத்திரை சாப்பிட்டா யாடா? என்ன செய்கிறாய்?"
"இரு அம்மா! இருக்கிறதிலே சின்ன மாத்திரையாகப் பொறுக்கிச் சாப்பிடறேன்."

டக் காசு, புங்கர்க் கழகம், சில்லிகை, பங்கம், தத்தியம், வண்ணடை, திருக்கு, குச்சரி, இறஞ்சி, இரட்டு, என்றெல் லாம் பல பெயர்களிலே புகழ் பெற்ற தமிழ் நாட்டின் தொன்மையான பலவகை ஆடை வகைகள் மாபெரும் பேடகங்களிலே வந்து சேர்ந்தன. பாண்டிய மன்னன் அனுப்பிய மீனக் கொடி தாங்கிய மரக்கலத்தில், மண மகளுக்காக வந்த விலையுயர்ந்த ஆபரணங்களோ வலம்புரித் தீவை வியப்புக் கடலிலே கரைகாணமல் மிதக்கச் செய்தன! இரண்டு பக்கமும் யானைகள் தாமரை மலரை நீட்டி நிற்க, நடுவே மலர்மகளின் உருவம் பதித்த **தெய்வயுத்தி** என்ற ஆபரணங்களும், அங்காந்த வாளைமீன் வடிவில் செய்த **வாளைப் பொருவாய்,** வலம்புரிச் சங்கின் வடிவிலே செய்த **வலம்புரி, பொன்னரி மாலை, பாதசரம், மகரக் குழை, நவரத்தினப் பதக்கம், இழை** முதலிய நூற்றுக் கணக்கான ஆபரணங்கள் மணமகள் தரங்கவல்லி என்ற சுந்தரிக்குச் சீர் வரிசைகளாக வந்தன! பாண்டிய அரச குமாரன், மணமகன், வந்து இறங்கிய அரச மரக்கலத்தைச் சுற்றிச் சிறு சிறு மரக்கலங்களில் அமைச்சர்களும், தள பதிகளும், உறவினர்களும் வந்தார்கள். இவர்களோடு தையல் வேலையில் தேர்ந்த **துன்னர்**களும், கூத்தாட்டத்தில் நிபுணர்களான **வைரியர்**களும், குதிரை யோட்டுவதில் சாமர்த்தியசாலிகளான **வாதுவர்**களும், யானையோட்டும் **பாகர்** களும், ரதம் செலுத்தும் **சாரதி**களும் அணி அணியாக வந்தார்கள். இவர் களைத் தவிர சிவாலயங்களில் பூஜை செய்யும் குருக்களும், விஷ்ணு ஆலயங் களில் பூஜை செய்யும் நம்பி பட்டர் களும் வந்தார்கள்.

வலம்புரித் தீவு ஒரே இந்திரலோகப் பட்டினமாக இருந்தது! ஒரு மாதத் துக்கு முன்பிருந்தே வாத்தியங்களின் கோஷமும், நாட்டியச் சிலம்புகளின் இன்னொலியும், ரதங்களின் ஓட்டமும், மக்களின் கூட்டமுமாக வீதி யெல்லாம் ஒரே ஆட்டமும் பாட்டுமாக இருந்தன!

ஆனல் நீலமேக யாழ்ப்பாணருடைய வீட்டிலோ?

திருமண விழாவில் வலம்புரி அரச குடும்பத்தின் பரம்பரை வழக்கப்படி மங்கலச் சடங்கின்போது, தேவதைகளை ஆவாகனம் செய்வதற்காகப் பேரி யாழைப் பக்தி பூர்வமாக வாசிக்க வேண்டிய புண்ணிய கைங்கரியம் உண்டு! எத்தனையோ பல ஆண்டுகளாக இந்தச் சடங்கைச் செய்து வருகிற குடும் பம் நீலமேக யாழ்ப்பாணரின் குடும்பம்! இப்பொழுது நீலமேக யாழ்ப்பாணர் அந்தச் சடங்கை நடத்துவதற்காக அரச மாளிகைக்குச் செல்ல வேண்டும். அரச குமாரியின் திருமணத்துக்கு ஒரு மாதம் இருக்கும் போதே, இப்பொழுதே, அரச மாளிகையிலிருந்து பரி வட்டத்தோடு குருக்கள் வந்து சம்பிரதாயப்படி இந்த அறிவிப்பைச் சொல்லிப் போனர். அந்த விநாடியிலிருந்து நீலமேக யாழ்ப் பாணருக்கு மன அமைதி இல்லை!

அரசகுடும்பத்தாரின் திருமணத்துக்கு யாழ் வாசிக்கும் உரிமை என்றால் சாமானியமா! அதே சமயம் எத் தகைய பெரும் பொறுப்பு அது! அந்த யாழ் வாசிப்பின் மூலம் தேவதைகள் மனம் மகிழ்ந்து செய்கிற ஆசீர்வாதம் அல்லவா, அரச குடும்பத்தையும் ராஜ்யத்தையுமே பாதுகாக்க வேண் டும்! இப்படிப்பட்ட மகத்தான உரிமை யைப் பெற நீலமேக யாழ்ப் பாணருக்குப் பிறகு சந்ததியில்லையே! இன்று வயோதிகத்தின் தளர்ச்சியினல் யாழ் வாசிப்பதையே படிப்படியாக நிறுத்தி வருகிறார் பாணர்! இந்நிலை யில் இந்தக் கல்யாணத்தில், உள்ளத்தை யும் உடம்பையும் ஒடுக்கிப் புனித யோக முறையைப் போன்று யாழ் வாசிக்க வேண்டுமே! அதற்குத் தன் னுடைய உடலின் தளர்ச்சி இடம் கொடுக்குமா? வயோதிகப் பருவத்தின் முதுமையிலே விரல்கள் வேகத்தோடு ஸுஸ்வரமாக அந்தப் பெரிய யாழின் தந்திகளிலே தவழ்ந்து பேசவேண்டுமே! நீலமேக யாழ்ப்பாணருக்கு இந்த நினைப்பு அச்சத்தைக் கொடுத்தது.

கடந்த சில மாதங்களாகவே நீலமேக யாழ்ப்பாணர் அம்மன் கோவிலின் இசைப் பணியைத் தமது சிஷ்யனிடம் ஒப்படைத்திருந்தார். ஏதோ அவ னேடு சென்று அமருவாரே ஒழிய, யாழ் வாசிப்பதெல்லாம் சந்திரசூடன் தான். எனவே இந்தத் திருமணச் சடங்

குக்கும் அவனையே யாழ் வாசிக்கும்படி செய்து விட்டால் என்ன? இந்த நினைப்பு வந்ததும் மறுகணம் இதற்கு ஓர் ஆட்சேபணையும் நினைவுக்கு வந்தது! திருமணச் சடங்கிலே யாழ் வாசிக்கிற புண்ணிய உரிமை நீலமேக யாழ்ப்பாணருக்கு உண்டு; அவருடைய சந்ததிக்கும் உண்டு. ஆனால் அந்த உரிமை சந்திரசூடனுக்கு எப்படிக் கிடைக்கும்? சிஷ்யனாக இருந்தால் மட்டும் போதாதே.. பரம்பரை உரிமையல்லவா அந்த அரசாங்க உரிமை!

பாணருக்கு ஆண் மகவு இல்லை. அவருடைய மகன், மகள் எல்லாம் சாருகேசிதான். இந்த நிலையில் அவருக்குச் சந்ததி என்று ஒருவன் உண்டு என்றால், சாருகேசியைக் கைப் பிடிக்கிறவன் தான்! அவனுக்கும் அவனுடைய குழந்தைகளுக்கும் இந்த உரிமை போய்ச் சேரும். எனவே, நீலமேக யாழ்ப்பாணர் நினைத்தார்: தம்முடைய நெடு நாளைய ஆசையை இப்பொழுது நிறைவேற்றி விட்டால் என்ன? தரங்கவ யின் திருமணத்துக்கு முன்பே ச கேசிக்கும் சந்திரசூடனுக்கும் மணத்தை முடித்து விட்டால், த மருமகனே திருமணச் சடங்கில் ப கொள்ளலாம் அல்லவா? அப்படியில் விட்டால், வயோதிகப் பருவத்தில் அ தனை பெரிய பொறுப்பில் தான் சிக் கொண்டு, தளர்ச்சி காரணமாக வாசி பிலே ஏதாவது பிசகு நேர்ந்து வி டால், தேவதா கோபம் அல்லவ உண்டாகி விடும்!

இவ்வாறு எண்ணிய அந்த உத்தம பெரியார், ஒரு நாள் மாலை தம சிஷ்யன் சந்திரசூடனைத் தனியா அழைத்துக்கொண்டு, வலம்புரி அம்ம கோவிலை அடுத்த கடல் மணற்பர பிலே வந்து அமர்ந்தார்.

"தம்பீ! உன்னிடம் ஒரு முக்கி மான விஷயம் பேச வேண்டும்!" என் ஆரம்பித்தார் நீலமேக யாழ்ப்பாணர்

பதினான்காம் அத்தியாயம்

இசை குழம்பியது!

சந்திரசூடனிடம் யாழ்ப்பாணர் தனியாகப் பேசிய பேச்சு, அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்க வில்லை! ஏனென்றால், என்றாவது ஒரு நாள் தனது குருநாதர் இந்த விஷயத்தைத் தன்னிடம் பேசத்தான் போகிறார் என்று அவனுக்குத் தெரியும். என்றாலும் இத்தனை நெருக்கடியான தருணத்தில் இந்தப் பெரிய பிரச்னைக்குத் தான் விடை சொல்ல வேண்டியது ஏற்படும் என்று அவன் நினைக்க வில்லை!

"குருநாதரே! நாளைக் காலையில் என்னுடைய பதிலைச் சொல்கிறேன்!" என்றான் சந்திரசூடன். பெரியவருக்கு இந்தப் பதிலைக் கேட்கக் கஷ்டமாக இருந்தது. தான் சொன்னதும் உடனே ஒப்புக் கொண்டு விடுவான் என்று எதிர்பார்த்திருந்த பெரியவருக்கு, இம்மாதிரி யோசித்துப் பதில் கூறுவதாகச் சந்திரசூடன் சொன்னது திகைப்பையே கொடுத்தது. ஆனாலும் திகைப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள வில்லை. 'யோசித்தாவது தன்னுடைய விருப்பத்துக்குச் சம்மதித்தால் சரிதான்' என்று திருப்திப்பட்டுக் கொண்டார். பெரியவரின் இந்த மனப் போராட்டத்தைச் சந்திரசூடனும் கவனித்துக் கொண்டான்.

அன்றிரவு சந்திரசூடன் சரியாக உறங்க வில்லை. ராஜசிம்ம பல்லவனுடைய யோசனைப்படி வலம்புரி தீவுக்கு வந்திருக்கிறான் அவன்! வந் இடத்தில் வந்த காரியமான யாழ் பயிற்சி, எவ்வித இடையூறுமின்றி செவ்வனே நடைபெற்று விட்டது ஆனால் நீலமேக யாழ்ப்பாணருக்கு தான் செலுத்த வேண்டிய கு காணிக்கையோ, சற்றும் எதி பாராத விதத்தில் இருக்கிறது! த னையே அவருக்கு மருமகனாகக் கொடுக் வேண்டிய நிலைமையல்லவா ஏ பட்டிருக்கிறது!—இப்படி நினைத்தா சந்திரசூடன். அதே சமயம் தரங் வல்லியைச் சந்தித்த அந்தச் சம்பவ அவனுடைய கண் முன்னே நின்றது கொடும்பாளூரின் அரச குடும்பத்தை சேர்ந்த தனக்கு, இந்த ஒப்புயர்வற் அழகியான தரங்கவல்லியை மண செய்து கொள்ளும் பாக்கியம் கிடை தால் எப்படியிருக்கும்! ஆனால் அந் ஆசையிலே தான் மண் விழுந் விட்டதே! இப்பொழுது பாண்டி அரச குமாரன் அல்லவா அவளை மண கப் போகிறான்! ஒரு கணப் பார்வையி தன் உள்ளத்தை யெல்லாம் கொள் கொண்டு விட்ட அந்த அழகியைக் க லுக்கப்பாலிருந்து இன்று வந்திருக்கி பாண்டிய அரச குமாரன் திருமண செய்துகொள்ளப் போகிறான்! அந்த திருமணத்துக்குத் தானே தன் கைப்ப

யாழ் வாசிக்க வேண்டுமாம்! எப்படியிருக்கிறது?

இவ்வாறு எண்ணிய சந்திரசூடனின் மனக்கண் முன்பு, சாருகேசியின் கள்ளங் கபடம் இல்லாத பரிசுத்தமான பளிங்கு வதனம் வந்து நின்றது.

"எத்தனை தங்கமான பெண் இந்தச் சாருகேசி. இசையிலே பிறந்த கன்னி! பேரியாழின் இசையைப் போன்று பவித்திரமானவள் அவள்! ஆனால் தன்னுடைய உள்ளம் மட்டும் ஏன் தன் கைக்கு எட்டாத அந்தத் தரங்கவல்லியையே நினைத்து நினைத்து ஏங்குகிறது! எத்தனை விபரீதமான ஆசை அது! எத்தனை பாபமான எண்ணம் அது!"—இப்படி நினைத்ததும் சந்திரசூடனுக்கு நெஞ்சிலே முள் குத்துவது போல இருந்தது.

"உயிருக்கு ஒப்பான பேரியாழ்ப் பயிற்சியைத் தனக்கு அன்போடு வழங்கிய குருநாதனின் குமரி சாருகேசி. அந்தக் குருநாதரோ மனம் மொழி செயல் மூன்றிலும் அந்த மகளையே ஜீவனாக வைத்து வாழ்கிறார். இந்த வயோதிக நிலையில், முதிர்ந்து பழுத்து உதிர்ந்துவிடக் கூடிய அந்த இசைக் கனியான பாணருக்குத் தன்னையே அர்ப்பணமாகக் கொடுத்து விடுவதை விட வேறு என்ன சிறந்த கடமை உண்டு, இந்த வாழ்க்கையில்!"

இப்படிப் பலவாறாக எண்ணமிட்டுக் கொண்டே இரவு முழுதும் நித்திரையின்றிக் கழித்தான் சந்திரசூடன். மறுநாட் காலை எழுந்து சென்று பாணர் இருந்த அறைக்கு வந்தால், அவரும் இரவு முழுதும் தூங்காமல் விழித்துக் கொண்டேயிருந்ததற்கு அடையாளமாகக் கண்கள் சிவந்து போய்க் கூனிக் குறுகித் திண்டிலே சாய்ந்திருந்தார். அருகில் சாருகேசி கவலையோடு நின்று கொண்டிருந்தாள். அந்தக் காட்சி மனத்தை உருக்கியது, சந்திரசூடனுக்கு! "குருநாதா!" என்று சொல்ல வந்த சந்திரசூடன் தன்னையும் மீறித் தயங்கினான். "மாமா" என்று அழைத்துக் கொண்டே பாணருக்கு அருகிலே சென்றான். அந்த எதிர்பாராத அழைப்பு, திண்டிலே சாய்ந்திருந்தவரை நட்டமாக எழுந்து நிமிரச் செய்தது!

"சந்திரசூடா" என்று சொல்லும் போதே குரலில் பாசம் சுரந்தது, நீலமேக யாழ்ப்பாணருக்கு!

அவ்வளவுதான். இரண்டே நாட்களில் பௌர்ணமி இரவில் சந்திரசூடனுக்கும், சாருகேசிக்கும் பாணர்களின் சம்பிரதாயப்படி வலம்புரி அம்மனின் சந்நிதியிலே திருமணம் நடந்தது. தரங்க



"வா அண்ணே, பிச்சைக்குக் கிளம்பலாம். கம்பைப் பிடிச்சுக்கோ......இன்று குருடாக இருக்க வேண்டியது உன் முறை!"

வல்லியின் திருமணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பே, சந்திரசூடனின் திருமணம் புனிதமான சூழ்நிலையில் அமைதியான பாணரின் சாந்தமான அரவணைப்பில், வலம்புரி அம்மனின் ஆசிக் கூடத்திலே நடைபெற்று முடிந்தது.

சந்திரசூடனும் சாருகேசியும் இல்லறம் நடத்தத் தொடங்கி, நீலமேக யாழ்ப்பாணரின் முதிர்ந்த கண்களுக்குக் குளுமை யூட்டினார்கள்! வயோதிகத்தின் தளர்ச்சியையும் மீறி, அன்பும் அமைதியும் தருகிற புதிய ஆற்றலிலே தெம்போடு வளைய வந்தார் நீலமேக யாழ்ப்பாணர்! ஆனால் அந்தத் தெம்பு அத்தனை அற்பாயுளாகப்போகும் என்று அவர் எதிர்பார்த்தாரா?

ஆமாம்; நீலமேக யாழ்ப்பாணரின் அமைதி நீண்ட நாள் நிற்க வில்லை. சாருகேசியும் சந்திரசூடனும் ஒரு மாத காலம் அமைதியான முறையில் 'கிழவரின் உள்ளம் களிக்கும் வகையில் இல்லறம் நடத்தி வரும் போதே தரங்கவல்லியின் திருமணம் அத்தனை அமைதிக்கும் ஒரு பெரிய வினையாக வந்து சூழ்ந்து விட்டது!

ஒரு மாத காலம் அரசத் திருமணத்துக்கு ஏற்பாடுகள் நடந்தால், எப்படியிருக்கும்! மணமன்றத்தில் அரசர்கள், மண்டலாதிபதிகள், அமைச்சர்கள், ஆமாத்தியர்கள், தளபதிகள் என்று ஒரே பிரதானிகளாகக் கூடியிருந்தால் அந்தக் காட்சியும், அதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்பாடுகளும் சொல்லவா வேண்டும்! தமிழ் நாட்டுக்கே உரிய நாகஸ்வர வாத்தியங்களும், மாதா

களின் மங்கள கீதங்களும், நாட்டியப் பெண்மணிகளின் சிலம்பொலியும் மண மன்றத்தைச் சுற்றி இன்ப ஒலியுலகை ஏழு ஸ்வரங்களிலே நிர்மாணித்தன!

பாண்டிய அரசகுமாரன் வழி வழியாக வந்த அரசப் பெருமிதத்தோடு, முகத்தில் இன்பப் புன்னகை தவழ்ந்தவனாக, அரச ஆடம்பரத்தோடு வந்து மன்றலில் அமர்ந்தான். திருமணச் சடங்கு ஆரம்பம் ஆயிற்று!

மணமன்றத்தில் யாழ் வாசிப்பதற்கு என்று நீலமேக யாழ்ப்பாணருக்கு அருகிலே பேரியாழைத் தாங்கியவனாகச் சந்திரசூடன் அமர்ந்திருக்கிறான். சிஷ்யன் என்ற உரிமையையும் கடந்து, நீலமேக யாழ்ப்பாணரின் சந்ததி என்ற குடும்ப பாத்தியதை வாய்ந்தவனாக இப்பொழுது சகல உரிமைகளோடும் அமர்ந்திருக்கிறான் அவன்! மங்கல நாண் ஆசிகளோடு வந்தது, மணத் தவிசை நோக்கி! தேவதைகளை ஆவாகனம் செய்கிற புனிதமான சடங்கு தொடங்கிற்று. சந்திரசூடன் யாழ் வாசிக்க ஆரம்பித்தான். அரச குடும்பத்தின் வாழ்வுக்காகவும், அந்தத் தீவின் மங்கலக் காவலுக்காகவும் தேவதைகளைப் பக்தியோடு வேண்டித் துதித்து வரவேற்புச் செய்கிற புனிதமான இசை யாழிலிருந்து எழுந்து ஒலிக்க ஆரம்பித்தது. கண் இமைகளை மூடி ஒரே பக்தி பரவசத்தோடு அந்த இசையை இரண்டு செவிகளிலும் வாங்கித் தேக்கிப் பேரின்ப லயத்தில் அருகிலே அமர்ந்திருக்கிறார் நீலமேக யாழ்ப்பாணர்! அவருடைய முகத்தில் ஓடிய பேரின்ப உணர்ச்சிகளைப் பார்த்தால், பேரியாழிலே தமது மாணவனும் மருமகனுமான தம்முடைய சந்ததியாளன் வாசித்த இசைக்கெல்லாம் மொழி பெயர்ப்பாக இருந்தது அந்தப் பெருமிதமான வயோதிகப் பாணரின் முகம்! அப்பொழுது பெண்களின் குரவை ஒலித்தது! மணப்பெண் மணத் தவிசை நோக்கிச் சேடியர்கள் புடைசூழ வந்தாள்! மானின் விழியைப் பெற்ற மயில் போலவும், மின்னலின் மேனியைப் பெற்ற சந்திரபிம்பம் போலவும், தாமரை முகத்தைத் தாங்கும் வஞ்சிக் கொடி போன்றும், அன்னநடை நடந்து வரும் ஓவியப் பாவையாக வந்தாள் தரங்கவல்லி!

இதுவரை யாழிலே மனத்தைச் செலுத்திக் கொண்டு தன்னையும் தனது சூழலையும் மறந்திருந்த சந்திரசூடன் இப்பொழுது அவனையும் மீறிய ஆவலிலே யாழிலிருந்த பார்வையைச் சற்று மேலே உயர்த்தி, மணப் பெண்ணைப் பார்த்தான்! நீலமேக யாழ்ப்பாணருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, மூடியிருந்த விழிகளைத் திறந்து தமது சீடனான மருமகனை ஒரு தரம் பார்த்தார். பாதையிலிருந்து இறங்க முயலும் ரதத்தைச் சருக்குப் போட்டுத் திருப்புவது போன்றிருந்தது அந்தப் பார்வை! ஆனால் இதற்குள் என்ன நேர்ந்தது? இதயத்தையும் மேனியையும் பரவசப் படுத்துகிற தெய்விகமான யாழின் இசை, அந்த இன்ப மயமான ஒலிப் போதை, எங்கிருந்துவருகிறது என்று காண விரும்பி, தன்னையும் மீறிய பரவச ஆவலிலே திரும்பியும் திரும்பாத நிலையிலே, விழிகளை ஏறச் செருகி இந்தப் பக்கமாக நோக்கினாள் தரங்கவல்லி! அவ்வளவுதான்! விழிகள் திரும்பிய மறுவினாடி, ஆழ்ந்த கட்டுப்பாட்டோடு பரம எச்சரிக்கையாகச் சென்று கொண்டிருந்த சந்திரசூடனின் விரல்கள் தடம் புரண்டன! ஒலிக் கோவையிலே, ஒழுங்குக் கிரமத்திலே, மேலே மேலே சென்று கொண்டிருந்த பவித்திரமான யாழின் ஒலி ஒரு கணம் நின்று மறுகியது! மறு கணம் நீலமேக யாழ்ப்பாணர் தமது கைகளை நெரித்தார். அவருடைய வயோதிக மேனியில் ஒரு மின்னலின் வேகம் துவண்டது. அப்படியே பாய்ந்து சந்திரசூடனிடமிருந்து பேரியாழை ஏந்தி எடுக்கலாம் என்று அந்த முதியவர் எழுந்திருப்பதற்குள், பேரியாழிலே 'மடமட' என்று அபஸ்வரக் கோவை ஒரே தொடர்ச்சியாக ஒலித்தது! "அபசாரம்! அபசாரம்!!" என்று பெரியவர் கூப்பாடு போடுவதற்குள், தேவதைகளின் காது தீப்படும்படியாக ரஸ முரண்பாடுகள் ஒலித்தன அந்தப் புனிதமான பேரியாழிலே!

மேகத்தில் ஓர் அசைவு உண்டானது போல் இருந்தது! குருக்கள் திகைத்தார்! சமயக் கணக்கர்கள் மருண்டார்கள்! மண மன்றத்தில் பேரிரைச்சல் உண்டாயிற்று. "அபசகுனம்! அபசகுனம்! நாட்டுக்கு ஏதோ தீங்கு வருவதற்கு அறிகுறி கேட்கிறது!" என்று கூக்குரலிட்டனர் நிமித்திகர்கள்! பதறிப்போய் வலம்புரித் தீவின் பேரரசன் எழுந்தான். "நிறுத்துங்கள்! மண விழாவை நிறுத்துங்கள்! அபசாரம் நேர்ந்து விட்டது! தெய்வ கோபம் ஆவேசத்தோடு கேட்கிறது! நிறுத்துங்கள்!" என்று கட்டளையிட்டான்.

"என்ன மூட நம்பிக்கை!" என்றார்கள் சிலர். "என்ன நேர்ந்தது!" என்று திகைத்தார்கள் பலர். பாண்டியப் பிரதானிகளின் கூட்டத்திலோ குழப்பமும் கோபமும் ஆவேசத்தோடு பொங்கின!

(தொடரும்)

கடல் கொண்ட கனவு

பதினைந்தாம் அத்தியாயம்

மாயப் புன்னகை!

திருமணக் குதூகலத்துக்கு மத்தியில் திடீரென்று எதிர்பாராத விதத்தில் "மண விழாவை நிறுத்துங்கள்!" என்று அறிவிப்பு எழுந்தால் எப்படியிருக்கும்! அதிலும் அப்படிப்பட்ட அறிவிப்பு மணப் பெண்ணின் தந்தையிடமிருந்தே வந்தது என்றால் எத்தனை பெரிய அதிர்ச்சியாக இருக்கும்!

"தெய்வ கோபம் ஆவேசத்தோடு கேட்கிறது, மண விழாவை நிறுத்துங்கள்!" என்று வலம்புரித் தீவின் பேரரசர் கூச்சலிட்டதும், நிமித்தகர்கள் அனைவரும் திடுக்கிட்டு இருக்கையிலிருந்து எழுந்தார்கள். குருக்கள் உடம்பெல்லாம் பதறினார்.

"யாழிலிருந்து எழுந்த முரண்பாடுகளையெல்லாம் கேட்டுக் கொண்டு சும்மா இருக்கிறீர்களா? நம்முடைய தீவுக்கு வர இருக்கும் கேட்டை நீங்கள் சிந்தித்துப்பார்க்கவில்லையா! அரச விசுவாசத்தையே இழந்து விட்டீர்களா, பிரதானிகளே?" என்று சிம்ம கர்ஜனை புரிந்தார் வலம்புரித் தீவின் அரசர்.

அவ்வளவுதான்; மறுகணம் திருமண மன்றம் ஒரே குழப்பத்திலே சுழன்றது. வீரர்களும் தளபதிகளும் ஏதேதோ கூக்குரல் இட்டுக் கொண்டு எழுந்தார்கள். பெண்கள் அனைவரும் அந்தப்புரத்துக்கு விரைந்தார்கள். வாத்தியங்களின் ஒலி நின்று, மக்களின் குழப்பப் பேரிரைச்சல் கேட்டது.

திருமண மன்றிலுக்கு எதிரேயிருந்த நீலமேக யாழ்ப்பாணரை ஒரு கையிலே தாங்கிக் கொண்டு, பேரியாழோடு அங்கிருந்து நகர்ந்தான் சந்திரசூடன்.

சித்தண்ணவாசல் மலையுச்சியிலே அமர்ந்து கொண்டு, மேலே கண்டவாறு கதையைச் சொல்லிக் கொண்டே வந்த சமணத் துறவி இந்த இடத்தில் சிறிது நிறுத்தி, சித்திராங்க பூபதியைப் பார்த்து ஆணித்தரமான ஒரு கேள்வியைப் போட்டார்.

"இளவரசே! இப்பொழுது உங்களுக்குச் சந்திரசூடனைப் பின்தொடர்ந்து செல்ல இஷ்டமா? அல்லது மணமன்றத்திலிருந்து அந்தப்புரத்தில் மறைந்து விட்ட மணப் பெண்ணான தரங்கவல்லி என்ன ஆனாள் என்று அறிந்து கொள்ள இஷ்டமா?" என்று கேட்டார் துறவி.

ஏழடிப் பட்டத்திலே நன்றாகச் சாய்ந்து கொண்டிருந்த சித்திராங்க பூபதி இப்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"இரண்டு பேரைப் பற்றியுமே தெரிந்து கொள்ள ஆசைதான். ஆனால்



எல்லாவற்றையும்விட அதிக ஆசை அந்தப் பெரியாரைப் பற்றித் தெரிந்து கொள்வதிலேதான். ஏனென்றால் என்னிடம் எங்கள் வலம்புரித் தீவின் மந்திர நாயகம் வேறொரு மாதிரியாக அதன் வரலாற்றைச் சொன்னார். நீங்கள் சொல்வது முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. அதனால் வேறு யாரையும் பின்தொடர்ந்து செல்வதைவிட அந்தப் பெரியாரைப் பின்தொடர்ந்து செல்லவே எனக்கு ஆவல்! தயவு செய்து இடைமறிக்காமல் கூறுங்கள்!'' என்றான் பூபதி. சமணத் துறவி பேச ஆரம்பித்தார். சமண சமயத்தை ஆழ்ந்து கற்றவரானதால் அந்தத் துறவி ஒவ்வொரு சம்பவத்தை வர்ணிக்கும் போதும் 'பூர்வ வினை' 'வினைப் பயன்' ஆகிய கருத்துக்களை அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே வரலாற்றைச் சொல்லி வந்தார். அவர் அப்படிச் சொன்ன தொடர்ச்சியின் சாரம் வருமாறு:

பெரியாரோடு நீலமேக யாழ்ப்பாணரை வீடு கொண்டு சேர்த்த சந்திரசூடனுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த வலம்புரிக்கடலிலே ஒரு மின்னோட்டம் ஏற்பட்டுக் கடலானது பிரளயத்தைப்போன்று கொந்தளிப்பது உண்டு. அந்த மாதிரிக் கொந்தளித்தது சந்திரசூடனுடைய உள்ளம்! முதியவரான பாணரின் உள்ளமோ? அது கொந்தளிக்க வில்லை. எவ்விதமான சலனமும் இல்லை அந்த உள்ளத்தில்! அவருடைய கண்களைக் கூர்ந்து பார்த்தால் கொந்தளிப்பை யெல்லாம் மீறி விட்ட மரணத்தின் அமைதி அந்த முதிர்ந்த உள்ளத்திலே ஐக்கியப்பட்டு நின்றது!


சாருகேசி பதறிக் கொண்டே பெரியவரின் அருகே வந்தாள். ''அப்பா!'' என்று அன்போடும், அன்பு கலந்த ஆற்றொணாத வேதனையோடும் அழைத்தாள். கண்களை அகலத் திறந்து பார்த்தார். மறுகணம் அம்முதியவர் இமைகளை நன்கு மூடிக் கொண்டு விட்டார். உதடுகள் பேசவில்லை.

''குருநாதா!'' என்றான் சந்திரசூடன். இமைகள் மூடியே யிருந்தன பாணருக்கு! உள்ளத்தின் குமுறலை யெல்லாம் திமிறிக் கொண்டு வெளிப்படுகிற பாசத்தோடு, ''மாமா!'' என்றான் மறுபடியும் சந்திரசூடன். விழிகளைத் திறக்கவில்லை பாணர்! விழிகள் திறக்கா விட்டாலும், சந்திரசூடனுடைய குரலின் அழைப்பு அவருடைய செவியிலே புகுந்தது என்பதற்கு அடையாளமாக, அந்த வயோதிகரின் பரந்த உதடுகளிலே ஒரு மாயமான மின்னல் ஒருகணம் வளைந்து நெளிந்தது! அந்த மின்னலின் பொருள் வார்த்தைகளுக்குள் அடங்காது! அதன் பொருள் சொல் கடந்த நூறு கோடி உணர்ச்சிகளின் சுழிப்பு. அந்த ஒரு கணச் சுழிப்பிலே நீலமேக யாழ்ப்பாணரின் ஆன்மா சுழித்துக் கொண்டு ஓடி மறைந்து விட்டது!

''அப்பா! அப்பா!'' என்று பதறினாள் சாருகேசி. ஓலமிட்டுக் கதறினாள் அந்தக் கள்ளங்கபடம் இல்லாத அபலை. பதில் இல்லை! ''மாமா!'' என்றான் சந்திரசூடன். ''குருநாதா!'' என்று உரக்கக் கூப்பிட்டான். பயன் இல்லை. நீலமேக யாழ்ப்பாணருக்கு மூச்சு ஒடுங்கி விட்டது!

அரச வைத்தியர்கள் வந்தார்கள். வலம்புரித் தீவின் ''வாகடச் சாலை'' என்ற மருந்துக் கூடத்திலிருந்து நாடி நிபுணர்கள் வந்தார்கள். உடற் கூற்று வண்ணத்திலே தேர்ந்த பெரியார்கள் ஓடோடியும் வந்து பாணரைப் பார்த்தார்கள். யார் வந்து, யார் பார்த்து என்ன பயன்? எண்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணர் என்ற அந்த உடற் கூண்டுக்குள்ளே சிறைப் பட்டிருந்த உயிர்ப் பறவை பறந்தோடி விட்டது! பறந்து விட்ட அந்தப் பறவையைப் பிடித்துக் கொண்டு வருவதற்கு எந்த நூலில், எந்த சாஸ்திரத்தில் யார் எழுதி வைத்திருக்கிறார்கள்?

''யாழ்ப்பாணருடைய மரணம் நரம்பு அதிர்ச்சியினால் ஏற்பட்ட பரிதாபமான விபத்து!'' என்று வைத்தியர்கள் நிர்ணயித்துச் சொன்னார்கள். ''இத்தனை வயோதிகப் பருவத்தில்



இம்மாதிரியான குழப்பங்களை அந்த இதயத்தினால் தாங்க முடியவில்லை!'' என்று பிரதானிகள் பேசிக் கொண்டார்கள். ஆனால் பேரியாழிலே அபஸ்வரம் விழுவதற்கு உண்மையான காரணம் என்ன என்பதும், அந்தக் காணம் முதியவரின் உள்ளத்தை என்ன பாடு படுத்தியது என்பதும் எவருடைய பேச்சிலும் அடிபடவில்லை. இது சந்திரசூடனுடைய மனசாட்சியை அறுத்துக் கொண்டே தொல்லைப்படுத்தியது. இத்தனை தொல்லைகளுக்கும், வேதனைகளுக்கும், குழப்பங்களுக்கும் மத்தியில் அந்தத் தீவிலுள்ள அத்தனை மனிதர்களையும் ஆச்சரியப்படுத்திய ஒரு விஷயம் நீலமேக யாழ்ப்பாணரின் முகத் தோற்றந்தான்! யாருக்குமே பிடிபடாத ஒரு பெரும் இரகசியமாக இருந்தது, பாணருடைய உதடுகளிலே நெளிந்த அந்தக்கடைசி மின்னலின் வளைவு! அதை அதிர்ச்சி என்று எப்படிச் சொல்லுவது? புன்னகை என்று அதைச் சொல்வதா? சந்திர சூடனுடைய பேதைமையைப் பற்றிய பரிகாசச் சாயல் என்று சொல்வதா? அல்லது எல்லையற்ற ஞானத்தின் பக்குவத்தினால் மரணத்தை வரவேற்கிற மந்தகாசம் என்பதா? எந்த வைத்தியருக்கும், வலம்புரித் தீவிலுள்ள எந்த மனிதருக்கும் அந்த மாயப் புன்



னகையின் பொருள் விளங்க வில்லை! யோசித்துப் பார்த்ததில் சந்திரசூடனுக் குங்கூட அதன் நுட்பம் புலனுகவில்லை.

நிமித்திகர்கள் சொன்னுர்கள்: "எண்பது ஆண்டுகள் நிரம்பிய கிழவர் இவர். இந்த எண்பது ஆண்டுகளிலும், கை விரல்களில் நகம் முளைத்த நாளிலிருந்து வலம்புரி அம்மனுக்கு யாழ் வாசித்து வருகிற சங்கீத யோகி இவர். வருங் காலத்தை உணர்கிற ஞான தரிசனம் மரணத் தறுவாயில் அவருடைய அகக் கண்ணுக்குத் துலங்கி யிருக்கிறது. வலம்புரித் தீவுக்குப் பெருங் கேடு வருவதைப் பேரியாழிலே கேட்ட அபஸ்வரம் அறிவித்தது அல்லவா? அந்தப் பெருங் கேட்டையே ஞான திருஷ்டியிலே கண்டிருக்கிருர் கிழவர். இந்த ஞான மின்னல் அதன் சாயல்தான்!"

நிமித்தகர்கள் இப்படிச் சொன்ன போது அந்த மின்னல் ஆயிரங்கோடி மின்னல்களாகச் சந்திர சூடனுடைய இதயத்திலே பாய்ந்தது! கிழவருடைய மரணத்துக்குக் காரணம் அபஸ்வரம் பேசிய தன்னுடைய விரல்கள் அல்லவா என்று நினைத்துப் பார்க்கும் போதே மின்னல்கள் அத்தனையும் இடிகளாக இடித்து அவனுடைய தலையிலே அதிர்வது போல் இருந்தது சந்திரசூடனுக்கு!

சாருகேசியின் மனநிலையோ வேறு விதமாக இருந்தது. தன்னுடைய தந்தையைச் சந்திரசூடன் "மாமா" என்று அழைத்துக் கொண்டு அருகிலே சென்ற போதல்லவா, கிழவரின் முகத்தில் அந்தச் சாயல் துவண்டது. சாருகேசி நினைத்தாள்: தன் தந்தையின் அந்த உணர்ச்சிச் சுழலுக்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்க முடியும்; அந்தக் காரணம் தனக்கு மட்டுமே தெரியும் என்று அவள் எண்ணினுள். எனவே, அந்தக் காரணத்தை அவள் யாரிடமும் வெளியிட வில்லை. எத்தனையோ பேர் அவளிடம் வந்து அநுதாப வார்த்தைகள் சொன்னுர்கள். யாழிலே ஒலித்த அபஸ்வரந்தான் கிழவரின் செவிகளையும் உள்ளத்தையுமே தீயாக எரித்து விட்டன என்று கலைஞர்கள் கூறினுர்கள். அரச விசுவாசமுள்ள வயோதிகராயிருந்ததால், வலம்புரித் தீவுக்குக் கேடு வரப் போகிறதே என்று எண்ணியதும் அந்த அதிர்ச்சியிலே கிழவரின் உயிர் பிரிந்து விட்டது என்று அரசப் பிரதானிகள் பேசினுர்கள்.

இந்த வார்த்தைகளை யெல்லாம் சாருகேசி மௌனமாகக் கேட்டுக் கண்ணீர் வடித்தாள். அவள் வடித்த கண்ணீருக்கு அப்பால், கண்ணீரையும் கடந்த ஓர் இரகசியம் அவளுடைய உடம்பிலே ஒரு சிசுவாக வளர்ந்து வந்தது! காரணம் சாருகேசி அப்பொழுது கர்ப்பவதி!

பதினுரும் அத்தியாயம்

ஒற்றன் வந்தான்!

சமணத் துறவி சொன்ன கதையை இதுவரையில் மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்த சித்திராங்க பூபதி, சாருகேசியின் தாய்மை நிலையைப் பற்றிய இடம் வந்ததும், "என்ன பரிதாபம்!" என்று சொல்லிக் கொண்டே கண் கலங்கினுன்.

"என்ன இளவரசே! அதற்குள் உருகிப் போகிறீர்கள்! கதையே இனி மேல் அல்லவா இருக்கிறது!" என்றுர் துறவி சிரித்துக் கொண்டே!

"இதைவிடப் பெரிய அநியாயம் இன்னும் இருக்கிறதா?" என்று கேட்டான் சித்திராங்கன்.

"நியாயம் அநியாயம் என்றெல்லாம் பேசாதீர்கள்! அது பெரிய வார்த்தை. உலகில் நடக்கிற எந்த அநியாயத்தை ஆராய்ந்து பார்த்தாலும் அதற்கு ஒரு நியாயம் புலப்படும்!" என்று குறும்புத்தனமாகச் சொல்லிக் கொண்டே பூபதியின் கோபத்தை அதிகப்படுத்தினுர் துறவி. அவருடைய குறும்பின் காரணம் என்ன என்று தெரியாத முறையில், சித்திராங்க பூபதி ஆவேசத்தோடு கேட்டான்: "உங்களைப் போன்ற துறவிகள்கூட இப்படிப் பேச ஆரம்பித்து விட்டால், பிறகு இந்த உலகில் நியாயம் அநியாயம் என்று எடுத்துச் சொல்வதற்கே ஆள் இல்லாமல் போய் விடுமே! இதெல்லாம் என்ன அர்த்தம் துறவிகளே!"

இவ்வாறு சித்திராங்க பூபதி கேட்டதும், துறவிக்கு முகத்திலே திருப்தியின் அறிகுறி தோன்றியது.

"இளவரசே! கோபப்படுங்கள். நன்ருகக் கோபப்படுங்கள். நீங்கள் சந்திரசூடனுக்காக அநுதாபப்பட்டு விடக் கூடாதே என்றுதான் கவலைப்பட்டேன். ஏனென்ருல் உங்களைப் போல அவனுக்கும் பேரியாழிலே பிடிப்பு உண்டல்லவா! அதனுல்தான் பயந்தேன். இனி

G-Santhanam



ரு ரேடியோ இருப்பதால் உங்கள் ட்டில் குதூகலம் நிலவுகிறது !

ரேடியோ மூலம் வரும் சங்கீதத்தை ரஸிப்பதால் உங்களுக்கு பொழுது போவதே தெரிவதில்லை. ஒரு சிறு விசையைத் திருப்புவதால், பலவித புது நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு ஆனந்திக்க முடிகிறது.

மேலும் ஞாபகமிருக்கட்டும்—நீங்கள் மின்சார சக்தி யில்லாத இடத்திலிருந்தாலும், பாட்டரி சக்தியால் இயங்கும் ரேடியோ மூலம் நீங்கள் அதே ஆனந்தத்தை அடையலாம்.

ன்றே உங்கள் ரேடியோ வியா ாரியிடம் இதைப்பற்றி களுங்கள்

"NINE LIVES"
TRADE-MARK

EVEREADY
TRADE-MARK

'எவரெடி' ரேடியோ பாட்டரிகள்

நாஷனல் கார்பன் தயாரிப்புகள்

NCM 88

பாரதி வாக்கு

தமிழா! தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு மேல் நாட்டு சாஸ்திரங்களை யெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயன் அடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே!

மேல் பயமில்லை. ஆனால் ஒன்று. கதை முழுவதையும் சொன்ன பிறகு, எந்த அநியாயமான காரியத்துக்கும் நியாயமான காரணங்களைச் சொல்லிச் சமாதானம் தேடக் கூடாது! அந்த உறுதி மட்டும் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்! ஏனென்றால் சந்திர சூடன் செய்த காரியம் அத்தனை பிசகானது!'' என்றார் சமணத் துறவி.

''அப்படியா!'' என்று வியப்போடு கேட்டான் பூபதி. துறவி சொன்னார்:

''இளவரசே! எந்தப் பொருளிடத்திலும் அளவுக்கு மீறி ஆசை வைத்தால் அது விபரீதத்திலேதான் முடியும். எத்தனை பெரிய பேரியாழாக இருந்தாலும் சரி. ஆசை என்று ஒன்று ஏற்பட்டு விட்டால் தொலைந்தது காரியம். ஆசைதான் எல்லாவற்றிற்கும் வித்து என்பது சமண சித்தாந்தம். அந்தச் சித்தாந்தத்துக்கு உதாரணமாக நடந்து கொண்டான் சந்திரசூடன்.

நீலமேக யாழ்ப்பாணர் இந்த உலகிலிருந்து மறைந்த மறுவருஷம் சாருகேசிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தந்தையின் சாயலும் தாயின் சாயலும் ஒன்றுகூடி உருவெடுத்திருந்ததாக எல்லாரும் ஒருமுகமாக அபிப்பிராயப்பட்டார்கள். என்றாலும் அந்தக் குழந்தையின் முகத் தோற்றத்தில் வேறு யாருக்கும் பிடிபடாத ஓர் இரகசியம் அதன் பெற்றோர்களுக்கு மட்டும், சந்திரசூடனுக்கும் சாருகேசிக்கும் இருவருக்கும் மட்டும், நன்றாகத் தெரிந்தது! பசலை முகத்திலே தோன்றுகிற விவரிக்க முடியாத பல பளிங்குச் சாயல்களுக்கு மத்தியிலே அந்தப் பெ... குழந்தை ''தாத்தாத்தா'' எ... உதடுகளைப் பொக்கையாக வைத்... கொண்டு சில சமயங்களிலே ஒரு மா... சிரிப்பு சிரிக்கும். அந்தச் சிரிப்பிலே ... மின்னல் துவளும். அந்த மின்ன... கூர்ந்து பார்த்தால் அது, ஒரு வரு... துக்கு முன்னால் நீலமேக யாழ்ப்பா... ரின் முகத்திலே கடைசி முறைய... நெளிந்ததே அதே மின்னல்! அ... மின்னலைச் சாருகேசி பல முறை கவ... தாள். வெளியே காட்டிக் கொள்... வில்லை. உணர்ச்சிகளை அடக்கிக் கொ... டாள். ஆனால் சந்திர சூடனோ? அவ... அப்படி யிருக்க முடியவில்லை.

நீலமேக யாழ்ப்பாணர் மறை... தினத்திலிருந்து சந்திரசூடன் இரவு ... யாக உறங்குவதில்லை. படுத்திருக்... போதே திடீரென்று பாணரின் முக... அவருடைய அந்த மின்னலின் சா... —பாணர் என்ற நீலமேகத்தி... துவண்ட அந்த மின்னலின் சாயல்— உள்ளத்தை என்னவோ செய்யு... தன்னுடைய தவறுகளை யெல்லா... நோக்கி ஓர் அனற் சிரிப்புச் சிரிப்ப... போலச் சந்திரசூடனுடைய உள்ளத்தி... நெருப்பைக் கொட்டும் அது! அப்படி... எழுந்து கடற்கரையோரமாக நடந்... சென்று, விடிந்த பிறகுதான் வீடு திரும்... வான் அவன். இப்படிப் பல இரவுக... நடந்திருக்கிறது. ஆனால் இ... பொழுதோ?....

ஒரு தந்தையின் அன்போடு த... குழந்தையைக் கையிலே எடுப்பா... சந்திரசூடன். மறு கணம் அதனுடை... சிரிப்பு அவனை என்னவோ செய்யும்... குழந்தையைச் சாருகேசியிட... கொடுத்து விட்டு அப்படியே இடிந்... போய்ப் பூமியிலே இருந்து விடுவா... சந்திரசூடன்! சில இரவுகளில் தூங்குகி... குழந்தை விழித்துக் கொண்டு ''குவா... குவா'' என்று அழும். அந்த அழுகை... ஒலி சந்திரசூடனுடைய செவிகளிலே... நீலமேக யாழ்ப்பாணரின் இதய ஒலி... போல் கேட்கும்! வேறு சில இரவுகளில்... கண்ணயர்ந்து கொண்டிருக்கும் குழந்... தையின் முகத்திலே ஏதோ கனவு உலகி... லிருந்து பின்னி வருகிற புன்முறுவலின்... இரேகை தெரியும். அதைப் பார்க்கும்... போது, சந்திரசூடனுடைய உள்ளத்தில்... மின்னல் மின்னும்; இடி இடிக்கும்!

நாளாக நாளாகச் சந்திரசூடனின் வேதனையும் சஞ்சலமும் அதிகரித்தன. நடு ஜாமத்தில் திடீரென்று குழந்தை அழும் போது பதறி விழிப்பான் சந்திரசூடன். பிறகு உறங்கவே மாட்டான்! இருளினூடே இடியொலி சிரிப்பது போல...

கேட்கும். அந்தச் சிரிப்பின் ஒலி சுவர்களிலே எதிரொலி செய்யும். அந்த எதிரொலி சற்று நேரத்துக்கெல்லாம் பெரிய குகைகளிலே கேட்கும் பேரொலியாகச் செவியைத் தாக்கும்! ஒரு சிரிப்பு பல சிரிப்பாகப் பெருகி எதிரொலி செய்து, ஏக காலத்தில் ஆயிரம் பேர் கசப்பையும், வெறுப்பையும், சிரிப்பாகச் சிரித்துக் கொட்டுவது போலக் கேட்கும். உலகமே தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல எண்ணிப் படுக்கையிலிருந்து எழுந்து செல்லும் சந்திரசூடன், இரண்டு நாள் மூன்று நாள் வீட்டின் பக்கமே வரமாட்டான்!

இப்படியாகச் சொல்லொணுத வேதனையிலே சிக்கித் தவித்துச் சந்திரசூடன் அவஸ்தை யனுபவித்துக் கொண்டிருந்த நாட்களிலே, ஓர் இரவில் அவன் கடலின் கரையோரமாக நடந்து சென்ற போது, பின்னுல் யாரோ தொடர்ந்து வருவதைக் கவனித்து விட்டான்! அப்படியே திரும்பியதும் அந்த மனிதன் ஓட ஆரம்பித்தான். சந்திரசூடனுக்கு ஒரு பெரும் ஆவேசமே வந்தது. பின் தொடர்ந்த மனிதன் ஓடிப் படர்வதற்குள் அவன் மேல் வேகமாகப் பாய்ந்து பிடித்தான் சந்திரசூடன்.

"உண்மையைச் சொல். முதன் முதலாக நீ இன்றுதான் என்னைப் பின் தொடர்கிருயா?"

இவ்வாறு கேட்டான் சந்திரசூடன். அவனுடைய பிடி உடும்புப் பிடியாக இருந்தது, பிடிபட்ட மனிதனுக்கு!

"இல்லை! கடந்த ஒரு மாதமாகவே நான் உங்களைப் பின் தொடர்கிறேன்!" என்று திருத்தமான மொழிகளிலே திருத்தமாகப் பேசினுன் அந்த மனிதன். சந்திரசூடன் ஒருகணம் நிதானித்தான். பிறகு கேட்டான்: "தம்பீ! உண்மையைச் சொல்லி விடு. நீ செந்தமிழ் நாட்டிலிருந்துதானே வருகிருய்? பல்லவ இலச்சினையாகிய நந்தியின் பேரில் ஆணையாகக் கேட்கிறேன். உண்மையைச் சொல். நீ ராஜசிம்ம மகாராஜனுல் அனுப்பப்பட்ட ஒற்றன்தானே?"

"ஆமாம். ஆனுல் விபரீத நோக்கம் ஏதும் இல்லை! தமிழ் நாட்டிலிருந்து தாங்கள் இங்கே வந்து இத்தனை காலம் ஆகியும்—"

"அதெல்லாம் சரி. விபரீதமான நோக்கம் ஏதும் இல்லை யென்ருல் ஏன் ஒரு மாதமாகியும் என்னை வந்து பார்க்கவில்லை? ஏன் ஒற்றனுகவே என்னைப் பின் தொடருகிருய்?"

"மந்திரி குமாரா! மன்னிக்க வேண்டும். தாங்கள் இங்கு வந்து சேர்ந்த பிறகு ஏற்பட்டுள்ள மாறுதல்களினுல் தங்களுடைய மன நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியதல்லவா எனதுமுதற்கடமை. தங்கள் நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல் நான் தங்களை வந்து காண்பது எப்படி?" என்ருன் பல்லவ ஒற்றன்.

"தம்பீ! நீ சொன்னது சரியான வார்த்தை. ஒற்றன் என்ற முறையில் பல்லவ குலத்தின் திறமைக்கு ஏற்ற முறையிலேதான் நடந்து கொண்டிருக்கிருய். அது பற்றி மகிழ்ச்சிதான். இந்த ஒரு மாதத்தில் நீ என் மன நிலையை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிருய்? அதைச் சொல், பார்க்கலாம்!" என்று கேட்டான் சந்திரசூடன் ஒற்றனைப் பார்த்து.

"சந்திரசூடரே! தாங்கள் அடிக்கடி இரவு நேரங்களில் இப்படித் தனியாக



நடந்து செல்வதைக் காண்கிறேன். தங்களுடைய நடையிலே தயக்கமும் சொல்லொணுத வேதனையின் அறிகுறியும் தெரிகின்றன. இந்த ஒரு மாதமும் நானும் பின் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறேன். ஒரு நாளாவது தாங்கள் என்னைக் கண்டு கொள்ள முடியவில்லை. அத்தனை தூரம் தங்கள் கவனம் அனைத்தும் அந்த வேதனையிலே சிக்கி யிருந்திருக்கிறது!" என்ருன் பல்லவ ஒற்றன்.

"அப்படியானுல் இன்று?..." என்று பளிச்செனக் கேட்டான் சந்திரசூடன்.

"இன்று வேதனைக்கு முடிவு கண்டு விட்டீர்கள். அதனுல்தான் என்னையும் கண்டு பிடித்து விட்டீர்கள்!" என்ருன் ஒற்றன். அவனுடைய வார்த்தைகளைப் பாராட்டு கலந்த மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டு வந்த சந்திரசூடன்

பல்லவ ஒற்றனின் முதுகிலே தட்டிய வண்ணம் கேட்டான் :

" தம்பீ ! நீ என்ன நினைக்கிறாய் ? இப்பொழுது என்னுடைய மன நிலை என்ன தெரியுமா ?"

" ஐயா ! நான் கூசாமல் பதில் சொல்லலாம் அல்லவா ?"

" தாராளமாகச் சொல். தயங்க வேண்டாம் " என்றான் சந்திரசூடன்.

" சந்திரசூடரே ! தங்களுடைய பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு நாளை மறுநாள் இதே நேரத்தில் இதே இடத்தில் உங்களை வந்து சந்திக்கிறேன். சரிதானா ?"

இவ்வாறு ஒற்றன் கேட்டதும் சந்திரசூடன் அப்படியே நடையை நிறுத்தித் திகைத்து நின்று விட்டான்.

" தம்பீ ! ஒன்று கேட்கிறேன், தெளிவாகச் சொல். ராஜசிம்ம மகாராஜா என்னிடம் கோபமாக இல்லையே ?"

இந்தக் கேள்விக்கு ஒற்றன் பளீரென்று பதில் சொன்னான்.

" என்ன கேள்வி இது ! ராஜசிம்மருடைய உள்ளத்தில் மறந்துங்கூடத் தங்களிடம் கோபம் உண்டாகுமா ? தங்களையும் பேரியாழையும் எத்தனை ஆவலோடு அவர் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார் தெரியுமா !"

" அப்படியா ? இத்தனை காலமாகியும் யாழினிடத்தில் அவருக்கு இன்னும் அத்தனை ஆவல் நீடித்திருக்கிறதா ?" என்று கேட்டான் சந்திரசூடன்.

" ஆவலா ? அந்த ஆவல் நாளுக்கு நாள் அதிகரித்துத்தான் வருகிறது. மகேந்திரவர்மருடைய இசைக் கல்வெட்டுக்களிலே காணப்படுகிற ராக லக்ஷணங்களுக்குப் பேரியாழிலே ஆதாரம் கிடைக்கும் என்று சமீபத்தில் ஓர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார். வடமொழிப் புலவர்களும் தமிழ்ப் புலவர்களும் பேரியாழைப் பற்றிய இந்த ஆசையைத் தினந்தோறும் அதிகப்படுத்தி வருகிறார்கள் !" என்றான் பல்லவ ஒற்றன்.

"அப்படியானால் என்னை விடப் பேரியாழுக்குத்தான் ராஜசிம்மன் சபையில் நல்ல வரவேற்புக் கிடைக்கும்! அப்படித்தானே?" என்றான் சந்திரசூடன். ஒற்றன் சிரித்தான்.

"தம்பி! நான் ஒன்று கேட்கிறேன். நன்றாக யோசித்துத் தைரியமாகப் பதில் சொல். இப்பொழுது பேரியாழ் இல்லாமல் நான் மட்டும் தமிழ் நாட்டுக்கு வந்தால் எனக்கு வெகுமதி கிடைக்குமா ? அல்லது தண்டனை கிடைக்குமா ?"

இப்படிக் கேட்டுக்கொண்டே கடலின் பாறைகளுக்கு வந்து விட்டான் சந்திரசூடன். ஒற்றனும் அவனோடு நடந்து வந்து விட்டான்.

வலம்புரித்தீவின் அணிகலனாகவும், தீப ஜோதியாகவும் விளங்குகிற கலங்கரை விளக்கம் கடலுக்குள்ளே கற்றை கற்றையாக ஒளிக்கதிர்களை வீசி எறிந்து சுழன்று கொண்டிருந்தது. அதன் அடித்தளத்தில், கலங்கரை விளக்கத்தைச் சுற்றி எப்பொழுதும் வட்டமாக இருள் தானே கவிந்திருக்கும்; அந்த நிழலில் நடந்து சென்று சந்திரசூடனும் பல்லவ ஒற்றனும் பாறைகளிலே அமர்ந்து கொண்டார்கள். (தொடரும்)

இனிமையாகப் பேசு !

பாரதியாருக்கு ஹார்மோனியம் என்றால் பிடிக்காது. அத்துடன், "பேசும்போது கிளிபோல் பேசவேண்டும் ; கர்ணகடூரமாகப் பேசககூடாது; பேச்சே ஒரு சங்கீதம் போல் அமைய வேண்டும் " என்பார்.

ஒரு நாள் அவருடைய மனைவியும் குழந்தைகளும் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி இரைந்து கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தார்களாம். அப்போது பாரதியார் மெதுவாக உள்ளே போய் ஹாரமோனியத்தை எடுத்து, எல்லாக் கட்டைகளையும் அமுத்திக் கொண்டு சுருதி போட்டார். பலமான ஓசை உண்டாயிற்று. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பி, "ஏன் இப்படித் திடீரென்று ஹார்மோனியம் வாசிக்கக் கிளம்பி விட்டீர்கள் ?" என்று கேட்டார்கள்.

பாரதியார் சிரித்துக் கொண்டே, "உங்களுடைய சம்பாஷணை எனக்கு இப்படித்தான் இருந்தது. இனி இப்படி அபஸ்வரமாகப் பேசாதீர்கள் !" என்றாராம்.

பதினேழாம் அத்தியாயம்

அனல் கனிந்தது

கண்ட கன

“தரங்கவல்லியின் திருமணம் எதிர்பாராத விதத்தில் தடைப்பட்டு நின்று போய் விட்டது. செந்தமிழ் நாட்டிலிருந்து மணமகளுக்காகச் சீர்வரிசைகளோடு சீரும் சிறப்புமாகச் சென்ற குறுநில மன்னர்களுக்கும், அரசப் பெருமிதத்தோடு சென்ற பிரதானிகளுக்கும் ஏற்பட்டு விட்ட ஏமாற்றத்துக்கு ஓர் அளவே இல்லை'' என்று ஆரம்பித்தார் சமணத் துறவி.

''பெரியவரே! நானே உங்களிடம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். அத்தனை முன்னேற்பாடுகளுடன் வலம்புரித் தீவுக்குச் சென்றார்களே தமிழ் நாட்டுப் பிரதானிகள், அவர்களுடைய மன நிலை என்ன வாயிற்று என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன்!'' என்றான் சித்திராங்க பூபதி.

சித்தண்ண வாசல் மலையின் உச்சியிலே இருள் படர்ந்திருந்த மை வண்ணம் மாறி, நட்சத்திரங்களின் ஒளிசாந்தமான ஒரு வெளிச்சத்தை வானத்திலிருந்து வீசிக் கொண்டிருந்தது. அந்த மங்கலான பிரகாசத்தைக் கவனித்த சமணத் துறவி புன்முறுவல் செய்து கொண்டார். எப்படியும் வானத்தில் சூரியன் உதிக்கும்வரை அந்த ஏழடிப் பட்டத்தை விட்டு நகரும் நோக்கம் அவருக்கு இல்லை. சந்திரசூடனும் ஒற்றனும் வலம்புரித்தீவிலேயிருந்த கலங்கரை விளக்கத்தில் தங்களுடைய எதிர்காலத் திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் அல்லவா? அவர்களைச் சற்று அங்கேயே விட்டு விட்டுத் தரங்கவல்லியின் கல்யாணம் நின்றுபோன பிறகு நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார் துறவி.

பாண்டிய நாட்டில் அப்பொழுது பாண்டிய அரசு மீண்டும் தலைதூக்கி ஓங்கி வளர முனைந்திருந்ததால், கோச்சடையன் ரணதீரன் என்ற பாண்டியன் தனது ராஜ்ய எல்லையை விஸ்தரிப்பதற்குப் பல திட்டங்கள் வகுத்திருந்தான். வலம்புரி அரசகுமாரியை





மருமகளாக வரித்ததிலும், அவனுடைய அரசியற் பிரதானிகள் நுட்பமான பல அரசியற் காரணங்கள் இருந்ததாகப் பேசிக் கொண்டதில் எத்தனையோ உண்மையிருந்தது. அந்தத் திருமணத்துக்குத் தென் பாண்டி நாட்டு மண்டலாதிபதிகள் பலர் அத்தனை கோலாகலத்தோடு சென்றிருந்த

தில் பல நோக்
கங்கள் இருந்
தன. பாண்டிய
அரசனும் தன்
னுடைய குறு
நில மன்னர்களை
யெல்லாம் ஒரு
மித்து வரும்படி
ஏற்பாடு செய்து
அவர்கள் அனை
வரையும் அந்தத்
திருமண விழா
வுக்கு அழைத்
துச் சென்றதற்
குக் காரணமும்,
ராஜ்ய விஸ்த
ரிப்பு நோக்கந்
தான். பல்லவ
சாம்ராஜ்யத்
துக்கு எதிராகச்
சோழர்களையும்,
சேரர்களையும்,
தமிழ் நாட்டு
வேளிர்களையும்,
முத்தரையர்
களையும் ஒன்று
சேர்த்து ஓர்
ஐக்கியப் படை
திரட்ட வேண்
டும் என்றால்
அதற்கு மைய
மாக ஒரு தளம்
பாண்டியனுக்கு
அவசியமாக
இருந்தது. கட
லுக்கு அப்பால்
இருந்த வலம்
புரித் தீவு இந்த
நோக்கங்கள்
அனைத்துக்கும்
பொருத்தமான இடம் என்று தீர்
மானித்துத்தான், அந்தத் திருமண
உறவைப் பற்றி ஏதேதோ கனவுகள்
கண்டான் பாண்டிய மன்னன். அப்படி
யிருக்கும் போது இப்பொழுது எதிர்
பாராத விதத்தில் அந்தத் திருமண
விழாவை நிறுத்தும்படி வலம்புரித்
தீவின் அரசன் கட்டளையிட்டதும் அவ
னுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தைச்
சொல்லவும் வேண்டுமா?

திருமண விழா நிகழ்ச்சிகள் முறிந்து போய் அரை நாழிகை நேரத்துக் கெல்லாம், வலம்புரி அரச மாளிகையின் 'திருவோலக்கம்' என்ற அரச மண்டபத்தில் பாண்டிய மன்னனும் வலம்புரித் தீவின் பேரரசனும் சந்தித்தார்கள்.

"பாண்டியர் திலகமே! என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். இன்று

திருமண விழாவின் போது நடந்த சம்பவம் என் உள்ளத்தில் விவரிக்க முடியாத பல வேதனை உணர்ச்சிகளை உண்டாக்கி யிருக்கிறது. எனக்கு அறிவு தெரிந்தது முதல் இது வரை இம்மாதிரி தெய்வ கோபம் ஆவேசத்தோடு கேட்டதில்லை. எங்கள் குலத்துக்கும், இந்த நாட்டு மக்களுக்கும், இந்த வலம்புரித் தீவின் வம்ச பரம்பரைக்குமே ஜீவாதாரமான புனிதப் பொருள் அந்தப் பேரியாழ்தான். எங்களோடு நாங்கள் வழிபடுகிற தெய்வமாகிய வலம்புரியம்மன் நேருக்கு நேரே பேசுவது அந்தப் பேரியாழின் மூலமாகத்தான். அப்படிப்பட்ட புனிதமான யாழில் இன்று அபஸ்வரம் பேசிவிட்டது. இந்த மாசு எந்தக் கேட்டையோ அறிவுறுத்துகிறது. ஏதோ ஒரு பெரிய விபத்து இந்தத் தீவுக்கு வரப் போகிறது, நாங்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று எங்கள் குல தெய்வம் எங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறது. என் புத்தி குழம்பி விட்டது. சுப எண்ணங்களோடு ஆரம்பித்த இத்திருமணத் திருவிழாவை எங்கள் தேவதைகள் அங்கீகரிப்பதற்கு மறுத்து விட்டன. ஆகையினால்—''

''போதும்! வலம்புரி மன்னவரே! உமது பேச்சை இதற்கு மேல் கேட்க நான் விரும்ப வில்லை. அபஸ்வரம் விழுந்திருப்பது யாழிலில்லை. உம்முடைய உள்ளத்திலேதான். அபஸ்வரத்தினால் காது தீப்பட்டது உங்கள் தேவதைகளுக்கல்ல, உமது வார்த்தைகளைக் கேட்கும் எனக்கும் என்னோடு வந்திருக்கும் இந்த நூற்றுக்கணக்கான பிரதானிகளுக்குந்தான்!''

இப்படிச் சொன்ன போது பாண்டிய மன்னனுடைய கண்களிலிருந்து தீப் பொறி பறந்தது. இதைக் கவனித்ததும், வலம்புரி மன்னன் துணுக்குற்றான்.

''பாண்டிய மன்னா! கருணை கூர்ந்து சீற்றத்தைத் தணித்துக் கொண்டு என் பேச்சைக் கேளுங்கள். உங்களையோ உங்களுடைய பிரதானிகளையோ அவமானப் படுத்த வேண்டும் என்ற நோக்கம் எனக்கு அணுவளவும் இருந்ததில்லை. இருக்கப் போவதும் இல்லை. பாண்டிய மன்னன் இடை மறித்தான். மீசை துடித்தது. அவன் உதடுகள் படபடத்தன. சொன்னான்:

''வலம்புரி மன்னனே! உம்முடைய குலத்தோடு நாம் உறவு கொள்ள நினைத்ததை நீர் ஒரு பாக்கியமாகக் கருதுவீர் என்றே எதிர்பார்த்தேன். அப்படியிருக்க அதைத் தட்டிக் கழிப்பதற்கு இப்படி ஒரு மூடத்தனமான காரணத்தை வலிந்து தேடுகிறீர் என்பதைப் பார்க்கும் போது, எனக்கு வருத்தம் ஏற்படவில்லை. உம்முடைய அறியாமையை நோக்கி அனுதாபப்படுகிறேன். என்றாலும் ஒரே ஒரு விஷயம் மட்டும் என்னைத் துன்பப்படுத்துகிறது. பரம்பரை பரம்பரையாக நம்மோடு மண உறவு கொண்டுள்ள பழையாறை மன்னர்களை விட்டு விட்டு, உமது குலத்தில் பெண் வாங்க எண்ணி இத்தனை முன்னேற்பாடுகளோடு வந்து விட்டேனே என்று எண்ணும் போது, என்னுடைய அறியாமையை நோக்



கித்தான் நான் வேதனைப் படுகிறேன். வழி வழியாகப் பெருமையிலே வாழ்ந்து வந்துள்ள எங்கள் பாண்டிய குலத்துக்கு நீர் இப்படி ஒரு பெரிய அவமானத்தை விளைத்து விட்டது, மன்னிக்க முடியாத ஒரு பெருங் குற்றம்.''

இவ்வாறு கூறினன் மதுரை மன்னன். வலம்புரிப் பேரரசனுடைய உள்ளத்தில் இந்த வார்த்தைகள் சுருக்கென்று தைத்து விட்டன.

''கூடல் மாநகரின் தனிப் பெரும் வேந்தே! தயைசெய்து அப்படியெல்லாம் பேசாதீர்கள். எத்தனையோ பெரிய சிறப்பு என்னையும் எனது புதல்வியையும் நாடிக் கடல் கடந்து வந்தது. ஆனல் எங்களுக்குக் கொடுத்து வைக்க வில்லை. பாண்டியர்களோடு உறவு கொள்ளுவது என்றால் அது எத்தனை பெரும் பாக்கியம் என்பதை நான் நன்றாக உணர்வேன். எனது முன்னோர்கள் அனைவரும் தங்கள் குலத்தின் தொண்டர்கள். படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும் உங்கள் குலத்தின் பெருமையை எனது முன்னோர்கள் எத்தனையோ முறை எத்தனையோ விதத்தில் வர்ணித்துச் சொல்லக் கேட்டிருக்கிறேன். என்னைத் தவறாக எண்ணாதீர்கள். வால்மீகி மகாகவியின் ராமாயணத்தில் பாண்டிய வேந்தரது தலைநகரைப் பற்றிய வர்ணனையைப் படிக்கும் போதெல்லாம் எங்கள் குல முதல்வர்கள் உங்களுடைய நாட்டின் திக்கு நோக்கிக் கரங் கூப்பி வணங்குவார்கள். எனவே தங்கள் குலத்தினிடத்தில் எனக்குள்ள மதிப்பு என்னுடைய இரத்தத்திலே உள்ளது. அதைப் புரிந்து கொள்ளாமல் சீற்றம் கொண்டு பேசுவது என்னை வருத்துகிறது!'' என்றான் வலம்புரி அரசன்.

பாண்டிய மன்னனோடு இருந்த பிரதானிகள் வெகுண்டார்கள். தமிழ் நாட்டுக் குறுநில மன்னர்கள் போர்ப் படைகள் அணிவகுத்து நிற்பதுபோல் சீற்றத்தோடு எழுந்து நின்றார்கள். நிலைமையின் சிக்கலை மிக நன்றாகப் புரிந்து கொண்ட வலம்புரித் தீவின் நிமித்திகர் தலைவரான ஒரு வயோதிகர் பாண்டிய மன்னனுக்கு எதிரே வந்து நின்று பேசஆரம்பித்தார்.

'' தமிழ் மன்னனே! உங்கள் சீற்றம் நியாயத்தோடு கூடிய சீற்றம். உங்களுடைய உணர்ச்சிகள் அனைத்தும் இயல்பானவை. அவற்றை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன். ஆனாலும் ஒரு முக்கிய விஷயத்தைத் தங்களுக்கு நினைவூட்ட வேண்டியது எனது கடமை. இன்று காலை மண விழாவிலே கேட்ட தெய்வக் குரல் இந்த வலம்புரி அரச குலத்துக்கு மட்டுமில்லை, தங்கள் குல தின் நன்மைக்காகவுமே எழுந்த அறிவிப்பு. நம்முடைய சாதார அறிவுக்கும், நமது புறப்புலன்களுக்கு எட்டாத ஓர் எதிர்காலத்தை நமக்கு கண்டு சொல்லும் ஓர் பேரறிவின் குர அது. நீங்கள் எல்லாரும் தெய்வ உண விலே ஊன்றியவர்கள். அரசர்க் உரிய பரிமேதம் என்று சொல்லப்படு வேள்வியையும் அது போன்ற இன்னு பல யாகங்களையும் செய்து பல்யாகசா முதுகுடுமிப் பெருவழுதி என்று சிறப்பு பெயர் பெற்றவர் உங்களுடைய மு ன்னோர்! தெய்வமே மனித வடிவி வந்து அரசாண்ட நாடு உங்கள் நாடு கண்ணுக்குத் தெரிகிறதை நம்புவத குச் சாதாரண அறிவு போதும். கண் ணுக்குத் தெரியாததை உய்த்து உண வதற்குத்தான் பகுத்தறிவு வேண்டும் அத்தகைய பகுத்தறிவோடு கூடிய பெருங் குலத்தில், யாகமும் தெய்வ வேள்விகளும் செய்த பரம்பரையில் உதித்துள்ள நீங்கள் இந்த ஏழை நிமித்தி கனின் சொல்லைக் கேளுங்கள். தெய்வ கோபத்துக்கு மத்தியிலே இந்தத் திரு மணத்தை நடத்த வேண்டாம். இதை நிறுத்தி விடுவதே சரியான காரியம்!''

இதன் பிறகு பிரதானிகளின் மத்தியிலே ஏதேதோ சர்ச்சைகள் நிகழ்ந்தன. வலம்புரி அரசனுடைய பேச்சிலே பாண்டியப் பிரதானிகளுக்குக் கசப்பு ஏற்பட்டது. ஆனல் அதே சமயம் அவனுடைய வார்த்தைகளில் ஏமாற்றுகிற நோக்கமோ, விஷமத்தோடு கூடிய சூழ்ச்சியோ ஏதும் இருப்பதாகப்படவில்லை. பேரியாழில் அத்தகைய ஒரு தீவிரமான தெய்வ விசுவாசம் அவனுக்குஇருந்ததால், அப்படிப்பேசுகிறான் என்பது எல்லாருக்கும் தெரிந்தது. இதனல் தர்க்கத்துக்கு இடம் இல்லை. என்றாலும் பாண்டிய மன்னனின் மனத்தில் நெருப்பு அனல் விட்டு எரிந்தது.

திருமணம் நடக்க வேண்டிய தினத்தில், மணமகனும் அவனோடு வந்திருந்த அத்தனை பிரதானிகளும் தங்கள் நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

''திருமணம் நின்று போனதால், நமக்குள் நட்பே நின்று போய் விட்டதாக எண்ணக் கூடாது. எங்கள் வலம்புரித் தீவு பாண்டிய ராஜ்யத்தின் கருணைக்குப் பாத்திரமான ஒரு குறுநிலம். இங்கே எங்களுடைய விருந்தினர்களாகத் தங்கிப் போக வேண்டும்!'' என்று மன்றாடினன் வலம்புரி அரசன். ஆனல் யாருக்கும் அங்கே நிலை கொள்ளவில்லை.

சீர் வரிசைகளோடு, குதூகலமாக வந்த மரக்கலங்கள் சோகப் போர்வை

மகத்தான விலைக் குறைவு

மிக நவீனமான 1956-ம் வருஷ ஸ்பெஷல் மாடல்கள். மிக மிக நேர்த்தியான மெஷின் & டிசைன் ஒவ்வொன்றும் 3 வருஷங்கள் உத்திரவாதம்

இலவசம்: ஏதாவது மூன்று கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு கைக் கடிகாரமும், இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு அலாரம் டயம்பீஸும், ஒரு கடிகார ஆர்டருக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் இனாம்.




நெ. 1181 வாட்டர் புரூப் *10½ சைஸ்*

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	36/-
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	40/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	54/-
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	56/-
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	64/-




நெ. 1183 வளைவு வடிவம் *7¾ சைஸ்*

15 ஜுவல்ஸ் பிரைட் க்ரோம்	32/-
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	38/-
17 ஜுவல்ஸ் ரோ. கோ. (விவர்)	63/-



நெ. 1185 தட்டை வடிவம் *10½ சைஸ்*

5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	19/-
5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு C/S	21/-
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	28/-
17 ஜுவல்ஸ் க்ரோம் கேஸ்	37/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	42/-




நெ. 1186 லேடீஸ் *5½ சைஸ்*

15 ஜுவல்ஸ் பின் லிவர் R/G	45/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	48/-
17 ஜுவல்ஸ் ,, (20 மைக்ரோன்)	65/-
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	68/-



நெ. 1182 வாட்டர் புரூப் *8¾ சைஸ்*

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	40/-
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	44/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	54/-
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	58/-
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	68/-



நெ. 1184 டோனோ வடிவம் *7¾ சைஸ்*

15 ஜுவல்ஸ் பிரைட் க்ரோம்	34/-
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	40/-
17 ஜுவல்ஸ் ரோ. கோ. (விவர்)	65/-



பாக்கெட் கடிகாரம்

ஜுவல் உள்ளது 18/- — 15 ஜுவல்ஸ் 27/-

அலாரம் டைம்பீஸ்

3" டயல் அலாரம்	...	15/-
ஸ்மித் அலாரம் 4½" டயல்	...	18/-
உயர்ரக அலாரம் 5" டயல்	...	22/-
டபுள் பெல் 5" டயல்	...	18/-

PIONEER WATCH CO., POST BOX NO. 11428, CALCUTTA-6

போர்த்துக் கொண்டு ஒரே துக்கத்துடன் கடலிலே திரும்பி மிதந்தன. அந்தக் காட்சி பரிதாபமாக இருந்தது. பாண்டிய மன்னன் இரவெல்லாம் நித்திரையின்றிக் கழித்தவன் இப்பொழுது மரக்கலத்தின் மேல் தளத்துக்கு நடந்து வந்து பின்னால் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் வலம்புரித் தீவு ஒரு சிறு பொட்டுப் போல் தெரிந்தது. அந்தப் பொட்டின் மேல் வலம்புரித் தீவின் கலங்கரை விளக்கம் ஒரு சிறு குச்சியை நட்ட வைத்து நிறுத்தியது போல் தெரிந்தது. சூரியனுடைய பிரகாசத்துக்கு முன்னால் அந்தக் கலங்கரை விளக்கின் ஒளி எங்கே! இதைப் பார்த்ததும் பாண்டிய மன்னன் தனது தலைமை அமைச்சரை அழைத்தான்.

''பாரும் அதோ! சூரியனுக்கு முன்னால் அந்தக் கலங்கரை விளக்கைப் பாரும்!'' என்றான் பாண்டியன், அமைச்சரைப் பார்த்து! மன்னனின் கருத்தைப் புரிந்து கொண்ட அமைச்சர் மௌனமாகப் பெருமூச்சு விட்டார். பாண்டிய மன்னனும் பெருமூச்சு விட்டான். அந்த மூச்சில் ஆற்றொணாத கோபம் அனல் விட்டது. அந்த அனல் நெருப்பாகக் கனிவதற்கு ஒரு வருஷம் பிடித்தது. பாண்டியன் அன்று மரகலத்திலே நின்றவாறு சீற்றத்தோ வெளியிட்ட பெருமூச்சு, பெரும் பு லாகக் கிளம்பி வலம்புரித் தீவி சுழன்று வீசுவதற்கு ஓர் ஆண் ஆயிற்று! பேரியாழிலே கேட்ட அபஸ் வரம், பாண்டியனுடைய சீற்றமா எதிரொலித்து வலம்புரித் தீவிலே வந் பேரிடியாக விழுவதற்கு, ஆம், ஒ வருஷ காலம் ஆயிற்று! அந்த ஒ வருஷ காலமும் யாழ்ப்பாணருடைய வீட்டிலே சந்திரசூடனுடைய வாழ்வில் தினமும் அனற் பெருமூச்சும், பெரும் புயலும், பேரிடியுமாகத்தான் கழிந்தது. நீலமேக யாழ்ப்பாணரின் முகத்தில் தோன்றிய கடைசி மின்னல், அவருடைய வழித் தோன்றலான சாருகேசியின் வயிற்றிலே வளர்ந்து, அவள் பெற்றெடுத்த அந்தத் தங்கப் பதுமை போன்ற பெண் குழந்தையின் முகத்தில் புன்னகையாகத் தவழ்ந்து, சந்திரசூடனுடைய உள்ளத்திலே பெரும் நெருப்பாக வீசியது. அந்த வேளையிலேதான் கடற்கரையிலே ஒற்றனுடைய சந்திப்பு ஏற்பட்டு, சந்திரசூடன் அவனோடு நடந்து சென்று கலங்கரை விளக்கத்தின் அடியிலே மணற்பரப்பில் அமர்ந்தான்!

பதினெட்டாம் அத்தியாயம்
மரக்கல ஓசை!

''தம்பீ! நான் இந்தத் தீவை விட்டுப் புறப்படுவதற்குச் சித்தமாக இருக்கிறேன் என்பதை நீ தெரிந்து கொண்டதில் நான் வியப்படையவில்லை. ராஜசிம்ம மகாராஜனுடைய ஒற்றர்களின் சாமர்த்தியம் எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் மேலும் கேட்கிறேன், நான் யாழில்லாமல் வந்தால் நிச்சயம் தண்டனை கிடையாதா?''

''சந்திர சூடரே! யாழில்லாமல் நீங்கள் மட்டும் இங்கிருந்து புறப்பட வேண்டிய அவசியம் எப்படி நேர்ந்தது? தாங்கள் தனியாகப் புறப்படுவதற்கு என்ன அவசியம் வந்தது? தங்களையும் தங்களுடைய....''

இதற்குமேல் ஒற்றனைப் பேசவிடாமல் மறித்தான் சந்திரசூடன்:

''தம்பீ! இதுவரை நீ பேசிய விஷயங்கள் எல்லாம் சரி. ஏனென்றால், அவை யாவும் உன்னைப் போன்ற புத்திசாலிகளால் ஊகித்து அறியக்கூடியவை: ஆனால் இதற்கு மேற்பட்ட விஷயங்கள் அப்படியில்லை. அவை பிறரால் ஊகிக்க முடியாதவை. எனக்கே நிர்ணயித்து முடிவுகட்ட முடியாத நிலையில் இருந்தவை.. தம்பீ! நம்மைப் போன்ற அரசப் பணியாளர்களின் வாழ்வில் சில சமயங்களில் விபரீதமான பிணக்குகள் ஏற்படுவது இயல்பு. தேசம் முக்கியமா, குடும்பம் முக்கியமா, தாய் நாட்டின் நன்மை முக்கியமா, சொந்தக் கடமைகள் முக்கியமா, அரசனின் கட்டளையை நிறைவேற்றுவதா அல்லது குடும்ப பாரத்தைச் சுமப்பதா என்று இரண்டு சிந்தனைகள் ஒன்றோடொன்று முரண்பட்டு மோதுகிற சமயங்கள் நமது வாழ்வில் ஏற்படுவது இயல்பு. இந்தச் சமயங்களிலேதான் தியாகம் என்ற உயர்ந்த நோக்கம் மேலெழுந்து வெற்றி பெற வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் எனக்கு இப்பொழுது நேர்ந்திருக்கிறது!'' என்றான் சந்திரசூடன்.

''சந்திரசூடரே! உங்கள் வாழ்வில் ஏதோ ஒரு சம்பவம் உங்கள் உள்ளத்தைக் குழப்பியடிக்கிறது என்பதை நான் நன்றாக ஊகித்து உணர்கிறேன். சில இரவுகளில் உங்களுக்கு உறக்கம் இல்லாமல், வீட்டிலே இருப்புக் கொள்ளாமல் கொந்தளிக்கிற உள்ளத்தோடு நீங்கள் இந்தக் கடலின் மணற் பரப்பிலே படபடப்போடு நடந்து செல்வதைக் கண்டிருக்கிறேன். நீலமேக யாழ்ப்

ணரின் மரணம் உங்கள் மனத்தின்
ந்தத்தைக் கெடுத்து விட்டது என்று
நிகிறேன். அந்த முதியவரின் மரணத்
க்குக் காரணமாக அமைந்த யாழிசை
ன் முரண்பாடும், அதைத் தொடர்ந்து
ங்கவல்லியின் திருமணம் நின்று
பான விபரீதமும், அது காரணமாகப்
ண்டிய மன்னன் பழி வாங்கும் நோக்
நதோடு மரக்கலத்திலே திரும்பிச்
சன்றிருப்பதும் உங்கள் இதயத்தை
வதனைப் படுத்தவே செய்யும். அது
யல்புதான். என்றாலும் இரவு
நரங்களில் வீட்டில் இருப்பதற்குக்கூட
னம் ஒப்பாத நீங்கள் ஏன் அடிக்கடி
காந்தமாக இந்தக் கடலின் கரை
லே நடக்கிறீர்கள் என்பதை யோசித்து
பாசித்துப் பார்த்திருக்கிறேன். என்
டைய ஊகத்துக்கு அடைபடவில்லை
தன் காரணம்!'' என்றான் ஒற்றன்.
சந்திரசூடன் சொன்னான்: ''தம்பி!
ந்த உள்ளம் வலம்புரித் தீவின் புனித
ான பாணர் குடும்பத்துக்கு ஒரு
பரும் பாபத்தைச் செய்து விட்டது.
ந்தப் பாபத்திலிருந்து விடுபட
வண்டும் என்றால் இன்னொரு பாபத்
தச் செய்ய வேண்டியிருக்கிறது
ான்! இதற்கு அஞ்சி இந்த இரண்டா
து பாபத்தைச் செய்யாமல்

இங்கேயே தங்கி விடலாம் என்றால், என் குழந்தையின் முகத்திலே நெளிகிற அந்த மின்னற் சிரிப்பு என்னை நாளும் பொழுதும் அனலாகச் சுடுகிறது.''

இப்படிச் சொன்னபோது சந்திரசூடனின் விழிகள் கலங்கின.

''தம்பி! இந்தப் பெரும் சிக்கலான பிரச்னைக்குக் கடந்த பல தினங்களாக முடிவு காண முடியாமல் தவித்தேன். கடைசியில் இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். என்னுடைய அரசனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக இப்பொழுது ஒரு பெரிய பாபத்தைச் செய்யப் போகிறேன். என்றாலும் மனத்தில் ஒரு திருப்தி இருக்கிறது. அரசனின் கட்டளையை நிறைவேற்றுகிறோம் என்ற திருப்திதான் அது!''

இவ்வாறு சொன்னான் சந்திரசூடன். அவனுடைய உட்கருத்தைப் புரிந்து கொண்டு விட்ட ஒற்றன் கேட்டான்:

''சந்திரசூடரே! நான் நினைத்தேன், உங்களோடு தமிழ் நாட்டுக்குப் பேரியாழும் இரண்டு ஜீவன்களும் ஒன்றாக மரக்கலத்தில் வரப்போவதாக! ஆனால் நீங்கள் சொல்வதைப் பார்த்தால்—''

''தம்பி! என்னுடைய உள்ளம் ஒரு வகையாகத் தீர்மானத்துக்கு வந்திருக்கிறது. உன்னோடு இதற்குமேலே பேசி

ஞல் என் தீர்மானத்தைக் குழப்பி யடித்து விடுவாய் என்று பயப்படு கிறேன் '' என்றுன் சந்திரசூடன்.

ஒற்றன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். இப்பொழுது அவனுடைய உள்ளம் குழம்ப ஆரம்பித்தது.

''சந்திரசூடரே! உங்களுடைய உள்ளத்தின் வேதனையை அதிகப்படுத்த நான் விரும்பவில்லை. ஆகையினுல் நீங்கள் என்ன முடிவு செய்கிறீர்களோ அதைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்? நான் இந்தத் தீவுக்கு வந்து சேர உபயோகித்த சிறிய மரக்கலம் ஒன்று, நிலவுப் பாறைக்குச் சற்றுத் தூரத்தில் இரகசியமான ஒரு வட்டத்திலே கட்டப் பட்டு மிதந்து கொண்டிருக்கிறது. என்



ஞேடு சகாயத்துக்கு வந்த துணைவர்களும் என் தீர்மானத்துக்காகக் காத் திருக்கிறுர்கள். ஆகவே தங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அதன்படி நடக் கிறேன்!'' என்றுன் ஒற்றன்.

சந்திரசூடன் மணற் பரப்பிலிருந்து எழுந்தான். '' தம்பீ! என்ஞேடு இந்தக் கரையோரமாகவே நடந்து வா: நிலவுப் பாறைக்கு அப்பால் எங்கோ ஒரு வட்டம் என்று சொன்னுயே, அதை எனக்குக் காண்பித்து விடு!''

இப்படிச் சொல்லிக் கொண்டே நடந்தான் சந்திரசூடன். ஒற்றன் கேட்டான்: '' சந்திரசூடரே! நீங்கள் சொல்வது சரி. ஆனுல் இப்பொழுதே அந்த வட்டத்துக்குச் சென்றுல் என்ன பயன்? என்ஞேடு வந்துள்ள துணைவர்கள் எல்லாரும் ஏதேதோ வேடத்தி தனித் தனியாகப்பிரிந்து விடுதிகளிலு சத்திரங்களிலும், புறத் திண்ணைக லும் அல்லவா இருக்கிறுர்கள்? அவ களை யெல்லாம் ஒருமித்து அழைத்து கொண்டு வரவேண்டாமா நான்?''

'' என்ஞேடு நடந்து வா, தம்பீ முதலில் அந்த இரகசிய வட்டத்தையு நீ வந்து சேர்ந்திருக்கிற அந்த மர கலத்தையும் காட்டு. அதன் பிற என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுகிறேன்!'' என்றுன் சந்திரசூடன்

பல்லவ ஒற்றனும் சந்திரசூடனு கடலின் கரையோரமாக வந்து மே நடந்தார்கள். நிலவுப் பாறையின் எல்லைகளைத் தாண்டி நெடுந்தூர நடந்து சென்றதும், குகைகளும் சி சிறு பாறைகளுமாகப் படர்ந்திருந்த ஒ வட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள் இ வரும். அங்கே சற்றுத் தொலைவில் ஒ பாறையிலே இரும்பு முளைகளில் சங்கில யினுல் கட்டப்பட்டிருந்த ஒரு சிறு மர கலம் மிதந்து கொண்டிருந்தது.

'' வலம்புரித் தீவின் மரக்கலத்தை போலவே இருக்கிறதே இது! அந்நியா களுடையது என்று யாருமே கண்டு பிடிக்க முடியாத முறையிலல்லவா தோற்றம் அளிக்கிறது! பெரிய நிபுணன் தான் தம்பீ நீ! சரி; நாளை இரவு இதே நேரத்தில் இங்கே நீயும் உன்னுடைய துணைவர்களும் இங்கிருந்து புறப்படு வதற்குச் சித்தமாக இருங்கள்! நான் இந்த இடத்துக்கு வந்து விடுகிறேன்!'' என்றுன் சந்திரசூடன்.

'' பேரியாழ்?'' என்று கேட்டான் ஒற்றன், திகைப்போடு.

'' தம்பீ! என் கடமையை எனக்கு நீ நினைவுபடுத்துகிருயா! நன்று யிருக்கி றதே உன் பேச்சு! அதை யெல்லாம் பற்றிக் கவலைப்படாதே தம்பீ! நாளை இரவு இதே நேரத்தில் எப்படி எந்தக் கோலத்தில் எந்தத் துணைகளோடு வரு கிறேன் என்று காத்திருந்து பார்!''

இப்படிச் சொல்லிவிட்டுக் கை கூப்பி ஞன் சந்திரசூடன். ஒற்றனும் மிகுந்த பணிவோடு தங்கள் அரச மன்றத்துத் தலைமை மந்திரியின் குமாரனை சந்திரசூடனுக்கு மிக்க மரியாதை யோடு வணக்கம் செலுத்தினுன். அப்போது கடலின் அலைகளிலே ஏதோ '' கலகல '' என்று ஓர் இரைச்சல் கேட்டது. இருவரும் கூர்ந்து கேட் டார்கள். சந்திரசூடன் கடலின்பரப்பை விழிகளால் நன்ருக ஆராய்ந்து பார்த் தான். ஏதோஒரு சிறிய ஓடம் தொலைவி லிருந்து கரையோரமாக வந்து விட்டுப் பிறகு மீண்டும் கடலுக்குள்ளே செல் லுவது தெரிந்தது! (தொடரும்)

பத்தொன்பதாம் அத்தியாயம்

கடலில் மிதந்த காதல்!

சந்திரசூடன் ஒற்றனிடமிருந்து விடை பெறும் போது, கடலின் பரப்பிலே ஓடம் செல்வதைக் கண்டானல்லவா? அந்த ஓடம் கரையோரமாகச் சொன்னபடி ந்து, வலம்புரித் தீவின் எல்லை வரம்பு ள நன்ருகக் கணித்துப் பார்த்துக் காண்டு மீண்டும் கடலிலே திரும்பிச் சல்கிறது என்பதைச் சந்திரசூடன் ய்த்து அறிந்து விட்டான்.

''என்ன தம்பீ! இந்த ஓடம் உனக் த் திகைப்பைத் தருகிறதா? திகைக் தே! என்னுடைய தீர்மானத்தைத் ரிதப்படுத்தும்படி இருக்கிறது இந்தச் ம்பவம்! வலம்புரித் தீவிலிருந்து நான் றப்பட்டு விட்டால் தான் ராஜ ம்ம மகாராஜனுடைய கட்டளையை றைவேற்றிய வனுவேன்! இல்லை பன்ருல் அந்தக் கட்டளையை நிறை பற்றவே முடியாமல் நான் இங்கேயே பிர் விடவேண்டியது வரும்! அப்படி பல்லாம் நேராத முறையில், நாளை வ தினம் இங்கே வந்து விடுகிறேன். கவலையோ தயக்கமோ இல்லாமல் இங்கேயே எனக்காகக் காத்திரு. உன்னுடைய துணைவர்களும் ஆயத்தமாக இருக்கட்டும்!''

இவ்வாறு மீண்டும் உறுதி சொல்லிவிட்டு மின்னலின் வேகத்திலே மறைந்தான் சந்திரசூடன்.

அன்றும் மறுநாளும் அதற்கு மறு நாளும் எவ்வித விபரீதமும் இல்லாமல் கழிந்தன. ஆனால் இந்த இரண்டு நாட்களிலும் சாருகேசி தனது கணவனுடைய முகத்தில் ஒரு அசாதாரணமான தெளிவைக் கண்டு திகைத்தாள். கணவன் மன அமைதியோடு இருக்க வேண்டும் என்பதில் பூரணமான ஆசை உள்ளவள் தான் சாருகேசி. என்ருலும் தனது தந்தையின் மரணமும், அதற்குக் காரணமாக அமைந்த சம்பவமும் கணவனின் உள்ளத்தில் எத்தனை பெரிய புயலை எழுப்பி யிருந்தன என்பது சாருகேசிக்கு நன்ருகத் தெரியும். இரவு நேரங்களில் சந்திரசூடன் சஞ்சலத்திலே உழன்று வருவதும், மன அமைதியை நாடி அவன் வெளியே செல்வதும், அதற்குக் காரண



மாக அமைந்த உணர்ச்சிகளும் சாருகேசிக்குப் பரிபூரணமாகத் தெரியும். இந்த நிலையில் இப்பொழுது இரண்டு நாட்களாகச் சந்திர சூடனின் முகத்தில் ஒரு தெளிவு உண்டானது பற்றி அவள் திகைத்தாள். தெளிவின் காரணத்தை அவளால் ஊகிக்க முடியவில்லை. என்றாலும், தெளிவு ஏற்பட்டதில் ஒரு திருப்தி அடைய முயற்சி செய்தாள். ஆனால் பூரணமாகத் திருப்திப்பட்டுக் கொள்ள முடியவில்லை. இந்தத் தெளிவுக்குள்ளே ஏதோ ஒரு விபரீதம் இருப்பது போல அவளுடைய உள் மனத்தில் ஏதோ ஒன்று துடித்துக் கொண்டது! அந்த விபரீதம் ஏதாக இருக்கக் கூடும் என்று அந்த அபலையினால் கண்டு கொள்ள முடியவில்லை! இரண்டு இரவுகளும் அவள் நிம்மதியின்றிக் கழித்தாள்.

மூன்றும் நாள் இரவு. முந்திய இரவுகளின் களைப்பும், கண்களின் சோர்வுமாகச் சேர்ந்து சாருகேசி நன்றாகக் கண்ணயர்ந்து விட்டாள். அவளுடைய குழந்தை, கள்ளங் கபடம் இல்லாத அந்தப் பசலைப் பெண் குழந்தை, தன்னுடைய சிரிப்பு செய்து வரும் விபரீத மின்னல்களைப் பற்றி ஒன்றும் அறியாத பேதை நிலையில், கண்ணயர்ந்து உறங்கிக் கொண் டிருந்தது. அதன் முகத்திலே மட்டும் ஒரு கனவு உலகிலிருந்து வருகிற அதே பழைய புன்முறுவலின் இரேகை மின்னற் கீற்றைப் போலவளைந்துகொண்டிருந்தது!

நடு ஜாமத்தைக் கடந்து விட்டது இரவு! பயங்கரமான ஓர் அமைதி, பயமும் அமைதியும் ஒன்று சேர்ந்த ஒரு விசித்திரம், அந்தப் படுக்கை யறையிலே படர்ந்திருந்தது! சந்திரசூடன் எழுந்தான். தான் எழுந்திருப்பதனால் எவ்வித சத்தமும் ஏற்பட்டு விடாதபடி மெதுவாக மிகுந்த கவனத்தோடு எழுந்து வந்து கட்டிலுக்கு அருகே நின்று கொண்டான்!

சாருகேசி கண்ணயர்ந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் அந்தப் பசலைக் குழந்தை புன் முறுவல் நெளிந்த முகத்தோடு படுத் திருந்தது.

கண்கள் மூடி யிருந்தாலும், அ... னுடைய நெற்றியிலே ஏதேதே... சுழிப்புக்கள். வளைவு நெளிவுகள்...

சந்திர சூடன் மாறிமாறி... பார்த்தான். எந்தவிதமான வி... ரீத எண்ணங்களும் இல்லாமல் தன்னிடம் பரிபூரணமான ந... பிக்கை வைத்துள்ள தன... மனைவி! அவளுக்கு அருகே தன... உள்ளத்தில் புயலை எழுப்புகி... அந்த மின்னற் குழந்தை! சந்தி... சூடனுடைய இதயத்தில் கட... பொங்கி வந்தது.

ஆமாம்; அந்த இரவிலே... சந்திரசூடன் தனது மனைவி... யும், தன் குழந்தையையும் வல... புரித் தீவிலே விட்டுவிட்டுச் செ... தமிழ் நாட்டுக்குப் புறப்பட... தீர்மானித்துவிட்டான். அந்த... தீர்மானத்தை அசைக்கப் பார்... தது, அறையின் சூழ்நிலை!

சாருகேசியின் பளிங்கு முக... தைப் பார்த்த சந்திரசூடன் அ... படியே கட்டிலுக்கு அருகி... இருந்த ஒரு சாய்மானத்தி... மனங் கலங்கிப் போய் உ... கார்ந்தான். ''எத்தனை பரிசுத்... மான பெண் இந்தச் சாருகேசி... எத்தனை கள்ளங் கபடம் இ... லாத குணவதி! இவளை இங்... நிர்க்கதியாக விட்டு விட்டு ஓ... கிறேமா!'' — இப்படி ஒ... நினைப்பு மனத்தில் உண்டா... தும், சந்திரசூடனுடைய இதய... தில் யாரோ உளி கொண்... செதுக்குவது போல இருந்தது... மறு கணம் அந்தக் குழந்தையி... முகத்தைப்பார்த்தான்! உடனே... ஒரு ஆவேசம்! அந்தக் குழ... தையின் முகத்திலே எல்... கடந்த ஆத்திரத்தோடு மின்ன... வரும் ஒரு பயங்கரமான மு... வல்! நீலமேக யாழ்ப்பாண... ருடைய சிரிப்பே கேட்டது ச... திரசூடனுக்கு! அடுத்த வி... சாய்மானத்தி லிருந்து சந்... சூடன் எழுந்தான்!

அறையின் வாசலுக்கு அரு... வந்தான் சந்திரசூடன்! சா... கேசியின் நினைவு மீண்டும் ... ளத்தை வேதனைப் படுத்திய... திரும்பிப் பார்த்தான். ப... நிம்மதியோடு, அவ நம்... கையோ சூழ்ச்சியோ ஏதும் ... [illegible] ... பிரதிபலித்து, உள்ளம் அ... யிலே உறக்கமாக ஒன்...

ாண்டு நின்றது! அதைப் பார்த்ததும் திரசூடனுக்கு மேலே அடியெடுத்து வக்க முடியவில்லை.

தயங்கி நின்ற சந்திரசூடன் அடுத்த னம் குழந்தையை ஏறிட்டுப் பார்த் ன்! நீலமேக யாழ்ப்பாணரின் புன் றுவல் தோன்றி அப்படியே அவனை ட்டி யடித்தது!

அறையை விட்டு வெளியே வந்த திரசூடன் பதுங்கிப் பதுங்கித் திருட ப் போல-ஏன்-திருடனாகவே நடந்து ன்று யாழ்க் கூடத்துக்கு வந்தான். ரியாழ் மரச் சட்டத்திலே நட்ட கச் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. தை நோக்கி நடந்தான். மெதுவாக ச் சட்டத்திலிருந்து அந்த யாழை த்தான், கையும் உடலும் பதறின. ழை அங்கேயே வைத்து விட்டு மீண் அறைக்கு வந்தான். எட்டிப் ர்த்தான். அதே பழைய நிம்மதி ாடு கண்களை மூடி உறங்கிக் கொண் ந்தாள் சாருகேசி! சந்திரசூடனுக்கு ண்டும் தயக்கம் உண்டாயிற்று. அந் தயக்கத்திலிருந்து விடுபட எண் யவனைப் போல, குழந்தையின் கத்தைப் பார்த்தான் சந்திரசூடன். வேசம் பொங்கியது உள்ளத்தில். டக்' என்று முகத்தைத் திருப்பிக் காண்டு 'விறு விறு' என்று யாழை ாக்கி நடந்து வந் ன். ஒரு மின்னல் ன்னி மறைகிற நேரத் க்குள் யாழோடு வேக க வெளியே வந்தான் திரசூடன்.

வலம்புரித் தீவிலே நீலமேக யாழ்ப் பாணரின் வீட்டுக்குப் பின்னால் தென் னஞ்சோலை. அந்தச் சோலை கடலின் கரை வரை ஒரே நேராக அடர்த்தி யாகச் செல்கிறது. யாழேந்திய கைய னாக, மரங்களிலே மறைந்து மறைந்து, வேகமாக நடந்தான் சந்திரசூடன்.


நிலவுப் பாறைக்குத் தொலை தூரத் தில், ஒற்றனும் அவனுடைய துணைவர் களும் நின்றார்கள். அழகான நீண்ட படகு கரையிலிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்றது.

''வணக்கம் மந்திரி குமாரரே!'' என்று சந்திரசூடனை வரவேற்றான் ஒற்றன். அவனுடைய குரல் மெது வாகத்தான் வந்தது. ஆனாலும் அந்த ஓசை கூடச் சந்திரசூடனுடைய செவி யில் பன்மடங்கு பெரிதாகக் கேட்டது.

''இரையாதே தம்பீ!'' என்றான். மறு கணம் படகிலே நின்ற துணைவர்களைப் பார்த்துச் சந்திரசூடன் சொல்லுவான்: ''யாரும் பேசாதீர்கள்! இப்படியே மௌனமாகப் புறப்படுங்கள்!''

''ஐயா! புறப்படுங்கள் என்று எங்களை மட்டும் சொல்லுகிறீர்களே! நீங்கள் எங்களோடு வந்து விடுகி றீர்கள் அல் லவா? தயவு





சென்னை வக்கீல் ஸ்ரீ டி. எஸ். நாகசாமி அய்யர் புத்திரனும் இந்தியன் ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் கம்பெனியின் உதவியாளருமான சிரஞ்சீவி டி.என். ரகுநாதனுக்கும், சென்னை "சிவில் ஏவியேஷன்" சீனியர் தொழில் நுணுக்க அதிகாரி ஸ்ரீ ராமச்சந்திரனின் புதல்வி சௌ. உஷாவுக்கும் சமீபத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !

செய்து பொறுமையோடு விடை கூறுங்கள் !'' என்று மிக்க பணிவோடு கேட்டான் பல்லவ ஒற்றன்.

''நான் வராமல் எப்படி? யாழ்மட்டும் தமிழ் நாட்டுக்குச் சென்று என்ன பயன்? அதை வாசிக்கக்கூடிய கையும் சேர்ந்தல்லவா போகவேண்டியிருக்கிறது. என்ன செய்ய!'' என்றான் சந்திரசூடன்.

''நீங்கள் மட்டுந்தான் புறப்பட்டீர்களா ?'' என்று ஆவலும் கவலையும் நிரம்பியவனாகக் கேட்டான் ஒற்றன்.

''தம்பீ! ஏற்கனவே குழம்பியிருக்கிற என்னைக் கேள்வி கேட்டு ஆத்திரப்படுத்தாதே. படகைச் செலுத்து. இதோ நானும் என்னுடைய யாழும் படகில் ஏறி அமர்கிறோம்!'' என்று சொல்லிக் கொண்டே யாழோடு படகை நோக்கி நடந்து அதில் ஏறி இருந்து கொண்டான் சந்திரசூடன்.

கேள்வி கேட்க முடியாத நிலையில் மனத்தில் எழுகிற எண்ணங்களையும் சந்தேகங்களையும் விழிகளிலே தேக்கி ஒரே குழப்பத்தோடு சந்திரசூடனையே கூர்ந்து பார்த்தான் ஒற்றன்.

'' தம்பீ ! நீ ராஜசிம்ம மகாராஜனின் பணியாளன்! நான் இப்பொழுது சந்திரசூடன் என்ற யாழிசை மாணவனாகப் பேசவில்லை. ராஜசிம்ம மகாராஜனின் மந்திரி குமாரனாக, அரசப் பிரதானியாக, நின்று உனக்குக் கட்டளை யிடுகிறேன். புறப்படு.''

ஆவேசத்தோடு இந்த வார்த்தைகளைச் சொன்னான் சந்திரசூடன். ஒற்றன் மட்டுமில்லை, அவனோடு வ... திருந்த துணையாட்களுமே அந்தக் க... டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். பட... கடலிலே கட்டவிழ்க்கப்பட்டு மித... தது. எல்லையற்ற அந்தக் கார்மேக... கடலின் தண்ணீர்ப் பரப்பைக் கிழி... துக் கொண்டு, இரு கூறாக விலகி... அலைத் தண்ணீரின் குமைச்சலுக்கு மத்... யிலே சந்திரசூடனுடைய பிடிவா... மான தீர்மானத்தைப் போல அந்த... படகு 'விர்' என்று செந்தமிழ் நாட்... நோக்கிப் புறப்பட்டது. அப்பொழு... தொலைவிலே வலம்புரித்தீவின் துறை... முக வாயிலை நோக்கி அணி அணியாக... பல சிறு படகுகள் வேகமாக வந்... சேர்வது தெரிந்தது. சிறிய படகுகளை... தொடர்ந்து பெரிய படகுகள். அவ... றைத் தொடர்ந்து இன்னும் பெரி... மரக்கலங்கள். பத்துப் பத்தாக, இருப... இருபதாக, ஐம்பது ஐம்பதாக ! பிறகு... நூற்றுக்கணக்கான மரக்கலங்கள் துறை... முகத்துக்குள் செல்வது தெரிந்தது.

''தம்பீ ! வலம்புரித் தீவுக்கு அழி... காலம் வந்து விட்டது ! அந்த மரக்கல... களைப் பார்த்தாயா ? இரண்டு தின... களுக்கு முன்பு பார்த்த சிறிய பட... தான் இப்பொழுது இத்தனை பட... களைக் கரை சேர்த்திருக்கிறது. அந்த... உளவுப் படகுதான் இந்தத் தீவின்... முடிவு நாளைக் கணித்துப் போக வந்த... சிறிய காலதூதன்! அது திரும்ப வருகிற... வரை இத்தனை மரக்கலங்களும் படை... யெடுப்புக்கு ஆயத்தமாகக் கடலின்... மத்தியிலே நின்றிருக்கின்றன!'' என்... றான் சந்திரசூடன்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்... படையெடுப்பா ?'' என்றான் ஒற்றன்.

''தம்பி ! பல்லவ அரசியலோடு சா... உன்னுடைய அரசியல் ஞானம் ! இந்... மரக்கலங்களின் விஷயம் வேறு ! அதோ... நடு நாயகமாகத் தெரிகிற மாபெரும்... மரக்கலத்தில் பறக்கிறதே, அது மீனக்... கொடி ! தெரிகிறதா ?. . . . நமக்குக்... கேடு வந்து விடுமோ என்று பயப்... படாதே ! நாம் கேட்டிலிருந்து பேர்... யாழோடு தப்பி விட்டோம். வேறு... யாராவது எதிரிகள் நம்மை வழியிலே... சந்தித்தால்கூட நமக்குக் கேடு நேராது... நம் இலட்சியம் வேறு. எதிரிகள் இலட்... சியம் வேறு!'' என்றான் சந்திரசூடன்.

''சந்திரசூடரே ! அப்படியானால்... பாண்டியர்கள் இந்தத் தீவை அழித்து... விடும் நோக்கத்தோடு தான் இப்... பொழுது படையெடுத்து வருகிறா... களா ?'' என்று ஒற்றன் கேட்டான்.

'' ஆமாம். பழி வாங்கப் போகிறது... இந்தப் படை. ஒரு வருஷத்துக்கு முன்... னால் பாண்டியன் செய்த சபதம் அது!''

இப்படிச் சொல்லி விட்டுச் சந்திர டன் ஒரு கணம் தொலைவிலே செல் ம் அந்த மரக்கலங்களைப் பார்த்துக் காண்டு நின்றான். 'வலம்புரித் தீவின் தி என்ன ஆகும்!' என்ற நினைப்பு ரு பெரிய அலையைப் போல அவ டைய உள்ளத்திலே எழுந்து வந்து ரிந்தது. அப்படிச் சரியவும் அவ டைய மனக் கண்ணுக்கு முன்னால் சாருகேசியின் முகம் அந்த அலையிலே மிதந்தது. மறுவிநாடி அந்த முகம் மறைந்தது. அந்தக் குழந்தையின் முகம் தெரிந்தது. கலங்கிய கண்களிலே இப் பொழுது தீப்பொறி பறந்தது!

"படகை விரைவாகச் செலுத் துங்கள்!" என்று கட்டளை யிட்டான், பல்லவ ராஜசிம்மப் பேரரசனின் மந்திரி குமாரனாகிய சந்திரசூடன்.

இருபதாம் அத்தியாயம்

பெண்மை வெகுண்டது!

வைகறைப் பொழுது என்று பெரியோர்களும், முனிவர்களும், ஞானிகளும் புனிதமாக வழிபடும் புண் ணிய வேளையிலே நீலமேக யாழ்ப்பாண ன் வீட்டில் நிலாமுற்றத்தை யடுத்த அறையிலிருந்து குழந்தையின் அழு குரல் எழுந்தது! ஏதோ பயங்கரமான ஒரு கனவிலிருந்து பதறி யெழுந்தது போல அந்தக் குழந்தை திடீரென்று வீறிட்டு அழுதது! சாருகேசி படுக் கையிலிருந்து உடம்பெல்லாம் பதறிக் கொண்டு எழுந்தாள். குழந்தையை வாரியெடுத்து அணைத்துக் கொண்ட தும் அழுகை அடங்கியது. அதன் பிறகு தான் சாருகேசி இந்த உலகின் நினை வுக்கு வந்தாள். உடனே மீண்டும் பதறிப் போனாள்! கணவனைக் காணோம்!

பல் இரவுகளில் சந்திரசூடன் காணா மற் போனதுண்டு. அப்படி யிருக்கும் இன்றுங்கூட என்று எண்ணி, அமைதி யடைய முடியவில்லை சாருகேசிக்கு! காரணம், கடந்த இரண்டு தினங்களா கத் தன்னுடைய கணவனின் முகத்திலே கண்ட விபரீதத் தெளிவு சாருகேசியின் உள்ளத்தில் ஒரு விவரிக்க முடியாத சஞ்சலத்தை ஏற்படுத்தி யிருந்தது!

குழந்தையை யணைத்தவாறு, பதறு கிற உடம்போடு கட்டிலிலிருந்து இறங்கி அறைக்கு வெளியே வந்தாள் சாருகேசி! அங்கேயும் சந்திரசூடனைக் காணோம்! மறுகணம் அவளுடைய அறிவின் வரம்புக் கோட்டிலே மின்னல் மின்னியது போல ஒரு சிந்தனை. அவ் வளவுதான். யாழ்க்கூடத்தை நோக்கி ஓடினாள் சாருகேசி. அப்படியே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள் அவள்! யாழ் இருந்த இடத்தில் வெறும் மரச் சட்டம் மட்டும் நின்று கொண் டிருந்தது! உயிரை யிழந்த உடல் போன்று இருந்தது அந்த மரச் சட்டம்.

சித்திராங்க பூபதிக்கு யாழின் கதையை மேற்கண்டவாறு சொல்லிக் கொண்டு வந்த சமணத் துறவி இந்த இடத்தில் சற்று நிறுத்தினார். நீண்ட பெருமூச்சு ஒன்று வந்தது! அவருடைய இதயத்தின் அடித் தளத்தில் ஏதோ ஒரு வேதனை இதுவரை உறுத்திக் கொண்டு கிடந்ததை, இப்பொழுது வெளியேற்று வதுபோலப் பாரமான பெருமூச்சு வந்த தும், துறவியின் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. பூபதியைப் பார்த்துக் கேட்டார்: "இளவரசே! உங்களுக்குக் கோவலனுடைய வரலாறு தெரியு மல்லவா?" என்று! பூபதி பதிலே பேசவில்லை. கதையை இடை மறிப்பது அவனுக்கு வேதனை தந்தது. இதைக் கவனித்த சமணத் துறவி மேலும் தொடர்ந்து சொன்னார்:

"எத்தனையோ அமைதி நிரம்பிய உள்ளங்களில் திடீரென்று எரிமலைக்கு நெற்றிக் கண் திறந்தது போல, என்றோ ஒரு நாள் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுவிடக் கூடும். கண்ணகிக்கு அதிர்ச்சி ஏற்பட்ட விதத்தை இளங்கோ அடிகள் அமர காவியமாகப் பாடியிருக்கிறார். அமைதி யும் குடும்பப் பண்பும் நிரம்பிய கண்ணகி என்ற பத்தினிக்குக் கோபம் உண்டாகி அந்தக் கோபம் மதுரைமா நகரையே அழித்தது. துரியோதன னுடைய சபையில் அமைதியே உருவான பாஞ்சாலி கூந்தலை அவிழ்த்தாள். அது பாரத யுத்தமாக மூண்டது. சாந்தமும் சத்தியமும் நிரம்பிய பெண்மணிகளுக் குத் திடீரென்று சீற்றம் எழுந்து விட் டால் அது எத்தனை வேகத்தோடு என் னென்ன காரியங்களைச் செய்து முடித்து விடுகிறது என்பது ஒரு பேராச்சரியம். அப்படிப்பட்ட பேராச்சரியமான சீற்றம் உண்டாயிற்று சாருகேசிக்கு.

கையிலே அணைத்துப் பிடித்த குழந்தையோடு வீட்டின் வெளியே ரத வீதியிலே பாய்ந்து வந்தாள் சாருகேசி! தெருவெல்லாம் தேடினாள். கடலின் கரையெல்லாம் ஓடினாள். தென்னஞ் சோலையில் எல்லாம் புகுந்து புகுந்து பார்த்தாள். கணவனைக் காணோம்! யாழின் சுவடு பிடிபடவில்லை. ஆனால்

என்ன நடந்திருக்கிறது என்பதை ஊகித்து விட்டாள் அவள்!

சாருகேசியின் உள்ளம் எரிமலையாக மாறி விட்டது. எரிமலையின் கண் திறந்து கொண்டது. தன் இதய பீடத்தில் இருத்திப் பூஜை செய்து வந்த காதல்- தெய்வமாகிய சந்திரசூடன், பேரியாழுடன் வலம்புரித் தீவிலிருந்து மறைந்து விட்டான் என்று எண்ணியதும் சாருகேசிக்குத் தலை சுற்றியது. வானம் இடிவது போலவும், கடல் குமுறிக் கொண்டு வருவது போலவும் அவளுடைய உள்ளம் தவித்தது. தன்னுடைய மாசற்ற காதலுக்கு அவன் செய்து விட்ட வஞ்சகத்தை எண்ணி அவள் வருந்தவில்லை. தன்னுடைய தந்தையின் அபாரமான வாஞ்சைக்கு அவன் செய்துவிட்ட துரோகத்தை நினைந்து அவள் துயரப்படவில்லை. இதையெல்லாம் அவளால் மன்னிக்க முடிந்தது. ஆனல் அந்த யாழின் மறைவினல் நாட்டுக்கு ஏற்படப் போகும் தீங்கு? யோசித்து யோசித்து ஒரு க்ஷணத்தில் பதினயிரம் எண்ணங்கள் எண்ணி எண்ணி விம்மினள் சாருகேசி. தன்னுடைய இதயக் காதலன் தன் தாய் நாட்டின் துரோகி என்ற நினைவை அவளால் தாங்கவே முடியவில்லை. பித்துப் பிடித்தவள்போல ஓடினள். "துரோகியைப் பிடியுங்கள்!" என்று கதறினள்.

வலம்புரித் தீவின் அரச வீதியிலே சூரியோதய காலத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு அபலைப் பெண்ணின் கதறல் கேட்டது. கையிலே குழந்தை ஏந்திய, பெண்ணொருத்தி, வீராவேசமான குரலிலே பிரலாபித்துக் கொண்டு, பத்தினிக் கடவுள் தெய்வ கோபத்தோடு வெறி கொண்டு வீதியிலே ஓடுவதுபோல ஓடுவதைக் கண்டு மக்கள் எல்லாம் மருண்டார்கள்.

வலம்புரித் தீவின் அரசமாளிகையிலே ஆசார வாசலிலே தொங்கும் மாபெரும் 'ஆலி மணி' 'டாண் டாண்' என்று ஓங்கி அடித்தது. காவல் காத்து நின்ற வீரர்கள் எல்லாம் பதறிக் கொண்டு வழி விட்டார்கள். பத்தினித் தெய்வம், வலம்புரித் தீவை அழிவிலிருந்து காத்து நிற்க அறைகூவும் கன்னிக் கடவுள், கொதிக்கின்ற தீயாக, சுவாலை விடும் பெரும் நெருப்பாக, அரண்மனையின் உள்ளே நுழைந்தாள்.

"தாய்நாட்டின் துரோகியைப் பிடியுங்கள்! வலம்புரி அரசப் பிரதானிகளே! துரோகியைப் பிடியுங்கள்! உங்கள் மக்களைக் காப்பாற்றுங்கள்!" என்று கதறிக்கொண்டே அரச மாளிகைக்குள் ஓடினள்!

அரச மன்றத்திலிருந்து திகைப்பும் படபடப்பும் மேலிட்டவராய் அரச சம்பிரதாயங்களை உதறி விட்டு ஓடி வந்தார் வலம்புரிப் பேரரசர்!

"மன்னர் பெருமானே! நீலமேக யாழ்ப்பாணரின் மகள் நான். அரச விசுவாசத்தினல், தாய் நாட்டின் நலத்தில் தனக்கிருந்த எல்லையற்ற பாசத்தினல் உயிர்விட்ட அந்த உத்தமக் கிழவரின் வழி வந்தவள் நான்! என்னுடைய முறையீட்டைக் கேளுங்கள். இந்தத் தாய்த் திருநாட்டை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள். இந்த உத்தமப் புண்ணிய பூமிக்கு அழிவை வகுத்து விட்டுப் பேரியாழோடு மறைந்துசென்று விட்ட துரோகியைப் பிடியுங்கள்."

இவ்வாறு கதறி ஓலமிட்ட சாருகேசியைக்கண்டு, மெய்யெல்லாம் தள்ளாடும் முதியவரான பேரரசர் திகைத்துப் போய் நின்ருர்.

"வீரர்களே! காவலாளர்களே! ஏன் என்னை இப்படி வெருண்டு பார்க்கிறீர்கள். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்று திகைக்கிறீர்களா? திகைக்காதீர்கள். தெளிவோடு தான் பேசுகிறேன். இந்தத் தாய் நாட்டின் துரோகி யார் என்று தெரியவில்லையா உங்களுக்கு! சொல்லுகிறேன் கேளுங்கள். இந்த வலம்புரித் தீவின் வஞ்சகத் துரோகி வேறு யாருமில்லை. என்னுடைய கணவன்! என்னை மாலையிட்ட மணளன் எனது புண்ணியத் தாய் நாட்டின் துரோகி! இதோ என் கையில் தவழும் இந்தக் குழந்தையின் தந்தை எனது அன்னை பூமியின் நயவஞ்சக விரோதி! பிடியுங்கள்! பேரியாழையும் அதைக் கொண்டோடிய திருடனையும் பாய்ந்து சென்று கொண்டு வாருங்கள்! ஏன் தாமதிக்கிறீர்கள்! பேரரசர் பெருமானே! உங்களுடைய உடம்புங்கூடப் பதறுகிறதா! அப்படியானல் இந்தப் புண்ணிய பூமிக்குக் கேடு வருகிறதா! ஏ! வலம்புரித் தெய்வமே! சாந்த மயமான உன்னுடைய அருட் கண்கள் இமைகளை மூடி விட்டனவா! முக்கண் முதல்வனுடைய நெற்றிக்கண் இக்கலைத் தீவை நோக்கி விழித்து விட்டதா!"

சாருகேசி இப்படி ஒரே ஆவேசத்தோடு கதறிக் கொண்டு நின்றபோது, அரச மாளிகையின் வாசலோடு பதறியடித்துக் கொண்டு சில வீரர்கள் ஓடி வந்தார்கள். தொலைவிலே போர் முரசங்களின் ஒலி கேட்டது! அதைத் தொடர்ந்து வீர பராக்கிரமத்தோடு அறைகூவி அழைக்கும் சமர்ச் சின்னத்தின் குழல் ஒலி ஓங்கியெழுந்து காற்றிலே மிதந்து வந்தது! (தொடரும்)

இருபத்தொன்றும் அத்தியாயம்

கடல் கண்ட கனவு

ண்டியர் படையெடுப்பு

நாட்டின் நலத்தைக் காப்பாற்றுங்கள்; ரகியைப் பிடியுங்கள்!'' என்று ஒரே ஆவேசத் டு சாருகேசி கதறிக்கொண்டு நின்றாளல்லவா? நேரத்தில் உடம்பெல்லாம் பதறிக் கொண்டு வந்த காவலாளர்கள் வலம்புரிப் பேரரசனிடம் றும் விழுங்கியும் சொன்ன செய்தி அரண்மனை வதையும் அப்படியே ஆட்டி விட்டது!

ஆமாம்; அந்தச் சமயத்தில் வலம்புரித் தீவின் படையெடுப்பு வரும் என்று யாருமே எதிர் க்கவில்லை. அதிலும் அப்படிப்பட்ட படையெடுப்பு ண்டிய வேந்தனிடமிருந்து வரும் என்று வலம் வின் பேரரசன் எண்ணியே பார்த்ததில்லை.

திருமண உறவு முறிந்து போனதிலிருந்து பாண்டி கள் வலம்புரித் தீவிலே கடுமையான கோபம் ண் டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்த யந்தான்; என்றாலும் அந்தக் கோபம் இத்தனை ம் பெரும் சீற்றமாக வளர்ந்து படையெடுப்பு ரயில் கொண்டு போய்விடும் என்று வலம்புரி சன் எதிர் பார்க்கவில்லை. காரணம், படை டுத்துவந்து இங்கிருந்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு கக் கூடிய அத்தனை பெரிய செல்வங்கள் வலம் த் தீவில் யாதொன்றும் இல்லை! 'வலம்புரித் தீவை ன்று விட்டோம்' என்று பெருமைப் படக்கூடிய வுக்குப் படை பலமோ அல்லது அரசாட்சி தையோ வலம்புரியிலே இல்லை.

மந்திரநாயகம் சொன்னார்: ''அரசர்பெருமானே! தப் படையெடுப்பின் நோக்கம் என்னவென்று ரியவில்லை. ஆனால் என்னையும் மீறி என் மனம் றுகிறது. பேரியாழ் இந்தத் தீவிலிருந்து மறைந்து டது என்ற அந்தப் பெரிய அதிர்ச்சியிலிருந்து வதற்குள்ளே இப்பொழுது நமது தீவுக்கே இப்படி கேடு வந்துவிட்டதே என்று எண்ணும்போது என் உடல் பத்றுகிறது. நிதானம் தவறி இந்தவிதமாக நான் பேசுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும்!''

மந்திரநாயகத்தின் இந்தச் சொற்கள் சாருகேசியின் செவியிலும் வீழ்ந்தன. அவள் மந்திரநாயகத்தை நோக்கி ஒரு பயங்கரமான சிரிப்புச் சிரித்தாள்.



சோமு

அந்தச் சிரிப்பிலே ''நீயும் ஒரு வீரனா?'' என்று கேட்பதுபோல் ஓர் ஏளனம் சிதறியது. மறு விநாடி சாருகேசி ஆவேசத்தோடு பேசினாள்:

'' அரசர் பெருமானே! உங்களுடைய நிலைமைக்கு நான் அநுதாபப்படுகிறேன். வலம்புரித் தீவின் அரசியலிலே வீரமும் படை பலமும் மங்க ஆரம்பித்துப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இந்த நிலைமையில் இந்தத் தீவை அழிவிலிருந்து காப்பாற்றக் கூடிய மகத்தான பொறுப்பை யார்தான் வகிக்கப் போகிறீர்கள்? எனக்கு நம்பிக்கை யில்லை. இந்தத் தீவின் ஜீவநாடியான பேரியாழ் மறைந்த விநாடியிலிருந்து இந்த நாட்டின் ஆயுளை இனி எப்படி நிர்ணயித்துச் சொல்லுவது! ஆனாலும் இந்தப் பாணன் மகளுடைய உள்ளத்தின் கோடியிலே ஒரு சிறு நம்பிக்கை இருக்கிறது!''—இவ்வாறு பித்துப் பிடித்தவளைப் போலச் சொல்லிக் கொண்டே அந்தப்புரத்துக்கு ஓடினாள் சாருகேசி.



'' அம்மா, இளவரசி! இந்நாட்டிலே ஆடவர்கள் எல்லாரும் பெண்டிர்களைப் போல வீரங் குலைந்து நடு நடுங்குகிறார்கள். இந்தத் தீவின் அரசருக்கோ முதுமைப் பருவத்தில் உடம்பெல்லாம் ஆடி விட்டது. இளவரசு என்று பட்டம் சூடுவதற்குச் சந்ததி இல்லை. இந்த நிலைமையில் இந்த வலம்புரித் தீ
பொறுப்பெல்லாம் உங்களுடை
பொறுப்பாகத்தான் நிற்கிறது. ஆடவ
கள் பெண்டிர்களாக மாறிவிட்ட இந்
விநோத நாட்டிலே பெண்கள்தா
இனிமேல் ஆடவர்களாக நின்
வீரத்தை நிலைநாட்ட வேண்டு
இளவரசியே! தமிழ் மக்களுடைய வீ
மெல்லாம் உங்களுடைய இதயத்தி
வீறு கொண்டு பெருகட்டும். வலம்பு
அம்மன் ஆதிபராசக்தியாக வந்து உங்
ளுடைய கரங்களிலே வாளை ஏந்
நிற்கட்டும். துரோகியைப் பிடித்து
பேரியாழை இந்தத் தீவிலே கொண்
வந்து சேர்க்கும் பொறுப்பை நீங்க
தான் ஏற்க வேண்டும். அதற்கு முன்
எதிர்பாராத விதத்தில் இந்த நாட்டின்
மேல் படையெடுத்து இதை அழிப்ப
தற்காக வந்திருக்கும் பாண்டிய சேனை
களுக்கு உங்களுடைய வீரவாள்தான்
விடை சொல்லவேண்டும்!''

இவ்வாறு சீறி நின்றாள் சாருகேசி. தரங்கவல்லிக்கு என்ன பேசுவ
என்றே ஓடவில்லை. உள்ளத்திலே
வேகம் எழுந்தது. தன்னை மண
பெண்ணாக வரித்து வந்
அரச குமாரன் இப்போது
தனது தாய்நாட்டின் படை
வனாகப் படை யெடுத்து
வந்திருக்கிறான்! தன்னைப் போன்ற ஒரு பெண்ணை மாலை

ட்ட மணவாளனே, அவளுக்கு வஞ் சம் செய்ததோடு, இந்த நாட்டுக்கே கடு சம்பவிக்கும் வண்ணம் புனித ன பேரியாழையே தூக்கிக்கொண்டு டி விட்டான்! இப்படி நினைத்துப் ார்த்த தரங்கவல்லியின் தலை சுழன் து. ஆடவர் குலத்தினிடமே பெருஞ் ற்றம், எல்லை மீறிய ஒரு பேராவேசம் ண்டாயிற்று தரங்கவல்லிக்கு!

"அம்மா! இளவரசி என்ற உனது லையைச் சற்று மறந்து விட்டு ஒரு பண்ணுக நின்று என்னுடைய ார்த்தைகளைக் கேட்கிறாய். அந்த னுதாபம் உன்னுடைய விழிகளிலே தரிகிறது. அதற்கு அஞ்சலி செலுத்து றேன். எனக்கு வஞ்சகம் செய்து ட்ட ஓர் ஆடவனைத் தண்டிக்க வேண் ம் என்று நீ நினைப்பது சரி. உன் டைய பெண்மையின் உணர்வுக்கு ன்றி கூறுகிறேன். ஆனால் அது ாமானியம். அம்மா! இளவரசி! நீ— ல்லை—நீங்கள் இந்த வலம்புரித்தீவின் ரசபீடத்திலே அமர வேண்டிய மகா ாணி. உங்களுடைய கடமையை ங்கள் செய்ய வேண்டிய காலம் இப் பாழுதே வந்து விட்டது. பாண்டியர் ளின் படையெடுப்பை எதிர்த்து நிற்க வண்டிய ஆண்மை, பெண்ணாகிய உங்களுக்குத்தான் ஏற்பட வேண்டும். ஒன்றுமட்டும் சொல்கிறேன். இந்தப் பாணனுடைய மகளின் உடம்பிலே ஒரு சொட்டு உதிரம் நிற்கும்வரை தாய் நாட்டுக்குக் கேடு வருவதைத் தடுப் பேன். நீங்கள் மட்டும் உறுதி கூறுங்கள். எதிரிகளுடைய படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதோடு, இந்தத் தீவின் ஜீவாதாரமான பேரியாழை மீண்டும் வலம்புரி அம்மனுடைய சந்நிதி யிலே ஒலிக்கும்படி செய்வதாக என் னிடம் உறுதி கூறுங்கள். மறைந்து போன நீலமேக யாழ்ப்பாணரின் ஆவிக்கு அமைதி கொடுங்கள், தாயே!"

சாருகேசியின் உடம்பெல்லாம் ஆவேச வெறியினால் ஆடியது. அந்த ஆட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த தரங்கவல்லிக்கு, உடம்பில் மின்னல் பாய்வது போல் இருந்தது. அவள் முகத்திலே புயல் சுழன்றது. 'விறுவிறு' என்று அந்தப்புரத்திலிருந்து



பேரரசன் நின்ற இடத்துக்கு ஓடினாள். திருவோலக்கத்தை யடுத்த மந்திரச் சாலையிலே ஒரு பெரிய பீடத்தில் சாத்தப்பட்டிருந்த உடைவாளை ஆவேசத்தோடு எடுத்தாள். உறையிலிருந்து வாளை உருவினாள். அதைக் கையிலே தாங்கிய வண்ணம் சாருகேசிக்கு முன்பாக வீரத்தோடு நடந்து வந்தாள்.

“பாணர் மகளே! கேள்! இந்தக் கணத்திலிருந்து, பூமாலை பிடித்த என்னுடைய கரம் போர் வாளைப் பிடித்து நிற்கும். வலம்புரித் தீவுக்கு என்ன கேடு, எப்படி வருகிறது என்பதை இந்த வாள் இனி அறைகூவும். சாருகேசி!” —தரங்கவல்லியின் வார்த்தைகள் சாருகேசியின் செவியிலே அமுதத்தை வார்த்தன. “இளவரசியாரே! என் தாய் நாட்டைப் பெருங் கேட்டிலிருந்து மீட்டு விட்டீர்கள். இது உறுதி. இந்த அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்துமே எதிர்த்து நின்றாலும் கவலையில்லை. வீர பராக்கிரமம் நிரம்பிய ஒரு பெண் இந்தப் பூமியிலே அவதரித்தாள் என்ற பெருமையிலே வலம்புரித் தீவு நிரந்தரமாக வாழும்! இளவரசி! இந்தப் பாணன் மகள் இனி இங்கிருந்து செல்ல வேண்டியவள்தான். ஏனென்றால் உங்களுடைய சபதத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு, இந்தக் கோட்டைக்கு வெளியே உங்களுக்கு அந்தரங்கமான உதவி செய்ய ஒரு துணை அவசியம். வீர மறக்குலத்து வீராங்கனையே! எனக்கு விடை கொடுங்கள். மீண்டும் உங்களை நான் வந்து சந்திக்க வேண்டிய நேரமும், சந்திக்க வேண்டிய நிலைமையும் வேறு. அப்பொழுது இந்தச் சாருகேசி மறுபடியும் இங்கே வருவாள்!”

இப்படிச் சொல்லிவிட்டு அதே பழைய வெறியோடு வேகமாக ஓடினாள் சாருகேசி.

இதுவரை நடந்த விஷயங்களைப் பார்த்துக் கொண்டு குழம்பிப்போய் நின்ற அரசர், முதுமையின் தள்ளாமையிலே உடம்பெல்லாம் ஆடுகிற நிலையில் தமது அருமை மகளின் அருகே வந்தார்.

“இதெல்லாம் என்ன வினோதமான வார்த்தைகள் கண்ணே? பாண்டியர்கள் நமது தீவின்மீது படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்றால் அது சாமானியமான காரியமா! நம்முடைய படைபலமும் நமது ஆயுதங்களும் சூரியனுக்கு முன்னால் மின்மினிப் பூச்சி போலத்தான் அம்மா!”

தந்தை இப்படிப் பேசிக் கொண்டே மகளின் அருகே வந்தவர், தரங்கவல்லியின் முகத்திலே அனல் விடுகிற கோப நெருப்பைக் கண்டு விட்டுச் சற்றுத் தயங்கினார். அப்போது வேகமாக நடந்து வந்தார் வலம்புரித் தளபதி. “கோட்டை வாசலை அடைத்து விடும்படி கட்டளை யிட்டுவிட்டேன், அரசே! படையெடுப்பை எதிர்க்கக் கூடிய பலம் நமக்கு இல்லை. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவு செய்வதற்குள் இந்தக் கோட்டைக்குள்ளே எதிரிகள் நுழைந்து விட்டால், எல்லாம் ஒரே குழப்பமும் வேதனையுமாக முடிந்து விடும். எனவே அரண்மனைக் கோட்டை வாசல்களை அடைத்தாகி விட்டது. மந்திரச் சுற்றத்தார்கள் உடனே கூடிப்பேசி அவசரமான முடிவுக்கு வரவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்!”



இவ்வாறு தளபதி சொன்னதும் பேரரசர் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். தளபதியை நோக்கித் தரங்கவல்லி பேச ஆரம்பித்தாள்:—

“தளபதி! படையெடுப்பை எதிர்க்க வேண்டியது என்பது உறுதியானமுடிவு. அதைப் பற்றிச் சந்தேகமில்லை. அதற்கு முன்னேற்பாடாகக் கோட்டை வாசலை அடைத்ததும் சரியே. ஆனால் கோட்டைக்குள்ளே பதுங்கி யிருந்து விடலாம் என்ற நினைப்பு பிசகானது. உடனே மந்திர மன்றத்தில் நமது பிரதானிகளைக் கூட்டி ஆலோசிக்க வேண்டியதுதான். நம்முடைய மந்திர நாயகத்துக்கு அதற்கு வேண்டிய துணிவு இல்லையென்றால் இதோ நானே வருகிறேன்.”

இவ்வாறு கர்ஜனை செய்தாள் அரசகுமாரி தரங்கவல்லி.

அந்த ஓவியம்!

அரண்மனைக் கோட்டையை விட்டு வெளியே வந்த சாருகேசி, அரச வீதியிலே நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள். சற்று நேரத்துக்கு முன்பு அதே தெரு வீதிகளில் ஓடியபோது தன்னை வெறித்துப் பார்த்த அதே மக்கள், இப்பொழுது சின்னபின்னமாகச் சிதறிய மனத்தோடு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். தொலைவில் துறைமுகத்திலிருந்து கேட்டபோரொலி, கண நேரத்துக்குள் நாட்டு மக்களின் உள்ளத்திலே அத்தனை பெரிய குழப்பத்தை உண்டாக்கி விட்டது. 'பாண்டிய சேனை வலம்புரித் தீவின் மேல் படையெடுத்து வந்து விட்டது' என்ற செய்தி, வனத்திலே தீப் பரவுவது போல அத்தனை வேகத்தோடும் கடுமையோடும் வலம்புரித் தீவின் வீதிகளிலே பரவி விட்டது. கையிலே குழந்தையைத் தாங்கியவாறு அரண்மனை வாயிலின் வெளியே தெரு வீதியிலே நின்ற சாருகேசி, அந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்தாள். மக்களின் ஓட்ட சாட்டங்களை உன்னிப்பாகக் கவனித்தாள். ''அட, தமிழ்க் குலமே! வீர பரம்பரையிலே உதித்த மக்களே! உங்களுடைய வீரமும் பராக்கிரமமும் இந்தக் கருநீலக் கடலிலே முங்கி முழுகிப் போய் விட்டனவா!'' என்று சொல்லிப் பரிகசிப்பதுபோல ஒரு நெருப்புச் சிரிப்புச் சிரித்தாள்.

கோட்டை வாசல் சாத்தப்பட்டது. பதுங்கி ஓடித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்த மக்கள் எல்லாம் இரகசிய வாசலிலே நுழைந்து கோட்டையினுள் புகுந்து கொண்டார்கள். உயிரை அடிமடியிலே கட்டிக் கொண்டு ஓடிய பெண்களும், குழந்தைகளும், வயோதிகர்களும் சாருகேசியைக் கண்டு திகைத்தார்கள். எல்லாரும் கோட்டை வாசலுக்குள்ளே புகுந்தோடிய போது, இவள் ஒருத்தி மட்டும் கோட்டை வாசலிலிருந்து வெளியே ஓடினால் அந்தக் காட்சி எல்லாருக்கும் வியப்பைத்தானே கொடுக்கும்!

சாருகேசி இதொன்றையும் பொருட்படுத்தவில்லை. ஓடினாள். கையிலேந்திய பெண் குழந்தையோடு, தெரு வீதிகளையெல்லாம் கடந்து ஓடினாள் சாருகேசி. ''பாண்டியர்கள் வந்து விட்டார்கள். கடற்படையும், வீரர்கள் படையும், கடலே பொங்கி வருவதைப் போல் வருகிறது!'' என்று மக்கள் ஓடியவாறே பேசிக் கொண்டார்கள். அவள் இந்தப் பேச்சொன்றையும் காதிலே வாங்கிக் கொள்ள வில்லை. அவ[ள்] ஓடினாள். நிற்காமல், தயங்காமல், பின்புறம் திரும்பிப் பாராமல் ஓடினாள்!

வலம்புரி அம்மனுடைய பிராகாரத்துக்கு வந்து சேர்ந்தாள் சாருகேசி. அங்கே வலது சுற்றின் முகப்பில் ஒ[ரு] சிறிய பீடம் உண்டு. தனது தந்தை நீ[ல]மேக யாழ்ப்பாணர் யாழ் வாசிக்கச் சந்நிதியிலே சென்று அமர்வதற்கு முன்பு, அந்தப் பீடத்தின் அருகிலேயிருந்துதான் பேரியாழின் நரம்புகளை மீட்டிக் கொள்வார். அந்தப் பீடத்தின் எதிரே சங்கீத தேவதையின் உருவச் சிலை, யாழ் ஏந்திய கையோடு அபாரமான சிற்ப எழில் வாய்ந்ததாய் நிற்கிறது. அந்தச் சிலைக்கு எதிரே சென்று நின்றாள் சாருகேசி. தந்தையின் நினைவிலே ஒரு கணம் மனம் சென்று ஒருமித்தது. சிலைக்கு அப்பால் இருந்த சித்திரச் சுவரைப் பார்த்தாள். வலம்புரித் தீவுக்குச் செந்தமிழ் நாட்டிலிருந்து கலைஞர்கள் வந்து குடியேறிய போது முதன் முதலாகக் கோயிற் சுவரிலே வரைந்த ஓவியங்கள் அவை! எந்தச் செடியிலிருந்து என்ன இலைகளையும் பூக்களையும் எடுத்து, எப்படிக் குழைத்து, இந்த வர்ணத்திலே சாயக் குழம்பு செய்தார்கள்! எந்த இலைகளின் சாற்றைப் பிழிந்து இப்படிப்பட்ட அற்புதமான வர்ணக் குழம்புகளை வடித்தெடுத்தார்கள்! அந்த அதிசயத்தைக் கூர்ந்து பார்த்த சாருகேசிக்குக் கண்கலங்கியது.

அதோ அந்த ஓவியங்களுக்கு மத்தியிலே 'மணி பல்லவம்' என்ற ஓவியம். அதற்கு அருகிலே 'இளந்திரையன்' என்ற ஓவியம். இந்த இரண்டுக்கும் அருகிலே 'கடல் தந்த காவலன்' என்ற ஓவியம்! அந்த ஓவியம், கம்பீரமான கோலத்திலே காட்சி தந்தது. இதோ அதற்கு அருகில் இன்னொரு வர்ணக் காட்சி. அந்தக் காட்சிதான் சாருகேசியை இதற்கு முன் எத்தனையோ முறை கவர்ந்துள்ள ஓவியம்! அந்த ஓவியத்தைக் குறித்துத்தான் சாருகேசியின் தந்தையும் வலம்புரித் தீவின் மந்திரநாயகமும் பலமுறை தர்க்கம் செய்திருக்கிறார்கள்! இப்பொழுது சாருகேசி அந்த ஓவியத்தின் முன்பாகச் சென்று நின்றுகொண்டாள்.

திரைகள் ஓலமிடுகிற நீல மயமான கடலின் பரப்பிலே படகொன்று தவழ்ந்து செல்லப் போகிறது. அந்தப் படகினுள், பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையை வலம்புரி

ய உள்ளத்தை இந்தக் கடல்
ம். கடல் அறிந்தாலும் அறியா
ாலும் நான் இப்பொழுது அறி
! அரச குடும்பத்தின் குல
கே! அரச போகத்திலே மிதந்து
த பேரரசியே! நான் ஒரு
ன் மகள்! ஏழைப் பாணனின்
மகள்! என்றாலும் என் உள்ள
ரு தாயின் உள்ளம்! ஒரு சிறிய
த் தாயின் உள்ளம்! உன் உள்ளம்
தப் புரிகிறது, தாயே!''
றி கொண்டவளைப் போல இவ்
வேகமாக வார்த்தைகளை உதிர்த்
சாருகேசி. அடுத்த கணம் பீடத்
வைத்த குழந்தையை எடுத்துக்
லே தாங்கியவாறு, முந்தானையி
மூடி, உடம்போடு சேர்த்து
ந்து, அவள் அங்கிருந்து அதே
தோடு நடந்து சென்றாள்.

ம்புரித் தீவிலே பாண்டிய சேனை
ி விட்டது. சேனையின் தலைமைப்
ப்பைத் தாங்கி வந்திருக்கும்
டிய அரச குமாரனின் கட்டளை
வோ தெரியவில்லை. படை
ள் எல்லாம் அந்தத் தீவிலே நின்ற
பெரிய மாளிகைகள், மாடங்
ற்பச் சாலைகள், அழகிய விடுதி
தொழிற்கூடங்கள், — எல்லாவற்
கோபமும் ஆவேசமும் வெறியும்
டு அழித்துக் கொண்டே சென்
. ஒரு வருஷத்துக்கு முன்பு
டைய அரசன் செய்த சபதத்
வப்பம், அத்தனையும் சேர்ந்து
ித் தீவின் அமைதியையும் அழ
அழித்துத் தரை மட்டமாகச்
ஆரம்பித்தன!
கள் நெருங்குவதற்கு முன்னால்,
ற்றின் வேகத்திலே பாணரின்
துக்கு வந்து விட்டாள் சாரு
தந்தையில்லாத அந்த வீடு ஒரே
ாக இருந்தது. கைவிட்டோடிய
ின் நினைவைவிடப் பேரியாழின்
அந்தச் சூனியத்தைப் பூதா
பிகைப்படுத்திக் காட்டிற்று!
யாழ்ப்பாணர் வழக்கமாகச்
ருக்கும் அந்தத் திண்டிற்கு
வந்து, குழந்தையை வைத்து
ருவிம்மல் விம்மினாள் சாருகேசி.
கேசியின் தலை சுழன்றது. அவளு
னத்தின் சிந்தனைக் கண்ணுக்கு
ஏதேதோ காட்சிகள் தெரிந்
தவ கோபம் அந்தத் தீவிலே
ந்தோடு பரவத் தொடங்கியது
சாருகேசியின் மனக் கண்ணுக்கு

முன்னால் பல காட்சிகள். மேகத்தி லிருந்து வெப்பமான தாரைகள் விழு கின்றன. மரங்களின் பட்டைகள் வெடிக்கின்றன. கோயிற் கொடி மரத் திலிருந்து இரத்தம் பாய்வது போல ஒரு மனப் பிரமை. சாருகேசி கண்களை இறுக மூடிக் கொண்டாள். ஒரே நிசி இருட்டாகத் தெரிகிறது. கன்னங் கரிய அமாவாசை இருள். அந்த இருளான இரவிலே பூத கணங்கள் கூத்தாடுகின் றன! அப்பப்பா! அவற்றின் காற் சிலம்பிலிருந்து இடியோசை கேட் கிறது! மறுகணம் தேவ கன்னிகைகள் அந்தத் தீவை விட்டு நடந்து போவது போல மெட்டிகள் ஒலிக்கின்றன! வலம்புரித் தீவின் அரசன் நடு நடுங் குவது போலவும், யாரோ கோட்டை யின் கதவுகளை நன்றுகப் பூட்டி முத்திரையிட்டு விட்டது போலவும் தோற்றங்கள்! கடலின் பரப்பில் பெரிய பெரிய மரக்கலங்கள் தெரிகின்றன. அருகிலே சிறு சிறு படகுகள் தெரிகின் றன. அழிவிலிருந்து தப்பிக்கும் பொருட்டு இதோ வலம்புரித் தீவின் மக்கள், மரக்கலங்களிலும், படகுகளி லும், மிதவைகளிலும் ஏறிக் குதித்து ஓடுகிறார்கள். கிழவர்கள், கன்னியர்கள் —ஏன் வீரர்களுங்கூட உயிருக்குத் தப்பி ஓடுகிறார்கள்!

''என்ன பயங்கரமான காட்சி!'' என்று சொல்லிக் கொண்டே இமை களைக் கசக்கி விட்டுக் கொண்டு எழுந் தாள் சாருகேசி. எழுந்தவள் அந்த வீட் டிலே ஒரு கணம்கூடத் தாமதிக்கவில்லை. இத்தனை ஓட்ட சாட்டங்களுக்கு மத்தி யில், உடற் பதற்றமோ, பசியின் கொடுமையோ, அல்லது முகத்திலே தவழ்கிற ஞானமின்னலின் போதமோ, அந்தப் பெண் குழந்தை இப்பொழுது வீறிட்டு அழ ஆரம்பித்தது.

''வலம்புரித் தீவு சமர்பூமியாக மாறி விட்டது. உனக்கு இந்தச் சமர்பூமி இனி வேண்டாமடி கண்ணே!'' என்று பரி வோடு அந்தக் குழந்தையிடம் சொல் லிக் கொண்டே, முந்தானையினால் குழந் தையைப் பாதுகாத்தவாறு நடந்தாள் பாணரின் மகள் சாருகேசி! தாயின் அரவணைப்பிலே சுகங் கண்ட அந்தக் குழந்தை, அழுகையை நிறுத்தியது! எத்தனை குழப்பங்கள், எத்தனை விப ரீதங்கள் வெளியுலகிலே நடந்தாலும் அன்னையின் முந்தானைக் காவலுக் குள்ளே தவழ்ந்த அப் பெண் குழந்தை புன்முறுவல் செய்தது—நீலமேக யாழ்ப் பாணரின் மின்னல் முறுவல் அது!

இரண்டாம் பாகம் முற்றிற்று

சங்கோடு சேர்த்து வைத்துக் கடலிலே மிதக்க விட்டு விடுகிறாள் அவள்!

அந்தக் குழந்தை யாரென்றும், அந்தப் பெண்மணி யாரென்றும் நீலமேக யாழ்ப்பாணரும் வலம்புரித் தீவின் மந்திர நாயகமும் பலமாகத் தர்க்கிப் பதுண்டு. 'அது அந்தக் குழந்தையின் அன்னைதான்' என்பார் நீலமேக யாழ்ப் பாணர். உடனே அதற்குரிய கார ணங்களைச் சொல்லுவார். மந்திரநாய கம் வேறு பல கதைகளைச் சொல்லி மறுப்பார். தர்க்கம் பலமாகி விடும். அப்பொழுதெல்லாம் சாருகேசிதான் விவாதத்தின் மத்தியிலே புகுந்து, தர்க் கத்திலிருந்து தந்தையை மீட்டுக் கொண்டு வருவாள்.

சாருகேசி இப்பொழுது அதே சித்தி ரத்தைப் பார்த்தாள்.

"பால் மணம் மாறாத குழந்தையைக் கடலிலே படகில் வைத்து மிதக்க விட்டு விடுகிறாள் அந்தக் குழந்தையின் அன்னை! ஏன்? வெறுப்பினாலா? வஞ்சகத்தினாலா? அந்தக் குழந்தையிடம் ஏற்பட்டுவிட்ட பகைமையினாலா? இல்லை! அன்பினால்! எல்லையற்ற பாசத்தினால்! அந்தக் கடலைப்போலக் கரைகாணாத வாஞ்சை யினால் அப்படிச் செய்கிறாள் அவள்!"

இப்படிப் பேசுவார்கள் பாணரும் மந்திர நாயகமும! இந்த வார்த்தைகள் சாருகேசிக்கு அந்தக் காலத்தில் வேடிக் கையாக இருக்கும்! இப்பொழுது அதே சாருகேசி அதே ஓவியத்தைப் பார்த்த போது, அவளுடைய உள்ளத்தில் அதே பழைய தர்க்கப் பேச்சு நினைவுக்கு வந் தது. ஆனால் இப்பொழுது அவள் வேடிக்கையென்று அந்த வார்த்தை களைச் சிரித்துத் தள்ளிவிட வில்லை.

"குழந்தையின் அன்னை கடலிலே தான் பெற்ற குழந்தையை ஏன் அனா தையாகச் செல்ல விட்டாள்? வாஞ்சை யினால்! அளவற்ற அன்பினால்! ஆம்; அன்பின் சக்தி அது! இன்னொருத்தி பெற்ற குழந்தையானால் வேறு வித மாகச் சொல்லலாம், இது அவளே பெற்றெடுத்த குழந்தை. அவளே பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிய குழந்தை!"—இந்த வார்த்தைகளை மனத்திலே ஓடவிட்டாள் சாருகேசி.

"கண்ணற்ற தீவிலே யிருந்து, கண் ணற்ற கடலிலே கொண்டு போய்ப் படகிலே வைத்துத் தள்ளி விடவேண் டும் என்றால், அந்தக் கண்ணுள்ள தாயி னால் எப்படி முடிந்தது!" என்று அந்தக் காலத்தில் பாணரும் மந்திர நாயகமும் அவநம்பிக்கையோடு தர்க்கிப்பதுண்டு. சாருகேசி இப்பொழுது அந்த வார்த் தைகளைக் குறித்து அவநம்பிக்கை கொள்ளவில்லை. 'ஒரு தாயின் உள்ளத்

திலே உள்ள பாசத்தின்
யெல்லாம் முடிவு கண்டு
கள் யார்? இதயத்தின்
திலே உள்ள ஒரு தாயின்
யெல்லாம் யார் கண்டார்
கண்ட கனவுகளையெல்லாம்
டைச் சுற்றி நிற்கும் அந்
பரந்த கடல்தான் கண்ணிமை
பார்த்துக் கொண்டிருந்தது.
உலகம் காணாத கனவுகளை வெ
தன் உள்ளத்திலே வைத்துப் பெ
பொங்கியது அந்த நீலக் கடல்! நு
கணக்கான ஆண்டுகளாகப் பொ
பொங்கி அலை வீசிக் கொண்டிரு
அந்தக் கடல்!'—இவ்வா
தும் சாருகேசியின் உள்ள
மிப் பொங்கியது. "ஆம்;
அந்தக் கருநீலக் கடலுக்கு
அன்றொரு நாள் கடலு
படகில் தனது குழந்தை
தனியாக வைத்து மிதக்க
அந்தத் தாயினுடைய
கருங்கடல்தான் அறியும்!
குத் தெரியும்? ஏ
தெரியும்"—இப்படி
சாருகேசியின் உள்ளத்
உண்டாயிற்று!

"ஆம்; ஒரு தாயின் உ
ளொரு தாய்தான் அறி
படித் தனக்குள்ளே
கொண்டாள் சாருகேசி.
பீடத்திலே வைத்துவி
கைகளையும் கூப்பினாள்.
தோன்றிய அந்த அன்னை
துக்கு வணக்கம் செலுத்

"அம்மா! தாயே!
எனக்குத் தெரியாது
என்ற அரச குமாரி
தந்தைதான் வளைவணை
வர்த்தி என்றும், உன்
மயங்க வைத்தவன்தான்
என்ற சோழன் என்றும்
யக் கேட்டிருக்கிறேன்
மிதக்கவிட்ட செல்வ
இளந்திரையன் என்று
வம்ச பரம்பரைதான்
ராஜ்யம் என்றும் செ
கிறேன். ஆனால்
குமரனைக் கடலிலே
யாக அனுப்பினாய்
என் தந்தையும் மந்தி
முரண்பட்ட கதைக
தர்க்கம் செய்கின்
கதை எப்படி யிருந்த
மட்டும் உண்மை. நீ
யைக் கடலிலே மிதக்க
காரணம் உன்னுடைய
தாயே! அம்மா! அ


மூன்றாம் பாகம்
பல்லவ விஜயம்

கடல் கொண்ட கனவு

சமணத் துறவி வானத்தைப் பார்த்தார். விடி வெள்ளி எழுந்து நின்றது. சாருகேசியின் கதையை நிறுத்தி விட்டு, அந்த ஏழடிப் பட்டத்திலிருந்து புறப்படுவதற்கு முனைந்தார் அவர்.

"என்ன துறவிகளே! அதற்குள் எழுந்திருக்கப் பார்க்கிறீர்கள்!" என்றான் சித்திராங்க பூபதி.

"விடி வெள்ளி முளைத்து விட்டதல்லவா!" என்று சொல்லிச் சிரித்தார் சமணத் துறவி.

"சாருகேசியை நடுத் தெருவில் நிறுத்தி யிருக்கிறீர்களே! கையில் குழந்தையை ஏந்திக் கொண்டு வெறியோடு ஓடிய சாருகேசி என்ன ஆனாள்?" என்று கேட்டான் பூபதி.

"ஓ! அது கூடச் சொல்லித் தெரிய வேண்டிய விஷயமா! வலம்புரி அம்மனுடைய கோவிலின் சுவரிலே யிருந்த ஓவியத்தைப் பார்த்தாள் அல்லவா? அதிலிருந்து யூகித்துக் கொள்ள வேண்டியதுதானே?" என்றார் துறவி.

"அப்படியானால்?"

"இளவரசே! சுவர்ச் சித்திரத்திலே காணப்பட்ட ஒரு தாயின் உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டதாகச் சாருகேசி சொன்னாள் அல்லவா? அப்படியானால் என்ன அர்த்தம்?" என்று துறவி கேட்டார், சித்திராங்க பூபதியைப் பார்த்து.

"அடடா! அப்படியானால் சாருகேசியும் தன்னுடைய குழந்தையைப் படகிலே மிதக்க விட்டு விட்டாளோ?" இப்படிக் கேட்டான் பூபதி. அவனுடைய குரலில் ஆற்றாமை தொனித்தது.

"சித்திராங்க பூபதி! நீங்கள் ஏன் இத்தனை வேதனையோடு இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள்? சாருகேசி அத்தனை பரிதாப நிலையில் வேறு என்ன செய்யக் கூடும்! வலம்புரித் தீவின் மீது படையெடுத்து வந்திருந்த பாண்டியச் சேனை அந்தத் தீவை ஒரே தரை மட்டமாகச் செய்வதற்கு முனைந்திருந்தது. சாருகேசியோ தன்னுடைய முயற்சியினால் அந்தத் தீவுக்கு ஒரு மகத்தான சேவை செய்யத் தீர்மானித்தாள். அந்தத் தீர்மானத்தின்படி அவள் நடந்து கொள்ளவும் செய்தாள்! அந்த மகத்தான காரியத்தைச் செய்வதற்கு முன்பு தனது குழந்தைக்கு இப்படி ஒரு வழி வகுத்து விட்டாள் அவள்!"

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்! சாருகேசி அத்தனை தூரத்துக்குத் தனது மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாளா?" என்று கேட்டான் பூபதி.

"ஆமாம். ஆனால் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள் என்று எப்படிச் சொல்ல முடியும்! தனக்கு மரணம் வரப்போவது நிச்சயம் என்று கண்டு கொண்ட சாருகேசி, தனது குழந்தைக்கு இப்படி ஒரு பிழைக்கும் வழியை அன்பினால் வகுத்துக் கொடுத்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்!" என்றார் சமணத் துறவி.

"பெரியவரே! நீங்கள் பாசபந்தங்களைக் களைந்து நிற்கும் ஒரு துறவி. உங்களுடைய உள்ளத்துக்கு அப்படித்தான் தோன்றும். ஆழ்கடலிலே தன்னந்தனியாக ஒரு குழந்தையை அதிலும் பெண் குழந்தையைப் படகிலே வைத்துத் தள்ளிவிட வேண்டும் என்றால் அது..."

சித்திராங்க பூபதி அந்த வாக்கியத்தை முழுதும் சொல்லி முடிக்கும் முன்பே சமணத் துறவி குறுக்கிட்டார்.

விடி வெள்ளி

"அதுதான் அன்பு! சாருகேசியின் நிலைமையில் இன்னொரு தாய் அப்படித்தான் செய்திருப்பாள். ஏனென்றால் தனது குழந்தையைப் படகிலே மிதக்கவிட்டு விட்டுச் சாருகேசி உயிரோடு வாழவில்லை. தனது தாய் நாட்டை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்து அந்த முயற்சியிலே தானும் வீர மரணம் அடைந்தாள் உத்தமி சாருகேசி!"

இப்படிச் சொல்லிக் கொண்டே சமணத் துறவி பெருமூச்சு விட்டார்! அவருடைய கண்கள் கலங்கின. சற்று நேரத்துக்கு முன்பு துறவியின் உள்ளத்தைப் பற்றிப் பூபதி விமர்சனம் செய்தான் அல்லவா, அதே பூபதி இப்பொழுது அதே துறவியின் கண்கள் கலங்குவதைப் பார்த்ததும் வியப்போடு துயரமுமே அடைந்தான்! இதைக் கவனித்த துறவி தமது பேச்சை நிறுத்தாமல் மேலும் சொல்லுவார்:—

"வலம்புரித் தீவின் இளவரசே! இந்தத் தமிழ் நாட்டில் சாருகேசியைப் போன்ற எத்தனையோ வீரப் பெண் மணிகள் பிறந்திருக்கிறார்கள். தமிழ்க்

குலம், பெண்மையின் தியாகத்துக்கும் வீரத்துக்கும் புகழ் பெற்ற புண்ணிய பரம்பரை! அப்படிப்பட்ட வீரத்திருக் குலத்தின் ஒரு கிளைதான் வலம்புரி நாட்டு மக்களின் பரம்பரையும்! எனவே, சாருகேசியின் அன்பையும் வீரத்தையும் தியாகத்தையும் பாண்டிய மன்னனே உரிமையோடு பாராட்டி வியந்ததில் வியப்பில்லை!''

துறவி இப்படிச் சொன்னதும் சித்தி ராங்க பூபதி கேட்டான்: ''பெரியவரே! அப்படியானால் சாருகேசியைப் பற்றி யும் அவளுடைய இணையற்ற தியாகத் தைப் பற்றியும் பாண்டிய மன்னன் தெரிந்து கொண்டானா? தமிழ் நாட்டி லிருந்து வலம்புரித் தீவுக்குப் படை யெடுத்துச் சென்ற பாண்டிய அரச குமாரன் அந்த வீராங்கனையான சாரு கேசியைச் சந்தித்தானா?''

சித்திராங்க பூபதி இந்தக் கேள்வி யைக் கேட்டதும் சமணத்துறவி நீண்ட நேரம் விடையே சொல்லாமல் மௌன மாக இருந்தார். அவருடைய விழிகள் கலங்கியதோடு நிற்கவில்லை. சாந்தமும் அமைதியும் நிறைந்த அந்தப் பெரிய வரின் கண்களிலிருந்து 'மள மள' என்று கண்ணீர்த் துளிகள் பொழிந் தோடின! இதைக் கண்டதும் பூபதிக் குக் குழப்பம் உண்டாயிற்று. கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டு விட் டோமோ என்று ஒரு கணம் துணுக் குற்றான். சொன்னான்:

''பெரியவரே! சாருகேசியின் வர லாற்றை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திவிட்டு நீங்கள் இந்தப் பாறையி லிருந்து எழுந்திருக்க முயன்றதும் முதலில் நான் திகைப்பு அடைந்தேன். அவளுடைய முடிவு என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள விரும்பிய தால் மேலே மேலே கேள்விகளைப் போட் டேன். ஆனால் என்னுடைய கேள்வி களுக்கு விடை சொல்வதற்கு நீங்கள் எவ்வளவு தயங்குகிறீர்கள் என்பதும், சாருகேசியின் வரலாற்றை மேற் கொண்டு சொல்ல ஆரம்பிக்கும்போதே உங்களுடைய உள்ளம் எத்தனை வேத னைப் படுகிறது என்பதும் எனக்கு இப் பொழுது நன்றாகத் தெரிகிறது! பாச பந்தங்களைக் களைந்தெறிந்த துறவி யென்றும், உங்களுடைய உள்ளத்தில் ஈரம் இராது என்றும் ஆத்திரத்தில் நான் சொல்லி விட்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இந்த வரலாற் றைக் குறையும் சொல்லுவதற்கு உங்க ளுடைய மனம் வேதனைப்படுமானால், என்னுடைய ஆவலை அடக்கிக் கொள்ளு கிறேன். உங்களை இனிமேல் துயரத் துக்கு உள்ளாக்க மாட்டேன்!'' என்று சித்திராங்க பூபதி.

மௌனமாக இருந்த சமணத் துற தமது கலங்கிய கண்களைத் துடைத் விட்டுக் கொண்டார். ஏதேதோ சஞ்ச மான நினைவுகளிலே சென்ற மனத் மீண்டும் தன் வயத்துக்கு இழுத்து கொண்டு வந்து நிறுத்தி, திடத்தோ சித்திராங்கனைப் பார்த்துச் சொன்னா

''பூபதி! சந்திரசூடன் செய்துவிட்ட அந்தக் கடுமையான பாபத்தை நினை தால் எனக்கு அவனிடம் எல்லை மீறி கோபம் உண்டாகிறது! அவனை எப்ப யெல்லாமோ தண்டிக்க வேண்டு என்று சீற்றம் ஏற்படுகிறது. அதே சீற்றத்துக்கு மத்தியில் சாருகேசி அனு பவித்த துன்பங்களை எண்ணும் போது உள்ளம் நிலையிழந்து கண்ணீர் வடிக் கிறது. இந்த உணர்ச்சிகளை யெல்லாம் உங்களிடம் காட்டிக் கொள்ளாமல் கதையை மட்டும் சொல்லலாம் என்று முயன்றேன். முடிய வில்லை. அதனால்



தான் இந்தக் கட்டத்தில் மெதுவாகத் தப்பித்துக் கொள்ளலாம் என்று எழுந் திருக்கக்கூட முயற்சி செய்தேன்! ஆனால் அது தவறு. விடிவெள்ளி முளைத்து விட்டது என்பது உண்மைதான். ஆனால் சூரியோதயம் இன்னும் ஆகவில்லை! சூரியன் உதிக்கும் வரை இந்த ஏழடிப் பட்டத்தை விட்டு நகருகிற உத்தேசம் எனக்கு இல்லை. ஆகையினால் சாருகேசி தன்னுடைய பெண் குழந்தையைப் படகிலே மிதக்க விட்டு விட்டுத் தன் னுடைய மரணத்தை எப்படி எதிர் கொண்டு அழைத்தாள் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதைக் கேட்டு முடித்த பிறகு, சந்திரசூட னிடம் உங்களை அழைத்துப் போவேன். நீங்கள் மாமல்லபுரத்திலும், குங்கும மாளிகையிலும் சந்தித்த விசித்திர சித்தரையும் விடியற்காலையிலே சந்திக் கப் போகிறீர்கள்! அப்பொழுது நாம் இருவரும் அவரிடம் சில முக்கிய

ான முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும்; ரிந்ததா?'' என்றார் சமணத் துறவி.

''சித்தரா? அவர் இங்கே வரப் போகிறாரா? சந்திர சூடனும் அவரோடு இங்கே வரப் போகிறாரா?'' என்று எல்லையற்ற வியப்புடன் கேட்டான் சித்திராங்க பூபதி.

''ஆமாம்'' என்று ஒரே வார்த்தையில் விடை கூறிவிட்டுச் சமணத் துறவி மேலே கதையைத் தொடர்ந்தார்.

இரண்டாம் அத்தியாயம்
அன்னை பூமி!

கையிலேந்திய பெண் குழந்தையைக் கடலிலே விட்ட பிறகு, சாருகேசி மீண்டும் கோட்டை வாயிலை நோக்கி நடந்தபோது, வலம்புரித் தீவின் பரிதாபக் காட்சியை அவளால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை; கோபுரங்கள் எல்லாம் இடிந்து பொடி பொடியாகக் கிடந்தன! மாடமாளிகைகள் இருந்த இடங்கள் செங்கல்லும் கருங்கல்லுமாகச் சின்னு பின்னமாகக் கிடந்தன! இரத வீதிகள் ருத்திர பூமியாகக் காட்சி தந்தன. வலம்புரியம்மன் கோவிலின் சில பகுதிகளைத் தவிர மற்றச் சுற்று வட்டாரங்கள் அனைத்தும், சூனிய வெளியாக நின்றன! சாருகேசிக்குக் கண் கலங்கியது. உள்ளம் பதறியது. உடம்பெல்லாம் ஆடியது.

''வலம்புரித்தீவே! புண்ணியத் தாய் நாடே! நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகக் கலையை வளர்த்து வந்த கரங்கள் இப்பொழுது உன்னை அழித்து விட்டனவா! எந்த நாட்டிலிருந்து சித்திரமும், சிற்பமும், சங்கீதமும் இங்கே கைகோத்துக் கொண்டு வந்து குடியேறி வளர்ந்து நிலை பெற்றனவோ, அதே தாய்நாட்டு மக்கள் இப்பொழுது சேய் நாட்டைக் கொன்று தீர்த்து விடுவதற்குக் கங்கணம் கட்டி விட்டார்களா? வலம்புரி அன்னையே! உன்னுடைய கோவிலிலிருந்து பேரியாழ் போய்விட்டது என்றால் இத்தனை விபரீதங்களும் நடக்க வேண்டுமா? நூற்றுக் கணக்காக, ஆயிரக் கணக்காக, உன்னுடைய குழந்தைகளின் உதிரத்தைக் குடிக்க வேண்டும் என்று உனக்குப் பசி எடுத்து விட்டதா? யாழின் ஒலி உன்னுடைய செவிகளைக் குளிர வைக்கவில்லை யென்றால், உன்னுடைய நெஞ்சிலும் உன்னுடைய வயிற்றிலும் இத்தனை பயங்கரமான பசி பெரும் நெருப்பாகக் கிளம்பி அனல் விட்டு எரியுமா! என் அருமைத் தாய் நாடே! உனக்கு இத்தனை பயங்கரமான முடிவு வந்து விட்டதா!''

இப்படி யெல்லாம் கதறினாள், ஓலமிட்டாள் சாருகேசி!

பாண்டிய சேனை நகரத்தைப் பாதி அழித்தும் அங்கங்கே அவசரத்தில் பாதி அழியாமல் விட்டும் ஒரே கோபாவேசத்தோடு கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது!

''நில்லுங்கள்! நில்லுங்கள்!'' — இப்படி ஒரு கதறல் கேட்டது.

''ஏ மனித பூதங்களே! நில்லுங்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வரும் அழகையெல்லாம் அழித்துக் கொண்டு செல்லும் கால தூதர்களே! நில்லுங்கள்!''

இப்படிக் கதறினாள் சாருகேசி! குதிரைகளும், யானைகளும், ரதங்களும் வாளேந்திய வீரர்களுமாக வேகத்தோடு நடந்தார்கள்! சாருகேசி நின்ற இடத்துக்கு முன்னாலும் சேனைக் கூட்டம்; அவளுக்குப் பின்புறமும் புதிது புதிதாக வந்து கொண்டிருந்தது படை!

சாருகேசி எத்தனை கதறியும் முன்னால் படர்ந்து சென்ற வீரர்கள் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை! பின்னால் நடந்து வரும் வீரர்களோ சாருகேசியை இலட்சியம் செய்யவேயில்லை! ஆனாலும் கதறினாள் சாருகேசி. மறு வினாடி அந்த ரத வீதியிலே விழுந்து பாதையை மறித்தாள் அவள்!

''என்னை மிதித்துக் கொண்டு செல்லுங்கள்! கோட்டை வாசலை அழிப்பதற்கு முன்பு இந்த ஏழைப் பெண்ணின் உடம்பை அழித்து இந்தப் புண்ணிய பூமியிலே தேய்த்து மெழுகி விடுங்கள்!''

இவ்வாறு பைத்தியம் பிடித்தவளைப் போலக் கதறி கொண்டே, வலம்புரி மண்ணின் புழுதியிலே புரண்டாள் சாருகேசி! கோட்டை வாசலிலே கண்ணும் வாளிலே கையும், தங்களுடைய அரசனின் கட்டளையிலே மனமுமாக வெறியிலே நடந்த வீரர்கள் சாருகேசி என்ற பெண்ணை, சாருகேசி என்ற மனித உடம்பை, சாருகேசி என்ற புழு மூட்டையை, கவனிக்க வில்லை.

ஆயிரம் ஆயிரம் குதிரைக்குளம்புகள்! ஆயிரம் ஆயிரம் மனிதக் காலடிகள்! மிருகம், மனிதன் என்ற வேற்றுமை

இல்லாமல் சாருகேசியின் உடம்பிலே நடந்தன! ஆனால் இதோ! அரச குமாரனின் ரதம் வருகிறது. "நிறுத்துங்கள்! தேரை நிறுத்துங்கள்!" — பதற்றத்தோடு இப்படி ஒரு கட்டளை பிறந்தது! ஒருகண நேரத்தில் தேர் நின்றது. அதே கணம் அத்தனை வீரர்களும் நின்றார்கள்.

"என்ன பரிதாபம்! ஒரு பெண்ணை மிதித்துக் கொண்டா செல்கிறீர்கள்! அட தமிழ்க் குலமே! அட வீரர்களே! உங்களுடைய ஆண்மையும் வீரமும் எங்கே போயிற்று! வழிவழியாக வந்த தமிழ் மரபு எங்கே போயிற்று?" இப்படி வந்தது ஒரு கம்பீரமான குரலிலே தவழ்ந்த எல்லையற்ற அந்த அநுதாபம்! அரசப் பண்போடு வந்தது அது.

சேனையை நடத்திச் சென்று கொண்டிருந்த பாண்டிய அரசகுமாரன் மேற் கண்டவாறு வார்த்தைகளைச் சொல்லும் போதே அவனுடைய கையும் காலும் பதறின. தேரிலிருந்துகீழே குதித்தான் அவன். ஆனாலும் என்ன பயன்? சாருகேசி என்ற முழு ஜீவன் அங்கே இல்லை; பாதி உயிர் வான வெளியிலும், பாதி உயிர் பூமியிலுமாக ஊசலாடியது.

வேகமாக அணி, அணியாக, நடந்து செல்லும் பாண்டிய வீரர்கள் அப்படி அப்படியே அங்கங்கே நின்று விட்டார்கள். இதற்குள் கோட்டை வாசலை நோக்கி விரைந்து சென்று விட்ட வீரர்கள், பின்னால் தொடர்ந்து வந்த வியூகங்களைக் காணாமல் திகைத்து நின்றார்கள். தலைமை நாயகர்களாக வந்த வீரர்கள் மேற்கொண்டு கட்டளை கொடுப்பதற்குத் தெரியாமல் விழித்தார்கள். சக்கர வியூகத்தின் தலைவன் தனது குதிரையை மறுபக்கம் திரும்பி, பின்னால்வந்த வீரர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு விரைந்தான்.

"அம்மா! தாயே!" என்றான் பாண்டிய அரச குமாரன். அவனுடைய குரல் கம்மிற்று. தரையிலே வீழ்ந்து குற்றுயிராகக் கிடந்த சாருகேசிக்கு அருகிலே வந்து, தனது இரண்டு கரங்களையும் கூப்பினான். அவனுடைய நிலையைக் கண்ட வீரர்கள் இதற்குள் பல திசைகளிலும் ஓடினார்கள். எங்கிருந்தோ ஒரு குவளையில் தண்ணீர் வந்தது. ஒரு வீரன் அங்கியை விசிறியாகக் கிழித்து எடுத்து வந்தான். நூறு வீரர்கள் சக்கரமாக வளைந்து அணி





ந்த்துக் கூட்டத்தின் நெருக்கத்தைத் த்து நின்றார்கள்.

'வீரத் தமிழன்னையே! நமது பரம் ரையிலேயே இல்லாத பிழை நேர்ந்து ட்டது! மன்னிக்கவேண்டும் தாயே!''

சாருகேசி கண்களைத் திறந்தாள். வளையிலே யிருந்த தண்ணீரைப் பரி ாடு அவளுக்கு அருகிலே கொண்டு ானுன் பாண்டிய அரச குமாரன்.

என்ன ஆச்சரியம்! எங்கிருந்து ந்த உடம்புக்குள்ளே மின்னலின் சக்தி ய்ந்ததோ! கண்களைத் திறந்த சாரு சியின் முகத்திலே ஒரு பிரகாசம் ான்றியது. அணையப் போகிற விளக்கு ரகாசத்தோடு ஜோதியைப் பன் ங்கு பெருக்கிறது.

''வீரர்களோடு வீரர்கள் சண்டை ய்வதுதான் வீரம்! கலைஞர்களோடு ார்ப் படைகள் யுத்தம் செய்வது ரம் ஆகாது! அரசகுமாரா! நூற்றுக் னக்கான ஆண்டுகளாகக் கலைகளுக்கு ார்ப்புப் பண்ணையாக இருந்து வரு றது இந்த அழகுத் தீவு! நீ மனிதர் ளக் கொல்; வீரர்களின் உடையிலே ளய வருகிற இந்த நாட்டின் மனிதப் ச்சிகளைக் கொல்; அதையெல்லாம் பாறுத்துக் கொள்ள முடியும். ஆனல் ன்னுடைய முன்னோர்கள் விதை ன்றி இந்தப் பூமியிலே வளர்த்த கலைப் பிரை நீ அழிக்கிறாய்! அதைச் செய் தற்கு உன்னை விட மாட்டேன். இந்த ம்பில் ஒரு துளி உதிரம் நிற்கும் ரை இந்தப் புண்ணியத் திரு நாட்டின் லச் செல்வத்தை இந்தப் பாணன் ள், இந்த அனாதைப் பெண் இந்தச் ருகேசி அழிய விடமாட்டாள்!.....''

இதற்கு மேல் வார்த்தைகள் வர ல்லை. பொறிகளைத் தெறித்த சுடர் ன்று விட்டது! அரச குமாரனின் ண்களிலிருந்து இரண்டு துளிக் கண் ர், அந்த ஆன்மாவின் தாகத்தை, ாட்சியைக் குளிர வைக்க வந்தது ால இதோ விழிகள் கலங்குகின்றன. டுத்தகணம் உத்தரவு பிறக்கிறது.

''நில்லுங்கள்! வீரர்களே, நில் ங்கள், கோட்டை வாசலுக்குள் ழைவதற்கு முன்னல் சமாதானக் ாடியை உயர்த்துங்கள்!''

பாண்டிய அரச குமாரனிடமிருந்து ந்த உத்தரவு பிறந்த மறுவினாடி, திரைகளும், ரதங்களும், வீரர்களும் ர்ந்து ஓடினார்கள். முன்னல் சென்ற ண்டிய வியூகத்தின் சேனாநாயகன் ாடியை உயர்த்தினான். தென்னா டைய சிவனை வாயாரப் போற்றிக் ாண்டு சமாதானக் கொடியை யர்த்திப் பிடித்தது பாண்டியர் படை.

இதற்குள் வலம்புரி அரச மாளிகைக் குள்ளே என்ன நடந்தது?

கோட்டை வாசலை அடைத்துவிட்ட பிறகு மந்திரச் சுற்றம் கூடி ஒரு முடி வுக்கு வந்து எதிரிகளை எப்படி எதிர்ப் பது என்று தீர்மானிப்பதற்குள் வலம் புரித் தீவின் சிற்பங்கள் எல்லாம் பொடிப்பொடியாகிப் போய் விட்டன என்ற செய்தி அரண்மனையிலிருந்த அத்தனை உள்ளங்களையும் நெருப்பிலே கொண்டு போட்டது போல் துடி துடிக்கச் செய்தது! ஆத்திரமும் ஆவேசமும் தந்த வெறியிலே முதுமைப் பருவத்தின் தள்ளாமையையும் மீறிக் கொண்டு வலம்புரிப் பேரரசர் போர் வீரராக ஆயுதம் தரித்து நின்றார். அவருக்கு முன்னல் பாய்ந்தோடி வந்து வாளைத் தன் கையிலே பிடித்தாள் தரங்கவல்லி! இரகசிய வாசலில் நுழைந்து உயிர் தப்பிக்க வந்த குடி மக்கள் எல்லாரும் வேலும், சூலும், வாளும் ஏந்தி அணிவகுத்து நின்றார்கள்.



சாடிக் கொண்டு பறக்கிற ஒரு குதிரையிலே போர் உடை தரித்து வாளேந்திய கோலத்திலே வந்தாள் தரங்கவல்லி. ''இத்தனை பெரிய கலைச் செல்வங்கள், இத்தனை சௌந்தரிய மான சிற்பங்கள், மாடமாளிகைகள் — இத்தனையும் அழிந்து போன பிறகு உயிரைத் தாங்கும் பூச்சிகளாக இந்த மனித குலம் வலம்புரித் தீவிலே உயிர்ப் பாரத்தைச் சுமந்து ஊர்ந்துசெல்வதில் அர்த்தம் இல்லை!'' என்ற முடிவிலே, அத்தனை பெரிய பாண்டியப்படையை எதிர்த்து மடிவதற்காகத் தரங்கவல்லியின் தலைமையிலே அத்தனை சிறிய படை கோட்டை வாசலைத் திறந்து கொண்டு வெளியே வந்தது. ஆனால் இதென்ன!

''அம்மா! இளவரசியாரே! சமாதானக் கொடியைப் போல அல்லவா தெரிகிறது!'' என்றார் மந்திரநாயகம்! எங்கோ குகைக்குள்ளே யிருந்து பேசுவது போல் இல்லை அந்தப்பேச்சு! பாண்டியர்கள் படையெடுத்து வந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டதும் ஒலித்ததே அந்த நடுக்கம் இல்லை குரலில்! ஏதோ தங்களுக்குப் பயந்து போய் எதிரிகள் சமாதானக் கொடியைப் பிடித்து விட்டால், எத்தனை பெருமிதங் கலந்த ஏமாற்றம் தொனிக்குமோ, அத்தனை ஏமாற்றம் இருந்தது அவருடைய குரலில்!



''சமாதானக் கொடியா!'' என்று அலட்சியத்தோடு கேட்டாள் தரங்கவல்லி! ''சமாதானக் கொடியா!'' என்று ஆயிரம் குரல்கள் அந்த வார்த்தைகளை எதிரொலித்தன! அத்தனை குரல்களிலும் ஒரு ஏமாற்றம்; தாய் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்து வீர மரணம் அடைவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தும், அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது கை நழுவுகிறதே என்ற ஏமாற்றம்! அத்தனை பேரும் அப்படியே திகைத்துப்போய் நின்றார்கள்.


பாண்டியர்களின் வியூகத்தைப் பிளந்து கொண்டு வெள்ளை நிறமான குதிரை ஒன்று, பனிக்கட்டி பாய்ந்தோடி வருவது போலக் கோட்டை வாசலை நோக்கி வந்தது. அதன்மீ வீற்றிருந்த நாயகன் தன்னுடைய வல கையிலே சமாதானக் கொடியை தாங்கி நின்றான்.

''நில்லுங்கள் உடன்படிக்கைப் புற வந்து விட்டது. வீர களே! தமிழரின் மர வழுவாமல், உருவி வாள்களை உறையிலே செருகுங்கள்! சமாத னக் கொடி வரு றது!'' என்றாள் தரங் வல்லி. அடுத்த கண வலம்புரித் தீவி படை வீரர்கள், தா நாட்டுக்காகத் தியா கம் செய்யும் பொருட் டுத் தங்களுடை உடலிலிருந்துவெளியே கொண்டு வந்து நிறுத் திய உயிரை மீண்டு உடலுக்குள்ளே அனுப் புகிறமாதிரி, ஆயிர வாட்களையும் உறை யிலே செருகினார்கள்.

பாண்டியர்களின் வியூகத்திலிருந்து, சமா தானக் குதிரையைப் பின் தொடர்ந்து வெள்ளை நிற ஆடை கள் அணிந்த நூறு வீரர்கள் மூன்று மூன்று பேராக அணிவகுத்து வந்தார்கள். சாந்த மும் அமைதியும் தொனிக்கும் வண் ணம் மென்னடை நடந்து வந்தார்கள் அவர்கள்! அவர்களைத் தொடர்ந்து மூன்று வெண்புரவிகள் ஒட்டமில்லாத சிறு நடையிலே மெதுவாக, அமைதி யோடு வந்தன. இந்தப் புரவிகளைத் தொடர்ந்து அரசத் தேர் வந்தது சற்றுத் தூரம் நகர்ந்து வந்த தேர் கோட்டை வாசலை நெருங்கவும் நின் றது. அதிலிருந்து கீழே இறங்கிய பாண் டியஅரசகுமாரன் உறவுக் கோலத்திலே மௌனமாக இரண்டு பாதங்களும் நிலத்திலே நிதானத்தோடு பதித்து நடந்து வந்தான்! சென்ற ஆண்டில் இதே கோட்டைக்குள்ளே மணமகனாகத் திருமணக் கோலத்திலே வந்த பாண்டிய குமாரன், இப்பொழுது அரச உறவு மனப்பான்மையிலே தரங்கவல்லியை நோக்கி நடந்து வருவதைப் பார்த்த தும், வலம்புரி அரசகுமாரி குதிரையி லிருந்து கீழே குதித்தாள். (தொடரும்)

கடல் கண்ட கனவு

சோமு



மூன்றாம் அத்தியாயம்

கல்லின் இதயம்

படைகளை நிறுத்தி விட்
குதிரையிலிருந்து கீழே குதி
தரங்கவல்லி, தன்னை நோ
நடந்து வரும் பாண்டிய அ
குமாரனைச் சீற்றத்தோடு பா
தாள். தன்னோடு வாளை ஏந்
கையனுகப் போர் புரிவத
வரவேண்டியவன், சமாதா
கொடியை உயர்த்திக் கொண்
உறவு மனப்பான்மையி
நடந்து வருவது அவளுக்
சீற்றத்தை உண்டாக்கியிருந்த

"வலம்புரித் தீவின் இளவ
யாரே! தங்களுடைய கோ
துக்கு அஞ்சி நான் இந்த உற
கொடியை உயர்த்தவில்
இந்தப் புனிதமான நாட்டி
ஒரு புண்ணியவதி வீரமரண
அடைந்து விட்டாள். எதிர்த்
நின்று சண்டையிட்டு அவ
மடிந்திருந்தால் என் மன
இத்தனை துன்பப்படாது. ஆன
தன்னுடைய தாய் நாட்டி
வீழ்ச்சியைக் கண்டு அந்த அப
யின் உள்ளம் தன்னைத்தா
மாய்த்துக் கொண்டது என்பன
எண்ணும்போது என் மனம் து
துடிக்கிறது. தமிழ் நாட்டி
பாண்டிய மரபுக்கே அவமான
உண்டாகும்படியாக அந்த அப
யின் வீர உடம்பைப் பாதங்
ளால் மிதித்து அலட்சிய
செய்து விட்டது என்னு
டைய படை. அதற்கு
பிராயச்சித்தம் செய்
வேண்டியது என்னுடை
கடமை!"

"அரச குமாரரே
என்ன சொல்கிறீர்கள்
எங்களுடைய தாய் நா
டுக்காக அத்தனை வீர
தோடு தனது உயிரை
தியாகம் செய்து வி
டாளா ஒரு பெண்? ஒருவேளை. .

"ஆமாம். பாணன் மகள் சா
கேசியின் மரணத்துக்குக் காரண
மாக அமைந்த என்னுடை

படையின் அலட்சியத்துக்கும், அறியாமைக்கும் அவமானப் படுகிறேன். அந்தப் பெரும் பிழைக்கு வேறுவிதமான பிராயச்சித்தம் எனக்குத் தோன்றவில்லை. இந்தத் தீவின் கலைச் செல்வத்தை யெல்லாம் நிலைகுலையச் செய்துவிட்டதற்காக ஒரு பெண்ணின் உள்ளம் அத்தனை துடிப்புத் துடித்தது என்பதை எண்ணும் போது என் உள்ளத்தில் ஏற்படுகிற உணர்ச்சியின் சுமையை எப்படி வெளியிடுவேன்!''

இதன் பிறகு வலம்புரிப் படையிலே உண்டான குழப்பமும் வேதனையும் அளவு கடந்தவை! பாணர் மகள் சாருகேசி மரணம் அடைந்தாள், இந்தப் புண்ணியத் தாய் நாட்டின் புழுதியிலே புரண்டு உயிர் விட்டாள் என்ற செய்தி தரங்கவல்லியின் உள்ளத்தையும் உடம்பையும் உலுப்பியது!

இவ்வாறு சமணத் துறவி சித்திராங்கபூபதிக்குச் சொல்லி விட்டுத் தமிழ் நாட்டில் அக்காலத்தில் வீர மரணம் அடைந்தவர்களுக்கு 'நடுகல்' என்ற வீரக் கல்லை நாட்டி, அதன் மேல் வீர வரலாற்றை எழுதும் வழக்கம் இருந்ததற்கு ஏற்பச் சாருகேசிக்கு வீரக் கல் நாட்டிய கதையைச் சொன்னார்.

''சித்திராங்க பூபதி! தரங்கவல்லியும் பாண்டிய அரச குமாரனுமாகச் சேர்ந்து வலம்புரித் தீவில் அம்மன் கோவிலை யடுத்த பாறைகளுக்கு மத்தியிலே சாருகேசியின் உடலை அடக்கம் செய்து, அதன் மேலேயே 'நடுகல்' நாட்டினார்கள். அந்த நடுகல் வெறுங் கல்லாக இல்லை.

''யாழ் ஏந்திய ஒரு பெண்ணின் சிலையாக நின்றது அந்த வீரக் கல். கடல் அலைகள் தவழ்ந்து வந்து அந்தச் சிலையின் பாதங்களை நனைக்கும். பாண்டியன் கொடுத்த குவளைத் தண்ணீரைக் கூடக் குடிக்காமல் தனது உயிரை அந்தப் பூமியிலே தியாகம் செய்த வீராங்கனையின் உடலைச் சுற்றி என்றும் வற்றாத கடலின் அலைகள் நிரந்தரமாகச் சுற்றிச் சுற்றித் தவழ்ந்தன. எந்த யாழின் மறைவு அந்தப் பெண்ணின் இதயத்தில் நெருப்பைக் கொட்டியதோ, அதே பெரியாழ் சிற்ப வடிவத்தில் அந்தச் சிலையின் கைகளிலே ஒட்டிக் கொண்டு நின்றது. பௌர்ணமி இரவுகளில் நிலவு பொழிகிற குளுமையான வேளைகளில் அந்தச் சிலையைப் பார்த்தால், தரங்கவல்லியின் கண்ணுக்கும் பாண்டிய அரசகுமாரனின் கண்ணுக்கும் அது வெறும் கற்சிலையாகத் தோன்றாது. சாருகேசியே உயிர் பெற்று வந்து அந்தப் பாறைகளின் மேல் அமர்ந்து நிலவு பொழிகிற அந்த மோகனமான இரவில் தங்களுடைய உள்ளத்தைக் குளிர்விப்பதற்காக யாழ் வாசித்துக் கொண்டிருப்பது போலவே தோன்றும்! சில இரவுகளில் அலைகள் பொங்கிப் பொங்கி அந்தச் சிலையிலே வந்து யாழின் சிற்பத்தின் மேல் ஏறி இறங்கித் தவழும். அப்பொழுதெல்லாம் சப்த ஸ்வரங்களுமே ஒலிக்கும் அந்தச் சிற்பத்தில்! இதற்குக் காரணம், அந்தக் கற்சிலையைச் செய்து நிறுத்திய சிற்பிக்கு இசை ஞானமும் சிற்ப ஞானமும் அத்தனை அற்புதமான முறையில் ஒன்று சேர்ந்து அமைந்திருந்தது தான் என்று வலம்புரித் தீவின் மக்கள் சொன்னார்கள். ஆனால் தரங்கவல்லி அப்படி நினைக்கவில்லை. பாண்டிய அரசகுமாரனும் அப்படி நினைக்கவில்லை. சிற்பத்துக்குக் கீழே புதைந்து கிடக்கும் அதிசயமான பெண்ணின் இதயந்தான் அந்தக் கல்லிலே அப்படி ஒலி செய்கிறது என்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக் கொள்ளுவார்கள்!''

இவ்வாறு சொன்னார் சமணத் துறவி! அப்போது சித்திராங்கபூபதி கேட்டான்: ''பெரியவரே! அப்படியானால் தரங்கவல்லிக்கும் பாண்டிய அரச குமாரனுக்கும் திருமணம் நடந்ததா? அவர்கள்



ருவரும் அப்புறம் மனம் ஒன்று
சர்ந்து வாழ்ந்தார்களா?''
பூபதி இப்படிக் கேட்ட போது
வனுடைய குரலில் ஆவலும் கவலையும்
ரம்பி நின்றன. துறவி சொல்லுவார்:
'' பூபதி! கோபத்தோடும், ஆற்றாமை
பாடும் குதிரையிலேயிருந்து குதித்த
ரங்கவல்லிக்குச் சாருகேசியின் மரணச்
சய்தி ஒரு பெரிய அதிர்ச்சியாக
ருந்தது. வியூகத்தைப் பிளந்து
காண்டு சாருகேசியின் உடலைக் காணு
தற்கு விரைந்தாள் அவள்! அந்த
ரப் பெண்ணின் உடலைக் கண்டதும்
ரங்கவல்லி ஒரு குழந்தையைப்
பாலத் தேம்பித் தேம்பி அழுதாள்.
ற்று நேரத்துக்கு முன்பு வீரத்தோடு
ாளைப் பிடித்த தனது கைகளிலே, இப்
பாழுது சாருகேசியின் உடம்பை
ணைத்து எடுத்தாள். துவண்டு போன
மாலையைப் போன்ற அந்த உடம்பை
இரண்டு கைகளாலும்
அணைத்தவாறு கதறினாள்
ரங்கவல்லி! வீர மர
ணம் என்றும், உயிர்த்
தியாகம் என்றும் சாரு
கேசியைக் குறித்து நாம்
த்தனை சொன்னபோதி
லும், தரங்கவல்லி ஒரு
பெண்தானே? அவளு
டைய உள்ளத்தில் மற்ற

எல்லா உணர்ச்சிகளுக்கும் மேலாகப் பெண்மையின் மென்மையான இயல்புகள் விம்மி நின்றன! அவளால் அந்தக் காட்சியைத் தாங்க முடியவில்லை!''

இப்படிச் சொல்லி விட்டுச் சமணத் துறவி சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு அவர் மீண்டும்தொடர்ந்து சொன்னார் :—

'' சித்திராங்கபூபதி! இந்த உலகில் விரோதமும் பகையுணர்ச்சியும் சில சமயங்களில் எதிர்பாராத விதத்தில் அன்பாக மாறி விடுகிற விந்தையைப்



கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!


சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில் இல்லை



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/6/8

பார்க்கிறோம். நீங்கள் இளைஞர். வாழ்க்கை இப்பொழுதுதான் உங்களுக்கு ஆரம்பம் ஆகிறது. நான் அப்படி இல்லை. எத்தனையோ துன்பங்களை அனுபவித்து விட்டேன். அந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். கடுமையான பகை யுணர்ச்சிகூட, திடீரென்று வாஞ்சையாக மாறுகிறது. இதற்குக் காரணம் மனித உள்ளங்களில் உள்ள இலட்சிய நோக்கமும், எல்லா மனித மனங்களுக்கும் அடிப்படையாக அமைந்த அன்பு என்ற தத்துவமுந்தான்! எனவே, தரங்கவல்லிக்கும் பாண்டிய குமாரனுக்கும் திருமணம் நடந்தது குறித்து நான் வியப்படையவில்லை. அதிலும் சாருகேசியின் வீர மரணத்துக்குப் பிறகு அந்தப் பகைமையானது எப்படி வாழ முடியும்? சாருகேசியின் மரணத்தோடு அந்தப் பகைமையும் மரணம் அடைந்தது! பாண்டிய அரச குமாரனின் உள்ளத்தில் சாருகேசியின் மரணத்தால் ஏற்பட்டிருந்த மனமாற்றத்தைத் தரங்கவல்லி மிக நன்ருகப் புரிந்து கொண்டாள். பொதுவாகத் துன்பப்படுகிற ஒரு உள்ளம் ஆறுதல் சொல்லக்கூடிய இன்னொரு உள்ளத்தை நாடுவது இயற்கை. அந்த இன்னொரு உள்ளம் துன்பத்தை எத்தனை தூரம் பகிர்ந்து கொள்கிறதோ அத்தனைக்கு இந்த இரண்டு உள்ளங்களுக்கும் நேசமும் ஐக்கியமும் உண்டாகி விடுகின்றன. இது நுட்பமான மனத் தத்துவம். தரங்க வல்லியின் விஷயத்திலும் இப்படித்தான் நடந்தது. சாருகேசியின் மரணத்தினல் வேதனைப்பட்ட அந்த உள்ளத்தில், பாண்டிய அரசகுமாரனின் அநுதாபமும் அவனுடைய பச்சாத்தாபமும் சேர்ந்து ஓர் உறவை உண்டாக்கி விட்டன! நடுகல் நாட்டும் அந்த விழாவில் தரங்கவல்லியும் பாண்டிய அரசகுமாரனும் சதிபதிகளாக நின்று அந்தச் சடங்கைச் செய்தார்கள்!''

இவ்வாறு கூறி முடித்தார் சமணத் துறவி. பூபதி ஒன்றுமே பேசவில்லை. அவனுடைய மனத்தில் சாருகேசியின் மரணம் உணர்ச்சிச் சுழல்களை வீசிக் கொண்டே யிருந்தது. அன்றொருநாள் வலம்புரித் தீவின் நிலவுப் பாறையிலே தான் பார்த்த சிலை சாருகேசியின் சிலைதான் என்றும், அந்தச் சிலையிலே ஒலித்த இசையிலே பாணர் மகளின் இதயந்தான் துடிதுடிக்கிறது என்றும் தெரிந்து கொண்டதில், இப்பொழுது அவனுக்கு ஒரு விவரிக்க முடியாத தாபம் உண்டாயிற்று.

''பெரியவரே! அப்படியானல் பாண்டியர்கள் அந்தச் சம்பவத்தோடு வலம்புரித் தீவை மறந்து விட்டார்களா?''

துறவி சொன்னர்: ''மறந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்ருல் பாண்டிய அரசகுமாரன் அதற்குப் பிறகு பாண்டிய நாட்டுக்குத் திரும்பவில்லை. 'இந்த வலம்புரித் தீவின் புனர் வாழ்வுதான் இனி என்னுடைய இலட்சியம். அந்த முடிவோடு நான் இங்கே குடியேறி விட்டேன். இந்தத் திருமண உறவு என் தந்தைக்கு இப்பொழுது சீற்றத்தை உண்டாக்கினல் என்னை மன்னித்து விடும்படி அவரிடம் சொல்லுங்கள். அவருடைய ஐந்து குமாரர்களில் நான் ஒருவன். ஐவரில் ஒருவனை மறந்து விடும்படி பாண்டிய வேந்தரிடம் சொல்லி விடுங்கள்!' என்று பாண்டியத் தளபதியிடம் சொல்லி அனுப்பினன் அரச குமாரன். அன்று வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குத் திரும்பிய பாண்டிய சேனை அன்ருேடு அந்தத் தீவின் நினைவையே மறந்து விட்டது. வலம்புரித் தீவு கடலுக்கு மத்தியிலே தன்னந் தனியாக நின்றது!''

''பெரியவரே! பாண்டிய அரசகுமாரனின் இலட்சியமும் இதுவரை நிறைவேற வில்லையே! வலம்புரித் தீவுக்கு இன்னும் புனர் வாழ்வு ஏற்படவில்லையே! எதிர்பாராத சிக்கல் அல்லவா ஏற்பட்டிருக்கிறது! இதற்கு என்ன காரணம்? தரங்கவல்லிக்கும் பாண்டிய அரசகுமாரனுக்கும் ஏற்பட்ட உறவிலே ஏதாவது விபரீதம் நேர்ந்ததா?'' என்று கேட்ட பூபதிக்குச் சமணத் துறவி தரங்கவல்லியின் வாழ்விலே ஏற்பட்ட அந்த முக்கியமான சம்பவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

நான்காம் அத்தியாயம்

பாண்டிய குமாரன்

வலம்புரித் தீவின் அரச மாளிகையிலே மிகவும் அழகான இடம், மேல் உப்பரிகையின் நிலா முற்றந்தான். அந்த நிலா முற்றத்திலிருந்து பார்த்தால் வலம்புரித் தீவு முழுவதுமே கண்ணுக்குத் தெரியும். அது மட்டுமல்ல, சுந்தரத் தீவைச் சுற்றி அலை வீசிக் கொண்டு கோஷிக்கும் நீலக் கடலும், எல்லையற்ற அதன் பரப்பும் நன்ருகத் தெரியும். வலம்புரிக் கரையிலே

நிற்கும் கலங்கரை விளக்கும் அந்த விளக்கிலிருந்து கூர்மையான ஒளிக் கற்றைகளைச் சிதறிக் கொண்டு சுழலும் சந்திர காந்தக் கல்லும், நிலா முற்றத்தி லிருந்து பார்த்தால் மனத்தை மயக்கும்! வலம்புரி அம்மனுடைய கோவிலும், அந்தக் கோவிலைச் சுற்றி நிற்கும் சிற்பங் களும் ஏதோ ஒரு கனவு போல, நிலா முற்றத்தி லிருந்து பார்ப்பவர்களின் கண்ணுக்கு முன்னால் எழுந்து நிற்கும்! ஆனால் இப்பொழுதோ?

புதிதாக மணமாகிய பாண்டிய அரச குமாரனும் தரங்கவல்லியும் அந்த நிலா முற்றத்துக்கு வந்தார்கள். நூதன மாகப் பிறந்த அன்பின் வேகம் எப் பொழுதுமே அதிகமாகத்தான் இருக்கு மென்றாலும், அந்த அன்புக்குக் காரண மாக அமைந்த சோகமான சம்பவத் தின் துயரம் மனத்தை விட்டு அகலா மல்தான் இருந்தது. அந்தச் சோகத் தின் அஸ்திவாரத்திலே கட்டப்பட்ட அன்புக் கோவில்தான், பாண்டிய குமார னுக்கும், தரங்கவல்லிக்கும் ஏற்பட்ட பாசம். அந்தப் பாசம் எத்தனை பல மாக இருந்தாலும் அதன் அஸ்திவாரத் துக்குள்ளே சாருகேசியின் இதயம் பொதிந்து கிடந்தது.

''தரங்கவல்லி!'' என்று அழைத்தான் பாண்டிய குமாரன். அவனுடைய குரலில் ஏக்கம் இருந்தது.

''தரங்கவல்லி! நான் எத்தனை பெரிய பாபம் செய்துவிட்டேன் என்பது இந்த நிலா முற்றத்திலே நின்று பார்த்தால் தான் கண்ணுக்கு நன்றாகப் புலப்படு கிறது! இதோ தெரிகிற வலம்புரி அம் மன் கோவிலும், சுற்றி நிற்கிற இடிந்த சிற்பங்களும், கண்ணுக்குத் தெரிகிற எல்லை யெங்கும் சிதைந்தும் அழிந்தும் சிதறியும் போய்க் காணப்படுகிற இத் தனை நாசக் காட்சியும் என்னுடைய பாபத்தின் சின்னங்கள். ஒரு மலர்ச் செடியின் அருமை காட்டு மிருகத்துக் குத் தெரியுமா? சாருகேசி என்ற மலர்க் கொடியை என்னுடைய படை தரை யிலே தேய்த்து மெழுகிவிட்டது. வலம் புரி என்ற நந்தவனத்தை என்னுடைய பாபச் செயல் சின்னா பின்னமாக அழித்து மெழுகிவிட்டது! அதைத்தான் இந்த நிலா முற்றத்திலிருந்து பார்க் கிறேன்! மிருகத் தனமான கோபம் எத்தனை பொல்லாதது என்பதை இந் தக் காட்சி எனக்கு எடுத்துக் காட்டு கிறது!'' என்றான் பாண்டியகுமாரன். தரங்கவல்லிக்கு இந்த வார்த்தை களைக் கேட்க மிகவும் கஷ்டமாக இருந் தது. சொன்னாள்:

''கோபம் கொடியது என்பதை ஒப் புக் கொள்ளுகிறேன். ஆனால் இந்த அரச குடும்பத்தோடு உறவு கொள்ள வேண்டும் என்று நீங்கள் அத்தனை தூரம் ஆர்வமாக இருந்ததால்தானே, அந்தத் திருமணம் முறிந்து போனதில் அத்தனை கோபம் உண்டாயிற்று உங்களுக்கு! அதை நன்றாகப் புரிந்து கொள்ளு கிறேன். ஆனால் அதைப் பற்றி இனிக் கவலைப்படுவதினால் என்ன பயன்? அத்தனை கோபத்துக்கும் சேர்த்து இப் பொழுது நீங்கள் இத்தனை மாறி விட் டீர்கள் அல்லவா? அது போதாதா?'' என்றாள் தரங்கவல்லி. பாண்டியன் சொல்லுவான்:

''மனத்தின் அமைதிக்கு இப்படி ஒரு புதிய வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டு விட்டேன். அது பற்றி மகிழ்ச்சிதான். என்றாலும் என் னுடைய பாபத்துக்கு முழுப் பிராயச் சித்தம் இன்னும் செய்தாகவில்லை!'' இப்படிச் சொல்லும்போது பாண்டிய குமாரனின் விழிகள் கலங்கின. தரங்க வல்லி கேட்டாள்:

''அன்பே! நீங்கள் என்ன சொல்லு கிறீர்கள்? உங்களுடைய ஆத்திரத்தில்

வெகுமதி!



ங்கள் செய்துவிட்ட காரியங்களுக்குப் ராயச்சித்தமாகத்தான் இப்பொழுது ந்தத் தீவிலேயே தங்கி விட்டீர்களே. ங்களுடைய தந்தையையும், உறவினர் ளையும், ஊரையும், சுற்றத்தையும் ல்லாம் மறந்து இந்தத் தீவின் புனர் ாழ்வுக்காகவே இங்கு தங்கிவிடுவ ாகத் தீர்மானித்தீர்களே, அதைவிட ம்லான பிராயச்சித்தம் வேறு என்ன ருக்கக்கூடும்?'' என்று கேட்ட தரங்க ல்லிக்குக் கண்ணிலிருந்து தாரை ாரையாகக் கண்ணீர் பொங்கி ஓடியது. வளுக்கு அருகிலே சென்று தனது மலுடையினுல் தரங்கவல்லியின் கண் ளைத் துடைத்தான் பாண்டியகுமாரன்.

''வல்லி! என்னுடைய மனத்துக்கு ஆறுதல் சொல்லுகிருய் நீ! ஆனுல் அப்படி ஆறுதல் வார்த்தைகள் சொல் லிக் கொண்டு வரும்போதே உன்னையும் றி ஒரு பெருந் துயரம் உன்னை வாட்டு றது. அந்தத் துயரத்தை என்னிடம் வெளியிட்டுக் கூருமல் மனத்துக்குள்ளே அடக்கிக்கொள்ளப் பார்க்கிருய். ஏன் னக்கு இத்தனை தயக்கம்? தரங்கவல்லி! ன்னுடைய உள்ளத்தின் துயரத்தை ன்னிடம் சொல்லம்மா!''

இவ்வாறு அன்பும் பரிவும் மேலிட்டவ ைகக் கேட்டான் பாண்டிய குமாரன். தரங்கவல்லி நிலா முற்றத்தில் இருந்த ளிங்குக் கட்டிலிலே போய் அமர்ந் தாள். பாண்டிய குமாரனும் அவ ளாடு நடந்து சென்று அந்தக் கட்டி யில் அவளுக்கு அருகே அமர்ந்து கொண் டான். அரசகுமாரி தரங்கவல்லி பேச ஆரம்பித்தாள்:

''அன்பே! என் மனத்தில் உள்ளதை ங்களிடம் கட்டாயம் சொல்லத்தான் பாகிறேன். ஆனுல் அதற்கு முன்பு நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும்!'' என்ருள் தரங்கவல்லி.

''வாக்குறுதியா! எத்தனை வாக் குறுதிகள் வேண்டும், கேள். தாராள ாக உறுதி கூறுகிறேன்!''

''பாண்டிய குமாரரே! நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்ல மாட் டேன் என்று உறுதி சொல்ல வேண்டும். ந்தக் காரணத்தைக் கொண்டும் ங்கள் இங்கிருந்து செல்லக் கூடாது. அப்படி ஒருவேளை இந்த வலம்புரித் தீவிலிருந்து போகும்படி நேர்ந்தால் என்னையும் உங்களோடு அழைத்துச் சென்று விட வேண்டும்!''

இவ்வாறு சொன்னுள் தரங்கவல்லி. அதைக் கேட்டுப் பாண்டிய குமாரன் புன்னகை செய்தான்.

''கண்ணே! உன்னை மறந்து விட்டு வேறு ஒரு பெண்ணின் மோக வலையில்



திருவனந்தபுரம் ரிடயர்டு ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ கோவிந்தசாமி, பி. ஏ., பி. எல், அவர்கள் குமாரி சௌ. சீதாலக்ஷ்மிக்கும் கீழாம்பூர் ஸ்ரீ ஏ. ஏ. சங்கரநாராயண அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி ஹரிஹரன் பி. ஏ. அவர்களுக்கும் 9-9-56ந் தேதி அன்று திருவனந்தபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

விழுந்து விடுவேன் என்று பயப்படு கிருயா! என்ன பைத்தியக்காரத்தன மான எண்ணம் இது! உன்னுடைய அழகும், கவர்ச்சியும், உன்னுடைய குண நலமும் உனக்கே தெரியவில்லை. அதனுல்தான் இப்படிப் பயப்படு கிருய்!'' என்ருன் பாண்டியன்.

''இல்லை. அதற்குச் சொல்லவில்லை. என்னை நீங்கள் இங்கே தனியே விட்டு விட்டுத் தமிழ் நாட்டுக்குச் சென் ருல் உங்களுடைய மனிதர்கள் உங்க ளுக்குப் பெரும் இடையூறு செய் வார்கள் என்று பயப்படுகிறேன். அவர் களை யெல்லாம் மறந்து விட்டு நீங்கள் இங்கேயே தங்கியது அவர்களுக்கு அத் தனை ஆத்திரத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை!'' என்ருள் தரங்கவல்லி! எத்தனை வீரம் மிகுந்தவ ளாக இருந்தாலும் கணவனுக்கு மனைவி, அவளும் ஒரு பெண்தானே! அதனுல் இப்படிச்சொன்னுள் என்பதைப் புரிந்து கொண்டு விட்ட பாண்டியகுமாரன், தரங்கவல்லியின் விருப்பப்படியே உறுதி செய்து கொடுத்தான். அதன்பேரில் தரங்கவல்லி சொன்னுள் :—

''பாண்டியகுல திலகமே! என் னுடைய உள்ளத்தில் எந்த மகிழ்ச்சிக்கு மத்தியிலும் ஒரு பெரிய துயரம் என்னை வாட்டி வருகிறது. அந்தத் துயரத் துக்கு ஒரு முடிவு ஏற்பட்டால் ஒழிய நமது இல்லறம் குறையுள்ள வாழ்க்கை யாகத்தான் கழியும்! அந்தத் துயரம் நீங்க வேண்டுமானுல், இந்தத் தீவி லிருந்து மறைந்து போய்விட்ட பேரி



டெல்லி ஸ்ரீ. ஏ. சுந்தரேச அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி எஸ். சுப்ரமணியன் பி.ஏ. (ஹானர்ஸ்) அவர்களுக்கும், தக்ஷிண ரயில்வே கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ் ஆபீஸ் பெரம்பூர், ஸ்ரீ. வி. ஸ்ரீநிவாசன் அவர்கள் குமாரி சௌ. விஜயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

யாழ் மீண்டும் இந்தத் தீவுக்கு வந்தாக வேண்டும். ஓர் ஏழைப் பாணன் மகள் இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்த விலை மதிக்க முடியாத ஆருயிருக்குச் சாந்தி தர வேண்டிய பெரிய கடமை எனக்கு இருக்கிறது. நான் சிரிக்கும்போதும், நான் உங்களோடு உல்லாசமாகப் பேசும்போதும், நீங்களும் நானும் பூரண நிலவிலே களிப்போடு பேசித் திரியும்போதும் என் இதயத்தின் அந்தரங்கத்தில் இந்தக் கடமை யுணர்ச்சி 'சுருக்' 'சுருக்' கென்று முள் குத்துவதுபோல வேதனை தருகிறது. நம்முடைய இல்லறத்தின் களியாட்டங்களுக்கு இருப்பிடமாக உள்ள காதற் கோயிலின் அஸ்திவாரத்துக்குள்ளே, ஒரு ஏழைப் பாணரின் ஏழை மகள் மறைந்திருக்கிறாள். நம்முடைய உல்லாசச் சாலையின் அஸ்திவாரத்துக்குள்ளே ஒரு மென்மையான சாருகேசியின் இதயம் துடித்துக் கொண்டேயிருக்கிறது! அந்தத் துடிப்பு ஒவ்வொரு கணமும் என்னுடைய கடமையை எனக்கு இடித்துக் கூறுகிறது. நான் அந்தப் பாணன் மகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை எனக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டே யிருக்கிறது.''

இவ்வாறு கூறினாள் தரங்கவல்லி. அவளுடைய முகம் வெளிறிப் போயிருந்தது. மறைந்துபோன ஒரு ஆன்மாவின் துடிப்பு இப்பொழுது தரங்கவல்லியின் இமைகளிலே வந்து துடிதுடித்துக் கொண்டிருந்தது. அதைக் கவனித்த பாண்டிய அரச குமாரன் தரங்கவல்லிக்கு ஒரு மகத்தான வாக்குறுதி செய்து கொடுத்தான்.

''தரங்கவல்லி! இனி இந்தப் பாண்டிய குமாரன் பிரளயமே வந்தபோதிலும், தரங்கவல்லியைக் கைவிட்டு ஓடமாட்டான். இனி இந்தப் பாண்டிய குமாரனின் ஒரே இலட்சியம், மறைந்து போன அந்தப் பேரியாழை மீண்டும் இந்த வலம்புரித் தீவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே! இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு மனம், மொழி, மெய் மூன்றையுமே அர்ப்பணம் செய்கிறேன்!'' என்று வாக்களித்தான்.

நிலா முற்றத்தில் ஒரு மாபெரும் மௌனம் நிலவியது. பாண்டிய அரச குமாரனின் வாக்குறுதியைக் கேட்டு இயற்கையன்னையே ஸ்தம்பித்து நின்று விட்டது போல் இருந்தது, அந்த மௌனம்! ஏனென்றால் நிறைவேறாத வாக்குறுதிகளும், முற்றுப் பெறாத கனவுகளுமே மனித இயல்பாகப் போய் விடும்போது, இயற்கை அதைக் கண்டு மௌனம் சாதிக்க வேண்டியதுதானே!

சமணத்துறவி இப்படி முடித்தார் கதையை. வானத்தில் சூரியன் உதயமாகிக் கொண்டு வந்தது. காலைப் பறவைகள் இனிமையான இசையைக் காற்று வெளியிலே தூவிக் கொண்டு வானத்திலே பறந்தன.

''பெரியவரே! கதையை முடித்து விட்டீர்கள். ஆனால் தரங்கவல்லியும், பாண்டிய குமாரனும் என்ன ஆனார்கள் என்ற விவரத்தை இன்னும் சொல்லவில்லையே. சந்திரசூடன் யாழோடு ஓடிப்போனவன் எங்கே போய்ச் சேர்ந்தான், அவனுடைய கதி என்ன ஆயிற்று என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா? சாருகேசியின் பெண் குழந்தை கண்ணற்ற கடலிலே மிதந்து கடலிலே ஆழ்ந்து விட்டதா? அல்லது உயிரோடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறதா என்று அறிந்து கொள்ள எத்தனையோ ஆவலாக இருக்கிறதே! இந்த விவரம் எல்லாம் எனக்குத் தெரியவேண்டாமா? இந்த முக்கியமான விவரங்களை எனக்குச் சொல்வதில் ஏதாவது பிசகு இருக்குமானால் சொல்ல வேண்டாம். இல்லையென்றால் கட்டாயம் சொல்ல வேணும்!'' என்று கேட்டான் பூபதி.

''வாருங்கள்! நடந்து கொண்டே பேசுவோம்'' என்று சொல்லிச் சித்திராங்க பூபதியை அழைத்துக் கொண்டு ஏழடிப் பட்டத்திலிருந்து புறப்பட்டார் சமணத் துறவி. (தொடரும்)



கண்ட கனவு

சோ

ஐந்தாம் அத்தியாயம்
பல்லவர் பரம்பரை

சமணத் துறவி ஏழடிப் பட்டத்தில் அமர்ந்தவாறு சித்திராங்க பூபதிக்குச் சொன்ன பேரியாழின் வரலாறு ராஜ சிம்ம பல்லவன் காலத்தில் நடந்தது. ராஜசிம்ம பல்லவன் பட்டத்துக்கு வந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகியிருந்தன, அந்தச் சம்பவம் நடந்தபோது!

சந்திரசூடன் என்ற மந்திரி குமாரன் தமிழ் நாட்டை விட்டு வலம்புரித் தீவுக்குச் சென்றபோது, ராஜசிம்ம பல்லவன் தனது ஆயுட் காலத்தில் பேரியாழைக் காணும் பாக்கியம் தனக்குக் கிடைக்கும் என்றும், மகேந்திரவர்ம பல்லவன் முதலிய தனது முன்னோர்கள் இசையைப் பற்றிச் செய்து முடித்திருந்த ஆராய்ச்சிகளை யெல்லாம் பேரியாழை வைத்துக் கொண்டு தானே தொடர்ந்து நடத்தலாம் என்றும், மனப்பூர்வமாக நம்பினான். ஆனல் நடப்பு வேறு விதமாக இருந்தது.

தமிழ் நாட்டில் மகேந்திரவர்ம பல்லவனும் அவனுடைய மகன் நரசிம்மவர்மனும் எத்தனை பெரும் புகழோடு அரசாண்டார்களோ, அதே போன்ற பெரும் புகழுடன் ராஜசிம்மனும் வீரப் பேரரசனுக விளங்கி இந்த மண்ணுலகிலிருந்து மறைந்தான். சங்கீதத்திலும் மற்ற நுட்பமான கலைகளிலும் அபாரமான தேர்ச்சி பெற்றிருந்ததோடு, வடமொழியிலும் தமிழ் மொழியிலும் அளவு கடந்த ஊக்கம் செலுத்திப் பல புலவர்களையும் ஆதரித்து, வள்ளல் என்ற மகத்தான பெயரோடு மறைந்தான் ராஜசிம்மன். ஆனல் அவனுடைய இறுதி ஆசையாகிய பேரியாழ் ஆராய்ச்சி அவன் காலத்தில் நடவாமல் போயிற்று! காரணம், வலம்புரித் தீவிலிருந்து சந்திரசூடன் யாழை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்டபோது, செந்தமிழ் நாட்டில் ராஜசிம்மன் மறைந்து பரமேசுவர வர்மன் பட்டம் சூடவேண்டிய காலம் வந்து விட்டது! இருபது ஆண்டுகளுக்கு மேல் அற்புதமாக அரசாண்டு வந்த ராஜசிம்மன் மரணம் அடைந்




தான்! அவனுடைய மகன் பரமேசுவரவர்மன் பட்டம் சூடி அரசனாகக் கோலம் தரித்தான்! அவனாவது தந்தையின் கடைசி இலட்சியமாகிய பேரியாழைக் கண்ணால் பார்த்தானா என்றால் அதுவும் இல்லை!

யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வலம்புரித் தீவிலிருந்து புறப்பட்ட சந்திரசூடன், அந்தச் சிறிய ஓடத்திலே எத்தனையோ பல இடையூறுகளைச் சமாளித்துக் கொண்டு தமிழ் நாட்டுக்கு வந்த போது, பரமேசுவரவர்மனுடைய ஆட்சி நடந்து கொண்டிருந்தது! எப்படி நடந்து கொண்டிருந்தது? எத்தனையோ பல பிரதானிக்ளின் பகையும், இதுவரை மடங்கி நின்ற பல குறுநில மன்னர்களின் எதிர்ப்புமாகத் தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி ஆடிக்கொண்டிருந்தது! பரமேசுவர வர்மன் ராஜசிம்மனுக்குப் பின்னால் பட்டம் சூடினான் என்பதைத் தவிர, மற்றப்படி ராஜசிம்மனுடைய இலட்சியங்களையெல்லாம் தொடர்ந்து நடத்துவதற்கோ அல்லது அவனுடைய வீர பரம்பரையை நிலைநாட்டுவதற்கோ வேண்டிய துணிவும் சாமர்த்தியமும் அவனிடம் இல்லை. அப்படியே இருந்தாலும் பிறர் அவற்றைப் புரிந்து கொண்டு அடங்கி யிருக்கக்கூடிய சூழ்நிலை அப்பொழுது இல்லை! இந்த இக்கட்டான இடைக்காலத்தில் ஐந்தே ஆண்டுகள் அரசாண்டான் பரமேசுவர வர்மன்! இந்த் ஐந்து ஆண்டுகளுக்குள் பல்வேறு குழப்பங்களையும், வேதனைகளையும், சிக்கல்களையும் எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் திணறினான் அவன்! ஆட்சிக்கு வந்து ஐந்தாவது ஆண்டின் முடிவில் பரமேசுவர வர்மன் தனக்குப் பின் சந்ததியின்றி மரணம் அடைந்தான்!

பல்லவர் காலத்தை "இசைக் காலம்" என்று புலவர்கள் எல்லாம் போற்றிய போதிலும், அந்த இசைக் காலத்தின் இசை யெல்லாம் ராஜசிம்ம பல்லவனுடைய மகனான பரமேசுவர வர்மனின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ஸ்வர சுத்தம் இல்லாமல் குழம்பி நின்றது என்று சொல்ல வேண்டும்! இசையின் இன்னொலி இப்படிக் குழம்புவதற்கு ஆரம்பித்தபோதுதான் சந்திரசூடன் பேரியாழோடு தமிழ் நாட்டு மண்ணிலே காலடி எடுத்து வைத்தான்!

ராஜசிம்ம மகாராஜன் மறைந்தான் என்றும் அவனுடைய மகன் பட்டம் சூடிவிட்டான் என்றும் கேள்விப்பட்டதுமே சந்திரசூடனுக்கு இதயத்தில் தீப் பிடித்தது! 'புனிதம் நிறைந்ததும், தனதுகுருநாதனின்பூஜைக்கு உரியதும், சாருகேசியின் வாஞ்சைச் சின்னமாக



விளங்கியதுமான அந்தப் பேரியாழை ஒரு திருடனைப் போல வலம்புரித் தீவிலிருந்து துரோகம் செய்து எடுத்துக் கொண்டு வந்ததின் முதலாவது விளைவு தானே இது!' என்று எண்ணிப் பார்த்தான் சந்திரசூடன்! அந்த எண்ணத்தைத் தாங்க முடியவில்லை அவனால்! "**ஆகமப் பிரியன்**" என்றும், "**சங்கர பக்தன்**" என்றும், "**சிவ சூடாமணி**" என்றும், "**இரண ஜயன்**" என்றும் பல பட்டங்கள் ராஜசிம்மனுக்கு இருந்த போதிலும், சந்திரசூடன் சம்பந்தப்பட்டவரை அந்த எல்லாப் பட்டங்களையும் விட அவன் மிகவும் மதித்துப் பணிந்த பட்டம் ஒன்று ராஜசிம்மனுக்கு இருந்தது. அதுதான் "**வாத்திய வித்தியாதரன்**" என்ற பட்டம்! இந்தப் பட்டத்தைப் பல பெரியோர்களும், கலைஞர்களும், இசை ஞானியர்களும் சேர்ந்து ராஜசிம்ம மகாராஜனுக்கு வழங்கியிருந்தார்கள். சந்திரசூடன் நினைத்தான்: "நாம் இப்பொழுது இத்தனை கஷ்டப்பட்டு எடுத்துக் கொண்டு வந்திருக்கும் பேரியாழை மட்டும் நமது ராஜசிம்ம மகாராஜன் பார்த்திருந்தால் எத்தனை மேன்மையாக இருந்திருக்கும்! ஏற்கனவே வீணையில் கைதேர்ந்த இந்த அரசன் நமது பேரியாழையும் பயின்று தனது சங்கீத ஆராய்ச்சிகளை இந்தப் பேரியாழில் நடத்தியிருந்தால், எத்தனை உயர்வாக இருந்திருக்கும்! வாத்திய

வித்தியாதரன் என்ற அந்தப் பட்டத்துக்குப் பொருத்தமான வாத்தியம் அல்



லவா இந்தப் பேரியாழ்''— இப்படி நினைத்து மனம் வருந்தினுன் சந்திரசூடன்! எத்தனையோ விபரீதங்களையும், துரோகச் செயல்களையும் செய்து இந்தப் பேரியாழோடு தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்துங்கூட, அதன் நோக்கம் நிறை வேருமல் போய் விட்டதே என்று சந்திரசூடன் அன்ன ஆகாரமின்றி ஒரு வார காலம் வருந்தினுன்! பரமேசுவர வர்மனுடைய ஆட்சியின் குழப்பங்களுக்கு மத்தியிலே, சந்திரசூடனையும் அவன் கொண்டு வந்துள்ள யாழையும் பற்றி யாருக்கு என்ன கவலை? இத்தனை கஷ்டத்தோடு திரும்பி வந்திருக்கும் தன்னை யார் இனிமேல் புரிந்து கொண்டு வரவேற்கப் போகிருர்கள்? பரமேசுவர வர்மனுடைய அரச சபையில் பேரி யாழுக்கு என்ன இடம்? இதற்காகவா இத்தனை பெரிய பாவம் செய்து விட்டோம்.—இப்படி யெல்லாம் எண்ணிய சந்திரசூடன் காஞ்சிமா நகரத்தின் கோட்டைக்குள்ளேயே நுழையவில்லை! அவனேடு வந்த ஒற்றர்களுக்கும் ராஜசிம்மனுடைய மறைவு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருந்ததால், அவர்களும் சந்திரசூடனேடு வாதாடவில்லை. ''எனக்கும் காஞ்சிமா நகருக்கும் இனி எவ்விதமான சம்பந்தமும் இல்லை. வாழ்வில் நான் செய்துவிட்ட மாபெரும் தீவினையின் பயன் என்னைச் சூழ ஆரம்பித்து விட்டது. பேரியாழில் எனக்கு இருந்த மோகத்துக்கு இனிமேல் எவ்விதமான அவசியமோ நியாயமோ கிடையாது!'' இவ்வாறு சொல்லி ஒற்றர்களிடம் விடைபெற்ருன் சந்திரசூடன்.

ஒற்றர்களின் தலைவனுக்குச் சந்திரசூடனுடைய நோக்கம் புரியவில்லை. கேட்டான்:

''மந்திரி குமாரரே! இந்த யாழில் உயிரையே வைத்திருந்த நமது ராஜசிம்ம மகாராஜனின் அந்த ஆருயிர், இந்த மண்ணுலகிலிருந்து பிரிந்து விட்டது என்பது உண்மைதான். ஆனுல் அந்த உயிர் சாந்தம் அடைய வேண்டும் என்ருல் இந்தப் புண்ணிய நாட்டிலே பேரியாழ் எழுந்து ஒலிக்க வேண்டும் அல்லவா? அதைமறந்துவிட்டீர்களே?''

இவ்வாறு கூறினுன் ஒற்றர் தலைவன். இதைக் கேட்டதும் சந்திரசூடன் மிகுந்த துயரத்தோடு சொன்னுன்: ''தம்பீ! இந்தப் புனிதமான பேரியாழைப் பாபம் மிகுந்த என்னுடைய கைகளால் வாசிக்க வேண்டும் என்று கருதியா இதை இங்கே கொண்டு வந்தேன்? இல்லவே இல்லை. எந்தப் புனிதமான பேரரசன் இந்த யாழுக்காகக் காத்திருந்தானே, அந்த வாத்திய வித்தியாதரப் பேரரசனே, இந்த வாத்தியத்தை வாசிக்கும்படி செய்து, என்னுடைய பாபத்துக்கு ஈடேற்றம் காணலாம் என்று எண்ணித்தான் வலம்புரித் தீவிலிருந்து இதோடு புறப்பட்டேன்! ஆனுல் இனி அதற்கு வழி இல்லை! என்னுடைய தீவினையை நீக்கி எனக்கு நல்ல கதி காணவேண்டிய கடமை இனி என்னையே சார்ந்தது. அந்தக் கடமை இப்பொழுது என்னுடைய உள்ளத்தை மிகவும் அழுத்திக் கொண்டு கிடக்கிறது. இனிமேல் இந்தப் பாபத்திலிருந்து என்னை விடுவிக்கக் கூடிய புண்ணிய சரீரம் இந்தத் தமிழ் நாட்டில் இல்லவே இல்லை. அத்தகைய புண்ணியம் நீலமேக யாழ்ப்பாணரின் பரம்பரைக்குத்தான் உண்டு!''

இவ்வாறு சொல்லி விட்டு ஒற்றர்களிடமிருந்து அகன்றான் சந்திரசூடன். அதன் பிறகு அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் அனந்தம்! நல்வினை, தீவினை என்ற கொள்கையிலே நாட்டம் உள்ளவர்களும், அருக தேவனிடத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர்களுமான சமணத் துறவிகளின் சங்கத்திலே சேர்ந்து, தானும் ஒரு துறவியாக மாறி அந்தப் பேரியாழும் கையுமாக எங்கெங்கோ சுற்றி அலைந்தான் சந்திரசூடன். பாண்டிய நாட்டில் வலம்புரித் தீவைப் பற்றிப் பல செய்திகளை விசாரித்து அறிந்து கொண்டான். சாளுகேசியின் மரணமும், அவளுடைய குழந்தை படகிலே மிதந்த கதையும் சந்திரசூடனின் இதயத்தைப் பொடிப் பொடியாக்கின. கடைசியில் அந்தப் பெண் குழந்தை எங்கே இருக்கிறது என்று தேடித் திரிந்து கண்டு கொள்ளுகிறவரை சந்திரசூடன் அநுபவித்த துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல! துறவுக் கோலத்தில் இருந்த போதிலும், உள்ளத்தில் ஆசாபாசங்களின் சுழற்சியினால் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருந்தான் அவன்! அந்தக் குழந்தையைக் கண்டுபிடித்த பிறகாவது சந்திரசூடனுடைய மனக் குழப்பம் தீர்ந்ததா என்றால், அதுவும் இல்லை! அந்தச் சஞ்சலம் அதிகமாயிற்றே தவிரக் குறைகிற வழியாக இல்லை. அப்பொழுது நாட்டின் நிலைமையும், சம்பவங்களின் பிணைப்பும் அப்படி இருந்தன!

ஆமாம்; சந்திரசூடன் சமணத் துறவியின் கோலத்தில் யாழை வைத்துக் கொண்டு நாடெங்கும் சுற்றி அலைந்து தனது பெண் குழந்தையைக் கண்டுபிடித்தபோதிலும், தான் யார் என்றும் தனது கதை என்ன என்றும், யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், அதற்குள் தமிழ் நாட்டில் அரசியற் குழப்பங்கள் அத்தனை தூரம் அதிகரித்து விட்டிருந்தன! சந்திரசூடனுடைய சொந்த ஊராகிய கொடும்பாளூரில் வேளிர் குடும்பத்திலும் பல மாறுபாடுகள் ஏற்பட்டு விட்டன! பல்லவ அரசாட்சி பரமேசுவரவர்மனுக்குப் பிறகு நந்திவர்மன் என்ற சிறுவனுடைய உரிமையாகி, அதன் விளைவாக எதிர்ப்பும் வஞ்சகச் சூழ்ச்சிகளும் சிலந்தியின் வலையைப் போலத் தமிழ் நாட்டு அரசியலைச் சூழ்ந்து பின்னிக் கொண்டு நின்றன! இந்தப் பின்னலுக்கு மத்தியிலேதான் சித்தண்ண வாசல் மலையின் ஏழடிப் பட்டத்தில் சமணத் துறவி தமது கதையை முடித்துவிட்டு, சித்திராங்க பூபதியோடு நடக்க ஆரம்பித்தார்! சித்திராங்க பூபதியோ தரங்கவல்லியும் பாண்டிய குமாரனும், என்ன ஆனார்கள் என்று சொல்லும்படி சமணத் துறவியைக் கேட்டான்.

ஆறாம் அத்தியாயம்

சூரியோதயம்

ஏழடிப் பட்டத்திலிருந்து புறப்பட்ட சமணத் துறவி மிக்க கவலையோடு சித்திராங்க பூபதியுடம் பேச ஆரம்பித்தார். தரங்கவல்லியும் பாண்டியகுமாரனும் என்ன ஆனார்கள் என்பதைத் தொடர்ந்து சொன்னார் அவர்:

பாண்டிய அரச குமாரன் எப்படியும் பேரியாழை மீண்டும் வலம்புரித் தீவுக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்று கருதி, அதற்காகச் செய்த முயற்சிகள் மிகப் பல! சந்திர சூடனைத் தேடி எத்தனையோ ஒற்றர்களைப் பல திசைகளிலும் அனுப்பினான். ராஜசிம்ம பல்லவனுடைய அரச சபையிலே வலம்புரித் தீவின் பேரியாழ் இருக்கிறதா என்று இரகசியமாகத் தெரிந்து வரும்படி மிகவும் சாமர்த்தியசாலிகளான சில தூதர்கள் வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து முயன்று பார்த்தார்கள். பிறகு வலம்புரித்தீவின் அரசகுடும்பத்திலிருந்து சில பிரதானிகள் தமிழ் நாட்டுக்கு வந்து ஆராய்ந்தனர். ஆனால் பெரிய விந்தை என்னவென்றால், வலம்புரியிலிருந்து இங்கே வந்த யாரும் மீண்டும் தங்கள் தீவுக்குத் திரும்பிச் செல்லவே இல்லை! இந்த மர்மம் பாண்டிய குமாரனையும் தரங்கவல்லியையும் அளவு கடந்த வேதனையில் ஆழ்த்தியது. தரங்கவல்லியின் தந்தையாகிய பேரரசர் இந்தத் துன்பங்களை யெல்லாம் அந்தத் தள்ளாத வயதில் தாங்க முடியாமல் பெரும் வேதனையில் மாண்டுபோனார்!

இந் நிலையில், ராஜசிம்ம பல்லவன் மறைந்து, அவனுக்குப் பிறகு பரமேசுவர வர்மன் பட்டத்துக்கு வந்தான். அரசாட்சி மாறுதலில் பல சிக்கல்கள் இருந்தன. வலம்புரித் தீவின் பேரியாழைப் பற்றி யாருக்கு என்ன கவலை? தெற்கே பாண்டிய அரசர்கள் தங்கள் ஆட்சியை விரிவாக்கிக் கொண்டு வந்

ார்கள். கோச்சடையன் என்ற பாண்
ய மன்னன் மறைந்து அவனுடைய
த்திரர்களில் ஒருவனான மாறவர்மன்
அரசாட்சியை ஏற்றான். இப்பொழுது
அவனுடைய ஆட்சிதான் ஓங்கி நிற்
றது. நமது பல்லவ சாம்ராஜ்யத்திலோ
ரமேசுவரவர்மன் ஐந்து ஆண்டுகள்
ான் அரசாண்டான். அதற்குள் அவன்
றைந்தான். அவனுக்குச் சந்ததியில்லை!
இந்த நிலையில் உதயசந்திரனின் முயற்
யினால் நந்திவர்மன் இப்பொழுது
ட்டம் சூடியிருக்கிறான். பட்டம் சூடும்
போது சிறுவனாக விளங்கிய இந்த
அரசன் இன்று அரசியல் ஞானமும்,
டை பலமும் மிகுந்து நிற்கிறான். உதய
ந்திரனுடைய உதவியும் முத்தரையர்
ளின் உதவியும் அவனுக்குப் பக்க பல
ாக நிற்கின்றன. எந்த எதிர்ப்
புக்களையும் நன்றாகச் சமாளித்து விடு
ான் என்றே நாங்கள் அனைவரும் நம்பு
றோம்! ஆனாலும் எதிரியாகிய சித்திர
ாயனுக்கு இப்பொழுது வீரவிக்கிரமன்
ன்ற விடுதித் தலைவனுடைய சகாயத்
னால், கொடும்பாளூர் வேளிர்களின்
தவியும், மதுரைப் பாண்டியர்களின்
தவியும்சேர்ந்துகிடைத்திருக்கின்றன!
இந்த நிலைமையில் வெற்றி தோல்வியை
ாரால் எப்படி நிர்ணயித்துச் சொல்ல
டியும்? வலம்புரித்தீவை இரண்டு
ட்சியார்களுமே தங்களுடைய இரக
யப் படைத்தளமாக உபயோகித்துக்
காள்ள முயற்சி செய்கிறார்கள்! இந்த
யற்சியின் விளைவு என்ன ஆகும்
ன்பது நீங்கள் செய்கிற தீர்மானத்
தைப் பொறுத்துத்தான் இருக்கிறது!''
ன்றார் துறவி, சிரித்துக் கொண்டே.

''நான் தீர்மானிப்பது இருக்கட்டும்!
லம்புரிப் பேரரசரின் மரணத்துக்குப்
றகு தரங்கவல்லியும் பாண்டிய குமார
ும் என்ன ஆனார்கள்? ஒருவேளை
வர்களும் இப்பொழுது பாண்டிய
ட்டுக்கு வந்து விட்டார்களோ?''
ன்று கேட்டான் பூபதி.

''இளவரசே! வலம்புரிப் பேரரசர்
ரணம் அடைந்த பிறகு வலம்புரித்
வின் நிர்வாகத்தில் சோகத்திரை
ழ்ந்தது. பேரியாழ் ஒன்றிலேயே
ண்ணும் கருத்துமாக இருந்த தரங்க
ல்லிக்கு வாழ்க்கையில் விரக்தி
ண்டாகி விட்டது. பாண்டிய
மாரனோ இல்லறத்திலேயே நாட்டம்
ல்லாதவனைப் போலத் தாமரையிலைத்
ண்ணீராக உருள ஆரம்பித்தான்.
ரியாழ் வராதவரை தான் உயிரோடு
ருப்பதே பூமிக்குப் பாரந்தான்
ன்ற முறையில் மனம் வருந்தினான்
ண்டிய குமாரன்! வாழ்க்கை இப்படி
ஒரே விரக்தியில் கழிந்த போது
தான் ஒருநாள், தரங்கவல்லியும் பாண்
டிய குமாரனும் அரச நிர்வாகத்தை
அவர்களுடைய தாயாதிக் குடும்பத்தா
ராகிய உங்களுடைய அன்னையிடம் ஒப்
படைத்து விட்டு, அரச மாளிகையி
லிருந்து வெளியேறினார்கள். உங்க
ளுடைய அன்னையின் நிலை தரும சங்கட
மாக இருந்தது. ஏனென்றால், நீங்கள்
பிறந்தபோது தரங்கவல்லிக்குக் கல்
யாணமாகி யிருக்கவில்லை. தரங்கவல்
லியின் தந்தைக்கோ ஆண் சந்ததியில்லை.
எனவே அந்தக் காலத்திலேயே அரச



உரிமை தாயாதிகளாகிய உங்களுக்குத்
தான் போய்ச் சேரும் என்று மக்கள்
எல்லாரும் பேசிக் கொண்டார்கள்.
ஆனால் உங்கள் குடும்பத்தாருக்கோ
அரச நிர்வாகத்தில் எப்பொழுதுமே
விருப்பம் இல்லாமல் இருந்தது. பேரி
யாழ் மறைந்த பிறகோ என்றால்,
வலம்புரி நிர்வாகத்தைச் சூழ்ந்து நின்ற
தெய்வசாபம் எல்லாரையுமே அச்சப்
படுத்தியது! வலம்புரிச் சிம்மாசனத்
தின்மீது உங்கள் அன்னைக்குக் கொஞ்சங்
கூட விருப்பம் இல்லை! எனவே பாண்
டிய குமாரன் தரங்கவல்லியைத் திரு
மணம் செய்து கொண்டு அந்தத் தீவி
லேயே தங்கி விடுவதாகத் தீர்மானித்த

போது, உங்களுடைய குடும்பத்தாருக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த நிம்மதியை அதிக நாள் நீடிக்கவிடாமல், பாண்டிய குமாரனும் தரங்கவல்லியும் உலகையே வெறுத்து அரச மாளிகையிலிருந்து வெளியேற முற்பட்டதும், உங்கள் அன்னையும் உங்களுடைய உறவினர்களும் மிகவும் மனம்வருந்தினார்கள். எத்தனையோ சொல்லித் தடுக்கமுயன்றார்கள். ஆனால் தரங்கவல்லி எவருடைய வார்த்தைக்கும் செவி சாய்க்கவில்லை.



அரச போகத்திலே மிதந்து கொண்டு ஆனந்தத்திலே செல்லவேண்டிய தரங்கவல்லியும் பாண்டிய குமாரனும், உலகையே வெறுத்தவர்களாகி அரச மாளிகையிலிருந்து வெளியேறினார்கள். அரச நிர்வாகம் உங்கள் அன்னையிடம் ஒப்படைக்கப் பட்டது. பழைய அமைச்சராகிய மந்திரநாயகம் தரங்கவல்லியின் விரக்தியைக் கண்டு மனம் நொந்து கண்ணீர்வடித்தார்! ஆனால்யாராலும் தரங்கவல்லியின் தீர்மானத்தை மாற்ற இயலவில்லை!'' என்று கூறிவிட்டுச் சித்திராங்க பூபதியைப் பார்த்தார் சமணத் துறவி. அவன் கதையைக் கேட்கும் ஆவலில் மௌனமாயிருந்தான்.

சமணத் துறவி மேலும் கதையைத் தொடர்ந்தார்: ''இளவரசே! சிந்தியுங்கள்! சந்திரசூடன் செய்த காரியம் எத்தனை பெரிய விபரீதங்களிலே கொண்டு போய் விட்டு விட்டது, பார்த்தீர்களா? பேரியாழ் என்றால் வலம்பு[ரி]த் தீவில் என்னென்ன உணர்ச்சிகள் உ[ண்]டாகும் என்பது இப்பொழுது உ[ங்க]ளுக்குத் தெரிகிறதா? நீங்களும் இ[ந்த] யாழைத் தொடர்ந்து தமிழ் நாட்[டு]க்குப் புறப்ப[டு]தாகப் பிடிவாத[ம்] பிடித்தீர்க[ளே!] உங்கள் அன்[னை]யின் உள்ள[ம்] அத்தனை து[டி] துடி துடித்த[து!] என்ன ஆச்சரி[ய]ம் இருக்கிற[து?] சொல்லுங்க[ள்!] அத்தனை கண்டி[ப்]போடு உங்க[ளி]டம் உங்க[ள்] அன்னை மூன்[று] உறுதிமொழிக[ள்] வாங்கிக் கொ[ண்]டதில்தவறுஇல்லையே! இயல்புதானே?'' இவ்வாறு சொல்லிக் கொண்[டே] மலைச் சரிவில் ஒரு மகிழ மரத்தி[ன்] அடியில் நின்று தொலைவிலே பார்த்தா[ர்] சமணத் துறவி. அப்படியே கையை[ச்] சுடக்குப் போட்ட வண்ணம் அருகி[ல்] நின்ற சித்திராங்க பூபதியின் பக்க[ம்] திரும்பினார்.

''சூரியோதயம் ஆனதும் கதையை நிறுத்தி விடுவேன் என்று சொன்னே[]னல்லவா? உங்களுக்குச் சொல்ல வே[ண்]டிய முக்கியமான விவரங்கள் இன்னு[ம்] சில உண்டு என்பதை அறிவேன். ஆ[னா]லும் அவற்றை இப்பொழுது நா[ன்] சொல்வதற்கில்லை. அதன் காரண[ம்] என்ன என்று இங்கே வந்து இந்[த] இடத்திலே நின்று பாருங்கள்! வேகமா[க] நடக்காதீர்கள். கால் சருக்கிவிட[ப்] போகிறது!'' என்று சொல்லிச் சிரி[த்]தார் சமணத் துறவி. (தொடரும்)

"பலே, பட்டாசு!"



சமணத் துறவி
ன்ற இடத்
க்கு வந்தான்
த்திராங்க
பதி. மலைச்
ிவில் அந்த
கிழ மரத்தின்
டியில் நின்று
றவி சுட்டிக்
ட்டிய திக்கை
நாக்கினன்!
தாலை விலே
திரையில் சில
ரர்கள் வந்து
காண் டிருப்
து தெரிந்தது.
''என்ன இள
ரசே! தலை
ற்றுகிறதா?
ங்கும மாளி
கயிலிருந்து
ப்பித்து வந்
ருக்கிறீர்கள்.
ங்களைப் பின்
தாடர்ந்து
லை வீசுகிறது
பால் ஒரு
பரும் படை
ருகிறதே
ன்று திகைக்கி
ர்கள்! அப்
த் தானே?''
ன்று கேட்டார்
றவி.
''பெரியவரே!
னிமேல் யார்
டை யெடுத்து
த்தாலும் சரி;
னக்குக் கவலை



7. பழைய நினைவுகள்

ல்லை. சாருகேசியின் வீர வரலாற்
றக் கேட்ட பிறகு, என்னுடைய
பிரில் எனக்கு இருந்த மோகம் முற்றி
ம் நீங்கிவிட்டது. எனது புண்ணியத்
ய் நாட்டுக்காக அந்த உத்தமப்
ண்மணி எத்தனை மகத்தான தியா
செய்திருக்கிருள் என்பதை எண்
ம்போது, இதுவரை நான் எவ்வளவு
ோழையாக இருந்து விட்டேன் என்று
வமானப்படுகிறேன். எந்தப் பேரி
ழுக்காக அந்த உத்தமி தனது உயி
யே அர்ப்பணம் செய்தாளோ அதே
ரியாழுக்காகத்தான் நான் இந்தத்
மிழ் நாட்டுக்கு வந்திருக்கிறேன்! என்
டைய அந்த இலட்சியத்தை மறந்து
ட்டு இதுவரை நான் பொழுதெல்
ம் வீணாகக் கழித்திருக்கிறேன். அந்
பேரியாழ் எங்கே யிருக்கிறது என்ற
இரகசியத்தைத் தெரிந்து கொண்ட
பிறகுங் கூட, நான் உயிருக்குப் பயந்து
இப்படி மாறுவேடத்திலே தப்பித்து
வந்திருக்கிறேன்! இதைவிட அவமானம்
வேறு என்ன உண்டு! இதைவிடக்
கோழைத்தனமான காரியம் இந்த உல
கில் இருக்கிறதா!''

வீராவேசத்தோடு பேசினன் பூபதி.
சமணத் துறவி சிரித்தார்.

''இளவரசே! தங்களுடைய கையும்
காலும் உணர்ச்சியினல் ஆடுவதைப்
பார்க்கும்போது, எனக்குப் பயமாக
இருக்கிறது! கால் சருக்கிவிடக் கூடாதே
என்று அஞ்சுகிறேன். மெதுவாக நடந்து
செல்லுவோம். அந்தக் குதிரைப் படை
எதிரிகளின் படையில்லை! எதிரிதான்
உங்களைப் பின் தொடர்ந்து வருகிருன்
என்று நினைத்து வீணாக வீராவேசம்

அடைகிறீர்களே! அந்த வீரத்தை யெல்லாம் உறையிலே செருகிவையுங்கள். சந்தர்ப்பம் வரும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்! இப்பொழுது மெதுவாக என்னோடு நடந்துவாருங்கள். இந்த மலைச் சரிவைக் கடந்து சென்று நம்முடைய குகைக்குப் போய் விடுவோம். அந்தக் குதிரைப் படையும் அங்கேதான் வந்து சேரும்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே துறவி மேலே நடந்தார். அவரைப் பின் தொடர்ந்து கொண்டே சித்திராங்க பூபதி கேட்டான்.

''பெரியவரே! அப்படியானால் இந்தக் குதிரைப் படை யாருடையது? இந்த வீரர்கள் எல்லாரும் எதற்காக இங்கே வருகிறார்கள்?''

''இளவரசே! எதற்காக வருகிறார்கள் என்ற கேள்வியே அனாவசியம். வேறு எதற்காக வருவார்கள்! வலம்புரித் தீவின் இளவரசராகிய உங்களைப் பார்க்கத்தான் வருகிறார்கள்! இன்று தமிழ் நாட்டின் அரசியற் கொந்தளிப்பிலே உங்களுடைய வலம்புரித் தீவு அல்லவா முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது! நந்திவர்மனுடைய கட்சியிலும், எதிரியாகிய சித்திரமாயனின் கட்சியிலும் — இரண்டு கட்சியிலும் — இப்பொழுது வலம்புரித் தீவின் ஒத்துழைப்பை அல்லவா எதிர்பார்க்கிறார்கள்! எனவே படைவீரர்கள் எல்லாம் உங்களைப் பார்க்கத்தானே வருவார்கள்!''



சமணத் துறவி இவ்வாறு சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் சித்திராங்க பூபதியைப் பார்த்தார். பூபதியோ பதிலே பேசாமல் மலைச் சரிவில் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய உள்ளம் சமணத் துறவி குறிப்பிட்ட அரசியற் கொந்தளிப்பைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தது.

அத்தனை தூரம் சித்திராங்க பூபதியின் சிந்தனையைக் கிளறிய அரசியற் கொந்தளிப்பு என்ன என்பதை நாமும் இங்கே நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பல்லவ அரசன் பரமேசுவர வர்மன் தனக்குப் பின் அரசாளுவதற்குச் சந்ததியில்லாமல் மடிந்தான் என்பது ஏற்கனவே நமக்குத் தெரியும். அதன் பிறகு நடந்த சம்பவங்களை இந்தக் கதையின் தொடக்கத்திலேயே பார்த்தோம். அதாவது பல்லவ வம்சத்தின் பிரதானிகளும், அரசியற் பிரமுகர்களும், உதய சந்
ரன் என்ற சேனைத் தலைவரும் ஒன்
கூடி, இனி அரச பீடத்தில் யார
அமர்த்துவது என்று யோசித்தார்கள்
அந்த யோசனையின் முடிவில், பல்லவ
களின் தாயாதியான இரணியவர்மரை
போய்ப் பார்த்து அவரையே அர
ராகும்படி வேண்டிக் கொள்ளலா
என்று தீர்மானித்தார்கள். அவ்வித
இரணிய வர்மரிடம் சொன்னார்கள்
அவரோ தமக்கு வயதாகி விட்ட
என்று சொல்லி அரசாட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்துவிட்டார். பிறகு அவருடைய புத்திரர்களைக் கேட்டார்கள். முதல் மூன்று புத்திரர்களான ஸ்ரீமல்லன், ரணமல்லன், சங்கராம மல்லன் ஆகியோரும் அரசாட்சிப் பொறுப்பு தங்களுக்கு ஒத்து வராது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்கள்! உதய சந்திரன்



என்ன செய்தார்? அப்படியே மனம் ஒடிந்து ஊருக்குத் திரும்பி விட்டாரா? இல்லை! இரணியவர்மரின் நான்காவது புதல்வனைப் போய்க் கேட்டார்! நான்காவது புதல்வன் அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தான்? பன்னிரண்டு வயதுப் பையன், மாந்தோப்பிலே தன்னுடைய சகாக்களுடன் அரச விசாரணை நடத்திக் கொண்டிருந்தான்! தான் அரசனாகவும், தனது தோழர்கள் மந்திரிகளாகவும் நின்று மாந்தோப்பிலே அரசாட்சி நாடகம் நடத்திக் கொண்டிருந்தான், அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன்! இதைப் பார்த்ததும் உதய சந்திரனுக்குக் கண் கலங்கியது. பிறக்கும் போதே அரசனாகப் பிறந்தவன் என்றால் இவன் தான் என்பதாகத் தீர்மானித்து, அந்தச் சிறுவனையே பல்லவ சாம்ராஜ்

யத்தின் பட்டத்தரசனுகத் தேர்ந்தெடுத்துக் காஞ்சிமா நகரத்துக்கு அழைத்து வந்தார்கள். யானைமேல் அம்பாரியிலே அழைத்து வரப்பட்ட அந்தச் சிறுவனே நந்திவர்மன் என்று பெயர் தரித்துச் சிம்மாசனம் ஏறினுன்.

நந்திவர்மன் பட்டம் சூடியதும் குழப்பம் நின்றதா? இல்லே! பட்டத்துக்கு மனிதர்கள் இல்லே என்ற பெருங் குழப்பம் நின்று போவதற்குப் பதிலாக இப்பொழுது அதைவிடப் பெரிய ஒரு

அரசனுக மகுடம் தரித்ததும், சித்திரமாயனுக்கு அடங்காத கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டன! உதயசந்திரனே நந்திவர்மனுக்குப் பட்டம் சூட்டியதோடு நிற்காமல் சித்திரமாயன் அரசனுவதற்குத் தகுதி யில்லாதவன் என்ற விஷயத்தையும் பிரதானிகளிடம் எடுத்துச் சொல்லி வந்தார்! ''சித்திரமாயன் சாமர்த்தியம் இல்லாதவன். பல்லவ அரசாட்சியை நிர்வகிப்பதற்கு வேண்டிய வீரமோ, பெருமிதமோ, ஆற்றலோ



புதிய குழப்பம் தலேயெடுத்தது! இறந்துபோன பரமேசுவர வர்ம மகாராஜனுக்கு இன்னெரு தாயாதிக் குடும்பம் இருந்தது! அந்தத் தாயாதிக் குடும்பத்தில் சித்திரமாயன் என்ற இளேஞன் ஒருவன் இருந்தான். பரமேசுவர வர்மர் இறந்ததும் அரசாட்சி தனக்குத்தான் வரும் என்று எதிர்பார்த்தான் அந்தச் சித்திரமாயன்! ஆனுல் இப்பொழுதுதான் எதிர் பார்த்ததற்கு விரோதமாக நந்திவர்மன் என்ற சிறுவன்

சித்திரமாயனுக்குக் கிடையாது!'' என்று உதயசந்திரன் வெளிப்படையாகப் பொதுமக்களிடமும் பிரதானிகளிடமும் சொல்லி வந்தார். இது, சித்திரமாயனுடைய கோபத்தையும் ஆத்திரத்தையும் பன்மடங்கு அதிகப் படுத்தி விட்டது!

சித்திரமாயன் மனம் பொருமினுன். எப்படியாவது நந்திவர்மனேச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி விட்டு அந்த மகத்தான பல்லவ பீடத்தில் தான்

அமர்ந்துவிட வேண்டும் என்று ஆத்திரப் பட்டான் அவன்! இந்த ஆத்திரத்தை நன்ருக அறிந்து கொண்ட வீர விக்கிரமன் என்ற சூழ்ச்சியாளன் சித்திர மாயனுக்குப் பல சகாயங்கள் செய்ய ஆரம்பித்தான்.

வீர விக்கிரமனுடைய சூழ்ச்சிகளுக்கு எதிர் பாராத ஒரு உதவி அந்தச் சமயத்தில் கிடைத்தது! அதாவது அப்பொழுது மதுரையிலே அரசாண்டு வந்த பாண்டியர்கள் சித்திரமாயனுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்கள். தாய் வழியில் அன்னியோன்னியமான பந்துக்கள் அவர்கள்! எனவே சித்திர மாயனை மதுரைக்கு அனுப்பினுன் வீர விக்கிரமன்! அனுப்பிப் பாண்டியர்களுடைய ஒத்தாசையோடு ஒரு பெரிய படையை வலம்புரித் தீவை நோக்கிச் செலுத்திவிட்டான் வீர விக்கிரமன்!

இந்தச் சம்பவங்கள் எல்லாம்சேர்ந்து தான் அரசியற் கொந்தளிப்பாகத் தமிழ் நாட்டிலே அப்பொழுது குமைந்து கொண்டிருந்தன என்பது குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டபோதே சித்திராங்கபூபதிக்குத் தெரியும். எனவே "அரசியற் கொந்தளிப்பு" என்று சமணத்துறவி குறிப்பிட்டதும், பூபதியின் மனம் இந்தச் சம்பவங்களைப் பற்றியே எண்ணி எண்ணி வட்டம் சுற்றிக் கொண்டிருந்தது. இதைக் கவனித்த சமணத் துறவி பூபதியைப் பார்த்துச் சொல்லுவார் :

"இளவரசே! இத்தனை கொந்தளிப்புக்கு மத்தியில் உங்களுடைய வலம்புரித் தீவில் என்ன நடந்தது, உங்கள் அன்னையின் மன நிலை என்ன ஆகும் என்றெல்லாம் நீங்கள் கவலைப்படுவது இயல்புதான். இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுடைய கவலை யெல்லாம் நீங்கி விடும் என்று உறுதி கூறுகிறேன். குகைக்குப் போய்ச் சேருவதற்குள் வலம்புரித் தீவின் நடப்புகள் இரண்டொன்றை மட்டும் உங்களுக்குச் சொல்ல வேண்டியது என்னுடைய முக்கிய கடமையாகும்!"

இவ்வாறு தொடங்கி வலம்புரித் தீவுக்கு உதயசந்திரன் அனுப்பிய தூதுவர்கள் என்ன ஆனுர்கள் என்ற விவரத்தைக் கூற ஆரம்பித்தார் துறவி.

எட்டாம் அத்தியாயம்

குதிரைப் படை

"சித்திராங்க பூபதி! சித்தண்ண வாசல் குகைக்குள்ளே போனதும் நீங்கள் ஒரு முக்கியமான கேள்விக்கு முடிவு சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆகையினுல் இப்பொழுதே எச்சரிக்கை செய்து விடுகிறேன். உங்களுடைய திருமணத்தைப் பற்றிய முடிவு தான் அது!" என்ருர் துறவி.

"பெரியவரே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? என்னுடைய திருமணத்தைப் பற்றியா? அதற்கும் அதோ தெரிகிற அந்தக் குதிரைப் படைகளுக்கும் என்ன சம்பந்தம்?" என்று திகைப்போடு கேட்டான் பூபதி!

"நிறைய சம்பந்தம் இருக்கிறது! அது மட்டுமில்லை. இன்றைய அரசியற் கொந்தளிப்புக்கும் உங்களுடைய திருமணத்துக்குமே ஒரு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது!" என்று ஒரு போடு போட்டார். பூபதிக்கு ஆத்திரம் வந்தது! துறவி சொன்னுர் :—

"இளவரசே! உங்களுடைய வலம்புரித் தீவை நாடி இரண்டு கட்சியாளர்களும் தூது சென்றிருக்கிருர்கள். முதலாவது கட்சி இப்பொழுது அரசாள்கிற நந்திவர்மரின் கட்சி. அதாவது உதயசந்திரன் அனுப்பிய தூதர்கள்! அவர்கள் உங்களுடைய வலம்புரித் தீவுக்குச் சென்று திருமண உறவு பேசியிருக்கிருர்கள். முத்தரையர்களின் அரசகுமாரியை உங்களுக்கு மணம் செய்து கொடுப்பதாகவும், உங்கள் அரச குடும்பமும், முத்தரையர் குடும்பமும் ஒன்ருகி விட்டால் தமிழ் நாட்டுக்கே அது நன்மையாக முடியும் என்றும் உதயசந்திரன் சொல்லியனுப்பியிருக்கிருர்!"

துறவி இப்படிச் சொல்லும்போதே பூபதி குறுக்கிட்டான்: "அதாவது முத்தரையர்கள் இப்பொழுது நந்திவர்மரின் கட்சியில் இருக்கிருர்கள். அது தானே விஷயம்?"

"ஆமாம். முத்தரையர்கள் இப்பொழுது சித்திரமாயனுக்கு எதிராக நந்திவர்மரின் கட்சியில் உதயசந்திரனுக்குப் பக்க பலமாக நிற்கிருர்கள்."

துறவியின் இந்த வார்த்தைகளைப் பூரணமான கவனத்தோடு செவியில் வாங்கிக் கொண்டான் பூபதி. பிறகு சமணத் துறவியிடம் கேட்டான் : "பெரியவரே, இரண்டாவது கட்சியார்களும் வலம்புரித் தீவுக்குச் சென்றிருப்பதாகச் சொன்னீர்களே, அவர்களுடைய நோக்கம் என்ன?"

இதற்கு விடை சொல்லும் முன்பு றவி முதலாவது தூதுக்கு வலம்புரித் விலே என்ன மறுமொழி கிடைத்தது ன்பதை வர்ணித்தார்.

"பூபதி! உதயசந்திரன் அனுப்பிய துவர் தமது தூதை முடித்துக் காண்டு வெற்றியோடு தமிழ் நாட் க்குப் புறப்பட்டார். உங்களுடைய ன்னை முத்தரையர்களின் திருமண றவுக்குச் சம்மதம் கூறியதோடு, உங்க டைய சம்மதத்தைப் பெறுவதற்காக ங்கள் மந்திரநாயகத்தை இங்கே னுப்பி யிருக்கிறார், அந்தத் தூதுவர் ளோடு! எனவே உங்கள் மந்திர நாய த்திடம் நீங்கள் உங்கள் சம்மதத்தைத் தரிவித்தாக வேண்டிய நிலை இப்பொ து ஏற்பட்டிருக்கிறது!" என்றார் றவி. "அதிருக்கட்டும். சித்திர மாய ின் தூதுவர்கள் என்ன நோக்கத் தாடு சென்றிருக்கிறார்கள்? அதைச் சால்லாமல் நீங்கள் வேறு எதை யல்லாமோ சொல்லி என்னைக் குழப்பு றீர்களே!" என்று ஆத்திரமாகப் பசினான் சித்திராங்கன்.

"இளவரசே! பொறுமையை இழக் ாதீர்கள்! திருமணத்தை நினைவு படுத் ம் போதே, இத்தனை ஆத்திரம் வரு றதே! எதிரிகள் என்ன நோக்கத் தாடு போயிருக்கிறார்கள் என்பது மக்கு எப்படித் தெரியும்? சூழ்ச்சிக் ாரர்களின் திட்டம் என்ன என் தை யூகிப்பது யாருக்குமே கஷ்டம் ான்! ஆனாலும் நான் என்ன நினைக்கி றன் என்றால், பேரியாழும் பேரி ாழோடு ஒரு நங்கையும் தருவதாகத் ாது சொல்லி யனுப்பியிருக்க வேண் ம், வீர விக்கிரமன்! உங்களுடைய ன்னையின் உள்ளத்தைக் குழப்பி, ஒரு னமாற்றத்தை உண்டாக்க வேண்டும் ன்றால் அதற்கு வேறு மார்க்கம் கிடை ாது!" என்றார் துறவி.

மௌனமாக நடந்தான் சித்திராங்க பூபதி. திடீரென்று ஏதோ எண்ணிய னைப் போல் துறவியிடம் கேட்டான்: "பெரியவரே! சந்திரசூடனுடைய வர ாறு வீர விக்கிரமனுக்குத் தெரியுமோ? ங்களுக்கு இத்தனை விரிவாகத் தெரிந்திருப்பது போல் வீர விக்கிரம னுக்கும் தெரிந்திருக்குமானால், தொலைந் தது காரியம்! அன்னையின் மனத்தை ப்படியாவதுமாற்றிவிடுவான்அவன்!"

"இளவரசே! அந்த ஒரு பயம் மட் ம் உங்களுக்கு வேண்டாம்! சந்திர சூடனுடைய வரலாறு வீர விக்கிரம னுக்குத் தெரியாது! கொடும்பாளூர் வேளிர் குடும்பத்திலிருந்து சந்திரசூடன் டல் கடந்து சென்றான் என்று மட்டும் தெரியுமே தவிர, அவன் என்ன ஆனான், வலம்புரித் தீவில் என்ன நடந்தது என்ற விவரங்களெல்லாம் தமிழ் நாட்டில் யாருக்குமே தெரியாது!"

"அப்படியானால், இப்பொழுது வீர விக்கிரமனுடைய தூதர்கள் தாங்கள் கொடும்பாளூரைச் சேர்ந்தவர்கள் என்றுதானே என் அன்னையிடம் சொல் லப் போகிறார்கள்?"

"ஆமாம். அதுமட்டுமில்லை. பாண்டி யர்களின் பிரதிநிதிகளும் அவர்களோடு சென்றிருக்கிறார்கள். ஆகையால் பாண் டியர்களும் வேளிர்களும் சேர்ந்து அனுப்பிய தூதர்கள் என்றே உங்கள் அன்னையிடம் சொல்லுவார்கள்!"



"பெரியவரே! அப்படியானால் கவ லையே இல்லை. கொடும்பாளூர் வேளிர் கள் என்றால் என் அன்னைக்கு இரத்தம் கொதிக்கும்! சந்திரசூடன் செய்த துரோகத்தை அவள் எப்படி மறக்க முடியும்! அதோடு பாண்டியர்கள் வேறு சேர்ந்திருக்கிறார்கள்! பாண்டி யர்கள் செய்த அழிவை வலம்புரித் தீவு எப்படி மறக்கும்! எனவே இந்தத் தூதர்களுக்குச் சரியான பாடம் கற் பித்து அனுப்புவார்கள். கவலை வேண் டியதில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன். சந்திரசூடனுடைய வரலாறு இந்தத் தமிழ் நாட்டில் வேறு யாருக்குமே தெரியாது என்று சொன்னீர்களே. அப்படியானால் உங்களுக்கு மட்டும் எப் படி இத்தனையும் விவரமாகத் தெரிந் தது?" என்று கேட்டான் சித்திராங்கன்.

'' பூபதி! என்னைத் தவிர இந்த விவரங்கள் அனைத்தும் அறிந்தவர்கள் வேறு இருவரும் உண்டு!'' என்றார் துறவி.

'' அந்த இருவர் யார் என்று எனக்குச் சொல்லலாமா?''

'' நிச்சயம் சொல்ல வேண்டும். அந்த விவரங்களைப் பரிபூர்ணமாக அறிந்த இருவரில் ஒருவர்தான் நேற்று மாலை உங்களோடு இசையைப் பற்றித் தர்க்கம் பண்ணி வேடிக்கை பார்த்தாரே, அந்தத் துறவி!''

'' பெரியவரே! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? இத்தனை விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டுதானா, அத்தனை அவநம்பிக்கையோடு என்னிடம் தர்க்கம் செய்தார்? கல்லின் மேல் அலைகள் தவழுவதாவது, அதிலிருந்து இசை ஒலிப்பதாவது என்று பரிகாசம் செய்தாரே?'' என்று வியப்போடு கேட்டான் பூபதி.

'' ஆமாம். அந்த இசைக் கல்லுக்குள்ளே ஒரு மென்மையான பாணன் மகளின் இதயம் பொதிந்து கிடக்கிறது



என்ற விவரம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காகவே அந்தமாதிரி உங்களைக் கோபமூட்டினார்! உங்களுக்கு அந்த விவரம் தெரியாது என்று புரிந்து கொண்டதும் மலைச் சரிவில் நின்று விட்டார்! நான் அந்த விவரங்களை யெல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டும் என்பதற்காக!''

இவ்வாறு சொல்லி மௌனமாக நின்றார் சமணத் துறவி. சித்திராங்கன் கேட்டான்: '' பெரியவரே! இந்த வரலாற்றை நன்கு அறிந்த இன்னொருவர் யார்? அவர் எங்கே யிருக்கிறார்?''

பளிச்சென்று பதில்சொன்னார் துறவி: '' அந்த இன்னொருவர்தான் உதய சந்திரன். அவர்தான் இன்று தமிழ் நாட்டு அரசியலில் கேந்திரமான மனிதர்! உங்களையும் உங்களுடைய கதையையும் அவர் மிக நன்றாக அறிவார்!''

'' உதயசந்திரனா? அவர் ஒரே ஒரு தடவைதானே என்னைக் குங்கும மாளிகையிலே பார்த்திருக்கிறார்? அதுவும் யாழ் நங்கையின் இசை விருந்தின் போது தான் பார்த்திருக்கிறார். தனி... நாங்கள் பேசியதே இல்லையே! என... எப்படி அவருக்கு நன்றாகத் தெரியு... என்று திகைப்போடு கேட்டான் பூப...

'' இளவரசே! உதய சந்திரனுடை... திறமையைப் பற்றி உங்களுக்குத் தெ... யாது. அதனால்தான் இப்படிக் கே... றீர்கள். உண்மையில் உதயசந்திரன் ... தடவைகள் உங்களைப் பார்த்துப் ... யிருக்கிறார்! உங்களுக்கே அது தெரியா... வீணாக ஏன் குழப்பிக்கொள்ளுகிறீர்க... 'விடிந்தால் தெரியும் வெளிச்ச...' என்று வசனம் சொல்லுவார்கள். இ... பொழுது விடிந்துவிட்டது. இனிமே... தானாக வெளிச்சம் தெரியும். நீங்க... கவலைப்படாதீர்கள்!''

இப்படிப் பேசிக் கொண்டே சமண... துறவியும் பூபதியும் மலைச் சரிவி... இறங்கி வலது புறமாகத் திரும்... னார்கள். அங்கே ஒரு சிறிய குகை... வாசல் தெரிந்தது.

'' இதன் வழியாகச் செல்லுவோம்... பயப்படாமல் உள்ளே நுழையுங்கள்!... என்றார் துறவி.

மலையின் சிறு நதி ஒன்று பாறைகளை... குடைந்து கொண்டு சென்றிருந்தா... அந்தப் பாதை எப்படியிருக்கும்? அப்... படி யிருந்தது இந்த இரகசிய வழி... உள்ளே இருட்டாக இருந்தாலும், அங்... கங்கே சூரியனுடைய வெளிச்சம் பாறை... களில் எப்படி யெல்லாமோ நுழைந்து... எதிர் அளித்துக் கொண்டு பொட்டுப்... பொட்டாக மின்னியது. பாறையின்... விளிம்புகளில் ஈரம் கசிந்து கொண்... டிருந்தது! துறவியும் பூபதியும் மெது... வாக நடந்து சற்றுத் தூரம் செல்வதற்... குள், சுரங்கப் பாதை முடிந்தது. பாறை... களின் பரப்புக்கு வந்து விட்டார்கள். சூரியன் வானத்தில் எழுந்துநின்று நல்ல... பிரகாசத்தோடு ஒளிக் கற்றைகளைச் சிதறி வீசினான்!

'' வந்து விட்டோம் சித்திரக்... குகைக்கு!'' என்று சொல்லி இடது... பக்கம் திரும்பினார் சமணத்துறவி. என்ன ஆச்சரியம்! பூபதிக்கு அப்படியே மெய் சிலிர்த்தது! நேற்றிரவு அவன் தங்கியிருந்த அதே சித்தண்ணவாசல் சித்திரக்குகை இப்பொழுது கண்ணுக்கு முன்னால் தெரிந்தது! அந்தக் குகைக்குச் சற்றுத் தொலைவில் குதிரைகள் நின்றன. பத்துப் பன்னிரண்டு வீரர்கள் சூழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகிலே ராஜ கம்பீரத்தோடு நின்றவர் யார்? சித்திராங்க பூபதி கூர்ந்து பார்த்தான்! அவர் உதயசந்திரன்! (தொடரும்)



கடல் கண்ட கனவு

சோமு

ஒன்பதாம் அத்தியாயம்

கடலுக்கு அப்பால்!

கடல் கடந்து செந்தமிழ் நாட்டுக்கு வந்து, பேரியாழைத் தேடிப் போன முயற்சியிலே எதிர்பாராத பல சம்பவங்களுக்குள்ளாகி விட்ட சித்திராங்க பூபதியிடமிருந்து சற்று விடைபெற்று விட்டு இப்பொழுது நாம் வலம்புரித் தீவுக்குச் செல்கிறோம். சித்தண்ண வாசல் மலையில் சமணத்துறவி சொன்ன யாழின் கதையை இரவு முழுதும் கேட்டு விட்டுக் காலையிலே குகைக்குத் திரும்பியபோது குதிரைப் படையும் உதயசந்திரன் என்ற பல்லவ மந்திரியுமே தன் கண் முன்னால் நிற்பது கண்டு அதிசயித்தான் அல்லவா பூபதி? அந்த அதிசயத்தைத் தொடர்ந்து என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளுவதற்கு முன்பு, வலம்புரித் தீவிலே பூபதியின் அன்னைக்கு ஏற்பட்ட அனுபவங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

எதிர்பாராத விதமாக வலம்புரித் தீவுக்கு உதயசந்திரனுடைய தூதுவர் வந்து உடன்படிக்கை பேசி விட்டு, மந்திர நாயகத்தையும் தம்மோடு அழைத்துக் கொண்டு இப்பொழுது தமிழ் நாட்டுக்குத் திரும்பியிருக்கிறார். முத்தரையர்களின் புதல்வியைச் சித்திராங்கனுக்கு மணம் முடிப்பதற்கு இசைந்தார் வலம்புரி மகாராணி. பூபதியினுடைய சம்மதத்தைப் பெறுவதற்காக மந்திரநாயகம் அந்தத் தூதுவரோடு வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டு வந்தார். ஆனால் விந்தை என்னவென்றால், இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வாரங்களுக்குள்ளாக வலம்புரித் தீவை நோக்கி எதிரிகளின் தூதுப் படையும் சென்று விட்டது! வீரவிக்கிரமன் தன்னுடைய சூழ்ச்சிக்கு ஒத்துப் போகிற சில வேளிர் தலைவர்களைக் கொடும்பாளூரிலிருந்து தேர்ந்தெடுத்து, அவர்களோடு சில பாண்டிய அரசியற் பிரதானிகளையும் ஒன்று சேர்த்து மீனக்கொடி தாங்கிய ஒரு சிறு படையுடன் வலம்புரித் தீவுக்கு அனுப்பி விட்டான்! தூதுக்கு இணங்கி விட்டால், வலம்புரி மகாராணிக்கு வணக்கம் செலுத்தி விட்டு இவர்கள் திரும்பிவிட வேண்டும். இல்லையென்றால், வலம்புரி மக்களை அச்சப்படுத்தி வளைப்பதற்கும் இந்தப் படை ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதே வீர விக்கிரமன் தன்னுடைய படைத்தலைவருக்குச் சொல்லியனுப்பிய கட்டளை! கொடும்பாளூர் வேளிர்கள் என்றால், வலம்புரி மகாராணிக்கு எடுத்த எடுப்பிலேயே கோபந்தான் உண்டாகும் என்பது வீர விக்கிரமனுக்குத் தெரியும்! பாண்டியர்கள் அந்தத் தீவுக்கு இழைத்த அழிவை எண்ணி விட்டால், வலம்புரி மகாராணியார் இந்தத் தூதுவர்களை வெகுண்டு பேசித்தான் அனுப்புவார் என்பதை வீர விக்கிரமன் நன்றாக அறிவான். எனவே, மிக மிக சாமர்த்தியசாலிகளான சில பிரதானிகளை இந்தப் படைக்குத் தலைமைப் பிரதிநிதிகளாக நியமித்து வலம்புரித் தீவுக்கு அனுப்பினான் வீரவிக்கிரமன். அந்தப் பிரதிநிதிகளிடம் வலம்புரி மகாராணியாரிடம் எந்த விஷயத்தை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதற்கும் பல சூழ்ச்சிகளைக் கற்பித்து அனுப்பியிருந்தான்!

வலம்புரித் தீவில் நிலா முற்றத்தில் நின்று கடலிலே மிதந்த மரக்கலங்களையே நோக்கியவாறு பழைய சம்பவங்களையெல்லாம் எண்ணிப் பார்த்த மகாராணிக்குச் சித்தம் குழம்பியது. 'மீனக் கொடி தாங்கிய படை இப்பொழுது வலம்புரித் தீவை நோக்கி வரவேண்டிய காரணம் என்ன?' என்பதைச் சிந்திக்கச் சிந்திக்க அரசியின்

உள்ளத்தில் ஆத்திரம் ஏற்பட்டது. ஆனாலும் இப்பொழுது வலம்புரித் தீவு இருக்கும் நிலையில் ஆத்திரப்படுவதற்கே இடம் இல்லை! வந்திருக்கிற படை தீவை ஆக்கிரமிப்பதற்கு முனைந்தால் கூட, அதை எதிர்ப்பதற்கு வேண்டிய படை பலம் கிடையாது. இந்த முறையில் கோபப்படுவதினால் கேடு அதிகரிக்குமே தவிர நன்மைக்கு அணுவளவும் இடமில்லை. இதை உத்தேசித்துத்தான் விவரங்கள் தெரிந்து வரும்படி தளபதியை அனுப்பினார் மகாராணி.

வலம்புரித் தீவின் கரைக்கு அருகே மிதந்த அந்தக் கப்பல்களிலிருந்து இரண்டு முக்கியமான மனிதர்கள் இப்பொழுது நிலப்பரப்புக்கு வந்தார்கள். வலம்புரித் தீவின் தளபதி அவர்களை வரவேற்றான். அந்த இரண்டு மனிதர்களில் ஒருவன் பேசினான் :

''கொடும்பாளூர் வேளிர்களின் நிர்வாகத் தலைவராக இருக்கும் வீர விக்கிரமரின் பிரதிநிதி நான். என்னுடைய இந்த நண்பர் பாண்டியர்களின் பிரதிநிதி. ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுடைய அரசியாரிடம் தெரிவித்துப் போகவே இங்கே வந்திருக்கிறோம்!'' என்றான் மரக்கலத்திலிருந்து இறங்கி வந்த அந்தப் பிரதானி. அவனோடு வந்த மற்றொருவர் அருகில் பேசாமல் நின்றார்.

வலம்புரித் தீவின் தளபதிக்கு இந்த வார்த்தைகள் குழப்பத்தையே கொடுத்தன. 'மகாராணியிடம் ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்லிப் போக வந்தவர்கள் என்றால், இத்தனை படைபலத்தோடு போருக்கு வந்தவர்களைப் போல வரவேண்டிய அவசியம் இல்லையே! இத்தனை மரக்கலங்கள் வேண்டியதில்லையே! இதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது' என்று நினைத்தார் தளபதி. ஆனாலும் சாமர்த்தியமாகவும் தந்திரமாகவும் அவர்களோடு நடந்து கொள்ளும்படி மகாராணியார் கட்டளையிட்டிருந்தார் அல்லவா? அதை எண்ணிச் சற்று நேரம் மௌனமாக இருந்தார் அவர். பிறகு சொன்னார்: ''ஐயா! நீங்கள் இருவருமே எங்கள் வலம்புரித் தீவின் விருந்தினர்கள். அரச விருந்தினர்கள். உங்களை அன்னியர்கள் போலப் பூமியிலே நிறுத்தி வைத்துப் பேசுவது மரியாதை இல்லை. வாருங்கள், அரண்மனைக்குச் செல்லுவோம்!''

இவ்வாறு தளபதி சொன்னதும், அந்த இரண்டு பிரதிநிதிகளும் சற்றும் கலங்கக் காணோம். ''சரி; அப்படியே செய்வோம்!'' என்று கூறிக் கொண்டே தளபதியோடு அரண்மனைக்குப் புறப்பட்டார்கள்.

வலம்புரி அரசியாருக்கு மனம் தளரவில்லை. பகைக்கு இடமில்லாத முறையிலே இந்தத் தூதுவர்களைச் சமாளித்து அனுப்ப வேண்டியதுதான் அரசியல் நுட்பம் என்பதைப் புரிந்து கொண்டு, மகாராணி திருவோலக்க மண்டபத்தில் அந்தத் தூதுவர்களைச் சந்தித்தார். கொடும்பாளூர்ப் பிரதானி அரசியாரை நோக்கிப் பேச ஆரம்பித்தார் :

''மகாராணியாரே! கொடும்பாளூர் என்றால் உங்களுடைய உள்ளத்தில் அனல் கொட்டும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அதே போலப் பாண்டியர்கள் என்றாலும் உங்களுடைய உள்ளம் கொதிக்கும் என்பதை நாங்கள் அறிவோம். அதனால்தான் ஆரம்பத்திலேயே உங்களுக்கு ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்பது எங்கள் தலைவராகிய வீரவிக்கிரமரின் கட்டளை.

அரசியாரே! சந்திரசூடன் என்ற துரோகி இந்தத் தீவுக்கு இழைத்து



அந்தஸ்தைப் பற்றி முழுவிவரமும் அறிந்தகணத்திலிருந்து எங்கள் தலைவர் வீரவிக்கிரமருக்கு மன நிம்மதி கிடைபாது. பூர்வமான இந்தக் கலைத் தீவின் பேரியாழைத் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டு ஓடிவிட்ட அந்தச் சந்திர சூடனை எப்படியும் தண்டிக்க வேண்டும் என்பதே வீரவிக்கிரமரின் ஆசை. அந்த ஆசை நிறைவேறுவதற்கு இத்தனை காலம் பிடித்திருக்கிறது. இப்பொழுது சந்திரசூடனைத் தண்டிப்பதோடு மட்டுமில்லை. வலம்புரித் தீவின் கலைச் செல்வமான பேரியாழை மீண்டும் இந்தத் தீவுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதோடு, தமிழ் நாட்டின் அரசியற் குழப்பத்திலே அனுவசியமாகச் சிக்கிவிட்ட உங்கள் புதல்வரையும் விடுவித்து இங்கே அழைத்து வந்து உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வீரவிக்கிரமர் விரும்புகிறார். அதற்கான ஒரு யோசனையைச் சொல்லி யனுப்பியிருக்கிறார்.''

இவ்வாறு ஆரம்பித்தார் தூதுவர். அருமை மகனைப் பற்றிய பிரஸ்தாபம் வந்ததும் அரசியாருக்கு மனம் துணுக்குற்றது. என்றாலும் துயரத்தை அடக்கிக் கொண்டு தூதுவரின் பேச்சு முழுவதையும் கேட்பதற்கு முனைந்தார் அவர். தூதுவர் சொன்னார்:

''பேரரசியாரே! பாண்டிய நாட்டிலும் கொடும்பாளூரிலும் இப்பொழுது இரண்டு கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. கொடும்பாளூரில் சந்திரசூடன் இப்பொழுது இல்லை. அவனை அரசாள விடாமல் செய்து விட்டார்கள் கொடும்பாளூர் மக்கள். திருடனைப் போல இந்தத் தீவிலிருந்து யாழை அபகரித்துக் கொண்ட அந்தக் கயவனுக்கு எதிராக எங்கள் தலைவர் ஒரு பெரும் படை திரட்டி அந்தச் சந்திரசூடனைக் கொடும்பாளூர் மண்ணிலேயே மிதிக்க விடாமல் செய்து விட்டார். அத்தோடு சந்திரசூடனுடைய தம்பிமார்களின் வழியில் வந்த ஆதிரையன் என்ற இளைஞனையும் பட்டம் சூடவிடாமல் செய்துவிட்டார். அந்தத் துரோகிகளின் பரம்பரைக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்தாயிற்று. இப்பொழுது பேரியாழ் எங்கள் தலைவராகிய வீரவிக்கிரமரின் கையிலே சிக்கிவிட்டது. அதை இப்பொழுது இந்தத் தீவுக்குத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். உங்கள் புதல்வர் தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்ததிலிருந்து இந்த நோக்கத்தோடுதான் அவருக்கு உதவிகள் செய்து வருகிறார் வீர விக்கிரமர். இப்பொழுது உங்களுடைய சித்திராங்கபூபதி வீர விக்கிரமரின் பெருந் துணை

யோடு தமிழ் நாட்டில் கொடும்பாளூரிலேயே சௌக்கியமாக இருக்கிறார். எந்தப் பேரியாழைக் காண்பதற்கு வந்தாரோ, அந்தப் பேரியாழைக் கண்டுவிட்டதோடு, அதை வாசிக்கக் கூடிய யாழ் நங்கையையும் அவர் சந்தித்துவிட்டார். இந்த நிலையில் வீர விக்கிரமர் என்ன எண்ணுகிறார் என்றால், பேரியாழை இந்தத் தீவிலே சேர்ப்பதோடு யாழுக்கு உரிய அந்த நங்கையையும் இங்கே அழைத்து வந்து உங்களிடம் ஒப்படைத்து விடலாம் என்று எண்ணுகிறார். அதற்கு உங்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்காகத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். எப்படியும் இந்த ஒரு உதவியை இந்தத் தீவுக்குச் செய்தால் ஒழிய எங்கள் தலைவர் வீர



விக்கிரமருக்கு மன நிம்மதி ஏற்படாது. அப்படி அந்த உதவியைச் செய்வதற்கு வேறு எவ்விதமான கைம்மாறும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. உங்களுக்கும், பாண்டியர்களுக்கும் பயன்படக் கூடிய ஒரு சகாயத்தைமட்டுமே நாங்கள் எதிர்பார்க்கிறோம்!''

இவ்வாறு கூறிவிட்டுக் கொடும்பாளூர் வேளிர்களின் பிரதிநிதி தம்மோடு வந்த மற்றொரு பிரதிநிதியைப் பார்த்தார். இப்பொழுது அந்த இரண்டாவது மனிதர் பேச ஆரம்பித்தார்:

''மகாராணியாரே! நான் பாண்டிய நாட்டின் பிரதிநிதி. பாண்டியர்களால் இந்தத் தீவுக்கு எத்தகைய கேடு ஏற்பட்டது என்பதை எங்கள் மன்னர், இப்பொழுது புதிதாகப் பட்டம் சூடிய மன்னர், கேள்விப்பட்டு மனம் மிகவும் நொந்தார். அத்தோடு பாண்டிய குமாரன் இங்கே உங்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்து விட்டுப் பிறகு இங்கிருந்து மறைய நேர்ந்த சம்பவமும் எங்கள் மன்னரின் உள்ளத்தை வேதனைப் படுத்துகிறது. எனவே, பேரியாழை மீண்டும் இந்தத் தீவுக்குக் கொண்டு வந்து கொடுக்கும் முயற்சியில் தம்மால் முடிந்த அத்தனை உதவிகளையும் மனப்பூர்வமாகச் செய்யக் கருதியே வீர விக்கிரமரோடு ஒத்துழைக்கிறார் எங்கள் மன்னர். இப்பொழுது நானும் இவர்களோடு வந்த நோக்கம் என்னவென்றால், பாண்டியர்களால் அழிக்கப்பட்ட இந்தத் தீவு மறுபடியும் பாண்டியர்களாலேயே புனர் வாழ்வு பெற வேண்டும். அந்த நோக்கத்தோடு இந்தத் தீவில் கலைச் செல்வம் செழிப்பதுடன், இந்த அரசாட்சிக்கும் நல்ல படை பலத்தை நிலை நாட்டிச் செல்ல வேண்டும் என்பது எங்கள் நோக்கம். இப்பொழுது நாங்கள் எங்கள் படை விஸ்தரிப்புக்கு ஒரு இரகசிய பூமியைத் தேடி அலைகிறோம். இந் நிலையில் நீங்கள் எங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டுவிட்டால், எங்களுடையபடை விஸ்தரிப்போடு இந்த நாட்டின் காவற் படையையும் நல்ல முறையில் நிலை நாட்டிக் கொடுத்துவிடலாம் அல்லவா? உங்களுக்கும், எங்களுக்கும் இருவருக்கும் சகாயமாக இருக்கக் கூடிய இந்த ஏற்பாட்டுக்கு உங்களுடைய சம்மதத்தைப் பெற்றுப் போகவே நாங்கள் இங்கே வந்தோம்!''

இவ்வாறு சொன்னார் பாண்டியர்களின் பிரதிநிதி. வலம்புரி மகாராணிக்குச் சித்தத்தில் ஒரு தெளிவு உண்டாகவில்லை. இந்தப் பிரதிநிதிகள் பேசிய வார்த்தைகளில் முழு உண்மையும் இருப்பதாக அரசியாருக்குப் படவில்லை. ஏற்கனவே உதயசந்திரனின் தூதுவர் சொன்ன விவரங்களுக்கும் இவர்களுடைய பேச்சுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சந்திரசூடனைப் பற்றியும், பாண்டிய குமாரனைப்பற்றியும் இவர்கள் கூறிய செய்திகளில் ஏதோ மர்மம் இருப்பதாக மகாராணி நினைத்தார். அத்தனை பெரிய பாண்டியர்களின் பிரதிநிதி இப்படி யெல்லாம் சுற்றி வளைத்துப் பேசுவது அரசியாருக்கு விநோதமாக இருந்தது. சொன்னார்:

''செந்தமிழ் நாட்டுப் பெருமக்களே! தாய் நாட்டிலிருந்து சேய் நாட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர்கள் நீங்கள்.

ங்களுக்கு நல் வரவேற்புத் தந்து ங்களைக் கௌரவிக்க வேண்டியது என் டைய முதலாவது கடமை. இன்று ங்கள் இந்த அரச மாளிகையில் எங்கள் ருந்தினராகத் தங்கியிருங்கள். நீங்கள் சான்ன யோசனைகளுக்கு என்னுடைய ம்மதத்தைத் தெரிவிப்பதில் எவ்வித ான ஆட்சேபணையும் இல்லை. ஆனாலும் ங்களுடைய மந்திரநாயகம் இப்போது ங்கேயில்லை. அதனால் மற்றப் பிர ானிகளைக் கலந்து நாளையே எங்கள் ம்மதத்தைத் தெரிவித்து விடுகிறோம்'' ன்றார் அரசி.

''மந்திரநாயகம் இங்கே இல்லையா?'' ன்று கேட்டான் வேளிர்களின் பிரதி தி, பெரும் வியப்போடு.

''தளபதி! இவர்களை நமது விருந்துக் கூடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். மந்திரநாயகம் தமிழ்நாடு சென்றிருக் கிற செய்தியையும், மேற்கொண்டு நாம் செய்ய வேண்டிய காரியங்களையும் நாளை இந்தப் பிரதிநிதிகளோடு நானே கலந்து ஆலோசித்து ஒரு முடிவு செய் கிறேன். இன்று நம்முடைய மந்திரச் சுற்றத்தார்களெல்லாம் அரச மன்றத் திலே சந்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்யுங்கள் !''

இவ்வாறு மகாராணிகூறியதும், அந்த வார்த்தைகளின் உட்கருத்தைப் புரிந்து கொண்டு விட்ட தளபதி பிரதிநிதிகள் இருவரையும் அழைத்துக் கொண்டு அரச விடுதிக்குச் சென்றார்.

பத்தாம் அத்தியாயம்

அரசியின் தீர்மானம்

மந்திரநாயகத்தைத் தமிழ் நாட் க்கு அனுப்பியதில் மகாராணிக்கு தலில் சற்றுக் கலக்கம் இருந்தது ல்லவா? இரண்டு கட்சியாளர்களும் லம்புரித்தீவை நாடி வருகிற இந்தத் ருணத்தில் மந்திரநாயகம் இங்கே ல்லையே என்று மகாராணி கவலைப் ட்டதுண்டு. ஆனால் இப்பொழுது ந்தக் கவலை யெல்லாம் பறந்தோடி ிட்டது. இந்த இரண்டு பிரதிநிதி ளின் பேச்சைக் கேட்ட பிறகு மகா ாணியார் மந்திரநாயகம் தமிழ் நாட் க்குச் சென்றிருந்தது பற்றி உண்மையி லயே மனம் மகிழ்ந்தார்.

அரசியாரின் இந்த மனமகிழ்ச்சிக்கு ரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, ந்திரநாயகம் தமிழ் நாட்டுக்குச் சென் ிருக்கிறார் என்பதைக் காரணமாகச் சால்லி இந்தத் தூதுவர்களை அவ ராடு கலந்து பேசும்படி அனுப்பிவிட ாம் என்பது. இதைவிட முக்கிய ாரணம், பூபதியைப் பற்றியது. அதா து பூபதியை வீர விக்கிரமன் வலை சிப் பிடித்திருக்கிறான். தன்னந் தனி ாக எதிரிகளைச் சமாளிக்க வேண்டிய பதிக்கு மந்திரநாயகம் சென்றிருப்பது ிச்சயம் ஒரு பக்கபலம். சரியான பக்க லம். அதிலும் முத்தரையர்களின் ூதுவரோடு அல்லவா மந்திரநாயகம் சென்றிருக்கிறார். எனவே பூபதியைச் ழ்ச்சி வலையிலிருந்து எப்படியும் மீட்டு ிடுவார்கள் என்ற நிம்மதி உண்டா ற்று அரசியாருக்கு.

மந்திரச் சுற்றத்தோடு ஆலோசிக்கப் பாவதாகப் பிரதிநிதிகளிடம் சொன் னாரே தவிர மகாராணிக்கு அந்தமாதிரி உத்தேசம் ஏதும் இல்லை. வலம்புரித் தீவில் அன்றிருந்த நிலையில் மந்திரச் சுற்றம் என்று சொல்லிக் கொள்வதற்கு வேண்டிய சாமர்த்தியமும் அரசியல் ஞானமும் உடைய பிரதானிகள் யார் இருக்கிறார்கள்? கடந்த சில ஆண்டுக ளாகப் படை பலமும் கலைச் செல்வமும் தவறிக் கெட்டுப் பலவீனமான நிலையில் உறங்கிக் கொண்டிருந்த அந்தத் தீவுக்கு இப்பொழுதுதானே திடீரென்று அரசி யல் முக்கியம் ஏற்பட்டிருக்கிறது!

அன்று இரவெல்லாம் நன்றாக ஆலோ சனை செய்தார் மகாராணி. இந்தப் பிரதிநிதிகளை அமைதியான முறையில் தமிழ் நாட்டுக்கு அனுப்புவதற்கு என்ன வழி என்று யோசித்துப் பார்த்தார். முத்தரையர்களின் குமாரியைப் பூப திக்கு மணம் முடிக்க இசைவதாக ஏற்கனவே சம்மதம் தெரிவித்தாகி விட்டது. இப்பொழுது பேரியாழும், பேரியாழுக்கு உரிய நங்கையும் தருவ தாகப் புதிதாக ஒரு தூது கிளம்பி வந் திருக்கிறது, வீர விக்கிரமனிடமிருந்து!

வீர விக்கிரமனைப் பற்றி அன்று முத்தரையர்களின் தூதுவர் ஏதேதோ சொன்னார். அத்தோடு குங்கும மாளி கையைப் பற்றியும் அவர் விவரமாகச் சொன்னார். இப்பொழுது இந்தப் பிரதி நிதிகளைப் பார்த்தால் அந்த அபிப்பிரா யம் உறுதியாகிறது. நேரான முறையில் அரசியல் உறவு பேசி வருகிற தூது வர்கள் மாதிரி இவர்கள் இல்லை. அதற்கு உரிய பெருமிதமும் கண்யமும் இவர்க ளிடம் காணோம்! இந்தச் சூழ்ச்சியாள

ரின் கூட்டத்திலே யாழ் நங்கை ஒருத்தி இருப்பாள் என்ருல் அவளைப் பற்றி என்ன நினைப்பது!

இப்படியெல்லாம் எண்ணினூர் மகாராணி. ஆனுலும் இந்தத் தூதுவர்களிடம் எப்படி இத்தனை குழப்பத்தையும் காட்டிக் கொள்ளுவது! இவர்கள் ஒரு படையோடு அல்லவா வந்திருக்கிருர்கள். சம்மதத்துக்கு விரோதமாக விடை சொன்னுல், படைபலத்தினுல் நம்மை அச்சப்படுத்தி இந்தத் தீவையே ஆக்கிரமித்து விடலாம் என்கிற நினைப்புக்கூட இவர்களுக்கு இருக்கும் போல் தோன்றுகிறதே!

இவ்வாறு எண்ணியதும் மகாராணிக்கு மனம் குழம்பியது. நிலா முற்றத்துக்கு நடந்து வந்து மீண்டும் கடற் பரப்பைப் பார்த்தார்.



வலம்புரித் தீவு தாயற்ற குழந்தையைப் போல அனுதையாகக் கிடந்தது. மகாராணியின் கண்ணுக்கு முன்னுல் அந்தத் தீவின் இடிந்த சிற்பங்களும், சிதைந்து போய்க் கிடந்த வலம்புரி அம்மனின் கோவிலும் பரிதாபமான கோலத்திலே தெரிந்தன. தொலைவில் கடலிலே வீர விக்கிரமன் அனுப்பிய மரக்கலங்கள் மௌனமாக மிதந்தன. ஒரு வஞ்சகனுடைய உள்ளத்தின் மௌனத்தைப் போன்றிருந்தது, அந்தக் காட்சி. மகாராணிக்குப் பழைய சம்பவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. தமிழ் நாட்டிலிருந்து சந்திரகூடன் என்ற வேளிர் குமாரன் இங்கு வந்து எத்தனை விபரீதங்களை விளைவித்து விட்டான்! பேரியாழ் மறைந்த வினுடியிலிருந்து இந்தத் தீவுக்கு என்னென்ன கேடெல்லாம் வந்து விட்டது! பாண்டியர்களின் படை இந்த அற்புதமான கலைப் பண்ணையை எப்படி யெல்லாம் சீர் குலையச் செய்து விட்டது! இப்பொழுது அதே பாண்டியர்களும், அந்த வேளிர்களும் ஒன்று சேர்ந்திருக்கிருர்கள்! அந்தப் பிரதிநிதிகள் சமாதானம் கோரி வந்திருக்கிருர்கள். அவர்களுடைய மரக்கலங்கள் அதோ கடலிலே மிதக்கின்றன!

இந்த எண்ணம் வந்ததும் மகாராணியின் உள்ளத்தில் சீற்றம் எழுந்தது!

"வீணுகப் பாண்டிய குமாரனிடம் சீற்றம் கொள்வதில் என்ன அர்த்தம்? தான் செய்த பாபத்துக் கெல்லாம் சேர்த்து எத்தனை பெரிய பிராயச்சித்தம் செய்து விட்டான் பாண்டிய குமாரன்! கடைசியில் பேரியாழை இந்தத் தீவுக்குக் கொண்டுவர முடியவில்லையே என்ற கவலையினுல் அல்லவா அவன் அரசாட்சியையே வெறுத்துச் சென்று விட்டான். அந்த உத்தமனும் தரங்கவல்லியும் என்ன ஆனுர்கள் தெரியவில்லையே?"

மகாராணிக்குக் கண் கலங்கியது. பாண்டிய குமாரனிடம் பக்தியும் எல்லை கடந்த அன்பும் உண்டாகி இதயத்தை உருக்கி விட்டன.

'என்ன சூழ்ச்சிக்காரர்கள் இந்தத் தூதர்கள்! அந்தப் பாண்டிய குமாரனையல்லவா துச்சமாகப் பேசினுன், இன்று வந்திருக்கும் பிரதிநிதி! வலம்புரித் தீவுக்கு அந்தப் பாண்டிய குமாரன் இழைத்துவிட்ட அநீதிக்கு இவர்கள் வந்து பிராயச்சித்தம் செய்யப் போகிருர்களாம்! பாண்டிய குமாரனுல் அழிக்கப்பட்ட இந்தத் தீவை இவர்கள் வந்து சரிப்படுத்திப் புனர்வாழ்வு தரப் போகிருர்களாம்! என்னவேடிக்கைஇது!'

இப்படியெல்லாம் பலவாருக எண்ணி எண்ணி இரவு முழுதும் உறங்காமல் யோசனை செய்தார் மகாராணி. அவருடைய உள்ளம் எத்தனை குழப்பம் அடைந்த போதிலும், ஒரு விஷயத்தில் மட்டும் தெளிவும் உறுதியும் இருந்தன. அதாவது இந்தச் சூழ்ச்சிக்காரப் பிரதிநிதிகளை இப்பொழுது கோபப்படுத்தி விடக்கூடாது. எப்படியும் சமாதானத்தோடு இவர்களை அனுப்ப வேண்டும். பிறகு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதற்கு உடனே ஒரு தந்திரமான மார்க்கத்தை வகுக்க வேண்டும்.

இவ்வாறு எண்ணிய மகாராணிக்கு ஒரு யோசனை உதித்தது. உப்பரிகையிலிருந்து கீழே இறங்கி வந்தார். தம்மை வந்து உடனே பார்க்கும்படி தளபதிக்கு அவசரமாகச் சொல்லி யனுப்பினுர் மகாராணி.

(தொடரும்)

கடல கண்ட கனவு


பதினேன்றும் அத்தியாயம்

தூதின் விளைவு

"மந்திரநாயகம் இப்பொழுது இங்கில்லை'' என்ற செய்தி அந்தப் பிரதிநிதிகளுக்குப் பெரும் வியப்பைக் கொடுத்தது அல்லவா? அதிலிருந்து மகாராணி ஒரு விஷயத்தை யூகித்துவிட்டார். இந்தப் பிரதிநிதிகளை அனுப்பும்போது வீர விக்கிரமனுக்கு மந்திரநாயகம் இந்தத் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டு விட்ட விவரம் தெரியாது! மந்திரநாயகம் மிகவும் முக்கியமான பிரதானி என்றும், அவரைச் சந்தித்து அவரோடு எல்லா விவ்ரங்களையும் பேசும்படிக்கும் வீர விக்கிரமன் இந்தப் பிரதானிகளிடம் சொல்லியனுப்பி யிருக்க வேண்டும். அதனுல்தான் மந்திரநாயகம் இங்கில்லை என்றதும் இந்தப் பிரதிநிதிகள் அத்தனை தூரம் வியப்பில் ஆழ்ந்தார்கள் என்று யூகித்தார் மகாராணி. எனவே அதையே ஒரு முக்கிய காரணமாக வைத்துக் கொண்டு பிரதிநிதிகளிடம் பேசி விடலாம் என்று தீர்மானித்தார். அவசரமாகத் தளபதியைக் கூப்பிட்டு அனுப்பி, அவரிடம் இரகசியமாக இந்த யோசனையைக் கூறினர்.

மறுநாட் காலை தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் மீண்டும் அரசியாரைச் சந்தித்தார்கள். தெளிவையும் நம்பிக்கையையும் குரலிலே வரவழைத்துக் கொண்டு வலம்புரி அரசியார் அவர்களோடு பேசினர்:

''வேளிர்களின் பிரதிநிதியே! பாண்டியர்களின் தூதுவரே! உங்கள் இருவருடைய வரவினுல் நானும் எங்கள் மந்திரச் சுற்றமும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேம்! எந்தச் சந்திரசூடனுடைய துரோகத்தினுல்இந்தத் தீவு இந்தக் கதிக்கு வந்ததோ, அந்தச் சந்திரசூடனின் பிழைக்குத் தண்டனை கொடுக்கும் நோக்கத்தோடு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அது என் உள்ளத்தை ஆனந்தப் படுத்துகிறது. எந்தப் பாண்டியர்களின் படையினுல் இந்தத் தீவு அழிந்ததோ, அதே பாண்டியர்களின் படை இப்பொழுது இந்தத் தீவுக்குப் புனர் வாழ்வு தருவதற்கு விரும்புகிறது. இதை எண்ணும்போது நாங்கள் பரவசம் அடைகிறேம். நீங்கள் சொன்னதிலிருந்து உங்கள் இலட்சியம் இதுதான் என்று அறிகிறேன். இந்த இலட்சியத்துக்கு நான் வேறு என்ன மறுப்புச் சொல்ல முடியும்? முழு மனத்தோடு வரவேற்க வேண்டியதுதான் என்னுடைய கடமை. ஆனுல் ஒரு சிறு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் இளவரசர் பேரியாழை நாடி உங்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கிறர். அவர் எதிரிகளின் சூழ்ச்சியில் விழுந்துவிடக் கூடாதே என்று கருதி அவரைப் போய்ச் சந்திப்பதற்காக எங்கள் மந்திர நாயகம் இப்பொழுது உங்கள் நாட்டுக்குப் போயிருக்கிறர். முத்தரையர்களிட மிருந்து இங்கு வந்த தூதுவர்கள் தமிழ் நாட்டின் இன்றைய நிலையைப் பற்றிச் சொன்னதிலிருந்து, மந்திரநாயகத்தை அங்கே அனுப்ப வேண்டியது அவசியம் என்று எண்ணியே அனுப்பி யிருக்கிறேம். எங்கள் இளவரசரோ ஏற்கனவே உங்கள் வீர விக்கிரமருக்கு நெருங்கிய நண்பராகவே இருக்கிறர் என்று அறிகிறேன். இந்த முறையில் எங்கள் மந்திர நாயகம் வீர விக்கிரமரைச் சந்திப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்பும் யோசனை இதுதான். அதாவது, நீங்கள் உடனே தமிழ்





நாட்டுக்குத் திரும்பிச் சென்று நான் சொன்ன விவரங்களை மந்திரநாயகத் திடம் தெரிவித்துச் சித்திராங்க பூபதி எதிரிகளின் கையிலே சிக்கி விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து விட்டால், எங்கள் இளவரசரும் யாழும் யாழுக்குரிய நங்கையும் இந்தத் தீவை நோக்கி வரும்போது உங்கள் தலைவரே அவர்க ளோடு இங்கு வந்து 'வலம்புரித் தீவின் உறவுக்கு அஸ்திவாரக் கல் நாட்டிவிட லாம். இந்தக் காரியத்தை எவ்வள வுக்கு எவ்வளவு தாமதம் இன்றி நிறை வேற்றுகிறீர்களோ, அவ்வளவுக்கு நம் அனைவருக்குமே நன்மை!''

இந்த வார்த்தைகளை நிதானத்தோ டும் சாதுர்யத்தோடும் பேசினார் மகா ராணி. பிரதிநிதிகளுக்கு மகிழ்ச்சி ஏற் பட்டது. ஏதாவது குழப்பமான விடை கிடைத்தால், மேற்கொண்டு போர் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று எண்ணிய பிரதிநிதிகள் இங்கிதமான இந்தச் சொற்களைக் கேட்டு மனம் மகிழ்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் உள்ளத்தில் ஒரு சிறு சந்தேகம் எழுந் தது. இப்படியே தமிழ் நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டால், உடனே முத்தரையர்கள் வந்து இந்தத் தீவை ஆக்கிரமித்துக் கொண்டு விடலாம் அல்லவா? வலம்புரி மகாராணியின் வார்த்தைகளை முழு மனத்துடன் நம்பு வதற்குத் தடையில்லை. ஆனால் முத் தரையர்களை எப்படி நம்புவது?

இப்படி நினைத்ததும் பிரதிநிதிகளின் உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டது. இதைக் கவனித்த மகாராணியார் பிரதிநிதிகளைப் பார்த்துக் கேட்டார்:

''பெருமக்களே! உங்களுடைய மனத் தில் ஏதோ குழப்பம் ஏற்படுகிறது என் பதைக் காணுகிறேன். தாராளமாகச் சொல்லுங்கள். உங்கள் மனத்தில் என் வார்த்தைகளைக் குறித்து ஏதாவது சந் தேகம் ஏற்படுகிறதா?''

இப்படி நேருக்கு நேராகவே தைரிய மாக மகாராணி கேட்கவே, பிரதிநிதி களுக்கு விடை சொல்வது கஷ்டமாக இருந்தது. ஆனாலும் அந்தக் கஷ்டத் தைச் சமாளித்துக் கொண்டு பாண்டியர் களின் தூதுவர் பேச ஆரம்பித்தார்:



மகாராணியாரே! உங்களுடைய வார்த்தைகளிலும் உங்களுடைய சம்மதத்திலும் எங்களுக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஆனால் நாங்கள் இப்படியே இந்தப் படைகளோடு தமிழ் நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டால் உங்கள் வலம்புரித் தீவு காவல் இல்லாத படி நிற்கும். எதிரிகள் வந்து இந்தத் தீவை ஆக்கிரமித்து விட்டால் என்ன ஆகும்? இது பற்றித்தான் உள்ளம் குழம்புகிறோம்!''

பாண்டியர் பிரதிநிதி இப்படிச் சொன்னதும், வேளிர்களின் தூதுவருக்குத் தைரியம் ஏற்பட்டது. அவர் சொன்னார்:

''பேரரசியாரே! நாங்கள் எங்களோடு வல்லமை மிகுந்த ஒரு கடற்படை கொண்டு வந்திருக்கிறோம். இந்தக் கடற்படை இங்கேயே வலம்புரித் தீவுக்குக் காவலாக இருக்கட்டும். எதிரிகளின் படை இந்தத் தீவை நோக்கி வருகிற பட்சத்தில், எங்களுடைய படை அந்த எதிர்ப்பைச் சமாளிக்கும். அவசியப்பட்டால் இன்னொரு படையும் இதற்குச் சகாயமாக நாங்கள் இங்கே விரைவில் அனுப்புகிறோம். இப்பொழுது உங்களுடைய சம்மதத்தைப் பெற்று விட்டதால், எங்கள் தூது வெற்றிகரமாக முடிந்து விட்டது. இனி நாங்கள் புறப்படுகிறோம். உங்களுடைய புதல்வரையும் மந்திரநாயகத்தையும் வெகு வேகமாகச் சென்று சந்திக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அவர்களை நாங்கள் சந்தித்துப் பேரியாழோடு அவர்களை இங்கே அனுப்புகிற வரை எங்களுடைய இந்தக் காவற் படை வலம்புரித் தீவைச் சுற்றிக் கடலிலே காவல் புரியும்!''

மகாராணியார் இந்த ஏற்பாட்டை எதிர்பார்க்கவில்லை. என்றாலும், அவசியமும், சந்தர்ப்பமும் நேரும்போது ஆடவர்களை விடப் பெண்களுக்குச் சமயோசித புத்தி அதிகம் என்று மனத் தத்துவம் தெரிந்தவர்கள் சொல்வதுண்டு. அந்த உண்மைக்கு ஏற்ப மகாராணியின் மனத்தில் ஒரு யோசனை உதித்தது. சொன்னார்:

''அப்படியே செய்யுங்கள், பெ மக்களே! சித்திராங்க பூபதியைச் சந்தித்து இந்த விவரங்களை யெல்லாம் எடுத்துச் சொல்வதற்காக உங்களோடு நானும் ஒரு பிரதானியை அனுப்புகிறேன். அப்படியானால்தான் உங்கள் வார்த்தைகளில் எங்கள் இளவரசருக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்படாது!''

''மகாராணியாரே! அற்புதமான யோசனை! எங்கள் பொறுப்பு அந்த அளவுக்குக் குறைகிறது! வெற்றியும் அந்த அளவுக்கு நிச்சயம்!''

பாண்டியர் பிரதிநிதி கேட்டார்:

''மகாராணியாரே! அப்படியானால் உங்களுடைய தூதுவரும் எங்களுடனேயே எங்கள் மரக்கலத்திலேயே வரலாம் அல்லவா?''

''ஆகா! அதில் என்ன சந்தேகம்! இனி உங்கள் மரக்கலம் எங்கள் மரக்கலம் என்றெல்லாம் யோசிக்கலாமா? நாளைக் காலையில் உங்களோடு எங்கள் தூதுவரும் வலம்புரித் தீவிலிருந்து புறப்படுவார்!''

இவ்வாறு சொன்னார் மகாராணி. தந்திரமான யோசனைதான். வலம்புரித் தீவின் தூதன் மூலமாகவே சித்திராங்க பூபதிக்கும் மந்திரநாயகத்துக்கும் இரகசியமாக எல்லா விஷயங்களையும் தெரியப்படுத்தி விடலாம். அதற்கு இதை விடச் சிறந்த ஏற்பாடு இருக்க முடியாது. ஆனால் இதன் விளைவு தமிழ் நாட்டின் சரித்திர நிகழ்ச்சிகளையே மாற்றி விட்டது. அந்த எதிர்பாராத மாற்றம் நந்திவர்ம பல்லவனுடைய அரசாட்சியையே ஆட்டி விட்டது! அதே சமயம் உதய சந்திரனுடைய மகத்தான திறமையும் அதில்தான் பூரணமாக வெளியாயிற்று!

பன்னிரண்டாம் அத்தியாயம்

சந்திப்பு

நல்ல திறமைசாலிகளான தூதுவர்களைத் தேர்ந்தெடுத்து வலம்புரித் தீவுக்கு அனுப்பிய வீரவிக்கிரமன் அதோடு சும்மா இருந்து விடவில்லை. தனக்கு முன்பு வலம்புரித்தீவை நாடி உதயசந்திரனின் தூதுவர்கள் அல்லவா சென்றார்கள்? அந்த முதலாவது தூதுவர் என்ன முடிவோடு வலம்புரித் தீவிலிருந்து திரும்புகிறார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகப் பல இரகசிய ஏற்பாடுகளைச் செய்திருந்தான் வீர விக்கிரமன்.

பாண்டியர்களின் பிரதிநிதியும், வேளிர் பிரதானியும் பெரிய படையோடு வலம்புரிக்குச் சென்றிருந்த போதிலும் வீரவிக்கிரமனுக்கு மனத்தில் நிம்மதியில்லை. உதய சந்திரனுடைய தூது என்ன ஆயிற்று என்பதிலேயே சிந்தனையாக இருந்தான்.

இப்படி யிருந்தபோதுதான் ஒருநாள் அவனுடைய இரகசிய உளவுத் தலைவன் ஒருவன் வந்து விவரத்தைத் தெரிவித்தான். முத்தரையர்களின் குமாரியை வலம்புரி இளவரசருக்குத் திருமணம்

செய்விக்கிற யோசனையை வலம்புரி அரசி ஒப்புக்கொண்டு விட்டார் என்றும், சித்திராங்க பூபதியின் சம்மதத்தைப் பெறுவதற்காக மந்திர நாயகம் வலம்புரித் தீவிலிருந்து புறப்பட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்து விட்டார் என்றும் தெரிந்தது வீர விக்கிரமனுக்கு. அப்பொழுது அவன் மனம் குழம்பியது. அந்தக் குழப்பத்தோடு அவன் நேரே மதுரைக்குச் சென்றான். சென்று பாண்டியர்களின் முக்கியமான படைத் தலைவர்களோடெல்லாம் இது குறித்து ஆலோசனை செய்தான்.

பாண்டியர்கள் சொன்ன கருத்து வீர விக்கிரமனுக்கு முதலில் திகைப்பைக் கொடுத்தது. பிறகு நன்றாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்ததில் அந்த யோசனையைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை.

பாண்டியர்கள் கூறிய யோசனை இது தான். எதிர்பாராத விதமான இந்தச் சிக்கலுக்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று வலம்புரித் தீவைப் பற்றிய எண்ணத்தையே மறந்து விட்டு, தமிழ் நாட்டில் காஞ்சிமா நகரத்திலே கருத்தைச் செலுத்துவது. அதாவது நந்திவர்ம பல்லவனுக்கு எதிராகத் தமிழ் நாட்டுக் குறுநில மன்னர்களை யெல்லாம் ஒன்று திரட்டிக் காஞ்சியின்மேல் படையெடுக்க வேண்டும். இந்த யோசனையை மேற்கொள்வதானால் வலம்புரித் தீவைப்பற்றிக் கவலையே இல்லை. அங்கே வலம்புரி அரசியின் யோசனை எதுவாயிருந்தாலும் கவலையில்லை. சித்திராங்க பூபதி யாரை மணந்தால் என்ன, அந்தத் தீவுக்குப் பேரியாழ் போய்ச் சேர்ந்தாலும் சரி, போய்ச் சேராவிட்டாலும் சரி, அதெல்லாம் அந்த நாட்டு விஷயங்கள். அவற்றைப் பற்றிப் பாண்டியர்களோ அல்லது கொடும்பாளூர் வேளிர்களோ, வீர விக்கிரமனோ மனத்தைக் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. இங்கே வந்திருக்கிற மந்திர நாயகம் பூபதியைச் சந்தித்து விட்டுப் போகட்டும். முத்தரையர்களுடைய திருமண உறவை ஒப்புக் கொண்டு, பூபதி முத்தரையர்களின் அரச குமாரியைத் திருமணம் செய்து கொண்டு வலம்புரித்தீவுக்குப் போய்ச்சேரட்டும். அதனால் தமிழ்நாட்டு அரசியல் மாறி விடாது! இங்கே நந்திவர்மனுக்கும் சித்திரமாயனுக்கும் ஏற்பட்டுள்ள எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு, இந்தத் தமிழ் நாட்டிலேயே பெரும் படை திரட்டிப் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு விடலாம்!

பாண்டியர்கள் தெரிவித்த முதலாவது கருத்து இதுதான். இது வீர விக்கிரமனுக்குப் பிடிக்கவில்லை யென்றால், இப்பொழுதே வலம்புரித் தீவின் எதிர்காலத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். அதாவது தங்களோடு உறவு கொண்டு, நந்திவர்மனுக்கு எதிராக வீர விக்கிரமனோடு உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கு வலம்புரி அரசி இசையா விட்டால், வலம்புரித் தீவைத் தாக்கி அந்தத் தீவை அடிமைப்படுத்தி, பாண்டியர்களின் ஆட்சிக்குள்ளே அதைக் கொண்டு வந்துவிட வேண்டும். அப்படிக் கொண்டு வந்துவிட்டால், யுத்தம் சம்பந்தமான எல்லா இரகசிய ஏற்பாடுகளுக்கும் வலம்புரித் தீவையே இரகசியப் படைத்தளமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

இதுதான் பாண்டியத் தலைவர்கள் சொன்ன இரண்டாவது கருத்து. இந்த இரண்டு யோசனைகளில் வீர விக்கிரமனுக்கு எந்த யோசனை சரியாகப் படுகிறதோ, அதன்படி ஒரு முடிவுக்கு வந்து விடலாம் என்றார் பாண்டிய நாட்டின் படைத் தலைவர்.

வீர விக்கிரமன் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தான். குங்கும மாளிகையிலே கொண்டுவைத்திருக்கும் பூபதியை மந்திரநாயகம் சந்திப்பது என்றால் அது மிகவும் கஷ்டமான காரியம். தன்



னுடைய அனுமதி யில்லாமல் அது நடைபெறாது. இந்த நிலையில் மந்திரநாயகம் பூபதியைச் சந்தித்து, முத்தரையர்களின் திருமண உறவுக்குச் சம்மதம் பெற்று விடுவார் என்று கவலைப்பட வேண்டிய அவசியமே யில்லை. அப்படியே சந்தேகப்படுவதற்குச் சற்று இடம் இருந்தாலும், வீர விக்கிரமன் இப்பொழுதே குங்கும மாளிகைக்குச் சென்று பூபதியைக் கண்காணாத ஓர் இடத்துக்குத் தூக்கிச் சென்றுவிடலாம். வலம்புரித் தீவின் விதியை நிர்ணயிக்கும் வரை பூபதியை மறைவான ஓர் இடத்திலேயே வைத்து விடலாம். அதில் ஒன்றும் கஷ்டமில்லை. இப்பொழுது செய்ய வேண்டிய யோசனை, வலம்புரித் தீவின் சிக்கலை அவிழ்ப்பதா அல்லது அந்தத் தீவையே மறந்துவிடுவதா என்பது! அந்தத் தீவை மறந்து விட்டு இங்கே சித்திரமாயனுக்கு உதவியாகப் படைபலம் திரட்டுவதில் மனத்தைச் செலுத்தலாம் என்றால், எந்தக் குறுநில மன்னர்களைப் போய்ச் சந்தித்து உறவு பேசினாலும் அங்கே உதயசந்திரன் ஏதாவது இடையூறு செய்ய வந்துவிடுகிறான். தமிழ் நாட்டில் உதயசந்திரனுடைய இரகசிய உளவுப் படை அத்தனை தீவிரமாக வேலை செய்கிறது! கொடும்பாளூர்க் கானகத்தில் எத்தனை கவனத்தோடும் கண்காணிப்போடும் வீர விக்கிரமன் ஓர் இரகசியக் கூட்டம் நடத்தினான்! அந்த விவரத்தைக் கூட எப்படியோ தெரிந்து கொண்டு அங்கே வந்துவிட்டானே உதயசந்திரன்! இந்த நிலையில் தமிழ் நாட்டுக்குள்ளே படை விஸ்தரிப்புச் செய்வது என்றால் அது பல தொல்லைகளுக்கு இடம் தருகிற முயற்சி! எனவே வலம்புரித் தீவை உபயோகப்படுத்துகிற யோசனையைக் கைவிடுவதற்கில்லை. தவிரவும் இலங்கையிலிருந்தும், மற்றும் கடல் கடந்த நாடுகளிலிருந்தும் பாண்டியர்களுக்கு உதவி செய்யக்கூடிய அரசியல் நண்பர்கள் பலர் உண்டு. இவர்களோடு எல்லாம் உறவு செய்து கொண்டு, ஒரு பெரிய அளவிலே படை திரட்டினால்தான் பல்லவ அரசைக் கவிழ்க்க முடியும். அவசரப்பட்டுக் காஞ்சிமா நகரத்தின் மீது படையெடுப்பதில் பயன் இல்லை.

இவ்வாறெல்லாம் பலமாக யோசனை செய்தான் வீர விக்கிரமன். ஒரு பகலும் ஓர் இரவும் சிந்தனை செய்தான். கடைசியில் பாண்டியர்களிடம் தனது முடிவைத் தெரிவித்தான்.

"வலம்புரித்தீவை மறந்து விடுகிற யோசனை எனக்கு அவ்வளவு தூரம் சரியாகப் படவில்லை. சித்திரமாயனுக்கும்



பல்லவனுக்கும் ஏற்பட்டு விட்ட பகையானது, எளிதில் தீர்ந்து விடுகிற பகையில்லை. தொடர்ந்து இந்தப் பகை பல வடிவங்களில் பல போர்களாக மூளும். எதிர்காலத்தில் நந்திவர்மனுடைய ஆட்சி ஒரே யுத்தமயமான ஆட்சியாகவே இருந்தது என்று நம்முடைய பின் சந்ததியார்கள் சொல்லப் போகிறார்கள். அந்த அளவுக்கு இந்தப் பகை நெருப்பாக மூள இடமுண்டு. இன்று நாம் நந்திவர்மனைப் படையெடுத்துச் சென்று முறியடித்து விட்டாலுங்கூட, பிறகு உதயசந்திரன் சும்மா இருந்து விடுவான் என்று சொல்ல முடியாது. அரசியல் சாமர்த்தியம் மிகுந்த அந்தத் தந்திரசாலி, மறுபடியும் பதுங்கியிருந்து மீண்டும் நம்மை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வான். ஆகையால் நாம் வலம்புரித்தீவை மறந்துவிட்டால், நிச்சயம் உதயசந்திரன் அந்தத் தீவோடு உறவு செய்து கொண்டு, அதையே தன்னுடைய இரகசியப் படைத் தளமாக உபயோகிப்பான். கடல் கடந்த நாடுகளுக்கு ஒரு மையமான இடம் வலம்புரித்தீவு. படையெடுப்பு என்று ஏற்பட்டு விட்டால், அந்தத் தீவுக்கு எத்தனையோ முக்கியம் உண்டாகி விடும். அத்தனை முக்கியம்

வாய்ந்த தீவை நாம் உதய சந்திரனின் கையில் விட்டு விட்டால், நமக்கு எதிராகக் கடல் கடந்த நாடுகளை யெல்லாம் நண்பர்களாக்கிக் கொண்டு நம் மீது அபாரமான வேகத்தோடு பாய்ந்து வருவதற்கு இரகசிய வேலைகள் செய்து விடுவான், அந்தப் பொல்லாத உதய சந்திரன்! எனவே, வலம்புரித்தீவை எப்படியும் நமது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டு வரவேண்டியதுதான் இப்பொழுது உடனே செய்யவேண்டிய காரியம். அது முடிகிறவரை நந்திவர்மனைக் கூடச் சற்று மறந்து விடலாம். ஏனென்றால் நந்திவர்மனை ஒழிப்பதற்காகத் தானே இத்தனை பலமான ஏற்பாடு செய்கிறோம் நாம்!''

இவ்வாறு பேசினான் வீர விக்கிரமன். அவன் கூறிய வார்த்தைகளில், உண்மை இருந்தது என்று பட்டது பாண்டியர்களுக்கு. நந்திவர்மனைத் தாக்குவதில் அவசரப்படக்கூடாது, சரியான பெரும் அளவில் படை திரட்டிக் கொண்டு தான் காஞ்சியின் மீது மோத வேண்டும் என்பதைப் பாண்டியர்கள் நன்றாக உணர்ந்தார்கள். எனவே வீர விக்கிரமனுக்கு ஒரு முக்கியமான உறுதிமொழி கொடுத்தார்கள்.

''வீர விக்கிரமரே! இப்பொழுது நம்மிடம் உள்ள படை பலம் மகத்தானது. இந்தப் படை பலத்தையெல்லாம் நந்திவர்மனுடைய வீழ்ச்சிக்காகவே திரட்டி வைத்திருக்கிறோம். எப்படியும் சித்திர மாயனை அந்தப் பல்லவ பீடத்திலே அமரச் செய்தால் ஒழிய நிம்மதி ஏற்படாது. ஆகவே, எங்கள் படை பலத்தை எந்த முறையில் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டுமோ, அப்படியே செய்யுங்கள். எந்தக் கணத்தில் நமது பாண்டியப் படை வலம்புரித் தீவை நோக்கிச் செல்ல வேண்டுமோ, அந்தக் கணமே புறப்படச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் ஒரு சிறு விஷயம். வலம்புரித் தீவை நமது ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கு அதிகமான படை அவசியமில்லை. அந்தச் சிறிய தீவு இன்றிருக்கும் நிலையில், ஏற்கனவே நாம் அனுப்பி யிருக்கும் படையே போதுமானது. அவசியப்பட்டால் அவர்களே வலம்புரித் தீவை அடிமைப் படுத்திக் கொண்டுதான் திரும்புவார்கள். ஒரு வேளை அவர்கள் அப்படிச் செய்யாமல் வலம்புரித் தீவோடு உறவு செய்து கொண்டே வந்து விட்டார்களானால், அதுவும் நலமே. மந்திர நாயகம் தமிழ் நாட்டுக்கு வந்திருப்பதைப் பற்றி நாம் ஏன் கவலைப் பட வேண்டும்? அவர் மீண்டும் அந்தத் தீவுக்குத் திரும்பிச் செல்வதற்குள், நாம் அந்தத் தீவின் கதியை நிர்ணயித்து விடுவோம். எந்தக் கணத்தில் நாம் இங்கிருந்து புறப்படவேண்டுமோ, புறப்பட்டு விடுவோம்!''

இப்படிச் சொன்னார் பாண்டியர்களின் தலைமைத் தளபதி. இந்த வார்த்தைகள் வீர விக்கிரமனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சியைத் தந்தன. அவன் சொன்னான்:

''சரியான முடிவு. நம்முடைய படை எந்தக் கணமும் வலம்புரித் தீவுக்குப் புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாக இருக்கட்டும். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது, மந்திரநாயகம் பூபதியைச் சந்தித்துவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அது என் பொறுப்பு. பூபதியைக் குங்கும மாளிகையிலிருந்து வேறு இரகசியமான ஓர் இடத்துக்குத் தூக்கிச் சென்று விட வேண்டும். அவசியப் பட்டால் இந்தப் பாண்டியத் தலைநகரத்துக்கே கொண்டு வந்து விடுகிறேன். பிறகு வலம்புரித் தீவிலிருந்து நமது தூதுவர்கள் என்ன முடிவோடு திரும்புகிறார்கள் என்பதைக் காத்திருந்து பார்ப்போம். அவர்களுடைய தூதின் முடிவைத் தெரிந்து கொண்டு; பிறகு நம்முடைய போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்!''

இப்படி முடிவு செய்து விட்டுக் கொடும்பாளூருக்குத் திரும்பினான் வீர விக்கிரமன்! ஆனால் அவனுக்கு அங்கே ஒரு திகைப்பு ஏற்பட இருந்தது! யாழ் நங்கையின் முன் யோசனையான ஏற்பாட்டினால், வீர விக்கிரமன் கொடும்பாளூருக்குப் போய்ச் சேர்ந்த அன்று இரவே குங்கும மாளிகையி லிருந்து பூபதி இரகசியமாகத் தப்பிச் சென்று விட்டான் அல்லவா? வீர விக்கிரமன் தன்னுடைய யோசனையை நிறைவேற்றுவதற்கு முன்பு, சித்திராங்கபூபதி சித்தண்ணவாசல் மலைக்கு வந்து விட்டான்! அது மட்டுமில்லை. எந்த மந்திரநாயகத்தைப் பூபதி சந்தித்துவிடக் கூடாது என்று வீர விக்கிரமன் நினைத்தானோ, அதே மந்திர நாயகத்தையும் அவன் சந்தித்தான்! அந்தச் சந்திப்புக்காகவே உதயச் சந்திரன் குதிரை வீரர்களோடு, அதிகாலை நேரத்தில் சித்தண்ண வாசலின் குகைக்கு வந்தார்! ஏழடிப் பட்டத்திலிருந்து சுரங்கப் பாதை வழியாகச் சமணத் துறவியோடு நடந்து வந்த பூபதி குதிரை வீரர்களையும் உதயசந்திரனையும் பார்த்துத் திகைத்தான்! இதைப் புரிந்து கொண்ட உதயசந்திரன் புன்முறுவலோடு இவர்களை நோக்கி நடந்து வந்தார். சித்திராங்க பூபதி கைகூப்பியவாறு வணக்கம் செலுத்தினான்.

(தொடரும்)

பதின்மூன்றும் அத்தியாயம்

இசைத் துறவி!

மன மகிழ்ச்சியோடு கைகூப்பிக் கொண்டு வந்தார் உதயசந்திரன், பூபதியை நோக்கி! அவருடைய முகத்திலே வீசிய அறிவின் ஒளியையும், எந்தக் கஷ்டத்தையும் சமாளித்து விடலாம் என்ற தன்னம்பிக்கையின் அறிகுறியையும் கண்டு, பூபதியின் உள்ளம் மலர்ந்தது. சமணத்துறவி பேசினர் :

"நீங்கள் எல்லாரும் அரசப் பிரதானிகள். உங்களை யெல்லாம் இப்படி வெளியிலே நிறுத்தி வைத்துப் பேசுவது பாபம்! குகைக்குள்ளே சென்று விடலாமே!" என்றார் துறவி.

"பெரியவரே! எங்களை அரசப்பிரதானிகள் என்றீர்கள். உங்களை என்னவென்று சொல்லுவது? வெறும் துறவி என்று மட்டும் சொன்னால் போதுமா?"

இவ்வாறு கேட்டார் உதயசந்திரன். பூபதிக்கு இந்தக் கேள்வி ஒரு கணம் அதிர்ச்சியைத் தந்தது. துறவியையே ஏற இறங்கப் பார்த்தான்.

"என்ன இளவரசே! என்னை ஏன் இப்படி ஒரே திகைப்போடு பார்க்கிறீர்கள்? திகைப்பெல்லாம் நீங்குகிற காலம் வந்து விட்டது. வாருங்கள், குகைக் குள்ளே செல்லுவோம்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே உதயசந்திரனையும் சித்திராங்க பூபதியையும் அழைத்துக் கொண்டு சித்தண்ண வாசல் குகைக்குள்ளே சென்றார் சமணத் துறவி. குதிரை வீரர்கள் கண்காணிப்போடு குகைக்கு வெளியே காவல் புரிந்தார்கள்.

காலை நேரத்தின் இளங் கதிர்கள் சித்தண்ணவாசல் மலையிலே மரங்களோடும் செடிகளோடும் புல்வெளியோடும் அணைந்து விளையாடிக் கொண்டிருந்தன. அங்கங்கே மலையின் பரம்பரைக் குடும்பமான புள்ளி மான்கள் சூரியோதயத்தின் களிப்பிலே பாறைகளுக்கு மேல் துள்ளி ஓடிக் கொண்டிருந்தன. குகைக்குள்ளே மற்ற இரண்டு துறவிகளும் தங்களுடைய பிரார்த்தனையை அப்பொழுது தான் முடித்துவிட்டு, விருந்தினர்களை வரவேற்க ஆயத்தமாகி யிருந்தார்கள். குகையின் உள் அறை ஒன்றிலிருந்து அகிற்புகை 'கம்' என்று வாசனைச் சுழல்களை எழுப்பிக் கொண்டு வட்டம் சுற்றி வந்தது! அந்தப் பேரின்பமான வாசனையை நுகர்ந்து அனுபவித்துக் கொண்டே உள்ளே சென்றான் சித்திராங்க பூபதி.

"மதிப்புக்கு உரிய அமைச்சர் பெருமானே! நீங்கள் நமது சித்திராங்க பூபதியைப் பல தடவைகள் சந்தித்திருக்கிறீர்கள் என்று சொன்னேன். சித்திராங்க பூபதிக்கு அதை நம்புவது கஷ்டமாக இருக்கிறது!" என்று பேச்சை ஆரம்பித்தார் சமணத் துறவி. அருகிலே



அமர்ந்திருந்த பழைய இசைத் துறவி நகைத்தார். பூபதி அவரை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான்.

நேற்று மாலை பூபதியோடு இசை சம்பந்தமாகப் பலமான தர்க்கம் செய்தாரே அந்தத் துறவியின் முகத்தை இப்போது மிகக் கூர்மையாகக் கவனித்துப் பார்த்த பூபதிக்கு வியப்பு மேலிட்டது! நேற்று இந்தத் துறவியை ஒரு இளைஞர் என்று நினைத்தான் அல்லவா, அதே துறவியின் முகந்தானா அது! நம்பவே முடியவில்லையே! மேலே போர்த்தியிருந்த பெரிய உடையை இப்பொழுது காணோம். பிரார்த்தனை முடிந்து அப்பொழுதுதானே உள் அறையிலிருந்து அவர் வந்திருக்கிறார்! அவருடைய மேனியை ஆராய்ந்து பார்ப்பதற்கு இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பூபதிக்கு!

இசைத் துறவியின் மார்பிலே பல வடுக்கள் தெரிந்தன! யுத்தப் பயிற்சியிலே தேர்ந்த உடம்பு அது! வேலோடும் வாளோடும் ஈட்டிகளோடும் பழகிய மார்பு அது! இரும்புக் கவசம் என்று ஒன்று தனியாக அந்த உடலுக்கு வேண்டியதில்லை! மார்பின் அமைப்பும், தசை நரம்புகளின் இணைப்பும் இயற்கையிலேயே இரும்புக் கவசம் பூட்டிய மாதிரிக் காட்சி தந்தன! பூபதிக்கு மெய் சிலிர்த்தது!

''இந்த இசைத் துறவி வெறும் சமண சந்நியாசி இல்லை! நாம் நினைத்தது போல் வயதில் இளைஞரும் இல்லை இவர்! பூர்வத்தில் எத்தனையோ பல மல் யுத்தங்கள் செய்து பழகிய உடல் இது! துறவியாக மாறிய பின்பும் உடம்பின் வயதையும் தளர்ச்சியையும் வென்று நிற்கக் கூடிய பல சித்தமூலிகைகளை உண்டு வலுப்பெற்ற சரீரம் இது! முகத்தையும் தோளின் அமைப்பையும் பார்த்தால் அரச குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவராகத் தோன்றுகிறது!''


இவ்வாறு எண்ணமிட்டான் சித்திராங்க பூபதி. உதய சந்திரன் இதைக் கவனித்து விட்டுச் சொன்னார்:

''வலம்புரித் தீவின் இளவரசே! இந்த இசைத் துறவியின் தோற்றம் இப்பொழுது உங்கள் திகைப்பை அதிகப் படுத்துகிறது என்பதைக் காண்கிறேன். அதிகமாக உங்கள் சித்தத்தைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இங்கே நமக்கு முன்பாக வீற்றிருக்கும் இந்த இரண்டு பெரியார்களும் உங்களோடும் உங்களுடைய தீவோடும் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள். மற்ற விவரங்களையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்வதற்கு முன்பு உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கிற விஷயம் ஒன்று உண்டு. நீங்கள் சொல்கிற விடையைப் பொறுத்துத்தான், இவர்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளலாமா கூடாதா என்று நாங்கள் தீர்மானிக்க வேண்டியதிருக்கிறது! இப்படி நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இன்று இந்தச் செந்தமிழ் நாட்டின் வானிலே போர் மேகங்கள் 'கரு கரு' என்று சூழ்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நீங்கள் எங்களுக்குச் சொல்லப்போகும் விடைதான் பல எதிர்காலத் திட்டங்களை உருவாக்க வேண்டும். எனவே, உங்களிடம் வெளிப்படையாக எல்லா விவரங்களையும் மனம் திறந்து பேசுவதற்கு முன்பு, உங்களுடைய மன நிலையைப் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டியது எனது கடமை!''

இவ்வாறு பேசினார் உதயசந்திரன். அந்தப் பேச்சில் அன்போடு ஒரு கண்டிப்பும் இருந்தது! இதைக் கண்டு திகைத்த பூபதிக்குச் சமணத் துறவி சொல்லுவார்:—

''அரசியல் தந்திரி என்றால் இப்படித்தான் இருப்பார்! குளிர் காலத்தில் நெருப்பு நமக்கு மிகவும் அவசியந்தான், தீக்காய வேண்டியது முக்கியந்தான். அதற்காக நெருப்பிலே கொண்டு கையை வைத்துவிட முடியுமா? அரசியல் ஞானிகளோடு உறவு கொள்ள வேண்டிய முறையும் அப்படித்தான், இளவரசே! நெருப்பை விட்டு அகன்று விட்டால் உஷ்ணம் கிடைக்காது! மிகவும் நெருங்கி விட்டால் கையைப் பொசுக்கி விடும். நம்முடைய வள்ளுவர் பெருமான் பாடி யிருக்கிறார், ''அகலாது அணுகாது தீக்காய'' வேண்டும் என்று! புரிந்ததா?''

இப்படிச் சொல்லி உதய சந்திரனுடைய வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுத்தார் சமணத் துறவி!



பூபதி மௌனமாக இருந்தான்! எது எப்படி யிருந்தாலும் உதயசந்திரன் உத்தமமான மனிதர் என்றும், நிகரற்ற அரசியல் ஞானி என்றும் பூபதிக்குப் பரிபூரணமாகப் பட்டது. அவருடைய தோற்றமும் பேச்சும் அவனை எல்லை யற்ற வியப்பிலே ஆழ்த்தின. அவரைப் பார்க்கும் போதெல்லாம் பூபதியின் இதயத்தில் அளவுகடந்த பக்தியும் ஒரு பயமும் ஏற்பட்டன. பயம் என்றால் புலியையும் சிங்கத்தையும் கண்டால் ஏற்படுகிற பயம் இல்லை. அன்றொரு நாள் மாமல்லபுரத்து விடுதியிலே சித்தரைக் கண்டதும் ஒரு பயபக்தி உண்டாயிற்றே, அப்படிப்பட்ட இன்பமான ஒரு பயம்! இங்கிதமான ஒரு பக்தி! சொன்னான்:

''தமிழ் நாட்டின் விதியை நிர்ணயிக்கப் போகும் ஞானியார் அவர்களே! தங்களிடம் எனக்கு ஏனோ ஒருவித வியப்பும் என்னையும் மீறிய பக்தியும் ஏற்பட்டிருக்கின்றன! தாங்கள் என்னைப் பலமுறை சந்தித்திருப்பதாக இந்தத் துறவி சொல்லுகிறார். அதன் விவரம் எனக்குத் தெரிய வில்லை. ஆனாலும் அன்று குங்கும மாளிகையிலே தங்களை ஒரு கணம் சந்தித்து நின்றேன் அல்லவா, அந்த ஒரு கணத்துக்குள் தங்களிடம் எனக்கு ஏதோ ஒரு நிரந்தரமான ஈடுபாடு உண்டாகி விட்டது! எந்த விஷயத்தை எப்பொழுது எனக்குச் சொல்லலாம் என்று தங்களுக்குத் தோன்றுகிறதோ, அப்பொழுது சொன்னால் போதுமானது. என்னிடமிருந்து ஏதோ தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறீர்கள். தாராளமாகக் கேளுங்கள். தங்களிடம் எந்த விஷயத்தையும் மறைப்பதாக எனக்கு எண்ணமில்லை. தங்களுடைய கூர்மையான விழிகளைப் பார்க்கும் போதெல்லாம் என்னையும் மீறி என்னுடைய விழிகள் கலங்குகின்றன. தங்களை இதற்குமுன்பு எத்தனையோ தடவைகள் சந்தித்திரு... பது போலவும், தங்களிட மிருந்... ஏதேதோ கற்றுக் கொண்டிருப்ப... போலவும் எல்லாம் என் மனத்தில் ஓ... எண்ணம் உண்டாகிறது. இந்த நா... டில் அரசப் பிரதானிகள் எல்லா... துறவிகளாகவும், துறவிகள் எல்லா... அரசப் பிரதானிகளாகவும் விளங்... கிறார்கள். தங்களையும் அப்படிப்பட்ட... ஒரு முனிவராகவேநான் கருதுகிறேன்!''

இப்படிப் பேசும்போது பூபதிக்கு... கண் கலங்கியது. நினைத்து வைத்து முன்... கூட்டியே சிந்தித்து வைத்துப் பேசி... பேச்சில்லை அது! உள்ளத்திலிருந்து அ... படியே பசுமையாக வந்த வார்த்தைகள்... அவை. அந்தச் சொற்கள் உதய சந்தி... னுடைய உள்ளத்திலே பதிந்தன.

''இளவரசே! ஒரு மிகப் பெரிய சிக்க... லில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள்... உங்களுக்கே அந்தச் சிக்கலின் தன்மை... தெரியாது! இந்த நிலையில், இந்த... சிக்கலிலிருந்து உங்களை நான் விடுவிக்க... வேண்டும் என்றால் நீங்கள் மகத்தான... தியாகங்கள் செய்யச் சம்மதிக்க வேண்... டுமே! உங்களுடைய இளம் உள்ளத்தில்... அத்தனை உறுதி இருக்குமா என்றுதான்... தயங்குகிறேன்!''



இவ்வாறு பேசினார் உதயசந்திரன். பூபதிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

''அமைச்சர் பிரானே! என்னை மேலும் மேலும் திகைப்பில் ஆழ்த்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எனக்கு எது நல்லது என்பது எனக்கே தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. என்னுடைய தாய் நாட்டுக்குப் பேரியாழ் போய்ச் சேருகிறவரை நான் நிம்மதியாக அமரப் போவதில்லை. அந்தப் பேரியாழோடு அந்தப் பேரியாழை வாசிக்கக் கூடிய...''



''நிறுத்துங்கள் நிறுத்துங்கள்!'' என்று இடைமறித்தார் சமணத் துறவி. உதயசந்திரன் தம்முடைய மனத்தில் எழுந்த நகைப்பை அடக்கிக் கொண்டார்.

''இளவரசே! உங்களுடைய இலட்சியம் என்ன என்பதை நான் நன்றாக அறிவேன். அதே சமயம் அந்த இலட்சியத்தில் இப்பொழுது புதிதாக என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்!..... சரி; எல்லா விருத்தாந்தங்களையும் விரிவாகப் பேசப் போகிறோம். இப்பொழுது என்ன அவசரம்! நிம்மதியாக இருங்கள், இளவரசே! இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னோடு புறப்பட வேண்டியது! அதாவது என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால்..!'' உதயசந்திரன் இப்படிச் சொல்லி முடித்ததும், துறவி சொன்னார்:

''சித்திராங்கபூபதி! உங்களை இந்தக் குகைக்கு அனுப்பியவர் ஒரு மகா புருஷர் என்று நேற்றே சொன்னேனல்லவா? நினைவு இருக்கிறதா? எந்த மகா புருஷர் உங்களை இத்தனை காவலோடு சிவிகையிலே இங்கே அனுப்பி வைத்தாரோ, அதே மகா புருஷர்தான் இப்பொழுது உங்களை அவரோடு அழைக்கிறார்! இதுவரை இந்த உத்தமரின் ஏற்பாட்டினால் உங்களுக்கு ஒரு விபரீதமும் நேர்ந்துவிடவில்லை அல்லவா? உங்களுடைய தாய் நாட்டைப் பற்றிய வரலாற்றை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள், இங்கு வந்ததின் பயனாக! அது பெரிய நன்மைதானே? அதைப்போல இன்னும் நன்மைகள் ஏற்படுமே தவிர, விபரீதம் உண்டாகாது! ஆகையினால் நீங்கள் தயங்க வேண்டியதில்லை. உங்களை மயக்கம் போட்டு விழச் செய்து காட்டுக்குள்ளே கொண்டு போய் வைத்துப் பயமுறுத்துகிற சூழ்ச்சியெல்லாம் இந்த மகானிடம் கிடையாது! எத்தனை யுக்திகள் இருந்தாலும், அவையனைத்தும் அரச நெறியிலேதான் செல்லும்! பெருந்தன்மைக்கு ஒரு நாளும் குறைவு இராது; புரிந்ததா?''

சமணத் துறவி இத்தனை வார்த்தைகளைச் சொன்ன போதிலும், இவற்றிற்கு அவசியமே இல்லை என்பது போல, பூபதியின் மனநிலை இருந்தது!

''அமைச்சர் பெருமானே! நீங்களாகப் பார்த்து என்னை இந்தச் சித்தன்னவாசலின் தடாகத்திலே இறக்கினாலும் இறங்கி விடுவேன். சந்தேகம் இல்லை. ஆனால் என்னுடைய இலட்சியத்துக்கு மாறாகமட்டும் ஒரு காரியத்தைச் செய்ய மனம் இசைய மாட்டேன்!''


உதயசந்திரன் விடை கூறவில்லை. சிரித்துக் கொண்டார்!

பதினான்காம் அத்தியாயம்

தஞ்சை அரண்மனை

''திகம்பர தர்சன சாரம்'' என்ற ஜைன நூலில் தமிழ் நாட்டின் பழங்காலச் செய்தி ஒன்று நமக்குக் கிடைக்கிறது. அதாவது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பாண்டியர்களுடைய மதுரை

பதியில் பூஜ்ய பாதர்
என்ற சமண முனிவரின்
ணவராகிய வஜ்ர நந்தி
ன்ற துறவி, "திராவிட
கம்" என்ற பெயரில்
ந மாபெரும் தமிழ்ச் சங்
அமைத்தார். இந்தச்
கம் தமிழ் மொழியின்
லக்கண இலக்கிய வளர்ச்
காகவே அக் காலத்தில்
தாடங்கப்பட்டது. இந்
சங்கத்தின் கிளைகள்
மிழ் நாட்டின் பல பகுதி
ரிலும் இருந்தன. சமண
னிவர்கள் நடத்தி வந்த
த்தனையோ பல ஜைன
கங்களுக்கெல்லாம் தலை
மச் சங்கமாக இந்தத்
ராவிட சங்கம் பணி
ய்து வந்தது. தமிழ் நாட்
ல் ஜைன சமயத்தைச்
ர்ந்த பல அரசர்கள் அக்
லத்தில் இருந்ததால் இந்
சங்கங்களின் வளர்ச்சி
டையின்றி நடைபெற்று
ந்தது. ஆனால் தஞ்சையில்
சாண்டு வந்த முத்தரை
கள் சமண சமயத்தை
டுச் சைவ சமயத்திலே
பட்டதால், மதுரையி
ருந்த சமண சங்கத்துக்
ந் தஞ்சையிலே ஒரு தீவிர
ன எதிர்ப்பு ஏற்பட்டு,
ந்த எதிர்ப்பிலே பலதுறவி
ரும் பங்கு கொண்டார்
. சமணத்துறவிகளோடு
கியவாறே சமண சம
துக்கு எதிராகப் பல
லைகள் செய்த தொண்
களும் தஞ்சையிலே
ருந்தார்கள். எனவே,
யசந்திரன் இந்தச் சங்
களைச் சேர்ந்த சமணத்
தாண்டர்களையும் தம்
ார்ச்சியிலே சேர்த்துக்
காண்டு அவர்களுடைய
துழைப்பையும் பூரண
கப் பயன்படுத்தினர்.
பதியைச் சித்தண்ண
சல் மலையிலிருந்து குதி
ப் படையோடு இரகசிய
கத் தஞ்சைமா நகருக்கு
ழைத்துச் செல்லுகிற
பற்சியில்பல துறவிகளின்
தாசை உதய சந்திர
க்குக் கிட்டியது. திரு
ன சம்பந்தரும், திரு
வுக்கரசரும் தோன்றிய



ஸ்ரீ பண்டித மோதிலால் நேரு

பிறகு சமணர்களின் ஆதிக்கம் குறைந்து, சைவ சமயத்துக்கு விழிப்பு ஏற்பட்டதால், மதுரையிலிருந்த பல தொண்டர்களும் உதயசந்திரனின் முயற்சிகளுக்கு உதவி புரிந்தார்கள். இரகசிய உளவுப் படை காஞ்சிமா நகரத்தில் மட்டுமல்லாமல், தஞ்சையிலும், மதுரையிலுமே மிகவும் சாமர்த்தியமாக வேலை செய்து வந்தது. அதே சமயம் இந்த முயற்சிகளுக்கு எதிராகப் பாண்டியர்களும் வீர விக்கிரமனுடைய வீரர்களும் செய்து வந்த எதிர்ப்புகளுக்குமே ஒத்தாசை கிடைத்து வந்தது! அன்றிருந்த நாட்டு நிலைமை அப்படி!

தஞ்சைமா நகரை நோக்கிப் புறப்படும் போது உதயசந்திரன் பூபதியிடம் இரத்தினச் சுருக்கமாக ஒரு



விஷயத்தைச் சொன்னார்: "இளவரசே! இப்பொழுது நான் உங்களை அழைத்துப் போவது, உங்கள் வலம்புரித் தீவின் மந்திரநாயகத்தைச் சந்திப்பதற்காகத்தான்!"

இவ்வாறு உதயசந்திரன் சொன்னதும், பூபதி சமணத் துறவியைப் பார்த்தான். அவர் கூறினார்:

"பூபதி! உங்களோடு நானும் இதோ நிற்கும் இந்த இசைத் துறவியும் ஒன்று சேர்ந்து யாத்திரை செய்ய வேண்டிய நாள் அதிக தூரத்தில் இல்லை. அப்படி நாம் எல்லாரும் சேர்ந்து யாத்திரை செல்லும்போது உங்களுடைய கேள்விகள் அனைத்துக்கும் விடை கூறுகிறேன்!"

இப்படிச் சொல்லி விட்டுப் பூபதியை வழியனுப்பினார்கள் சமணத் துறவிகள்!

உதயசந்திரனுடைய குதிரைப்படை தஞ்சையை நோக்கி விரைந்தது. வழியில் அங்கங்கே பல சமண சங்கங்களும்,

பல மடாலயங்களும், சத்திரங்க
இவர்களுக்கு அளித்த வரவேற்
பார்த்தபோது பூபதிக்குத் தலை சு
யது! "இவர்களில் யார் சமணர்க
யார் சைவர்கள்! யார் அரசப் பிர
ணிகள்?" என்று தெரிந்து கொ
முடியாதபடி இருந்தது அவர்களுடை
நடைமுறை! இந்த அதிசயத்
யெல்லாம் பார்த்துக் கொண்
தஞ்சைமா நகரை வந்து அடை
போது பூபதி அந்த நகரத்தின் ம
களையும், கோட்டை வாயிலைய
காவற்படைகளின் வைப்பு முறைக
யும் கண்டு பெரும் வியப்பில் ஆ
கினான். குதிரையில் சென்றுகொண்
உதயசந்திரன் பூபதிக்கு முத்தரைய
களின் செல்வாக்கைப் பற்றியும், பன
பலத்தைப் பற்றியும் வர்ணித்துக் கூ
னார். "**குஞ்சர மல்லர்**" என்று அழை
கப்பட்ட யானை வீரர்களைப் பற்றிய
"**கைக்கோளர்**" என்று அக்காலத்தி
அழைக்கப் பெற்ற படை வீரர்களை
பற்றியும், "**வில்லிகள்**" என்றும் "**வே**
காரர்" என்றும் பெயர் தாங்கி
மாபெரும் தீரர்களைப் பற்றியும் உத
சந்திரன் வர்ணித்தபோது, சித்திராங்
பூபதிக்குத் தமிழர்களின் வீரத்தை
பற்றிய பெருமித உணர்ச்சியினா
தோள்கள் விம்மின; தமிழர்களின் பெ
மையைக் கேட்டு உள்ளம் மலர்ந்தது.

"பூபதி! முத்தரையர்களிடம் பெரு
கடற்படை ஒன்று இருக்கிறது. வ
லத்து அரசரும் தஞ்சை முத்தரைய
களும் தாயாதிகள். இந்த இரண்
அரச குடும்பங்களும் ஒன்று சேர்ந்
படை திரட்டி விட்டால், தமிழ்நா
முழுவதையுமே ஒரு குடைக்கீழ் அடக்
விடலாம்! அத்தனை பெரிய அரசர்க
இவர்கள்! கடற்கரைப் பட்டின
களிலே இவர்களுடைய செல்வாக்
அபரிமிதமானது! இவர்களுடைய படை
பலத்தை நீங்கள் புரிந்து கொள்ள
வேண்டும் என்றால், இந்தத் தஞ்சை
மாநகரத்தில் * 'கடகம்' என்று அழை
கப்படுகிற இடத்துக்கு உங்களை அழை
துச் செல்லுகிறேன். நீங்களே உங்க
கண்ணால் அதைப் பார்த்துத் தெரிந்
கொள்ளலாம்!"

இப்படியெல்லாம் முத்தரையர்களின்
பெருமையை எடுத்துச் சொன்னா
உதயசந்திரன். இவ்வாறு அவர் சொல்ல
வேண்டிய காரணம் என்ன என்பதை
ஒருவாறு யூகித்தபோதிலும், சித்தி
ராங்க பூபதிக்கு அதன் மர்மம் திட்ட
மாகப் புலப்படவில்லை. (தொடரும்)

* கடகம்—Cantonment.

கடல் கண்ட கன

பதினைந்தாம் அத்தியாயம்

மாளிகையிலே புயல்!

தஞ்சைமாநகரை நோக்கிச் சித்திராங்க பூபதியும் உதயசந்திரனும் புறப்பட்ட சமயத்தில், சித்தண்ண வாசல் மலையிலே மகிழ்ச்சியும் வெற்றியுணர்ச்சியும் சமணத் துறவிகளின் உள்ளத்தை ஆனந்தப்படுத்தின. ஆனால் அதேநேரத்தில் கொடும்பாளூரிலே குங்கும மாளிகையில் ஒரே அமர்க்களமாக இருந்தது!


வீரவிக்கிரமன் என்ற விடுதித் தலைவனுடைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் வாய்ப்பான இடமாக விளங்கி வந்த குங்கும மாளிகையில் இடி இடித்தது. மின்னல்கள் பளிச்சுப்பளிச்சென்று கண்ணைப் பறித்தன. மனித மனங்கள் ஒன்றோடொன்று மோதி வெடித்தன!

நிரபராதியான ஒரு மனிதனைத் தன்னந்தனியாக ஓர் அறையிலே அடைத்துப் போட்டு, நீண்ட சாட்டையினால் 'பளார்' 'பளார்' என்று அடித்த ஓசையைக் கேட்டுவிட்டுச் சித்திராங்க பூபதி துடிதுடித்தான் அல்லவா? அந்த நேரத்தில்தானே அங்கே இரகசியமாக யாழ் நங்கை வந்து சித்திராங்கனிடம் அவளுடைய ஏற்பாடுகளையெல்லாம் சொன்னாள். அதன் பயனாகத்தானே பூபதி அன்று இரவே அந்த மாளிகையிலிருந்து வெளியேறினான்? இப்பொழுது அந்தச் சவுக்கின் வீச்சு எதிர்பாராத பல தொல்லைகளை விளைத்து விட்டது!

வீர விக்கிரமனுடைய சவுக்கின் கடுமையானவீச்சுகளுக்கு உள்ளானவன் வேறு யாருமில்லை. கொடும்பாளூர் வேளிர் குடும்பத்தின் நேர் சந்ததியான ஆதிரையன்தான்! அந்த ஆதிரையனை இரகசியமாகப் பிடித்து வளைத்துக் குங்கும மாளிகைக்குக் கொண்டு வந்து அவனிடமிருந்து பல செய்திகளை அறிந்து கொள்ள முயன்றான் வீர விக்கிரமன்! முக்கியமாகச் சந்திரசூடன் என்ற வேளிர் குடும்பத்து மந்திரி குமாரனைப் பற்றித் தெரிந்து கொள்ள முயன்றான். ராஜசிம்ம பல்லவன் காலத்தில் பேரியாழைத் தேடிக் கொண்டு வலம்புரித் தீவுக்குச் சென்ற அந்தச் சந்திரசூடன் ஆதிரையனின் சிற்றப்பன்! அவன் வலம்புரித் தீவுக்குச் சென்றவன், அந்தத் தீவிலேயே மறைந்து போனதாகத்தான் பலரும் எண்ணி வந்தார்கள். ஆனால் வீர விக்கிரமனுக்கு மட்டும் அரைகுறையாகப் பல செய்திகள் எட்டின. சந்திரசூடன் வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் பேரியாழோடு திரும்பி



வந்தான் என்றும், அந்தப் பேரியாழைத் தான் குங்கும மாளிகையிலே சேர்ப்பித்தான் என்றும், இன்று குங்கும மாளிகையிலே இருந்து வருகிற பேரியாழ் வலம்புரித் தீவுக்கு உரிய அதே வாத்தியந்தான் என்றும், வீர விக்கிரமன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் முழு விருத்தாந்தமும் சரியாகத் தெரியவில்லை! சந்திரசூடன் இப்பொழுது எங்கே இருக்கிறான் என்று யாராலும் கண்டு பிடித்துக் கூற முடியவில்லை! இந்தக் குழப்பத்திலேதான் குங்கும மாளிகையில் யாழ் நங்கையின் தாயாரோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தான் வீர விக்கிரமன்! அவளிடமிருந்து எல்லாச் செய்திகளையும் அறிந்து கொள்ளலாம் என்றுதான் அவன் நினைத்தான்! ஆனால் குங்கும மாளிகையிலே யாழ் நங்கையின் தாயாரை வற்புறுத்திக் கேட்க இயலவில்லை! அப்படியே கேட்டாலும் அவள் தனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது என்றும், கொடும்பாளூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆதிரையனிடம் கேட்டால் எல்லா வரலாறும் விரிவாகத் தெரியவரும் என்றும் சொன்னாள். அதற்குமேல் அவளை வற்புறுத்த விரும்பவில்லை, வீர விக்கிரமன்! அவளைப் பகைத்துக் கொண்டு விட்டால் பிறகு குங்கும மாளிகையின் ஒத்துழைப்பு தனக்குக் கிடைக்காதே என்று தயங்கினான் அவன்! தவிர, ஆதிரையன் மூலமாகத்தான் அந்தப் பேரியாழ் தனக்குக்கிடைத்தது என்றும், சந்திரசூடனைத் தான் பார்த்ததே இல்லை என்றும், ஒருநாள் அந்த அம்மாள் வீர விக்கிரமனிடம் சொன்னாள்! அந்த அம்மாளுடைய பேச்சில் எது உண்மை, எது பொய் என்று வீர விக்கிரமனால்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை! அத்தனை மேதாவி அந்த அம்மணி! இந்நிலையில் வீர விக்கிரமன் ஏதேதோ யோசனைகள் செய்து பார்த்தான்! ஆதிரையன் அடிக்கடி கடல் கடந்து யாத்திரை செய்வதற்குங்கூட ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று வீர விக்கிரமனுக்குத் தோன்றியது. எனவே ஆதிரையனை எப்படி வசப்படுத்தலாம் என்று பல முறைகளைக் கையாண்டு பார்த்தான்! ஆனால் ஒன்றும் பயன் அளிக்கவில்லை. இதன் பிறகுதான் இந்த இளைஞனைச் சூழ்ச்சியின் மூலம் வளைப்பதற்காக முனைந்தான்! யாழ் நங்கையின் அன்னைக்கு ஏதேதோ அரச வெகுமதிகள் எல்லாம் கொடுத்து அவளுடைய ஒத்துழைப்போடு ஆதிரையனைக் குங்கும மாளிகைக்கே வரும்படி செய்தான்! பேரியாழ் வாசிப்பில் மிகவும் பிரியம் கொண்டிருந்த ஆதிரையனை இசையின் வலையை வீசி இழுத்துப் பிடித்தான்! குங்கும மாளிகையில் அவனைத் திடீரென்று தாக்கிப் பிடித்துத் தனியாக ஓர் அறையிலே கொண்டு போய் வைத்துச் சந்திரசூடனைப் பற்றிய செய்திகளைச் சொல்லும்படி பயமுறுத்திக் கேட்டான்! ஆதிரையன் அசையவில்லை! சாட்டையினால் பளார் பளார் என்று அடி விழுந்ததே தவிர, ஆதிரையனிடமிருந்து எவ்விதமான இரகசியமும் வெளிவரவில்லை. அவனை ஒரு தனியான இருட்டு அறையிலே அடைத்துப்போட்டுவிட்டு, இன்னும் என்னென்ன சித்திரவதைகள் செய்யலாம் என்று யோசித்தான் வீர விக்கிரமன். தினந்தோறும் அவனைச் சாட்டையினால் வதைத்தும் இரகசியம் எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. சித்திராங்க பூபதிக்கு இதெல்லாம் தெரியாது! அவன் கேட்ட சாட்டையின் ஓசை அதற்கு முன்பும் பல தடவைகள் ஆதிரையனுடைய முதுகிலே விழுந் திருக்கிறது என்பதைப் பூபதி அறிந்திருந்தால், அந்த இரவு அப்படி அவன் ஓடி யிருக்கவே மாட்டான்! இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று வீர விக்கிரமனை அன்றிரவே எதிர்த்து நின்றிருப்பான்! ஆனால் எதிர்த்து வெல்ல முடியுமா! அத்தனை பெரிய சூழ்ச்சிக் கூட்டத்தைத் தன்னந்தனியாக அந்தக் குங்கும மாளிகையிலே பூபதி எதிர்த்துச் சண்டை செய்வது என்பது முடிகிற காரியமா! அதனால்தான் யாழ் நங்கை இந்த விவரங்களை யெல்லாம் முழுதும் சொல்லாமல் இரகசியமாகத் தன்னைச் சிவிகையிலே அனுப்பி விட்டாள் என்று வெகு நாட்களுக்குப் பிறகுதான் பூபதிக்குத் தெரிய வந்தது! அதுவரை ஆதிரை



ணைப் பற்றிய செய்தி யெல்லாம் பூபதிக்கு ஒன்றுமே தெரியாமல்தான் இருந்தது! உதயசந்திரனுடைய ஏற்பாடு அப்படி!

ஆமாம்; இத்தனையும் உதயசந்திரனுடைய ஏற்பாடுதான்! வீரவிக்கிரமன் பூரண உரிமையோடு நிம்மதியாக வளைய வந்து கொண்டிருந்த அந்தக் குங்கும மாளிகைக்குள்ளே அவனுக்கும் தெரியாமல் இப்படி ஓர் இரகசிய ஏற்பாடு எப்படி நடந்தது? வீரவிக்கிரமனால் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை! கோபத்தினால் அவனுடைய உடல் முழுதும் பற்றி எரிந்தது! அந்தக் கோப நெருப்புக்குப் புயல் வீசியது போல இருந்தது பூபதியின் மறைவும் அதை யடுத்து நடந்த சம்பவங்களும்!


படிம விலாசம் என்ற அறையிலே பூபதியைக் காணோம் என்று பணியாளர்கள் தெரிவித்தார்கள். இதே சமயம் மாளிகையின் உள் அறையிலிருந்து யாழ் நங்கையைக் காணோம் என்று அலறினாள் தாயார்! வீர விக்கிரமனுக்கு எப்படி யிருக்கும்!

பூபதியின் மறைவு ஒரு பெரிய இடி விழுந்தது போல் இருந்தது, விக்கிரமனுக்கு! அந்தப் பேரிடியைத்தொடர்ந்து வானமே இடிந்து விழுந்தது போல, யாழ் நங்கையைக் காணோம் என்ற செய்தி வந்ததும் வீர விக்கிரமனுக்கு நிலத்திலே பாதங்கள் பதியவில்லை. இந்த அகில உலகமுமே அவனுடைய கண்ணுக்கு முன்னால் 'கிர்' என்று சுழன்றது! நட்சத்திரங்களும் கிரகங்களும் தனக்கு முன்னால் சுழல்வதுபோலவும், அப்படிச் சுழல்கின்ற ஒவ்வொரு நட்சத்திரத்துக்குள்ளும், ஒவ்வொரு கிரகத்துக்குள்ளும் உதய சந்திரனுடைய முகம் கண்களைச் சிமிட்டிக் கொண்டே தன்னைப் பார்த்துப் பரிகசிப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று, வீர விக்கிரமனுக்கு! இடுப்பிலே செருகி யிருந்த வாளை ஒரு கையிலே உருவிக் கொண்டான். இன்னொரு கையிலே சாட்டையைப் பிடித்தான்! குங்கும மாளிகையின் சுவர்களில் எல்லாம் சாட்டை பளார் பளார் என்று புரண்டது! அந்த



அலங்கார மாளிகையிலே நின்ற பதுமைகள், படிமப் பேடகங்கள், நாயக விளக்குகள் எல்லாவற்றையும் வாளால் வீசி வீசிக் கீழே சாய்த்தான்! பணியாளர்கள் எல்லாம் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினார்கள்! தாதிகளும் அந்தப்புரத்துச் சேடிப் பெண்களும் பயந்து நடு நடுங்கிக் கொண்டு நாலு பக்கமும் சாடினார்கள். வீரவிக்கிரமன் ஒரு பைத்தியக்கார வெறியனைப் போல ஆவேசத்தோடு கூப்பாடு போட்டான்!

குங்கும மாளிகை போர்க்களத்தைப் போலச் சின்னாபின்னமாகச் சிதறுண்டது! விக்கிரமனுடைய வாளுக்கும் சாட்டைக்கும் தப்பிக் கொண்டு ஆடவர்களும் பெண்டிர்களும் அங்கங்கே யிருந்த அறைகளுக்குள்ளே ஓடிச்சென்று கதவுகளை அடைத்துக் கொண்டார்கள்!



''பூபதியைக் காணவில்லை. அவனோடு யாழ் நங்கையும் மறைந்தாள்!'' என்ற செய்தி அத்தனை விபரீதப் புயலைச் சுழற்றி வீசியது. ஆனாலும் அத்தனை புயலுக்கும் மத்தியில் யாழ் நங்கையின் அன்னை 'விறு விறு' என்று நடந்து குங்கும மாளிகையின் இசை மன்றத்துக்குச் சென்றாள். என்ன ஆச்சரியம்! அங்கிருந்த பேரியாழையும் காணோம்!

எத்தனை பெரிய புயலும் அடங்க வேண்டும், எத்தனை பெரிய நெருப்பும் அணைய வேண்டும் என்று உலக நியதி இருக்கிறதல்லவா? அதன்படி வீர விக்கிரமனுடைய மனப் புயலும் கோப நெருப்பும் அடங்குவதற்கு ஒரு நாள் முழுதும் ஆயிற்று! அது வரை வீர விக்கிரமன் படிமவிலாசத்துக்குள்ளேயே மதம் பிடித்த யானையைப் போல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்! அந்த அறையிலிருந்த அலங்காரப் பொருள்களும், திண்டுகளும் அவனுடைய சீற்றத்துக்கு இரையாயின!

சினம் தணிந்தது! கோபம் என்ற நெருப்பு அணைந்தது. அதன் பிறகு அறிவு கண் விழித்துப் பார்த்தது. உடனே பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது அந்த வீரவிக்கிரமனுக்கு; ஆதியிலிருந்தே யாழ் நங்கை பூபதியோடு தனியாகச் சந்தித்துப் பல சூழ்ச்சிகள் செய்திருக்க வேண்டும்! இல்லையென்றால் திடீரென்று இத்தனை கட்டுக்காவலையும் மீறி இவர்கள் இருவரும் எப்படி மறைந்திருக்கக் கூடும்? இவ்வாறு எண்ணினான் வீர விக்கிரமன். இதற்கு ஏற்றாற் போல் யாழ் நங்கையின் அன்னை பேரியாழ் மறைந்து விட்டது என்ற செய்தியையும் அவனுக்குத் தெரிவித்தாள்!

வீர விக்கிரமனுக்கு மெய்யான நிலைமை என்ன என்று ஒரு வகையாகத் துலங்க ஆரம்பித்தது. தாயைக் கூடப் பெரிதாக எண்ணாமல், அத்தனை பெரிய மாளிகையையும், அத்தனை வசதிகளையும் மறந்து விட்டு அந்தப் பேரியாழோடு அவ்வளவு தைரியத்தோடு ஒரு இளம் நங்கை மறைந்து செல்ல வேண்டும் என்றால், நிச்சயம் உதயசந்திரன் இந்த ஏற்பாட்டுக்கு வழி செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை சாமர்த்தியமாக இந்தக் காரியம் நடந்திருக்காது! அப்படியானால் தனக்குத் தெரியாமல் உதயசந்திரன் இந்தக் குங்கும மாளிகைக்கு எப்பொழுது வந்தான்? அன்றொருநாள் யாழ் வாசிப்பைக் கேட்பதற்காக உதயசந்திரன் குங்கும மாளிகைக்கு வந்திருந்தான் என்பது வீர விக்கிரமனுக்குத் தெரியும்! அவனுக்கு மட்டும் என்ன! ஊரில் எல்லாருக்குமே தெரியும் அது! பகிரங்கமாகத்தான் வந்தான் உதயசந்திரன்! ஆனால் அன்று யாழ் நங்கையைத் தனியாகச் சந்திக்க வில்லை அவன்! அப்படியானால் இத்தனை சூழ்ச்சிகளும் எப்படி நடந்தன? இந்த இளம் பெண் எப்படி இந்தச் சூழ்ச்சிகளுக் கெல்லாம் உடன்பட்டாள்!

இந்தக் கேள்விகள் எல்லாம் 'குபுகுபு' என்று வீர விக்கிரமனுடைய யோசனையிலே எழுந்து அறிவைக் குழப்பின. யாழ் நங்கையின் அன்னையிடம் ஆயிரம் கேள்விகள், பதினாயிரம் விதமாகக் கேட்டான்! அவளுக்கும் இந்தச் சூழ்ச்சியிலே பங்கு இருக்குமா என்று சந்தேகித்து அவளையும் எப்படி எல்லாமோ அலசிப் பார்த்தான்! ஒன்றிலும் ஒரு விஷயமும் புலப்படவில்லை.

வீர விக்கிரமனுக்கு என்ன செய்வது என்று ஓடவில்லை! பூபதி மறைந்தான்; யாழ் நங்கை மறைந்தாள்; பேரியாழும் போய் விட்டது! இந்த நிலைமையில் இன்மேல் தன்னுடைய திட்டங்கள் எல்லாம் என்ன ஆவது? வலம்புரித் தீவுக்கு அனுப்பிய தூதுவர்கள் திரும்பி வரும்

போது அவர்களிடம் மேற்கொண்டு என்ன பேசுவது?

இப்படி எண்ணியதும் வீர விக்கிரமனின் கோபம் எல்லாம் உதயசந்திரனிடம் திரும்பியது! இந்தப் பொல்லாத உதயசந்திரனை உயிரோடு விட்டு வைப்பதே பிசகு! அவன் ஒருவன் இருந்து கொண்டு எத்தனை பெரிய தந்திரங்களைச் செய்கிறான்! எந்த முயற்சியையும் நடக்கவிடாமல் செய்கிறானே! —என்று மனம் பொருமினான் வீர விக்கிரமன்!

வலம்புரித் தீவுக்கு ஓடி விடலாம் என்று நினைத்துப் பூபதியும், யாழ் நங்கையும் பேரியாழோடு மறைந்து விட்டார்கள் என்று தீர்மானித்தான் விக்கிரமன். இவர்களுக்குத் துணையாக உதயசந்திரன் உதவி செய்திருக்கிறான் என்பதையும் யூகித்தான் அவன். இனி மேல் இந்தக் கொடும்பாளூரில் இருந்து கொண்டு ஒரு விநாடியைக் கூட வீணாக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான். மேற்கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கைகள் முக்கியமானவை! அவற்றை ஆணித்தரமாகச் செய்து விட வேண்டும்! அப்படிச் செய்ய வேண்டுமானால், உடனே பாண்டியர்களிடம் செல்ல வேண்டியது தான் வழி! அவர்களோடு கலந்து ஆலோசித்துத் தாமதம் இல்லாமல் இந்த உதயசந்திரனை ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டான் வீரவிக்கிரமன்!

பதினாறும் அத்தியாயம்

நல்வரவு

உதய சந்திரனோடு குதிரையிலே சென்று கொண்டிருந்த பூபதிக்கு மனத்தில்ஏதேதோ சிந்தனைகள் திடீர் திடீர் என்று எழுந்தன!

சித்தண்ணவாசல் குகையில் பேசிக் கொண்டிருந்த போது, உதயசந்திரன் சொன்ன ஒரு வாக்கியம் பூபதிக்கு இப்பொழுதும் அடிக்கடி நினைவு வந்தது.

"இளவரசே! உங்கள் இலட்சியம் என்ன என்பதை நான் நன்றாக அறிவேன். அதே சமயம், அந்த இலட்சியத்தில் இப்பொழுது புதிதாக என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்!"

'இப்படிச் சொன்னார் அல்லவா, உதயசந்திரன்? புதிதாக ஏற்பட்டிருக்கும் மாறுதல் என்று எதைக் குறிப்பிட்டார்? யாழ் நங்கையைக் கண்டு அவளிடம் மனத்தைப் பறி கொடுத்ததைக் குறிப்பிடுகிறாரோ? யாழ் நங்கையிடம் உறுதி மொழி கூறிவிட்டு வந்ததைத்தான் இப்படிக் குத்திக் காட்டுகிறாரோ?'

இவ்வாறு நினைத்தான் பூபதி! உடனே யாழ் நங்கையைப் பற்றிய சிந்தனை மேலெழுந்தது.

'குங்கும மாளிகையிலிருந்து நம்மை இந்தச் சித்தண்ண வாசல் மலைக்கு அனுப்பியவள் யாழ் நங்கைதான்! அப்படியிருக்கும்போது சமணத்துறவி வேறு விதமாகச் சொன்னாரே? என்னை இங்கே அனுப்பிய புண்ணிய புருஷர் உதயசந்திரனேதான் என்றல்லவா அவர் குறிப்பிட்டார்! அப்படியானால் குங்கும மாளிகையிலிருந்து நான் சிவிகையிலே தப்பி வந்ததற்கு உதவி செய்தவர், அப்படி வருவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் இந்த உதயசந்திரன் தானோ? அது உண்மையாக இருக்குமானால் யாழ் நங்கையைக் கண்டு பேசியிருக்கிறாரா, இந்த உதய சந்திரன்? குங்கும மாளிகையிலிருந்து



நான் புறப்படுவதற்கு முன்பு அங்கே வந்தாரா உதயசந்திரன்? வந்து யாழ் நங்கையிடம் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் விரிவாகச் சொல்லி என்னையும் சிவிகையிலே அனுப்பி விடும்படி கூறியிருப்பாரோ? யாழ் நங்கை ஏன் அந்த விஷயங்களை யெல்லாம் என்னிடம் சொல்லவில்லை? அந்தச் செவிட்டு வேலைக்காரன் கூட வேறு ஒரு செய்தியும் சொல்லவில்லையே! உதயசந்திரன் குங்கும மாளிகைக்கு வந்து போனதாகவே அந்தச் செவிடன் காட்டிக் கொள்ளவில்லையே! இதெல்லாம் என்ன இரகசியம் என்றே தெரியவில்லையே!'



பூபதி இவ்வாறெல்லாம் எண்ணி மனம் குழம்பினான். என்றாலும் அவனுக்கு இத்தனை குழப்பங்களுக்கு மத்தியிலும் உதயசந்திரனிடம் சந்தேகமோ, மன மாற்றமோ எள்ளளவும் ஏற்படவில்லை.

''உதயசந்திரன் ஒருவேளை ஏதாவது மாறு வேடத்தில் குங்கும மாளிகைக்குள்ளே வந்து போயிருப்பார்! அதனால் அந்தச் செவிட்டு வேலைக்காரனுக்குக் கூட அந்த விஷயம் தெரிந்திராது! இந்த அரசியல் மேதை எந்த நேரத்தில் என்ன செய்வார் என்று எப்படிச் சொல்ல முடியும்! ஆனால் ஒன்று. இவரால் நமக்கு எந்தவிதமான விபரீதமும் நேராது. அது நிச்சயம்!''

இவ்வாறு மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டான் பூபதி.

''என்ன இளவரசே! தஞ்சை நகரத்தைப் பார்த்ததும் ஒரே மௌனத்தில் ஆழ்ந்து விட்டீர்கள்! நகரத்தின் அமைப்பு உங்களுக்குத் திகைப்பைத் தருகிறதா? அல்லது என்னுடைய போக்கு உங்களுக்குப் பிடிக்கவில்லையா? எது உண்மை? சொல்லுங்கள்!'' என்று கேட்டுக்கொண்டே புன்முறுவல் புரிந்தார் உதயசந்திரன்! அந்தப் புன்முறுவலில் ஏதோ ஒரு மோகனம் இருந்தது! விவரிக்க முடியாத ஒரு காந்த சக்தி அந்தப் புன்முறுவலிலிருந்து வந்து பூபதியை இழுத்தது!

''இவர் வெறும் அமைச்சர் இல்லை! ஏதோ ஒரு தெய்விகமான சக்தி இவரிடம் இருக்கிறது! துறவிகளோடும் மகான்களோடும் நெருங்கிப் பழகி ஏதோ ஒரு பேராற்றலை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார் இந்த ஞானி! இவரைப் போய்ச் சந்தேகப்படுவதே மிகவும் பாபம்!''

இப்படி நினைத்துக்கொண்டே சித்திராங்க பூபதி சொன்னான்:

''அரசமுனிவரே! தங்களிடம் என்ன சக்தி இருக்கிறது என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. தங்களைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ ஒரு மின்னல் என்னுடைய உடம்பிலே பாய்கிறது! தங்களுடைய ஞான ஒளியை மற்றவர்கள் கண்டிருக்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது! ஆனால் என் வரையில் ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. துறவிகளின் உடையிலே அரசப் பிரதானிகள் எல்லாம் வளைய வருகிற இந்த நாளில், நீங்கள் அரச உடையிலே வளைய வருகிற ஒரு துறவி. ஒரு பெரிய ஞானி!''

கிருஷ்ணனிடம் சகாதேவன் பேசியது போல, உதயசந்திரனிடம் சித்திராங்க பூபதி பேச ஆரம்பித்தான்.


அந்தப் பேச்சுக்கு எவ்விதமான மறுமொழியும் கூறாமல் உதயசந்திரன் வேகமாகக் குதிரையைச் செலுத்தினார். ஒரே பாய்ச்சலில் அவர் ஏறியிருந்த குதிரை முத்தரையர்களின் மாளிகைக்கே வந்து விட்டது! பூபதி திகைப்பிலிருந்து மீண்டு அடுத்த கணம் தன்னுடைய குதிரையையும் வேகமாக ஒரு சுண்டுச் சுண்டினான்! அந்தக் குதிரையும் வாயு வேகமாகப் பாய்ந்து சென்று உதய சந்திரனின் குதிரையோடு சேர்ந்து கொண்டது.

தஞ்சைமா நகரில் முத்தரையர்களின் அரண்மனை வாயிலிலே மற்ற அரசப் பிரதானிகளோடு வலம்புரித் தீவின் மந்திரநாயகமும் விருந்தினர்களை எதிர்கொண்டு அழைப்பதற்காகக் காத்திருந்தார்!

(தொடரும்)

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited

உங்களுக்கு உண்மையாகத் தேவைப்படும் ரேடியோ....



மாடல் 5165

A. C. மெயின்களுக்கு

மாடல் 5265

A. C. அல்லது D. C. மெயின்களுக்கு

இரண்டும் 5 வால்வுகள், 3 வேவ்பாண்ட்

நிகர விலை ரூ. 295/-

"HIS MASTER'S VOICE"

எச். எம். வி. ரேடியோ டீலர்களிடம் மட்டும் கிடைக்கும்

"HIS MASTER'S VOICE"
The Hallmark of Quality



FOLDELUXE

போல்டிலக்ஸ்
நாற்காலிகள்

★ நிமிஷத்தில் மடிக்கக் கூடியவை ★ நீடித்து உழைக்கக் கூடியவை
★ உயர்ந்த எஃகு குழாய் சட்டங்கள் ★ பல வர்ணங்களில் கிடைக்கும்

ஹோட்டல்கள், கிளப்புகள், ஆஸ்பத்திரிகள், சினிமா, நாடகக் கொட்டகைகள், நூல் நிலையங்கள், வீடுகள் முதலான இடங்களுக்கு உபயோகமாகும்படி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

தென்னிந்தியாவுக்கு விற்பனை ஏஜண்டுகள்:

அடிஸன் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்
மதராஸ் - - பெங்களூர்

கடல்கொண்ட தென

பதினேழாம் அத்தியாயம்

நங்கையின் அன்னை

வீர விக்கிரமன் கொடும்பாளூரி லிருந்து மதுரைக்குப் புறப்படுவதற்கு முன்பு சில பாதுகாப்பு ஏற்பாடுகளை மிகவும் கவனிப்போடு செய்து முடித் தான். யாழ் நங்கை காணமற் போனது அவனுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருந்ததால், அந்தக் கணத்தி லிருந்து யாரையும் நம்புவதற்கு அவ னுடைய உள்ளம் இடந்தரவில்லை. மகள் காணமற் போய் விட்டாள் என்று யாழ் நங்கையின் அன்னை துடிதுடித்துக் கொண்டிருந்த போதிலும், வீர விக்கிர மன் அந்தத் துடிதுடிப்பை முழுதும் நம்பிவிடவில்லை. யாழ் நங்கையும் அவ ளோடு பேரியாழும் சேர்ந்து மறைந்து விட்டதால், வீர விக்கிரமனுக்கு அந்த அம்மாளிடம் பலத்த சந்தேகம் ஏற் பட்டது. மகளோடு இந்த அம்மாளும் சேர்ந்து ஏதோ சூழ்ச்சி செய்திருக்க வேண்டும் என்று வீர விக்கிரமன் நினைத்தான். ஆனல் அதே சமயம் இன்னெரு சந்தேகமும் வீர விக்கிரம னுடைய மனத்தில் ஏற்பட்டது. அதா வது, ஆதியிலிருந்தே யாழ் நங்கையின் மனப்போக்குக்கும் அவளுடைய அன்னை யின் போக்குக்கும் எத்தனையோ வித்தி யாசம் இருந்து வந்திருக்கிறது. இருவ ருடைய இலட்சியங்களும் முற்றிலும் வேறுபட்டவை. அதோடு, இந்த இலட் சிய மாறுபாட்டினல் இருவருக்குள்ளும் அடிக்கடி சண்டைகூட நடந்திருக்கிறது. அதெல்லாம் வீர விக்கிரமனுக்கு நன்ரு கத் தெரியும். எனவே, இப்படி வெவ் வேறு மன இயல்புகளைக் கொண்ட இந்த இருவருக்குள்ளும் எப்படி மனம் ஒன்றுபட்டு அதன் பயனக ஒரு சூழ்ச்சி நடந்திருக்க முடியும்?

இவ்வாறு சந்தேகப்பட்டான் வீர விக்கிரமன். பல வருஷங்களுக்கு முன்பு கொடும்பாளூரில் வயோதிகப் பெரிய வர்கள் பலர் இந்தக் குங்கும மாளிகை யைப் பற்றிப் பல செய்திகள் கூறியதை வீர விக்கிரமனே கேட்டிருக்கிருன். யாழ் நங்கை என்ற அந்தப் பெண்ணின் இயற்கையான பெயர் வேறு என்றும், இந்த இளம் பெண் குங்கும மாளிகை யைச் சேர்ந்தவள் இல்லை என்றும் பலர் வீர விக்கிரமனிடமே சொல்லியதுண்டு. இந்த முறையில் அந்த நங்கைக்கும் அவளுடைய அன்னை என்று சொல் கொள்ளும் கணிகையர் தலைவிக் பாசமான தொடர்பு ஏதும் இரு நியாயமில்லை என்பது வீர விக்கி னுக்கு நன்ருகத் தெரியும். என்ருலு யாழ் நங்கை தனது வரலாறு என் என்பதை அறிவாளா, அவளுடை உள் மனத்தில் தனது எதிர்கால வா வைப் பற்றித் திட்டமாக என்ன கரு யிருக்கிருள் என்பது யாருக்கும் ச



ாகத் தெரியாது. ஆகையால் வீர விக்கிரமனுக்கு ஒரு தெளிவான அபிப்பிராயம் கிடைக்கவில்லை. குங்கும மாளிகையின் தலைவியான அம்மாளைப் பற்றியோ அவனுக்கு மிக நன்றாகத் தெரியும். எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்ளுவாள் என்று சொல்ல முடியாத இயல்பு கொண்டவள் அவள்! சேற்றிலே நட்ட கம்பம் எந்தப் பக்கத்தில் எப்பொழுது எப்படிச் சாயும் என்று யாரால் சொல்ல முடியும்! எனவே, யாழ் நங்கை சித்திராங்க பூபதியோடு வலம்புரித் தீவுக்கே ஓடிப் போக வேண்டும் என்று தீர்மானித்திருந்தாலும், அந்தத் தீர்மானத்துக்கு இந்தக் கணிகையர் தலைவியும் உதவி செய்திருக்கக் கூடும்! இப்படி நினைத்தான் வீரவிக்கிரமன். ஆனால் மகளைக் காணோம் என்றும், பேரியாழ் போய் விட்டது என்றும் அந்த அம்மாள் துடிதுடிப்பதைப் பார்த்தால், வீர விக்கிரமனுக்கே மலைப்பாக இருந்தது! அந்தச் சதிகாரன்கூடக் கலங்கும்படி இருந்தது அந்தக் காட்சி!

வீர விக்கிரமன் ஏற்கனவே தனக்கு ஏற்பட்டிருந்த குழப்பத்தை அதிகப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. குங்கும மாளிகையில் தனக்கு மிகவும் நம்பிக்கையான வீரர்கள் பன்னிரண்டு பேரைக் காவல் வைத்துவிட்டு மதுரைக்குப் புறப்பட்டான்.

இந்தப் பன்னிரண்டு வீரர்களுக்கும் துணையாக இன்னும் போர்வீரர்கள் அவசியப் பட்டால், கொடும்பாளூர் அரண்மனைத் தளபதிக்கு உடனே செய்தி அனுப்ப வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளை யிட்டான். யாழ் நங்கையின் அன்னையான அந்தக் கணிகையர் தலைவியிடம் சொன்னான்: 'அம்மா! எதிர்பாராத விதமாக ஏதேதோ புதிர்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன! யார் நமக்குப் பகைவர், யார் நமக்குத் துணைவர் என்றே சொல்ல முடியாத நிலையில் திடீர் திடீரென்று எனக்கு அதிர்ச்சிகள் வந்து கொண்



டிருக்கின்றன. இந்த நிலைமையில் இந்தக் குங்கும மாளிகையின் எதிர்காலத்தைப் பற்றியும் இப்பொழுது எனக்கு அவ நம்பிக்கை உண்டாகி விட்டது. எந்த மாளிகையானது என்னுடைய திட்டங்களுக்கு எல்லாம் ஈடுகொடுத்து உதவும் என்று கனவு கண்டேனோ, அந்த மாளிகையிலேயே இப்பொழுது இத்தனை பெரிய அதிசய நிகழ்ச்சி நடந்து விட்டது. ஆகையால் இனிமேலும் மெத்தனமாக இருப்பது அறிவீனம்! இந்தக் காவலாளர்கள் இரவும் பகலும் இனி இந்த மாளிகைக்குக் காவலாக நிற்பார்கள். யார் உள்ளே வந்தாலும், அல்லது, உள்ளேயிருந்து வெளியே சென்றாலும் இவர்களுடைய அனுமதியைப் பெற்றாக வேண்டும்!''

இவ்வாறு சொல்லிக் காவலாளர்களுக்கும் கண்டிப்பான உத்தரவுகள் போட்டு விட்டுத்தான் வீர விக்கிரமன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டான். அப்போது யாழ் நங்கையின் அன்னை ஓடிவந்து வீர விக்கிரமனுடைய பாதங்களிலே விழுந்தாள்.

''ஐயா! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னையுங்கூட நீங்கள் சந்தேகப்படுவது போல் தோன்றுகிறது. நானும் இந்தச் சூழ்ச்சிகளிலே சம்பந்தப்பட்டிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள் போலிருக்கிறது. வேண்டாம். அந்த மாதிரியான சந்தேகம் உங்களுக்கு வேண்டாம். மறைந்து போன அந்தப் பேரியாழின் பேரில் ஆணையாகச் சொல்கிறேன். எனக்கும் இந்தச் சூழ்ச்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. உண்மையில் நங்கை காணமல் போய் விட்டதால் என்னுடைய கனவெல்லாம் பாழாகி விட்டது. நான் என்ன கருதி அவளை வளர்த்தேனோ, நான் எந்த நோக்கத்தோடு அவளுடைய முன்னேற்றத்துக்குப் பாடுபட்டேனோ அத்தனையும் சின்னாபின்னமாகச் சிதறிவிட்டது. அன்றொரு நாள் ஒரு உத்தமருக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தேன். அந்த வாக்குறுதியைப் புறக்கணித்து விட்டு நங்கையை என் இஷ்டப்படி மாற்றுவதற்கு முனைந்தேன். அந்தத் துரோகத்துக்கு எனக்குத் தண்டனை கிடைத்துவிட்டது! ஐயா, நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருந்தால் அந்த இரகசியத்தை உங்களிடம் கூறுகிறேன்!''

இவ்வாறு சொன்னாள் குங்கும மாளிகைத் தலைவி. வீர விக்கிரமனுக்கு ஆத்திரம் வந்தது. அவனுடைய மனம் அப்பொழுது இருந்த நிலையில் இந்தப் பிரலாபம் எல்லாம் அவன் செவியிலே ஏறவில்லை.

''அம்மா! உனக்கு அறிவு இருக்கிறதா? உன்னை நான் சந்தேகப்படுகிறேன் என்ற விஷயந்தான் ஒரு பெரிய விஷயமாக உனக்கு இப்பொழுது படுகிறது! அட சுயநலம் பிடித்த பேதையே! என்னுடைய திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகச் சிதறிப் போய்விட்ட இந்தத் தருணத்தில், கேவலம் உன்னுடைய உண்மையை மெய்ப்பிக்க என்னை அமைதியாக இருக்கும்படி சொல்லுகிறாய்! அப்படித்தானே? அறிவற்ற பெண்ணே! எழுந்திரு! என்னுடைய காவலாளர்கள் உனக்கு ஒரு தீங்கும் நேராதபடி காப்பாற்றுவார்கள். நான் மதுரைக்குச் சென்று திரும்புகிற வரை. எனக்கு வேறு எந்தச் செய்தியும் காதிலே விழாது. அந்த உதயசந்திரனுடைய சூழ்ச்சிகளை ஒழித்துக் கட்டி விட்டு, சித்திரமாயனைப் பல்லவ பீடத்தில் அமர்த்துகிறவரை எனக்கு அமைதி என்பது இல்லை. நீ ஏதோ சொன்னாயே, யாருக்கோ நீ துரோகம் செய்தாய் என்று, அந்த வரலாறுகள் எல்லாம் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். யாழ் நங்கையின் வரலாற்றில் ஏதோ இரகசியம் இருக்கிறது என்று மட்டும் இப்பொழுது யூகித்துக் கொள்கிறேன். மற்றக் கதைகள் எல்லாம் இந்த அவசரத்தில் என்னால் கேட்க முடியாது. வலம்புரித் தீவுக்கு ஓடிப் போய்விட்ட அந்த நங்கையின் கதையை நான் இனிமேல் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமுமில்லை! இப்பொழுது நான் மதுரைக்குப் புறப்படுகிறேன்!''

இவ்வாறு குங்கும மாளிகையிலே சொல்லி விட்டுத்தான் மதுரை சென்றான் வீர விக்கிரமன்!

பதினெட்டாம் அத்தியாயம்

சித்திர விசித்திரம்

தஞ்சை அரண்மனையில் நல் வரவேற்பு கோலாகலமாக நடைபெற்றது. முத்தரையர்கள் தங்களுடைய குலக் கொடிக்கு வாய்த்த திருநாயகனை வரவேற்றார்கள் என்பது அவர்கள் உபசரிப்பிலேயே நன்கு தெரிந்தது. இந்த விஷயம் பூபதிக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. உதயசந்திரன் அருகிலே அமர்ந்து கொண்டு பூபதியின் மனப் போராட்டத்தைக் கவனித்தார்.

கவனித்து அதற்காக மனம் குழம்பவில்லை அவர்! பூபதியின் தர்ம சங்கடத்தைக் கண்டு மனத்துக்குள்ளே அநுபவிக்கிறவர் போல இருந்தது அவருடைய தோற்றம்!

"சித்திராங்க பூபதி! குதிரையிலே வந்த களைப்பு உங்களுக்கு மிகவும் அதிகமாக இருக்கும். என்னைப்போல் தினந்தோறும் இரவும் பகலும் சுற்றித் திரிகிற நாடோடிக்கு இதெல்லாம் சகஜம். ஆனால் நீங்கள் அப்படியில்லை. சமீப காலத்தில் சேர்ந்தாற்போல் பல நாட்கள் குங்கும மாளிகையில் உணவும் உறக்கமும் தவிர வேறு எந்தவிதமான வேலையும் இல்லாமல் பழகிவிட்டீர்கள். ஆகையால் இப்பொழுது திடீர் என்று குதிரையில் ஏறி வந்தது களைப்பாக இருக்கும். உங்களுக்கு இப்பொழுது ஓய்வு மிகவும் அவசியம். இந்த அரண்மனையின் மேல் மாடத்தில் மந்திரநாயகத்துக்கும் உங்களுக்கும் சேர்த்து ஒரு விசாலமான அறை இருக்கிறது. அங்கே சென்று சற்றுக் களைப்பாறுங்கள். அவசியப்பட்டால்மந்திரநாயகமும் உங்களோடு வருவார்!"


இப்படிச் சொன்னார் உதயசந்திரன், பூபதியைப் பார்த்து! மந்திரநாயகம்சொன்னார்: "அமைச்சர் திலகமே! எங்கள் இளவரசருக்கு இப்பொழுது உறக்கம் வராது. கடந்த சில நாட்களாக அவருக்கு ஏதேதோ எதிர்பாராத சம்பவங்கள் நேர்ந்து மனத்தைத் தொல்லைப் படுத்தியிருக்கின்றன. ஆகவே, நான் அவரோடு சென்று சில செய்திகளை அவருக்குச் சொன்னால்தான் அவரால் களைப்பாற முடியும்! இல்லையென்றால் ஓய்வு கொள்ளவே அவரால் முடியாது!" என்றார் மந்திரநாயகம். இந்த வார்த்தைகளை மந்திரநாயகம் சொல்லுவார் என்று எதிர்பார்த்தே உதயசந்திரன் முதலில் அப்படிப் பேசினார்! எனவே முழுமனத்தோடு மந்திர நாயகத்தையும் பூபதியையும் ஓய்வுக் கூடத்துக்கு அனுப்பினார் உதயசந்திரன். அனுப்பிவிட்டு, முத்தரைய மன்னரையும் வல்லத்தரசரையும் உடன் அழைத்துக் கொண்டு தஞ்சை மாளிகையிலே இருந்த ஒரு பெரிய இரகசிய அறைக்குச் சென்றார் உதயசந்திரன்.

மந்திரநாயகத்தோடு மேல்மாடிக்குச் செல்லும்போதே பூபதிக்குக் கண் கலங்கியது. எத்தனையோ பல நாட்களாகத் தனது மனத்தின் அந்தரங்கத்திலே வைத்து வைத்துப் பொருமிக்கொண்டிருந்தஉணர்ச்சிகள் எல்லாம் பொங்கி யடித்துக் கொண்டு வந்தன. அவனையும் மீறி விம்மினான் பூபதி.



தோளோடு கைசேர்த்துச் சித்திராங்க பூபதியை அணைத்துக் கொண்டே மந்திரநாயகம் தஞ்சை அரண்மனையின் மேல் மாடிக்கு வந்தார்.

தஞ்சை அரண்மனையின் மேல்மாடி ஒரே அலங்கார மயமான சித்திர சாலையாக இருந்தது. அந்த அறையின் சுவர்களிலே சூரியனுடைய ஏழு வர்ணக் கதிர்களையும், வர்ணக் குழம்பாகப் பிசைந்து சித்திரங்களாக ஓட விட்டிருந்தார்கள், முத்தரைய மன்னர்கள்! சிவபெருமானுடைய திருவிளையாடல்களைச் சித்திரிக்கிற வர்ண ஓவியங்கள் அந்தச் சித்திரசாலையின் சுவர்களிலே நேத்திரானந்தமாகக் காட்சி தந்தன. நான்கு மூலைகளிலும் ஐம்பொன் உலோகத்திலேயே வார்த்து எடுத்த சிலைகள் அவற்றுக்கு என்று அமைக்கப்பட்ட பீடங்களிலே அலங்காரமாக நின்றன. தென்மேற்கு மூலையில் வலஞ்சுழி விநாயகரின் சிலை நின்றது. வடமேற்கு மூலையில் கஜலட்சுமியின் சிலை! வடகிழக்கில் பைரவர்! தென் கிழக்கு மூலையில் ஓராழித் தேரிலே பவனி வருகிற சூரியனுடைய சிலை நின்றது. முத்தரையர்களின் பரம்பரையிலே வழங்கி வருகிற ஒரு சட்டதிட்டமான கலைச் சம்பிரதாயம் இந்த அமைப்புகளில் எல்லாம் எழிலோடு துலங்கியது. இந்தக் கலைக் காட்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டே மந்திரநாயகம் பூபதியின் மனக் கலக்கத்தை மாற்ற முயன்றார்.



"பூபதி! இந்த முத்தரைய மன்னர்களின் கலையார்வத்தைப் பார்த்தாயா? உன்னுடைய முன்னோர்கள் நமது செந்தமிழ் நாட்டுப் பண்பாட்டிலே எத்தனை தூரம் ஊறி யிருந்தார்களோ, அதே அளவு நமது பண்டைப் பண்பாட்டிலே ஊறித் திளைத்தவர்கள் இந்த முத்தரைய மன்னர்கள்! போர் என்றால் அதை அறவே வெறுப்பவர்கள். அன்பு மார்க்கத்திலே உலகம் உய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அரசியலை நடத்துபவர்கள். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நமது தமிழர்களின் உயர்ந்த இலட்சியத்தைக் கடைப் பிடிப்பவர்கள். மனிதனை மிருக நிலையிலிருந்து உயர்த்தி, அவனுக்கு அமர நிலை அளிப்பது கலைதான் என்ற பெரும் நம்பிக்கை கொண்டவர்கள் முத்தரையர்கள்! ஆனால் அதற்காக மனிதன் வெறும் வளையற் பூச்சியாக வளைய வரவேண்டும் என்று அவர்கள் கருதவில்லை! வீறு கொண்ட தோளும், வீரம் நிரம்பிய உள்ளமும் கொண்டு மனிதன் விளங்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆற்றல் இல்லாதவன் அவசியத்தை உத்தேசித்து அன்பு மார்க்கத்தைப் பேசுவது சாமானியம்! அதில் முத்தரையர்களுக்கு நம்பிக்கை கிடையாது! படை பலமும், வீரம் நிரம்பிய சேனையும் விசால வியூகங்களாக அமைந்திருந்துங்கூட, அவர்கள் அன்பு மார்க்கத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள்! அதனால்தான் அவர்களுடைய பண்பு எனக்கு இத்தனை தூரம் மன மகிழ்ச்சி தருகிறது. தமிழ் நாட்டில் இன்று போர் ஏற்பாடுகள் இத்தனை தீவிரமாக நடந்து வரும்போதுங்கூட, முத்தரையர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமோ? நாமாக வலுச்சண்டைக்குப் போகக்கூடாது என்கிறார்கள். அத்தனை அமைதியான நோக்கோடு இருக்கிறார்கள். அப்படி யிருந்தும் சண்டை வந்து விட்டது என்றால், அதற்காகப் பின் வாங்கப் போவதும் இல்லை. வலம்புரித் தீவின் கலைச் செல்வங்களை யெல்லாம் பாழ்படுத்திவிட்ட பகைவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு எல்லையற்ற வேகம் இருக்கிறது! கலையில் அவர்களுக்குள்ள ஈடுபாடு அத்தனை மகத்தானது....!"

மந்திரநாயகம் பூபதியின் மனத் துயரை மாற்றுவதற்காக முத்தரையர்களின் பெருமைகளை இப்படியெல்லாம் வர்ணிக்க ஆரம்பித்தார். சித்திராங்க பூபதிக்கு ஏற்கனவே உதயசந்திரன் பேசிய பேச்சு மனத்தில் பசுமையாக இருந்தது. எனவே அவன் சுருக்கமாக ஒரு கேள்வி கேட்டான்:

"மந்திரநாயகம்! உங்களுடைய பேச்சையும் உதயசந்திரனுடைய பேச்சையும் நான் ஒப்புக் கொள்கிறேன். முத்தரையர்கள் தமிழ்ப் பண்பாடு நிரம்பிய அரச வம்சத்தினர் என்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை. ஆனால் அவர்களுடைய பெருமைக்கும் என்னுடைய இலட்சியங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?"


இவ்வாறு கேட்டான் பூபதி. மந்திரநாயகம் சொன்னார்:

"பூபதி! நீ கேட்டது சரியான கேள்வி முத்தரையர்களுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்று நீ சொல்வது

உண்மையான வார்த்தை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சம்பந்தம் இனிமேலும் ஏற்படாதா? ஏற்படக்கூடாதா?ஏற்பட வேண்டியது அவசியம் இல்லையா? என்பதைத்தான் நான் யோசிக்கிறேன். ஆனால் இந்த விஷயத்தை நானும் நீயும் யோசிப்பதில் அர்த்தம் இல்லை. இந்த முக்கியமான காரியத்தில் ஒரு முடிவு சொல்ல வேண்டியது நமது வலம்புரி மகாராணியார்தான்! அந்த முடிவை நிறைவேற்றுவதுதான் நம் இருவருடைய கடமையும்!''

மந்திரநாயகம் இந்த வார்த்தையைச் சொன்னதும் சித்திராங்க பூபதிக்குச் சீற்றம் உண்டாயிற்று.

''அப்படிச் சொல்லாதீர்கள்! எந்த முக்கிய விஷயத்திலும் முடிவு சொல்ல வேண்டியது மகாராணிதான் என்பதை நான் ஒப்புக்கொண்ட போதிலும் ஒரு சிறு உண்மையைவற்புறுத்திக் கூற விரும்புகிறேன். எந்த முக்கிய விஷயத்திலும் ஒரு முடிவு செய்வதற்கு முன்பு, மகாராணியார் அவசரப்படக் கூடாது. அந்தந்த விஷயங்களில் சம்பந்தப்பட்ட அத்தனைபேரையும் கூப்பிட்டு நன்றாக விஷயங்களை அறிந்து வைத்துக் கொண்டபிறகுதான் ஒருமுடிவு சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் மகாராணியே ஒரு முடிவுக்கு வந்து விட்டு அந்த முடிவை மற்றவர்களும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தவறான காரியம்!''



இப்படிச் சொல்லும்போது பூபதியின் கண்கள் சிவந்தன. மந்திரநாயகம் அந்த உணர்ச்சியின் ஆழத்தைப் புரிந்து கொண்டார். சொன்னார்:

''பூபதி ஏன் நாம் இருவரும் சுற்றி வளைத்துப் பேச வேண்டும்! அதற்கு அவசியமே இல்லை. விண்டு சொல்வதாக இருந்தால், இப்பொழுது நாம் முடிவு செய்ய வேண்டிய காரியம் உன்னுடைய திருமண விஷயம்! உன்னைக் கேளாமல் உனது அன்னை ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக நீ நினைத்துச் சீற்றம் கொள்ளுகிறாய். உன்னுடைய மன நிலையைப் பார்த்தால், உன்னிடம் இது விஷயமாக இனி நான் பேசுவதே தவறு என்று தோன்றுகிறது. உன்னுடைய சீற்றத்தில் நீ பெரிய விபரீதங்களை விளைத்து விடுவாய் என்று அஞ்சுகிறேன். இந்தத் தஞ்சை அரண்மனையிலே புயல் வீசும்படி செய்து விடாதே! ஒரு வா[க்]குறுதி வேண்டுமானால் நான் உனக்கு[த்] தருகிறேன். உன்னுடைய திரும[ண] விஷயமாக இங்கே யாரும் உன்னோ[டு] பேசாதபடி பார்த்துக் கொள்ளுகிறேன். நீ வலம்புரித் தீவுக்குப் போய்ச் சேர்ந்[த] பிறகு அங்கே உனது அன்னையோடு [நீ] கலந்து ஆலோசித்து ஒரு முடிவுக்கு வ[ரு]கிறவரை நாங்கள் யாரும் உன்னோ[டு] உனது திருமண உறவைக் குறித்து[ப்] பேச மாட்டோம்! சரிதானா?''

இப்படிச் சொன்னார் மந்திரநாயகம். அவருடைய குரலில் தீர்மானமும் தெள்[ளி]வும் இருந்தன. இதைக் கவனித்த பூபதிக்கு உள் மனத்திலே ஒரு திருப்தி உண்டாயிற்று.

''மந்திரநாயகம்! நான் உங்களிடம் பேசக் கருதிய விஷயம் வேறு. உண்மையில் உங்களைக் கண்டதும் என் இதயத்தில் எழுந்த உணர்ச்சிகள் வேறு. அவற்றைச் சொல்லவிடாமல் நீங்கள் பேச்சை மாற்றுகிறீர்கள். அதனால் தான் என்னையும் மீறி எனக்கு ஆத்திரம் உண்டாகிறது. மன்னிக்க வேண்டும்!''

''பூபதி! என்னைப் பார்த்ததும் உன்னுடைய உள்ளத்தில் வேதனையும் மகிழ்ச்சியும் கலந்து வரும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உன்னுடைய நன்மையை உத்தேசித்து நான் உனக்குக் கோபம் உண்டாகும்படி நடந்து கொண்டிருந்தால், வலம்புரி இளவரசன் என்ற முறையில் உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன், என்னை மன்னித்து விடு!''

மந்திரநாயகம் இப்படிச் சொன்னதும் பூபதிக்கு இதுவரை அடங்கியிருந்த துயரம் கட்டுமீறிப் பொங்கிக்கொண்டு வந்தது. விம்மிக்கொண்டே சொன்னான்:

''மந்திரநாயகம்! என்னுடைய தாய்நாட்டின் மீது ஆணை கூறிக் கேட்கிறேன். உண்மையைச் சொல்லுங்கள். வலம்புரித் தீவின் காவல் தெய்வத்தைப் பற்றியும் பேரியாழைப் பற்றியும் நீங்கள் என்னிடம் சொன்ன வரலாற்றில் எத்தனை தூரம் உண்மை இருந்தது? எத்தனை விஷயங்களை என்னிடம் மறைத்தீர்கள்?''

இப்படிக் கேட்டு விட்டு மந்திரநாயகத்தின் முகத்தையே பார்த்தான் பூபதி. தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டு மந்திரநாயகம் பேச ஆரம்பித்தார். (தொடரும்)

---

* இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இந்த வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிற[து]

கடல் கண்ட கனவு

பத்தொன்பதாம் அத்தியாயம்

மதுரைமா நகரில்

வீர விக்கிரமன் கொடும்பாளூரிலிருந்து புறப்பட்டு மதுரைமாநகரத்தை அடைந்த போது, பாண்டிய மன்னனின் அரண்மனையிலே ஒரு முக்கியமான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வீர விக்கிரமனுடைய வரவுக்காகச் சித்திரமாயன் மிக்க ஆவலோடு அங்கே காத்திருந்தான்.


வலம்புரித் தீவுக்குச் சென்ற தூதுவர்கள் மதுரைக்குத் திரும்பி யிருந்தார்கள். வீர விக்கிரமனுடைய யோசனைப்படி பாண்டியர்களின் பிரதிநிதியும் வேளிர்களின் தூதுவரும் வலம்புரித் தீவுக்குச் சென்று மகாராணியோடு பேசி விட்டுத் திரும்பி யிருந்தார்கள். வலம்புரி மகாராணியின் மறுமொழி என்ன என்பதைத் தெரிந்த வினாடியிலிருந்து, பாண்டியர்களுக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்பதாக மிகுந்த கவலை ஏற்பட்டிருந்தது. ஏனென்றால் பாண்டியர்கள் அனுப்பிய காவற்படை வலம்புரித் தீவைக் காவல் செய்து கொண்டிருந்த தல்லவா? பாண்டியர்கள் நினைத்தார்கள், அந்தக் காவற்படை உதயசந்திரனால் தாக்கப்படும் என்று! இந்த நிலைமையிலேதான் இப்பொழுது வீரவிக்கிரமன் மதுரைக்கு வந்திருக்கிறான்.



மதுரைக்கு வந்த வீரவிக்கிரமன் சும்மா வந்தானா? இல்லை! எல்லாருக்கும் பேரதிர்ச்சி தரக்கூடிய செய்திகளோடு வந்தான்! சித்திராங்க பூபதியும் யாழ் நங்கையும் பேரியாழோடு குங்கும மாளிகையிலிருந்து தப்பி ஓடி விட்டார்கள் என்ற செய்தியை எல்லையற்ற கவலையோடு மதுரைப் பாண்டிய மன்றத்தாரிடம் தெரிவித்தான் வீரவிக்கிரமன்.

ஆலோசனைக்காகக் கூடி யிருந்த அமைச்சர்களும் பிரதானிகளும் வெகுண்டார்கள். எதிர்பாராத இந்த விளைவு பாண்டியர்களுக்கு வியப்பைத் தரவில்லை. ஆவேசத்தையே மூட்டியது!

''வீர விக்கிரமரே! இப்பொழுது நம்முடைய தூதுவர்களோடு வலம்புரித் தீவிலிருந்து ஒரு பிரதானி வந்தார். குங்கும மாளிகையிலே சித்திராங்க பூபதியைச் சந்திப்பதாகச் சொல்லிப் போயிருக்கிறார். நீங்களோ என்றால், பூபதியும் யாழ் நங்கையும் தப்பி ஓடி விட்டதாகச் சொல்கிறீர்கள். இதையெல்லாம் பார்க்கும் போது வீண்



பேச்சுக்களிலும், உறவு ஒப்பந்தங்களிலும் பொழுதைக் கழிப்பது கேடான காரியம் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது. இனிமேல் ஒரு வினாடி தாமதிப்பதும் தவறாக முடியும். உதய சந்திரன் ஏதேதோ தந்திரமான வேலைகள் செய்து வருகிறார் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் துலங்குகிறது. நிச்சயம் வலம்புரித் தீவிலே நம்முடைய காவற் படைக்குப் பெரிய இடையூறு நேரப் போகிறது. ஆகையால் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அதை நீங்கள் ஒப்புக் கொண்டால் மேலே நடக்க வேண்டிய காரியங்களை உடனே நிறைவேற்ற ஆயத்தமாக இருக்கிறோம்!''

இவ்வாறு பேசினார் பாண்டியர்களின் தலைமை அமைச்சர். வீரவிக்கிரமனுக்கு விரிவான மறுமொழி ஏதும் சொல்ல முடியாதபடி மூளை குழம்பி யிருந்தது.

''பாண்டியப் பிரதானிகளே! என்னுடைய சித்தம் ஒரு நிலையில் இல்லை. அதிகமாக ஆலோசிப்பதற்கு எனக்கு மனம் சரியில்லை. நீங்கள் என்ன யோசித்திருக்கிறீர்களோ, அதுவே என்னுடைய கருத்தும் என்று எடுத்துக் கொண்டு உங்கள் முடிவுகளைத் தெரிவியுங்கள்!''

வீர விக்கிரமன் இப்படிச் சொன்னதும் பாண்டியர்களின் தளபதி கூறுவார்:

''வீர விக்கிரமரே! வலம்புரித் தீவைக் காவல் செய்யும் நமது படைகளுக்குத் துணையாக இப்பொழுது இன்னொரு பெரும் படையை அனுப்பத் தீர்மானித்து விட்டோம். அந்தப் படைக்குத் தலைமைப் பொறுப்பாக நானே செல்வதாக இந்த அரச மன்றம் முடிவு செய்திருக்கிறது. அந்த முடிவை நிறைவேற்றுகிற பணியிலே எனக்கு உங்களுடைய ஒத்துழைப்பு பூரணமாக வேண்டியிருக்கிறது. அதாவது, இப்பொழுது இங்கிருந்து வலம்புரித்தீவை நோக்கிப் புறப்படுகிற படையோடு என்னுடன் நீங்களும் வரவேண்டும். ஏனென்றால், வலம்புரித்தீவை நோக்கிச் சித்திராங்க பூபதியும் யாழ் நங்கையும் இரகசியமாகச் சென்றிருப்பதாக நீங்கள் சொல்வதால், அவர்களைக் கடலின் பரப்பிலேயே சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் நேர்ந்தாலும் நேரலாம். அந்த மாதிரிச் சமயங்களில் நீங்கள் இல்லாமல் தீராது. ஒருவேளை நம்மிடமிருந்து தப்பிக் கொண்டு அந்த இருவரும் தீவுக்கே போய்ச் சேர்ந்திருந்தாலும், நமது படை பலத்தோடு நாம் வலம்புரி அரண்மனைக்குச் செல்லும் போது மகாராணியை நீங்கள்தான் சந்திக்க வேண்டும். தண்டனை கொடுப்பதற்கு நானும் என்னோடு வரும் படைகளும் ஆயத்தமாக இருப்போம்! என்ன தண்டனை என்று முடிவு சொல்ல வேண்டியது நீங்கள்தான்!''

பாண்டியர்களின் தளபதி இப்படிப் பேசியதை அந்த ஆலோசனை மன்றத்திலே கூடி யிருந்த அத்தனை பிரதானிகளும் மனம் ஒப்பி ஆமோதித்தார்கள். வலம்புரித்தீவுக்குப் போர்ப் படைகள் மட்டும் போனால் போதாது. இத்தனை ஏற்பாடுகளுக்கும் அடிப்படையாக உள்ள வீர விக்கிரமனின் சமயோசித யோசனை இந்தப் படைகளுக்கு மிகவும் அவசியம் என்று ஆலோசனை மன்றத்திலுள்ள எல்லாருமே கருதினார்கள். அதன் பேரில் வீர விக்கிரமனும் இந்த யோசனையை ஒப்புக் கொண்டான்.

மதுரைமா நகரிலிருந்து வலம்புரித் தீவை நோக்கி ஒரு பெரும் படை புறப்

படுவதற்கான ஏற்பாடுகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றன. கொற்கைத் துறைமுகத்திலிருந்து பாண்டியர்களின் படை புறப்பட்டு நேரே வலம்புரித் தீவை நோக்கிச் செல்ல வேண்டும் என்றும், வீர விக்கிரமன் பாண்டியர் களின் தளபதியோடு செல்கிருர் என்றும் அறிவிக்கப்பட்டது. எந்தச் சித்திர மாயனுக்காக இத்தனை பெரிய சிக்கல்கள் ஏற்பட்டனவோ, அந்தச் சித்திரமாயன் தன்னுடைய தாய்வழி உறவினர்களான பாண்டியர்களின் அரண்மனையிலேயே இருக்க வேண்டும் என்று முடிவாயிற்று. மாலை நேரங்களில் தினமும் சித்திரமாய னுக்கு நல்ல படைக்கலப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று வீர விக்கிரமன் பாண்டியப் பிரதானிகளைக் கேட்டுக் கொண்டான்.

வீர விக்கிரமனும், பாண்டியர்களின் தளபதியும் மதுரையிலிருந்து புறப்பட்டார்கள். வலம்புரித் தீவைக் காவல் காத்துக் கொண்டிருக்கிற படைகளோடு சேர்ந்து கடலின் நீலப் பரப்பிலே வெற்றிக்கொடி நாட்டி விடுவது என்ற திடமான முடிவோடு அவர்கள் சென் ருர்கள். உதயசந்திரனுடைய தந் திரத்தை முன்னதாகவே எதிர்பார்த்து இப்படி ஒரு சாமர்த்தியமான ஏற்பாட் டைச் செய்வதாகக் கருதினர்கள் அவர்கள்! ஆனல் இதற்குள் உதய சந்திரன் என்ன செய்தார் என்பது அவர்களுக்குத் தெரியுமா! எந்தச் சித்திராங்க பூபதியும் எந்த யாழ் நங்கை யும் வலம்புரித் தீவுக்கு ஓடிப் போய் விட்டதாக வீர விக்கிரமன் நினைத் தானே, அதே சித்திராங்க பூபதியும்



அதே யாழ் நங்கையும் அதே செந்தமிழ் நாட்டிலேதான் இருந்தார்கள்! ஆனால் இருவரும் ஒரே இடத்தில் இருந்தார்களா? அதுவும் இல்லை! சித்திராங்க பூபதி தஞ்சைமா நகரின் அரண்மனையிலே மந்திரநாயகத்தோடு இருந்தான். யாழ் நங்கை எங்கிருக்கிறாள் என்றே அவனுக்குத் தெரியாது! குங்கும மாளிகையிலிருந்து அவள் தப்பி ஓடி விட்டாள் என்ற செய்தியே தெரியாத நிலையில், பூபதி யாழ் நங்கையைப் பற்றிய சிந்தனைகளிலே மனத்தை ஓட விட்டுத் தனது குழப்பங்களையெல்லா தெளிவாக்கும்படி மந்திரநாயகத்தை கேட்டுக் கொண்டிருந்தான்! மந்தி நாயகம் என்ன மன நிலையில் இருந்தார் பூபதிக்குப் பேரியாழின் கதை முழுது நன்றாகத் தெரிந்து போய் விட்ட என்பதை உணர்ந்து கொண்டு, இ அவனுடைய மனத்தை எப்படித் திட படுத்துவது என்ற யோசனையில் பே முனைந்தார். அந்தப் பேச்சுத்தா தஞ்சை அரண்மனையின் சித்திரகூட திலே நடந்து கொண்டிருந்தது.

இருபதாம் அத்தியாயம்

போர்ப் படைகள்

தஞ்சை அரண்மனையில் உதயசந்திரனும் வல்லத்தரசரும் முத்தரைய மன்னரும், மூவருமாகச் சேர்ந்து ஒரு நாழிகை நேரம் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இரகசியமான ஆலோசனையின் பயனாக முத்தரைய மன்னர் அரண்மனை ஆசார மன்றத்தில் அங்குமிங்கும் நடந்து கொண்டே பலத்த சிந்தனையில் ஆழ்ந்தார். வல்லத்தரசரோ முக்கியமான சில பிரதானிகளை அழைத்துக் கொண்டு தஞ்சைமா நகரின் கடகத்துக்கு விரைந்தார்! கடகத்தில் வைக்கப்பட்டிருந்த முத்தரையர்களின் படைகளைப் பற்றித் தமிழ் நாடு முழுதும் நன்கு அறியுமாதலால், வல்லத்தரசர் கடகத்தை நோக்கிச் சென்றதும் தஞ்சை அரண்மனையிலே ஒரு பரபரப்பு உண்டாயிற்று.

வல்லத்தரசர் மிகவும் நேர்மையான மனிதர் என்று புகழ் பெற்றவர். வீரம் நிரம்பியஇதயத்திலே, சத்தியஉணர்ச்சி அந்த வீரத்துக்கு அரண் கட்டிப் பாதுகாவல் செய்து வந்தது. தந்திரமும், யுத்த முறைகளும் அவருக்குச் சர்வ சாதாரணம்! எந்த நேரத்திலும் எத்தனை பெரிய யுத்தத்துக்கும் அணிவகுத்து நிற்கக் கூடிய ஆற்றல் அவரிடம் உண்டு. ஆனால் அத்தனைக்கும் மேலாக நியாய உணர்ச்சி ஒன்று மேலெழுந்து நின்று, அவரை இயக்கி வந்தது! எனவே, அவர் அத்தனை ஆத்திரத்தோடு கடகம் என்ற போர்ப் படை வட்டாரத்துக்குச் செல்ல வேண்டும் என்றால், ஏதோ ஒரு தர்ம நியாயமான யுத்தம் நடக்கப் போகிறது என்பதை எல்லா ரும் யூகித்து விட்டார்கள். அதிலும் உதய சந்திரனும் முத்தரைய மன்ன ரும் இவருமாக நீண்ட நேர ஆலோசனை செய்து விட்டு அதன் விளை வாக அத்தனை ஆத்திரத்தோடு வல்லத் தரசர் கடகத்தை நோக்கிச் சென்றார் என்பதைப் பார்த்தபோது, தஞ்சை அரசப் பிரதானிகள் எல்லாம் அதன் விளைவு தமிழ் நாட்டின் அரசியலையே மாற்றிவிடக்கூடிய தன்மை வாய்ந்தது என்று கருதினார்கள். ஏற்கனவே வீர விக்கிரமன் காஞ்சிமா நகரத்தின் அரச பீடத்தை 'மாற்றுவதற்காகச் செய்து வருகிற சூழ்ச்சிகள் பலருக்கும் தெரியு மாதலால், தஞ்சைப் படைகள் வீரா வேசத்தோடு புறப்படப் போகின்றன என்று அனைவரும் ஒருமனதாக அபிப் பிராயப்பட்டார்கள்.. அதற்கு ஏற்றாற் போல் முத்தரைய மன்னரும் மிகுந்த சிந்தனையோடு அரண்மனையின் ஆசார மன்றத்திலே நடக்க ஆரம்பித்ததும் போரைப் பற்றிய எண்ணம் எல்லாருடைய இதயத்திலும் வலிமை அடைந் தது. வலம்புரித் தீவிலிருந்து மந்திரநாயகம் வந் திருப்பதையும், இப்பொழுது சித்தண்ண வாசல் மலையிலிருந்து பூபதியை இங்கே அழைத்து வந்திருப்பதையும்அறிந்திருந்த முக்கியமான சில பிரதானிகள், இனி நடக்கப் போகிற பெரும் போர் எத்தனை வன்மையாக இருக்கும் என்பதை ஒருவாறு மனக் கண்ணால் கண்டார்கள்.



அரண்மனையின் மேல் மாடியில் சித்திர சாலை

யிலோ என்றால், கீழே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைச் சற்றும் அறியாத முறையில் பூபதி மந்திரநாயகத்தோடு பேசிக் கொண்டிருந்தான். தன் தாய்நாடான வலம்புரித் தீவிலிருந்து புறப்பட்ட விநாடியிலிருந்து இதுவரை ஏதேதோ குழப்பங்களுக்கு உள்ளாகிவிட்ட பூபதி, இப்பொழுது மந்திரநாயகத்தைக் கண்டதும் மனம் விம்மிப் பேச ஆரம்பித்தான். அவனுடைய உள்ளத்தின் குழப்பங்களை உணர்ந்த மந்திரநாயகம் பூபதிக்கு எல்லா விஷயங்களையும் விரிவாகச் சொல்லலாம் என்று கருதிப் பேச ஆரம்பித்தார்.



பூபதி கேட்டானல்லவா, தன்னிடம் மந்திரநாயகம் எல்லாச் செய்திகளையும் ஆரம்பத்திலேயே ஏன் சொல்லவில்லை என்று? அந்தக் கேள்விக்கு விடை சொன்னார் மந்திரநாயகம். வலம்புரித் தீவின் காவல் தெய்வத்தைப் பற்றியும், பேரியாழைப் பற்றியும் மந்திரநாயகம் சொன்ன செய்திகள் வேறாகவும் இசைத்துறவி சொன்ன செய்திகள் வேறாகவும் இருப்பது கண்டு பூபதி அதிசயப் பட்டான் அல்லவா, அந்தத் திகைப்பை முதலில் தெளிவித்துவிடவேண்டும் என்று கருதினார் மந்திரநாயகம்! பூபதியிடம் சில விஷயங்களைச் சொல்லாமல் மறைத்துப் பேசியதற்குக் காரணம் என்ன என்பதையும் வெளியிட்டுவிடவேண்டும் என்று நினைத்தார் அவர். இந்த நினைவோடு மந்திரநாயகம் பேச ஆரம்பித்தார்.

“பூபதி! ஓர் இரவுமுழுதும் நீ இசைத்துறவியோடு பேசிக் கொண்டிருந்தாய் என்ற செய்தி எனக்குத் தெரிந்ததிலிருந்து என் மன நிலையும் துயரத்திலேதான் நிற்கிறது. ஏனென்றால், வலம்புரித் தீவின் உண்மையான கதையை நீ இப்பொழுது தெரிந்து கொண்டு விட்டாய்! பேரியாழை நாடி நீ புறப்பட்டுவிடக் கூடாதே என்ற மெய்யான கவலையினால், நான் எந்த விஷயங்களை உன்னிடம் சொல்லாமல் மறைத்தேனோ, அந்த விஷயங்களையெல்லாம் நீ நன்றாக இப்பொழுது தெரிந்து கொண்டு விட்டாய்! அதனால் எனக்கு ஒரு பக்கம் துயரமும், ஒரு பக்கம் ஆறுதலும் ஏற்படுகின்றன. துயரம் எதற்காக என்றால், உன்னுடைய இளமையான இதயத்தில் பாரமான கவலைகள் எல்லாம் சார்ந்து விட்டனவே என்று! ஆறுதல் எதற்காக என்றால், எந்த மனிதரிடமிருந்து நீ அந்தச் செய்திகளையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டுமோ அந்த மனிதரிடமிருந்தே எல்லா வரலாற்றையும் தெரிந்து கொண்டு விட்டாய் என்பதினால்! இப்பொழுது சொல்கிறேன், நான் உன்னிடம் அந்த விருத்தாந்தங்களைச் சொல்லாததற்குக் காரணம், உன்னிடம் உனது அன்னைக்கு இருந்த அன்புதான்! உன்னைப் பிரிவது என்றால் அது உன் அன்னைக்கு எத்தனை பெரிய துயரம் என்பதை உணர்ந்துதான் நான் உன்னை ஏதேதோ சொல்லித் தடுக்கப் பார்த்தேன். நீயோ எத்தனை தடுத்தும் இந்தத் தமிழ் நாட்டுக்கு யாழைத் தேடி வந்து விட்டாய். எனவே இனி நான் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். பெரிய சிக்கலிலே அகப்பட்டுக் கொண்டு விட்ட உன்னை மீண்டும் வலம்புரித் தீவிலே கொண்டு சேர்க்க வேண்டும்! அதைச் செய்கிறவரையில் என் கடமை நிறைவேறியதாகாது!”

மந்திரநாயகம் சொன்ன இந்த வார்த்தைகளிலே எல்லை கடந்த அன்பு இழைந்தது. சித்திராங்கபூபதிக்கு அந்த அன்பான வார்த்தைகளைக் கேட்டு மனத்தில் ஒரு தெளிவு உண்டாயிற்று.



இந்திய விமானப் படையின் தலைவர் ஏர் மார்ஷல் எஸ். முக்கர்ஜி, சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். அவருக்கு அமெரிக்க இந்திய ஸ்தானிகர் திரு ஜி. எல். மேத்தா அளித்த வரவேற்பில் கலந்துகொண்டவர்களை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

''மந்திரநாயகம்! உங்கள் அன்பை நான் ஒருபோதும் சந்தேகித்ததில்லை. என்னிடம் நீங்கள் சில விஷயங்களை மறைத்தீர்களே என்பதற்காக உங்களைச் சந்தேகப்படவில்லை நான்! அன்பு காரணமாக என்னை ஒரு கோழையாக வளர்க்க நீங்களும் என் அன்னையோடு சேர்ந்து கொண்டீர்களே என்றுதான் வெகுண்டேன்! இனி அதைப் பற்றிப் பேசுவதில் பொருளில்லை. இப்பொழுதாவது என்னிடம் உண்மையை மறைக்காமல் பேசுங்கள்!'' என்றான் பூபதி.

''இனி மறைப்பதற்கு என்ன இருக்கிறது? பூரண சந்திரோதயம் ஆனதும் எப்படி இருள் நீங்கி விடுகிறதோ, அப்படி உதயசந்திரனுடைய வரவினால் துயரம் எல்லாம் நீங்கித் தெளிவு உதயமாகி விட்டது! அதில் என்ன சந்தேகம்?'' என்றார் மந்திரநாயகம்.

பூபதி கேட்டான்: ''மந்திரநாயகம்! இனியும் தெளிவாக வேண்டிய சில செய்திகள் உண்டு. அவற்றை வேறு யாரிடமும் கேட்க எனக்கு நம்பிக்கையில்லை. ஆகையினால் நீங்கள்தான் அந்த விஷயங்களையெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும். ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுவீர்களா?''

இவ்வாறு ஆவல் பொங்கியவனாகக் கேட்டான் பூபதி. உறுதியோடு மறுமொழி சொன்னார் மந்திரநாயகம்.

''சித்திராங்கா! நீ என்ன கேட்டாலும் மறைக்காமல் விடை சொல்லுகிறேன். தயங்காமல் கேள்!''

பூபதி அந்த அறையிலேயிருந்த சாளரங்களையெல்லாம் ஒரு தரம் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டான்:

''மந்திரநாயகம்! எனக்குத் தெரிய வேண்டிய செய்திகளை ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன். வரிசையாகச்சொல்லுகிறேன். பிறகு நீங்கள் விடை கூறுங்கள்.

''முதலாவது, சந்திரசூடன் பேரியாழோடு வலம்புரித்தீவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவன் இப்பொழுது எங்கே இருக்கிறார்? இரண்டாவது, ஓடத்திலே மிதந்த சாருகேசியின் பெண் குழந்தை இப்பொழுது எங்கே வளர்கிறாள்? மூன்றாவது, தரங்கவல்லியும் பாண்டிய குமாரனும் எங்கே இருக்கிறார்கள்? நான்காவது, சித்தண்ணவாசல் மலையிலே நான் சந்தித்த அந்த இரண்டு சமணத் துறவிகளும் யார்?''

நான்கு கேள்விகளையும் வரிசையாகக் கேட்டு விட்டு, ஐந்தாவது கேள்விக்கு வரும்போது பூபதியின் உடம்பு பதறியது. பதற்றத்தோடு பதற்றமாக அந்த ஐந்தாவது கேள்வியையும் கேட்டான் பூபதி. ''ஐந்தாவது, நான் தமிழ் நாட்டுக்கு வந்த பிறகு அடிக்கடி ஒரு சித்தர் என்னை வளைத்து வளைத்துப் பின்தொடர்கிறாரே, அவர் யார்?''

அவ்வளவுதான்! அந்த ஐந்தாவது கேள்வியைக் கேட்டு நிறுத்தினானோ இல்லையோ, 'டக் டக்' என்று தஞ்சை அரண்மனைப் படிகளிலே குமிழ்க் கட்டையின் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து, 'பளார் பளார்' என்று பிரம்பு ஒலி செய்தது.

''என்னப்பா ராஜகுமாரா!'' என்று பரிவோடு கூடிய அழைப்பு காற்றிலே மிதந்து வந்தது. சந்தேகம் என்ன? சித்தரே அச்சமயத்தில் அங்கே வந்து கொண்டிருந்தார்! (தொடரும்)

கடல் கண்ட கனவு

இருபத்தொன்றாம் அத்தியாயம்

பிரம்பு ஒலித்தது!

சித்தருடைய பிரம்பின் ஒலியும் தமிழ்க் கட்டையின் ஓசையும் பூபதியை எப்படித் தாக்கி விட்டன என்பதைப் பார்த்த மந்திரநாயகத்துக்கு எல்லையற்ற வியப்பு உண்டாயிற்று. இதற்கு முன்பு இம்மாதிரியான ஓசையைக் கேட்டறியாத வலம்புரித் தீவின் அமைச்சர், தமது இளவரசனுடைய பதற்றத்தின் காரணத்தை யூகிக்க முடியாமல் திணறிய போது, ''ராஜகுமாரா!'' என்று அழைத்துக் கொண்டே அந்தச் சித்திர சாலைக்குள்ளே சித்தர் வருவதைக் கண்டு, தம்மையும் மீறிய ஒரு கலவரத்தில் எழுந்து நின்றார். சித்திராங்க பூபதியோ இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு நின்றான்.

''என்னப்பா ராஜகுமாரா! மந்திர நாயகத்தோடு மந்திராலோசனை செய்து கொண்டிருக்கும்போது நான் குறுக்கே வந்து விட்டேனோ? என்ன அமைச்சர் அவர்களே! வலம்புரித்தீவின் மந்திர நாயகமே! பூஜை வேளையில் பூதம் புகுந்து விட்டதோ! இப்படித் திகைத்துப் போய் நிற்கிறீர்களே! இது வெறும் மானிடக் கட்டைதான் சுவாமி! பேயோ, பிசாசோ இல்லை!''

மந்திரநாயகத்துக்குச் சித்தரின் இந்த வார்த்தைகள் பதற்றத்தை அதிகப் படுத்தினவே தவிர, குறைக்கவில்லை! என்றாலும் தம்மைத்தாமே சமாளித்துக் கொள்ள முயற்சி செய்தார். சொன்னார்:

''சுவாமி! தங்களைப் போன்ற மகான்களின் ஆசீர்வாதம் கிடைக்கக் கூடிய புண்ணியம் எங்கள் இருவருக்கும் இருக்கிறதா என்று நினைத்துத் திகைத்தேன்! மற்றப்படி தங்களுடைய வரவு பற்றி வேறு எவ்வித விபரீத எண்ணமும் கிடையாது!''

இந்த வார்த்தைகளை மந்திரநாயகம் சொல்லி நிறுத்தியதும், 'பளீர்' என்று மறுமொழி வந்தது, சித்தரிடமிருந்து!

''ஐயா! அமைச்சரே! உமக்குப் பேசச் சொல்லித்தர வேண்டுமா என்ன? மந்திரிமார்களோடு இந்தக் கட்டையினால் பேசி ஜயிக்க முடியுமா! இன்னும் கொஞ்ச நேரம் போனால் 'தேவரீருடைய திருப்பாதங்கள் இந்தக் குடிசையிலே படும்படியான பாக்கியம் இந்த ஜன்மத்தின் புண்ணியமா அல்லது முன் ஜன்மத்தின் புண்ணியமா?' என்று சொல்வீர்கள். அதோடு நிறுத்துவீர்களா! நாங்கள் செய்த தவப்பயனா, இல்லை முன்னோர்கள் செய்த தவப்



பயனு என்று திகைக்கிறேம் என்றெல்லாம் ஆரம்பித்து விடுவீர்கள். எத்தனே பேரோடு பேசிப் பழகியவர்கள் நீங்கள்! மந்திரிமார்கள் அல்லவா!''

இவ்வாறு ஒரு போடு போட்டுக் கொண்டே சித்திராங்கனேப் பார்த்தார் சித்தர்! அவனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லே. மந்திரநாயகம் இந்தச் சித்தரிடம் அகப்பட்டுக் கொண்டாரே என்ற பாவனேயில் பரிதாபமாகப் பார்த்தான்!

''என்ன பார்க்கிருய், ராஜகுமாரா! வலம்புரித்தீவின் அமைச்சர் பெருமானே நான் விழுங்கிவிட மாட்டேன்! பயப்படாதே! அப்படியெல்லாம் விழுங்கிவிட முடியாது அவரை! வீர விக்கிரமனுல் கூட அவரை விழுங்க முடியாது என்ருல் பார்த்துக் கொள்ளேன்! ஆனுல் இந்தச் செந்தமிழ் நாட்டில் இப்பொழுது என்ன நடக்கிறது என்று தெரியாது அவருக்கு! பாவம், இங்கே உன்னேடு நிம்மதியாக இருந்து பேசிக் கொண்டிருக்கிருர். கடலின் பரப்பிலே சேனேகள் வியூகம் வகுத்து நிற்பது அவருக்குத் தெரியுமா! தெரியாது! அவரிடம் போய் நீ ஏதேதோ கேள்விகள் போடுகிருயே; இதைப் பார்க்கும் போது உன்னிடம் அநுதாபப்படுவதா அல்லது உன்னுடைய மந்திர நாயகத்திடம் அநுதாபப் படுவதா என்று இந்தக் கட்டைக்குத் தெரியவில்லே! என்ன அமைச்சர் அவர்களே! நீங்களே சொல்லுங்கள்!''

இப்படிக் கூறி விட்டுப் பூபதியைப் பார்த்துச் சித்தர் சொன்னுர்.

''ராஜகுமாரா! மாமல்லபுரத்து விடுதியிலே தங்கியிருந்த போதும், பிறகு நீ மாமல்லபுரம் கடற்கரையிலே சிற்பங்களேப் பார்த்துக் கொண்டிருந்த போதும் யாழ் என்பதாக ஒரு பொருளேப் பற்றிக் கவலேப்பட்டாயே! ஞாபகம் இருக்கிறதா? அந்த யாழ் இப்போது எங்கிருக்கிறது என்று உனக்கு ஒரு ஆரூடம் சொல்லட்டுமா?''

சித்திராங்க பூபதிக்குப் பொறுமை இல்லே. ஆத்திரம் ஏற்பட்டது. ஆனுலும் சித்தரிடம் ஆத்திரப்படுவதற்கு வேண்டிய மனத் துணிவு இல்லே. முகம் சிவந்தது. மந்திரநாயகம் இதைக் கவனித்தார். உடனே சித்தருடைய கேள்விக்குப் பூபதி விடை சொல்வதற்கு முன்பு மந்திரநாயகம் விரைந்தார்.

''சுவாமி! எங்கள் இளவரசர் அரண்மனேயின் நான்கு சுவர்களுக்குள்ளும் வளர்ந்த செல்லப் பிள்ளே. உலக அநுபவம் இல்லாதவர். அதனுல்..''

''அதனுல் உலக அநுபவம் நிரம்பிய நீங்கள் சொல்லப் போகிறீர்களோ! பேரியாழும் பேரியாழை வாசிக்கு[ம்] நங்கையும் கடலிலே மிதக்கிற செய்[தி] யாருக்குத் தெரியும்? வலம்புரித் தீ[வை] நோக்கி வீர விக்கிரமன் பெரிய ப[டை] யொன்றை அனுப்பி யிருக்கிற[து] சுவாமி! உங்கள் தீவு உண்மையிலே இப்பொழுது கடலில் மிதக்கிறது தெரியுமா? சும்மா இங்கே சாய்மான[த்]திலே இருந்து கொண்டு கதை பேசி[க்] கொண்டிருக்காதீர்கள்! புறப்படுங்கள் உங்கள் இளவரசைத் தீவிலே கொண்[டு] போய்ச் சேருங்கள்! பாவம்! அன்[னே] கொடுத்து அனுப்பிய தந்தப் பேட[க]த்தோடு இந்தப் பிள்ளே ஊர் போய்[ச்] சேரட்டும்! கேள்விகளும் விடைகளு[ம்] பிறகு பார்த்துக் கொள்ளலாம்!''

இப்படிச் சொல்லிவிட்டு மறுபடியு[ம்] பிரம்பு 'பளார்' 'பளார்' என்[று] ஓசை செய்யும் வண்ணம் அடித்து[க்] கொண்டே, 'டக்டக்' என்று நடந்தா[ர்] சித்தர் மிகவும் வேகமாக! அவர் மறை[ந்]ததும் பூபதியும் மந்திரநாயகமும் ஒ[ரு]வரை யொருவர் பார்த்துக் கொண்டே ஒன்றும் புரியாமல் நின்ருர்கள்.

''சித்திராங்கா!'' என்று மௌனத்[]தைக் கலேத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார் மந்திரநாயகம்.

''சித்திராங்கா! இதெல்லாம் என்ன அர்த்தம் என்றே ஒன்றும் புரியவில்லே! யார் இந்தச் சித்தர்? இவர் ஏன் இப்படிக் குடுகுடு என்று ஓடோடியும் வந்து தீக் கங்கைக் கொட்டி விட்டுப் போகிருர்?'' என்று கேட்டார்.



சித்திராங்க பூபதி பேச ஆரம்பித்தான்.

''யார் என்று தெரியவில்லை. இவர் யார் என்று தெரியாமல்தான் உங்களிடம் அந்த ஐந்தாவது கேள்வியைக் கேட்டேன். அடிக்கடி என்னைப் பின் தொடர்கிற இந்தச் சித்தர் யார் என்று உங்களிடம் கேட்க ஆரம்பித்த போதுதான் இவரும் இங்கே வந்து குதித்தார்! என்ன ஆச்சரியம் பாருங்கள்! ஒவ்வொரு முறையும் இவர் இப்படித்தான் வருகிறார்! ஆனால் ஒன்று! தீக் கங்கைக் கொட்டினார் என்று சொன்னீர்களே, அது தவறு. இவர் கொட்டியது தீக்கங்கு போலத் தோன்றும் முதலில்! ஆனால் பொறுத்திருந்து பார்த்தால் அவர் கொட்டிய ஒவ்வொரு வார்த்தையும், தீக் கங்கு இல்லை, ஆனால் தீப்போல் ஒளி வீசக்கூடிய ரத்தினக் கல் என்று பின்னால் தெரியவரும்! இதுதான் என்னுடைய அநுபவம்! ஆனாலும் அவர் சில சமயங்களில் நம்மை வளைத்து மடக்கும்போது ஆத்திரந்தான் வருகிறது!''

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த மாடியில் எங்கிருந்தோ ஒரு பாடும் குரல் கேட்டது. நீண்ட நாளைக்கு முன்பு பூபதி மாமல்லபுரம் விடுதியிலே மேல்மாடியில் படுத்திருந்தபோது, சித்தர் ஒரு பண் பாடினார் அல்லவா? அதே பண்தான் இப்பொழுதும் கேட்டது. நல்ல சூரியோதயத்தில் பாடுகிற உதயப் பண் அது! அதே சித்தர்தான் இப்பொழுதும் பாடினார். தொலைவில் அந்த மாடியில் எங்கோ ஒரு அறையிலிருந்து வந்தது அந்தப் பாடல்! திருமூலர் என்ற மகா ஞானி, யோகிகளுள் யோகி, சித்தருக்குள்ளே சித்தர்—அந்த தெய்வக் கவிஞருடைய திருமந்திரம் அது! அந்தப் பாடலின் வார்த்தைகளைக் கூர்ந்து கேட்டான் சித்திராங்கன் :—

தீயினும் வெய்யன்; புனலினும் தண்ணியன்;
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை;
சேயினும் நல்லன்; அணியன்; நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன்; நல் தாழ் சடை யோனே!



மந்திர நாயகம் திகைப்பு மேலிட்டவராகப் பார்த்தார். "தீயைக் காட்டிலும் வெப்பமானவன், தண்ணீரைக் காட்டிலும் குளிர்ந்தவன்" என்று அந்தப் பாடல் இறைவனுடைய தன்மையை எத்தனை அழகாக வர்ணிக்கிறது! அந்த இறைவனுடைய அடியார்களும் அப்படித்தான் இருப்பார்கள் போலும் என்று மந்திரநாயகத்தின் மனத்துக்குள்ளே ஒரு நினைவு நெளிந்தது. அந்த நினைவே பூபதியின் உள்ளத்திலும் உண்டாயிற்று. சொன்னான்:

"மந்திரநாயகம்! அந்தப் பாடலைக் கேட்டீர்களா! நம்முடைய எதிரே தோன்றிய இந்தத் தாழ்சடைச் சித்தரும், இப்படித்தான்! சில சமயங்களில் அவர் பேசுவது நெருப்பை விடச் சுடுகிறது. சில சமயங்களில் தண்ணீரை விடக் குளிராக இருக்கிறது! இந்த அதிசயத்தை நான் பல நாட்கள் எண்ணிப் பார்த்ததுண்டு! அதனால்தான் இந்தச் சித்தர் யார் என்று கேட்டேன்! ஆனால் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மற்ற நான்கு கேள்விகளுக்காவது நீங்கள் விடை சொல்லுவீர்களா என்றால் அதற்கும் முடியாதபடி இப்போது சித்தர் ஒரு பெரும் போடு போட்டு விட்டுப் போயிருக்கிறாரே! கடலின் பரப்பிலே பெரிய போர் நடக்கிறதாமே! பேரியாழும் யாழ் நங்கையும் கடலிலே மிதக்கிறார்களாமே! நீங்களும் நானும் உடனே இங்கிருந்து புறப்பட வேண்டுமாமே!"

பூபதி ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கொண்டே குழம்பிவந்தான். அந்தத் தருணத்தில் தஞ்சை அரண்மனையைச் சுற்றி ஆரவாரம் எழுந்தது. குதிரைகள் 'பட பட' என்று ஓடி வந்தன. வில்லும், வேலும், ஈட்டியும், சூலமும் தாங்கிய வீரர்கள் அணி அணியாக வந்தார்கள். அந்த ஓசை அரண்மனையின் மேல் மாடியிலே வந்து எதிரொலித்தது! மந்திர நாயகமும் பூபதியும் முற்றத்துக்கு வந்து அந்தக் காட்சியைப் பார்க்கலாம் என்று முனைவத குள், 'விறு விறு' என்று மாடிச் நடந்து வந்தார் வல்லத்தரசர்.

"மந்திர நாயகம்! நாம் எதி பார்த்ததை விடச் சம்பவங்கள் மிக துரிதமாக நடக்க வேண்டிய அவசிய ஏற்பட்டு விட்டது. பேச்சை வளர்த்து தற்கு இடமில்லை. நீங்களும் உங்க இளவரசரும் இப்பொழுதே புறப்ப வேண்டும்! உங்கள் யாத்திரைச் வேண்டிய ஏற்பாடுகளை யெல்லா உதய சந்திரன் தீர்க்கமாகச் செய் முடித்து விட்டார்."

இவ்வாறு அறிவித்தார் வல்லத்தரச அவருடைய வார்த்தைகளில் அவசர தொனித்தது.

"சித்திராங்க பூபதி! உங்களுடை திருமணம் சம்பந்தமாக இந்தத் தஞ்ச அரண்மனையிலே சில முக்கிய வி யங்கள் பேசவேண்டும் என்று நாங்க நினைத்தோம். ஆனால் ஏதேதே நிகழ்ந்து விட்டது. செந்தமிழ் நா டில் போர்மேகம் மின்னலும் இடி மாகக் குமுறி எரிகிறது. நீங்களு மந்திர நாயகமும் இப்பொழுதே வல புரித் தீவுக்குப் புறப்பட்டு விடவே டும். உங்களோடு ஒரு பெரிய காவ படை வருகிறது. ஏற்கனவே ஒ பெரும் படையும் வலம்புரித் தீவுக்கு புறப்பட்டுச் சென்றிருக்கிறது! நீங்க உடனே புறப்பட வேண்டும்!"

பூபதியைப் பார்த்து இப்படிச் சொ னார் வல்லத்தரசர்.

எத்தனை திகைப்பு எப்படி உண்டா போதிலும், வல்லத்தரசருடைய பே சுக்கு மறுபேச்சு இல்லை. மந்திர நாய மும் பூபதியும் சித்திர சாலையிலிருந் முற்றத்துக்கு வந்தார்கள். வெளியே காவற்படை செய்த ஆரவாரம் இவர் ளுடைய அவசரத்தை இன்னும் அதி மாகத் துரிதப்படுத்தியது. அந்தத் து தத்தில் மந்திர நாயகமும் சித்திராங் பூபதியும் வலம்புரித் தீவை நோக்கி புறப்பட்டார்கள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

தோகை மயில்

பல்லவர்களுடைய ஆட்சி மகோன்னதமாக விளங்கிய காலத்தில், காஞ்சி மாநகரமே பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கியது. தொண்டை மண்டலத்தில் அக்காலத்தில் இருபத்து நான்கு கோட்டங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றுக்கு எயிற் கோட்டம் என்று பெயர். அந்த எயிற் கோட்டத்திலே தான் பல்லவர்களின் தலைநகரமாகி காஞ்சிமா நகரம் இருந்தது. எயி என்ற சொல்லுக்குக் கோட்டை என் பொருள். எயிற் கோட்டத்திலே விள கிய காஞ்சிமா நகரை எயிற்பதி என்றே பெரியார்கள் அழைத்துவந்தார்கள். அ படிப் புகழ் பெற்ற காஞ்சியின் அமைப் எழிலோடு கூடியதாக இருந்தது.

தொலைவிலிருந்து பார்ப்பவருக்குக் காஞ்சிமா நகரம் ஒரு தோகை மயிலைப் போலக் காட்சி தந்தது. காஞ்சியின் எயில் ஒரு அழகிய மயிலின் உடலைப் போல் நீண்டு வளைந்து நின்றது. அம்மயிலின் சிறகு போன்றிருந்தது காஞ்சியின் ஏரி. அந்த மயிலின் அடர்த்தியான தோகையைப் போல அடர்ந்த காடு காஞ்சிமா நகருக்கு அணி செய்து பரந்து விரிந்து விளங்கியது. இப்படிப்பட்ட அந்த மயில்போன்ற கோட்டையிலே பல்லவ பீடம் செங்கோல் செலுத்தியது. 'இஞ்சி' என்றும் 'ஆரை' என்றும் வழங்கிய மதிற்சுவரும், 'கிடங்கில்' என்று அழைக்கப்பட்ட அகழி சூழ்ந்த கோட்டையும், படைவீடு என்னும் சேனை தளங்களுமாகக் காஞ்சிமா நகரின் தோற்றமே வீரம் பொருந்திய செங்கோலுக்குக் கட்டியம் கூறியது!

போர்க்களத்திலே தீரச் செயல்கள் புரிந்து அவற்றிற்கு அறிகுறியாக ஏனாதி என்ற பட்டம் பெற்ற பல வீரர்கள் பல்லவர்களின் படை அதிபர்களாக இருந்ததால், நந்திவர்மனுடைய ஆட்சியில் எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் வெற்றிகரமாகச் சமாளித்துவிட முடியும் என்று உதயசந்திரன் தீர்மானமாக நம்பினார். தவிரவும் நந்திவர்மன் என்ற சிறுவனைக் காஞ்சிமா நகரத்துக்கு அழைத்து வந்து பட்டம் சூட்டிய வைபவத்தில் உதயசந்திரனுக்குப் பக்க பலமாக விளங்கிய முத்தரையர்களோ ஆற்றலிலும் செல்வாக்கிலும் நிகரற்ற சூரர்கள். எனவே வீர விக்கிரமனும் சித்திரமாயனும் எத்தனை தூரம் சூழ்ச்சிகள் செய்த போதிலும், அவற்றை வென்று விடலாம் என்று உதயசந்திரன் ஊக்கமாக இருந்தார். ஆனால் இப்பொழுது பாண்டியர்களும் கொடும்பாளூர் வேளிர்களும் சித்திரமாயனுக்குத் துணை செய்ய முன் வந்து விட்டார்கள் அல்லவா? என்றாலும், எப்படியும் இந்த எதிர்ப்புக்களை முறியடிப்பதற்கு வேண்டிய படை பலத்தைத் திரட்டி விட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று. இதற்குக் காரணம் வலம்புரித் தீவின் உறவிலே எதிரிகளும் கவனம் செலுத்தியதுதான்!

உதயசந்திரன் ராஜதந்திரத்தில் நன்றாகத் தேர்ந்த மேதை. அவர் நினைத்தார், பாண்டியர்களின் படையும், வேளிர்களின் படையும் வலம்புரித் தீவிலே கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டால் நல்லது என்று! கடலிலே எதிரிகளின் படையை முறியடிப்பதற்கு வேண்டிய சேனாபலமும் ஆற்றலும் முத்தரையர்களுக்கு இருந்தது. வலம்புரித் தீவுக்காக ஒரு பெரும் போர் நடத்தி அந்தப் போரிலே எதிரிகளை வீழ்த்தி விட்டால் அது ஒரு பெரும் சௌகரியமாக முடியும் என்று உதயசந்திரன் எதிர்பார்த்தார். கடற்போரிலே எதிரிகள் தோற்று விடுவார்கள் என்பது நிச்சயம். முத்தரையர்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என்பது உறுதி. அப்படி நேர்ந்துவிட்டால், அது பாண்டியர்களுக்கும் சித்திரமாயனுக்கும் ஒரு பெரிய படிப்பினையாக இருக்கும். தோல்வியிலிருந்து அவர்கள் எழுந்து வருவதற்கு முன்பு, வலம்புரித் தீவோடு உறவு செய்து கொண்டு எப்பொழுதும் பல்லவர்களுக்கு உதவி செய்யக் கூடிய விதத்தில் ஒரு பெரிய அணிவகுப்பை இரகசியமாக வலம்புரித் தீவிலே வைத்து விடலாம் என்று உதயசந்திரன் கருதினார். இந்தக் கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான், மற்றச் சம்பவங்களை யெல்லாம் சாமர்த்தியமாக இயக்கி வந்தார் அவர்! இந்த நிலையில் அவர்



காஞ்சிமா நகரத்தின் பாதுகாவலைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட வில்லை. அத்தனை பெரிய கோட்டையைப் பாண்டியர்களோ அல்லது சித்திரமாயனுக்காக வேளிர்களோ படையெடுத்து வந்து தாக்குவார்கள் என்று உதயசந்திரன் எதிர்பார்க்கவில்லை. அப்படி எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. இது காரணமாக அவர் கடற்போரிலேயே இப்பொழுது முழு கவனத்தையும் செலுத்த ஆரம்பித்தார்.

வலம்புரித் தீவுக்குச் சென்ற பாண்டியர்களின் தூதுப் படை அங்கேயே காவல் செய்து கொண்டிருந்ததல்லவா? முதலில் அதை முறியடிப்பதற்காக மாமல்லபுரத்திலிருந்து ஒரு பெரிய மரக்கலப் படை புறப்பட்டுச் சென்றது. இதைத் தொடர்ந்து தஞ்சைமா நகரத்து மூத்தரையர்களின் படையும் வல்லத்தரசரின் போர்வீரர்களும் வலம்புரித்தீவை நோக்கிப் புறப்பட்டார்கள். இரண்டாவதாகப் புறப்பட்ட தஞ்சைப்

படை வீரர்களோடுதான் பூபதியும் மந்திர நாயகமும் சென்றார்கள்!

அதே சமயம் பாண்டியர்களின் படையும் வீரவிக்கிரமனுடைய சகாயத்தோடு கோற்கையிலிருந்து வலம்புரித் தீவை நோக்கிச் சென்றது!




செந்தமிழ் நாட்டின் அரசப் படைகள் எல்லாம் ஏகோபித்துக் கடலிலே செல்லத் தலைப்பட்டதும் உதயசந்திரன் காஞ்சிமா நகரத்துக்கு வந்து மீண்டும் ஆலோசனை செய்தார். நந்திவர்மனுடைய தந்தையான இரணிய வர்மருடன் கலந்து யோசித்தார் உதயசந்திரன். இரணிய வர்மர் சொன்னார்:

"உதயசந்திரரே! இந்தக் காஞ்சிமா நகரமும் இதன் கோட்டையும் நமது முன்னோர்களின் தீர்க்க தரிசனமான யோசனையினால் நன்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை பெரிய நகரத்தின் மீது நம்முடைய எதிரிகளால் படையெடுத்து வந்து தாக்குவது என்பது முடியாத காரியம். இன்றுள்ள நிலையில் பாண்டியர்களிடமோ, வேளிர்களிடமோ அத்தனை பலம் இல்லை. இருக்கிற படைகளும் இப்பொழுது கடலை நோக்கிச் சென்றிருக்கின்றன. எனவே இப்பொழுது பல்லவ சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பணியில் அதிகமான படைகளுக்கு அவசியமில்லை. ஆனால் கடலை நோக்கிச் சென்றுள்ள படைகளைப் பார்த்தால், அந்தக் கடல் யுத்தம் மாபெரும் போராக மூளும் என்றே நினைக்கிறேன். வலம்புரித் தீவுக்காக நடைபெறும் இந்தப் போரின் வெற்றியைப் பொறுத்துத்தான் நம்முடைய எதிர்காலத் திட்டங்கள் எல்லாம் அமையவேண்டும். எனவே இப்பொழுது கடற் போரை மிகத் திறமையாக நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதை மெத்தனமாக விடுவதற்கு இல்லை. ஆகையால் தங்களுடைய கவனத்துக்கு ஒரு முக்கியமானயோசனையைத் தெரிவிக்கலாம் என்று என் மனத்தில் படுகிறது. உங்களுக்கு அதுசம்மதமாக இருக்குமானால் அந்த யோசனையைக் கூறுகிறேன். உங்களுக்குத் தோன்றாத யோசனையை நான் புதிதாகச் சொல்கிறேன் என்பதாக நான் எண்ணவில்லை! நீங்களும் அப்படி எண்ணிவிடக் கூடாது!"

இப்படி ஒரு பீடிகை போட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தார் இரணிய வர்மர். உதயசந்திரன் சொன்னார்:

"பெரியவரே! நம் இருவருடைய இலட்சியமும் ஒன்றுதான். தங்களுடைய புத்திரர் நந்திவர்மரை இந்தச் செந்தமிழ் நாடு முழுமைக்கும் சக்கரவர்த்தியாக்க வேண்டும். அந்தப் பல்லவ விஜயமே நம் இருவருடைய இலட்சியமும்! ஆகையால் சற்றும் தயக்கம் இல்லாமல் உங்களுடைய யோசனையைத் தாராளமாகச் சொல்லுங்கள்!" என்று கேட்டார் உதயசந்திரன்.

மாலை நேரம் கழிந்து சந்திரன் உதித்து வருகிற நேரம் அது. தோகை மயில் போன்று விளங்கிய காஞ்சிமா நகரத்தின் அரண்மனையிலே தேசங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இரண்டு அரசப் பிரமுகர்களும் ஆழ்ந்த யோசனையோடு பேச ஆரம்பித்தார்கள். (தொடரும்)



கடல் கண்ட கனவு

சோமு

இருபத்துமூன்றும் அத்தியாயம்

துறவியும் நங்கையும்

ஆனந்தமயமான நிலவும், தெளிந்த நீல வானமும், எல்லையற்ற பெருங்கடலும் கண்ணையும் மனத்தையும் கவரும் போது, மரக்கலத்திலே யாத்திரை செல்வது எத்தனை இன்பமான அநுபவம்! இதற்கு முன்பு இந்த அநுபவத்தைப் பற்றிப் பலவிதமாகக் கற்பனை செய்து பார்த்திருக்கிறாள் யாழ்நங்கை. இப்பொழுது அந்தக் கனவு நனவாகி விட்டது. ஆனால்?......

பூரண சந்திரனும் அவனுடைய அமுத முகத்தைத் தொட்டு விளையாடத் துடித்து எழும் நீல அலைகளும், பரிசுத்தமான தெளிந்த ஆகாயமும் இதற்கு முன்பு யாழ்நங்கையின் கற்பனையிலே தோன்றியதுண்டு. அலைகள் தவழும் கருங்கடலின் பரப்பிலே அன்னப் பறவை போன்று எழிலாக மிதக்கும் ஒரு மரக்கலத்திலே இன்பமான இதயமும் தானுமாகச் செல்வது போலவும், அந்த சாந்த மயமான வேளையின் மோகனத்தில் தனது இயத்தின் தந்திகளையே கொண்டு சுருதி சேர்த்து அந்தப் பேரானந்த லயத்திலே யாழை மீட்டி வானையும் கடலையும் இசைத் தந்திகளினால் அளந்து நிற்பது போலவும், அப்பொழுது தனது அருகிலே அந்த இசையின் நாதத்துக்கு மனித உருவம் கொடுப்பது போல் தன் இன்னுயிர்க் காதலன் வீற்றிருந்து மெய்யும் மனமும் ஒலி வண்ணத்திலே இணைவது போலவும் எல்லாம் கனவு கண்டிருக்கிறாள் யாழ் நங்கை! ஆனால் இன்று அவளுடைய அநுபவம் என்ன?

எந்தப் பேரியாழைக் கடலின் பரப்பிலே மீட்ட வேண்டும் என்று கனவு கண்டாளோ, அதே பேரியாழ் அவளுடன் இப்பொழுதும் இருக்கவே இருந்தது. ஆனால் உறைக்குள்ளே வைக்கப்பட்டு அந்த மரக்கலத்தின் அந்தரங்க அறையிலே மனிதர்களின் கண் பட்டு விடாதபடி மறைத்து வைக்கப்பட்டிருந்தது! யாழ் நங்கையின் அருகில் இருந்தது யார்? இசையும் காதலும் இணைந்து நிற்க வேண்டிய காதலன் இல்லை! இந்த அகில உலகத்தையும் துறந்து நின்ற ஒரு பெருந் துறவி இருந்தார். மாதர்களின் எழில் எல்லாம் ஒன்று கூடி எத்தனையோ பல ஆண்டுகளாகத் தவம் இருந்து அற்புதமான ஒரு பெண்ணரசியாக அவதரித்தது போல், அழகுத் திருமேனியோடு விளங்கிய ஒரு பெண்ணரசி அந்தத் துறவி! பெண்மையின் அழகையும் மீறித் தவத்தின் கனல் அந்த முகத்திலே தீப்போலக் காந்தி வீசிக் கொண்டிருந்தது. இளமையும், யாக்கையும், மனித வாழ்வும் நிலையற்றன என்ற பேருண்மையை நன்றாக உணர்ந்து நின்ற அந்தப் பெண் துறவியார், யாழ் நங்கையின் அருகிலே அமர்ந்து நிலாவையும் கடலையும் நோக்கியவாறு மோனமாக இருந்தார். கொந்தளிக்கிற கடலின் அலைகளுக்கு மத்தியில் அந்தத் துறவியின் உள்ளம் மட்டும் சலனமின்றி நிம்மதியாக மிதந்தது! யாழ் நங்கைக்கு இது மிகப் பெரும் வியப்பைத் தந்தது. கேட்டாள்:

"அம்மணி! உணர்ச்சிகளை வென்று நிற்கக் கூடிய பக்குவம் என்ன என்பது பற்றி இது வரை நான் கற்பனைகூடச் செய்ததில்லை. தங்களைப் பார்க்கப் பார்க்க அந்தப் பக்குவம் எனக்குப் பெரிய ஆச்சரியத்தைத் தருகிறது. இந்தக் கருநீலக் கடலிலே யாத்திரை செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அந்த ஆசை வேறு விதம்! எந்த நேரத்தில் நம்மையும் இந்தப் பேரியாழையும் அபகரித்துப் போகப் பகைவர்கள் வந்து பாய்வார்களோ, சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தங்களுடைய இதயத்தின் அந்த எல்லையற்ற நிம்மதி

எனக்குப் புரியவே யில்லை! இந்த மரக் கலத்தில் நாம் ஏறிக் கொண்ட கணத்திலிருந்து தாங்கள் என்னிடம் காட்டி வருகிற அன்பு இந்தக் கடலைப் போல அத்தனை பெரிதாக இருக்கிறது. ஆனால் அதே சமயம், அத்தனை அன்பான தங்களுடைய உள்ளத்தில், அத்தனை குளுமையான தங்கள் மெல்லிய இதயத்தில், சலனமோ, அச்சமோ இல்லாதபடி இத்தனை வைராக்கியமும் எப்படிக் குடி கொண்டிருக்கிறது என்பதை எண்ண எண்ண எனக்கு வியப்புத் தாங்க முடியவில்லை!''

இவ்வாறு கூறினாள் யாழ் நங்கை. இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்மணி, சமணத் துறவி, புன்முறுவல் செய்தார். பிறகு சொன்னார்:

'' அம்மா நங்கை! புத்த பெருமானைப் பற்றி நமது செந்தமிழ் நாட்டுக் கவிஞர் ஒருவர் ஓர் அற்புதமான பாடல் பாடியிருக்கிறார். அதன் கருத்தை உனக்குச் சொல்கிறேன், கேள்.''

இவ்வாறு கூறி விட்டு யாழ் நங்கையிடம் புத்த பெருமானைப் பற்றிப் பேச ஆரம்பித்தார் அந்தத் துறவியம்மையார்.

''நங்கை! புத்த பெருமானுடைய உள்ளம் ஒரு கருணைக் கடல். இந்த உலகத்தில் ஒரு சிறு உயிரும் கூட வேதனைப்படுவதைப் பார்த்து அவரால் அதைத் தாங்க முடியாது. அருள் என்ற தேன் கசிந்து சொட்டிக் கொண்டேயிருக்கக் கூடிய ஒரு மெல்லிய மலர் போன்றது புத்தருடைய இதயம்! மலரை விட மென்மையானது அந்த இதயம்! ஆனால் அப்படிப்பட்ட புத்த பெருமானுடைய மெல்லிய இதயத்தில் எழில் நிரம்பிய பெண்களின் பார்வையாகிய கூரிய வாள் இருக்கிறதே, அந்த வாள் ஊடுருவிச் செல்ல முடியாதபடி அத்தனை வன்மையும் இருந்தது! மலரை விட மெல்லிய இதயம் என்று சொல்லப்படுகிற அந்த இதயத்தை, மன்மதனுடைய புதல்விகள் தங்களுடைய பார்வையாகிய கூரிய வாட்களால் ஊடுருவ முயன்று பார்த்துத் தோல்வியே அடைந்தார்கள்! அப்படியானால் அந்த இதயத்தை மலரை விட மெல்லிய இதயம் என்று எப்படிச் சொல்ல முடியும்?''

இப்படிச் சொல்லி விட்டு அந்தத் துறவி யாழ் நங்கையின் திகைப்பைக் கவனித்துச் சொல்லுவார்:

'' நங்கை! அப்படிப்பட்ட குருதே னின் அடியார்களுக்கு அந்தப்பெருமா டைய இதயமே இலட்சியம்! என்னிட தில் நீ வியக்கக்கூடிய தன்மை ஏதாவ இருக்குமேயானால், அது புத்ததேவனி ஆசீர்வாத பலந்தான். மற்றப்ப நானும் பூர்வத்தில் உன்னைப் போ ஆசாபாசக் கடலிலே சிக்குண்டு தவித் ஒரு பெண்தான், அம்மா!'' என் கூறினார் அந்தத் துறவி.

'' அம்மா! என்ன சொல்கிறீர்க நீங்கள்? பூர்வத்தில் நீங்களும் ஆசை களிலே சிக்கியவர்தானா? அவற்றை யெல்லாம் கடந்துதானா நீங்களு சலனமற்ற பக்குவத்தை அடைந்தீர்கள் ஆச்சரியமாக இருக்கிறதே!'' என் கேட்டாள் யாழ் நங்கை.

துறவி சொன்னார்: '' நங்கையே ஆசையிலும் பாசத்திலும் சுழன்ற மட்டுமில்லை. என் வாழ்விலும் இந்தப் பேரியாழ் புகுந்து பெருத்த விபரீதங் களை விளைத்ததுண்டு. என் வாழ்விலு இந்தப் பேரியாழினால் எத்தனையோ பேர் மாண்டு மடிந்ததுண்டு, என் வாழ் விலும் இந்தப் பேரியர்ழினால் இரண்டு பெரும் நாடுகளுக்குள்ளே மிகப் பெரும் போர் நடந்ததுண்டு. இன்னும் சொல் லப் போனால் என்னுடைய வாழ்விலே நடந்த அந்த விபரீதங்கள்தான் உன்னை யும் சித்திராங்க பூபதியையும் பின் தொடருகின்றன!''

இப்படிச் சொல்லும்போது அந்த அம்மையார் வார்த்தைகளை ஒவ்வொன்றாக மெதுவாகப் பேசினார். பிறகு சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொல்லுவார்:

''நங்கை! உனக்கு உன்னுடைய பேரியாழின் வரலாற்றைப் பற்றி ஏதாவது தெரியுமா? இதற்கு முன்பு நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? உண்மையை என்னிடம் சொல்லு. ஏனென்றால் நீ கேட்கும் விதத்தைப் பார்த்தால் உனக்கு எந்த இரகசியமும் இதுவரை தெரியாமல்தான் இருக்கிறது என்றல்லவா தோன்றுகிறது!''

துறவி இப்படிச் சொன்னதும் யாழ் நங்கைக்குக் கண்கள் கலங்கின.

'' அம்மா! இதுவரை என் வாழ்வில் நான் பொய் பேசியதில்லை. அதிலும் உங்களைப் போன்ற ஒரு புனித ஆன்மாவின் முன்பு எதையும் ஒளித்துப் பேச யாராலும் முடியாது. இந்த நிலையில் என்னை நம்புங்கள். இதுவரை எந்த





வரலாறும் எனக்குத் தெரிய முடியாத முறையிலேதான் நான் வளர்க்கப்பட்டேன். சித்திராங்க பூபதி எங்களுடைய குங்கும மாளிகையிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற ஏற்பாட்டை வகுத்து, அதற்கான காரியங்களை யெல்லாம் தீர்க்கதரிசனத்தோடு என்னிடம் இரகசியமாகச் சொன்னவர் மதிப்புமிக்க அமைச்சர் திலகமாகிய உதயசந்திரர்தான். பூபதி எங்கள் மாளிகையிலேயிருந்து மறைந்த அதே இரவில் நானும் பேரியாழோடு அங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்று சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவரும் அவரேதான். குங்கும மாளிகையும் அங்கே என்னுடைய வாழ்வும் எனக்குப் பிடிக்காத விஷயங்கள். அவற்றிலிருந்து எனக்கு விடுதலை தருவதற்காகத் தோன்றிய மனித தெய்வம் என்றே நான் உதயசந்திரரைப் பாவித்து வணங்குகிறேன். என்னுடைய பிறப்பையும் எனது பூர்வ வரலாற்றையும் பற்றி ஏதோ இரகசியம் உண்டு என்பதை நான் அறிவேன். தருணம் வரும்போது அவற்றை யெல்லாம் தெரிந்து கொள்வேன் என்று மட்டும் உதயசந்திரர் என்னிடம் கூறினர். மற்றப்படி என்னைப் பற்றியோ அல்லது இந்தப் பேரியாழைப் பற்றியோ எனக்கு வேறு எந்தச் செய்தியும் தெரியாதம்மா!''

யாழ் நங்கை பேசிய இந்த வார்த்தைகளில் பரிசுத்தம் தொனித்தது. இதயம் திறந்து பேசுகிற பேச்சு என்பது துறவிக்கு நன்ருகத் தெரிந்தது.

உண்மை: யாழ் நங்கைக்கு அதற்கு மேல் ஒன்றும் தெரியாது. அன்றிரவு சித்திராங்க பூபதி குங்கும மாளிகையிலிருந்து தப்பிச் செல்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த உதயசந்திரன், யாழ் நங்கையும் பேரியாழும் குங்கும மாளிகையிலிருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகளையும் மிகவும் சாமர்த்தியமாகச் செய்து முடித்திருந்தார். சித்திராங்க பூபதி சிவிகையிலே ஏறிச் சித்தண்ண வாசல் மலைக்குச் சென்ருன். யாழ்நங்கையோ இன்னொரு சிவிகையிலே பேரியாழோடு மாமல்லபுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். மாமல்லபுரத்துக் கடற்கரையிலே, மலைகளும் குன்றுகளுமாக இருந்த சமணக் கோயில்களுக்கு மத்தியிலே நிம்மதியாக நின்ற மாபெரும் சமணப் பள்ளிகளுக்குள்ளே, சில பெண் துறவிகள் யாழ் நங்கையின் வரவுக்காகக் காத்திருந்தார்கள்!

சிவிகை வந்து சேர்ந்ததும் மேற்கொண்டு காரியங்கள் மிகவும் வேகமாக நடைபெற்றன. மாமல்லபுரம் துறைமுகத்தில் மரக்கலங்கள் ஆயத்தமாக நின்றன. படைக்கலங்கள் தாங்கிய போர் வீரர்கள் எந்த எதிர்ப்பையும் சமாளித்து விடக்கூடிய உறுதியோடு நின்ருர்கள். யாழ் நங்கையும் பேரியாழும் மரக்கலத்திலே வலம்புரித் தீவு நோக்கிப் புறப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் பேரில் சமணப் பள்ளியிலே இருந்த அம்மையார்களில் முதுமை நிரம்பியவரும், தவமும், அநுபவ அறிவும் நிறைந்தவருமாகிய பெரிய துறவி யாழ் நங்கையோடு புறப்பட முனைந்தார். அவரோடு துணை புரிவதற்கான சில துறவிகளும் புறப்பட்டார்கள்.



''உமக்கு ஞாபகமறதி அதிகமாய்ப் போன தினுல், இனி வேலைக்கு வர வேண்டாம்னு நேற்று சொல்லி அனுப்பினேனே. இன்றைக்கு மறுபடியும் ஏன் வந்து நிற்கிறீர்?''
''அடாடா! ஞாபகமறதியா வந்துட்டேன்!''

மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்ட துறவிகளின் மரக்கலத்துக்கு முன்னும் பின்னும் படைவீரர்களின் மரக்கலங்கள் சென்றன. யாழும் யாழ் நங்கையும் எவ்வித இடையூறும் இன்றி வலம்புரித் தீவை அடைய வேண்டும் என்பது அமைச்சரின் கட்டளை.

அப்படிப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த மரக்கலத்திலேதான் யாழ் நங்கையும், சமணத் துறவியும் பழைய வரலாறுகளைப் பேச ஆரம்பித்தார்கள். பகல் முழுதும் யாத்திரை செய்த களைப்பு நீங்குவதற்காக, நிலவிலே காற்று வாங்குவதற்காக, மரக்கலத்தின் மேல் தளத்துக்கு வந்த இருவரும் இப்பொழுது பேரியாழின் வரலாற்றிலே இறங்கினுர்கள். துறவி யம்மையார் சொன்னுர்:

''யாழோடு பழகித் தேர்ந்த பெண்ணே! நான் சொல்லப் போகும் கதைகளைக் கேட்டு விட்டு இந்த யாழிடம் உனக்கு அச்சம் ஏற்பட்டு விடக் கூடாது! எய்தவன் இருக்க அம்பைக் கோபிப்பதில் அர்த்தம் இல்லை என்று சொல்லுவார்கள். அதுபோல இந்தப் பேரியாழின் மூலமாக எத்தனையோ விபரீதங்கள் நேர்ந்து விட்டன என்பதற்காகப் பேரியாழிடம் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது! கல்லைக் கொண்டு மனிதனுடைய மண்டையைப் பிளக்கலாம். ஆனுல் அதே கல்லைக்கொண்டு அகிம்சா மூர்த்தியான புத்த பெருமானுடைய திருவுருவத்தையும் செதுக்கலாம். நல்லதோ கெட்டதோ அது கல்லில் இல்லை. மனிதனுடைய மனத்திலேதான் இருக்கிறது!''

இவ்வாறு ஆரம்பித்த துறவியம்மை யாழ் நங்கைக்குப் பேரியாழின் பூர்வ கதையைச் சொன்னுள். சித்தண்ண வாசல் மலையிலே அமர்ந்து சமணத் துறவி பூபதிக்கு எவ்வாறு பழைய வரலாறுகளை யெல்லாம் சொன்னுரோ, அவ்வாறே துறவி யம்மையாரும் யாழ் நங்கைக்குச் சந்திர சூடனுடைய கதையைக் கூறினுர்.

ராஜசிம்மனுடைய மந்திரி குமாரனை சந்திரசூடன் வலம்புரித் தீவுக்குச் சென்று நீலமேக யாழ்ப்பாணரிடம் சங்கீதம் கற்ற கதையைச் சொன்னுர். பிறகு சங்கீதம் கற்றுக் கொண்டிருந்த வாலிபன் காதலிலே சிக்கிய விநோதத்தை வர்ணித்தார். பின்னர் சாருகேசி என்ற பாணரின் குலக் கொடி சந்திரசூடன் என்ற கொழு கொம்பிலே சுற்றிய வரலாற்றையும் கூறினுர் அந்த அம்மையார். அப்படி அவர் அந்த வரலாற்றை விரிவாகச் சொல்லிக் கொண்டு வரும்போதெல்லாம் தரங்கவல்லியைப் பற்றியும் பாண்டிய குமாரனைப் பற்றியும் சொல்ல வேண்டிய இடங்களில் துறவி யம்மையார் அளவுக்கு மீறிய நிதானத்தையும் உறுதியையும் குரலிலே வரவழைத்துக் கொண்டு பேசினுர். இந்த நுட்பத்தை யாழ் நங்கையும் கவனித்தாள். கடைசியில் சாருகேசி தன்னுடைய தாய்நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்தாள் என்ற சம்பவத்தைச் சொல்லும்போது அந்தத் துறவி ஒரு துறவியாக இல்லை. ஒரு பெண்ணுக மாறி விட்டாள்! பாசங்களைக் கடந்து நின்ற எல்லையிலே கால் பாவாமல் இதயம் வழுக்கியது! உருகியது! விம்மல் கூட வந்தது! யாழ் நங்கை இதைக் கவனித்தாள். ஆனுல் இடைமறித்து எதுவும் கேட்கவில்லை. உண்மையில் யாழ் நங்கைக்குமே கண்கள் இரண்டும் உருகி ஓடின.

''பெண்ணே! சாருகேசி கடலிலே மிதக்கவிட்ட பெண் குழந்தையை நினைத்து நினைத்துத் தரங்கவல்லி இரவும் பகலும் கண்ணீர் விட்டாள். கடலிலே மிதந்த அந்தக் குழந்தையை, கருங் கடலிலே தவழ்ந்த அந்தச் சாருகேசியின் அழகுக் கனவை நினைத்து நினைத்துத் தரங்கவல்லியின் இதயக் கடல் எப்படி யெல்லாம் குமுறிற்று, தெரியுமா? எந்தப் பேரியாழுக்காக இத்தனை விபரீதம் நேர்ந்ததோ, அந்தப் பேரியாழ் சந்திரசூடனேடு செந்தமிழ் நாட்டிலே சேர்ந்து விட்டது! எந்த வீராங்கனை அந்தத் தீவின் வாழ்வுக்காகத் தனது வாழ்வை மாய்த்துக் கொண்டாளோ, அவளுடைய குழந்தையும் அதே கருநீலக் கடலிலே மிதந்து விட்டது! இதற்குப் பிறகு தரங்கவல்லிக்கு அந்தத் தீவிலே எப்படி இருப்புக் கொள்ளும்? நீதான் சொல்லேன்!''

என்று கேட்டார் துறவி. யாழ் நங்கை அப்படியே உடம்பெல்லாம் சோகத்தில் மூடப்பட்டுப் பதுமையாக இருந்தாள். வார்த்தை வரவில்லை அவளுக்கு.

"அப்படிப்பட்ட தரங்கவல்லிக்கு இப்பொழுது உள்ளம் எப்படியிருக்கும்! எந்தப் பேரியாழுக்காக அவள் வலம்புரித் தீவை மறந்து செந்தமிழ் நாட்டுக்கு வந்தாளோ, அந்தப் பேரியாழ் இப்பொழுது வலம்புரித் தீவுக்குச் செல்கிறது என்றால் அவள் உள்ளத்தில் எத்தனை நிம்மதி இருக்கும்!"

இப்படிச் சொல்லும்போது துறவியின் முகம் பூரண சந்திரனைப் போல் நன்றாகப் பிரகாசித்தது. இதுவரை அந்த முகத்தை மறைத்துக் கொண்டிருந்த துன்ப மேகங்கள் இப்பொழுது விலகிவிட்டன. இதைக் கண்டதும் நிலவிலே மலர்கிற அல்லி மலரைப் போல, யாழ் நங்கையின் முகமும் மலர்ச்சி அடைந்தது. பேச ஆரம்பித்தாள்:

"அம்மணி! இந்த மரக்கலத்தின் இரகசிய அறையிலே பிறருடைய பார்வை விழுந்து விடாதபடி உறையிலே மூடி வைக்கப் பட்டுள்ள அந்தப் பேரியாழுக்குள்ளே இத்தனை சோகம் பொதிந்து கிடக்கிறதா? நினைக்கவே உடம்பு சிலிர்க்கிறதே!" என்றாள் நங்கை.

"பார்த்தாயா! அதனால்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன், எய்தவன் இருக்க அம்பை நோகாதே என்று!"

"அப்படியானால் எய்தவன் இப்பொழுது இருக்கிற இடம் எது என்று தெரியுமா, அம்மா? சந்திரசூடன் இப்பொழுது இருக்குமிடம் மட்டும் உதய சந்திரருக்குத் தெரியுமானால், அப்படியே அவர்..." — நங்கை இப்படிச் சொல்ல ஆரம்பிக்கும் போதே அந்த வார்த்தைகளை இடைமறித்தார் துறவி.

"அப்படியெல்லாம் சொல்லாதே! உண்மையில் இந்த விபரீத விளைவுகளுக்காக நம் எல்லாரையும் விட அதிகமாகத் துக்கப்படுகிற மனிதர் ஒருவர் உண்டு என்றால் அவர் சந்திரசூடன்தான். தம்முடைய பாபங்களுக்கு அவர் செய்த பிராயச்சித்தந்தான் இன்று நாம் மீண்டும் வலம்புரித் தீவுக்குச் செல்லும்படி துணை செய்தது!"

துறவி இப்படிச் சொன்னதும் யாழ் நங்கை திகைப்போடு கேட்டாள்:

"அம்மணி! அப்படிப்பட்ட சந்திரசூடர் இப்பொழுது எங்கே இருக்கிறார்? தரங்கவல்லியும் பாண்டிய குமாரனும் என்ன ஆனார்கள்?"


யாழ் நங்கையின் கேள்விகளில் தொனித்த ஆவலை நன்றாகப் புரிந்து கொண்ட துறவி விடை சொல்வதற்கு



அறிவிப்பாளர் :— இதுவரை நடைபெற்ற கிராமத்தார் நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் ....

முன்பு செந்தமிழ் நாட்டின் திசை நோக்கிக் கரங்கூப்பினார். பிறகு சொன்னார்:

"நங்கையே! பேரியாழோடு தமிழ் நாட்டுக்குத் திரும்பிய சந்திரசூடனுக்கு ராஜசிம்ம மகாராஜனின் மரணம் பெரிய அதிர்ச்சியைத் தந்தது. தமிழ் நாட்டில் அப்பொழுதிருந்த போர்க் குழப்பங்களில் பேரியாழைப் பற்றிய நாட்டம் யாருக்கும் இல்லை. தான் செய்துவிட்ட பாபத்தின் வியாபகத்தை உணர ஆரம்பித்த சந்திரசூடன், சாருகேசியை நினைத்து உள்ளம் துடித்தார். பரம்பரை பரம்பரையாக யாழ் வாசிப்பிலே கைதேர்ந்து விளங்கிய கொடும்பாளூர்த் தேவ மாதர்களிடம் பேரியாழைச் சேர்ப்பித்து விட்டுச் சாருகேசியின் குழந்தையைத் தேடி அலைய ஆரம்பித்தார். மதுரைப் பாண்டியர்கள் மூலம் சந்திரசூடருக்கு எல்லாச் செய்திகளும் தெரிய வந்தன! இதன் விளைவாக இந்தக் கருநீலக் கடலிலே மரக்கலமும் தானுமாகத் திசைகள் எல்லாம் சுற்றித் தேடிச் சாருகேசி மிதக்க விட்ட குழந்தையைக் கண்டு பிடித்தார் சந்திரசூடன். அது ஒரு பெரிய கதை! அதே சமயம் வலம்புரித் தீவிலோ என்றால், தரங்கவல்லியும் பாண்டிய குமாரனும் பேரியாழையும் சந்திரசூடனையும் நாடி உள்ளம் துடித்துக் கடைசியில் தமிழ் நாட்டுக்கே வந்து சேர்ந்தார்கள்! அந்தச் சோகம் எல்லாம் இப்பொழுது எதற்கு? பேரியாழும் நீயும் வலம்புரித் தீவுக்குப் போய்ச் சேருகிறீர்கள் என்று



ஜாம்ஷெட்பூர் டாடா கம்பெனியைச் சேர்ந்த திரு நடராஜனுக்கும் மத்திய அரசாங்கம் நிதி இலாகாவைச் சேர்ந்தவரும், டில்லி தமிழ்ச் சங்க நிர்வாகியுமான சீனிவாச அய்யர் குமாரி திருமதி லக்ஷ்மிக்கும் சமீபத்தில் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

ஆனந்தப்பட வேண்டிய இந்தத் தருணத்தில் நாம் இருவரும் ஏன் இப்படித் துன்ப நினைவுகளிலே சுழல வேண்டும்?'' என்று கேட்டார் துறவி. பிறகு யாழ் நங்கையின் முகத்திலே துடித்த கவலையின் குறிகளைக் கவனித்து விட்டு மேற்கொண்டு சொல்லுவார் :

''பெண்ணே! கவலைப்படாதே. சந்திரசூடனும் பாண்டியகுமாரனும் சமண சங்கத்திலே சேர்ந்து சித்தண்ண வாசலிலே வாழ முனைந்தார்கள். தமிழ் நாட்டின் அரசியலிலே ஏற்பட்டு வந்த மாறுதலைக் கவனமாகப் பார்த்துக் கொண்டே உரிய தருணத்துக்காகச் சித்தண்ண வாசலிலே காத்து நின்றார்கள். என்றைக்கு உதயசந்திரன் என்ற மகா ஞானி அரசியல் அரங்கிலே தோன்றிப் பல்லவ அமைச்சராக நின்று சம்பவங்களை இயக்க ஆரம்பித்தாரோ அன்றைக்கே வலம்புரித் தீவுக்கு வாழ்வு வந்தது என்று கருதினார்கள். இன்று அதன் பயனாகத்தான் நீயும் நானும் பேரியாழோடு வலம்புரித் தீவுக்குச் செல்கிறோம்'' என்று முடித்தார் துறவி.

நங்கை கேட்டாள்: ''சித்தண்ண வாசலிலே இருக்கும் துறவிகளின் எதிர்கால ஆலோசனை என்ன என்று நான் அறிந்து கொள்ளலாமா?''

''நங்கையே! சித்தண்ண வாசலிலேயிருக்கும் இசைத் துறவியும், பெரிய துறவியும் இப்பொழுது அவர்களோடு சேர்ந்துள்ள சித்திராங்க பூபதியும்—மூவரும்-வெகு விரைவில் வலம்புரித் தீவுக்கு வந்து சேர்வார்கள். உன்னுடைய சந்தேகம் தீர்ந்ததா?''

நங்கையின் முகத்தில் பூபதி என்ற சொல் வந்ததும் நிம்மதி உண்டாயிற்று என்பதைத் துறவி கவனித்தார்.

''அம்மணி! நீங்கள் சொன்ன செய்திகள் எனக்கு எத்தனையோ நிம்மதி தருகின்றன. ஆனால் ஒன்று மட்டும் நீங்கள் சொல்லவில்லையே. பாண்டிய குமாரனோடு தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த தரங்கவல்லிக்கு என்ன மாறுதல் எப்பொழுது நேர்ந்தது?''

''தரங்கவல்லிக்கு மாமல்லபுரம் சமணப் பள்ளியிலே சரீரம் இருந்த போதிலும், அவளுடைய ஆன்மா பேரியாழிலேதான் சுற்றி வந்து கொண்டிருந்தது. என்றைக்கு அவள் குங்கும மாளிகையைப் பற்றியும் உன்னைப் பற்றியும் அறிந்துகொண்டாளோ, அன்றைக்குத்தான் வலம்புரித்தீவின் எதிர்காலத்திலே அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. நாளாக நாளாக அந்த நம்பிக்கை வளர்ந்தது. உதயசந்திரனுடைய அற்புதமான சேவையினால் இப்பொழுதுதான் அந்த நம்பிக்கை நிம்மதியாக உருவாகிற்று. அதனால்தான் சொன்னேன், இந்தக் கொந்தளிக்கிற கடலுக்கு மத்தியிலே தரங்கவல்லியின் உள்ளம் மட்டும் சலனமின்றி நிம்மதியாக இருக்கிறது என்று! என்னைப் பற்றியே நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன் என்று எண்ணாதே! நீயும் பேரியாழும்தான் என்னுடைய இதயத்தின் நிம்மதிக்குக் காரணம்!''

இப்படிச் சொல்லியவண்ணம் தளத்திலிருந்து எழுந்து தனது இரண்டு கைகளாலும் யாழ் நங்கையைப் பேரன்போடு அணைத்துக் கொண்டார் தரங்கவல்லியான துறவியம்மையார்.

யாழ் நங்கையின் உள்ளத்தில் உணர்ச்சிகள் அலைகளாகப் பொங்கின. ஆசாபாசங்களைத் துறந்து நிற்கும் ஒரு துறவியின் உள்ளத்திலே பரிசுத்தமான பேரன்பு எப்படி ஏற்படுகிறது, அந்தப் பேரன்பு எப்படி அரவணைக்கிறது என்பதை மெய்யோடு மெய்யாக உணர்ந்து கொண்ட யாழ் நங்கை ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

நிலவின் பூரண ஒளியில் மரக்கலம் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. துறவியும் யாழ் நங்கையும் அன்பின் ஒருமைப்பாட்டிலே இதயம் கரைந்து நின்ற அந்த வேளையில், அவர்களுடைய மரக்கலத்துக்குப் பின்னால் காவலாக வந்து கொண்டிருந்த படை வீரர்களின் மரக்கல அணியிலிருந்து திடீரென்று சங்கொலி கேட்டது. அதைத் தொடர்ந்தாற்போல் படைக்கலக் கொம்புகள் ஒலித்தன!

(தொடரும்)

கடல் கண்ட கனவு

இருபத்து நான்காம் அத்தியாயம்

கடலிலே நெருப்பு

கடலின் பரப்பிலே மிதந்த மரக் கலத்திலிருந்து கொண்டு, சமணத் துறவியம்மையார் மிகவும் உணர்ச்சி மேலிட்டவராக யாழ் நங்கையிடம் சொன்ன வரலாற்றில், ஒரு விஷயத்தை மட்டும் முழுதும் சொல்லாமல் நிறுத்தி யிருந்தார். அதுதான் சாருகேசியி னுடைய குழந்தையின் கதை.

யாழ் நங்கை அந்த வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பியது உண்மை. ஆனால் அந்த இரவின் சூழ்நிலேயும், சமணத் துறவி யின் மனநிலேயும் அதற்கு இடம் கொடுக்க வில்லே.

சந்திரசூடன் வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டுவந்தவன், என்னென்ன மாறுதல்களுக்கு உள் ளானுன், பிறகு அவன் சாருகேசியின் குழந்தையைக் கடலுக்கு மத்தியிலே எப்படிக் கண்டு பிடித்தான் என்பதை யெல்லாம் துறவியம்மையே சொல்லு வாள் என்றுதான் யாழ் நங்கை எதிர் பார்த்தாள். ஆனுல் துறவியோ "அது வேறு ஒரு கதை. ஒரு பெரிய கதை" என்று சுருக்கமாக முடித்து விட்டது யாழ் நங்கைக்குத் திருப்திதரவில்லே. எப்படியும் இன்னொரு நாள் துறவி யம் மையை மீண்டும் கேட்டு அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மனத்துக்குள்ளே தீர்மானித் துக் கொண்டாள் நங்கை.

ஆனுல் திடீரென்று அதென்ன அப்படி ஒரு சங்கொலி கேட் டது? பாரதக் கதை யில் 'ரிஷபம்' என்று சொல்லப்படும் நாதத்தைச் சங்கினுல் ஒலி செய்து, யுத்த கோஷம் எழுப்புவதைப் பற்றி யாழ் நங்கை கேட்டிருக்கிருள். பல்லவ மன்னர் களின் அரச சபையிலே பழகிய சங்கீதப் பண்டிதர்கள் போரொலிக்குச் சின்ன மாக அமைந்த இந்த ஸ்வர ஒலியைப் பற்றி யாழ் நங்கையிடம் சொல்லிய துண்டு. இப்பொழுது திடீரென்று அவ்வகையான ஒலி சங்கில் எழுந்த தும், யாழ்நங்கை திடுக்கிட்டாள். அந்த நேரத்தில் மரக்கலத்தின் அடித் தளத்தி லிருந்து இரண்டு வீரர்கள் வேகமாக ஓடி வந்தார்கள்.

"அம்மா, துறவியாரே! யாழ்நங் கையே! நீங்கள் இருவரும் உடனே மரக்கலத்தின் மேல் தளத்திலிருந்து கீழே வந்து விடுங்கள். இரகசிய அறைக் குள்ளே சென்று விடுங்கள்!" என்று அறிவித்தார்கள் அந்தப் போர்வீரர்கள்.

நிலேமை என்ன என்பதை ஊகித்து விட்ட துறவியம்மையும் யாழ்நங்கையும் உடனே மரக்கலத்தின் மேல் தளத்தி லிருந்து, வேகமாகக் கீழே இறங்கிச் சென்றுர்கள். இதன் பிறகு அந்த நீலக் கருங் கடலிலே நடந்த சம்பவங்கள் பயங் கரமானவை.



கொற்கையிலிருந்து புறப்பட்டு வந்த பாண்டியர்களின் கடற்படை மாமல்லபுரத்துப் படையைக் கடலிலே எதிர்த்தது. வலம்புரித் தீவின் காவற்படைக்கு இரகசியச் செய்தி அனுப்பப்பட்டு அந்தப் படையும் இந்தப் போரிலே கலந்து கொண்டது. வாள்களின் வீச்சும், கேடயங்களின் ஒலியும், அம்புகளின் பாய்ச்சலுமாக மிகவும் கோரமான ஒரு பெரும் யுத்தம் கடலின் பரப்பிலே நடந்தது. சில மரக்கலங்களிலே யிருந்து பிரும்மாண்டமான யானைகள் பெரிய பெரிய உலக்கைகளையும், குந்தங்களையும், ஈட்டிகளையும் நீண்ட துதிக்கைகளினால் வீசி வீசி எறிந்தன. யானைகளின் பயங்கரமான பிளிறல் ஒலியும், வீரர்களின் போர் முழக்கமும் மோதி யெழுந்தன! கோபமும் பயமும், உயிரும் சாவும் ஒன்றையொன்று எதிர்த்துக் கொண்டு திமிறிய கொடிய ஓசையும், தலையும் கைகளும் கால்களும் அறுபட்டு விழுகிற போர்வீரர்களின் பரிதாபக் குரலுமாக நீலக் கருங் கடலின் அலையோசையையும் அடக்கிக் கொண்டு கேட்டது! கருநீலத் தண்ணீர் செந்நீலமாக மாறிக் கொண்டு வந்தது. யாழ்நங்கையும் சமணத் துறவியும் சென்று கொண்டிருந்த மரக்கலத்தைச் சுற்றிப் பல்லவ வீரர்கள் காவல் செய்து போரிட்டார்கள் அல்லவா? அந்த வியூகத்தின் பலத்தைப் போல் பன்மடங்கு பலங்கொண்ட பாண்டியர்களின் கொற்கைப் படை, பேயும் பிசாசும் வெறி கொண்டு எழுந்தது போல் ஆவேசம் கொண்டு முறியடித்துப் பல்லவ வீரர்களைக் கொன்று வீழ்த்திக் கொண்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலேதான் வல்லத்தரசரும் தஞ்சை முத்தரைய மன்னரும் அனு-பிய கப்பற் படை வேகமாக வலம்புரித் தீவை நோக்கி வந்து கொண்டிருந்தது.

ஆமாம்; சித்திராங்க பூபதியும் மந்தி நாயகமும் தஞ்சையிலிருந்து புறப்ப டார்கள் அல்லவா? அவர்களோ முத்தரையர்களின் பலமான கப்ப படையும் புறப்பட்டதல்லவா? அந் வீரப் பெரும் படை ஆவேசத்தோ கடலைக் கலக்கிக் கொண்டு படர்ந்தது.

வலம்புரித் தீவிலிருந்து பத்துக்கடிகை தூரத்திலே கடலின் பரப்பில் இதற் முன்பு கண்டும் கேட்டுமிராத விதத்தில் மிகப் பயங்கரமான போர் தொடங் கியது. சூரியன் உதித்தான். வானத் திலே ஊர்ந்தான். பிறகு அஸ்தமித் தான். சந்திரன் உதித்தான். நக்ஷத்திரப் படைகளோடு நீல விசும்பில் விரை தான். பிறகு மறைந்தான். மறுபடி யும் கதிரவன் கீழ் வானத்திலே தோன்றினான். ஓராழித் தேரிலே ஆயி ரம் ஆயிரம் ஒளி வாட்களை வீசிக் கொண்டு வந்தான். கடலின் பரப்பிலே அந்தப் பெரும் போர் முடிவின்றி நடந்தது! பாண்டியர்களுடைய கப்பற் படையின் பலம் வளர்ந்துகொண்டே போயிற்றே தவிர, முத்தரையர்களால் சமாளிப்பது கஷ்டமாக இருந்தது. கொற்கைத் துறைமுகத்திலிருந்து வீர விக்கிரமனுடைய நிர்வாகத்திலே புறப் பட்ட பாண்டியச் சேனை சாரி சாரியாக வந்து கொண்டிருந்தது. அந்த அணி களுக்கு ஒரு முடிவே இல்லையோ என்று



சொல்லும்படி முத்தரையர்களின் படைத்தலைவர் திகைத்தார். அப்போது வடக்குத் திசையிலே ஏதோ ஒரு பெரிய ஓசை கேட்டது. தேர்த் திருவிழாக்களிலே அதிர்வேட்டின் ஓசை கேட்பது போல் ஒரு பெரிய வெடியோசை கேட்டது. எலும்புக் கவசத்துக்குள்ளே பாதுகாக்கப்பட்டு அதனுள்ளிருந்து துடிக்கும் மனித இதயத்தைப் போல, முத்தரையர்களின் மரக்கலங்களுக்கு மத்தியிலே பல வியூகங்களுக்கும் அணிகளுக்கும் மத்தியிலே காக்கப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஒரு மரக்கலத்துக்குள் சித்திராங்கபூபதி இருந்தான். அவனுடைய இதயம் இந்த இடியோசையைக் கேட்டுத் துடிதுடித்தது. அப்பொழுது அவனுக்கு அருகிலேயிருந்த மூவரில் ஒருவரான பெரிய துறவி பேச ஆரம்பித்தார். மற்ற இருவர்களும்—இசைத் துறவியும் மந்திரநாயகமும்—பெரிய துறவியின் வார்த்தைகளை மிகுந்த கவனத்தோடு கேட்பதற்கு ஆரம்பித்தார்கள்.

''பூபதி! நீ தஞ்சையிலிருந்து மந்திர நாயகத்தோடு புறப்பட்டவுடன்நானும் இந்த இசைத் துறவியும் உங்களோடு புறப்படுவதற்கு ஆயத்தமாகத் தஞ்சைக்கு எப்படி வந்து சேர்ந்தோம் என்று நீ முதலில் திகைத்தாய். இப்பொழுது சொல்கிறேன். இத்தனையும் உதயசந்திரனுடைய ஏற்பாடுதான். எங்கள் இருவரையும் தஞ்சைக்கு அனுப்பி விட்டு அவர் காஞ்சிமாநகரம் சென்றார். இப்பொழுது அவரேதான் காஞ்சியிலிருந்து பெரும்படையோடு வருகிறார். இந்த வெடியோசை பல்லவர்களின் படையிலிருந்துதான் கேட்கிறது. நமது தமிழ்நாட்டுச் சித்தர்கள் பல மருந்து மூலிகைகளை ஆராய்ந்து ஆராய்ந்து பிரும்மாண்டமான வெடியோசை கிளப்பக்கூடிய கந்தகப் பொருள்களைக் கண்டு சொல்லியிருக்கிறார்கள். தண்ணீருக்குள்ளே வீசிய மாத்திரத்தில் தீப் பிடிக்கக்கூடிய ஒரு வித ரச மூலிகைப் பொருளைப் பற்றிப் போகர் என்ற மகான் பாடியிருக்கிறார். இந்த நுட்பங்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்த பெரிய ஞானி அல்லவா உதய சந்திரன்! அவருடைய கைவரிசைதான் இப்பொழுது இந்தக் கடலின் பரப்பிலே இப்படி இடியோசையாகக்கேட்கிறது!'' என்று வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட்டவராகக் கூறினார் சித்தண்ண வாசலின் பெரிய துறவி. சித்திராங்க பூபதிக்கு இதயத் துடிப்பு அடங்கவில்லை. மேற்கொண்டு என்னென்ன நடக்கப் போகிறதோ என்று புரியாமல் துறவியின் முகத்தையே பார்த்தான் அவன்!

ஆமாம்; துறவி சொன்னபடி அது பல்லவர்களின் படைதான். அவர் சொன்னபடியே உதயசந்திரன்தான் அந்தப் படைக்குத் தலைமை தாங்கி



நடத்திக் கொண்டு வந்தார்! அவர் எப்பொழுது காஞ்சிமா நகரத்திலிருந்து புறப்பட்டார்?

மயில் போன்று எழிலோடு விளங்கிய காஞ்சிமா நகரத்தின் அரச மாளிகை யிலே நந்திவர்மனுடைய தந்தையான இரணிய வர்மரும், உதயசந்திரனும் சந் தித்துப் பேசினார்கள் அல்லவா? அதன் பயனாக ஒரு முக்கிய முடிவுக்கு வந் தார்கள் இருவரும்.


இரணியவர்மர் உதயசந்திரனிடம் சொன்ன யோசனை இதுதான்:

"அமைச்சர் திலகமே! பாண்டியர் கள் இப்பொழுது காஞ்சிமா நகரத்தை அடியோடு மறந்துவிட்டார்கள். அவர்க ளுடைய கவனமெல்லாம் இப்பொழுது வலம்புரித் தீவை நோக்கியே திரும்பி யிருக்கிறது. வீரவிக்கிரமன் தன்னுடைய எதிர்காலச் சூழ்ச்சிகளுக்கு வலம்புரித் தீவையே முழுதும் நம்பி விட்டான். இதனால் பாண்டியர்களும் இப்பொழுது வலம்புரித் தீவையே எண்ணி எண்ணித் தங்களுடைய முயற்சிகளை யெல்லாம் அந்தத் தீவுக்காகவே செலவிடுகிறார்கள். ஆகையால் காஞ்சியின் மேல் படை யெடுப்பு ஏற்படும் என்று நாம் சந் தேகப்பட வேண்டிய அவசியமேயில்லை. அப்படியே ஒருகால் காஞ்சிக்கு ஏதா வது இடையூறு நேரக்கூடும் என்று தெரிந்தால் நமது கோட்டை வாசல் களை மூடிப் பலமாகக் காவல் செய்வ தற்கு வேண்டிய படைபலம் நம்மிடம் இப்பொழுது இருக்கிறது. இத்தனை பெரிய கோட்டையைப் பாண்டியர்கள் தாக்கி உள்ளே வருவதற்கு எத்தனையோ பல நாட்கள் பிடிக்கும். அதற்குள் நீங்கள் இங்கே திரும்பி வந்துவிடலாம்" என்றார் இரணியவர்மர்.

"அப்படியானால் என்னை இப் பொழுது வலம்புரித் தீவுக்குப் போகும் படி யோசனை சொல்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே உதயசந் திரன் சொன்னார்:

"இரணியவர்மப் பெருந்தகையே! இந்த யோசனை ஏற்கனவே நானும் எண்ணியதுதான். ஆனால் நானாக அ[தை] உங்களிடம் சொல்ல விரும்ப வில்[லை.] பாண்டியர்களின் படை விஸ்தரி[ப்பு] மும்முரமாக நடந்து கொண்டிருக்[கு]ம் இந்தத் தருணத்தில் நான் காஞ்சி[யி] லிருந்து வெளியே போகிறேன் என்[று] சொன்னால் அதை நீங்கள் எப்ப[டி] ஆமோதிப்பீர்களோ என்று தயங்[கி] னேன். இப்பொழுது அந்தத் தயக்க[த்] துக்கே இடமில்லை. நான் நினைத்த[தை] நீங்களே சொல்லி விட்டது எனக்கு பெரிய நிம்மதியாகப் போயிற்று" என்றார் உதயந்திரன்.

"அமைச்சர் பெருமானே! உங்க[ளை] ஒரு அமைச்சர் என்றுதான் உலக[ம்] அறியும். ஆனால் நீங்கள் முக்காலமு[ம்] உணர்ந்த ஒரு பெரிய ஞானி என்பதை நானும் தரணி கொண்ட போசரு[ம்] அறிவோம். இந்த உலகில் எத்தனையோ இளைஞர்களும் அரச வம்சத்துப் பிள்ளை களும் இருக்கும்போது, மாந்தோப் பிலே விளையாடிக் கொண்டிருந்த என் னுடைய சிறுவனை நீங்கள் தேர்ந்தெடுத் தீர்கள். அதிலும் சித்திரமாயனுக்கு எதிராகத் தேர்ந்தெடுத்தீர்கள். அன் றைக்கு உங்களை நான் அறிந்திருக்க வில்லை. நீங்கள் ஒரு தீர்க்கதரிசி என் பதையும், காலம் கடந்த ஞானத்தை யெல்லாம் கண்டு தெளிந்த பெரியவர் என்பதையும் அப்பொழுது நான் உணர வில்லை. ஆனால் அன்றைக்கே எங்கள் குலகுருவான தரணி கொண்ட போசர் கூறினார். என்னுடைய சிறுவனான நந்திவர்மனின் அங்க அடையாளங் களைக் கொண்டு அவர் எனக்கு எடுத்துச் சொன்ன விஷயங்கள் நம்பிக்கையைத் தர ஆரம்பித்தன. பிறகு ஒவ்வொரு நாளும் தங்களுடைய செயல்களை உன் னிப்பாகப் பார்த்து வருகிறேன். எந்தக் காரியத்தை எப்போது செய்தாலும், அனைத்தையும் கடந்த ஒரு ஞான நிலையிலே தங்களுடைய சித்தம் நிற் கிறது என்பது எனக்குத் தெரியும். இதற்கு மேலும் என் உள்ளத்தைச் சோதிக்காதீர்கள். தங்களுடைய முடி வைச் சொல்லுங்கள். நான் ஏதோ



புதிதாகச் சொல்லுவதாக நினைத்துக் கொண்டு பேசினேன். அதுவும் கூடத் தங்களுடைய உள்ளத்தின் எண்ணப் படியே இருக்கிறது! எனவே நான் பேசப் போவதில்லை. நீங்கள் பேசுங்கள். நான் கேட்கிறேன்!''

இவ்வாறு கூறினார் இரணியவர்மர். இதன் பிறகு உதயசந்திரன் கால தாமதம் செய்ய வில்லை. தம்முடைய ஏற்பாடுகள் என்ன என்பதை இரணிய வர்மரிடம் தெரிவித்தார்.

''வர்மரே! உங்களுடைய புதல்வ னுக்கு, வீரமும் தீரமும் பிறவிக் குணங் கள். ஆனாலும் அந்தக் குணங்கள் வளர்ந் தோங்க வேண்டும் அல்லவா? தமிழ் நாட்டில் எதிர்காலத்திலே நந்திவர்ம னுடைய கீர்த்தி கல்லிலும் சிலையிலும் நின்று நிலவப் போகிறதல்லவா? இதற் காக நம்முடைய அரசருக்குப் பல இடையூறுகள் நேருகின்றன. இத்தனை எதிர்ப்புக்களையும் தாண்டுவதன் மூலம் அவருடைய வீரம் வளம் பெற்று ஓங்கப் போகிறது. அதற்கு நீங்களும் நானும் கருவிகளாக நிற்கிறோம். அவ்வளவு தான். வேறு எப்படியும் சொல்வதற் கில்லை. இப்பொழுது நான் மாமல்ல புரத்திலிருந்து புறப்படுகிறேன். என் னோடு பெரிய படை வரவேண்டிய அவசியமில்லை. முப்பது போர்வீரர்கள் மட்டும் வந்தால் போதுமானது. மனி தர்கள் இல்லாத வெற்று மரக்கலங்கள் ஏழெட்டு வேண்டும். பல்லவர் படை வருகிறது என்றால் குறைந்தது பத்துப் பன்னிரண்டு மரக்கலங்களாவது வேண் டும் அல்லவா? இல்லையென்றால் பார்ப் பதற்குக் கௌரவக் குறைவாக அல்லவா இருக்கும்!''

இவ்வாறு சொன்னார் உதயசந்திரன். இந்த வார்த்தைகள் இரணிய வர்மருக் குத் திகைப்பைக் கொடுத்தன.

''அமைச்சர் பெருமானே! உங்க ளுடைய திட்டங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; பாண்டியர் களின் ஏராளமான கப்பற் படையை எதிர்ப்பதற்காக முத்தரையர்களின் படை கடல் கடந்து சென்றிருக்கிறது என்பதை அறிவேன். முத்தரையர் களின் துணை நமக்கு எவ்வளவு இருந்த போதிலும், தங்களோடு முப்பது வீரர்கள் வந்தால் போதும் என்று தாங்கள் சொல்வது எனக்குப் புரிய வில்லை. அதிலும் மனிதர்களே இல்லாத மரக்கலங்கள் ஏழெட்டு வேண்டும் என்று நீங்கள் கூறுவது வியப்பையே தருகிறது. ஆனாலும் நான் சொல்வ தற்கு என்ன உண்டு? தங்களுடைய திட்டங்கள் புரியா விட்டாலும், அவற் றில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஆகையால் தங்களுடைய கருத்துப் படியே செய்யுங்கள்!''

இவ்வாறு சொன்னார் இரணிய வர்மர். உதயசந்திரன் சொன்னார்:

''வர்மரே! நான் காஞ்சிமா நகரத் தில் இல்லை என்று கேள்விப்பட்டதும், எதிரிகள்என்னென்னசூழ்ச்சிகளைச்செய் யப் போகிறார்களோ, தெரியவில்லை. ஆகையினால் இந்தக் காஞ்சிமா நகரத் தின் காவலை அலட்சியம் செய்ய வேண் டாம். நமது அரச மாளிகையிலிருந்து நந்திபுரம் கோட்டைக்குச் செல்லும் இரகசியப் பாதையை உங்களுக்கு நன் றாகக் காட்டிவிடுகிறேன். எந்த எதிர்ப் புக்குமத்தியிலும் தங்களுடைய புதல்வர் நந்திவர்மரை மிகவும் கவனமான இந்த நந்திபுரம் கோட்டைக்குள்ளே இருந்து விடும்படி செய்ய வழியுண்டு. காஞ்சிமா நகரத்திலிருந்து நந்திபுரம் செல்லுகிற வழி ஒன்று இருப்பதாக யாருக்கும் தெரியாது. காஞ்சிக் கடிகையிலேயுள்ள இரண்டொரு சமணத் துறவிகளைத் தவிர வேறு யாரும் இந்த இரகசியத்தை அறிய மாட்டார்கள். சமணத் துறவி களைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். வீர விக்கிரமனோ இப்பொழுது தமிழ் நாட்டிலே இல்லை. ஆகையினால் நந்தி வர்மரைக் காஞ்சியிலிருந்து நந்திபுரத் துக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் நேரும்போது இரகசியப் பாதையைப் பயன் படுத்திக் கொள் ளுங்கள்!'' என்று கூறி விட்டு உதய சந்திரன் இரணியவர்மரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு, அரச மாளிகை



யின் சயன அறை ஒன்றில் பளிங்குக் கட்டிலுக்கு அருகே சென்ருர். அந்தக் கட்டிலுக்கு அருகே ஒரு நந்தாவிளக்கு நின்று எரிந்து கொண்டிருந்தது. நீண்ட கல்லும் அதற்குமேல் தகளிகையுமாகத் தோற்றமளித்த அந்த விளக்கை இடது புறமாகத் திருகினல் கீழே மறைவிருப்பது தெரிந்தது. விளக்கின் தண்டை இடதுபுறமாகச் சுற்றச் சுற்ற அதன் பீடம் எஃகுத் தகட்டோடு சேர்ந்து மேலே திறந்து கொண்டது. விளக்கின் தண்டு இதுவரை ஒரு பெரிய ஆணியைப் போல் அந்த எஃகுத் தகட்டை அழுத்திக் கொண்டு இருந்திருக்கிறது என்பதைக் கண்டதும் இரணியவர்மருக்கு வியப்புத்தாங்க முடியவில்லை.

''இரணியவர்மரே! தமிழ் நாட்டுச் சிற்பிகளும் கட்டடக் கலைஞர்களும் சாமான்ய மனிதர்கள் இல்லை. அவர்களுடைய இயந்திர ஞானத்தைப் பூரணமாகத் தெரிந்து கொண்டு விட்டால், இப் பூமியில் நம்மால் செய்யமுடியாத சாதனைகளே இல்லையென்று கூறலாம்!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே இரணியவர்மரிடம் இரகசியப் பாதையைக் காட்டிவிட்டு உதயசந்திரன் அரச மாளிகையிலிருந்து புறப்பட்டார்.

மாமல்லபுரத்துத் துறைமுகத்திலிருந்து உதயசந்திரன் வலம்புரித் தீவை நோக்கிப் புறப்பட்ட காட்சி விநோதமாக இருந்தது! பெரிய பயங்கரமான போர் கடலின் பரப்பிலே நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டு புறப்பட்ட அந்த அமைச்சர் திலகத்தோடு முப்பதே முப்பது போர் வீரர்கள் சென்ருர்கள். மொத்தம் பன்னிரண்டு மரக்கலங்கள் சென்றன.

அந்தப் பன்னிரண்டில் எட்டு மரக்கலங்களிலே, எந்த விதமான போர் வீரர்களும் இல்லை. மரக்கலத்தைச் செலுத்தும் வீரர்களைத் தவிர வேறு யாரும் அந்த எட்டு மரக்கலங்களிலும் இல்லை! வீரர்கள் நிற்க வேண்டிய இடங்களில் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. இலவம் பருத்தியிலிருந்து எடுக்கப்பட்ட பஞ்சுப் பொதிகளும், குங்குலிய மூட்டைகளும், காய்ந்து போன அனலி என்ற மரத்தின் சுள்ளிகளுமாக அந்த எட்டு மரக்கலங்களிலும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உதயசந்திரனேடு சென்ற வீரர்களில் போர்க்களப் பயிற்சி நிரம்பிய ஏனுதிகளோ சேனுநாயகங்களோ அதிகப் பேர் இல்லை! உதய சந்திரனுக்கு மெய்க்காவலாக வந்த வீரர்களில் இருவர் மட்டும் எஃகுப் பேடகங்கள் இரண்டில் கந்தகம் போன்று தோற்றமளித்த மருந்துப் பொடி ஒன்றை வைத்துப் பூட்டி அவற்றுக்கு அருகில் கண்களை மூடாமல் காவல் காத்தார்கள்.

சித்திராங்க பூபதியும் துறவிகளும் மந்திரநாயகமும் சென்று கொண்டிருந்த மரக்கலத்திலே இடியோசை கேட்டு எல்லாரும் திகைத்த போது, பெரிய துறவி குறிப்பிட்ட பல்லவர் படை இது தான்! முப்பது போர் வீரர்களோடு உதயசந்திரன் வந்து கொண்டிருந்தார்!

தஞ்சையிலிருந்து பல்லவர்களுக்காக வந்த முத்தரையர்களின் படை ஒரு பக்கம்! அதிலே சித்திராங்க பூபதி இருந்தான். மாமல்ல புரத்திலிருந்து யாழ் நங்கையின் மரக்கலத்துக்குக் காவலாக வந்த பல்லவர்களின் படை ஒரு பக்கம்! அங்கேதான் யாழ் நங்கையோடு தரங்க வல்லியான துறவியம்மையும் இருந்தார்! இந்த இரண்டு வியூகங்களையும் முறியடிக்கிற பாண்டியர்களின் படை ஒரு பக்கம்! வலம்புரித்தீவை ஏற்கெனவே காவல் செய்து கொண்டிருந்த பழைய பாண்டியப் படை ஒரு பக்கம்! படைக்கலங்களின் பேரோசையும், வீரர்களின் கூக்குரலுமாகக் கடலின் பரப்பிலே மிகப் பெரிய போர் நடந்துகொண்டிருந்த அந்தத் தருணத்தில் இடியோசை கேட்டு எல்லாரும் திகைத்தார்கள்.

வீர விக்கிரமனும் பாண்டியத் தளபதியும் தங்களுடைய மரக்கலத்தின் மேல் தளத்திலே ஏறிப் பார்த்தார்கள். நந்தியின் இலச்சினை பொறித்த இடபக் கொடிகள் பறந்தன.

''பாண்டியத் தலைவரே! பல்லவர்களின் மரக்கலங்கள்தாம் அவை. எண்ணிக்கை பன்னிரண்டுதான்! இதைப் பார்த்து விட்டு மெத்தனம் கொள்ளாதீர்கள்! இத்தனை குறுகிய படையோடு வருவதற்கு வேறு யாரும் துணியமாட்டார்கள். நிச்சயம் உதயசந்திரனே வந்திருக்கிருன் என்று நினைக்கிறேன். திடீரென்று கடலுக்கு மத்தியிலே இடியோசை கேட்டது பார்த்தீர்களா! இதில் ஏதோ சூது இருக்கிறது. நமது படைகளுக்கு அவசரப்படாமல் நிதானித்து உத்தரவு கொடுங்கள். படை பலத்தைவிட மூளையின் பலந்தான் இப்பொழுது மிகவும் முக்கியம்!''

இவ்வாறு வீர விக்கிரமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மீண்டும் இடியோசை கேட்டது. திடீரென்று அந்தப் புதிய பல்லவ மரக்கலங்களில் தீப்பற்றிக் கொண்டது போலத் தெரிந்தது. கருங்கடலை ஒளிக் கடலாக மாற்றுகிற பெரும் நெருப்போடு, பல்லவ அணியிலிருந்து ஏழெட்டு மரக்கலங்கள் எரிந்து கொண்டே பாண்டியர்களின் படையை நெருங்கி வந்தன! (தொடரும்)

கடல் கண்ட கனவு

சோமு



இருபத்தைந்தாம் அத்தியாயம்

கடலின் கரை!

கடலின் அலைகளுக்கு மேலே மிதந்து கொண்டிருந்த பாண்டியர்களின் மரக்கலப் படையை நோக்கிப் பல்லவர்களின் நெருப்பு வந்து கொண்டிருந்தது!

உதயசந்திரனுடைய எட்டு மரக்கலங்கள் நெருப்பில் எரிந்து கொண்டே பாண்டியர்களின் படையை நோக்கி வேகமாக வந்த காட்சி எல்லாரையும் பிரமிக்க வைத்தது! பல்லவர்களின் கட்சியிலே நின்று பாண்டியர்களை எதிர்த்துக் கொண்டிருந்த முத்தரையர்களையுமே திகைக்கச் செய்தது! அப்போது முத்தரையர்களின் படைத் தலைவரைப் பார்த்து உரத்த குரலில் சித்தண்ண வாசல் துறவி கீழ்க்கண்டவாறு சொன்னார்:

"ஞானியின் செயல்களை ஆராய முயற்சி செய்வது மடமை! உதயசந்திரனுடைய திட்டங்களை ஆராயாதீர்கள். அவருடைய தலைமையிலே வந்துள்ள பல்லவ மரக்கலங்களிலிருந்து நெருப்பு பரவுகிறது என்றால் இதில் ஒரு நுட்பமான ஏற்பாடு இருக்கிறது என்று அர்த்தம். நெருப்போடு செல்கிற மரங்கலங்களை நெருங்காதீர்கள். பல்லவர்களின் மரக்கலங்களுக்கு ஏதோ கேடு வந்து விட்டது என்று நினைத்து, அந்த எரிகின்ற மரக்கலங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நினைப்பில் அவற்றை அணுகாதீர்கள். விலகி ஒதுங்கி நில்லுங்கள்!"

இவ்வாறு சொன்னார் துறவி. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் பூபதிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. இந்தத் துறவியை முன்னொரு முறை சந்தேகித்தான் அல்லவா? இவர் வெறும் சந்நியாசி இல்லை; போர்ப் பயிற்சியிலே தேர்ந்த வீரர் என்று முன்பொரு நாள் எண்ணினான் அல்லவா? அந்த எண்ணம் இப்போது அவனுக்கு நன்றாக உறுதியாயிற்று.


அணிவகுத்து நின்று ஆவேசத்தோடு போர் செய்து கொண்டிருந்த பாண்டியர்களின் வியூகத்தில் இப்பொழுது குழப்பம் உண்டாயிற்று. பாண்டியர்களின் வியூகத்தைப் பிளந்து செல்லும் நோக்கத்தோடு, எரிகின்ற எட்டு மரக்கலங்கள் கடலின் பரப்பிலே 'கிர்' என்று வேகமாக வுந்தன. இந்த நெருப்பு அணியைப் பிளந்து செல்லுமானால், நிச்சயம் பாண்டியர்களின் மரக்கலங்களிலே தீப்பிடிக்கும்! இவ்வாறு வீரவிக்கிரமன் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, பல்லவர்களின் மரக்கலம் ஒன்றிலிருந்து ஒரு தீப் பந்து பாய்ந்து வந்து அணிவகுப்பின் மத்தியிலே விழுந்தது! உதயசந்திரனுடைய மரக்கலத்திலிருந்த வீரர்கள் அதை எறிந்திருக்க வேண்டும் என்று பாண்டியர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது!

எரிகின்ற மரக்கலங்கள்; அவற்றோடு இன்னும் பல தீப்பந்தங்கள்! இவற்றையெல்லாம் எதிர்த்துப் போரிடுவது என்பது எப்படி?

பாண்டியர்களின் வியூகத்தில் குழப்பம் அதிகரித்தது. அணிவகுப்பு கலைய ஆரம்பித்தது! இதைக் கண்டதும் பல்லவர்களின் அணியிலிருந்து மேலும் மேலும் தீப்பந்தங்கள் வந்து விழுவதற்கு ஆரம்பித்தன!

"இவற்றை எதிர்த்து நின்றால் நிச்சயம் நமது மரக்கலங்கள் தீப்பிடித்து எரிய ஆரம்பித்து விடும்! என்ன செய்யலாம்?" என்று திகைத்தார் பாண்டியர்களின் தலைவர். வீரவிக்கிரமன் சொன்னான்:

"தலைவரே! இந்த எதிர்பாராத சூழ்ச்சியை வெல்வதற்கு இப்போது வேறு வழி இல்லை. வியூகத்தைத் திருப்பிப் பின்வாங்கிவிட வேண்டியதுதான்! தர்ம நியாயமற்ற வழியிலே போர் செய்ய முனைந்து விட்டான் உதயசந்திரன்! அவனுக்குச் சரியானபடி பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் அதற்கு இது சரியான சமயம் இல்லை! இன்னொரு



சந்தர்ப்பத்தை எதிர்பார்க்
வேண்டியதுதான்!''

அவ்வளவுதான்! இதுவரை வீராவேசமாகப் போர் செய்து கொண்டிருந்த பாண்டியர் படை பின் வாங்க ஆரம்பித்தது. பின் வாங்கி நகருவதற்கு முனைந்தது. தீப்பந்தங்கள் 'விறு விறு' என்று வேகமாக வர ஆரம்பித்தன. ஓடுகிற எதிரிகளைப் பின் தொடர்ந்து கொண்டே நெருப்பிலே எரிந்து கொண்டிருந்த எட்டு மரக்கலங்களும் பாண்டியர்களைத் துரத்தின!

எதிரிகள் தொலைதூரம் சென்று விட்டார்கள் என்று தெரிந்ததும், உதய சந்திரனுடைய மரக்கலத்திலிருந்து சில மிதவைகள் கடலின் பரப்பிலே தூக்கி எறியப்பட்டன! அந்த மிதவைகளிலே சென்ற போர் வீரர்கள், தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த எட்டு மரக்கலங்களையும் அணுகி, அவற்றிலிருந்து சில வீரர்களைக் காப்பாற்றி மிதவைகளிலே கொண்டு வந்தார்கள். உதயசந்திரன் சொன்னார்: ''அவசியம் ஏற்பட்டால் உயிரையும் நெருப்பில் கொடுப்பதற்கு ஆயத்தமாக நின்ற வீரர்களே! உங்களைப் பாராட்டுகிறேன். உங்களுடைய வீரத்துக்குத் தலை வணங்குகிறேன். எரிந்து போன நமது எட்டு மரக்கலங்களுக்காகக் கவலைப்படாதீர்கள். அந்த எட்டு மரக்கலங்கள் செய்துள்ள செயலை எண்ணாயிரம் வீரர்கள் கொண்ட எண்ணூறு மரக்கலங்களால் கூடச் செய்ய முடியாது! பாண்டியர்களை முறியடிப்பதற்காக நம்முடைய எட்டு மரக்கலங்களை நாமே தீப்பற்ற வைத்து இழந்தோம்! ஆனால் இந்தக் காரியத்தினால் நமக்கு ஏற்பட்ட வெற்றியை எண்ணிப் பாருங்கள்!''

இவ்வாறு உதயசந்திரன் தம்முடைய வீரர்களைப் பாராட்டி விட்டு, மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்ட பல்லவர்களின் அணியை நோக்கி மரக்கலத்தைச் செலுத்தினார்.

யாழ் நங்கையும் தரங்கவல்லியும்இருந்த மரக்கலத்தை அணுகியதும் உதயசந்திரன் தமது போர் வீரர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உத்தர விட்டார்:

"வீரர்களே! பெண்களை அழைத்துச் சல்லும் மரக்கலங்களைத் தாக்கி அவற்றை முறியடிக்கலாம் என்று வந்தது பாண்டியப் படை. அந்த அதர்மமான காரியத்தை அடக்குவதற்கு நாமும் மறைமுகமான செயலைச் செய்ய நேர்ந்தது. தயங்காதீர்கள். இப்பொழுதே உங்களுடைய மரக்கலம் புறப்படலாம். இந்த மாதர் திலகங்களை வலம்புரித் தீவிலே கொண்டு சேர்ப்பது உங்களுடைய முதலாவது கடமை. அதைச் செய்யுங்கள். நாங்களும் முத்தரையர்களின் படையும் பின்னல் வருவோம். ஓடிச் சென்றுள்ள எதிரிகள் மீண்டும் திரும்பி வந்தால் அவர்களை நேர்முறையான யுத்தத்திலே எதிர்த்து வெற்றியோடு வலம்புரித் தீவுக்கு வந்து சேர்வோம். முதலில் பெண்மணிகளைத் தீவிலே கொண்டு சேருங்கள்!''

இவ்வாறு உதயசந்திரன் கூறியதும் பல்லவ வீரர்கள் ஜயகோஷம் செய்தார்கள். யாழ்நங்கையும் தரங்கவல்லியும் அமர்ந்திருந்த மரக்கலம் தீவை நோக்கி வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. பல்லவர்களின் காவற்படையும் அதற்குத் துணையாகச் சென்றது.

மரக்கலம் புறப்பட்டு வெகு நேரம் சென்ற வரை யாழ்நங்கை ஒன்றுமே பேசவில்லை. அவளுக்கு எதிரே இருந்த தரங்கவல்லியான துறவியம்மை இதைக் கவனித்தார். என்றாலும் துறவியும் தாமாகப் பேச்சை ஆரம்பிக்க விரும்பவில்லை. யாழ்நங்கையின் உள்ளத்தில் ஏதோ புதிய உணர்ச்சிகள் எழுந்து ஆக்கிரமிக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டு துறவியம்மை மௌனமாக இருந்தார். திடீரென்று யாழ்



நங்கையின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடுவதைக் கண்டதும் துறவியம்மை திடுக்கிட்டார். கேட்டார்:

"நங்கை! இதுவரை மௌனமாக இருந்தது சரி. ஆனால் இப்பொழுது ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கிறாய்? உனது உள்ளத்தை இப்படி வருத்தும் படியாக என்ன நேர்ந்து விட்டது இப்பொழுது?"

இவ்வாறு கேட்டார் துறவி. யாழ் நங்கை சொன்னாள்:

"அம்மா! நீங்கள் மகாராணியாகப் பிறந்து அரச போகங்களிலே திளைத்தவர். உங்களுக்கு யுத்தங்களைப் பார்த்தும் அவற்றை நடத்தியும் அனுபவம் இருக்கும். ஆனால் நான் அப்படியில்லை. இசையோடும் சங்கீத வாத்தியங்களோடும் பழகிப் பழகி வீரத்தை இழந்து விட்டவள் நான்! என்னால் போர்க் காட்சிகளைப் பார்க்க முடிகிறதில்லை. சற்று முன்பு வரை என்னுடைய உள்ளம் தன் நினைவிலேயே இல்லை. மடிகின்ற வீரர்களின் குடும்பமும், அவர்களுடைய மனைவியரும் குழந்தைகளும் என் கண் முன்னே நின்றார்கள்! இறந்து போன இத்தனை வீரர்களின் சுற்றத்தாரும் என் முன்னால் நின்று என்னைக் குற்றம் சாட்டுவது போல எனக்குத் தோன்றிற்று! இந்தப் பேரியாழுக்காகத் தானே இத்தனை பெரிய சண்டை நடந்தது! இதை எண்ணிப் பார்க்கும்போது என்னால் துக்கத்தைத் தாங்கவே முடிய வில்லை!" என்றாள் யாழ் நங்கை. இதைக் கேட்டதும், துறவியம்மை சொல்லுவார்:



"அம்மா நங்கை! மரணம் என்பது எல்லாமனிதர்களுக்கும் என்றைக்காவது ஒரு நாள் வந்தே தீரக்கூடிய நிகழ்ச்சி. மரணத்தை வென்றவர் யாருமில்லை. அப்படிப்பட்ட நிச்சயமான ஒரு முடிவை எண்ணி வருத்தப்படுவது பேதைமை. நீ உன் கண்களைத் துடைத்துக் கொள், அம்மா!"

"அம்மணி! ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? இயல்பாக ஒருவர் மரணம் அடைவது வேறு விதம்! ஆனால் யுத்தம் என்பது அப்படியா? தானே மரணத்தைத் தன் பேரில் வரித்துக் கொள்வதல்லவா இது? இந்த அநியாயத்தை என்னால் தாங்க முடியவில்லை! இதற்குக் காரணமாக அமைந்த குங்கும மாளிகையை எண்ணி எண்ணி மனம் வெதும்புகிறேன்!" என்றாள் நங்கை.

துறவியம்மை சற்று நேரம் மௌனமாக இருந்தார், என்ன சொல்வது என்ற யோசனையில். பிறகு பேச ஆரம்பித்தார்:

"அம்மா! இப்பொழுது நடந்த யுத்தத்துக்கும் குங்கும மாளிகைக்கும் சம்பந்தம் இல்லை. உண்மையில் இந்தப் போருக்கு நீதான் காரணம் என்று நினைப்பது தவறு. உனக்காக இந்த யுத்தம் நடக்க வில்லை. உண்மையில் உனக்காக ஒரு யுத்தம் இனிமேல்தான் நடக்கப் போகிறது! அதுவும் வெகு சீக்கிரத்திலேயே நடக்கப் போகிறது. இப்பொழுது நடந்த யுத்தம் வெறும் அரசியற் போர்! உனக்காக நடக்கப் போகும் யுத்தம் அப்படி யில்லை. வெறும் அரசியற் போராக இராது! இரண்டு பெரிய அரச குடும்பத்தின் உறவுக்காக நடக்கும் போராக இருக்கும் அது! ஒரு பெண்ணின் திருமணத்துக்காக நடக்கும் போராக இருக்கும் அது! அப்போதுதான் இதைவிட வீரமாக, இதைவிட ஆத்திரமாக, இதைவிட வெறி கொண்டு வீரர்கள் போரிடப் போகிறார்கள்! உண்மையில் அந்த யுத்தத்தில்தான் ஆயிரம் ஆயிரம் வீரர்கள் மடிவார்கள். அந்த யுத்தத்திலேதான் காலதேவன் தன்னுடைய பசியைத் தணித்துக் கொள்ளப் போகிறான்!"

இவ்வாறு சொல்லி நீண்ட பெருமூச்சு விட்டார் துறவியம்மை. யாழ்நங்கைக்குக் கண் கலங்கி உடம்பெல்லாம் அனலாகச் சுட்டது.

"அம்மணி! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? எனக்காக இன்னொரு யுத்தம் நடக்கப் போகிறதா? புரியவில்லையே!"

இவ்வாறு குழப்பத்தோடு கேட்ட நங்கைக்குத் துறவியம்மை விடை சொன்னார்:

"நங்கை! நான் சொன்னது எள்ளளவும் அதிகப்படியான வார்த்தை இல்லை! உனக்காக நடக்கப் போகிற யுத்தம்

மிகப் பெரிய யுத்தமாக இருக்கும். பகைவர்களுக்குள்ளே நடக்கப் போகிற யுத்தமில்லை அது! அப்படி நடந்தால் அதில் புதிதாக எவ்வித ஆவேசமும் ஏற்பட இடமில்லை. உனக்காக நடக்கப்போகிற யுத்தம் இது வரை நண்பர்களாக இருக்கும் இரண்டு தேசத்தார்களுக்கும் ஏற்படப் போகிறது! ஆதலால்தான் அது இது வரையில்லாத அத்தனை பெரிய யுத்தமாக இருக்கும் என்று உன்னிடம் சொன்னேன்!''

இப்படிச் சொல்லும்போதே துறவியம்மைக்கும் குரலில் கவலை தொனித்தது. துயரமே வடிவெடுத்தாற் போல் அவருக்கு எதிரே அமர்ந்திருந்த யாழ் நங்கைக்குத் தலை சுற்றியது! துறவி தொடர்ந்து பேச ஆரம்பித்தார்:

''நங்கை! இதுவரை பல்லவர்களும் முத்தரையர்களும் நண்பர்களாக இருந்து வருகிறார்கள். உன்னுடைய உறவு காரணமாக இந்த நட்பு முறியப் போகிறது என்று கருதுகிறேன். அதற்குக் காரணம் சித்திராங்க பூபதியும் அவனுக்கு உன்னிடம் ஏற்பட்டு விட்ட அபார மோகமுந்தான்!''



இப்படித் துறவி சொன்னதும் யாழ்நங்கை படபடப்போடு கேட்டாள்:

''பூபதியா! அவருடைய உள்ளம் உங்களுக்குத் தெரியுமா? அவருடைய மனத்தின் அந்தரங்கத்தை நீங்கள் நன்கு அறிவீர்களா?''

துறவி சொன்னார்: ''நான் மட்டும் என்ன! உதயசந்திரனும் அறிவார். முத்தரையர்களும் அறிவார்கள்! பூபதிக்குத்தான் தெரியாது! அதாவது இந்த விஷயம் இத்தனை பேருக்குத் தெரியும் என்று பூபதிக்குத் தெரியாது! பாவம், அவன் முத்தரையர்களின் காவற்படையோடு கடலிலே வந்து கொண்டிருக்கிறான்!''

யாழ் நங்கை கேட்டாள்: ''என்ன அவர் இப்பொழுது அந்த மரக்கலங்களுக்குள்ளே இருக்கிறாரா? அப்படியானால் இத்தனை சண்டைகளுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் அவர் எவ்வித இடையூறும் இல்லாமல் நலமாக இருக்கிறாரா, அம்மா!''

இப்படிக் கேட்டாள் நங்கை. துறவியம்மைக்குச் சிரிப்புவந்தது! சொன்னார்:

''ஏன் இத்தனை தூரம் பதறுகிறாய்? உன்னையும் என்னையும்விடப் பூபதியை மிகவும் அக்கறையோடு முத்தரையர்கள் காப்பாற்றுவார்கள். அவர்களுக்கு இல்லாத கவலை நமக்கு என்ன வந்தது?''

துறவி இப்படிச் சொன்னது யாழ் நங்கையின் இதயத்தில் 'சுருக்' கென்று தைத்தது. இதைப் பார்த்த துறவி மேலும் சொல்லுவார்:

''நங்கை! நம்மால் நட்புக் கொள்ளப்பட்டவர்களுக்கும், நம்முடைய சுற்றத்தார்களுக்கும் நம்மால் உதவி செய்ய முடிகிறதா? நன்றாக யோசித்துப் பார்! நம்மை விரும்புகிற மனிதர்களுக்கு நம்மால் கேடுதான் வரப் போகிறது என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது! அப்படி ஒரு சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டிய கடமை என்ன? நம்மை நாடுபவர்களுக்கு நம்மால் உதவி செய்ய முடியாவிட்டாலும், கேடு வராமலாவது தடுக்க வேண்டும் அல்லவா?''

இப்படிச் சொன்னார் துறவி. யாழ் நங்கைக்கு இந்தச் சொற்களின் பொருள் புரியவில்லை. அவள் கேட்டாள்:

''அம்மணீ! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்னால் சித்திராங்க பூபதிக்கு ஏதோ பெரிய கேடு வரப்போகிறது என்று நீங்கள் சொல்லுகிறது போலத் தெரிகிறதே! அப்படியா! தயவுசெய்து சொல்லுங்கள், இடையூறு நேரப் போகிறதா?''

''நங்கை! உன்னால் இடையூறு நேரப் போகிறது என்பது உண்மை. பல்லவர்களோடு துணையாகச் சேர்ந்திருக்கும் முத்தரையர்கள் வலம்புரித் தீவின் நல்ல காலத்துக்காக இந்தப் போரில் இறங்கியிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. வலம்புரித் தீவின் இளவரசனாகிய சித்திராங்க பூபதிக்குத் தமது மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறார் முத்தரைய மன்னர்! இந்த எண்ணத்துக்கு வலம்புரி மகாராணியும் ஆதரவு கொடுத்திருக்கிறார்! சித்திராங்க பூபதியின் அன்னை ஆதரவு கொடுத்து ஒப்புக்கொண்டுள்ள இந்தத் திருமண உறவுக்குச் சித்திராங்க பூபதி சம்மதிக்கவில்லையென்றால் இனி என்ன ஆகும் என்பதை நினைத்துப் பார்! முத்தரையர்களுக்கும் வலம்புரித் தீவுக்கும் பகை நேரலாம்! பல்லவர்களின் துணைவர்களாக விளங்கும் இதே முத்தரையர்களோடு உதயசந்திரன் கோபம்கொண்டு எதிர்க்கலாம். அல்லது உதயசந்திரனும் முத்தரையர்களும் ஒன்று சேர்ந்து வலம்புரித் தீவைத் தாக்கலாம்! இந்த

இரண்டில் ஒன்று நேரப் போகிறது! அதை நினைத்தால்தான் என்னுடைய மனம் துன்பப்படுகிறது. நங்கை! வலம்புரித் தீவின் அழிவிலிருந்து அதைக் காப்பாற்ற வேண்டும் என்று தனது உயிரையே தாய்நாட்டுக்காகக் கொடுத்தாள் சாருகேசி என்ற வீராங்கனை! ஆனால் அவளுடைய அருமைக் குமாரி, அவள் பெற்றெடுத்த செல்வம், அவளுடைய புதல்வியோ—''

யாழ்நங்கை அப்படியே ஸ்தம்பித்தாள்! "அம்மணி! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? அந்த வீரப் பெண்மணியின், அந்தத் தியாக வீராங்கனையின் புதல்வி யாரென்று சொல்கிறீர்கள்?''

"நங்கை! சாருகேசி தன்னுடைய தாய்நாட்டுக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்தாள். அப்படிப்பட்ட வீரப் பெண்மணியின் வயிற்றிலே பிறந்த வீரக் குமாரி தன்னுடைய தாய் நாட்டுக்காகத் தனது காதலைத் தியாகம் செய்வாளா என்பதுதான் கேள்வி!''

யாழ் நங்கைக்குத் தலை சுற்றியது. சாருகேசி கடலிலே மிதக்கவிட்ட பெண் குழந்தை தானேதான் என்ற உண்மை யாழ்நங்கையின் நினைவிலே ஒரு சக்கரம் போலக் 'கிறு கிறு' என்று சுழன்றது.

இந்தச் சுழற்சிக்கு மத்தியிலே மரக் கலம் வலம்புரித் தீவின் கரையைத் தொட்டது. எல்லை மீறிய கருணையோடு துறவியம்மை யாழ்நங்கையின் கண்களைத் துடைத்து விட்டுச் சொன்னாள்:

"நங்கை! பாசத்தையும் பந்தங்களையும் அடியோடு துறப்பது என்பது இந்த உலகில் இல்லை! தேசத்தினிடத்திலும், மனித குலத்தினிடத்திலும், இறைவனிடத்திலும் நமக்கு உண்டாகிற பரந்த விரிந்த பெரிய பாசத்திலே, நம்முடைய தனிப்பட்ட சிறு சிறு குறுகிய பாசங்களைக் களைந்து விடுகிறோம்! துறவு என்பதின் இரகசியம் இதுதான் அம்மா!''

துறவியம்மை இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மரக்கலத்தின் அடித்தளத்திலிருந்து வீரர்கள் வந்து விட்டார்கள். மறுகணம் கரையிலே இறங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாக நடக்க ஆரம்பித்தன! இதே சமயம் வலம்புரித் தீவின் துறைமுகத்துக்கு அப்பால் கலங்கரை விளக்கின் கரையோரமாக இன்னொரு மரக்கலம் வந்து கொண்டிருந்தது!

யாழ்நங்கையையும் தரங்கவல்லியையும் சாமர்த்தியமாக முதலில் அனுப்பி விட்டு, உதயசந்திரன் பூபதி ஏறியிருந்த மரக்கலத்துக்குச் சென்றார். சென்று மற்ற மரக்கலங்கள் போர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளலாம் என்றும், பூபதி ஏறியிருந்த மரக்கலம் வலம்புரித் தீவை நோக்கிப் புறப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

பூபதியின் உள்ளத்திலே இன்னும் சில செய்திகள் பலவிதமான குழப்பங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தன அல்லவா? இந்த நிலையில் அவனும் யாழ்நங்கையும் சந்தித்து விடக் கூடாது என்று உதயசந்திரன் நினைத்தார். எனவே பூபதியின் மரக்கலத்தை ஒதுக்கி ஒதுக்கிச் செலுத்தி வலம்புரித் தீவின் துறைமுகத்திலிருந்து சற்றுத் தொலைவிலேயிருந்த நிலவுப் பாறைக்கு அருகே

"கல்கி" ஜனவரி மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி''யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றுவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி''யில் பிரசுரமாகும்.

கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி'' காரியாலயத்துக்கு வந்து சேர்ந்து விடவேண்டும்.

கதைகளைத் திரும்பப் பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

போதிய தபால் தலைகளுடன் கூடிய தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைப் பரிசுக் கதை வெளியான பிறகு திருப்பி அனுப்பி விடுகிறோம்.

திருவையாற்றில் வழக்கமாக வருஷா வருஷம் நடந்து வரும் சத்குரு ஸ்ரீ தியாகப் பிரும்ம ஆராதனை மகோத்சவம் 1957ம் வருஷம் ஜனவரி மாதம் 20, 21, 22 ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெறுகிறது. அந்தப் புனித கைங்கரியத்துக்கு நன்கொடை அளிக்க விரும்பும் அன்பர்கள் தஞ்சை, வடக்கு வீதி 173ம் நம்பர் வீட்டிலிருக்கும் சபா காரியதரிசி மிருதங்கம் பாலக்காடு மணி அய்யர் அவர்கள் விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.



கொண்டு போகும்படி உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவின்படி இப்பொழுது சித்திராங்க பூபதியும் சித்தண்ணவாசல் துறவிகள் இருவரும் கலங்கரை விளக்கத்துக்கு அருகே வந்து கரை சேர்ந்தார்கள்! அவர்களோடு உதயசந்திரனும் கூடவே வந்தது ஒரு பெரிய புதிராக இருந்தது! கரையில் இறங்கியதும் கலங்கரை விளக்கத்துக்கு அருகேயிருந்த படிக்கட்டில் பூபதியை அழைத்துச் சென்றார் உதயசந்திரன்! அவர்களுக்குப் பின்னால் இரு துறவிகளும் வந்தனர்.

"கடலுக்குள்ளே மிதக்கும் முத்தரையர்களின் படையைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. பின் வாங்கிச் சென்றிருக்கும் பாண்டியப் படை மீண்டும் கடலுக்குள்ளே வராது. ஓடிப் போயிருக்கும் வீரர்கள் பாண்டியர்களிடம் போய் இந்தத் தோல்வியைச் சொல்வதற்குள், வீரவிக்கிரமனுடைய மூளை வேறு பல சூழ்ச்சிகளைச் செய்யும்! இந்தச் சூழ்ச்சிகளின் விளைவு என்ன ஆகும் என்பதை ஒருவாறு யூகிக்கிறேன். இப்பொழுது அதையெல்லாம் பற்றிப் பேசி முடிவு செய்ய இங்கே வரவில்லை நான்! சித்திராங்க பூபதியின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இருப்பதால் அந்தக் காரியத்தை முதலிலே செய்து முடிக்க வேண்டும்! பூபதி அவனுடைய அன்னையைச் சந்திப்பதற்கு முன்னால், அவனுடைய திருமணத்தைப் பற்றிய முடிவை அவன் தீர்மானித்தாக வேண்டும்!"

இப்படிஆரம்பித்தார் உதயசந்திரன். விசாலமான படிக்கட்டுக்கு அருகிலே பூபதியோடு உதயசந்திரனும் சித்தண்ண வாசல் துறவியும் அமர்ந்து கொண்டார்கள். இசைத் துறவி சற்றுத் தொலைவிலே இருந்து கொண்டார். உதயசந்திரன் சொன்னார்:

"ஐயா, துறவியாரே! நீங்கள் சித்தண்ண வாசல் மலையிலே இருந்து கொண்டு ஓர் இரவு முழுதும் நம் பூபதிக்கு வலம்புரித் தீவைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னீர்கள். சந்திரசூடனைப் பற்றியும், தரங்கவல்லியைப் பற்றியும், தரங்கவல்லியைமணந்த பாண்டிய குமாரனைப் பற்றியும் சொன்னீர்கள். ஆனால் சில செய்திகளை இன்னும் மறைத்து வைத்திருக்கிறீர்கள். உதாரணமாகச் சாருகேசி என்ற வீரப் பெண்மணி கடலிலே மிதக்க விட்ட பெண் குழந்தைதான் கொடும்பாளூர்க் குங்கும மாளிகையிலே வளர்ந்த யாழ்நங்கை என்பதைப் பூபதியிடம் சொல்லவில்லை. நீங்கள் யார் என்றும் அவனுக்குத் தெரியாது—"

பூபதி துள்ளி எழுந்தான்.

"ஐயா! அமைச்சர் திலகமே! சாருகேசி என்ற புனிதவதி பெற்றெடுத்த குழந்தைதான் யாழ்நங்கையா? அதனால் தான் அந்த மாதரசியிடம் அத்தனை உயர்ந்த பண்பும் குணநலன்களும்...."

உதயசந்திரன் இடைமறித்தார்.

"பூபதி! வர்ணனைகளை இடைமறிப்பதற்காக மன்னிக்க வேண்டும்! இனி தாங்கள் அரசர்! வலம்புரித் தீவின் வேந்தர்! நான் ஒரு அமைச்சன் என்ற முறையில்தான் இனி தங்களோடு பேச வேண்டும்! அந்த முறையில் ஒரு அரசனுக்கு உரிய கடமைகளை எடுத்துச் சொல்வதும் என்னுடைய கடமை! ஆகையால் தயவுசெய்து உங்களுடைய தனிப்பட்ட சொந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ஒரு வேந்தன் என்ற நிலையிலே எங்களுடைய பேச்சைக் கேட்கவேண்டும் என்றுகோருகிறேன்!"

"அமைச்சர் பெருமானே! தங்களுடைய பண்பாட்டிலும் திறமையிலும் எனக்குள்ள பக்தியைத் தாங்கள் அறிவீர்கள். திடீரென்று நான் வேந்தனாக நின்று பேசவேண்டும் என்று தாங்கள் சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது! வேந்தனும் ஒரு மனிதன்தான். அவனுக்கும் இதயம் என்று ஒன்று இருக்கிறது என்றுதான் நான் நினைக்

கிறேன். தங்களிடத்தில் மனிதனாகவே நின்று பேச அனுமதி தாருங்கள்! வேந்தனாக இருப்பதைவிட மனிதனாக இருப்பதையே நான் விரும்புகிறேன்!''

இப்படிப் பேசினான் பூபதி. பெரிய துறவி இடைமறித்தார்.

''பூபதி! உன்னுடைய இதயத்தை ஓர் இரவு பழகிய பழக்கத்திலேயே பூரணமாக அறிந்து கொண்டுள்ளவன் நான்! என்றாலும் நம் இருவருடைய ஞானத்தையும்விட இதோ நிற்கும் இந்த மகானுடைய தீர்க்கதரிசனத்தில் எனக்கு அதிக நம்பிக்கை உண்டு. எனவே முதலில்—''

உதயசந்திரன் இடைமறித்தார்.

''துறவியாரே! என்னைப் புகழ்வது இருக்கட்டும். முதலில் நீங்கள் யார் என்பதையும் இசைத் துறவி யார் என்பதையும் பூபதி தெரிந்து கொள்ளட்டும். அப்படியானால்தான் நாட்டைக் காக்க வேண்டிய ஒரு வேந்தனுடைய இதயத்துக்கும், சாதாரண மனிதனுடைய இதயத்துக்கும் இருக்க வேண்டிய வேற்றுமைகளும், கடமைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் உள்ள மாறுபாடுகளும் பூபதிக்குப் புரியும்!'' என்றார் உதயசந்திரன். இசைத் துறவி பேச ஆரம்பித்தார்.

(தொடரும்)

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் !பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

60

சத்தியமே தெய்வம், சத்தியமே ஆண்டவன் பெயரும் என்று நான் வெகு நாட்களுக்கு முந்தியே கண்டேன். என்னுடைய அறிவு, என்னுடைய உணர்ச்சி இரண்டுமே என்னை அந்த முடிவுக்குக் கொண்டு போய் விட்டன. ஆயினும் அந்த சத்தியத்தைத்தான் நான் 'ராமன்' என்று பெயர் சொல்லி இறைஞ்சுகிறேன். பெரிய இடுக்கண் வந்தபோதெல்லாம் அந்தப் பெயரே என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறது. இப்பொழுதும் அந்த நாமமே என்னுடைய காப்பு.

இதற்குக் காரணம் என்னுடைய குழந்தைப் பருவத்துப் பழக்கமாக இருக்கலாம். இல்லை, துளசிதாஸருடைய மாயமாகவும் இருக்கலாம். எப்படியாயினும் ராமநாமமே என்னுடைய நிரந்தரத் துணை.

குழந்தைப் பருவத்திய நினைவுகள் வருகின்றன. எங்கள் ஊரில், எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ராமர் கோவிலுக்குத் தினமும் போய் வருவேன். என்னுடைய ராமன் அப்போது அங்கேதான் வசித்து வந்தான். என்னுடைய பயத்தையெல்லாம் அவன் போக்கிவந்தான். என்னைப் பாபச்செயல்களில் இறங்காமல் தடுத்தான். மூட நம்பிக்கையல்ல, உண்மை. அந்தக் கோவிலில் பூஜை செய்த பூசாரி கெட்டவனாக இருந்திருக்கலாம். அது எனக்குத் தெரியாது. கோவிலில் அக்கிரமங்களும் நடந்து வந்திருக்கலாம். அதுவும் எனக்குத் தெரியாது. அவை என்னைத் தீண்டவில்லை. இதுவே ஹிந்து சமுதாயத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உண்மையான நிலைமையும். என்னைப் போலவே அவர்களும் கோவிலில் நடக்கும் குற்றங்குறைகளால் தீண்டப்படாமல் நன்மையே அடைந்து வருகிறார்கள்.

[ஹரிஜன், 18-3-33]

'ஹிந்துக்களுக்குத்தான் ராமனும் ராமநாமமும், முஸல்மான்களுக்கு அதில் ஏதுஇடம்' என்று யாரேனும் ஆட்சேபிக்கும் போது எனக்குச் சிரிப்பு வருகிறது. முஸல்மான்களுக்கு வேறு ஆண்டவன், நமக்கு வேறு ஆண்டவனா? முஸல்மான்களுக்கும் ஹிந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பாரஸியர்களுக்கும் அனைவருக்குமே ஒரே ஒரு ஆண்டவன். எங்கும் நிறைந்து சர்வ வல்லமையும் கொண்டுள்ள ஒரே ஈசனுக்குப் பல நாமங்களிட்டு இறைஞ்சி வருகிறோம்.

நான் 'ராமன்' என்பது அயோத்தியையில் ஆண்ட தசரதனுடைய குமாரனாகிய அந்தச் சரித்திர ராமன் அல்ல. காலத்துக்கு அப்பால், பிறப்பு அற்று, ஒரே பொருளாக, எப்போதும் நிற்கும் கடவுளைத்தான் நான் ராமன் என்று அழைத்து வழிபடுகிறேன். அவனுடைய அருளைத்தான் நான் நாடி வருகிறேன். நீங்களும் அதைத்தான் நாட வேண்டும். ஆனபடியால் முஸல்மான்களாவது வேறு யாராவது என்னுடன் சேர்ந்து ராமனை வழிபடுவதில் என்ன குற்றம்? நான் 'ராம' என்று சொல்லும்போது, என்னுடைய முஸல்மான் சகோதரன் 'அல்லா' என்றும் 'குதா' என்றும் மனத்துக்குள் சொல்லி தியானிக்கலாம். அதனால் என் பூஜையோ, பஜனையோ கெட்டுப் போகாது.

[ஹரிஜன், 28—4—46]

நான் துளஸிதாஸ பக்தன். சிறு வயதிலிருந்து நான் ஆண்டவனை ராமன் என்றுதான் பூஜித்து வருகிறேன். இது பழக்கத்தினால் வந்ததேயொழிய வேறல்ல. உலகத்தில் வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு மொழிகளிலும் கடவுளுக்கு மக்கள் இட்டுவந்திருக்கும் பெயர்களில் எதைச் சொன்னாலும் அல்லது ஓம்காரம் முதற்கொண்டு எல்லாப் பெயர்களையும் சொல்லி இறைஞ்சினாலும் முடிவு ஒன்றே. அந்தப் பெயர்களுக் கெல்லாம் பொருளானவன் ஒருவனே. தருமமும் ஒன்றே. தர்மத்தைக் கடைப்பிடித்தலே சிறந்த வழிபாடு. தர்மத்தோடு கலந்து ஒன்றிவிட்ட மனிதனுடைய வழிபாடு ஒரு பெயருமிட்டு அழைக்காமலே முடிவடைந்து விடுகிறது. அத்தகையோனுக்கு சுவாசிப்பது எப்படி இயற்கையோ அப்படி கடவுள் தியானமும் இயற்கையாகி விடுகிறது. மார்பில் பிராணவாயு நிறைந்து உயிரைத் தாங்குவதுபோல் தியானமும் அவனுக்கு இயற்கை இயக்கமாகி விடுகிறது. அவனுக்கு வேறு எந்த பூஜை சாதனமும் வேண்டியதில்லை.

[ஹரிஜன், 24—3—46]

கடல் கண்ட கனவு

இருபத்தாறும் அத்தியாயம்

கனவின் அலைகள்!

சித்தண்ண வாசல் துறவி தம்முடைய பேச்சுக்குப் பூர்வாங்கமாகக் கீழ்க்கண்டவாறு பாடத்தொடங்கினர்.

"**நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்**"

இந்த வார்த்தைகளை உரக்கப் பாடாமல் பரிசுத்தமான இசையோடு மந்திரங்களை உச்சரிப்பது போல ஓதினர் துறவி. பூபதி திகைப்போடு அந்த வார்த்தைகளைக் கேட்டான்.

"என்ன பூபதி! திடீரென்று நான் பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டேனே என்று பார்க்கிருயா? எனக்கும் கொஞ்சம் பாட்டு வரும். அதோ தள்ளி நடந்துபோய் நிற்கிருரே இசைத் துறவி, அவருக்கும் சங்கீதத்தில் அபாரமான ஞானம் உண்டு. நான் ஒரு சமணத் துறவியாயிற்றே, அதனுல் ஏதோ சமண சமயத்தை யொட்டி ஒரு துறவுப் பாடலை உன்னிடம் சொல்கிறேன் என்று நினைக்காதே. நான் பாடிய பாடலுக்கும் சமண சமயத்துக்கும் சம்பந்தமே இல்லை. உண்மையில் நான்பாடியது ஒரு பாடலே இல்லை. அது ஒரு சூத்திரம். அதிலும் இலக்கணச் சூத்திரம்! நமது தமிழ் இலக்கணத்திலே வருகிற சூத்திரம்!" என்ருர் துறவி. இந்த இடத்தில் உதயசந்திரன் குறுக்கிட்டுப் பேசினர்.

"துறவியாரே! இலக்கண நூலிலே வருகிற சூத்திரந் தான்! என்ருலும் அந்தச் சூத்திரத்தைப் பாடியவர் யார்? சாமானியமான மனிதரா? தொல்காப்பியர் அல்லவோ பாடினர் அந்தப் பாடலை! வெறும் இலக்கணத்தைச் சொல்ல வந்த புலவர் தம்மையும் மறந்து அற்புதமான ஒரு கவிதையை யல்லவா பாடி விட்டார் அந்த அடிகளிலே! பஞ்ச பூதங்களினுல் ஆகிய இந்த உலகத்தை எத்தனை அருமையாக வர்ணித்து விட்டார்! கலந்த மயக்கம் என்ற அந்த இரண்டு வார்த்தைகளுக்குள்ளேதான் எத்தனை ஆழமான பொருள் இருக்கிறது, பார்த்தீர்களா?'' என்ருர் உதயசந்திரன்.



பூபதிக்கு இந்தச் சர்ச்சையிலே மனம் செல்ல வில்லை. மருண்டு மருண்டு பார்த்தான். சித்தண்ண வாசல் துறவி பூபதியைப் பார்த்துச் சொன்னார்:

''பூபதி! ஆத்திரப்படாதே! உனக்குச் சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தை நாங்கள் பேச மாட்டோம். ஆகையால் கொஞ்சம் பொறுமையாகக் கேள்! தொல்காப்பியர் என்ற மகான் ஒரு இலக்கண விதியைச் சொல்ல வந்த சூத்திரத்தில்,இந்த உலகின் மயக்கத்தை இத்தனை அழகான சொற்களின் மூலம் தெளிவுபடுத்துகிறார். ஐந்து விதமான பூதங்கள் சேர்ந்தது இந்த உலகம் என்று சொல்ல வந்தவர் அதை ஐந்தும் கலந்த மயக்கம் என்கிறார்! வானமும் காற்றும் நெருப்பும் தண்ணீரும் பூமியும் நமக்குத் தெரியும் விதத்தில் நமக்கு முன்னால் தோன்றி வருகின்றன. இவை கலவை. ஆனால் இந்த ஐந்தும் நம்முடைய உடம்புக்குள்ளும் சேர்ந்து அமைந்திருக்கின்றன! இந்த விஷயம் நமக்குத் தெரிகிறதோ? இல்லை! இது மயக்கம்! எனவே உலகம் என்பது நம்முடைய கண்ணுக்குத் தெரிகிற கலவை மட்டுமில்லை! நம்முடைய கண்ணுக்குத் தெரியாத மயக்கம் இருக்கிறதே அந்த மயக்கமும்சேர்ந்ததுதான் உலகம்!இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இது வரை நீ கண்ணுக்குத் தெரிகிற உலகத்தைப் பார்த்து முடித்து விட்டாய்! கடல் கடந்து செந்தமிழ் நாட்டுக்குச் சென்றதன் பயனாக இந்த உலகக் கலவையை நன்றாகக் கண்டு கொண்டு விட்டாய்! ஆனால் ஐந்தும் கலந்த உலக மயக்கத்தை எத்தனை தூரம் கண்டு தெளிந்திருக்கிறாய் என்பதைப் பற்றி நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும்!''

இப்படி ஒரு பெரிய புதிரைப் போட்டார் துறவி. பூபதி சொன்னான்:

''பெரியவரே! சித்தண்ண வாசல் மலையிலேயிருந்து என்னோடு பேசிய போது இப்படி யெல்லாம் நீங்கள் தத்துவம் பேசவில்லை! எனக்குப் புரிகிற விஷயங்களை எனக்குப் புரிகிற முறையில் எடுத்துச் சொன்னீர்கள். ஆனால் இப்பொழுது இலக்கணச் சூத்திரங்களுக்குள் எல்லாம் என்னை இழுத்தடிக்கிறீர்களே! உண்மையில் நீங்கள் சொல்கிற கலப்பும் மயக்கமும் என் மூளையைத்தான் கலக்கியடிக்கின்றன. தயவுசெய்து விஷயத்தைச் சொல்லுங்கள்!''

இப்படிக் கூறினான் சித்திராங்கபூபதி. துறவி சிரித்தார்! உதயசந்திரனும் புன்முறுவல் செய்தார். புன்முறுவல் செய்தவாறே துறவியைப் பார்த்து உதயசந்திரன் சொல்லுவார்:

''பூபதியைக் கலங்க வைக்காமல், இவனுடைய மயக்கத்தைத் தெளிய வையுங்கள், துறவியாரே!''

உதயசந்திரன் இப்படிச் சொன்னதும் இசைத் துறவி நேரடியாக விஷயத்துக்கு வந்தார். சொன்னார்:

''பூபதி! உன்னுடைய மனத்தில் சந்திரசூடனின் வரலாறு நன்றாகப் பதிந்திருக்கிறது. எனவே சந்திரசூடனிடத்தில் உனக்கு வெறுப்பு இருக்க வேண்டியது நியாயம். ஆனால் அது எந்த அளவில் இருக்கிறது என்பதை இப்பொழுதே என்னிடம் கூறுகிறாயா?'' என்று கேட்டார் துறவி.

''ஐயா! என்னுடைய தாய் நாட்டுக்கு அத்தனை பெரிய துரோகத்தைச் செய்து விட்ட சந்திரசூடனிடம் எனக்கு ஆரம்பத்தில் கோபமும் ஆத்திரமும் உண்டானது உண்மை. ஆனால் அந்த வெறுப்பும் ஆத்திரமும் ஏனோ என் உள்ளத்தில் இப்பொழுது தீவிரமாக ஏற்படவில்லை! என்னையும் மீறிச் சந்திரசூடனிடத்தில் எனக்கு அனுதாபமே உண்டாகிறது!'' என்றான் பூபதி. இந்த இடத்தில் உதயசந்திரன் குறுக்கிட்டார்:

''உண்மை பூபதி! அதிலும் யாழ் நங்கையின் தந்தை சந்திர



டன்தான் என்று தெரிந்த பிறகு, கொஞ்ச நஞ்சம் இருந்த ஆத்திரமும் அடியோடு போய் விட்டது! சந்திரசூட னிடம் ஒரு காதலே உண்டாகி விட்டது! அப்படித்தானே?''

சித்திராங்க பூபதிக்குக் கோபம் உண் டாக்க வேண்டும் என்ற நோக்கத்துட னேயே பேசியது போல் இருந்தது, உதயசந்திரனின் வார்த்தை! பூபதிக் குக் கோபம் வந்தது! ஆனாலும் உதய சந்திரனுடைய முகத்தைப் பார்த்ததும் அந்தக் கோபம் எல்லாம் உள்ளத்துக் குள்ளே பதுங்கியது. இந்த உணர்ச்சிக் குமைப்பிலே பூபதி பேசினன்:

''அமைச்சர் திலகமே! தேசபக்தி என்பதுதான் எது? சாருகேசிக்குத் தன்னுடைய தாய்நாடான வலம்புரித் தீவினிடத்தில் அளவற்ற தேசபக்தி யிருந்தது. அதனல் அவள் இந்தத் தீவி லிருந்து பேரியாழ் மறைந்து விட்டதே என்று துடிதுடித்தாள்! சந்திரசூடனின் மன நிலை எப்படி? சந்திரசூடனுக்குத் தன்னுடைய அரசனிடத்திலும் தன்னு டைய நாட்டிலும் அளவற்ற தேசபக்தி யிருந்தது! அதனல்தான் அவர் பேரியா ழைத் தூக்கிக் கொண்டு தம்முடைய தாய்நாட்டுக்கு ஓடினர்! அவருடைய செயலுக்குக் காரணமும் தேச பக்தி தானே? ஆகையால் தேசபக்தி நிறைந்த சந்திரசூடனை நான் ஏன் வெறுக்க வேண்டும்?''

இவ்வாறு வீராவேசமாகப் பேசினன் பூபதி. இந்தப் பேச்சு துறவியின் உள்ளத்தை உருக்கியது. அந்த உருக் கத்தினூடு அவர் சொல்லுவார்:

''சித்திராங்கா! உன்னுடைய அன்பு உள்ளத்தை உருக்குகிறது. ஆனாலும் உணர்ச்சிகளைக் கடந்து நின்று உண்மை யைப் பார்க்க வேண்டும். அதுதான் தர்மம். இந்த உலகில் நல்ல காரியம், தீய காரியம் இரண்டுக்குமே ஒவ்வொரு வகையான அன்பும் பக்தியுந்தான் காரணமாக அமைகின்றன. அதனல் எல்லாவிதமான அன்பையும் நியாய மான அன்பு என்று கூறிவிடக் கூடாது. சாருகேசிக்குத் தன்னுடைய நாட்டி னிடம் இருந்த அன்பு தர்ம நியாய மானது. ஆனல் சந்திரசூடனுக்குப் பேரியாழிடத்தில் இருந்த அன்பு விபரீத மானது. சாருகேசிக்குப் பேரியாழிடத் தில் இருந்த பாசம் உரிமையும் நியாய மும் நிறைந்தது. இரண்டையும் ஒன்று போலக் கருதி ஒப்பிடுவது தவறு. உண்மையில் சந்திரசூடனை என்னல் மன்னிக்கவே முடியாது. அவன்தான் இந்தத் தீவின் கேட்டுக்கே காரணம்.''

சித்தண்ண வாசல் துறவி இத்தனை கண்டிப்போடு பேசும்போது உதயசந் திரன் அவரைக் கையமர்த்தினர்.

''துறவியாரே! குற்றவாளியே நியா யாதிபதியாகவும் இருப்பது எந்த நாட் டிலும் எந்தச் சமூகத்திலும் இல்லை! சந்திரசூடனைப் பற்றியும் அவனுடைய குற்றத்தைப் பற்றியும் தீர்ப்புச்சொல்ல உங்களுக்கு அதிகாரம் கிடையாது! அந்த அதிகாரம் சித்திராங்க பூபதிக்கும் இல்லை. ஏனென்றல் அவனும் இந்தப் பேரியாழ் வழக்கிலே சம்பந்தப்பட்ட வன்! எனவே என்னைப்போல் ஒரு மூன்றும் மனிதன்தான் இந்த விஷயத் தில் தீர்ப்புச் சொல்ல வேண்டும். என் னுடைய தீர்ப்பு என்ன வென்றல் ஒரு மனைவிக்கு வேறு எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியம் தன்னுடைய கண வன்தான்! தாய் நாட்டையும் விட முக்கியம் கணவன்தான்! நம்முடைய தமிழ்ப் பண்பாடு அதுதான்!

''தெய்வம் தொழா அள்
கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை''

என்றல்லவா திருவள்ளுவர் பாடினர்! தெய்வத்தையும் விட முக்கியம் கணவன் தான் என்று சொல்லி விட்ட பிறகு, தேசம் எந்த மூலை? எனவே



தன்னுடைய தாய் நாட்டுக்காகக் கண வனையே வெறுத்த சாருகேசியை நான் பெரிதாகக் கருதவில்லை! அதே போலப் பேரியாழிடம் தன்னுடைய அரசன் பிரியப்பட்டான் என்பதற்காகச் சந்திர சூடன் வலம்புரித் தீவின் அழிவைக் கூடப் பொருட்படுத்தாமல், மனைவி யையும் பொருட்படுத்தாமல் இரவுக்கு இரவே அந்தயாழைத் தூக்கிக்கொண்டு ஓடியதும் பெருந் தவறு! சாருகேசி தான் செய்த தவற்றுக்குப் பிராயச் சித்தமா கத் தனது உயிரையே தியாகம் செய் தாள்? அந்த உயிர்த் தியாகம் அவளை உத்தமியாக உயர்த்தி விட்டது. சந்திர சூடனே தன்னுடைய தவற்றுக்குப் பிராயச்சித்தமாகக் கடலிலே அனுதை யாக மிதந்த குழந்தையைக் கண்டுபிடித் துக்கொண்டு வந்து, பேரியாழ்ப் பயிற்சி யிலேயே வளரும்படி குங்கும மாளி கையிலே சேர்த்தார். அதோடு இந்த வாழ்வையே துறந்து, பரம வைராக்கி யத்தோடு அருக தேவனுடைய சரண கமலங்களிலே தம்மை அர்ப்பணித்து நின்றார். சதாவும் வலம்புரித்தீவின் புனர் வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்தார். அதோடு நிற்கவில்லை. இன்று பேரியாழும் சித்திராங்க பூபதி யும் இந்தத் தீவுக்கு வந்து சேர்வதற்குக் காரணமாக இருந்தவரும் சந்திரசூடன் தான்! துறவியாரே! இப்படிப்பட்ட சந்திரசூடனை நான் எப்படி வெறுக்க முடியும்! சந்திரசூடனுடைய ஒத்து ழைப்பு கிடைத்திருக்கா விட்டால், எனக்கு எப்படிக் குங்கும மாளிகையின் இரகசியங்கள் எல்லாம் தெரிந்திருக் கும்? பூபதி! நீயும் பேரியாழும் கரை சேர்ந்து விட்டதற்கு நன்றி செலுத்த வேண்டிய தருணம் இப்பொழுது வந்து விட்டது! இதோ நம் எதிரே வீற்றிருக் கும் சித்தண்ணவாசல் துறவியான சந்திரசூடருக்கு உன்னுடைய நன்றியை இனி நீ செலுத்தலாம்! அதோ இசைத் துறவியும் உன்னை நோக்கி நடந்து வரு கிறார் பார்! அவர் வேறு யாருமில்லை. தரங்கவல்லியை மணந்த பாண்டிய குமாரன்தான் இசைத் துறவியின் கோலத்திலே காட்சி தருகிறார்!''

மேகங்கள் விலகிப் பூரண நிலவு பொழிந்து கொண்டிருந்தது. கலங்கரை விளக்கிலிருந்து ஒளிக் கற்றைகள் கட லின் பரப்பிலே சிதறிக் கொண்டிருந் தன. அந்த ஒளி மயமான மணற் பரப் பிலே துறவிகள் இருவருடைய பாதங் களையும் தொட்டு வணங்கிக் கண் களிலே ஒற்றிக் கொண்டான் பூபதி. அந்த நீலக் கடல் இந்தக் காட்சியைக் கண்டு, தன்னுடைய எண்ணற்ற கனவு களிலே ஒரு கனவு நனவாகி விட்ட போல எண்ணி ஒரே உற்சாகத்தி அலைக் கைகளைக் கொட்டி முழக்கிய அப்பொழுது உதயசந்திரன் பூப யைப் பார்த்துச் சொன்னார் :

''சித்திராங்க பூபதி! இந்த வல புரித் தீவைச் சுற்றி வளைத்துக்கொண் கோஷம் இடுகிற இந்தக் கடல் வெறு தண்ணீர்ப் பரப்பு என்று எண்ண விடாதே. பஞ்ச பூதங்களும் கலந் மயக்கமாகிய இந்த உலகத்தில் இந்த கருநீலக் கடலுக்குள்ளே பஞ்சபூத களும் ஒன்று சேர்ந்து இயங்குகிற ஒ இதயம் இருக்கிறது! தமிழ் நாட் மன்னர்கள் மாட மாளிகைகளையும்கூட கோபுரங்களையும் கட்டி வாழ்ந்து கடைசியிலே இந்த மண்ணிலே தங்கள் உடலை மடித்தார்கள்! பேரழகிகளான எத்தனையோ எழிலரசிகள் இந்தக் கட சூழ்ந்த நிலவுலகிலே தங்கள் காதலை நாட்டி மாண்டார்கள்! நம்முடைய முன்னோர்கள் எல்லாரும் இந்த வையத் தில் உன்னதமான இலட்சியங்களோடு வாழ்ந்து உன்னதமான இலட்சியங்க ளுக்காகவே தங்கள் வாழ்வை நீத் தார்கள்! இத்தனை மாறுபாடுகளுக்கும் இத்தனை மரணங்களுக்கும் நிலைக்கள னாக அமைந்த நிலப்பரப்பை, இந்த நீலக் கருங்கடல் எத்தனையோ பல நூற்றாண்டுகளாகப் பார்த்துப் பார்த்து இதயம் பொறுக்காமல் கூச்சலிடுகிறது. ஆனால் அந்தக்கூச்சலையும் பேரிரைச்சலை யும் காது கொடுத்துக் கேட்க யார் இருக்கிறார்கள்? ஓயாமல் ஒழியாமல் இப்படிக் கூப்பாடுபோட்டுக் கதறுகின்ற கடலின் இதயத்துக்கு யார் செவிசாய்க் கிறார்கள்? யோசித்துப் பார்! பேரியாழ் என்ற புனித வாத்தியத்தைத் திருடிக் கொண்டு போனபோது இதே நீலக் கடல் பேரிரைச்சல் இரைந்தது! சந்திர சூடனுடைய காதில் அது விழவில்லை. பிறகு இதே பேரியாழைத் தேடிக் கொண்டு நீ புறப்பட்டாய்! அப் போதும் இதே நீலக் கடல் கூப்பாடு போட்டது! யார் அதைக் கேட்டார் கள்? இப்பொழுதும் இந்தக் கடல் இரைகிறது! இதை யார் கேட்கிறார்கள்? ஏதோ மூடத்தனமான குருட்டு நம் பிக்கையோடு பேசுகிறேன் என்று எண் ணாதே! மனிதனுக்கு இதயம் இருப்பது போல இந்த இயற்கைக்கும் இருக்கிறது. இந்தக் கருங்கடலின் கனவுகளையும் அதன் எண்ணங்களையும் அறிந்து கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு! அது இந்த அலையின் குரலைக் கேட்பதுதான்! இத்தனையும் எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்த இரவு

…ழுதும் நீ இந்த அலைகடலின் கரையிலே மனம் ஒருமித்துச் சிந்தனை செய்ய வேண்டும்! நாளைக் காலை உன்னுடைய முடிவை எங்களுக்குச் சொன்னால் போதும்! அது வரை நாங்கள் பொறுத்திருக்கிறோம். உன்னுடைய திருமண உறவு ஒரு பெரிய அரசியல் விஷயம். பல நாடுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகிற ஒரு முக்கியமான தீர்மானம் அது. எனவே ஆர அமர நீ சிந்திக்க வேண்டும்!''

இப்படிச் சொன்னார் உதயசந்திரன். இசைத் துறவி இந்த இடத்தில் பேச ஆரம்பித்தார்:

''பூபதி! சித்தண்ணவாசல் மலையிலே இருந்தபோது நீ என்னிடம் இந்தக் கடலின் அலைகளிலே எழுகிற சங்கீதத்தைப் பற்றிச் சொன்னாயே, நினைவிருக்கிறதா? 'அலையாவது சங்கீதமாவது' என்று நான் உதாசீனமாகப் பேசினேனே, அந்தப் பேச்சுத்தானே உனக்குக் கோபமூட்டியது. இப்பொழுது கேட்கிறேன் ஒரு விஷயத்தை: இந்த அலைகளின் சங்கீத ஒலிக்குக் காரணமாக அமைந்த சிலையின் அடியிலே யாருடைய இதயம் இருக்கிறது? நன்றாக யோசித்துப் பார். சாருகேசி என்ற வீரப் பெண்ணின் உடல் அந்தச் சிலையின் அடியிலே புதைக்கப்பட்டுக் கிடக்கிறது. அதுமட்டுந்தானா? எத்தனையோ தியாக புருஷர்களின் இதயங்கள் இந்த மண்ணுக்குக் கீழே கிடந்துதான் துடிக்கின்றன. நீ கேட்கும் ஒவ்வொரு அலையின் ஒலியிலும் எத்தனையோ இதயங்கள் துடிதுடிக்கின்றன என்பதை எண்ணிப் பார்! அத்தனை இதயங்களும் எந்த ஒரு இலட்சியத்துக்காக என்னென்ன தியாகங்களைச் செய்திருக்க வேண்டும் என்பதையும் ஒரு கணம் மனத்திலே உணர்ந்து பார்! அதன் பிறகு உன்னுடைய முடிவை நீ சொல்! அதற்காகத்தான் இந்த நிலவுப் பாறையிலே இன்றிரவு முழுதும் நீ தங்கி யிருக்க வேண்டும் என்று உதயசந்திரன் சொல்கிறார்! உலக மக்களின் குரல் இந்த நீலக் கடலின் அலையோசையிலேதான் ஒலிக்கிறது. அரண்மனைக்குள்ளே இல்லை!''

இப்படி இசைத்துறவி சொன்னபோது உதயசந்திரன் சிரித்துக் கொண்டே குறுக்கிட்டார்.

''இசைத் துறவியாரே! நீங்களும் நம்முடைய பெரிய துறவியும் இருவரும் சேர்ந்து இந்த இரவிலேயே சித்திராங்க பூபதியையும் காவி உடைக்குள்ளே பொதிந்துவிடாதீர்கள்! இளைஞர் அவர்! அவரையும் துறவியாக்கிச் சமணமும் சாக்கியமும் ஒன்று சேர்ந்துவிட்ட உங்களுடைய காவிக் கூட்டத்திலே சேர்த்து விடாதீர்கள்! பூபதி! இந்த ஒரு இரவு மட்டும் நீ நிம்மதியாகச் சிந்தித்தால் போதும். நாளைக்கு நீ இங்கே தங்க வேண்டும் என்று சொன்னாலும் உன்னை விடப் போவதில்லை. நாளைக் காலையிலிருந்து அரண்மனையின் நான்கு மதில்களுக்குள்ளும் இருக்க வேண்டியவன் தான் நீ! இந்த ஒரு இரவுதான் உலகத்தை — இந்த வெளி யுலகத்தை— நீ எங்களைப் போலச் சுதந்திரமாகப் பார்க்க முடியும்! நாளையிலிருந்து நீ வலம்புரித் தீவின் அரசன்! சாதாரண மனிதனைப் போல வெளியே வரமுடி



யாத ஒரு வேந்தன் நீ! உரிமைகள் என்பதெல்லாம் இந்த இரவோடு சரி. நாளைக் காலையிலிருந்து உனக்குக் கடமைகள்தான் உண்டு. உரிமைகள் கிடையாது! ஆகையினால் இந்த நிலவுப் பாறையிலே இன்றிரவு கழியட்டும்!''

இவ்வாறு சொல்லிப் பூபதியை அங்கே தனிமையில் விட்டு விட்டுச் சற்றுத் தொலைவிலே பாழடைந்த கோவிலின் சுற்றுப்புறத்திலே உதயசந்திரனும் துறவிகளும் சென்றார்கள். தனிமையின் நிர்ணயமும், கடலின் கரையிலே எண்ண அலைகள் எப்படி எழும் என்ற நுட்பமும் நன்றாக அறிந்த மூவரும், பூபதியை ஒரு பெரிய புதிருக்கு விடை

காண வேண்டிய மன நிலையிலே ஏகாந்த மாக விட்டுச் சென்றது முதலில் எப்படியோ இருந்தது பூபதிக்கு! சற்று நேரத்துக் கெல்லாம் அவனுடைய மனம் சிந்தனையின் ஆழத்திலே முங்க ஆரம்பித்தது!

'முத்தரையமன்னர் தம் புதல்வியைப் பூபதிக்கு மணம் முடிக்க எண்ணுகிறார். தன்னுடைய அன்னையும் அந்தத் திருமண உறவுக்குச் சம்மதிக்கிறாள். ஆனால் தன்னுடைய மனம்?....'

யாழ் நங்கையின் நினைவு பூபதியின் மனக் கடலிலே சுழல் சுழலாகச் சுழன்றது! அலை அலையாக மேலெழுந்தது!

சித்திராங்கனுடைய நினைவுச் செவிகளிலே பேரியாழின் ஓசை கேட்டது! ஆகா! எத்தனை இன்பமான நாதம் அது! வானத்துத் தேவதைகளை வையகத்துக்குக் கொண்டு வந்து நிறுத்துகிற புனிதமான ஒலி அல்லவா அது!

சாருகேசியை நினைத்தான்! பேரியாழும் கையுமாக அவள் அலைகளின் மேல் நின்றாள்! நீலமேக யாழ்ப்பாணர் வந்தார். அவருடைய வயோதிகக் கையிலே அந்தப் பேரியாழ் தவழ்ந்தது! மறுகணம் மீண்டும் சாருகேசியின் தோற்றம்! அவளுடைய கையிலே பெண் குழந்தை தவழ்கிறது! மறுகணம் இரண்டு உருவங்களும் மறைந்து விடுகின்றன. அந்த எல்லையற்ற கருநீலக் கடல் தெரிகிறது! அதன் அலைகளுக்கு மேலே ஒரு சிறிய படகு மிதக்கிறது! அந்தப் படகிலே சாருகேசியின் குழந்தை!

பூபதியின் கண் முன்னால் சந்திரசூடன் வந்து நின்றான்! யாழைத் திருடிய கள்வனைக் காணவில்லை. சற்று முன்பு வரை தன்னோடு பேசிக்கொண்டிருந்த அதே துறவுக்கோலத்தில் சந்திரசூடனுடைய நினைவுத் தோற்றம் பூபதியினுடைய கண்களிலே நின்றது! மறுகணம் இசைத் துறவி தோன்றினார். அடுத்தகணம் உதயசந்திரன்! உடனே சட்டென்று உடலிலே மின்னல் பாய்வது போல ஒரு சிந்தனை! அந்தப் பழைய சித்தரின் உருவம் தெரிந்தது பூபதியின் கண்களுக்கு!

இத்தனையும் நிஜமில்லை. வெறும் மனப் பிரமைதான்! ஆனால் நிஜத்தையும்விட எத்தனை நிஜமாக இருக்கிறது இந்தப் பிரமை! பூபதி அப்படியே கண்களை மூடினான்.

நிலவுப் பாறையிலே சாய்ந்தவாறே பூபதி ஒரு கனவு கண்டான். அவனுடைய உள்ளத்தையும் உடலையும் பின்னித் தவழ்ந்து வந்தது அந்தக் கனவு.

''இளவரசே! உங்களுக்கு நாளை காலையில் பட்டாபிஷேகம் செய்வது என்று முடிவாகிவிட்டது. உங்களுடைய திருமண உறவு பற்றி உங்களுடைய தீர்மான முடிவைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார் அன்னையார். இப்பொழுதே உங்களை அழைத்து வரும்படி தங்கள் அன்னையாரின் கட்டளை!''

இவ்வாறு குரல் கேட்டது. வேறு யாருமில்லை அந்தக் குரல்! வலம்புரித் தீவின் மந்திரநாயகந்தான் அவ்வாறு சொல்லிப் பூபதியை அழைத்தார்.

''திருமண முடிவா! இப்பொழுதே சொல்ல வேண்டுமா? அப்படி என்ன அவசரம்?'' என்றான் சித்திராங்க பூபதி!

மந்திரநாயகம் பளிச்சென்று மறுமொழி சொன்னார்.

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள் இளவரசே! நாளைக் காலையில் உங்களுக்கு மகுடம் புனையப் போகிறோம். நாளையிலிருந்து நீங்கள் இந்த வலம்புரித் தீவின் வேந்தர். நாளைக்காலையிலிருந்து நீங்கள் எங்களுடைய மதிப்புக்குரிய அரசர்! எங்களுடைய மதிப்புக்குரிய அரசியார் யார்என்று நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? வாருங்கள். அன்னையார் காத்திருக்கிறார்கள். புறப்படுங்கள்!''

இவ்வாறு அவசரப்படுத்தினார் மந்திரநாயகம் கனவிலே! பூபதி தன்னுடைய கனவிலே எழுந்தான்! தன்னுடைய கனவிலே நடந்து சென்றான்! தன்னுடைய கனவிலே தெரிந்த தனது அரச மாளிகைக்குள்ளே தன்னுடைய கனவுக் கால்களால் நடந்து கொண்டே சென்றான் பூபதி!

மாளிகையின் முன் வாசலைத் தாண்டினான்! கனவுப் போர் வீரர்கள் கனவு வணக்கத்தைக் கனவுப் பூபதிக்குக் கனவிலே செலுத்தினார்கள்! இதோ கனவு மாளிகையின் கனவு மன்றம்! கண்களை நன்றாகத் திறந்துதான் நடக்கிறான் பூபதி கனவிலே! ஆனாலும் இது கனவா நனவா என்று அந்தக் கனவிலேயே ஒரு சந்தேகம் உண்டாகிவிட்டது பூபதிக்கு! கண்களை மூடி மூடி விழிக்கிறான். நம்ப முடியவில்லை அவனால்! கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடுகிறது! விம்மிக் கொண்டே, கூச்சலிட்டுக் கொண்டே அன்னையின் முன்பாக ஓடுகிறான்! இந்தப் பரிதாபக் கண்ணீருக்குக் காரணம் அன்னையின் அருகிலே யாழ் நங்கையைக் கண்டதுதான்! ஆம்; யாழ் நங்கை வலம்புரி மகாராணியின் அருகிலே இருந்தாள். ஆனால் எப்படி? ஒரு சமணத் துறவியின் கோலத்திலே காட்சிதந்தாள் யாழ் நங்கை! (தொடரும்)



அத்தியாயம் 27

வலம்புரி வேந்தன்

கடலுக்கு மேலே சூரியன் உதித்து வந்து கொண்டிருந்தான். ஒளியினால் செய்யப்பட்ட இரதம் அசைந்து கொண்டே வான வீதியில் உருள ஆரம்பித்தது. அப்பொழுது சித்திராங்க பூபதி அவனுடைய சிந்தனைக் கனவுகளிலிருந்து எழுந்தான்.

உதயசந்திரனும் துறவிகளும் சித்திராங்க பூபதியின் முடிவான மறுமொழியை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் அல்லவா? சித்திராங்கன் அவர்களை நோக்கி நடந்து வந்தவன் ஒரே மோன லயத்தில் இருந்தான். அவனுடைய முகத்தில் இதுவரை இல்லாத ஒரு பெரிய நிதானமும், சலனமற்ற உறுதியும் பிரகாசித்தன. இதைக் கவனித்த இசைத் துறவி சித்திராங்க பூபதியைப் பார்த்துக் கேட்டார்: "வலம்புரித் தீவின் அரசே! உங்களுடைய ஆழ்ந்த சிந்தனையின் முடிவு என்ன என்பதை நாங்கள் அறிந்து கொள்ளலாமா?"

இந்தக் கேள்வி பூபதியின் செவிகளில் நன்றாக விழுந்தது. ஆனாலும் அவனுடைய முகத்தில் எந்தவிதமான மாறுதலும் உண்டாகவில்லை. நிதானத்தோடு நடந்தான் அவன்!

சித்தண்ண வாசல் குகையின் பெரிய துறவி பூபதிக்கு அருகிலே வந்து நின்று கொண்டார். பிறகு கேட்டார்:

"சித்திராங்கா! நாங்களும் உன் அன்னையும் எந்த முடிவுக்காகக் காத்திருக்கிறோமோ, அந்த முடிவை எப்படித் தீர்மானித்திருக்கிறாய் என்று எங்களிடம் சொல்லக் கூடாதா?"

இந்தக் கேள்விக்கும் மறுமொழி சொல்லவில்லை சித்திராங்கன். நிலவுப் பாறையிலே மேலும் நிதானத்தோடு நடந்து சென்றான் அவன்! இதைப் பார்த்த உதயசந்திரன் சித்திராங்க பூபதியை வழிமறித்தார்:

''வலம்புரித் தீவின் வேந்தே! சூரியன் உதித்து விட்டான். எனவே இனிமேல் நீங்கள் இளவரசர் இல்லை. இந்தத் தீவின் வேந்தர் நீங்கள்! ஆகையினால் இப்பொழுதே உங்களுடைய முடிவை அறிவித்து விடுங்கள். பிறகு உங்களுடன் அந்தரங்கமாக இம்மாதிரியெல்லாம் நாங்கள் பேசுவதே முடியாத காரியம்!''

உதயசந்திரன் இப்படிச் சொன்னதும், மறுமொழி சொல்வதற்கு ஆயத்தமானான் பூபதி.

''உதயசந்திரரே! நீங்கள் சொன்னது உண்மையான பேச்சு. இன்று காலையிலிருந்து நான் இந்தத் தீவின் வேந்தன் என்றீர்கள். அப்படியானால்



வேந்தன் தன்னுடைய முடிவைத் தெரிவிப்பது கடற்கரையிலே யில்லை. அரச மன்றத்திலேதான்!''

இப்படிச் சொன்னபோது பூபதியின் சொற்களில் ஒரு பெருமிதம், ஒரு தன்னம்பிக்கை, உள்ளத்தின் சலனங்களைக் கடந்த ஓர் உறுதி, இத்தனையும் ஒலித்தன! இதைக் கவனித்த உதயசந்திரன் மேலே பேசவில்லை.

''துறவிகளே! இனி மன்னரோடு வாதாடுவது நமக்கு அழகில்லை. வேந்தரை மாளிகையிலே சேர்க்க வேண்டியதுதான் நமது கடமை!''

இப்படிக் கூறிவிட்டு உதயசந்திரன் பூபதியோடு சேர்ந்து நடந்தார். துறவிகளும் பின்தொடர்ந்தார்கள்.

சித்திராங்க பூபதியும் துறவிகளும் வலம்புரி அரண்மனையிலே நுழைந்ததும், இவர்களுக்காகச் செய்யப்பட்ட வரவேற்புகளைப் பார்த்தால் மற்றவர்களுக்கு வியப்பு உண்டாகியிருக்கும். ஆனால் பூபதி வியப்படையவில்லை. உதயசந்திரனுடைய சாமர்த்தியமான முன்னேற்பாடுகளைப் பற்றி நன்கு அறிந்த பூபதி, வலம்புரி அரச மாளிகை தன் வரவை முன்னதாகவே அறிந்து அந்த வரவுக்காகக் காத்திருந்தது குறித்து வியப்படையவில்லை.

வலம்புரி அரண்மனையில், கடல் கடந்து சென்று பல எதிர்பாராத சம்பவங்களுக்கு உள்ளாகி மீண்டும் திரும்பி வந்திருக்கிற அரசகுமாரனுக்கு என்னென்ன கோலாகலங்களுடன் வரவேற்பு நடக்க வேண்டுமோ அத்தனையும் நடைபெற்றன! நிமித்திகரும், குருக்களும், பெரியோர்களும் ஆசி நல்கினார்கள். மங்கள வாத்தியங்கள் முழங்கின. மாதர்கள் வாழ்த்துப் பாடல்கள் பாடித் தங்கள் அன்புக்கு உரிய அரசகுமாரனை வரவேற்றார்கள்.

இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் சித்திராங்க பூபதி சலனமின்றிக் காணப்பட்டான். வரவேற்புச் சம்பிரதாயச் சடங்குகள் முடிந்ததும் நேரே அரச மாளிகையின் மேல் மாடிக்குச் சென்றான் அவன்.

தந்தப் பேடகத்தை அன்னையின் பாதங்களிலே வைத்து வணங்கும் போது மட்டும் பூபதியின் கண்கள் சற்றுக் கலங்கின. ஆனால் அந்தக் கலக்கத்தின் பொருளை அறிந்தவர்கள் வேறு யார் அங்கு உண்டு?

''அன்னையே! தந்தப்பேடகம் எனக்கு வழித்துணையாக உதவிற்று. அதை மறந்தபோது இடரில் சிக்கினேன். அதை நினைத்தபோது இடர்களை வென்றேன். மொத்தத்தில் என்னுடைய யாத்திரை வெற்றி யாத்திரைதான்! உதயசந்திரனுடைய சாமர்த்தியமான ஏற்பாடுகளினால் யாழும், யாழை வாசிக்க வேண்டிய நங்கையும் இந்தத் தீவுக்கு வந்து சேர்ந்தாயிற்று. இனிமேல் எனக்கு என்ன கட்டளையிடப் போகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்! மகாராணியாரே! இனி நான் இந்தத் தீவின் அரசன்! வலம்புரித் தீவிலே பரம்பரைபரம்பரையாகவாழ்ந்துவரும் தமிழ்க் குலத்துக்குத் தலைவன் நான்! அந்தப் பொறுப்பை நன்றாக உணர்கிறேன்! என்றாலும் ஒன்றே ஒன்றுதான் எனக்குப் பெரிய அதிசயமாக இருக்கிறது! ஒரு நாட்டை ஆளவேண்டிய பொறுப்பு என்றால் அதை ஏதோ சாமானியமாகத்தான் நினைத்தேன். தங்கத்தினால் செய்த மகுடத்தைத் தலையிலே தாங்குவதில் இத்தனை பாரம்

இருப்பதாக எனக்கு நேற்றுவரை தெரியவில்லை. இப்பொழுதுதான் தெரிகிறது!'' என்றான் பூபதி.

மகாராணி தம்முடைய அருமை மகனின் முகத்தையே கூர்ந்து பார்த்தார். சொன்னார்:

''மகனே! நேற்றுவரை இல்லாதபடி இன்று அப்படி என்ன உண்மையைக் கண்டுபிடித்தாய்?''


''அம்மா! இந்த உலகில் வாழ்வைத் துறந்த துறவிகளைக் கையெடுத்துக் கும்பிடுகிறோம். அதுநியாயம். துறவிகள் எல்லாரும் தெய்வத்துக்குச் சமானமானவர்கள். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வேந்தர்களை யெல்லாம் நம்முடைய தமிழ் மக்கள் தெய்வத்துக்குச் சமானமாக எண்ணி ஏன் வழிபட்டார்கள் என்று நேற்றுவரை எனக்குப் புரியாமல் இருந்தது! இன்றுதான் அதைப் புரிந்து கொண்டேன்!'' என்றான் சித்திராங்க பூபதி.

''நீ என்ன சொல்கிறாய்?'' என்று ஆவலோடு கேட்டாள் மகாராணி.

''அம்மா! அரசவாழ்வு என்றால் சுகபோகங்கள் என்று நேற்றுவரை நினைத்தேன். இன்றுதான் உண்மை புலனாயிற்று. அரச வாழ்வுக்கும் ஒரு துறவியின் வாழ்க்கைக்கும் வித்தியாசமே இல்லை. இதயத்தையும் அதன் சொந்த விருப்பு வெறுப்புக்களையும் கடந்து நின்று, தனது நாடு தனது மக்கள் என்ற உணர்ச்சியிலேயே ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், அதை விடப் பெரிய துறவு என்ன இருக்கிறது; இந்த உலகத்தில்! யோசித்துப் பார்த்தால் ஒரு வேந்தனுக்கு இன்னும் அதிகப்படியான ஒரு கஷ்டங்கூட இருக்கிறது! தனக்குப் பிடிக்காத விஷயங்களை மறந்துவிட்டு ஒரு துறவி வாழ முடியும். ஆனால் வேந்தன் அப்படி யில்லை. தனக்குப் பிடிக்காத விஷயங்களோடும், தன் மனத்துக்கு ஒவ்வாத மனிதர்களோடும் சூழ்நிலைகளோடும் பழகித் தீரவேண்டியிருக்கிறது. அதுமட்டுமில்லை. கடமை என்று ஒன்று ஏற்பட்டுவிட்டால், அதற்காக ஒரு வேந்தன் அவனுக்குப் பிடிக்காத பொருள்களைக்கூட அன்போடு ஏற்றுக் கொண்டு, உண்மையிலேயே அன்பு செலுத்த வேண்டியதிருக்கிறது. இதுதான் வேந்தன் செய்கிற தவம்!''

இவ்வாறு கூறினான் பூபதி. மகாராணிக்குக் கண் கலங்கியது. அந்தக் கலக்கத்தில் மகிழ்ச்சி ஒரு பக்கமும், அநுதாபம் ஒரு பக்கமும் ஒன்றையொன்று மோதின! அன்னையின் இந்த உணர்ச்சி மோதலைக் கவனித்த பூபதி மன உறுதியோடு சொன்னான்:

''அம்மா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்னிடம் அநுதாபப் படவேண்டிய அவசியமும் இல்லை. இத்தீவின் அரசனாகிய சித்திராங்கன் தியாகசீலர்களான தமிழ் அரசர்களின் பரம்பரையிலே வந்தவன். தனது முன்னோர்களின் பண்பாட்டைப் பூரணமாக இப்போது உணர்ந்துவிட்டவன்! அவன் தன்னுடைய தாய்நாட்டுக்காகத் தனது காதலைத் தியாகம் செய்வான். அவனுக்காக நீங்கள் அநுதாபப்பட வேண்டாம். அநுதாபப் படவேண்டியவள் அவனுடைய காதலுக்குப் பாத்திரமான நங்கைதான்! ஆனால் அவளுக்கும் உங்களுடைய அநுதாபமோ அல்லது என்னுடைய அநுதாபமோ அல்லது இந்த நாட்டு மக்களின் அநுதாபமோ அவசியமே இல்லை. தன்னுடைய தாய் நாட்டுக்காகத் தனது உயிரையே தியாகம் செய்த மகா உத்தமியான சாருகேசியின் குலக்கொழுந்து அவள்! தன் தாயின் பண்புகளைப் பிறவியிலேயே உரிமையாக உடையவள், உங்கள் மகனுடைய அன்புக்குப் பாத்திரமான யாழ் நங்கை! அவளுடைய அன்னை இந்தப் புண்ணிய பூமியான வலம்புரித் தீவுக்காகத் தனது உயிரையே தியாகம் செய்தாள். மகளோ இந்தப் புண்ணியத் திரு நாட்டுக்காகத் தனது காதலைத் தியாகம் செய்வாள்! உயிரைத் தியாகம் செய்வது எளிது. ஏனென்றால் இந்த உடலின் பாரம் மரணத்தோடு தீர்ந்து விடுகிறது! ஆனால் உணர்ச்சிகளைத்





தியாகம் செய்து விட்டு உயிரோடு இந்தப் பூமியிலே வாழ்வது அத்தனை எளிதில்லை. ஆனால் அதற்கும் ஒரு அற்புதமான சாதனம் அந்த நங்கையின் கையில் இருக்கிறது! தேவதைகளை ஆவாகனம் செய்து தெய்வ அருளைப் பொழிகிற புனிதமான பேரியாழ் அந்த நங்கையின் கையிலே தவழ்கிறவரை அவளுக்கு உடலின் பாரத்தைப் பற்றி கவலையே இல்லை!''

இப்படிச் சொல்லும்போது சித்ராங்க பூபதியின் குரல் கம்மிற்று. அந்தக் குரலை உறுதியோடு சரிப்படுத்திக் கொண்டான் பூபதி.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

நந்திபுரம் கோட்டை

வலம்புரித் தீவில் பூபதியையும் அவனுடைய வாழ்வையும் சுற்றி இத்தனை சம்பவங்களும் வாயு வேகத்தில் சுழன்று கொண்டிருந்த தருணத்தில், தமிழ் நாட்டிலே வீரவிக்கிரமனுடைய சதியாலோசனைகளும் மும்முரமாகச் சுழன்று கொண்டிருந்தன.

வலம்புரித் தீவை நோக்கிச் சென்ற கடற்படை உதயசந்திரனுடைய எதிர்பாராத பிரவேசத்தினால் தோல்விக்கு உள்ளாகித் தமிழ்நாடு திரும்பியது. பாண்டியர்களின் தலைநகரான மதுரையை நோக்கி வீரவிக்கிரமனும் அவனோடு சென்ற பாண்டிய வீரர்களும் சோகத்தோடு திரும்பினார்கள்!

பாண்டியர்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினனான சித்திரமாயனிடத்தில் பாண்டிய மன்னனைப் போலவே பாண்டிமா தேவிக்கும் பூரணமான அநுதாபம் இருந்தது. பாண்டியர்களின் குடும்பத்தில் திருமணம் செய்து கொள்ளக் கூடிய உறவு முறைகூடச் சித்திரமாயனுக்கு இருந்தது. எனவே அந்த அரண்மனை முழுதும் சித்திரமாயனுடைய கட்சிக்கு அளவு கடந்த ஒரு அநுதாபம் இருந்தது.

இப்படிப்பட்ட பல காரணங்களும் ஒன்று சேர்ந்து பாண்டிய அரசனுடைய பிரதானிகளின் சூழ்ச்சியை ஊக்கி வந்தன. ஏற்கனவே பல்லவர்களின் வீழ்ச்சிக்கு உரிய சரியான தருணத்தை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து வந்த பாண்டியர்களுக்கு, சித்திரமாயனுடைய துயரக் கனல் நெருப்பாகப் படர்ந்தது! இப்பொழுது உதயசந்திரனும் காஞ்சிமா நகரை விட்டுக் கடற்படையோடு வலம்புரித் தீவை நோக்கிச் சென்றிருக்கிறான் என்ற செய்தி கிடைத்ததும், மதுரை அரச மாளிகையிலே எல்லாப் பிரதானிகளும் கூடினார்கள்.

''காஞ்சிமா நகரில் இப்பொழுது நந்திவர்மனுக்குச் சரியானபடி பக்கபலம் இல்லை. இரணிய வர்மர் திறமைசாலிதானென்றாலும், உதயசந்திரன் அங்கு இல்லாதது அவருக்கு வலது கை ஒடிந்தது போலத்தான்! எனவே இந்தச் சரியான தருணத்தில் காஞ்சிமா நகரைப்படையெடுத்துத் தாக்கினால், நந்திவர்மனும் இரணிய வர்மரும் திகைத்துப் போய் விடுவார்கள். அவர்களை முறியடித்துக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு இதைவிடச் சிறந்த சமயம் வாய்க்காது!''

இவ்வாறு பேசினார்கள் பாண்டியர்களின் அமைச்சர்கள். இந்த யோசனை பலருக்கும் பிடித்திருந்தது. இதோடு இன்னொரு சூழ்நிலையும் சேர்ந்து அவர்களுக்கு அதிக ஊக்கத்தைக் கொடுத்தது. அதாவது வடக்கிலிருந்து எதிரிகள் காஞ்சிமா நகரைத் தாக்குவதற்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இந்தத் தருணத்தில் உதயசந்திரன் காஞ்சிமா நகரில் இல்லை என்ற செய்தி அவர்களுக்கே கிடைக்குமானால் அவர்களும் காஞ்சிமா நகரை வடக்கிலிருந்து தாக்குவார்கள் என்றும் பாண்டிய அமைச்சர்கள் எதிர்பார்த்தார்கள்!

''இந்த விஷயத்தில் நிதானமாக யோசித்து ஒரு முடிவுக்கு வருவோம் என்று நினைப்பது தவறு. காலம் தாழ்த்தினோமானால் எதிரி நம் கையில் சிக்காமல் தப்பி விடுவான்! எனவே வடக்குப் பிராந்தியங்களுக்கு இரகசியச் செய்தி அனுப்புவது ஒருபுறம் நடைபெற வேண்டும். அதே சமயம் நாம் நமது ஆட்சிக்கும் செல்வாக்குக்கும் உட்பட்ட தெற்கு மண்டலாதிபதிகள் அனைவரையும் ஒன்று சேர்த்துக் கொண்டு பல்லவர்களைத் தாக்க வேண்டும்.''

இவ்வாறு கூறினார் பாண்டியப் பிரதானிகளின் முக்கியமான ஏனாதி.

இதன் பிறகு இந்த யோசனையை மற்றப் பிரதானிகளும் தங்களுக்குள் கலந்து விவாதித்தார்கள். கடைசியில் எல்லாரும் இதை அங்கீகரித்தார்கள்.

பாண்டிய நாட்டிலிருந்தும் தெற்கு மண்டலங்களாகிய சிறுசிறு அரச வட்டங்களிலிருந்தும் பல்லவர்களை ஒரே ஆவேசத்தோடு எதிர்ப்பதற்குப் பெரும் படை திரண்டது. காஞ்சிமா நகரின் காவலைச் சின்னாபின்னம் செய்வது

... செய்திகளும் சங்கீதமும் சேர்ந்த இந்நிகழ்ச்சியைப்

என்றும், அத் தோகை மயில் போன்ற கோட்டையைத் தகர்த்துப் பொடிப் பொடியாக்குவது என்றும், பல்லவ மன்னனை இளைஞன் நந்திவர்மனைச் சிறை பிடிப்பது என்றும், அவன் வீற்றிருந்த அரச பீடத்தில் சித்திரமாயனை அமர்த்துவது என்றும் உறுதி யெடுத்தார்கள் படைத் தலைவர்கள்.

வலம்புரித் தீவிலே தனது தாய் நாட்டுக்காக அந்தத் தீவின் அரசன் தனது காதலைத் தியாகம் செய்யத் துணிந்து நின்ற சமயம் அது! வலம்புரித் தீவிலே தனது தாய்நாட்டுக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்த வீராங்கனையின் புதல்வி, தனது தாய்நாட்டின் எதிர்கால அரச உறவுக்காகத் தனது காதலைத் துறந்து கையிலே பேரியாழைத் தாங்க வேண்டும் என்ற முடிவு உருவாகிக் கொண்டிருந்த சமயம் அது!



இத்தனை சம்பவங்களையும் சாமர்த்தியமாக இயக்கிக் கொண்டிருந்த அரசியல் மேதையான உதயசந்திரன் தமிழ் நாட்டில் இல்லாத சமயம் அது! அந்த அரிய சமயத்தில்தான் நந்திவர்மனுடைய பகைவர்கள் நந்தி வர்மனை எதிர்த்து முறியடிப்பதற்காக ஒன்று சேர்ந்துபுறப்பட்டார்கள்!

தான் காஞ்சிமா நகரில் இல்லாமலிருப்பதை அறிந்து, எதிரிகள் இந்தக் கோட்டையைத் தாக்கக் கூடும் என்பதை இரணிய வர்மரிடம் ஏற்கனவே முன்னறிவிப்புச் செய்தவர் அல்லவா உதயசந்திரன்? அவர் கூறிய விஷயங்கள் அத்தனையும் அப்படியே உண்மையாக நடந்தன!

எந்த நந்திவர்மனுக்காக இத்தனை பெரிய போர் முயற்சிகள் நடந்தனவோ, எந்த நந்திவர்மனுக்காக உதயசந்திரன் [illegible] தூரம் அல்லும் பகலும் பாடுபட்டாரோ, அதே நந்திவர்மனைக் கவிழ்ப்பதற்கான ஏற்பாடுகள் இப்பொழுது மிக்க வேகமாக நடைபெற்றன!

பாண்டியர்கள் இப்படித் திடீரென்று நந்திவர்மனைத் தாக்குவார்கள் என்று இரணிய வர்மர் எதிர்பார்க்கவில்லை.

காஞ்சிமா நகரின் கோட்டைக்கு அப்படிப்பட்ட கேடு ஒன்று ஏற்படக் கூடும் என்று இரணிய வர்மர் சிந்திக்கவே இல்லை. உதய சந்திரன் காஞ்சிமா நகரின் கோட்டையிலே அரச மாளிகையின் சயன அறையிலேயிருந்த நந்தா விளக்குக்கு அருகில் இரணிய வர்மரை அழைத்துச் சென்று அவருக்கு அந்த இரகசியப் பாதையைக் காட்டியபோது கூட இரணிய வர்மர் அந்தப் பாதையை உபயோகிக்க வேண்டிய அவசியம் தமக்கு நேரும் என்று நினைக்கவில்லை. ஆனால் நடந்தது என்ன?

உதயசந்திரன் தமிழ் நாட்டு அரசியல் அரங்கிலிருந்து மறைந்திருந்த அந்த சமயத்தில், பாண்டியர்களும் அவர்களுக்குத் துணையாக மற்ற மண்டலாதிபதிகளும் சேர்ந்து நந்திவர்மனை எதிர்த்துப் போரிட்டார்கள் என்பது தமிழ் நாட்டின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமானதோர் நிகழ்ச்சி. வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் எதிரிகள் பல்லவர்களைத் தாக்க ஆரம்பித்தபோது, நந்திவர்மனும் அவனுடைய தந்தையும் உண்மையிலேயே திகைத்தார்கள். வாழ்வில் முதன் முதலாக நந்திவர்மன் அப்பொழுதுதான் போர் என்பதன் தன்மையை உணர்ந்தான்! இரணியவர்மர் தம் அருமை மகனை நந்திவர்மனை அவர் ஒரு கோழையாகச் செய்து விட விரும்பவில்லை. பல்லவ பீடத்தை ஏற்று வகிக்கக்கூடிய ஆற்றல் நிரம்பிய ஒரு பேரரசனாக அவனை உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய இலட்சியம். ஆனால் எதிரிகளின் படை பலமும், படையெடுப்பும் அவரைக் கதி கலங்கச் செய்தன.

தமிழ் நாட்டுப் பல்லவர்களின் ஆட்சியை வரலாற்று முறையில் வகைப் படுத்திக் கூறும் அறிஞர்கள் எல்லாரும் நந்திவர்மனுடைய வாழ்வில் ஏற்பட்ட இந்த அனுபவத்தை வண்ண வண்ணச் சொற்களிலே வர்ணித்துக் கூறியிருக்கிறார்கள். எதிரிகளுடைய ஆவேசமான தாக்குதலின் காரணமாக நந்திவர்ம பல்லவன் காஞ்சிமா நகரத்துக் கோட்டையிலிருந்து தப்பி நந்திபுரம் கோட்டைக்குள்ளே போய்த் தங்கிய சம்பவத்தைத் தமிழன் வெட்டிய கல் பேசுகிறது! தமிழன் கட்டிய கோவில் கூறுகிறது! நந்திபுரம் கோட்டையிலே போய் நந்திவர்மன் தங்கிக் கொண்டிருந்த போது தான், அரசியல் நிகழ்ச்சிகளையே யாரும் எதிர்பாராத வண்ணம் அடியோடு மாற்றிவிட்ட ஒரு முக்கிய சம்பவம் நடந்தது! அந்தச் சம்பவத்துக்குக் காரண புருஷராக விளங்கியவர் உதயசந்திரன்தான்! (அடுத்த இதழில் முடியும்)

கடல் கொண்ட தென்னா[டு]

அத்தியாயம் 29

திருமண உறவு

"ஐந்தும் கலந்த மயக்கமான இந்த உலகில், நிலவைப் போன்று உள்ளத்தை மயக்கக் கூடிய மந்திர சக்தி வேறு எதற்கு உண்டு?" என்று கேட்டாள் தரங்கவல்லி. வாழ்வைத் துறந்த பிறகு அவள் இப்பொழுதுதான் இயற்கையின் அழகில் இத்தனை தூரம் மனம் ஈடுபட்டுப் பேசியிருக்கிறாள்!

வலம்புரித்தீவின் அரச மாளிகையிலே மேல் மாடியிலிருந்த நிலா முற்றத்தில், தரங்கவல்லியும் யாழ் நங்கையும் பளிங்குக் கட்டிலிலே அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது இன்பமான வைகாசிப் பௌர்ணமி.

"நங்கை! இந்த உலகில் தெளிந்த நீல வானமும், அழகையே அலைகளாக வீசும் நீலக் கடலும், அமுத தாரைகளைப் பொழிகிற பூர்ண நிலவும்போல், இந்த மனத்தை மயக்கக்கூடிய இன்ப சக்தி வேறு எதற்கும் இல்லையல்லவா?" என்று மீண்டும் கேட்டாள் துறவி அம்மையார்.

"ஏன் இல்லை? பேரியாழுக்கு அந்த அற்புதமான ஆற்றல் உண்டு! நிலவையும் நீல வானத்தையும், அழகுக் கடலையும் ஒருமித்து நரம்புகளிலே தருகிற மந்திர சக்தி பேரியாழுக்கு உண்டு!

சோமு

சந்தேகமில்லை. ஆனால் அந்த ஆற்றல் எளிதில் கை வந்து விடாது. அதற்குத் தவம் செய்ய வேண்டும்!" என்றாள் யாழ் நங்கை.

தான் எதிர்பார்த்த மறுமொழியை யாழ் நங்கை சொல்லி விட்டதாக எண்ணி ஒரு திருப்தி ஏற்பட்டது, தரங்கவல்லிக்கு!

"நங்கை! இப்படி நீ சொல்லுவாய் என்று எதிர்பார்த்தே நான் நிலவின் மந்திர சக்தியைப் பற்றி அவ்விதம் கூறினேன். உண்மையில் உன்னுடைய இப்பொழுதைய மன நிலை எப்படியிருக்கிறது என்று பார்க்கத்தான் அந்த வார்த்தைகளைச் சொன்னேன். மெய்யாகவே சொல்லுகிறேன்: நிலவின் குளுமை, தென்றலின் இன்பம், இ[ள]வேனிற் காலத்தின் மயக்கம், கட[ற்] கரையிலே உள்ள தென்னஞ் சோலை அல்லது தடாகக் கரையிலே உள்ள நந்தவனம் — இத்தனையின் சுகமு[ம்] பேரியாழுக்கு உண்டு. அதைப்போலவே புத்த சரணங்களுக்கும் உண்டு. அப்பா[ர்] சுவாமிகளின் பாடலைக் கேட்டிருக்கிறாய் அல்லவா?

மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
இணையடி நீழலே!"

என்று மெல்லிய குரலிலே பாடினாள் தரங்கவல்லியான துறவியம்மை. அவளுடைய குரலின் உருக்கமும் பாடலிலே கனிந்த உணர்ச்சியும் சேர்ந்து யாழ்நங்கையின் உள்ளத்தை ஊடுருவின. நீலக் கடலிலே காற்று தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. கடற் கரையிலே நின்ற சோலையின் தென்னை மரங்களிலே அவற்றின் கீற்றுகளுக்கு ஊடே நிலவு ஊடுருவி வந்து கொண்டிருந்தது! கலங்கிய கண்களோடு யாழ்நங்கை தரங்கவல்லியைப் பார்த்துக் கேட்டாள்:

"அம்மா! தங்களிடம் ஒரு முக்கியமான சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தாங்களோ சமண சமயத்தைச் சேர்ந்த ஒரு துறவி. ஆனால் அன்று நீங்கள் புத்தபெருமானுடைய பெருமையைப் பற்றி மனம் உருகிப் பேசினீர்கள். இன்றோ அப்ப

சுவாமிகளின் தேவாரப்பாடலை உள்ளம் நெகிழும்படி எடுத்துச் சொல்லுகிறீர்கள். சித்தண்ண வாசல் துறவிகளைப் பற்றியும் இதே போலச் சந்தேகப்பட வேண்டிய நிலையில் இருக்கிறேன்! தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள். சமண சமயத் துறவிகளுக்கும், புத்த சமயத்துறவிகளுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சைவ சமயத்துக்கும் இந்தப் புறச்சமயங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். இந்த நிலையில் உங்களுடைய கொள்கைதான் என்ன?'' என்று கேட்டாள் யாழ்நங்கை.

புன்முறுவல் செய்து கொண்டே தரங்கவல்லி பேச ஆரம்பித்தார்:

''நங்கை! தமிழ்நாட்டிலே நந்திவர்மனுடைய ஆட்சியில் ஒரு அற்புதமான சமய ஐக்கியம் ஏற்படப் போகிறது. ஒரு அற்புதமான மொழி ஐக்கியம் உண்டாகப் போகிறது. ஒரு அற்புதமான சமூக ஐக்கியமும் நிலைபெறப் போகிறது. எதிர் காலத்தில் நமது தமிழ் நாட்டின் சரித்திரத்தை எழுதப் போகிறவர்கள் நந்திவர்ம பல்லவன் எந்த மதத்தினரை ஆதரித்தான், எந்த மதத்தினரை வெறுத்தான் என்பதில் பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறப் போகிறார்கள். புகழ் பெற்ற வைஷ்ணவப் பெரியார்கள் தோன்றி எத்தனையோ பெரிய மகத்தான சாதனைகளைச் செய்யப் போகிறார்கள். சைவ சமய ஞானிகள் பலர் தோன்றித் தங்களுடைய சித்தாந்தத்தை நிலைநாட்டப் போகிறார்கள். அதே போலச் சாக்கியர்களும் சமணர்களும் தங்களுடைய அறத்தையும் பேணித் தமிழ்மொழியை வளர்க்கப் போகிறார்கள். எதிர்காலத்தில் அரசாங்க மொழி எதுவாக இருக்க வேண்டும் என்று ஒரு பெரிய சிக்கல் ஏற்படப் போகிறது. அந்தச் சிக்கலுக்குப் பல்லவ மன்னனே ஒரு தீர்வு காணப் போகிறான். அதற்கு ஒரு முன்னோட்டமான சூழ்நிலை இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது. சமயங்களும், சமயத் தலைவர்களும், மொழிகளும், மொழித் தலைவர்களும், இந்த நூற்றாண்டிலே தங்களுக்குள் மோதிச் சோர்வடைந்து பிறகு ஐக்கியப்படப் போகிறார்கள். அதன் பின்னர் தமிழ் என்று ஒரு மொழியல்ல, தமிழ் என்று ஒரு சமயமே எல்லாருக்கும் பொதுப்படையான சமயமாக நின்று நிலவப் போகிறது! அந்தச் சமயத்தில் புறச் சமய வேறுபாடுகள் எல்லாம் ஒழிந்து சமூக ஒருமைப்பாடு நிலைபெறும். அப்படிப்பட்ட பல்லவ விஜயத்தை என் கண்ணால் கண்டு களிக்கப் போகிறேனோ இல்லையோ, நிச்சயம் நமது பிற்காலச் சந்ததிகள் அந்தப் பல்லவ விஜயத்தைத் தரிசிப்பார்கள். அந்த ஐக்கிய வெற்றியிலே வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு என்ற வேற்றுமைகளும் சமணம், சாக்கியம், சைவம், வைஷ்ணவம் என்ற பேதங்களும் நீங்கித் தமிழ் என்ற ஒரு மகத்தான சித்தாந்தம் எல்லா மக்களுடைய இதயச் சிம்மாசனத்திலும் வீற்றிருந்து ஆட்சி செய்யும்! அப்போது எல்லாச் சமய நூல்களும், எல்லாக் கவிஞர்களின் காப்பியங்களும், எல்லா மக்களுடைய எண்ணங்களும் தமிழாகவே மலரும். செந்தமிழ் நாட்டின் சரித்திரம் கல்வெட்டுக்களிலும், கோவில் பட்டயங்களிலும் அமுதத் தமிழிலே பொறிக்கப்படும். அப்படிப்பட்ட பொன்னான காலத்தை எதிர்நோக்கி நிற்கும் திருக்கூட்டத்தார் தான் சித்தண்ண வாசலிலே இப்பொழுது வாழ்கிறார்கள். சமய வெறி என்பது மறைந்து ஒழிந்தது! இப்பொழுது யார் சாக்கியர், யார் சமணர் என்று எங்களுக்கே தெரியாது! இன்னும் சொல்லப் போனால், இந்தத் துறவிகளிலே யார் துறவி, யார் அமைச்சர், யார் சந்நியாசி, யார் போர் வீரர் என்றே சொல்ல முடியாதம்மா!

நாம் எல்லாரும் பல்லவ விஜயத்துக்காகப் பாடுபடும் தொண்டர்கள்! சிலர் காஷாயத்தில் இருக்கிறோம். சிலர் அரச உடையிலே இருக்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம்!''

இவ்வாறு சொன்னாள் தரங்கவல்லி! இதைக் கேட்டுவிட்டு ஒரே மௌனமாக இருந்தாள் யாழ்நங்கை. அவளுடைய மௌனத்தின் பொருளைப் புரிந்து கொண்ட துறவியம்மை மேலும் பேச ஆரம்பித்தார்:

''நங்கை! அப்படிப்பட்ட மகத்தான பல்லவ விஜயத்தோடு இந்த வலம்புரித் தீவின் எதிர்காலமும் இணைந்துவிட்டது. இந்தத் தீவின் எதிர்காலத்தோடு புனிதமான பேரியாழின் ஒலியும் இப்பொழுது சுருதி சேர்ந்துவிட்டது. உண்மையில் சித்திராங்க பூபதியும் நீயும் செய்கிற அற்புதமான இந்தத் தியாகம் பல்லவ விஜயத்துக்கே ஆதார சுருதியாக ஒலிக்கிறது! நாங்கள் எல்லாம் வாழ்விலே செய்கிற தவத்தை நீ யாழின் நரம்புகளிலே செய்யப் போகிறாய். எங்கள் எல்லாருடைய தவத்தைக் காட்டிலும் உன்னுடைய இசைத் தவத்துக்குத்தான் அதிக வல்லமை உண்டு!''

இப்படிச் சொல்லும்போது தரங்கவல்லியின் குரல் நெகிழ்ந்தது. இதைக் கவனித்த யாழ்நங்கை சொல்லுவாள்

"அம்மா! மன உறுதி யென்பது நம்மைப் பொறுத்த விஷயமே இல்லை. சம்பவங்களைப் பொறுத்ததுதான் அது! நம்மை நடத்துகிற சக்தி நமக்கு மன உறுதி தருவதற்காகவே, சிற்சில சம்பவங்களை நடத்திக் காட்டி அவற்றின் மூலம் நமக்கு இதய வலிமையைத் தருகிறது! உண்மையிலேயே பல்லவ விஜயத்துக்கு என்னுடைய ஒரு சிறு தொண்டும் பயன்படப் போகிறது என்றால் அதைவிட நான் அடையக்கூடிய பாக்கியம் வேறு என்ன உண்டு. என்னுடைய எல்லையற்ற அன்புக்கு உரியவரான சித்திராங்க பூபதிக்கு நான் செய்யக்கூடிய சேவை இதைவிட வேறு என்ன உண்டு! இந்த நினைப்புத்தான் எனக்கு மனவலிமை தருகிறது! இந்த ஒரு இன்ப நினைவுதான் என்னுடைய கடமையில் எனக்கு ஊக்கம் உண்டாக்குகிறது! நாளைக் காலையிலிருந்து என்னுடைய திருப்பணி நாட்டு மக்களிடையே இல்லை. இந்த வலம்புரி அம்மனுடைய தெய்வ சந்நிதானத்திலேதான்! எந்த ஒப்பற்ற இசைக் கருவியினால் நமது முன்னோர்கள் தெய்வத்தை ஆவாகனம் செய்து, இந்த மாநிலத்துக்கு நல்வாழ்வு வழங்கினார்களோ, அந்த அற்புதமான பேரியாழினால் நான் இனித் தமிழ்க் குலத்தின் நல்வாழ்வுக்குப் பிரார்த்தனை செய்வேன்! வலம்புரி அரச குடும்பமும், முத்தரையர்களின் தமிழ்க் குலமும் ஐக்கியப்பட்டு அந்த அஸ்திவாரத்திலே பல்லவ விஜயம் ஸ்தாபிதம் ஆகவேண்டும் என்று, அல்லும் பகலும் யாழின் நரம்புகளிலே துதி செய்வேன். இது சத்தியம்!" என்றாள்.

நிலவின் அமுதத்தைப் பருகிய நீலக் கடலிலிருந்து, பெரிய அலை ஒன்று பேரின்பக் கோலாகலத்திலே பொங்கிப் புரண்டு குதித்துக் கொண்டு வந்து வலம்புரி அம்மனின் கோவிற் படிக்கட்டுகளிலே சாடியது! அதனின்று ஏழு ஸ்வரங்களும் இனிமையாக ஒலித்தன!

முப்பதாம் அத்தியாயம்

கனவின் ஒலி!

வலம்புரி அரண்மனையிலே அரச மன்றம் பெரிய விழா மன்றமாகக் காட்சி தந்தது. அரசப் பிரதானிகளும், மன்றத்தார்களும், நகரச் சுற்றமும், அமைச்சரும், சமயக் கணக்கரும், பெரியார்களும், விருதுச் சான்றோர்களுமாக அணி அணியாக அமர்ந்திருந்தார்கள். நடு நாயகமாக விளங்கிய அரச மேடையிலே பட்டம் சூடப் போகும் வேந்தன் அமர வேண்டிய ஆசனம் முத்துக்களும், ரத்தினங்களுமாகப் பதிக்கப்பட்டு ஒரே ஒளிக் கதிர்களை வீசிக் கொண்டிருந்தது! மங்கள வாத்தியங்கள் மனித இதயங்களின் ஆனந்தத்தை யெல்லாம் ஒருமித்து இன்பஒலி அலைகளாகப்பொழிந்து கொண்டிருந்தன. திருச் சங்கத்தின் ஒலி அரச கம்பீரத்தோடு 'பம் பம்' என்று எழுந்தது. எல்லாரும் சித்திராங்க பூபதியின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். அப்பொழுது மாடியிலே என்ன நடந்தது?

மந்திரநாயகமும் தானுமாகச் சித்திராங்க பூபதி தன்னுடைய அந்தரங்க அறையிலிருந்து அரச மன்றத்துக்குப் புறப்படுகிற சமயம் அது. செங்கோல் பிடிக்க வேண்டிய கையிலே அவனுக்குக் கடகத்தை அணிந்து கொண்டிருந்தார் மந்திரநாயகம். அப்பொழுது மாடிப் படிகளிலே 'டக் டக்' என்று குமிழ்க் கட்டையின் ஓசை கேட்டது. ஒரு வினாடி பூபதியின் நெஞ்சம் 'திக்' என்றது! அடுத்த வினாடி 'பளார் பளார்' என்று பிரம்பின் வீச்சு ஒலித்தது!



"என்னப்பா ராஜகுமாரா! அதாவது ராஜ அலங்காரா!" என்று குரல் கேட்டது! சித்தர் அறையின் உள்ளே நுழைந்தார்.

மந்திரநாயகம், பூபதி இருவருக்குமே உடல் பதறியது.

"என்ன அமைச்சர் பெருமானே! திகைத்துப் போய் நிற்கிறீர்கள்! இந்த வாலிபப் பிள்ளையை முன்னொரு நாள் ராஜகுமாரா என்று அழைத்தேன். எங்கே தெரியுமோ? மாமல்லபுரத்து விடுதியிலே! அப்போது அங்கேயிருந்த பைத்தியங்கள் எல்லாம் சிரித்தன! இவனை ராஜகுமாரன் என்று சொல்லுவதற்காகச் சிரித்தன! இப்பொழுது என்னடா என்றால் சிரிப்பதை விட்டுவிட்டு நீங்கள் திகைத்துப் போய் நிற்கிறீர்கள்! என்னையா விஷயம்! இந்தக் கட்டையைப் பார்த்தால் திகைப்பாக இருக்கிறதாக்கும்! அப்படித்தானா? சிவபூஜையில் கரடி வந்தது போல் இந்தப் பைத்தியம் இப்பொழுது எங்கே



இப்படி வந்தது என்று பார்க்கிறீர்கள்! இப்பொழுது வராமல் அரச மன்றத்திலே வந்து நின்றால் எப்படியிருக்கும்? நீங்களே சொல்லுங்கள்! அத்தனை பிரதானிகளும், அத்தனை அமைச்சர்களும் இந்தப் பைத்தியத்தைப் பார்த்துச் சிரிப்பார்கள்! சிரிப்பதோடு நின்று விட்டால் சரி. குற்றமில்லை. அப்படியில்லாமல் முதுகிலே இரண்டு சாத்துச் சாத்தி விட்டால்? அல்லது நீங்கள்தான் வந்து இந்தக் கட்டையின் முதுகைக் காப்பாற்றுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம்! அப்படியேயானாலும் இந்தக் கட்டை யார் என்ற கேள்விக்கு என்ன கூறுவீர்கள்! மரக்கட்டை என்பீர்களா? அல்லது குமிழ்க்கட்டை என்பீர்களா? அல்லது பிரம்புக்கட்டை என்று சொல்வீர்களா? அதெல்லாம் பெரிய தர்ம சங்கடம், பாருங்கள். அதனால்தான் இப்பொழுதே வந்து இந்த அந்தரங்க அறையிலேயே உங்கள் இருவரையும் கண்டு பேசி விட்டுப் போய்விடலாம் என்று இந்தக் கட்டை இப்படியே வந்தது! புரிந்ததா? திகைக்காதீர்கள்! திகைப்பெல்லாம் நீங்கி முப்பது நாழிகை நேரம் ஆகிறது. இப்பொழுது விடிந்து விட்டது! நீலக்கடலுக்கு மனம் என்று ஒன்று இருப்பதாகப் பூபதியிடம் யாரோ சொன்னார்களாம். அந்தக் கடலின் மனத்திலே கண்ட கனவுதான் பல்லவ விஜயம். கடல் கண்ட அந்தக் கனவு நனவாகி விட்டது என்று அரச மன்றத்திலே இந்தக் கட்டையின் சார்பாக அறிவிப்புச் செய்து விடுங்கள். உதயசந்திரனைத் தேடாதீர்கள். அவர் இப்பொழுது நேரே செந்தமிழ் நாட்டுக்குப் புறப்படுகிறார். அங்கே நந்திவர்ம பல்லவன் கோட்டையிலே அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறான். கவலைப்படாதீர்கள். வெளியே வந்து சிம்மாசனத்திலே ஏறி விடுவான்! அதுதான் சொன்னேனே, கனவு நனவாகி விட்டது என்று!" என்றார்.

இப்படிச் சொல்லி விட்டு ஒரு விநாடி கூட அங்கே தாமதிக்காமல் விறுவிறு என்று நடந்தார் சித்தர். குமிழ்க் கட்டையின் ஓசையும் பிரம்பின் வீச்சும் பலமாக ஒலித்தன.

இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு வரக் கொஞ்ச நேரம் பிடித்தது பூபதிக்கு! மந்திரநாயகமோ சொல்லற்று நின்றார்!

சுய உலகுக்கு வந்த மறு விநாடி மந்திர நாயகம் பூபதியைப் பார்த்துக் கேட்டார்:

"விரைவாக ஓடிச் சென்று அந்தச் சித்தரை வழிமறிக்கட்டுமா? இவர் யாரென்று தெரிந்துகொள்ளாமல் இனிமேலும் சும்மா விடுவது பேதைமை!"

மின்னல் பாய்ந்து வருவதுபோலப் பளிச்சென்று மறுமொழி சொன்னான் சித்திராங்க பூபதி.

"வேண்டாம்! ஞானியின் செயல்களை ஆராயக் கூடாது என்பது நான் ஏற்கனவே கற்றுத் தெரிந்து கொண்ட பாடம்! இவர் யாரென்று இன்னும் உங்களுக்குத் தெரியவில்லை யென்றால், உங்களுடைய அதிர்ச்சியிலிருந்து இன்னும் நீங்கள் மீளவில்லை என்றுதான் அர்த்தம்! தயவுசெய்து மேற்கொண்டு இங்கே நடக்கவேண்டிய காரியங்களைக் கவனியுங்கள்! உதயசந்திரனையும் இந்தச் சித்தரையும் இனிமேல் வலம்புரித் தீவிலே தேடாதீர்கள்!"

ஒரு வேந்தனுக்கு இருக்க வேண்டிய தன்னம்பிக்கையோடும் நிதானத்தோடும் பேசினான் பூபதி! அவனுடைய வார்த்தைகளிலே முன்பிருந்த தடுமாற்



லண்டன் யுனிலிவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் டைரக்டரான திரு ஏ. டி. போன்ஹாம் கார்டரும் அவரது மனைவியும் தங்கள் தூரக் கிழக்கு நாடுகளின் சுற்றுப்பிரயாணத்தின்போது சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அவர்களுடன் ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தலைவர் திரு ஏ.ஜே.ஸி. ஹாஸ்கின்ஸ் அப்ரஹால், உதவித் தலைவர் திரு எஸ். எச். டர்னர் முதலியவர்களும் வந்திருந்தார்கள். இவர்களை மேற்படி ஸ்தாபனத்தின் சென்னைப் பிரதிநிதிகள் திரு எம். எம். மேனனும் திரு எஸ். வி. வேணுகோபாலும் சென்னை விமானநிலையத்தில்வரவேற்றார்கள்.

றம் இப்பொழுது இல்லை! அவனுடைய குரலிலே ஒலித்த உறுதியானது மந்திர நாயகத்தைப் பரவசப் படுத்தி விட்டது!

இதன் பிறகு வலம்புரித் தீவிலே என்ன நடந்தது என்பது வெளிப்படை! பட்டம் சூடப்போகும் இளவரசன் தன்னுடைய அன்புக்குப் பாத்திரமான அரசகுமாரி யார் என்று அரச மன்றத்திலே அறிவிக்கப் போவதாகச் சொன்னான் அல்லவா? அதன்படியே முத்தரைய மன்னரின் புதல்வியையே தான் மணக்கப் போவதாக ஒரு மகத்தான அறிவிப்பை அரச மன்றத்திலே வெளியிட்டான் இளவரசன் சித்திராங்க பூபதி!

வலம்புரித் தீவின் மக்கள் தங்களுடைய அரசி யார் என்று தெரிந்து கொண்டதிலே அளவு கடந்த ஆனந்தம் அடைந்தார்கள். வலம்புரி அன்னையான மகாராணி எல்லையற்ற மகிழ்ச்சியோடு திருமணத் திருநாளுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி மந்திரச் சுற்றத்தார்களுக்கு ஆணை விடுத்தார். இதைத் தொடர்ந்து அந்தத் தீவின் பரம்பரை வழக்கப்படி பேரியாழ் வாசிப்பதற்கான அரச நிருபமும் அனுப்பப்பட்டது! நீலமேக யாழ்ப்பாணர் செய்து வந்த அந்தப் புனிதமான திருப்பணியை மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் ஒருமித்த பரிசுத்தமான தெய்வ சிந்தனையோடு, இனியும் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு, இப்பொழுது வலம்புரி அம்மனுடைய சந்நிதியிலே யாழ்நங்கை காத்திருந்தாள்! அவளுடைய உள்ளத்துக்கு இதைவிட ஆனந்தம் தரக்கூடிய திருப்பணி வேறு என்ன உண்டு?

வலம்புரித் தீவிலிருந்து திருமண நிருபம் தமிழ்நாட்டு முத்தரைய மன்னரிடம் சென்று, சீர் வரிசைகளோடு திரும்புவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. இதற்குக் காரணம் தமிழ்நாட்டின் அரசியல் நிலை அப்படியிருந்தது! அப்பொழுது செந்தமிழ் நாட்டிலே சித்திரமாயனுடைய கட்சியில் பலம் அதிகரித்திருந்தது! பாண்டியர்களும் அவர்களைச் சேர்ந்த மண்டலாதிபதிகளும் ஒரே ஐக்கியத்தோடு நந்திபுரம் கோட்டையைத் தாக்கினார்கள். வீர விக்கிரமனுடைய தலைமையிலே வேளிர்களும் இந்தப் பெரும் போரிலே முன்னணியில் நின்று பொருதார்கள். கோட்டைக்குள்ளே சிக்கிய நந்திவர்மன் பெரும் கவலைக்கு உள்ளானான்! வல[illegible] புரியின் உறவை உறுதிப்படுத்தி[illegible] கொண்ட உதயசந்திரன், முத்தரை[illegible] களின் பெரும்படையோடு வந்து தா[illegible] எதிரிகளை முறியடித்து நந்திவர்ம[illegible] மீட்க வேண்டியிருந்தது! இதன் பி[illegible] தான் பல்லவ விஜயத்தின் முதலா[illegible] மங்களத் திருநாளாக வலம்புரி[illegible] தீவிலே பூபதிக்கும் முத்தரையர் கு[illegible]

ரிக்கும் அரசத் திரு மணம் கோலாகல மாக நடைபெற்றது !

அந்தச் சம்பவங்கள் எல்லாம் தமிழ் நாட்டின் சரித்திரம் விரிவாகக்கூறுகிற வரலாறு ! நந்திவர்மன் நந்திபுரம் கோட்டையிலே சிக்கிக்கொண்டபோது உதயசந்திரன் தோன்றி, எப்படிச் சித்திரமாயனைக் கொன்று வீழ்த்தி, மீண்டும் நந்திவர்மனைப் பல்லவ அரச பீடத்தில் ஏற்றினான் என்பது சரித்திரப் புகழ் பெற்ற வீரக் கதை. தமிழனுடைய பெருமையையும் அறிவாற்றலையும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிற உன்னதமான நீண்ட வரலாறு அது. அந்த வரலாற்றின் விளைவாகவே கடல் கண்ட கனவும் பூபதியின் திருமணமும் நனவாக மலர்ந்தன ! இதன் பின்னர் நந்திவர்மன் தமிழ் நாட்டிலே சாதித்த மகோன்னதமான செயல்கள் பலப்பல ! அவன் பெற்ற வெற்றிகளும் அவன் புரிந்த திருப்பணிகளும் காஞ்சி மாநகரத்தின் கற்களிலும், சரித்திர ஏடுகளின் கவிதைகளிலும் நிரந்தரமாக நிற்கின்றன !



இத்தனை பெரிய சாதனைகளுக்கும் மத்தியிலே, மன நிம்மதிக்காகவும் உள்ளத்தின் ஊக்கத்திற்காகவும் சாந்த மயமான பௌர்ணமி இரவுகளிலே உதயசந்திரனும் நந்திவர்ம பல்லவனும் மாமல்லபுரம் கடற்கரையோரமாகக் குதிரையிலே செல்வ ண்டு. அப்பொ எல்லாம் நந்தி ன் மனுடைய ன்கள் அந்த எல்லையற்ற கடலின் பெ மையை நோக்கும். அந்த நீலப் பரப் அதில், பல காதங்களுக்கு அப்பால் அந்நிலே குளித்துக் கொண்டு நிற்கிற ை வி



வலம்புரித் தீவை நோக்கி, நந்திவர்மனின் உள்ளம் பறந்து செல்லும். தென்னை மரங்களும் அவற்றின் கீற்றுகளினூடே புகுந்து செல்லும் நிலவின் அமுதக் கரங்களுமாக, சுந்தரமயமான வலம்புரித் தீவு, நந்தி வர்மனின் மனக் கண்களுக்கு முன்னால் தெரியும். தன்வயம்மீறிய எல்லையற்ற நன்றியோடு அந்தத் திசையை நோக்கி இரு கரங்களையும் கூப்பி வணங்குவான் நந்திவர்மன்!

அப்பொழுது வலம்புரித் தீவின் கடற்கரையிலே பார்த்த அற்புதச் சிலை நினைவுக்கு வரும். வானத்தில் பொழிகின்ற நிலவின் இனிமையும், சந்திர வட்டத்தின் அழகும் ஒன்று சேர்ந்து வந்து, ஒரு பெண் உருவத்தில் சிலையாக வந்து நிற்கிறதோ என்று எண்ணும்படியான அந்தப் பெண்ணின் சிலையும் அந்தச் சிலைக்கு அருகில் வீணையின் வடிவத்திலே நிற்கும் சிறிய சிற்பமும் மனக்கண் முன்னால் தோன்றும். அவனுடைய செவிகளிலே பேரியாழின் இன்னொலி கடலின் அலைகளிலே தவழும் மெல்லிய காற்றிலே மிதந்து வருவது போலக் கேட்கும் ; மனப் பிரமைதான், கனவுத் தோற்றந் தான். என்றாலும், அந்த இன்னொலி தேன் நிலவையும், தெளிந்த வானத்தையும், குளிர்ந்த காற்றையும் ஒன்று சேர்த்துக் குழைத்து இதயத்திலே கொண்டு அமுதமாகக் கொட்டுவது போல இருக்கும் நந்தி வர்மனுக்கு!

அப்பொழுதெல்லாம் உதயசந்திரன் நந்திவர்மனைப் பார்த்து, "பௌர்ணமி அல்லவா? கடல் கனவு கண்டு கொண்டிருக்கிறது !" என்று சொல்லுவார்.

மங்களம்

...d and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
...the Proprietors Messrs Bharathan Publications Private Limited

G. Santhanam.

IB

G. Santhanam